எட்டுத் தொகையுள் மூன்றுவது

ஐங்குறு நூற்று அரங்கம்

(நாடகத் தமிழ் வடிவில் ஒரு இலக்கிய நூலாய்வு)



Batticaloa Public Library
☎ 065-2222484
RT002614

கலாநிதி ஈழத்துப்பூராடனர் க. தா. செல்வராசகோபால்

Class No 894.8112
Acc No; 4068

கனடா சீவன் பதிப்பகத்தாரின் தமிழ் இலக்கிய நூல்களின்
ஆய்வு வரிசை; இல. 4

ஐங்குறுநூற்று அரங்கம்

(ஐங்குறுநூறு இலக்கிய நூலின்
நாடக வடிவிலான ஆய்வுக் காட்சி)

படைப்பாசிரியர்;
கலாநிதி. ஈழத்துப்பூராடனர்
க.தா.செல்வராசகோபால்

பதிப்பாசிரியர்
எட்வேட் இதயசந்திரா

அமரர் நா.சா.கதிர்காமத்தம்பி நினைவு நிதிய ஆதரவில்
வெளி வரும் இது ஒரு நிழல் வெளியீடு

2008 தி.வ, ஆண்டு உ0ஙகூ

24.052008

சீவன் பதிப்பகம்

தொரன்ரோ - கனடா

SEEVAN PUBLISHERS

TORONTO – CANADA

பதிப்புத் தகவல்கள்;

1. நூற் பெயர்; ஐங்குறுநூற்று அரங்கம்

I. நூலின் பகுதி; தமிழ் இலக்கியம்
II . நூலின் வகுதி; இலக்கிய நூல் ஆய்வு

2. படைப்பாசிரியர்;

I. கலாநிதி ஈழத்துப்பூராடனர்
க. தா. செல்வராசகோபால்

3. நூல் விபரம்;

I. பக்கங்கள் XXXVI + 260
II. அளவு; டிமை எட்டிலொன்று (5' x 8')
III. அச்சமைப்பாளர்; ஜெசி இதயராஜினி
IV. நூல் வடிவம். வரைகலை; ஆர்ணல்ட் அருள்
V. அச்சுப் பதிவு; வெண்ஜமின் இதய ஜோதி
VI . அச்சகம்; றி கொப்பி தொரன்ரோ

4. பதிப்பு விபரங்கள்;

I. வெளியீட்டுத் தினம்; வசந்த காலம் 2008
II. வெளியீட்டு இலக்கம்; 253

5. கிரயம்;

I. 20 கனடிய டாலர்
II விசாரணை;

SEEVAN PUBLISHERS
 # 3. 1292 Sherwood Mills Blovd
MISSISAUGUA L5V 1S6 Ont
Canada

Class No.
Acc No; 4068

எழுத்துச் சீர்திருததம் - தமிழ் இலக்கங்கள் பற்றிய சீவன் பதிப்பகத்தாரின் எண்ணங்கள்;

தனித் தமிழ், செம்மொழி என்று சொல்வோர் தமிழுக்கே உரிய எண் வரிவடிவங்களைப் பொருட்படுத்து வதில்லை. அதை கணித அறிவியலிற் பயன்படுத்த முடியா விட்டாலுந் தமிழ் மொழி வளர்ச்சிக்கான மாசிகைகள், அழைப் பிதழ்கள், நூல்கள், விளம்பரங்கள் என்பவற்றிலாவது பயன்படுத்தத் தவறுகிறார்கள், இத்தகை விடுத்தலை எடுத்து காட்டித் தமிழின் தொன்மையை நினைவுறுத்தும் வண்ணம் எங்கள் புத்த கங்களில் ஆங்காங்கு பயன்படுத்தி வருகிறோம்.

தமிழ் மொழியை மின் யுகத்திற்கேற்ப நெறிப்படுத்தி 1984 இல் அச்சமைப்புச் செய்து வணிக அளவில் கனடாவில் அறிமுகப் படுத்திச் சாதனை புரிந்த நாங்கள், இற்றைவரை தமிழ் சீர் திருத்தத்தை எற்றுக் கொள்வில்லை. காரணம்; மின் யுகத்தை தமிழ் மொழி நன்கு பயன்படுத்தச் செய்ய வேண்டிய அவசிய சீர்திருத்தங்கள் பல உள. அவைகளை யிட்டு நாங்கள் பல ஆய்வுகளை மேற்கொள்வதுடன் அறிஞர்களின் ஆலோ சனை களையும் நாடி வருகிறோம். விரைவில் புதியதொரு தமிழ் அச்சமைப்புக் கணனியை அமைக்க ஏற்ற ஆக்கமொன்றை வெளியிடுவோம்.

தற்போது நடைமுறையில் உள்ள தமிழ் எழுத்து வரிவடிவத்தில் இரட்டைக் கொம்பு முதலிய வரிவடிவங்களை 1720ம் ஆண்டளவில் தக்க காரணத்தோடு வேண்டிய தருணத்தில் ஒருவர் புகுத்தினர். அவர் செய்த எழுத்துச் சீர் திருத்தம் காரண காரியத்தோடு ஏற்பட்டது. அதைச் செய்தவர் இத்தலி நாட்டிற் பிறந்த மத குரு. அவர் தமிழ் நாட்டிற் தமி ழராக வாழ்ந்து, அந்தப் பயன்தரு மாற்றத்தைச் செய்தார். அவர் பணியை நன்கு உணர்ந்திருந்தால் அண்மையிற் செய்யப்பட்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றே இருக்கமாட்டார்கள்!

பதிப்பகத்தார்.



மனதில்
மறையாத
மனித மணி

அமரர்.
பணிக்கர்
கனகரெத்தினம்.

பாடசாலை மாணவனுக இருக்கும்பொழுது
உன் படிக்குந் திறனுல் என்னைக் கவர்ந்தாய்
பல்கலைக் கழகத்திற பயின்ற காலை
இருபாங்குக் கூத்துக் கலையால் என் உள்ளத்தில்
நிலைத்தாய்
புலம் பெயர்ந்து வந்து கனடாவில் உன்னைக்
கண்டபோது கனடிய நாட்டில் - இலங்கை
தூதுவரகத்தில் உதவிப் பணிப்பாளராக உன்னைச
சந்தித்துபேருவகை கொண்டேன்.

அகதிகளாக இலங்கையை விட்டுப் புலம் பெயர்ந்து
கனடாவிற்கு வந்த தமிழ மக்களுக்கு வேண்டிய
உதவிகளை வழங்கும் வள்ளலாகக் கண்டு பூரித்தேன்.
ஆனுல், காலன் வந்து கவர்ந்து சென்றபொழுது
கண்ணீர் விட்டேன்.
மண்ணில் மறைந்தாலும் என் மனதில் நிலைத்துவிட்டாய்
இந்த ஆக்கததை அநத நினைவின் முத்திரையாக
மனங் கனிந்து முத்திரிக்கிறேன்

ஈழத்துப்பூராடனர்



படைப்பாசிரியர்;

கலாநிதி கதா.செல்வராசகோபால் (ஈழத்துப் பூராடனர்)

தமிழ் ஈழ கிழக்குக் கரை மட்டக்களப்பு செட்டிபாளைய மண்ணிற் பிறந்த மைந்தன். இலங்கையில் 35 வருடங்கள் ஆசிரியப் பணி செய்து இளைப்பாறிய பின்னர் கனடாவிற் புலம் பெயர்ந்து குடும்பத்துடன் 1984ம் ஆண்டில் இருந்து தமிழ் வளரப் பணிகள் செய்பவர். இவரது அயரா முயற்சியால் மின் கணனி மூலம் தமிழ் அச்சமைப்பு நெறிப்படுத் துப் பட்டு, அமரிக் காவில் முதல் தமிழ் அச்சகம், முதல் தமிழ் பதிப்பகம், முதற் தமிழ்ப் பத்திரிகை ஆதிய தாபிக்கப்பட்டன. உலகத் தமிழ்ப் பண்பாட்டி யக்கக் கனடிய கிளை இவரால் ஆரம்பிக்கப் பட்டது. இங்குள்ள பல தமிழர் தாபனங்கள் இவரது தமிழ், தமிழ் இலக்கியப் பணியைப் பாராட்டிப் பலபாராட்டுகளையும், விருதுகளையும், பட்டங்களையும் அளித்துக் கௌரவித்துள்ளன. கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டவர்.

250 க்கு மேற்பட்ட பல்வேறு துறை சார்ந்த தமிழ் நூல்களைப் படைத்துள்ளார். அவற்றுள், ஆதிக் கிரேக்கக் காவியங்கள் நாடகங்களை தமிழாக்கஞ் செய்து 15 தொகுதி களில் வெளியிட்டமை, தமிழ், தமிழர் சார்ந்த செய்யுள் வடி வக் கலைக் களஞ்சியமான 9 காண்டங்களை வெளியிட்டமை, தமிழ்த் திரைப் பட வரலாறு, தகவல்கள் முதலியவற்றை 60 தொகுதிகளில் களஞ்சியமாக வெளியிட்டமை என்பன சிறப் பான இடத்தை வகிக்கின்றன. தமிழ் இலக்கங்களைப் பாவிக்கும் முயற்சியை முன்னெடுப்பவர். தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்க மறுப்பதுடன் மின் கணனி உபயோகத் திற்கமைய விர மாமுனிவர் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்த அடிப் படையில் தமிழ் வரிவடிவில் ஒருமைப் பாட்டைப் புகுத்த விழைபவர்.

பதிப்பகத்தார் பகர்வன.

குளிர் நாட்டில் ஒரு வருடத்திற்கு வசந்தம், கோடை, இலையுதிர், குளிர் காலம் என நான்கு பருவங்கள்! கனடாவில் கால் நூற்றாண்டுக் காலமாக இயங்கும் சீவன் பதிப்பகம் (ஜிவா) இதுவரை 250க்கு மேற்பட்ட தமிழ் நூல்களை பதித்தி வெளியிட்டுள்ளது. 2007 ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு இலக்கிய நூலை வெளியிடுவதென்பது எங்களது நோக்கமாகக் கொண்டுள்ளோம். பருவ காலப் பதிப்புத் திட்டப்படி 2007ல் ஆண்டில் சுத்தானந்த பாரதியாரின் பாரத சக்தி மகா காவியம், நைடதம் எல்லாருக்கும் ஔடதம், கல்லாடம் கற்றுச் சொல்லாடுவோம் என்ற மூன்று இலக்கிய ஆய்வு நூல்களையும் கடல்கோள் ஓவியம் என்ற அறிவியல் சார்ந்த செய்யுள் நூலையும் வெளியிட்டு வைத்தோம். அந்த நூல்களைப் பலரும் பாராட்டினர். இந்த வருடம் 2008 இல் நான்கு பருவங்களிலும் நான்கு நூல்களை வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளோம்.

அவற்றில், முதலாவது நூலாக எட்டுத் தொகையுள் மூன்றுவதான ஐங்குறு நூறு என்ற சங்க இலக்கியத்தை முழுமையாக நூலாய்வு செய்து வெளியிடுகிறோம். அடுத்து, சீவக சிந்தாமணி, பெருங்கதை ஆகிய இண்டு சங்கமருவிய காலக் காப்பிய நூலாய்வுகளையும், புறப்பொருள் விருத்தம் என்ற செய்யுள் நூலினையும் வெளிக்கொணரத் தக்க ஆயத் தங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இலக்கிய ஆய்வுகள் பலவற்றை அலசி ஆராய்ந்த பிரஞ்சு நாட்டு இலக்கிய ஆய்வாளர் மார்த்தஸ் அலோசியஸ் என்பார் தனது இலக்கியத்தை உய்த்துணரல் எனும் நூலில் அவை பலவிதப்படும் என்றும், அத்தகைய ஆய்வுகளின பயன்கள்; இலக்கிய உணர்வு சார்ந்தவை, வாழ்வியல் உணர்வு சார்த்தவை என்று இரு வகைப்படுமென்றும் வகுத் துள்ளார். இது தமிழினத்திற்குப் புதியதன்று. பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னே சங்கம் வைத்து வளர்த்த தமிழ்

என்ற புகழ் கொண்டது தமிழ்மொழி!. ஒருவர் படைத்த பாடல் அல்லது பாடற் தொகுப்பைத் தமிழ் காக்குஞ் சங்கத் திற்கு அதை ஆக்கியவர் முதலிற் சமர்ப்பிப்பார். அதை ஏற்ற சங்கம் சங்கப் புலவர்கள் ஆராய்ந்து, தக்கதெனில் ஏற்றுக் கொள்ளவும், தகாததெனில் தள்ளிவிடவுந் தக்கதாக சங்கத்தில் பொன்னுற் செய்யப்பட்ட பலகைப் பீடத்தில் வைப்பார். தமிழ்ப் புலவர்கள் குழுமிய ஆய்வு அமர்வில் அவர்கள் முன் ஆக்கியோன் அதை படித்துப் பொருள் சொல்வார். அதைச் செவிமடுத்த புலவர்கள் அதில முக்கி யமாக மூன்று காரியங்களைக் கவனிப்பார்கள். அவை; தமிழ் வாழ்க்கை நெறி, தமிழ் மொழி இலக்கண நெறி, தமிழ் இலக் கிய நெறி என்பனவாகும், இந்த நெறிகளில் எதாவதொன்று படைப்பிற் குறைவுறுமெனில் அதை ஏற்றுக் கொள்ளார்கள். அவ்வழி சங்கமும் ஏற்றுக் கொள்ளாது. சங்கப் பலகையும் ஏற்றுக் கொள்ளாது தள்ளிவிடும். இந்த நூல் ஆய்வு மரபு, முதல், இடை, கடைச் சங்கங்கக் காலங்களிலும், சங்க மருவிய காலத்திலும் நடை முறையில் இருந்து வந்தது. இன்று சங்க காலப் படைப்புகளாகக் கொள்ளப்படும் பத்துப் பாட்டு. எட்டுத் தொகை, பதிணெண் கிழ்க் கணக்கு ஐம்பெருங் காப்பியங்கள், ஆதிய படைப்புகள் யாவும் அத்தகைய திறனுய்வுக்கு உட்பட்டனவே ஆகும்.

இவ்வண்ணம் ஏற்றுக் கொள்ளப்பட்ட படைப்பு ஆக்கி யவரின் கன்னிப் படைப்பாக இருந்தால்; அவர் சங்கப் புலவ ரென மதிக்கப்படுவார். அதற்கான விருதும் பரிசும் அவருக்கு அளிக்கப்படும். ஏற்கனவே, சங்கப் புலவராக இருப்பவரின் பாடலாக இருந்தால் அது அவரின் ஏற்றத்தை எடுத்துக் காட்டும் வண்ணம் தக்க பரிசுகளால் பாராட்டப் பெறும். பல தருணங்களில அந்தப் பாடலின் பெயரால், அல்லது உட்பொருளால் அவர் பெயரிட்டு அழைக்கப்படுவார்.

ஆகவே மேல் நாட்டில், வட நாட்டில். கிழ் நாட்டு இலக்கிய ஆய்வாளர்களின் இலக்கிய ஆய்வைத் தமிழராகிய நாம் கவனிக்க வேண்டிய தேவை உண்டு என்பதில் நாம் அக்கரைகொள்ள வேண்டிய அவசியமின்று என்பதே தகும். திரு விளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலச் செய்தி இத்தகைய இலக்கிய ஆய்வின் தரத்தையும் போக்கையும், ஆய்வின் பேற்றையும் எடுத்துக் காட்டத் தக்க

உதாரணமாகும். சங்க காலத்தின் பின்னருங் கூட இத்த கைய தவறுகாண், தர்க்கத்தால் தவறுணர்த்தல், தவறு நீக்கல். எதிர்த்துரைத்தல் ஆதிய பல நிகழ்வுகள் இலக்கிய உலகில் நடைபெற்றுள்ளன. ஒட்டக் கூத்தருக்கும் புகழேந் திக்கும் இடையில் நடந்த இலக்கியப் போராட்டம் ஆதியன தமிழ் இலக்கிய ஆய்வுகள் எத்தகையன என்பதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

பொதுவாக இலக்கிய ஆய்வுகள் காலத்துக்குக் காலம் பல வகையாகக் காலத்தின் தேவைக்கேற்பப் படைக்கப் படுகின்றன. அத்தகைய ஆய்வுகள் திறனாய்வு என்றும் அழைக்கப்படுகிறது. பாட்டிற்குப் பொருளுரைத்தல்; அதா வது, பண்டைக் காலத்தில் பயன் சொல்வது என்பார்கள், ஒருவர் செய்யுளை பாட இன்னொருவர் அதை உரை நடையில் இசைத்துக் கூறுவதையே பயன் சொல்தல் என்பர். அப்படிப் பயன் சொல்பவர், பாட்டை அனுவயப் படுத்தல், பதம் பிரித்தல், சொற் பொருள் உரைத்தல், ஏற்ற விடத்து இலக் கண இலக்கிய எடுத்துக்காட்டுகளால் விளக்குதல், பாட்டின் சந்தர்ப்பங் கூறுதல், அதனைலாம் உணர்வினைத் தெளித்தல் என்பன இடம் பெறும். இலக்கிய மூலத்திற்கு உரை காண்பது என்பதும் இதுவே. உதாரணத்திற்கு ஐங்குறு நூறு எனும் நூலின் 38 வது மகட்போக்கியவழித் தாயிரங்கு பத்து எனும் பகுதியில், முதலாவது செய்யுளாக வருவது;

மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலு
முயர்நெடுங் குனறம் படுமழை தகிலுச்
சுரநனி யினிய வாகுக தில்ல
வறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே என்பதாகும்.

இதற்குப் பொருளுரைக்க வந்த உரையாசிரியர் முதலாவது;

தன்னு மவனு மவளுஞ் சுட்டி
மன்னு நிமித்த மொழிப்பொருள் தெய்வ
நன்மை திமை யச்சஞ் சார்தலென்
றன்ன பிறவு மவற்றெடு தொகைஇ
முன்னிய கால மூன்றுடன் விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்

போகிய திறத்து நற்றுய் புலம்பலு
மாகிய கிளவியு மவ்வழி யுரிய (தொல் அகத்திணை38

என்பதால், தலைமகன் தலைமகளை உடன்கொண்டு சென்றுழி மகட்போக்கிய நற்றுய் நெஞ்சொடு சொல்லியது.

(இதன் பொருள்) வீரர் பறை முழங்கினால் மயில் களாலா நிற்கும். மிகவுயர்ந்த மலையிலுண்டாகிய மேகங்கள் மழையைச் சொரிந்து வழி பெரிதுமினிமையுடையவாகுக. கற்புநெறியிது வென்று தெளிந்த பிறைபோலும் நுதலை யுடைய எனது சிறுமகள் சென்ற நாடு என்றவாறு.

தில்ல - விழைவு, தாயிரங்கிய பத்து என்றும் பாடம். கொட்டு மஞ்ஞை எனவும் பாடம்.

அறநெறி இதுவெனத் தெளிந்த என் மகளென்று தாய் கூறவே, உடன்போக்குத் தருமமென்று மகிழ்ந்து கூறி எதிர் காலத்தை நோக்கி நன்மை குறித்து நெஞ்சொடு கூறிய வாறு காண்க. மெய்ப்பாடு மருட்கை பயன் ஆற்றுதல்.-

இத்தகைய குறிப்புகளின் உதவியுடன்தான், அகப் பொருட் செய்யுள்களைப் படித்தறியவோ நயக்கவோ உணரவோ முடிகிறது. இலக்கிய விளக்கம் இவ்வாறு கட்டுக் காவற் படுத்தப்படுகிறது. செய்யுளில் சொல்லப்படும் செய்தி சாதார ணமானது, நாளாந்தர வாழ்க்கையில் நடைபெறுவது. சொல்ல எடுத்துக் கொள்ளப்பட்ட சொற்கள் யாவும் தனித் தமிழ்ச் சொற்கள். ஆயினும்; சாதாரண தமிழறிவுள்ள ஒரு வரால் படித்துத் தெளிய முடியாதவாறு கடுமையாக்கப் பட்டுள்ளது. பல வேளைகளில் செய்யுளிலும் பார்க்க அதன் பொருளுணர்த்தும் நடை கடினமாக இருப்பதைக் காணலாம். இந்தப் போக்கிலிருந்து செய்யுளை விடுவித்து நாம் காணும, அறியுந் தரவுகளைக் கொண்டு வாழ்வியலுடன் சமன் செய்து உய்த்துணர வேண்டும். அதற்கான வழி வகைகள் என்ன என்பது நமது ஆய்வுக்கு உரிய பொருளாகும்.

மனித உயிரணு ஆண் பெண்ணென இரண்டாக வகுக்கப்பட்ட காலத்திலிருந்தே, அவற்றுல் பிறிதொரு உயிர் தோன்ற அவற்றிடை ஏற்பட்ட பருவ உணர்வு பாலியற் கவர்ச்சி, உடலுறவு நாட்டம் என்னும் இயல்பான ஈடுபாட்டால் அகப்பொருட் துறைகள் பலவும் ஒன்றின் பின்னென்றுகத்

தோன்றின. அவை ஆரம்பமான ஆதி நாட்களில் இருந்தே அதன அடிப்படைத் தன்மைகள், நோக்கங்கள், செயற்பாடுகள், பண்பாடு ஆதியவற்றில் எத்தகைய வேறுபாடுகளுமின்றித் தொடர்ந்தே செல்கிறது. இதுதான் இன்றையப் பாலியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். உண்மையும் அதுவே. சமுதாயப் பார்வைக்குள்ளும் கட்டுப்பாட்டிற்குள்ளும் இந்த அகப்பொருளின் அடிப்படைத் தத்துவஞ் சிக்கித் தடுமாறினுலும் அதன் உட்கரு மாறுவதில்லே.

இடைக் காலத்தில் இதனே கட்டுப்பாடான வரையறைக்குள் கொண்டுவரும் வண்ணம், அகப்பொருள் இலக்கணம் தோன்றியதே தவிர, அந்த இலக்கணப்படியே ஆணும் பெண்ணும் இன உற்பத்திக்கான நடபடிக்கைகளில் இயங்கியதென்பது தவறு. ஆனல் அத்தகைய நிகழ்வு நடைபெறத் தெய்வப் புணர்ச்சி முதலான சில நியமங்கள் உள்ளன என்பதை மனிதன் உணரும் பொருட்டும், அந்தரங்கம் புனிதமானது என்பது நிலேக்கும் பொருட்டும் அவை வழி காட்டின.

ஆகவே, சங்கப் பாடல்களில் உள்ள அகப்பொருட் பாடல்கள் அவை குறிக்கும் நிகழ்வுகள் அன்று நடந்த வண்ணம் இன்றுந் தொடர்கிறது என்ற எண்ணத்துடன் பார்க்கும்போது, அகப்பொருள் இலக்கணங்கள் இலக்கியமாகவும் அகப்பொருள் நிகழ்வுகள் இலக்கணமாகுவதையும் உணர முடியும். எனவே இத்தகைய இலக்கண இலக்கிய எடுத்துக் காட்டுகளின்றி இப்பாடல்களின் நயத்தை நேரடியாக உணரமுடியும். அதற்கான இலகு வழியாகவே ஐங்குறு நூற்றுப் பாடல்களின் ஆய்வு இங்கு காட்சிப்படுத்தப்படல் மூலம் ஆய்வு செய்யப்படுகிறது. ஒவ்வொரு பாடலினதும் பொருளே அறியும்போது; அவை வாழ்க்கையில் நடைபெறுஞ் சம்பவங்களின் காட்சியாக நமக்குத் தென்படுவதை உணர்கின்றோம். அத்தகைய தருணங்களில் உரை வடிப்பவர்களின் இத்தகைய விளக்கங்கள் கற்போரைத் தடுமாற வைக்கின்றது.

பருவ கால இலக்கிய ஆய்வு வெளியீடுகளே வெளியிடுந் திட்டத்தை தொடங்கு முதல் பதிப்பகத்தார் அதுபற்றி கலந்துரையாடினேம். அத்தருணம் இந்நூலின் படைப்பாசிரியர் முன் வைத்த சில கருத்துகளே இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம். பாடசாலேகளில் இலக்கியப் பாடத்தை

நடத்தும் ஆசிரியர்கள் இலக்கிய நூல் ஒன்றின் பாட லொன்றை அல்லது ஒரு பகுதியைப் படிப்பிப்பார்கள். பொதுப் பரீட்சைக்குத் தோன்றுவோர் அதற்கென வகுக்கப்பட்ட பாட விதானத்தில் உள்ள இலக்கியப் பகுதியை சொல்லொடு பொருளுணர்ந்து படித்து மனனஞ் செய்து பரீட்சையிற் தேறி விடுவார்கள். அதன் பின்னர் ஏதோ கனவு கண்ட நிலையில் அதை மறந்து விடுவார்கள்.

இத்தகைய இலக்கிய அறிமுகத்தின் நோக்கம் பரீட் சையிற் தேறுவது மட்டுமே ஆகிவிடும். உண்மையில் அப்படி எண்ணுவது தவறு. இலக்கிய நயத்தை நுகர்வதற்கும் இலக்கிய உணர்வை ஏற்படுத்தற்குமே இலக்கிய நூல்களின் அறிமுகம் ஏற்படுத்தப்படுகிறது. என் அறிவுக்கெட்டிய வகையில் 80 சத வீதத்தினர் தாம் பாடசாலைகளிலும் உயர் கல்வியகங்களிலும் கற்ற இலக்கியப் பகுதிக்குரிய நூலின் முழுமையையுங் கண்ணுற் கூடப் பார்த்தறியாதவர்களாகவே உள்ளனர். இந்தக் குறைபாடு காலங் காலமாக வழக்கத்தில் இருந்து வருகிறது. இத்தகைய நிலை இலக்கிய வளர்ச்சிக்கும் வளத்திற்கும் தகுந்த ஆரோக்கியத்தைத் தராது என உறுதியாகச் சொல்லலாம்.

அதுபோலவே இலக்கிய ஆய்வு நூல்களின பயன் பாடும் அந்த நூலின் அறிமுகமாக அமைகிறதே தவிர அநத நூலை முழுமையாகக் கற்றதொரு இலக்கிய உணர்வைத் தருவதில்லை. ஆகவே இலக்கிய நூல்களைப் புதியதொரு வழியில் ஆய்வு செய்வதால் இலக்கிய உணர்வினைப் பயன்தரு வழியில் மக்களிடை ஏற்படுத்தலாம் என்ற அடிப்படைக் கருத்துகள் பரிமாறப்பட்டன.

பல பக்கங்களும் நூற்றுக் கணக்கான செய்யுள்களும் தூக்க முடியாத பாரமுங் கொண்ட நூலொன்றினை ஒருவர் படித்து முடிப்பதென்பது இயலாத கருமமே! அதுவும் கல்வி கரையில, கற்பவர் நாட் சில என்ற தத்துவத்திற்கடங்க எவரும் தாம் வாங்கும் நூல்கள் யாவற்றையும் படித்து முடிப்பதும் இல்லை. படிக்க எடுத்துக் கொண்ட நூல்களை முழுவதும் படித்து முடிப்பதும் இல்லை! இத்தகைய நிலைகளால் எத்தனையோ பேர் தாம் வாங்கி புத்தகத் தட்டுகளில் அடுக்கி வைத்த நூல்களை முற்றும் முழுதாகப் படித்தறிய முடிய வில்லையே எனக் குமுறுவதென்பது சாதாரண நிகழ்வே.!

இந்நிலையில் பலர் புத்தகத்தில் உள்ள அகரவரிசைகளின் உதவியுடன் தமது தேடலுக்குரிய பகுதிகளை மட்டும் படித் தறிவர். இதுதான் இன்று புத்தக உலகில் நடைபெறும் உண்மையான நிலைப்பாடு.

அடுத்தாகப் பல நூல்கள் மீள் பதிப்பாக வெளி வருவதில்லை. இக்காரணத்தால் பல சிறப்புடைய தமிழ் நூல் களின் கிடைத்தற் கருமை, படித்தற்கருமையை அதிகரிக்கச் செய்கிறது. இத்தகைய இடர்களை மேற்கொள்ள நூலாய்வு முறையில் அவற்றை (Simplified) சுருக்குரை செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த அவசியத்தின் அடிப் படையிற்தான் நாங்கள் பருவ கால வெளியீடுகள் வழியாகப் கிடைத்தற்கரிய பல அரிய நூல்களை நூலாய்வு செய்து வெளியிட்டு வருகின்றோம்.

இவ்வித நூலாய்வுகளை இலக்கிய ஆய்வெனக் கொள்வதிலும் பார்க்க இலக்கிய நூலாய்வு எனலே தகும். அத்தகைய நூலாய்வுகள் பலவித வடிவங்களில் இடம் பெறு கின்றன. இதுவரை எமது பருவ கால வெளியீடுகளைக் கவனித்தால் அவை எத்தகையன என்பது புலனாகும். இப்போது எட்டுத் தொகையில் மூன்றுவதான ஐங்குறுநூறு எனும் நூலை நாடகத் தமிழ் வடிவில் செய்துள்ளோம். நூலாய்வு எனும்போது, அந்த நூலைப் படைத்தவர், படைத்த காலம், பனையோலை ஏட்டிலிருந்து அச்சேறிய பதிப்புக் கால கட்டங்கள், உரை நடை படைத்தோர், உள்ளடக்கம், பொருட் பகுதிகள், பக்கங்கள், நுதலும் பொருள், நயத்தற்குரிய பகுதிகள், இடையிடையே அவைபற்றிய திறனாய்வு, பொரு ளாய்வு. ஒப்பீடுரைத்தல், என்பன பற்றிய தகவல்கள் ஆதிய கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதால் இத்தகைய நூலாய்வை படிப்போர் ஒரு நூலை முழுமையாகப் படித்த அனுபவத்தைப் பெறுகின்றர்,

2007ம் ஆண்டில் நாங்கள் பதிப்பித்த பருவ கால நான்கு வெளியீடுகளைப் படித்த பலர் பாராட்டி எழுதியுள்ளனர். தமிழ் இலக்கிய உலகத்தில் மட்டுமல்ல, புத்தக வெளியீட்டுத் துறையிலும் இது புதியதோர் முயற்சி என்பது வாசகர்களின் கணிப்பு. அத்தகைய நம்பிக்கையைத் தக்க வைக்கும் முயற்சிகள் தொடரும். அதற்கு வாசகர்களின் ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

o

கதை சார் இலக்கியங்களில் ஆய்வைச் செய்யத்தக்கதாக முழுச் செய்யுள்களை எடுத்தாள முடியாத காரணத்தால் சில செய்யுள்களை மட்டுமே இடைக்கிடை புகுத்தினாலும்; தனிச் செய்யுள்களாலான கல்லாடம் ஐங்குறு நூறுபோன்ற இலக்கிய நூலாய்வுகளில் செய்யுள்கள் யாவும் இடம் பெறுகின்றன. ஆனால்; இந்த நூலில் நாடகத் தமிழ் நடையில் படைக்கப்பட்டுள்ளதால், செய்யுள் வரிசை முன் பின்னாக எடுத்தாளப்பட்டுள்ளது. எனினும் அத்தகைய வைப்பு முறையால் மூல நூலின் செய்யுள் வடிவமோ அன்றி அதன் பொருளில் மாற்றமோ இல்லாத வகையிற்தான் அவை இடம் பெறும் பத்துகளுள் செறிக்கப்பட்டுள்ளன. நாடகத்தின் வழி நூலாய்வு செய்வதற்காக இவ்வித மாற்றங்கள் தவிர்க்க முடியாததொன்றே. வணக்கம். அடுத்த சிந்தாமணியின் ஆய்வுச் சிந்தனைகள் என்ற 2008 கோடை கால வெளியீட்டிற் சந்திப்போம்.

பதிப்பகத்தார்.

உள்ளடக்கம்

---

1. நூல் முகப்பு	1
2. பதிப்புத் தகவல்கள்	2
3. தமிழ் எழுத்துச் சீர் திருத்தத்தை	3
4. நினைவு கூர்கின்றோம்	4
4. படைப்பாசிரியர்	5.
5. பதிப்பகத்தார் பகர்வன	6
6. ஆரம்ப எழினி	15
7. மருத எழினி	36
8. நெய்தல் எழினி	113
9. குறிஞ்சி எழினி	175
10. பாலை எழினி	254
11. முல்லை எழினி	300
12. பின்னிணைப்பு;	
தமிழ்ப் பணி செய்து கிடக்க என்னை	
அரவணைத்துக் காத்த கரங்கள் (3)	

(ஒவ்வொரு எழினியின் அடியிலும் அவற்றில அடங்கும் பொருள் அட்டவணை தரப்பட்டுள்ளது)

முதலாவது பகுதி

ஐங்குறு நூறுபற்றிய
வரலாற்றுத் தகவல்கள் பற்றிய
ஆய்வுக் காட்சிகள்.

ஆரம்பம் ஐங்குறு நூற்றரங்கம்

ஈழத்துப்பூராடனரின்
நூற் தகவல் சார்ந்த
நான்கு காட்சிப்படுத்தல்கள்.

1. ஐங்குறு நூறு பற்றிய
அகப்பொருள் விளக்கம்
2. ஐங்குறு நூறு
அச்சுப் புத்தகமாக வெளி வருதல்
3. ஐங்குறு நூற்றின்
இலக்கிய மாண்புணர்தல்
4. ஐங்குறு நூறு
எட்டுத் தொகையில் சேர்க்கப்படல்

ஆரம்ப எழினி.

வழக்கமாக எங்கள் பதிப்புகளில் இடம்பெறும்
படைப்பாசிரியர் பகர்தல் எனும் பகுதி
இந்த நூலில் இடம் பெறுவதற்குப் பதிலாக
இந்தப் பகுதி இடம் பெறுகிறது.
நூல் படைப்பவர்கள தங்கள் கருத்துகளை இப் பகுதியில்
முன் வைப்பதால், வாசகர்கள் நூலின் தன்மையையும்
அது படைக்கப்பட்ட நோக்கத்தையும் புரிந்துகொள்வர்.
அத்தகைய பகுதி இந்த நூலில் முகவுரைப் பகுதியில்
நான்கு நாடகங்களாக இடம் பெறுகின்றன.
முதலாவது காட்சி ஐங்குறு நூறு என்னும் நூல்
நாடகமாக்கப்பட வேண்டிய காரணத்தைத் தெளிவாக்குகிறது.
இரண்டாம் நாடகத்தில் இந்த நூலின் ஏட்டுப் பிரதியைக்
கண்ணுற்ற டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் இதை
எவ்வாறு முதன் முதல் அச்சிற் பதிப்பித்தார்
என்ற செய்தி சொல்லப்படுகிறது.
மூன்றுவது பகுதி இந்த நூலையிட்டுத் தற்காலத்து
அறிஞர்களின் எண்ணங்களையிட்ட ஒரு
கண்ணோட்ட நாடகம் இடம் பெறுகிறது.
இறுதியாகப் பண்டைக் காலத்தில் இந்த நூலை
யார் தொகுத்தார், யார் தொகுப்பித்தார்
என்ற வரலாறு கூறப்படுகிறது.

இந்த நாடகங்களின் மூலம் ஐங்குறு நூறு எனும்
சங்க இலக்கியத்தின் பின் புலத்தைத்
தெளிவாக அறிந்து கொள்ளலாம்.
முகவுரையை இவ்வாறு நாடக வடிவில் அமைத்துக் கூறும்
புதிய நடைமுறை இதுவே எனக் கூறலாம்.

அத்தோடு நூலாய்வு முழுமையுறும் பகுதியான
முல்லை எழினியில், தற்காலச் சந்ததியினர்,
பண்டைய இலக்கியங்களால் ஏற்படும் பயன் என்ன
எனக் கேட்கும் ஐயத்தைத் தெளிக்கும் வகையில்
நாடகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
மேலும் பல சிறப்பான அம்சங்கள் உள்ளன.
அவற்றை ஆங்காங்கு வாசகர்கள் கண்டு களிக்கலாம்.

---

o

சங்க இலக்கியம் எட்டுத் தொகையுள்
மூன்றுவது தொகையான

ஐங்குறு நூறைத்

தமிழ் நெஞ்சங்களில் காட்சிப்படுத்த ஒரு

ஐந்தெழினி அரங்கம்

முதலாவது நூல் வரலாறு

====

காட்சி; *1*

காலம் ; மாலை

இடம்; சூத்திரதாரனின் காரியாலயம்

பாத்திரங்கள்; *1.* சூத்திரதாரர் *2.* கிண்டல்

நிகழ்ச்சி;

நாடகம் இடம்பெறும் பின்னணிகள், நாடக அறிமுகம், சொல்ல எடுத்துக்கொண்ட நாடகப் பொருளை பார்ப்போர் தெளிந்து சுவைக்கத் தக்க வழி காட்டுதல் என்பவற்றைச் சூத்திரதாரன் கிண்டல் என்பவனின் விதண்டா விவாதத்தின் மூலம் விளக்குதல்.

(சூத்திரதாரனின் அலுவலகம். அதில் வணக்கம் . சூத்திரதாரர் அலுவலகம் என்ற பெயர்ப் பலகை முன்னுற் தொங்கவிடப்பட்டுள்ளது. உள்ளே சூத்திரதாரர், கையில் கடதாசியும் பேனாவும் வைத்து ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் எழுதிக் கொண்டிருக்கிறார். எழுதியதை வாசிக்கின்றார்;

சூத்திரதாரர்;

ஐங்கரப் பிள்ளை அய்யாயென் குருநாதா
ஐங்குறு நூறென்னுஞ் அகஞ்சார் - சங்கத்.....

கிண்டல்; *(வீதியில் வந்துகொண்டே)*

என்ன உள்ளே விக்கினம் போக்கும் விநாயகப் பிள்ளை யாருக்குப் பூசை நடக்கிறதுபோல் இருக்கிறதே! *(எனச் சொன்னவாறு அங்கே வருகிறான். கண்ணிற் பட்ட அந்தப் பலகையையில் உள்ளதை எழுத்துக் கூட்டி வாசிக்கின்றான்)*

வ...ண...க்....க.....ம்..... என்ன ன எழுத்து! இது டாண்ணுநகரமா இல்லே ருன்னு நகரமா? இல்லே தான்னு நகரமா? எந்த நகரமாக இருந்தால் என்ன இங்கே குடியிருக்கவா போகிறேரும்! . அடடே இது வணக்கம்! ..... அதுதான் கும்பிடுகிறேனுக்குப் போடுகிற ணகரந்தான்.. மற்றது சூ....த்....தி...ர...தா..ர...ர் அதாரு சூ பத்திர காளி மாதிரி... சரி எதற்கும் உள்ளே போய்ப் பார்ப்போம்.. **(உள்ளே எட்டிப் பார்த்து)** வணக்கம் அய்யா!

சூத்திரதாரர்;

வணக்கம்! வருக வருக! உள்ளே வருக! உட்கார்க!

கிண்டல்;

அய்யா என் பெயர் கிண்டல்.

சூத்திரதாரர்;

அப்படியா. அது சரி. என் பெயர் சூத்திரதாரர். உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும்? சொல்லுங்கள். முடியுமானுல் முடிந்த அளவு முயன்று உதவுகிறேன்.

கிண்டல்;

.பல விதத்தில் உதவி தேவையாய்த்தான் இருக் கிறது. முதலில் ; நான் வரும்போது பிள்ளையார் பேரில் வாக்குண்டாம் பாடிய சத்தம் கேட்டதே. இங்கே அதற் கான பூசை அறையோ அல்லது பூசைப் பொருட்களோ இல்லையே. அப்பமோடவல் பொரி உப்பிய மோதகம்.. ம் .... இவற்றில் ஒன்றையுமே காணேமே....

சூத்திரதாரர்;

நான் வணங்கியது என் குருநாதனே. அவர் பெயர் ஐங் கரப்பிள்ளை . அவரை நினைத்துத்தான் எதையுந் தொடங் குவது என் வழக்கம். அதுதான் ஐங்குறு நூற்று அரங்கம் எனும் நாடகத்தை எழுதமுதன அவரை நினைத்துக் கொண்டேன்.

கிண்டல்;

ஆமாம் ஆமாம், மாதா பிதா, குரு, தெய்வம் என்பார்களே. இதிலே எனக்கொரு ஐயம் உண்டய்யா.மாதா, பிதா, குரு ஆதிய மூவருந்தான் தெய்வம் என இதை எடுத்துக் கொள்ளலாமா அல்லது மாதா, பிதா, குரு, தெய்வம்

ஆதிய நால்வருமே .....

சூத்திரதாரர்;

எனக்கும் இந்த ஐயம் உண்டு! முதல் சொன்ன வாச கத்தில்; தெய்வம் என்ற சொல் தெய்வமென்று கொளப் படத் தக்கவர்கள் எனும் வினை முடிவாக இருக்கிறது. ஆனல் மற்ற வாசகத்திற்கு நால்வருந் தெய்வமென்று கருத இன்னுமொரு தெய்வத்தைச் சேர்க்க வேண்டு மென்று தோன்றுகிறது. எப்படி இருப்பினும் அம்மா அப்பாவோடு குரு ஆதியவர்கள்தான் எனக்குக் கரந்தந்த என் நடமாடுந் தெய்வம்.

கிண்டல் ;

இரண்டாவது உங்களைச் சூத்திரதாரர் என்று அழைத்துக் கொள்கிறீர்களே! அது உங்கள் சாதிப் பேரா, குடும்பப் பெயரா? இல்லே தொழிற் பெயரா. இல்லே இல்லே .... காலமிடங் குணம் பண்பு...கருத்தா கருவி ஆகும் ஏதாவது ஒரு பெயரா?

சூத்திரதாரர்;

அது..... நான் இப்போது செய்து கொண்டிருக்கும் என் தொழிற் பெயரப்பா. நான் சங்க நூல்களில் ஒன்றுன ஐங்குறு நூறை நாடக வடிவில் நடாத்த வேண்டிய எல்லாக் காரியங்களையும் அகர முதல் னகர இறுவாய் செய்து கொண்டு வருகிறேன். ஆதலால் அதற்குரிய எல்லாப் பொறுப்புகளையும் செய்யும் சூத்திரதாரியாக இருக்குங் காரணத்தால் சூத்திரதாரி என்ற பெயரை வைத்துக் கொண்டிருப்பது நியாயந்தானே!

கிண்டல்;

அய்யா! சூத்திரம் என்பது ஒரு பொறி. அயே இயந்திரம் என்பார்கள். அதுமட்டுமல்ல; வேதங்களும் பிரமாணங்களும் அரசர், பிராமணர், வைசியர், சூத்திரர் என நான்கு வர்ணங்களாக வகித்துள்ள படி கடைகெட்ட வர்ணமான சூத்திரரா .....

சூத்திரதாரர்;

அந்தணர்கள் அப்படித்தான்...அதுவும் மக்களைப் படைக்கும் போது அவருடைய காலடியிலிருந்து சூத்திர

வர்ணத்தைப் படைத்தார் என்பார்கள். இதைக் கேள்விப் பட்டு இருக்கிறயா?

கிண்டல்;

ஆமாம் பிரமா தன் தலையில இருந்து..... இப்படி.....

சூத்திரதாரர்;

இதோ பார்! அந்தப் பிரமன் மற்ற மூன்று வர்ணங்களையும் படைக்கும்பொழுது நின்று கொண்டோ நடத்து கொண்டோ, கால்களை மடகிக் தாமரை மலரில் வாசஞ் செய்யும் சரஸ்வதியின் நாவில உட்கார்ந்து கொண்டோ தான் படைத்திருப்பான. அப்போது அவனுடைய அசைவு களுக்கு எல்லாங் காரணமாக; அவனைத் தாங்கிக் கொண்டிருந்தது தலையா, கையா, வயிரு, நெஞ்சா.....

கிண்டல்;

அதெப்படி முடியும். காலில்லாமல் நிற்பதில்லை காற்சாண் கூட நடப்பதில்லை. மேலையும் அதிலுள்ள உறுப்பெல் லாவற்றையுங் கால்தானே தாங்குகிறது இதிலும் ஒரு ஐயம்! சூத்திரதாரரே! தாங்குவது காலா, அல்லது அதன் அடியில் உள்ள பாதமா?

சூத்திரதாரர்;

பாதமேதான்! அதற்கென்ன சந்தேகம். அப்மனே கிண்டல். படைப்புக் கடவுளாகிய நான் முகப் பிரமனையே தாங்கி நிற்பது அவரது பாதங்களல்லவா? இதை உணர்ந்த அவர் அந்த முக்கிய உறுப்பிலிருந்து உருவாகுபவனே உலகினைக் காக்க, அல்லது தாங்க வல்லவன் என்று எண்ணினர். அதன்படி அதிலிருந்து சூத்திரர்களைப் படைத்தார். இந்த நான்கு வருணங்களில் அடுத்த மூன்றில் ஏதாவ தொன்றின் செயல்களால் உலகம் பசியில்லாமல் வாழ முடிகிறதா? .மக்களின் உயிர்கள்மட்டல்ல மற்ற உயிரினங்களுங் கூடத் தமது உடலை வளர்க்கவும் , உயிர் ஓம்பவும் ஒரு வர்ணம் உழைக்கின்றது அல்லவா? அதாவது உலகத்தை இயக்க இயங்குகின்றதல்லவா; அந்தத் தொழில்கள் எனும் சூத்திரப் பொறியை இயக்குகின்ற காரணத்தால் அவர்களைச் சூத்திரர் என்றழைத்தது; சிறுமைப்படுத்த அல்ல பெருமைப் படுத்த

எனக் கொள்ள வேண்டும் கிணடல் தம்பி! சற்று சிந்தித்துப் பாரப்பா! . அப்போது உண்மை விளங்கும்.

கிண்டல்;

ஆனலும் , இத்தகைய உழவாலும், உழைப்பாலும் உலகைத் தாங்கும் சூத்திரரைத் திராவிடர், ஆதித் திராவிடரூர் என்று ஏன் அழைக்கிறூர்கள்? அலுங்காமல், நலுங்காமல் அரியாசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்கிற சத்திரியர். ஏதோ சொர்க்கம், கடவுள் என்று வேதங்களை பாராயணஞ் செய்து கொண்டே பூசை புனக்காரஞ் செய்கிற பிராமணர், செல்வத்தையே மூலதனமாகக் கொண்டு பண வியாபாரஞ் செய்கின்ற வைசியர் என்ற மூன்று வர்ணங்களிலும் உலகத்திலேயே மற்றவர்களுக் காக வியர்வை சிந்தும் உழவர்களைப் பல தொழில் செய்யும் பாட்டாளிகளை இப்படிப் பாதத்திலிருந்து பிறந்தவர்கள் என்று அண்டத் தகாத ஈனர்கள் என்று இழிவு படுத்துகிறூர்கள் என்பதுதான் எனக்குப் புரியவிலலை.

சூத்திரதாரர்;

திராவிடர் என்பது தமிழ்ச் சொல்லே அல்ல. அது வடமொழிச் சொல்; வளைந்து வளைந்து அலைந்து வந்த இனம் என்பதுதான் அதன் பொருள் எனப் பேராசிரியர் பெருஞ்சொற் புலவர் ஆ. கார்மேக கோனூர் சொல்வார்,

கிண்டல்;

அப்படி ஒரு கதை இருக்கிறதா?

சூத்திரதாரர்;

ஆமாம். இந்தத் திராவிடம் என்ற சொல்லுள் தமிழினத்தின் தோற்றம், மாற்றம், ஏற்றம், இறக்மென்ற எல்லா வரலாற்றுக் கூறுகளும் உள்ளன. கபாட புரத்தில் முதற் சங்கம் வைத்துத் தமிழாய்ந்த குமரிக் கண்டத்தை கடல் பல தடவை கொண்ட பொழுதெல்லாம் வடக்கு நோக்கிப் புலம் பெயர்ந்து வடக்கே ஐட்லஜ் ஆற்றங்கரை வரை குடியேறுந் தமிழினத்தின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக் காட்டுவது இந்தத் திராவிடம் எனும் பதமே. ஆரியர் அன்று பழித்துரைத்த தமது

பகைவர்களைக் குறிக்கப் பயன்படுத்திய திராவிடம் என்ற சொல்லுக்குள் தமிழினம் புகுந்து கொண்டு வாழ்வதையும் அதன் பெயரால் ஆட்சி நடத்துவதையும் .

கிண்டல்; (காதைப் பொத்திக் கொண்டே)

வேண்டாமய்யா வேண்டாம்... இந்தத் திராவிட மாயை.... என்று அழியும் இந்தத் திராவிட மோகம், என்று தணியும் இன்பத் தமிழகத் தாகம்!

சூத்திரதாரர்;

அப்பா! கிண்டலப்பா!! . எதையுங் கிண்டிக் கிழப்பி..... கிளறி ....கேட்டுத் தெளிவதுடன் அதைக் கேட்பவர்களுந் தெளிவு பெறச் செய்யும் உன் திறன் மெச்சக் கூடியதே. வேறு ஏதாவது உதவிகள் வேண்டுமா?

கிண்டல்; (கையை அகல விரித்துக் காட்டி)

இம்மட்டிலும் பெரிதாக வேண்டும்; அவற்றையெல்லாம் பிறகு கேட்டுக் கொள்கிறேன். இப்போது நாடகங்களைப் படைத்து நாட்டை நல்வழிப்படுத்த வேண்டிய அநேக காரியங்கள் இருக்க அதையெலாம் விடுத்து, இப்படி பழைய தமிழ் நூல்களை நாடகமாக்குகிறீர்களே இது காலத்திற் கேற்றதா/ காலத்தின் கட்டாயமா?

சூத்திரதாரர்;

இந்த நாடகத் தொடரைப் பார்த்துப் பரவசங் கொள்ள, அல்லது பண்டைத் தமிழர் வாழ்க்கையின் பண்புகளைப் பகுத்தறிந்து, அதனல் உண்டாகுந் தமிழ் உணர்வையும் இலக்கிய உணர்வையும் போதிய அளவு புரிந்து துய்க்க வேண்டியது தமிழர்தங் கடனுகும். உன்போலப் பலர் கொள்ளும் இத்தகைய சந்தேகத்தை நீக்கிக் கொள்ள வேண்டியது அவசியந்தான். அதுமட்டல்ல அவைகளை எப்படி நாம் அனுபவிக்க வேண்டுமென்பதை தொல்காப்பியரே ;

நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்
பாடல்சார்ந்த புலனறி வழக்கிலும்

என்று சொல்லி உள்ளார். அதனல் பாடல் சார்ந்த புலனறி வழக்கிலுள்ளவற்றை நாடக வழக்கில் நவின்று பார்ப்போமே என்று இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்...

கிண்டல்:

அப்படியா! எனக்குப் பாட்டென்றால் பாடாய்ப் படுத்தும். ஏதோ பத்துப் பாட்டு எட்டுத் தொகை என்கிறார்களே! அவற்றுள் பத்துப் பாட்டென்றால், எனக்குத் தலை சுத்தோ சுத்தோ என்று சுற்றும். அது எனக்கு ஒத்து வரவே வராது. எட்டுத் தொகையாமே! அவைகள் என் பகை நூல்கள். இப்படி அதையெலாம் நாடகமாக்கினால்; நான் முழுதாகப் பார்த்திக் கொண்டிருக்கலாம். அலுப்போ சலிப்போ வலிப்போ தட்டாது! அது சரி! அதோ ஐந்தெழினி அரங்கம் என்று ஏதோ எழுதி வைத்திருகிறீர்களே. அதன் பொருள்தான் என்ன?

சூத்திரதாரர்;

மதிப்பிற்குகந்த கிண்டலாரே, நீர் மிகவும் பொல்லாதவர்தான். எனது அலுவலகத்திற்குத் தினமும் அநேகர் வருகிறார்கள். போகிறார்கள். நீரோ இங்கு வந்து எடுத்துக் கொண்டு போகப் போவதில் ஒன்றையாவது எடுத்துக் கொண்டு போவதே இல்லை. அந்த அளவில் நீர் பெரிய கில்லாடியேதான். பலருடைய பார்வையிற்பட்ட இந்தக் குறிப்பைப்பற்றி எவருமே தெரிந்து கொள்ள விரும்பியதே கிடையாது. ஆனால்; உன் கண்கள் பெரும் பாக்கியஞ் செய்தனவையே. எழினி என்றால் எழுதப்பட்ட எழிலான திரை என்பது பொருள். இதை இப்போது திரைச் சீலை என்கிறார்கள். நாடக அரங்குகளில் நடக்கும் நிகழ்வு எந்தப் பின்புலத்தில் நடக்கினறது என்பதை பார்வையாளர்களுக்குப் புலப்படுத்துவதற்காகவும் காட்சிப் படுத்துவதற்காகவும் இதைத் தொங்க விடுவார்கள். அதுபோல இங்கே நடைபெற இருக்கும் ஐங்குறு நூறு இலக்கியத்தின் பொருள் கொண்ட நாடகங்கள் இடம் பெறும் ஐந்திணை நிலங்களையும் அவற்றின் வனப்பையும், வளத்தையும், வாழ்க்கையையும் உணர்த்தத் தக்கதாக சிறந்த ஓவியர்களால் தீட்டித்த துணியில் வரையப்பட்ட ஐந்து எழினிகள் உள்ளன. அவற்றைக் கொண்டே அதன் முன்னால் நாடகங்கள நடக்கப் போகின்றன. அதிலும் ஒரு சிறப்பு இவ்வெழினிகளுக்கு உண்டு. அவை தொல்காப்பிக் கூற்றின்படி அமைக்கப்பட்டுள்ளன.

மாயோன் மேய காடுறை உலகமும் (முல்லை)
சேயோன் மேய மைவரை உலகமும் (குறிஞ்சி)
வேந்தன் மேய தீம்புனல் உலகமும் (மருது)
வருணன் மேய பெருமணல் உலகமும் (நெய்தல்)
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்

எனவும் இவையெலாம் மாறுபட்ட இடம் பாலை எனவும் கூறுவர். பாலைக்கு நாம் ஒரு பாவரி தருவதானால்

காடுகிழாள் மேய காந்தனல் பாலை (பாலை)
ஆய இவைகள் ஐந்தும் ஐந்திணை நிலமே

சூத்திரதாரர்;

எனலாம். இவைகள் ஒவவொன்றுக்கும் உரிய இறை களின் நிறங்கள் சாமளம் (காயாம்பூ), பவளம், மரகதம், நீலம், மஞ்சள், மிக்கதாகவே தோன்றும். ஆதலால் இந்த ஐந்து எழினிகளிலும் அந்த அந்த நிலத்திக்குரிய வண்ணங்கள் மிக்கதாகவே இடம் பெற்றுள்ளன. அதைவிட ஆங்காங்கே மலருஞ் சிறப்பான மலரின் பெயர் கொண்டும் இந் நிலங்களைப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

(சூத்திரதாரியின் எழுது மீடத்தில் இருந்த ஓர் மண வாழ்த்து மடலை எடுத்துக் கொண்டே)

கிண்டல் ;

என்ன சூத்திரதாரரே இந்த வாழ்த்து மடலில் தங்கள் தாம்பத்திய வாழ்க்கை தழைத்தோங்குக என்று வாழ்த்தி அடியில் சூத்திரதாரர் தம்பதி என் போட்டிருக்கிறீர்களே!

சூத்திரதாரர்; கிண்டல் ;

அதிலென்ன தவறு உண்டு கிண்டலாரே!

சூத்திரதாரர்; கிண்டல் ;

என்ன ஐயா! ஒன்றும் புரியாதவர்போலக் கேட்கிறீர்களே. தாம்பத்யம், தம்பதி என்ற வார்த்தைகள் வட மொழிச் சொல் அல்லவா?

சூத்திரதாரர்; கிண்டல் ;

அதற்கென்று குடும்பம் இல்லற வாழ்க்கை என்ற தனித் தமிழ் வாழ்த்தை இருக்க, கனியிருக்க காய் கவர்ந்துகடிக் கிறீர்களே. அப்படிச் செய்தால் புளிக்காதா துவர்க்காதா...

சூத்திரதாரர்;

அடடே..... தனித் தமிழ் ஆய்விலும் நீ பெரிய வல்லுநராகத்தான் உள்ளாய். கிண்டலாரே நீர் வடமொழி என்ற மஞ்சள் கண்ணுடியைப் போட்டுக் கொண்டு இதைப் பார்த்த படியால் அப்படித் தோன்றுகிறது. ஆனல்; நான் அணிந்திருப்பதோ பசுமையான பைந்தமிழ்க் கண்ணுடி!. எனவே தம்பதி தாம்பத்யம் என்ற இரு சொற்களும் அவை கருதும் தமிழின் தனித்துவச் செழிப்புள்ள தமிழ்ச் சொற்களாகவே தென்படுகிறது.

கிண்டல் ;

அது எப்படி? ஆடு மாடாகுமா. ஆடு ஆடுதான்; மாடு மாடுதான்! எந்த நிறக் கண்ணுடி அணிந்தாலும் அது அதுதான், இது இதுதானே!

சூத்திரதாரர்;

அப்படியா? இந்த இரண்டு சொற்களும் முன்னல் உளள தம், தாம் என்ற சொற்களை எடுத்துக் கொள்வோம். அப்போது அவை உமக்கு எப்படிப் படுகிறது என்ன கருத்துத் தோன்றுகிறது?.

கிண்டல் ;

தம் என்றல் தனது , அல்லது தாங்கள், தாம் என்றல் தங்களது அலலது தன், தாங்கள் என்ற பொருள்படு கிறது. அப்படிப் பார்க்கையில் இரண்டுமே தனித் தமிழ்ச் சொற்கள்தானு?

சூத்திரதாரர்;

அடுத்த சொல்லை எடுத்தால் பதியர், பத்தியம் என்ற சொற்கள் தோன்றுகின்றன அல்லவா?

கிண்டல் ;ஆம் .

சூத்திரதாரர்; கிண்டல் ;

அப்படியானல். அதன் பொருள் என்ன? பதி என்றல் ஏதோ ஒரு பயிரை எடித்து வந்து பிறிதோர் இடத்தில் நட்டுப் பயிராக்குதல். அதிபோல பத்தியம் என்பது கட்டுப்பாடு. நோயாளிகளுக்கு உணவில பத்தியம் என்னும் கட்டிப்பாடு என்றுதானே பொருள்!

கிண்டல் ; ஆமாம்.... ஆமாம்.

சூத்திரதாரர்;

அப்படியானால்; தாயும் தந்தையும் யாரோ யாராக இருந்த ஆணையும், பெண்ணையும் அவர்கள் முன் விட்ட நாற்றங்கால் மேடையில் இருந்து பிரித்து வந்து திருமண மேடையிற் சேர்த்துப் பதியம் இடுகிறார்கள். அந்த நிலையைத் தான் தமபதியர் என்கிறோம். அதுபோல; ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடொடு பத்தியமாக ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதை ஏன் தாம் பத்தியம் எனக்கொள்ளக் கூடாது. தம்பி கிண்டலாரே! எந்த மொழிச் சொல்லாக இருந்தாலுஞ் சரி, அவற்றில் தமிழ் மரபு சார்ந்த பொருள் உளதா என்று முதலிற் பார்க்க வேண்டும். அதன் பினனர் அத்தகைய பொருளு டைய தமிழ்ச் சொல்லாகத் தமிழ் வயப்படுத்திக் கொண்டால் அவை தூய தமிழ்ச் சொற்களாக மட்டுமல்ல; தமிழ்ச் சொற் தொகையும் அதிகரிக்கலாம் அல்லவா? என்ன வாயைப் பிழக்கின்றாய். தமிழ் மொழிக்கு இத்தகைய வல்லமை உண்டென்று?

கிண்டல் ;

இன்னொரு உதவி அய்யா அதனையுந் தந்து உதவுவீர்களா?

சூத்திரதாரர்;

சொல்லப்பனே சொல்

கிண்டல் ;

இது நாடகம் அல்லவா. இவ்வளவு பெரிய வசனக் கட்டிருந்தால், அதைப் பேசி நடிப்பவர்கள் தளர்வுறுர்களா. கேட்பவர்கள் சரியாக அதைப் புரிந்து கொள்ளாமல் திக்குமுக்காட மாட்டார்களா?

சூத்திரதாரர்;

அதுவா? கிண்டலப்பா! நாடகம் இரண்டு வகைப்படும். ஒன்று மற்றவர்கள் நடிக்க, அதை நேரில் பார்ப்பவர்கள் கண்டு, கேட்டு சுவைப்பது. அடுத்தது; அத்தகைய நாடகங்களைப் படித்தறிவது. எனவே நாடகங்களை எழுதும் போது இப்படித்தான் எழுதலாம். ஆனால், நடிக்கும்போது; ஒருவர் இத்தகைய ஒரு நீண்ட

வசனத்தைப் பேசும்போது, கேட்பவர் இடைக்கிடை குறுக்கிட்டு ஏதும் கேட்பார் அல்லவா? அப்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாக அந்தக் கேள்வி அமைய பேசிக் கொண்டிருந்த வசனப் பகுதி தொடரும். இவ்வாறு இயல்பாகவே வசனங்களின் அளவு குறுகி விடும்

சூத்திரதாரர்;

ஆமாம் ஆமாம். கிண்டலாரே! மேற்கொண்டு சில அத்தி யாவசியமான காரியங்களை இட்டுக் கவனிக்க வேண்டி உள்ளது. அத்தருணங்களில் நீர் முந்திரிக் கொட்டை போல கண்ட இடத்தில் மூக்கை நுழைக்கக் கூடாது.

கிண்டல் ;

என்ன சொன்னீர்கள்? முந்திரிக் கொட்டையோ. கண வனால் கைவிடப்பட்டவள் கர்ப்பமுற்று பெற்ற பிள்ளையை வளர்க்க வக்கற்றுக் குப்பைத் தொட்டிலிலோ அநாதை மடத் தொட்டிலிலோ போடுவது போலத் தன் பருப்பைத் தனக்குள்ளே அடக்க முடியாது வெளியே தள்ளி விட்டுத் தளதளத்து தண்டு என் ஏமாற்றி ஒரு தாவரப் பெயரைச் சூடி இருக்கும் முந்திரியம் பழத்தை எனக்கு நினைவு படுத்தி விட்டீர்களே. அப்படி விதையைப் புறந் தள்ளியும் அதன் பெயராற்தானே தாவர இனத்து முந்திரி மரம், முந்திரிப் பழம் என்று துலங்குகிறது. அய்யா! முந்திரி என்ற பெயரே, தமிழ் சொற்கள் எவ்வளவு காரண காரிய கருத்து அடிப்டையில் தூய தமிழ்ச் சொற்களால் ஆக்கப் பட்டவை என்பதற்கு முன்னுதாரணமாக உணர்த்தவில் லையா? அதுமட்டுமல்ல எங்கோ இருந்து வந்து இங்கு வளரும் கிரெப்ஸ் கொடியை முந்திரி என்கிறார்களே!

சூத்திரதாரர்; அப்படியென்றால் அதன் தமிழ்ப் பெயரென்ன?

கிண்டல் ;

திராட்சை! திரண்டு குலையாக இருப்பதால், அதற்கு அப் பெயரைப் பொருத்தமாக வைத்துள்ளனர். குருவிச்சை, எலுமிச்சை பேரிச்சை ஈச்சை போன்றவற்றில் உள்ள குலை எனும் பொருள்படும் விகுதியான இச்சை என்பதை இணைத்துத் திராட்சை எனப் பெயரிட்டிள்ள போது, ஏன் அய்யா முந்திரி என்ற பெயரைப் பொருந்தா இடத்தில் புகுத்த வேண்டும்?

சூத்திரதாரர்; கிண்டலாரே! நீர் விவரமான ஆள்தான். நான் தான் விவரந் தெரியாமல் அகப்பட்டுக் கொண்டேன். அடுத்த காட்சிக்கு நகரலாமா?

முதற் காட்சி முடிவுறுகிறது. முனனெழினி மூடுகிறது.

==========

காட்சி; *2*

காலம் ; மாலை

இடம்; திருவாவடுதுறை ஆதினம் நூற்சுவடி நிலையம்

பாத்திரங்கள்;

1. சூத்திரதாரர் *2,* மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, *3.* அவரது மாணவன் உ. வே. சாமிநாதய்யர்

நிகழ்ச்சி;

தமிழறிவு பெறும் நாட்டங் கொண்ட உ. வே. சாமிநாதய்யர் அக்காலத்தில் தமிழறிவு மிக்க வித்துவான் மீனாட்சி சுந்தரரிடம் தமிழ் பயில்கிறார். ஒரு நாள் ஆதினத்திற்குச் சொந்தமான நூற்சுவடி நிலையத்திற்கு வரும் மகா வித்துவான் அங்கே சுவாமிநாதன் எனும் மாணவரைக் காண்கிறார்.

(கையில் ஒரு சுவடியை வைத்துக் கொண்டு அதையே உற்றுப் பார்த்து ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் மாணவன் சுவாமிநாதனிடம் அருகில் வந்து தன் கைகளை மாணாக்கனின் தோழ் மேல் வைக்கஅவன் பதறி எழுந்து நிற்கிறான்)

மீனாட்சி சுந்தரர்;

என்ன சுவாமிநாதா! வீட்டு நினைப்பு வந்து விட்டதோ.. மடத்துச் சாப்பாடு சலித்துப் போய் விட்டதா? அம்மாவின் கைப் பக்குவச் சாப்பாட்டை அருந்த எண்ணந் தலை தூக்கின்றதா?

சாமிநாதய்யர்;

இல்லை அய்யா! அப்படி ஏதும் எண்ணம் இல்லை! இங்கே உள்ள சுவடிகளைப் படிக்குந் தோறும்; ஊணை, உறக்கமோ பெரிதாகப் படுவதே இல்லை. ஏன் இரவு இவ்வ ளவு விரைவாக வருகிறது. இன்னுஞ் சற்றுத் தாமதித்து வந்தால் என்ன? மேலும் கொஞ்சம் படிக்கலாமே என்றுதான் தோன்றுகிறது.

மீனாட்சி சுந்தரர்;

அப்படியா? கேட்பதற்கு இனிமையாகவே இருக்கிறது. அப்படியா. சற்று நேரத்திற்கு முன்னர் ஏன் அப்படி மலைத்துப் போயிருந்தாய்?

4068.

சாமிநாதய்யர்;

அய்யா இச்சுவடியில் இருந்த மூன்று வெண்பாக்கள் எனக்குப் புதிராக இருந்தன. அதனால்தான்.

மீனாட்சி சுந்தரர்;

எங்கே அந்தச் செய்யுட்களைப் படி பார்க்கலாம்.

சாமிநாதய்யர்;

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளர்மதுரைக் காஞ்சி - மருவினிய
கோல்நெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

சாமிநாதய்யர்;

இதில் என்ன சொல்லப்பட்டுள்ளது? இதில் சொல்லப்பட்டவற்றின் பொருள் என்ன வைத்தியர்களின் பட்டோலை மாதிரியல்லவோ தென்படுகிறது. அப்படியானால் முருகு, பாணிரண்டு, முல்லை என்பவை மருந்துச் சரக்குகளா?

மீனாட்சி சுந்தரர்;

அப்படியல்ல சுவாமிநாதா. இதிலே சொல்லப் பட்டவை எல்லாம் பண்டைக் காலத் தமிழ்ப் பனுவல்கள்.

சாமிநாதய்யர்;

அப்படியா. நான் இதுவரை இந்த நூல்களைப்பற்றிக் கேள்விப்பட்டதோ பார்த்ததோ இல்லை.

மீனாட்சி சுந்தரர்;

பண்டைத் தமிழர் சங்கம் வைத்து தமிழ் செய்தார்கள். சேர, சோழ பாண்டிய நாட்டுத் தமிழ்ப் புலவர்களை அக்கால மன்னர்கள் அனைவரும் பொன்போலப் போற்றினர்கள், கண்போலக் காத்தார்கள். அவர்களின் வாய்ச் சொற்களைக் கூடக் கூடல் நாயகனின் அருட் கூற்றுகவே கொண்டனர், அத்தகைய புலவர்கள் அவ்வப்போது பாடிய பாடல்களை அழிந்து போகாது தொகுப்பித்தார்கள். அவைகளில் ஒரு தொகுதிக்குப் பத்துப் பாட்டென்று பெயரிட்டனர். அந்தத் தொகுதியில் உள்ள பத்துப் பாட்டுப் பனுவல்களின் பெயர்கள்தாம் இவைகள்.

சாமிநாதய்யர்; (மேலுமோர் தடவை படித்து விட்டு).

என்ன அழகான பெயர்கள். பெயரே இத்தனை இனிதாக

இருந்தால். அவை பகரும் பொருட்கள் எவ்வளவு சுவையாக இருக்கும்.

மீனாட்சி சுந்தரர்;

அந்த நூல்களின் பெயர்களைச் சொல்லி வருகிறேன். நீ அந்தப் பா வரிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்;
1. திருமுருகாற்றுப் படை, 2. பொருநராற்றுப் படை
3. பெரும் பாணற்றுப் படை, 4. சிறுபாணற்றுப் படை
5. முல்லைப் பாட்டு 6. மதுரைக் காஞ்சி 7. நெடுநல் வாடை
8. குறிஞ்சிப பாட்டு 9. பட்டினப் பாலை 10. மலைபடுகடாம்.
அடுத்த வெண்பாவையும் படி பார்க்கலாம்

சாமிநாதய்யர்;

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒற்ற பதிற்றுப்பத் தோங்கு - பரிபாடல்
கற்றறிந்தா ரேற்றுங் கலியோடகம் புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

மீனாட்சி சுந்தரர்;

வைத்தியநாதா! இவைகளும் மருந்துச் சரக்கெழுதிய பட்டோலை போலத் தோன்றுகிறதா? ;. இவைகளும் சங்க கால நூல்கள் தாம். 1. நற்றிணை. 2. குறுந்தொகை, 3. ஐங் குறு நூறு, 4. பதிற்றுப் பத்து, 5. பரிபாடல், 6. கலித்தொகை, 7. அகநானூறு, 8. புறநானூறு என்னும் இவைகளை எட்டுத் தொகை என்ற கட்டமாகத் தொகுத்துள்ளார்கள். சுவாமி நாதன்! மூன்று வெண்பாக்கள் என்றுயே.

அடுத்ததையும் படி....

சாமிநாதய்யர்;

நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியுட யென்பவே
கைநிலய வாங்கிழ்க் கணக்கு

மீனாட்சி சுந்தரர்;

இதிலே உள்ள பதினெட்டு நூல்களையுஞ் சேர்த்த தொகுதியை பதினெண் கிழ்க் கணக்கென்பர்.

சாமிநாதய்யர்;

அப்படியானால் பத்துப் பாட்டு நூல்களும், எட்டுத் தொகை நூல்களும் சேர்ந்த கணக்கை மேற் கணக்கு என்பரோ?

மீனாட்சி சுந்தரர்;

ஆமாம் அப்படிச் சொல்வதுண்டு. அது நிற்க அவை 1. நாலடியார், 2. நான்மணிக் கடிகை, 3. இன்ன நாற்பது 4. இனியவை நாற்பது 5. கார் நாற்பது 6. கழிவழி நாற்பது 7. ஐந்திணை ஐம்பது, 8. ஐந்திணை எழுபது, 9. திணைமொழி ஐம்பது 10. திணைமாலை நூற்றைம்பது 12. முப்பால் எனுந் திருக்குறள் 13. கார்நாற்பது 14. பழமொழி நானூறு 15. சிறு பஞ்ச மூலம் 16. முது மொழிக் காஞ்சி 17. ஏலாதி 18. கைந்நிலை என்பனவாகும்

சாமிநாதய்யர்;

அய்யா இவைகள் இங்கே உள்ளனவா?

மீனாட்சி சுந்தரர்;

இங்கே சில நூல்கள் இருக்கலாம். என்னிடங் கூடச் சில உள்ளன. ஆனால் எல்லாம் ஒரே இடத்தில் எங்கேனும் உள்ளதென்று சொல்ல முடியாது என்பதை மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். இவ்வாறு சொல்கிறேன் என்று மனந் தளர்ந்து விடவேண்டாம். நாடெங்கிலும் உள்ள தமிழறிஞர்களிடம் இவை ஆங்காங்கு உள்ளன. ஆங்கிலக் கல்வி, பணியாலே சுவடி களைப் படிக்கும் பயிற்சி இன்மை என்பவற்றால் இத்தகைய நூல்களின் பாவனையும் கிடைத்தல் வசதியும் குறைந்து விட்டது. சுவாமிநாதா! நான் இதுவரை சந்தித்த தமிழறிஞர்களிடமோ அல்லது மாணவர்களிடமோ இல்லாத ஒரு அங்கலாய்ப்பு உன்னிடம் உள்ளது. எனவே நாடெங்கிலும் உன் கால்கள் பரவட்டும். ஆங்காங்கு இலை மறை கனியாகக் கிடக்கும் சங்க இலக்கியங்களின் ஓலைச் சுவடிகளைத் திரட்டிப் பாடபேதங் காண். இக்காலத்தவர் படித்தின்புறும் வண்ணம் உரை கண்டு புத்தக வடிவில் அச்சிடு. அதற்கு வேண்டிய பல வித ஆதரவுகளை நல்குவேன், அத்துடன் என் ஆசியும் உண்டி. இந்தப் பணியைச் செய்வாயா?

சாமிநாதய்யர்;

ஆம் அய்யா. வாழ்வின் பிறவிப் பயனைச் சிரமேற் கொண்டு முயல்வேன். அவ்வப்போதி என்னுற் தெடித் திரட்டியவற் றுடனும், முடிந்த பனுவல்களைப்பற்றிய தகவல்களுடனும் தங்களை வந்து காண்பேன். தங்களின் புத்திமதிகளைப் பெறுவேன்.

மிக மிகக் களிகூர்ந்தேன். என் நீண்ட நாள் எண்ணம் நிறைவேறப் போகிறது என்பதில் எனக்கு நிறைவு ஏற்படுகிறது. ஆனல், இந்த நூல்கள் யாவும் தமிழரின் தொன்மை தமிழரின் வாழ்வியல் நெறி என்பவற்றைப் பிரதிபலிக்கும் கண்ணுடி. எனவே இந்த நூல்களைக் கற்றறிய தமிழரின் வாழ்வியல் நெறிகளின் வரம்புகளைப் பற்றிய இலக்கண நூல்களையும் கற்றுக் கொள். தொல் காப்பியம், அகப்பொருள் இலகக்கணம், புறப் பொருள் இலக்கணம் என்பன அத்தகைய நூல்களிற் சில.

சூத்திரதாரர்;

இந்த நிகழ்வின் உந்துதலால் உந்தப்பட்ட சாமிநாதய்யர் எடுத்துக் கொண்ட கடுமையான எத்தனங்களின் விளைவால்; சங்க கால நூல்கள் மட்டுமல்ல அவற்றின் உரைகளில் எடுத்தாளப்பட்ட பல பண்டைப் பனுவல் களைக் கூட நாம் பெற்றுச் சுவைக்கின்றேரும். தமிழ் நெறியில் மிதக்கின்றேரும். இதற்கிடையில் இத்தகைய உந்து சக்தியாக இருந்த மகா வித்துவான் மீனட்சி சுந்தரம்பிள்ளையைப்பற்றி சில சிறப்பான தகவல்களை நாம் அறிய வேண்டாமா? மகா வித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளை அவர்களை இட்டு அவரது மாணவன் டாக்டர், மகா மோபாத்யாயர் உ. வே. சாமிநாதையர் படைத்த வாழ்க்கை வரலாறு 2 பாகங்கள் , என் சரிதம், கண்டதும் கேட்டதும் நல்லுரைக் கோவை போன்ற நூல்களாலும், அவர் பதித்து வெளியிட்ட நூல்களின் பதிப்புரைகளாலும் தெளியலாம். இவர் *1815 -1876*ம் ஆண்டுக் கால கட்டத் தில் வாழ்ந்த தமிழறிஞர். சோழ நாட்டில் திருச்சிராப்பள் ளியில் பிறந்து திருவாவடுதுறை ஆதினத்தில் ஆதின வித்து வானகத் திகழ்ந்து பல தமிழ் நூல்களைப் படைத்தார். டாக்டர் உ. வே.சாமிநாதய்யரை ஊக்குவித்து பனையோலைச் சுவடிகளில் அழியும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களை புத்தக வடிவில் அச்சு பதித்துத் தமிழுலகில வாழ விட்டார். அது எவ்வாறு நிறைவுற்றதென அடுத்த காட்சியிற் காணப் போகிறேரும்.

இரண்டாம் காட்சி முடிகிறது.
எழினி அரங்கை மறைக்கின்றது.

==========

காட்சி ; *3*

காலம்; கோடைக் காலத்து முழுமதி நாளின் அந்தி மாலை.

களம்; கனடா தொரன்ரோ மாநகரின் உள்ள தமிழ் மொழி வளர்ச்சிப் பெரும் மன்றின் அரங்கமொன்று;

பாத்திரர்கள்; உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க முன்னாள் தலைவர் பேராசிரியர் இரா. வீரப்பன், தமிழகத்தில் தமிழ் முனைவர் தமிழினியன், எழுத்துப் பெரும் புலவர் எழுத்தினியன், சூத்திரதாரன். கிண்டல், மற்றும் தமிழறிஞர்கள், பேரவை உறுப்பினர்கள், பாரவையாளர்கள்.

நிகழ்வு. மறையும் நிலையில் இருந்த சங்க காலத் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைத் தேடித் திரட்டிப் பிரதி பேதங் கண்டு அச்சுப் புத்தகமாக்கிய டாக்டர். மகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யரின் தமிழ்ப் பணியை நினைவு கூரும் பெருவிழா வைபவம்.

(தமிழ் வாழ்க! தமிழ் வளர்க!!
தமிழ் தாரணி எங்கும் பரவுக!!! என்ற பதாகையின்
பின்னணி கொண்ட நீண்ட மேடையில்
உலகத்தில் எண் திசைகளிலும் இருந்து வந்த உலகத்
தமிழ்ப் பிரநிதிநிதிகள் அமர்ந்திருக்கின்றனர்.
உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தில் 25 வருட காலம்
உலகத் தலைவராக இருந்த பேராசிரியர் இரா வீரப்பன்
அவர்கள் தலைமை தாங்குகிறர். மதிப்பிற்குரிய
விழா நாயகன் டாக்டர் உ. வே சாமிநாதய்யரின்
சந்ததியின் ஒரு இளந் தளிர் குத்து விளக்கேற்றி வைக்கக்
கனடிய தேசிய இசையைத் தொடர்ந்து
உலகத் தமிழ்த்பண்பாட்டியக்கத
தேசிய இசை தொடர்கிறது. அறிமுக உரை நிகழ்த்த
சூத்திரதாரர் அவை முன் வருகிறர்.)

தமிழ் நெஞ்சங்களுக்குத் தமிழ் வணக்கங்கள்! தமிழன்னையின் தமியான தயவை வேண்டுவோமாக. அவைத் தலைவரே, அறிஞர்களே, அவையோரே உங்களை அன்புக் கரம் நீட்டி வரவேற்கிறேரும். இன்று தமிழ் உயிர்த் தெழுந்த தினத்தைக் கொண்டாட இங்கு குழுமி யுள்ளோம். இப்படிச் சொன்னால் நீங்கள் வியப்புறலாம்.

(தான் ஒரு புதிய செய்தியைச் சபையில் சொல்லி விட்டதாக நினைத்து, அவையோரைப் பெருமிதத்திடன் பார்கிறர். அத்தருணம் கிண்டலார் சபையின் முன் வந்து, ஒரு குறிப்பைத் தலைவரிடம் கொடுக்கிறர். அதைப் பிரித்துத் தலைவர் வாசிக்கிறர்)

எனக்கு ஒரு ஐயப்பாடு தொன்றுகிறது. தமிழ் இன்று உயிர்த் தெழுந்ததென்றால், அது எப்போது மரணத்தைத் தழுவிக் கொண்டது என்பதைப் பேச்சாளர் விலாவாரியாக விளக்குவாரா?

சூத்திரதாரர்; தனக்குள் இந்தச் சனியன் என்னை விடாதி போல இருக்கிறதே! விலா வாரியாக விளக்க வேண்டு மாமே. இரு புறத்து விலாவிலும் நன்றாக உனக்குத் தருகிறேன். பொறு... பொறு.... சரி... சரி ... இவருக்கு ஒரு சரியான அடி கொடுக்க வேண்டியதுதான்

(என்று தனக்குள் நினைத்துக் கொண்டே)

கிண்டலாரின் கேள்வி நியாயமானதே. அதற்கு விடை யாக ஒரு விளக்கத்தைத த தர விரும்புகிறேன். தமிழ் உயிர்த்தெழ, அது என்று மறைந்தது என்று என்னைப் பார்த்து ஆத்திரத்துடன் கேட்கலாம். அன்பர்களே! உயிரற் றவை அழிந்து, சிதைந்து பஞ்ச பூதங்களோடு கலந்து இருந்த இடமே தெரியாது போகும். அப்படி அழிந்தவை மீண்டும், அதே பொருளின் பழைய தோற்றத்துடன் உருவெடுத்து உயிர் பெறுது. ஆனால் உயிரிழந்தவை போல மறைந்திருந்தாலும், மறைக்கப்பட்டாலும், மறந்த நிலையில் இருந்தாலும் மட்டுமே அது மீண்டுந் தோன்ற வல்ல நிலையை அடையும். அத்தகைய நிலையில் தமிழ் மொழியின் இலக்கணம், இலக்கியம் , தமிழியல்புகள், தமிழர் சால்புகள் என்பன; குளிர் காலத்தில் நிலத்துள் மறைந்து ஒடுங்கிக் கிடக்கும் கோடை இனப் பூப் பூண்டுபோல பல புறக் காரணிகளால் மறைந்து கிடந் தது. இப்போது வசந்த காலம் வந்ததும், அவை நிலத்தைக் கிழித்துத் துள்ளித் தலை நிமிர்த்திய களிப்பில், இலை வரமுதலே மலரால் உலகைக் காண் பது போலத் தமிழ் இன்று தமிழரிடை மலர்ந்துள்ளது. அந்த மலர்ச்சியை நாம் இன்று கொண்டாட முன் வந்து கூடியுள்ளோம். மேற்கொண்டு அவைபற்றிய தகவல்களை இதைத் தொடர்ந்து உரையாற்றுபவர்கள்

எடுத்துரைப்பார்கள், நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன்னர், 1870ம் ஆண்டுக் கால கட்டத்தில் தமிழ் பேசும் நல்லுலகத்தில் பணைடைத் தமிழ் இலக்கியங்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை ஒரு நடன நிகழ்ச்சி மூலம் காட்சிப்படுத்த எண்ணியுள்ளோம். அதன் மூலம் இன்றைய நிகழ்ச்சியின் சிறப்பையும் அவசியத்தையும் உணர முடியும் என நம்புகிறேன்.

நடன நிகழ்ச்சி ஆரம்பமாகிறது. மங்கலான வெளிச்சம் அரங்கத்திற் பரவுது.
அரங்க மத்தியில் ஒரு பெண் அமர்ந்திருக்கிறுள்.
அவள்தான் தமிழ் அன்னை.
அவளில் மட்டுமல்ல அவளைச் சுழ்ந்து, அவலமும் பரிதவிப்பும், ஏக்கமுஞ் செறிந்துள்ளது;
அவளின் முன்னால் முத்தமிழைக் குறிக்கும் வகையில் மூன்று நடன மாதர் நடனமாடுகின்றனர்.
இசையும் பாடலும் பினனணியில் ஒலிக்கிறது.

சங்கம் வைத்து தமிழாய்ந்து தமிழ்நெறி கண்டார்
சகத்தில் அகம்புறமென் சார்தினை கண்டார்
பொங்குந் தமிழ்நெறியைப் புவியினிற் பூண்டார்
பூண்ட வாழ்வுரைக்கும் இலக்கியம் விண்டார்

தமிழர்தம் வாழ்க்கையின் தரத்தினை வகுத்தார்
தானதற்கு அகம்புறமென் தகுதிகள் பகுத்தார்
அமிழ்தாய் காதலகம் ஆம்வீர புறமான
அன்புடைய மறவாழ்வை அவனியிற் தொகுத்தார்

மன்னரால் தமிழ்மொழி மலர்ந்தது புலவர்
மனதுறைந்த காட்சிகளை மக்களுக்கு அளிக்க
சென்னிதனில் பாவடித்துச் செப்பினர் அவற்றைச்
சொர்த்தெடுத்து காப்பதற்குச் செறித்தனர் ஏட்டில்

பனையோலைச் சுவடிகளில் பதித்த அவற்றைப்
பலரறியக் கற்றவர்கள் பாடமே சொன்னர்
மனவோலை தனிற்பதித்து மாணவர் கற்றுர்
மரபுதனை தமிழ்ப்புலவர் மறையாமற் காத்தார்.

பாடசாலை கல்விமுறை பாடநூல் படிப்பு
பதிப்தற்கு அச்சுப்பொறி பாரதில் மிஞ்ச
ஏடதனைப் படிபபதற்கு இயலாது போக
இலக்கியங்கள் எத்தனையோ எட்டா திருந்தார்

இவ்வாறே காலஞ் செல்ல இலக்கியப் படிப்பும்
இலக்கியத் தமிழ்நெறியும் இருட்டாகப் போக
செவ்விதான பாட்டுந் தொகையுஞ் சிதலிக்கிரையாய்
செறிந்த காலே தமிழன்னை சிந்தினள் கண்ணீர்

(தமிழன்னை எழுந்து மற்றவர்களுடன் சேர்ந்தாடல்.)

எப்படி நான் சகிப்பேன் ஈசா எப்படி நான் சகிப்பேன்
இப்படியே போனால் இன்தமிழ் இலக்கியங்கள்
தப்புமா இல்லை தானழிந்தே போமா

ஏடுபடிப் பாரில்லை எழுத்தை மதிப்பாரில்லை
பாடிச் சுவைப்பாரில்லை பண்பை அறிவாரில்லை
நாடி இவைசிறக்க நல்லகாலம் வருமா

அச்சினில் பதியாளை சுவடிகளை அவனிக்கு அளியாளை
கச்சிதமாகவே கல்வியுடன் கல்வியாய்க் கற்றிட
காசினி என்றுதான் கனிரசம் நல்காதோ

எழினி மறைக்க முன்னால் வந்த சூத்திரதாரன்;

எனக் கதறிப் புலம்பினாள். தமிழன்னையின் தவிப்மைத் தமிழ் கேட்டது; அப்போதுதான் ஒரு தமிழ் மகன் புவியிற் பிறந்தான். அந்தப் பெருமகன் செய்த சாதனையைப்பற்றி அறிந்து பெருமைப் படுவதற்காகவே நாம் அனைவரும் இங்கே கூடியுள்ளோம். இங்கே பேசப்பட இருக்கும் பேச்கள் பல. அவை தேனாக இனிக்கும். கனியாகச் சுவைக்கும். பாலாகப் பலன் தரும். அமிர்தமாகத் தமிழ் ஆயுளை நீடிக்கும். இப்போது தலைவர் அவர்களை இட்டு உங்களுக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கக் கனடியக் கிளையின் ஆரம்ப கால உறுப்பினர் திரு குமாரசாமி அவர்கள் சில வார்த்தைகள் மொழிவார்.

தி குமாரசாமி;

வணக்கம்! நான் ஒரு தமிழறிஞன் அல்லன். ஆனால் தமிழார்வலன். இந்த வகையிற்தான் இந்தியாவிலிருந்து கனடா மொன்றியலுக்கு விமானத்தில் வரும்போது ஒரு வரைச் சந்தித்தேன். பார்வைக்கு மிகச் சாதாரணமானவ ராகத் தோன்றினர். அவர் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த படியால் அவரது கையில் இருந்த ஒரு நூலைப் பார்க்க நேரிட்டது. அது ஒரு தமிழ் நூல். எனவே அவருடன் தமிழில் உரையாடியபோது, அவர்தான் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத் தலைவர் என்றும், தான் உலகில்

எங்கெங்கெலாந் தமிழர் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் சென்று அவர்களைக் கண்டு தமிழ் உணர்வை ஏற்படுத்தி வருவதாகவும், இப்போது கனடாவில் வாழுந் தமிழர்களைச் சந்தித்து, இங்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கக் கிளையைத் தாபிக்க விரும்பி வருவதாகவுங் கூறினர். உலகத்தில் உள்ள தமிழர்கள் ஒன்று சேர வேண்டும், ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு கடல் கடந்து தம்மின மக்களைத் துறந்து, அந்நிய இனத்தவர்களோடு அடிமை மனித இனமாக வாழும் அவர்களிடைத் தாம், தமிழர் தங்களினம் தொன்மையானது, ஒரு பெரும் பாரம்பரி யத்தைக் கொண்டது எனுந் தன்னம்பிக்கையுடன் எழுச்சி கொண்டு, தாங்களும் மனித உரிமை நிறைவோடு வாழத்தக்க ஒரு பொற்காலம் எதிரே உள்ளதென்ற நம்பிக்கையுடனும், முயற்சியுடனும், வாழ வேண்டு மென்ற உறுதி கொள்ளும் நடபடிக்கையில் ஈடுபட்டுத்த அயராது உழைப்பவர்.

1974ம் ஆண்டிலேயே உலகத் தமிழ்ப் பண்டியக்கத்தை ஆரம்பித்தவர்களாலேயே மேற் கொண்டு நடாத்த முடியாது கைவிடப்பட்ட நிலையில் இருந்த இந்த இயக்கம் இவரது கவனத்தை ஈர்த்தது. அதன்பின், அதை மலேசி யாவில் புதுக்கி அமைத்து, அதன் உலகளாவிய தலைவராகி 25 வருடங்களாகத் தொடர்ந்து, உலகமெங் கிலும் பல கிளைகள் கண்டு நடாத்தி வருகிறார். இதுவரை இவர் உலகின் பல பாகங்களுக்குஞ் சென்று வருந் தமிழ் நாடோடி என்பது தக்கதேயாம். அவ்வாறு சென்ற நாடுகளில் வாழுந் தமிழர்களின் வரலாற்றை ஆராய்ந்து ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். மலே சியா எனும்போது அது இந்தக் கால கட்டத்தின் தமிழ் நாற்று மேடையாக இலங்கி வருகிறது. என்ற ஒரு உண்மை துலங்குகிறது. அங்குதான் உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனத்தின் ஆரம்பத்தைத் அருட்தந்தை தனி நாயகம் அடிகளார் அவர்கள் தொடங்கி வைத்தார். இங்கேதான் கைவிடப்பட்ட உலகத் தமிழ்ப் பண்பாட் டியக்க இயக்கம் இப்போது உள்ள அதன் வளர்ச்சியை அடையத் தக்க உந்து சக்தியைப் பெற்றது. இதுவரை 25 வருடங்கள் உலகளாவிய ஒரு தாபனத்தின் தலைவராக இருந்த பெருமையை எவரும் உரிமை கொள்ள முடியாது.

ஆயினும் இந்த உருமம் மலேசியாவைச் சேர்ந்த பேரா சிரியர் இரா வீரப்பன் அவர்களேயே சாரும். இவரது வழியில், இவரது மகள் திருமதி பொன்னி அவர்களும் இந்த இயக்கத்தை வழி நடத்தி வருகிறார். இத்தகைய பேராசிரியர் வீரப்பன் அவர்களைத் தலைவராகக் கொண்டு இந்த விழாவை நடாத்துவது பெரிய பாக்கியமே . அவரை, வரவேற்றுப் பாராட்டிக் கௌரவிக்கின்றோம். இவர் இலங்கை மலையகத்தில் இந்தியத் தமிழகத்தைச் சார்ந்த பெற்றார்க்கு மகவாகப் பிறந்து மலேசியாவில் வாழ்ந்தவர். தமிழ் ஆங்கிலம் மலேசிய மொழிகளில் பாண்டித்தியம் மிக்கவர். மலேசிய ஆங்கில அகாரதி படைத்தவர் அங்கு பேராசிரியராகக் கடமை செய்தவர்

சூத்திரதாரர்; சங்கத் தமிழ் இலக்கிய நூல்களை அச்சுருவில்கொண்டி வந்த தமிழ்த தாத்தாவின அரும் பணிகளை நினைவு கூரும் இந்த விழாவில் இப்போது தமிழக முனைவர் தமிழினியன் அவர்கள் சில வார்த்தைகள் இயம்புவார்.

தமிழ் முனைவர் தமிழினியன்,

ஆதித் தமிழர் வாழ்வில் இடம் பெற்றிருந்த தமிழ் வாழ்வியல் நெறி சார்ந்த இலக்கியங்கள் இரண்டு வகை என்பர். முதலாவது வகை சங்க இலக்கியங்கள் எனப் படும். அவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கிழ்க் கணக்கென்பர் என்பர். அடுத்தது அவர்களின் வழி பாட்டு நெறி சார்ந்த தேவாரமாதியன. இவைகள் அவ்வளவு தொன்மை வாய்ந்தனவல்ல. சங்கம் மருவிய காலத்திற்கும் பிற்பட்டவை. முதலாவது வகை இலக் கியங்களுக்கும் இவற்றிற்கும் இடையில் நீண்ட கால இடை வெளி உண்டு. இவைகள் பௌத்த, சமண, சைன, மதத்தவர்களின் ஆளுமை மிக்க இறையற்ற மதக் காலங்களிலும், இசுலாம், கிறிஸ்தவம் ஆதிய ஏக தெய்வக் கொள்கை உள்ள சமய ஆளுமையின் போதும் புறந் தள்ளப்பட்டன. அக்கால மன்னர்களின் அதரவால் வளர்நதாலும் இறைக் கொள்கை மிக்க தமிழரின் வழிபாட்டு முறை மக்களிடை ஆழப் பதிந்திருந்த காரணத்தால் மக்களிடை ஆட்சி செலுத்தும் அளவிற்கு வலுவற்றனவாகவே இருந்தன. ஆயினும் அந்நிய மதங்

களின் நெருக்கு வாரத்தால் அழிந்து போக இருந்த தேவாரமாதிய பக்தி இலக்கியத்தைப் பதினோராம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் தமிழகத்தை அரசு செய்த தமிழ் மன்னன் முதலாவது இராச இராச சோழன் நம்பியாண்டார் நம்பி என்பவரைக் கொண்டு தேடித் திரட்டி பேணிக் காத்தான். இதனால் இவன் பெயர் திருமுறை கண்ட சோழன் எனும் பெரும் மதிப்புற்றது. இதுபற்றிய தகவல்களைக் கூறும் நூல் ஒன்றும் எழுந்தது. இதன் பெயர் திருமுறை கண்ட புராணம் என்பர். இதனை இயற்றியவர் 940 - 1012 கால கட்டத்தில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியர் என்றழைக்கப்படும் புலவர் உமாபதிசிவம் அவர்களாவார்.

இதனை இங்கே எடுத்துக் கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு. தேவாரங்களை ஒரு மன்னனின் ஆதரவுடன் தேடித் திரட்டித் தொகுத்துக் காத்த நிகழ்வையே அடித்தளமாகக் கொண்டு திருமுறை கண்ட புராணம் செய்த இந்தத் தமிழுலகம், எந்த வித ஆதரவுமின்றித் தனியொருவரின் சாதனையால் ஆங்காங்கு சிதறிக் கிடந்த சங்க நூல்களைத் தேடித் திரட்டிப் , பாடபேதங் கண்டு உரை கண்டு, அரும்பொருள், செய்யுள் முதற் குறிப்பு, மற்றும் பல நூல்களில் பயிலுந் தகவல்கள், ஆய்வுத் தரவுகள் என்பவற்றிற்கு அகரவரிசை தயாரித்து அச்சிற் பதிப்பித்த தமிழ்த் தாத்தா டாக்டர் மகோபாத்யாய உ. வே. சாமி நாதய்யர் அவர்களின் அரிய முயற்சியைச் சங்க இலக்கியங் கண்ட புராணம் என்ற பனுவலாக இதுவரை எவரும் செய்ய முன்வராததைச் சுட்டிக் காட்டுவதே அந்தக் காரணமாகும். இந்தக் குறை விரைவில் நீக்கி வைகப்பட வேண்டிய தொன்று என்பதை ஒவ்வொருவ மனதிலும் பதிக்க வேண்டுமென்பதே இந்தச் சிற்றுரையின் நோக்கமாகும் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.,

சூத்திரதாரர்;

இப்போது; ஈழத் தமிழத் தாயகத்திலிருந்து இங்கே வருகை தந்துள்ள தமிழ்நெறிப் பாவலர் ஈழத்தினியான் ஒரு சில வார்த்தைகள் பேசுவார்.

ஈழத்து இனியவன்;

வணக்கம்! வழர்க தமிழினம்! வாழ்க தமிழர் உலகம்!!

தமிழ்த்தம் கொடி ஐநாவில் பட்டொளி வீசட்டும். அந்த அருங் காட்சியை நம் காலத்திலேயே கண் குளிரக் கண்டு மகிழும் காலம் விரைவில் வருமெனக் காத்திருப்போம். இங்கு அநேகர் பல பல தலைப்புகளிற் பேச உள்ளனர். இவையெலாம் சங்கத் தமிழிலக்கியம் பற்றியும் அவற்றை அச்சுப் புத்தகங்களாக்கித் தமிழரிடை உலாவவிட்ட தமிழக தமிழறிஞர்களையும் பற்றியனவே. இதே பணியில் ஈழத்தவர்களின் பங்களிப்பும் குறிப்பிட்டுக் கூறும் அளவில் இருந்தது என்பதை எடுத்துக் காட்டு முகமாகவே என் சில வார்த்தைகள் அமைய உள்ளன. சிறப்பாக ஈழ நாட்டவர் சங்க கால இலக்கியங்களில் கொண்டிருந்த நாட்டஞ் சொல்லுந் தரத்தன்று. அவற்றிலும் பார்க்கத் தமிழ் இலக்கண மரபுகளைக் கூறும் நூல்களைப் பதிப்பிப்பதிலும் அவற்றிற்கு உதாரணங் கொண்ட உரை எழுதுவதிலும் படிப்போரின் தரத்திற்கேற்ப அவற்றைச் சுருக்கிக் கூறுவதிலும் ஈழ நாட்டவர்களும் பெரும் பங்களிப்பாற்றி உள்ளனர். உதாரணமாகத் தொல்காப்பியத்தை முதலில் அச்சிற் பதிப்பித்தவர் ராவ் பகதூர் சி. வை. தாமோதரனார் ஆவார். அதற்கு முன்னரே ஸ்ரீமத் மகாலிங்கய்யர் அவர்களால் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் அச்சிடப்பட்டது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. அத்துடன் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள், கலித்தொகை, வீரசோழியம், இலக்கண விளக்கம், ஆதிய இலக்கண நூல்களையும், சூளாமணி, தணிகைப் புராணம் ஆதியவற்றையும் அச்சிற் பதிப்பித்தார். அதைப்போலவே பவணந்தியாரின் நன்னூலை இலக்கணச் சுருக்கம் என்னும் நூலாகவும், காண்டிகை உரை, விருத்தி உரை என்ற நூல்களாகவும் படைத்து அச்சிட்டுத் தந்தவர் ஆறுமுக நாவலர் எனும் ஈழநாட்டு அறிஞராவார். அவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அ. குமாரசாமிப் புலவர், யாப்பருங்கலக்காரிகை (1938) தண்டியலங்காரம் (1940) நம்பியகப் பொருள் (1939) என்பவற்றிற்கு உரை விளக்கந் தந்து அச்சு வடிவம் ஈந்தார். இந்த அரங்கத்தில் மேடை யேறவிருக்கும் ஐங்குறு நூற்றுக் காட்சிகளைக் கூறும் ஐங்குறு நூறு எனும் எட்டுத் தொகை நூலை ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்திற்காகப் பிரமஸ்ரீ

தி. சதாசிவஐயர் 1943 ம் ஆண்டில் முழுமையான உரை கண்டு அச்சிற் பதிப்பித்தார். அதுமட்டல்ல அந்தச் சங்கம் நடாத்திய பண்டித இளநிலை. நடு நிலை, முதுநிலைத் தேர்வு களுக்குப் பாட நூலாகவும் விதித்து பெருமை சேர்த்தார். இத்தகைய ஈழத்து இலக்கியப் பங்களிப்பும் தமிழ் இலக்கிய வரலாற்றிற் சேர்த்துக் கொள்ளப்பட்டாற்தான் அது ஒரு முழுமைான இலக்கிய வரலாருகும் என்பதை இங்குள்ளோரின் மனதிற் பதிக்கும் நோக்குள்ள வேண்டுகோள் உரையாக இதைக் கொள்ளுமாறு கேட்டு என் சில சொற்களைப் பேசி முடித்துக் கொள்கிறேன்.

சூத்திரதாரர்;

இப்பொழுது, நாம் இந்த விழாவின் இறுதிக் கட்டத் திற்கு வந்துள்ளோம். வழக்கமாகத் தலைவரின் உரை யுடன்தான் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும். ஆனல் நாங்கள் தலைவரின் தொகுப்புரையுடனும், இது சம்பந் தமாகத் தமிழுலகம் எடுக்க வேண்டிய நடபடிக்கைபற்றிய முடிவுகளுடனும் நிகழ்ச்சிகளுக்கு ஒரு முத்தாய்ப்பு இடலாமென்று எண்ணுகிறேரும். அதன்படி உலகத் தமிழர்களின் தலைவராக விளங்கும் பேராசிரியர் இரா வீரப்பன் அவர்கள் பேசுவார்.

தலைவர்;

அன்புப் பெருமக்களே! நான் இங்கு கூடியுள்ள மக்களுக்காக மட்டும் பேசவில்லை. இவர்கள் மூலமாக உலகில் வாழும் ஒவ்வொரு தமிழர்களின் செவிகளிலும் ஒலிக்க வேண்டுமென்ற பேரவாவுடனே பேசுகின்றேன். குமரிக் கண்டத்தைப் பல கடல்கோள் உண்டழித்த காலத்தில் அங்கு வாழ்ந்த தமிழினஞ் சிதைவுண்டு வடக்கு நோக்கிப் புலம் பெயர்ந்து வாழ்ந்தது. அவ்விதம் சிதறிய மக்கள் வாழும் இடங்கள் காலத்திற்குக் காலம் மாறினலும், அவர்களது தொன்மை மிக்க தமிழ் வாழ்வியல் நெறிகளும், தொல் மொழிப் பண்பும், அதன் முதிர்ச்சியால் முதிர்ந்த மொழி இலக்கண இலக்கியங் களும் சிந்தாமற் சிதருமல் அவர்கள் செல்லுமிடங்க ளுக்குந் தம்முடன் கொண்டு சென்றனர். அக்கால வாழ்க்கை முறைகளைப் பல புலவர்கள் செய்யுட்களாகச் செய்தனர். அவற்றைச் சங்கம் வைத்துச் சான்ரோர்களும்,

அரசர்களும் ஆதரித்துப் பேணிக் காத்தனர். இவ்வாறுதான் கபாடபுரம், கூடல், மதுரை முதலிய இடங்களில் முதல், இடை, கடைச் சங்கங்களையும் சங்க மருவிய காலச் சங்கத்தையும் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். அக்காலத்தில் பாடப்பட்ட பாடல்களைத் தொகுத்துப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை. பதினெண்கிழ்க் கணக்கு, ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறு காப்பியங்கள் எனத் தொகுத்தனர். அத்தகைய பண்டைப் பனுவல்கள் பழந் தமிழரின் முதுசொமாக விளங்கின.

இவையெலாம் பனையோலைச் சுவடிகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஒரு சில பிரதிகளை நடை முறையில் இருந்தன. அவற்றைப் படிப்பவர்கள் குறைவாக இருந்த காரணத்தால் சுவடிகள் பல பிரதிபண்ணப்படவோ, யாவர் கரங்களிலும் கிடைக்கவோ முடியாத அருமை நிலையும் இருந்து வந்தது. பாடம் சொல்லுந் தமிழறிஞர்களிடம் மட்டுமே இத்தகைய நூற் பிரதிகள் இருந்தன.

நாளடைவில், அச்சுப் பொறி புத்தகப் பதிவு என்பன அறிமுகமானதும், சுவடிகளை வாசித்தறியும் பழக்கமும் பனையோலையில் எழுதும் பயிற்சியுங் குறைந்தபடியால், ஏட்டுச் சுவடி நிலையிலிருந்த பண்டை இலக்கியங்களின் பாவனை அருகத் தொடங்கின. நாளடைவில் தமிழராலே புறக்கணிக்கப்பட்ட ஓலைக் குவியலாக மாறத் தொடங்கின.

இந்தக் காலகட்டத்திற்தான், தஞ்சை மாவட்டம் உத்தமதான புரத்தில் 19. 2.1855ம் ஆண்டில் சுவாமிநாதய்யர் பிறந்தார். தந்தையார் பெயர் வேங்கட சுப்பையர், தாயார் சரசுவதியம்மாள். 1870 ம் ஆண்டில் திரிசிராப்புரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடந் தமிழ் கற்கச் சென்றார். அங்கு சங்க கால இலக்கியங்கள்பற்றிய தகவல்களை அறிந்தார். வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் ஊக்கத்தாலும், உந்துதலாலும் சங்க நூல்களை அச்சு வடிவிற் கொணரும் முயற்சியில் ஈடுபட்டார். தமிழகத்தில் எங்கெல்லாந் தமிழறிஞர்கள் வாழ்ந்தார்களோ அந்த இடங்களெல்லாவற்றிற்கும் சென்று சுவடிகளைத் தேடித் திரட்டினர். ஒவ்வொரு நூல்களிலும் பத்துக்கு மேற்பட்ட சுவடிகளைக் கண்டெடுத்தார். அவற்றில் உள்ள பாட பேதங்களைச்

சீர்தூக்கிச் சரியானதைத் தேர்ந்தார். பொருளுரை கண்டார். ஓலைச் சுவடிகளை அச்சு நூலாக்கினார். இத்தனை பணிகளுக்கும் அரசோ, அல்லது தாபனங்களோ உதவ முன்வரவில்லை. எனினும் இவர் ஒன்றின் பின் ஒன்றாகச் சங்க இலக்கியப் பாட்டுகளையும் தொகைகளையும், கிழ்க் கணக்குகளையும் . காவியங்களையும புத்தக வடிவிற் கொண்டு வந்தார். பாடஞ் சொல்வோர் கரங்களில் மட்டும் ஏட்டுச் சுவடிகளாக இருந்த இவைகள் படிப்போர் கரங்களிலும் புததகங்களாக, அதுவும் மிகச் சொற்பக் கிரயத்திற்குக் கிடைத்தன. இவற்றை அவர் எவ்வாறு சாதித்தார் என்பதையிட்டு, மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரிதம் (இரண்டு பாகங்கள், என் சரிதம், கண்டதும் கேட்டதும், பழையதும் புதியதும். நல்லுரைக் கோவை, நினைவு மஞ்சரி, சங்க கால இலக்கியச் சொற் பொழிவுகள் எனும் நூல்களில் எழுதினார். இவற்றைத் திரட்டிச் சஙக இலக்கியங் கண்ட புராணம் என்ற ஒரு நூலை படைக்க வேண்டுமென்ற முனைவர் அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றும்படி உங்களை வேண்டுகிறேன். இவர், ஆரம்பத்தில் கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராகவும், பினனர் சென்னை அரசினர் கல்லூரித் தமிழாசிரியராகவும் பணி செய்து 1910 இல் இளைப்பாறினார். 1816 இல் மகோபாத்யாயர் பட்டமும் 1917 இல் திராவிட பூஷணம் பட்டமும் 1926 இல் தாக்ஷ்ணாத்திய கலாநிதி பட்டமும் சென்னை பல்கலைக் கழகம் 1932ம் ஆண்டில் வழங்கிய டாக்டர் பட்டமும் இவரது தமிழ்ப் பணியின் தரமிக்க கௌரவத்தின சான்றுகளாகும். இவரால் தொகுத்துச் சேகரிக்கப்பட்ட சுவடிகள், நூல்கள் ஆதியன திருவான்மியூர் உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையத்தில் வைத்துப் பேணப்படுகின்றன. இத்தகைய கௌரவங்கள் எல்லாவற்றிலும் மேலாகத் தமிழுலகம் இவரைத் தமிழ்த் தாத்தா என அழைத்துப் பெருமை கொண்டாடுகிறது. இத்தகைய தமிழ் அறிஞர் 1942 ஏப்ரல் மாதம் 28ந் தினத்தன்று அமரரானார்.

இதைவிட; உங்களிடம் மிக அவசியமான செய்தி ஒன்றையுஞ் சொல்ல வேண்டிய அவசியம் உண்டு. இன்று தமிழகத்திலும், இலங்கையிலும் மலேசியாவிலும்

தமிழர் ஒரளவு வாழ்கின்றனர். ஆங்கெல்லாம் ஒரளவு அரசியற் சுதந்திரம் பெற்று மனித உரிமைகளுடன் வாழ்கின்றனர். ஆனல் கடல் கடந்த பல இடங்களிலும் பல லெட்சக் கணக்கான தமிழர்கள் ஆங்குள்ள பெரும் பான்மையினரின் அடக்கு முறைகளால் அடிமையாக வாழ்கினறனர். இவர்களிக்குச் சுந்திரம்தான் பெற உதவிதான் செய்ய முடியாவிடடாலும அவர்கள் தாங்கள் வாழும் இடங்களில் அடிப்படை மனித உமைகளைப் பெற்று மனிதராகச் சுகித்து வாழ வேண்டிய வழிவகைகளை தமிழர் நலமுடன் வாழும் இடங்களில உள்ள அரசுகளாவது தமிழர்களாவது ஆவன செய்யவும் ஊக்குவிக்கவும் வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் தலைமை உரையை முடிக்கிறென்

சூத்திரதாரர்:

இதுவரை தமிழர் நலத்திற்கான பல நல்லுரைகளைக் கேட்டோம் அவறறை வழங்கியவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றியைச் செலுத்தி இநத விழாவை நிறைவு செய்வோம்.

மூன்றுவது காட்சி நிறைவுறுகிறது.

முன் எழினி அரங்கை மூடுகிறது.

காட்சி; *4*

காலம் ; காலை வேளை

இடம்; சேர நாட்டின் தலைநகரம்

பாத்திரங்கள்;

யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும் பொறையார். அரசவையினர், கூடலூர்க் கிழார். பாரதம் பாடிய பெருந் தேவனார்

நிகழ்ச்சி;

ஐங்குறு நூறு எனும் எட்டுத் தொகையுள் மூன்றுவது நூலின் ஒரு செய்யுளைக் கூடலூர்க் கிழார் பாடக் கேட்ட இரும்பொறை மன்னர் எஞ்சிய பாடல்களையுந் திரட்டித் தொகுக்க ஆவலுறல். அதற்கு அவைப் புலவர் கூடலூர்க் கிழாரை வேண்டுதல். அவர் அவற்றை எல்லாந் தொகுத்து பாரதம் பாடிய பெருந் தேவனரின் கடவுள் வாழ்த்துடன் மன்னன் முன் அரங்கேற்றல்.

சூத்திரதாரன்;

சங்க இலக்கியங்களிலுள் எட்டுத் தொகையின் மூன்றுவது பனுவலான ஐங்குறு நூறு என்ற நூலில் உள்ள 500 செய்யுட்களைக் காட்சிப் படுத்தும் இந்த ஐங்குறு நூற்று அரங்கம் எனும் ஆய்வு நூலின் நூல் வரலாற்றுப் பகுதியாக இதுவரை மூன்று காட்சிகளை அரங்கிற் கண்டோம். இதுவரை, இம்மேடையிற் காட்சிப்படுத்தப்பட்ட மூன்று காட்சிகளிலும் சங்க கால இலக்கியங்கள் எவ்வாறு தோன்றின, அவைகள் அழிந்து படாது பல ஆயிரம் வருட காலம் எவ்வாறு பேணப்பட்டன. ஓலைச் சுவடிகளில் சில பிரதிகளே செய்யப்பட்ட அவை அச்சேறிப் புத்தக வடிவில பல ஆயிரக் கணக்கான பிரதிகளாக மக்களின் கரங்களில் எவ்வாறு சென்றடைந்துள்ளன என்பதையிட்டுப் பார்த்தோம். இந்தக் காட்சியில் ஐங்குறு நூறு எனும் எட்டுத் தொகையில் ஒன்றுன சங்க கால அகப்பொருள் இலக்கியம் எவ்வாறு தொகுக்கப்பட்டது என்பதைக் காட்சிப் படுத்துவாம்;

(கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்
சேரலிரும்பொறையார் மன்னனின் அரசவை. மன்னன்
அரியாசனத்தில் அமர்ந்திருக்க மந்திரி பிரதானிகள் குழுமி
உள்ளனர். அப்போது புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்
எனும் புலவர் அவையில் நுழைகிறார். ஆங்கிருந்த யாவரும்
எழுந்து வணக்கம் கூறி வரவேற்கின்றனர். மன்னனும் தன்
சிரஞ் சாயத்து அவரை வரவேற்று ஆசனத்தில் அமரச்
செய்கிறான்)

கூடலூர்க் கிழார்:

மன்னர் மன்னவா! வாழ்க நின் கொற்றம் வளர்க நின் புகழ்.

சேரலிரும்பொறை;

புலவரே! உங்கள் புகழ்மாலை என் நெஞ்சிற் பொருப்பாகக் கனக்கின்றது. மேற்கொண்டு தங்கள் புகழுரையைத் தாங்க எனக்கு வலுவில்லை.

கூடலூர்க் கிழார்:

மன்னரே! தாங்கள் தங்களைப்பற்றி இவ்வளவு தாழ்வாக எண்ணல் தக்கதன்று எனெனில் உங்களைப்பற்றி உலகமே உயர்வாக நினைக்கிறது. உங்கள் எதிரிகள் கூட உங்களை உயர்வாகவே மதிக்கின்றனர். அப்படி இருக்க எங்களின் புகழுரையை ஏன் உங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சேரலிரும்பொறை;

புலவரே! எத்தனை போர்க் களங்களைக் கண்டுள்ளேன். வெற்றி பல கொண்டுள்ளேன். ஆனாலும்; நான் மன்னுயிரைத் தன்னுயிராகத் தாங்கும் மன்னவன் என்று மக்களால் மதிக்கப்படும் பெருமைதான் எனக்கு அளவற்ற ஆனந்தத்தைத் தரும் புலவரே;

கூடலூர்க் கிழார்:

அதைத்தானே நாங்களும் சொல்கிறோம். தங்கள் சிறப்பைத் தங்கள் பெயரே எடுத்துக் காட்டுகிறதே மன்னவா; கோ என்பதால் அரசன் என்பதையும், சேரமான் என்பதால் உங்கள் குடிப்பெயர் மேன்மையையும், யானைக்கண் என்பதால் வேழ நோக்குடைய வடிவினன் என உங்கள் உருவப் பொலிவையும் சேய் என்பது உமது கள்ளங் கபடற்ற

குழந்தை உள்ளத்தையும் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பதால் மன்னுயிரைத் தன்னுயிராக மதிக்கும் உறுதி உள்ளம் படைத்த மன்னன் என்பதையும் விளக்குவதாக அமைந்துள்ள போது நாங்கள் தான் உங்களின் பெரு மதிப்பைச் சரிவர அளவிட்டு உரைக்க முடியாது இடர்படுகிறேம். மன்னவா!

சேரலிரும்பொறை;

போதும். போதும்!! புலவரே; தினமும் நீங்கள் பண்டைய சங்க இலக்கியப் பாடல்களால் எங்களை மகிழ்விப்பீர்களே, இன்று எந்தப் பாவினுல் பரவசப்படுத்தப் போகிறீர்கள்?

கூடலூர்க் கிழார்:

வலம்புரி யுழுத வார்மண லடைகரை
யிலங்குகதிர் முத்த மிருள்கெட விமைக்குந்
துறைகெழு கொண்கநீ தந்த
வறைபுனல் வால்வளை நல்லவோ தாமே

சேரலிரும்பொறை;

ஆகா கனிவுள்ள கருத்தமைந்த பாடல் . புலவரே! இது எந்த இலக்கியத்தில் உள்ளது. இதை யார் பாடினர்

கூடலூர்க் கிழார்:

மன்னவா! சங்க இலக்கியங்களில் வரும் பாடல்கள் அவற்றின் பா வரி அளவின் அடிப்படையிலே வகுக்கப் பட்டுள்ளன. அத்தகைய பாடல்களில் சங்க மருவிய காலத்தில் எழுந்த திருக்குறளே மிகச் சிற்றெல்லையாக இரு பாவரிகள் கொண்டவை. அதையடுத்து, ஐந்து புலவர்கள் பாடிய மூன்றடி சிற்றெல்லையும், ஆறடிப் பேரெல்லையுங் கொண்ட ஐநூறு குறும் பாக்கள் உள்ளன. இதனை ஐங்குறுநூறு எனும் அகத்திணைப் பாடல் நூலாகத் தொகுத்து எட்டித் தொகையில் ஒன்றுக இணைக்கலாம் என்று எண்ணுகிறேன்.

சேரலிரும்பொறை;

அப்படியா? சங்க இலக்கியத்திற்குத் தமிழர்களாகிய நாம் செய்ய வேண்டிய காலத்தால் அழியாக் கடப்பாடு. அவ்விதமே அவற்றைத் திரட்டிச் சங்க இலக்கியத்தை வளஞ் செய்யத் தாங்கள் உதவுவீர்களாயின் அதற்காவன

யாவற்றையும் இந்த நாட்டின் பேரில் நான் செய்தளிப்பேன். இதனை நிறைவேற்றத் தக்க வேழாண் குடிப் பிறப்பும், கல்வி கேள்வியிற் சிறப்பும், சான்றோரால் புலத்துறை முற்றிய கூடலார்க் கிழார் என்றழைக்கப்படும் பெருமதிப்புங் கொண்டவர். முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியர். குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள மூன்று பாடல்களை யாத்தவர். எனவே இத்தகைத் தமிழ்ப் பணிக்குத் தக்கவர் தங்களைத் தவிர வேறு யாருளர்?

கூடலூர்க் கிழார்:

அரசரே! நான் ஏற்கனவே இந்த முயற்சியில் ஈடிபட்டு அத்தகைய பாடல்களைத் திரட்டி விட்டேன், ஐந்திணை சார்ந்த இவற்றில் ஓரம்போகியார் செய்த மருதத் திணை சார்ந்த நூறு பாடல்கள் அம்மூவனார் செய்த நெய்தல் திணை சார்ந்த நூறு பாடல்கள், கபிலர் பாடிய குறிஞ்சித் திணை சார்ந்த நூறு பாடல்கள், ஓதலாந்தையர் யாத்த பாலைத் திணை சார்ந்த நூறு பாடல்கள் பேயனார் பாடிய முல்லைத் திணை சார்ந்த நூறு பாடல்கள் என 500 பாடல்கள் அடங்கி உள்ளன. தயங்களின் வேண்டு கோளின் படி இவைகள் திரட்டப்படுவதால் தொகுப் பித்தோர் என்ற இடத்தில் தங்கள் பெயரை இடுவதற்கு நாட்டங் கொண்டுள்ளேன். அத்தகைய தகுதிக்குரியவர் தாங்கள் என்பதைச் சங்கப் புலவர்களாகிய குறுங் கோழியூர்க் கிழார், இளங்கிரனார் என்பவர்கள் தங்களைப் பாடிச் சிறப்பித்துள்ளமையே சான்று பகரும்.

அவைப் புலவர் ஒருவர்;

இதனைப் பாடியவர்கள் யாரென்பதை அறியும் வண்ணம் ஒரு செய்யுள் உண்டென்பதையும் மன்னரின் சமூகத்

திற்கு தாழ்மையுடன் சொல்லிக்கொள்கிறேன்,

சேரலிரும்பொறை;

அதைச் சொல்வதற்கு ஏன் தயங்க வேண்டும். புலவரே உள்ளதை உடனடியாகச் சொல்ல என்ன தடை?

அவைப் புலவர் ஒருவர்;

மருதமோ ரம்போகி நெய்தலம் மூவர்
கருது குறிஞ்சி கபிலர் - கருதிய
பாலையோ தலாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு

கூடலூர்க் கிழார்:

மன்னவா! ஒவ்வொரு நூறும் அவைற்றில் உள்ள பொருள் கொண்டு பத்துப் பத்துப் பாக்களாக வகுத்த காரணத்தால் பத்து எனும் தலைப்பு சூட்டப்பட்டுள்ளது.

சேரலிரும்பொறை;

மிக மிக நல்லது புலவரே. இந்த நூலை அடுத்து வரும் வசந்த விழாவின்போது அரங்கேற்றலாமே!

கூடலூர்க் கிழார்:

மன்னவர் எண்ணம் எதுவோ அதுவே எங்கள் எண்ண முமாகும். அவ்வாறே வசந்த விழாவில் இந்த அகப் பொருட் பாடற் தொகுதியை அரங்கேற்றுவோம். ஆனால்; ஒரு சிறிய வேண்டுகோள் மன்னவா.....

சேரலிரும்பொறை;

புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழாரே! அந்த வேண்டுகோள்தான் எதுவோ. அது சின்னஞ் சிறிதாக இருந்தாலும், பென்னம் பெரிதாக இருந்தாலும் தமிழின் நன்மை கருதி என்ன பாடு பட்டாலும் அதை நிறை வேற்றி வைக்க வேண்டியது மன்னனின் கடமை.

கூடலூர்க் கிழார்:

மன்னரே! அது அவ்வளவு தங்களுக்கு இடர்தருமளவு பாரமான காரியமலல. இதற்குப் பாரதம் பாடிய பெருந் தேவனுர் காப்புச் செய்யுள் வழங்க வேண்டும் . அதற்கா வன தங்களின் சமூகஞ் செய்ய வேண்டும்

சேரலிரும்பொறை;

அதற்கென்ன? அப்படியே செய்வோம். இந்த நற் செய்தியை பெருந் தேவனுரிடம் உடனே அறிவிக்க வேண்டும். உடனே நானே நேரிற் சென்று உரைத்து வர வேண்டிய பயண வசதிகளைச் செய்யுங்கள்

ஐங்குறு நூறு நூல் தொகுக்கப்பட்டு
எட்டுத் தொகையுள் மூன்றுவதாக வைக்கப்பட்டுப்
பெருந் தேவனுரின் காப்புச் செய்யுளுடன் வசந்த விழாவில்
ஐங்குறு நூறு அரங்கேறுகிறது. சில மாதங்கள்
சென்ற காலை யானைக்கட் சேய் மாந்தரலிரும் பொறை
இறை பதம் எய்திய செய்தி புலவர் பெருமானுக்குத்
தெரிய வந்ததும் துக்கந் தாழாது **துவண்ட**
பின்வரு ம இரங்கற் பாவைப் பாடினுர்

கூடலூர்க் கிழார்:

ஆடிய வழற்குட்டம் தாரிரு னரையிரவின்
முடப்பகீ னத்துவோர் முதலாக்
கடைக்குளத்துக் கயங்காய
பங்குனி யுயரழுவத்துத் தகீனநாண் மீனிகீல திரிய
நிகீலநாண்மீ னதனெதி சேர்தரத்
தொன்ஞண் மீன்றுறைபடியப் பாசிச் செல்லா
தூசி முன்ஞ தளர்க்கத் திகீண விளக்காகக்
ககீனயெரி பரப்பக் காலெதிர் பொங்கி
ஒருமீன் விழிந்தன்றுல் விசும்பி ஞனே
அதுகண் டியாமும் பிறரும் பல்வே றிலவரர்
பறையிசை யருவி நன்ஞட்டுப் பொருநனன்
நோயில ஞயி என்றுமற் றில்லென
அழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப
அஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
மைந்திடை யாகீன கைவைத் துறங்கவும்
திண்பிணி முரசங்கிழிந் துருளவும்
காவல் வெண்குடை கதியின்றி வைகவும்
மேலோ ருலக மெய்தின ஞகலின்
ஒண்டொடி மகளிர்க் குறுதுகீண யாகித்
தன்றுகீண யாய மறந்தனன் கொல்லோ
பகைவர்ப் பிணிக்கு மாற்ற னசைவர்க்
களந்துகொடை யறியா வீகை
மணிவரை யன்ன மாஅ யோளே (புறம் 229)

என விம்மி அழுது அலற்றினர்

இது ஒரு கையறு நிகலப் பாடலாகும். ஐங்குறு நூறு எனுந் தொகை நூகலத் தொகுக்கத் தன்கன உந்துவித்த மன்னன் அமரரனுகியதை அறிந்த அந்த புலத்துறை முற்றிய கூடலார்க் கிழார் இரங்கிப் பாடிய இப் பாடற் பொருகளப் புரிந்து கொண்டாற்தான் அவருக்கு அந்த அடைமொழி எத்தகைப் பொருத்தமானது என்பது புலனுகும். காரணம் அவர் அருந் தமிழ் அறிவறிந்த புலவர் மட்டுமல்ல அறியல் சார் அறிவு மிக்க புலவருங்கூட என்ப தையும் . அவரது பல்துறை அறிவியற் கருத்தை அறி யவும் இப்பாடல் ஓரவிழ்ப் பதமாகக் காட்டும்.

இச் செய்யுளில் நான்கு சேதிகள் சொல்லப்படுகின்றன. முதல் 12 பாவரிகளில் வானியல் அறிவினுல் தெளியக் கூடிய இராசிகள், நட்சேத்திரங்களின் கதியும் நகர்வும்

அவற்றுல் உண்டாகும் வானிலே கிரக மாற்றங்களும் உணர்த்தப்படுகின்றன. அடுத்த மூன்று வரிகளில் அதனலாம் நிமித்தங்கள் சொல்லப்படுகினறன. பின் இரு வரிகளில் இத்கைய நிமித்தங் காரணமாக ஏழு தினங்களுள் ஒரு மன்னனின் உயிரைப் பலி கொள்ளும் என்ற உறுதிப் பாடு கூறப்படுகிறது. அடுத்து வரும் பா வரிகள் ஏழு நாட்களின் பின் எதிர்பார்த்த நிகழ்வு நடந்ததையும் அம் மன்னன் கூடலூர்க் கிழாரின் நண்பனே என்பதையுந் தெரியப்படுத்துகிறது. பாட்டின் இறுதி அடிகள் அவரது உள்ளக் குமுறலுஞ், சொற்களின் கொப்ளிப்புகளும் குமிழிகளாக உருவாகி வெடிப்பதைக் காட்டுகின்றன, இதன் சுவையை நுகர புறநானூற்றுப் பொருள் விளக்கப் பனுவலில் 229ம் செய்யுள் இருக்கு மிடத்தைச் சேறுங்கள்.

இத்தகைய புகழ்கொண்ட ஐங்குறு நூல் அகத்துறை களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இறையனர் அகப் பொருள் , இலக்கண விளக்கம், யாப்பருங்கல விருத்தி, நன்நூல் விருத்தியுரை, நம்பியகப் பொருள், மேலும் பல உரையாசிரியர்கள் இதன் பாடல்களை கையாண்டுள்ளனர். இந்த ஐங்குறு நூற்றை டாக்டர் உ. வே. சாமிநாதயயர் 1913ம் ஆண்டில் அச்சுப் புத்தகமாக்கினர். 1943 இல் ஈழத்தில் புதிய உரையுடன் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் பதிப்பித்தது. அதைவிட திருநெல்வேலி சைவ சித்தாந்தக் கழகம் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலான சங்க இலக்கியங்களுக்குப் புத்துரை கண்டு பதிப்பித்துள்ளனர். ஒரு காலத்திற் தேடற்கரிதாக இருந்த இந்தச் செநதமிழ் இலக்கியங்கள் இன்று எங்கும் கிடைக்கும் அளவிற்கு மதிப்பும் தேவையும் பெற்றதாய் இலங்குகிறது. அடுத்து இந்தப் பாக்களின் நயத்தையும் அவற்றில் பொதிந்துள்ள தமிழர் வாழ்வியலின் சால்புகளையும் ஐந்தெழினி அரங்கிற் கண்டு களிப்போம். ஆங்கு வருக! வணக்கம்

நான்காவது காட்சி நிறைவுறுகிறது
முன்னெழினி அரங்கை மறைக்கிறது.

நெரி.

இரண்டாவது பகுதி

ஐங்குறு நூற்றுச் செய்யுள்களின்
நாடக வடிவிலான
நலனுய்வு காட்சிகள்

முதலாவது மருத எழினி அரங்கம்

ஓரம்போகியாரின்
மருதத் திணை சார்ந்த
100 பாடல்களின் காட்சிப் படுத்தல்கள்

1. வேட்கைப் பத்து
2. வேழப் பத்து
3. கள்வன் பத்து
4. தோழிக்குரைத்த பத்து
5. புலவிப் பத்து
6. தோழி கூற்றுப் பத்து
7. கிழத்தி கூற்றுப் பத்து
8. புனலாட்டுப் பத்து
9. புலவி விராய பத்தி
10. எருமைப் பத்து

1. மருதத் திணை எழினி

ஐங்குறு நூறில் முதல் நூறு பாடல்களை ஓரம்போகியார் எனும் கடைச் சங்கப் புலவர் பாடினர். நற்றிணையில் இரண்டு பாடல்கள், குறுந் தொகையில் நான்கு பாடல்கள், அக நானூற்றில் இரண்டு பாடல்கள், புறநானூற்றில் ஒரு பாடல் என்ற வகையில் இவரது பாடலகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்று உள்ளன. ஐங்குறு நூறின் உள்ளடக்கமான வேட்கைப் பத்து முதல் எருமைப் பத்து வரையில் இடம் பெறும் பாடல்களின் இலக்கிய நயங்களை உணர்த்தும் முக மாக நாடகத் தமிழ் நடையில் ஒரு ஆய்வு செய்யப்படுகிறது. அவ்விதம் காட்சிப்படுத்தப்படும் செய்யுள்களின் பின் புலத்தை எடுத்துக் காட்டும் எழினி எத்தகையதென்பதை இப்போது எடுத்துப் பார்ப்போம். தொடரும் மருத நிலஞ் சார்ந்த காட்சிகள் இந்த எழினியின் முன்னுல் உள்ள அரங்கிலே நடைபெறும்.

இந்த எழினியின் அமைப்பு எத்தகையதென்பதைச் சொற் சித்திரமாக வரைவதானுல்;

எங்கும் மரகதப் பச்சை வண்ணங் கொட்டிக் கிடக்கிறது.
குலையும் குட்டிகளுமாகக் குழுமி நிற்கும் கதலிகள்;
மரத்தில் ஒட்டி வைத்தாற்போலக் தொங்கும் பலாக் கனிகள்,
அணில்கள் தாவும்போது அசைந்தாடும் மாங் குலைகள்,
ஆங்காங்கே மன்மதன்தான் வந்து விட்டானே
என எண்ணுமளவிற்கு வளர்ந்துள்ள கரும்புகள்,
பசிய வயல்கள், அதன அடுத்த பற்றைக் காடுகள்,
தண்டலை மயில்கள், விளக்கங் காட்டும் தமாமரைத் தடாகங்கள்,
துள்ளி விளையாடும் பசுக் கன்றுகள்,
ஆங்காங்கு வரம்புகளில் உயர்ந்து வளர்ந்த மருத மரங்கள்,
பசும் புற்களைப் போர்த்திக் கொண்ட மேய்ச்சற் தரை,
சலசலத் தோடும் வாய்க்கால். துள்ளிப் பாயும் வெள்ளி மீன்கள்,
பைந்தமிழ் பழகும் பைங்கிளிகள்.
தத்தித் தவழ்ந்து நடை பயிலும் தவளைகள்.
ஏரைத் தோழிற் தாங்கி, எருமைகளின் பின்னுல்
வயலுக்குச் செல்லும் மழவர்கள்.
உண்டி கொடுத்து உலகைக் காப்பபவர்கள்
நாங்கள் எனப் பெருமிதத்துடன் நடை பயிலும் காராளர்,
கருபையில் கருவைச் சிசுவாக்கும் உழத்திகளாகிய நாங்கள்

இந்த பழனத்திலே உலக உயிர்களை வைத்துக்
காப்பாற்றுகிறேம் என்ற உணர்வை
முகத்திற் காடடும் பெண்கள்

இப்படியான காட்சிகளை அழகுற வரைந்ததே, இந்த மருதத் திணை எழினி. இத்தகைய எழினி பின்னுற் தொங்க முன்னுல் பசிய நிறக் கம்பளம் விரித்த மேடையில்

முதலாவது மருத எழினி
வேட்கைப் பத்து

காட்சி 1. மருதத் திணை வேட்கைப் பத்துக் காட்சி

காலம்; உச்சி வேளை

இடம்; வயலின் அருகில் அமைந்த மனை

பாத்திரர்கள்; சூத்திரதாரன், கிண்டலார், தலைவன், தலைவி,

பாங்கி, பாணன்

நிகழ்ச்சி;

பரத்தையின் இல்லிற் சில நாட்கள் தங்கி இன்பம் நுகர்ந்த தலைவன், தனது இல்லத்திற்கு வருகிறான். அவன் வருகையை உணர்ந்த தலைவி மனைக்குள் ஒதுங்கிக் கொள்கிறாள். அவளின் பாங்கி மனை வாசலில் வந்து நிற்கிறாள். தனது நடத்தையால் மனைவி பிணங்க அதனை இதமான சொற்களால் தணியச் செய்வான் என நம்பிய தலைவன் தன்னுடன் அழைத்து வந்த பாணனும் அங்கே மறைந்துக் பக்கத்தில் நிற்கிறான். நாடகத்தை ஆரம்பித்து வைக்கச் சூத்திரதாரன் முன்னுல் வந்து;

சூத்திரதாரன்;

சங்கப் பாடல்களின் இனிமையை நாம் இன்று நுகர முடியாதிருப்பதற்குக் காரணங்கள் இரண்டு உள்ளன. முதலாவது; அவை யாக்கப்பட்டுள்ள கவி நடை, அதன் சொற் செறிவு ஆதிய வழக்கு நமக்கு உடனடியாகப் புரிந்து கொள்ள முடியாது இருப்பதாகும். அடுத்த காரணம் அதிலே கூறப்படும் நிகழ்வுகள் அக்காலத்து மக்கள் ஒப்புக் கொண்ட வாழ்க்கை ஒழுக்கத்தில் அனுசரித்த அன்புடை வாழ்க்கையெனும் ஐந்திணை மரபுகள். இன்று

நடைமுறையில் ஒழுங்கற்றுச் சிதறிக் கிடப்பதாகும். எனவே இதனைத் தெளிவாக்கும் நோக்குடன் இலக்கிய ஆர்வலர்க்கு இலகுவாக்கும் பொருட்டு அவற்றை நாடகத் தமிழில் காட்சிப்படுத்துகிறேம்

ஐங்குறு நூற்றில் முதலாவது பத்திற்கு வேட்கைப் பத்தென்று தலைப்பிட்டுள்ளனர். வேட்கை என்பது மனதில் உண்டாகும், விருப்பு, விழைவு, ஆவல் என்றெல்லாம் பொருள் கூறினுலும் அதற்குரிய உணர்ச்சித் தன்மையுந் தளமுஞ் சற்று வித்தியாசமானதே. தன் மனதில் எண்ணி யது நடக்குமா அல்லது நடவாமற் போய்விடுமோ என்ற நிட்சயமற்ற உள்ளெண்ணம் உந்தத் தோன்றும் எதிர் பார்ப்புடனை விழைவே வேட்கை எனல் பொருந்துமென நம்புகிறேன். வேட்டல், வேட்டை என்னுஞ் சொற்களின் பயனுடன் வேட்கை என்பது எத்தகைய தொடர்புடையது என நாம் ஆய்ந்து பார்க்கும்போது, இந்தச் சொல்லின் ஆழமான பொருள் புலப்படும்.

இந்த நாடகத்திற் பங்கெடுக்கும் நால்வர் மனதிலும் அத்தகைய வேட்கை நிலவுகிறது எனப் பொதுவாகக் கூறினுலும், அவை நான்கு வகைப்படுவதை நாம் அவ தானிக்கலாம். பரத்தையிற் பிரிந்து இல்லந் திரும்புந் தலைவனுக்கோ , அங்கு தனக்கு எத்தகைய வரவேற்பு இருக்கும். இல்லக் கிழத்தி தன்னை ஏற்றுக் கொள்வாளா என்ற ஒரு வேட்கை. தலைவிக்கோ காதற் கிழத்திபால் இன்பந் துய்த்து வருந் தன் தலைவன் தன் கூடா ஒழுக் கத்திற்கு என்ன காரணஞ் சொல்லப்போகிறுன். அவனின் எண்ணந் தவறென்பதைத் தான் எவ்வாறு எதிர்த்துரைக் கலாம். அதை அவன் உணர்ந்து அத்தோடு திருந்தி வாழ்வானு என்ற வேட்கை. பாங்கிக்கோ, தலைவன் செய்த தவருல் தன் தலைவி பட்ட பாடுகளைக் கண்டு மனம் வெதும்பி, தலைவன் வரும்போது அவனது தவ றையும் அதைத் தாங்கிக் கொள்ளுந் தலைவியின் பெருந் தன்மையையும் எடுத்துச் சிறிது சிறிதாக அவனுக்கு உணர்த்த வேண்டுமென்ற வேட்கை. பாணனுக்கோ, தலைவனுக்கு நேர்ந்த இக்கட்டை எவ்வாறு தணிக்கலாம். தலைவி என்ன சொல்வாளோ, அதற்குத் தக்க பதிலாக எதைச் சொலலாம்

டிக்கும் வேட்கை. இவ்வாறு நாலா பக்கமும் எழும் வேட்கைகளுக்கு இடையில் நடக்கும் நிகழ்வாதலால் இதற்கு வேட்கைப் பத்தெனப் பெயரிட்டவர் புலமையில் மிக்க கூடற் கிழார்.

இனி இந்த வேட்கை நாடகம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை அரங்கத்திற் காண்பாம்.

(அத்தருணம் கிண்டலார் சூத்திரதாரனை அண்மித்
தன் தலையைச் சொறிந்துகொண்டே
அப்பாவித் தனத்துடன் கூனிக் குறுகி)

ஐயா! இரு சிறு ஐயங்கள். தங்கள் நாடகத் தயாரிப்பிற்கு நீங்கள் எடுத்துக் கொண்ட மூன்று ஐங்குறு நூற்று நூல்களை எடுத்துப் பார்த்த போது, அவை என் மனதிற் தோன்றின. முதலாவது; தமிழர் வாழ்வின் நெறிக்கு இலக்கணமாக விளங்கும் தொல்காப்பியத்தில் மாயோன் மேய என்ற சூத்திரப்படி இதன் திணைகள் நிரைக்கப் படாமல் முதலில் மருதத் திணை வைக்கப்பட்ட காரணம் என்ன என்பது.

இரண்டாவது; வாழி யாதன் வாழி யவினி என்பவர் யார்? அவர்கள் அரசர்களாயின் இவை எவ்வாறு அகத் திணை பாடலாகும்? கோவை இலக்கியங்களிற்தான் இத்தகைய மரபு உண்டு. சங்க இலக்கியங்களில் எங்குங் காணப் புதுமையாக இங்கு மன்னர்களைப் போற்ற வேண்டிய ஆவசியந்தான் என்ன? இதற்கான தெளி வுடன் நாடகத்தை ஆரம்பித்தால் நாடகம் நெழிவு சுழிவு இலாது சுவைக்கும் என்பது அடியேனின் வேட்கை

சூத்திரதாரன்;

புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார் இதைத் தொகுத்துள்ளார். அவர் தமிழ் நெறிப் புலவர் மட்டன்றி அறிவியல் நெறி அறிவுள்ள புலவருங்கூட. திணைகள் நில அமைப்பிற்கேற்கவே அமைதல் நலமெனத் தொல்காப் பியர் எண்ணினர். அதனற்தான் உயர்வான மலை நாட்டை முதலில் வைத்தார். அடித்து வரையடிவாரத்தை அண்மிய காட்டை வைத்தார். அதன் பின்னர் சம வெளியில் நீர்ப்பாசனம் மிக்க பழன நிலத்தை வைத்தார். வரையிருந்து பெருகி வரும் ஆறு சங்கமமாகுங் கடற்கரையை நான்காவது இடத்தில் வைத்தார்.

இடைக்கிடை இவைகள் நான்கிலும் இருந்து வேறுபடும் வெட்ப தட்பமுள்ள இடத்தைப் பாலை யெனச் சொல்லாமற் சொன்னர். இது இயற்கை சார்ந்த திணை வகுப்பு. ஆனல் உண்மையிலே மாந்தர்க்கு உதவும் வகையிற் பார்த்தால், உண்டி கொடுத்து உயிர் காக்கும் நிலம் மருதம். உயிர் வாழவும், உடல் வெப்பத்தைத் தரவும் வல்ல மாப்பயி தார்த்தம் மிக்க நெல்போன்ற நவதானியத்தைத் தரும் நிலம் மருதம். என்று அலைந்து திரிந்த மனிதன் ஓரிடத்தில் நிலையாக நிலைத்து வாழத் தொடங்கினனே அன்றே மனித நாகரீகம் ஆரம்பமானதென வரலாற்றுய்வாளர் வழுத்துவர். அத்தகை நிலைத்தல வாழ்க்கைக்குத் தளமாக இருந்தது பயிர்ச் செய்கையும் வயல் நிலங்களுமே ஆகும். எனவேதான் மனித வாழ்க்கையில் மருதம் முதலிடத்தை வகிக்கின்றது என்ற உலக அறிவியல் தெரிந்த கூடலூர்க் கிழார் துணிந்தி மருதத்தை முதலில் வைத்தாரென்று நினைக்கிறேன். உன் எண்ணம் எதுவோ?

கிண்டலார் ;

அதுவேதான் . அடுத்த ஐயம்; யாதன் யவினி பற்றியது.

சூத்திரதாரன்;

எல்லாவற்றையும் நான் சொல்வது; கேட்பவர் காதில் புளிக் காற்றைப் புகுத்தும். அதைப்பற்றி நீயே உனக்குத் தென்பட்டதைச் சொல்வது நலந்தானே!

கிண்டலார் ; **(தொண்டையைக் கனைத்துக் கொண்டு)**

பெருமக்களே! யாதன் வாழி யவினி வாழி என்பது ஒருவரையே வாழ்த்தும் இரட்டைக் கிழவி அல்ல. அவை வேறு வேறு இருவரை வாழ்த்தும் வாழ்த்துரை. சிலர் இவர்கள் சேர நாட்டினர். தந்தையும் மகனும் என்பர். அப்படி என்றல்; இந்தப் பாடல்கள் அகஞ் சார்ந்தவையோ அல்லது புறஞ் சார்ந்தவையோ என்ற ஐயப்பாடு தோன்றவே செய்யும். பொதுவாக அகப் பாடல்களில் தலைவனே பாட்டுடைத் தலைவனுதல் மரபு. அப்படி இருக்க இங்கே மட்டும் யாரோ ஒரு மன்னனும் அவன் மகனும் ஏன் பாட்டுடைத் தலைவனுதல் வேண்டும் . தமிழ் நெறி தவருத ஒழுங்கில் இந்த வாழ்த்தை எடுத்துக் கொண்டால், நாம் ஒரு பண்டு தொட்டு வரும் இறைவழி பாட்டை மனதிற் கொள்ள வேண்டும். அந்தக் கருத்

துடன் இந்த வாழ்த்தை அணுகுவோமானால், இந்த வார்த்தைகளில் சுருங்கிக் கிடக்குஞ் சொற்கள் விரிந்து; ஆதவன் வாழி அவனி வாழி எனத் தோன்றும் அப்போது; ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் ஞாலம் புரப்ப தனால் என்ற பொருள்படும் ஆதவன் வாழி அவனி வாழி என்று ஆகாதோ. அவ்வாறு கொண்டாற் தான் அடுத்து வரும் நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க எனும் பா வரிகள் பொருந்துவனவாக அமையும். இவைகளுக்குக் காரணமாயிருப்பவன் மன்னன் அல்லன். ஞாயிறும் அதி லிருந்து சிதறிய அக்கினிப் பிழம்பால் உண்டான அவ னியும் என்பதே எனது கருத்து.

சூத்திரதாரன்;

கிண்டலாரே! நீர் வெறும் கரையொதுங்கிய வண்டல் மண் அல்ல, உம் சிந்தையிலுஞ் சீர் தூக்கிப் பார்க்க வேண்டிய சிந்தனைகள் உள்ள ஒரு மண்டையார் தான்... சரி. வேறு ஏதும் ஐயப்பாடுள்ளனவோ?

கிண்டலார் ;

ஐயமிட்டுண் என்பதிலும் பார்க்க ஐயமிட்டுரை என்பது காலங் காலமாக நிறைந்துள்ள உலகில் ஐயம் இடைக் கிடை தோன்றவே செய்யும். அத்தருணங்களில் உங்களண்டை வந்துதானே ஆக வேண்டும். இப்போது உங்கள் நாடகத்தை நடத்துங்கள்.

தலைவன்;

பாங்கி! எவ்வண் உள்ளாய். எங்கே என் அகத்தாள்? நலமே உள்ளாளா/

(பாங்கி ஏதும் பேசாத அமைதியாக நிற்கிறுள்)

ஏன், பாங்கி மௌனமாக நிற்கிறுய்? நானில்லாத போது, இங்கே என்ன நடந்தது . அதைச் சொல்ல ஏன் தயங்குகிறுய். என்னையிட்டு அவள் என்ன நினைக்கிறுள் ?

பாங்கி;

வாழி யாதன் வாழி யவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
வென வேட்டோள் யாய்
யாமும் யாணரூரன் வாழ்க பாணனும் வாழ்க
என வேட்டேமே 1

அன்றியும்;

விளக வயலே யருக இரவல்
எனவெட்டோள் யாய்
யாமும் தண்டுறை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்கவென் வேட்டோம் 2

பால்பல வூறுக பகடுபல சிறக்க
என வெட்டோள் யாய் யாமும்
யூரன் தன்மனை வாழ்க்கை பொலிக என வேட்டோம்

மேலும்

பகைவர் புல்லார்க பார்ப்பா ரோதுக
என வேட்டோள் யாய்
யாமும் கழனியூரன் மார்பு
பழன மாகற்க என வேட்டோம் 4

தலைவன்;

இங்கு நடப்பவைகளைப் பார்த்தால் அதிசயமாகவல்லவோ இருக்கின்றது . சில வேளையே பிரிந்து இருந்து வந்த என்மேல் கோபங்கொண்டு வெறுப்பீர்கள் என்று எதிர் பார்த்தால்; நான் நினைத்ததிற்கு மாறுக, எல்லா நலன் களும் எனக்கு மட்டல்ல என் பாணனுக்கும் கிடைக்க வேண்டும் என்றல்லவோ வேட்டு இருக்கிறீர்கள்! அவ்வ ளவுக்கு நான் உங்கள் மனதில் உயர்ந்து நிற்கிறேன் என எண்ணுந்தோறும் மனம் மட்டற்ற மகிழச்சி கொள்கி றது. பாங்கியே! மேலும் நீங்கள் என்ன என்ன வேட்டீர்கள் என்பதைச் எடுத்துச் சொல்ல மாடடாயா?

பாங்கி; (தனக்குள்)

அட பாவி மகனே! நான் சொல்லியவற்றுள், உன் கூடா ஒழுக்கத்தைச் சுட்டிக் காட்டியதை உன்னல் உய்த்துணர முடியவில்லையே. நான் இகழ்ந்ததையும் உனைப் புகழ்ந் ததாகக் கொண்டு விடடாயே!

தலைவி; மனையில் ஒருபால் மறைந்துகொண்டு,

தோழி கூறியவற்றைக் செவி மடுத்த தலைவி தனக்குள்)

கயவனே! களிகொண்டா உன் மனந் துள்ளுகிறது, என் பாங்கி உன் தவறுகளை ஒவ்வொரு செய்யுளிலும் எடுத்து ஊசியால் குத்துவதுபோலக் குத்திக் குத்திக் காட்டியதைப் புரிந்து கொள்ள முடியாதவாறு, உன் கண்கள் காமக் கிழத்தியரின்பால் கொண்டுள்ள ஆராத மோகம் மறைக்கின்றதோ, உன்னை வாழ்த்தும்

போதே என் அருமைப் பாங்கி; முதலாவது செய்யுளில் நகைய காஞ்சிச் சிறைய சிறு மீனூரன் என்றாளே. ஆற்றில் மலரும் நீர்ப் பூவரச மலரை நுகராது புலால் மணமிக்க சிறுமீனைப் புணர்பவன் என்றதன் உட் பொருளை உன்னுல் புரிந்து கொளள முடியவில்லையா?

பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும் தண்டுறையூரன் என்று அடுத்த செய்யுளிற் சொன்னாளே, அதில் நீலோற்பல மலருக்கும் நெய்தல் மலரையொத்த பரத்தைபால் இன்பம் நுகர்க்கும் உன் எழிய தன்மையைச் சுட்டிச் சூடு போட்டாளே அதுகூடவா உனக்கு உறைக்கவில்லையா. மூன்றுவது செய்யுளில் வித்திய உழவர் நெல்லொடு பெயரும் பூக்கஞ்சன் ஊரன் என்ற போதுகூடவா பரத்தை பூக்கஞ்சன் எனும் கனி போன்றவள் என்று உணர்த்தியதை உணர முடியாமல் போய்விட்டது. போனுல் போகட்டும்; நான்காவது செய்யுளில் பூத்த கரும்பின் காய்த்த நெல்லிற் கழனியூரன் என்ற போதாவது பயன்தராத கரும்புப் பூவிற்கும் உணவெனும் அமிர்தந் தரும் நெற்கதிர்க குடலுக்கும் இடையில் உள்ள வேறுபாடுதான் பரத்தைக்கும் பாரிக்கும் இடையில் உள்ளதென்ற உண்மையைக் கூடப் பகுத்தறியாத மண்டூகமாய் விட்டாயே! என் பாங்கி உனக்குப் பாதரட்சை பட்டாபிசேகம் மட்டுமல்ல பாதுகா முத்தமுந் தந்துள்ளதை எப்போதுதான் புரிந்து கொள்வாயோ?

தலைவன்;

பாங்கியே ஒதுக . வேறு எதைத்தான் என் இல்லாள் வேட்டாள்? அதை விரைவில் எடுத்துச் சொல். என் மனைவியின் நெஞ்சத் துடிப்பு அதன் மூலம் வெளிப் படுமல்லவா. சொல் பாங்கி சொல்.

பாங்கி;

சொல்கிறேன் தலைவா சொல்கிறேன். அவளுடைய எண்ணத்தை மட்டுமல்ல எனது எண்ணத்தையும் எடுத்துச் சொல்கிறேன். அதனை நன்குணர்ந்து கொள்ள வேண்டியது நல்லறிவு உள்ள உங்கள் கடன்;

பசியில் லாகுக பிணிசே ணீங்குக
எனவேட் டோளே யாய்
யாமே முதலைப் போத்து முழுமீனுருந்
தண்டுறை யூரன் றேரெம்
முன்கடை நிற்கவென் வேட்டோம். 5

தலைவன்;

அப்படியா, நான் விரைவில் வந்து சேர வேண்டுமென்று ஆவல் கொண்டீர்கள், நல்லதே சொல்லினே. நான் ஏதோ எதுவோ என எண்ணி இருந்தேன். ஆனல் எஎவ்வித பதட்டமுந தடுமாற்றமும் இல்லாது, எனக்கு எல்லாம் நல்லதே நடக்க வேண்டிமென உங்கள் சிந்தை விரும் பினது என்பதைக் கேட்கும்போது என்ன சொல்வது என்ன செய்வதென்றே தெரியவில்லையே. அது இருக்க என் மனதுக் கிசைந்தவள் எங்கே உள்ளாள்? அவளை இங்கே வரச் சொல்! என்ன தடை ஏன் தாமதம்:

(பாங்கி தனக்குள்)

முதலைப் போத்து முழு மீனுரும் ஊரன், என்ற போதிலிம் இவனில் காணப்படும் கூடாவொழுக்கத்தை உணர்த்தி யவாற்றை உணர்ந்திலனே . வேறு எவ்வாறுதான் தெளிவிப்பேன்..

பாணன்:

தலைவா. இதுவரை பாங்கி பேசியவற்றையும் அதற்கெலாம் நீங்களும் ஆமாம் சாமி யாட்டம் தலைசைத்துக் கொண்டி ருந்ததையும் நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். பாங்கி தன் ஒவ்வொரு வார்த்தையிலும் பொடி வைத்துப் பேசினுள். அவை ஒவ்வொன்றும் உங்களது பரத்தமை ஒழுக்கத்தைக் குத்திக் காட்டுவதாக அமைந்திருந்தன. மேற்கொண்டு இங்கு தரித்து நிற்பத னுலாம் பயனேதுமில்லை. வாயில் பெற பாங்கி உரைத் தவற்றை மறுத்துப் பேசவோ, அல்லது எதிர் வழக்காடவோ என்னிடம் வல்லமையில்லை. ஈங்கிருந்து அகல்வதே மேல்.

தலைவி; (வெளியே வந்து)

பாங்கி! நடந்தவற்றையெல்லாம் நான் அவதானித்துக் கொண்டிருந்தேன். தெள்ளிய நீரோடை இருக்கச் சேற்று நீரில புரண்டு எழுந்து வந்த செம்மையறறவர்களை

செம்மைப்படுத்த என்னால் முடியாது. சின்னஞ் சிறு குருவிக் கூடுபோன்ற இந்தக் குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு. அதை நான் எவ்வாறு தட்டிக் கழிப்பேன். என் வயிற்றில் பிறந்த உயிர்களை நல்ல குடிகளாக்க வேண்டியது ஒரு தாயின் கடன். ஆதலால் இவரைப் பொறுத்த அளவில் என் பெண்மையை ஓரம் கட்டி வைத்து விட்டு. என் தாய் மைக்கே முதலிடம் கொடுக்க முடிவெடுத்து விட்டேன் .

ஆதலால் தாய்க்குப் பின் தாரமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டேன். இந்த நிலையை ஏற்றுக் கொள்வதானால் அவரை உள்ளே வரச் சொல் . உணவருந்தச் சொல். பாணனே நீயும் வந்து வயிற்றுப் பசியைத் அகற்றிப்போ. இன்பத்தைப் பணத்துக்கு வாங்கி விற்பனை செய்யும் இந்த ஈனத் தொழிலை விட்டு உன் நாவன்மையை நற்றமிழ வளரப் பயன்படுத்து.

எழினி அரங்கை மூடுகிறது
வேட்கைப் பத்தில்
ஊடல் பகுதிக் காட்சி நிறைவுறுகிறது.

காட்சி ; 2..

காலம்; காலை

இடம்; ஊரெல்லை

பாத்திரங்கள்;

தலைவன், பாங்கன், பாங்கி, சூத்திரதாரன். கிண்டல்

நிகழ்ச்சி;

வரைதற் பொருட்டு, பொருள் வயிற் பிரிந்த தலைமகன் திரும்பி வருகிறான். அவன் தேர் வரக் கண்ட தோழி அவனை எதிர்கொண்டு வரவேற்கிறாள். அவன் இதுகாறும் தன்னைப் பிரிந்து தனித்திருந்த தலைவி என்ன பாடுற்றனளோ, தன்னையிட்டு என்ன நினைத்தாளோ என அறியும் ஆவலால் உந்தப்பட்டுத் தோழியிடம் வினவுகிறான். அவள், தலைவியின் அகத்தே என்ன வேட்கை இருந்தது. அவளுந் தானும் எதனை வேட்டோம் என எடுத்துக் கூறுகிறாள்.

சூத்திரதாரன்;

வேட்கைப் பத்துப் பகுதியில் இடம்பெற்றுள்ள பத்துப் பாடல்களில் முதல் ஐந்து பாடல்களின் போக்கு மருதத் திணைக்கே உரிய ஊடல் எனும் அகப் பொருட் துறை சார்ந்தது. இறுதி ஐந்து பாடல்கள் வரைவு சார்ந்த அகப் பொருட் துறையின. இதுவரை ஊடல் சார்ந்த வேட்டல் பாக்களைக் காட்சிப் படுத்திய நாங்கள் இப்போது வரைவு பற்றிய வேட்டல் பாக்களைக் காட்சிப் படுத்துவதைக் காண்க!

தலைவி;

தோழி! ஊரெல்லையில் தேரொன்று ஊர்ந்து வரும் ஒலி கேட்கின்றதே . ஒரு கால் நம் தலைவனின் தேராக இருக்குமோ/

பாங்கி; என்ன? இருக்குமா என ஏன் ஐயங் கொள்கிறீர்கள்? இருக்குமென்மன்றி நம்புங்கள். எதற்கும் நான் சென்று பார்த்து வந்து விடுகிறேனே!

தலைவி; அதுவே நனி நல்லது தோழி

(தோழி ஊரெல்லை நோக்கி ஓடுகிறாள்.
அங்கே தலைவனின் தேர் அண்மித்துக் கொண்டு இருக்கிறது.
அதறப் பதற அடித்துக் கொண்டு ஓடி வரும் தோழியைக்
கண்ட தலைவன் தேரை நிறுத்துகிறான்.
அவள் தேரருகிற் சென்றதும்)

தலைவன்:

தோழி! ஏன் இத்தனை பதற்றம் . என் காதற் கிழத்திக்கு என்ன நடந்து விட்டது. சில நாட் பிரிவை அவள் எவ்வண் தாங்கிக் கொண்டாள் அவளுடைய தவிப்பைத் அகற்ற உன்னால் முடியவில்லையா? அவள் இப்போது எங்கே உள்ளாள். ஏன் அவளை உன்னுடன் கூட்டி வரவில்லை?

பாங்கி;

அப்பாடா! எத்தனை கேள்விகள்! இன்னும் இருக்கிறதா? அல்லது இத்துடன் முடிந்ததா?

தலைவன்:

தோழி! என் துயரத்தை நீ அறியாய். ஆனால் அவள் அறிவாள். எவ்வண் உள்ளாள்? அதை முதலிற் சொல்.

பாங்கி;

உடல் நலத்திற்கு அவள் உள்ள நிலை உறுதுணை செய்ய வில்லை. காரணம் உன் பிரிவும், பிரிவினால் ஏற்பட்ட கால தாமதமுமே என்பதை உன்னால் உய்த்துணர முடிய வில்லையா? தேரொலி கேட்டதும் அவள் அது உனது தேராகவே இருக்க வேண்டுமென்று விரும்பினாள். உடனே போய் அதை உறுதிப்படித்தி வருமாறு என்னை உந்தினாள் . அதுதான் ஓடோடி வந்தேன்.

தலைவன்;

அப்படியா? அதுவா, அவள் வேட்கை. அவற்றைவிட எதை யெதையெல்லாம் வேட்டாள் என்பது உனக்குத் தெரியாமல் இருக்கவே இருக்காது. அவற்றை எனக்கு ஒன்றும் விடாமல் எடுத்துச் சொல்வாயாக.

பாங்கி;

தலைவா. அதை முன் கூட்டி எடுத்துச் சொல்லத்தானே மூச்சித் திணற ஓடி வந்துள்ளேன். இப்போது ஒவ்வொன்றுகச் சொல்கிறேன். கேட்டுக் கொள்க.

வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
வென வேட்டோளே யாய்
யாமே மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்

தண்டுறை யூரன் வரைக
வெந்தையுங் கொடுக்க எனவேட்டோம் 6

தலைவன்;

அப்படியா, என் பிரிவுக்கு இரண்டே இரண்டு காரணங்கள்தான் இருந்தன. அவற்றுள் தலையாயது; வரைவிற்கு வேண்டிய பொருளை ஈட்டுவதேயாகும். அதற்குச் சாதகமாகவே பகை கொண்ட அயற்புல வேந்தனுக்கும் நம் நாட்டு வேந்தனுக்கும் இடையில் சமாதானஞ் செய்து வைப்பதற்காகப் பிரிந்தேன். ஆனால் பெருங் குணங் கொண்ட என் தலைவி நாட்டின் நன்மையையே தலையான இடத்தில் வைத்துத் தணிந்திருந்தாள் என்பது அவளின் வார்ததைகளில் இருந்தே தெளிவாகிறது. அதற்காகவே அவள் உள்ளம் வேட்டது என்பதை அறியும் போது, என் வருங்கால இல்லக் கிழத்தி நாட்டுப் பற்றுடையவள் என்பதை அறியுந் தோறும் இறுமாப்பு கொள்கிறேன்.

பாங்கன்;

பாங்கியே நீயும் வேட்டதாகச் சொன்னையே. அபபடி என்னதான் ஆக வேண்டுமென விழைந்தனை.

பாங்கி;

அதுவா? தாமரைத் தடாகத்தில் காலை வேளையில் ஆதவனைக் கண்டதும் மலர்கள் எண்ணிலவாய் மலர்கின்றன. ஆனால் ஆங்கொரு பருவ மொட்டு பகலவனைக் கண்டும் மலராதிருக்கிறது. ஏனெனில் அது தன் மனதில் உள்ள காதலன் முகத்தைக் கண்டாற்தான் மொட்டவிழும். அதற்காக அத் தலைவன் தலைவியைக் காண விரைவில் வரவேண்டும் வலை வேட்ட வேண்டும். அதற்கு அவளின் தந்தையும் இணங்க வேண்டுமென்று வேட்டேன். மேலும்

அறம்நனி சிறக்க அல்லது கெடுக
என வேட்டோள் யாய்
யாமும் உனைப்பூ மருதத்துக் கிளைக்குரு கிருக்குந்
தண்டுறை யூரன் நன்னூர்க்
கொண்டனன் செல்க என வேட்டோம் 7

தலைவன்;

நல்லதே சொல்லினை பாங்கி. மருதங்கினை அழகுடையது. வெண்ணிறக் கொக்கும் அழகுடையது. அவை இரண்டுந்

தனித்திருப்பின் அவை அழகின் பயனைத் தாராது. இரண்டும் அருகருகில் அணைந்திருந்தாற்தான் அழகு அழகாகும். அப்படித்தானே! நானும் தலைவியும் ஒருங்கணைய வேண்டுமென்றுதானே வேட்டனை/ உன் வேட்டல் விரைவில் நிறைவுறும்.

பாங்கி;

அதுமட்டன்று;

யாகமுறை செய்க களவில் லாகுக
என வேட்டோள் யாய்
என்பது என் தலைவியின் வேட்கை. ஆனால் நானே
யாமோ யலங்குசினை மாஅத் தணிமயி லிருக்கும்
பூக்கஞ ருலூரன் குளிவண்
வாய்ப்ப தாக வெனவேட் டோம் 8

பாங்கன்;

அருமையான ஒப்புவமை. பூத்த மாவில் தோகை மயில் இருப்பதுபோல தலைவா நீயும உன் காதலியும் இணைந் திருக்க வேண்டுமென்று பாங்கி விழைகிறாளே. அது சொல்லுந் தரமன்று; மேலும்; என்னதான் விரும்பி வேண்டினீர்கள் என்பதை விபரமாகச் சொல் பாங்கி!

பாங்கி;

தலைவா!

நன்று பெரிது சிறக்க திதில லாகுக
வெனவெட் டோளே யாயே
யாமோ கயலார் நாரை போர்விற் சேக்குந்
தண்டுறை யூரன் கேண்மை
யம்ப லாகற்க வெனவேட் டேமே 9

மாரி வாய்க்க வளநனி சிறக்க
வென வெட்டோளே யாயே
யாமோ பூத்தமா அத்துப் புலாலஞ் சிறுமீன்
தண்டுறை யூரன் றன்னெடு
கொணடனன் செல்க வென வெட்டோம் 10

தலைவன்;

பாங்கி! உங்கள் மனக் கிடக்கையை நன்குணர்த்தினை. நாரை நெற்போரில் இருக்கும் அழகையும், பூத்த தடா கத்தில் சிறுமீன் துள்ளிக் களித்து ஓடுவதையுங் கூறி என் மனதில் தலைவியை மணந்து இல்லறம் நடத்த

வேண்டிய கடமையை உணர்த்தி விட்டாய். இனி தாம திக்க மாட்டேன். விரைவில் திரும்பி வருவேன். தலை வியைப் பயந்தவர் தமரிடம் வரைவு வேட்டு நிற்பேன். அவர்கள் பொருந்தாப் போது, அவளை உடன் போக்கில் ஈடுபடுத்தி, என் பதி சென்று மனையறம் நடத்துவேன். இதை உன் தலைவியிடம் பகர்வாயாக. பாங்! நான் சென்ற இடங்களில் என் தலைவிக்கு ஏற்ற சில பரிசுகள் கொண்டு வந்துள்ள்ளன். அவற்றை அவள்வயிற் சேர்ப்பாயா?

பாங்கி;

அது தவறு தலைவா. களவு கற்று மறக்க வேண்டியதே தவிரத் தொடர வேண்டிய காரியமன்று. இதுவரை நான் பட்ட துன்பம் போதும். களவியலும் போதும். பெண்மை கற்பியலிற்தான் பூக்கும். அப்போதுதான் அதன் தாய்மை கனியும். பெண்மை முழுமையுறும். இதை மனதிற் கொண்டு, இனி அவளைப் பலர்முன் காணவும் பரிசு களைக் கொடுக்கவும் ஆவன செய்க.

தலைவன்;

அப்படியே ஆவன செய்து வந்து காண்பேன். அதுவரை ஆறியிரு என ஆறுதல் புகல்வாயாக

(தேர் செல்கிறது. தோழி தலைவியிடம் வருகிறுள். தலைவி ஓடிச் சென்று பாங்கியின் முகத்தைப் பார்க்கிறுள்)

பாங்கி;

தலைவியே. வந்தவர் அவரேதான். வேண்டிய பொருளுடன் திரும்பியுள்ளார். விரைவில் உனை வரைவு வேட்டு வருவார். அப்போது உன் பெற்றூர் இசையாவிட்டால் உடன்கொண்டு சென்று தன் பதியில் மனையறம் படுப் பாராம். அதுவரை ஆறியிருக்கும்படி அறிவுறுத்தினர்,

தலைவி;

அப்படியா. அந்த உறுதியே என் உயிர்க்கு உறுதியைத் தருகிறது. எத்தனை காலமாயினும் அவருக்காக எதிர் பார்த்திருப்பேன்.

எழினி அரங்கை மறைக்கிறது
காட்சி மறைகிறது.

காட்சி; *3*

களம்; பழனத்தருகில் உள்ள ஒரு உழவர் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்கள்;

சூத்திரதாரன். கிண்டலார், தலைவன், தலைவி, பாணன், பாங்கன்; பாங்கி.

நிகழ்ச்சி;

பரத்தையிற் பிரிந்த தலைமகன், பல நாட் கழித்து இல்லந் திரும்புகிறான். அதை ஒரு பொருட்டாகக் கொள்ளாத தலைவி தனது இல்லக் கடமைகளைச் செய்வதிலே நாட்டங் கொண்டு செயற்படுகிறாள். அதனால் மனங் கவன்ற தலைமகன் பாணனின் உதவியை நாடி அழைத்து வருகிறான். பாணனின் பரிந்துரை பயனற்றுப் போகப் பாங்கன் வந்து தலைவனை மன்னித்தேற்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறார். அதுவும் பயனற்றுப் போகப் பாங்கியின் உதவியைத் தலைவன் நாடுகிறான். இவர் களுக்கெல்லாம தலைவி வாயில் மறுத்துரைப்பதாகவே இந்த அகப் பொருட் பகுதி அமைகிறது.

முன் எழினி மேலே தூக்கப்படப் பின்னல்
மருத வளங் காட்டும் எழினி தென்படுகிறது .
சூத்திரதாரன் அரங்கிற் தோன்றி

சூத்திரதாரன்;

வணக்கம் அவையோரே. இப்போது, ஐங்குறுநூற்றின் இரண்டாவது வேழப்பத்து காட்சிப்படுத்தப்பட இருக்கிறது. இதற்கு ஏன் வேழப்பத்து எனப் பெயரிடப்பட்டது என்பதை அறிந்துகொண்டாற்தான் இதில் அடங்கியுள்ள பொருண் மையின் பொருள் புரியும். வேழம் என்பது: கரும்பு, மூங்கில், யானை. மருத நிலத்தில் வளரும் ஒரு இனச் செடி எனும் பல பொருள்படும், யானை மலை நாட்டில் வாழும். அதனாற்தானே குறிஞ்சியிற் தெய்வ யானைக்கு வள்ளி குறத்தி சக்களத்தியாக அமைந்தாள் எனக் கந்தப் புராணம் கதைக்கின்றது. ஆயினும்; காலத்துக்குக் காலம் வரட்சி காரணமாக அது முல்லைக்கும் வரும். மருத வயல்

புகுந்து நெற்போர்களை துதைத்தும். நெற்பயிர்களைத் துவைத்தும் காராளர்க்கு கஷ்டங்களை ஏற்படுத்தும். இதனல் பெரும் எரியூட்டி அவற்றை விரட்டுவர். அது மட்டுமல்ல வேழ முக விநாயகனையும் வழிபடுவர்.

ஆனல் இங்கே, வேழம் என்பது அசைந்தியங்கும் உயிரினஞ் சார்த்த தன்று. நிலத்தில் நின்ற இடத்திலே நிலைத்து காற்றில் மட்டும் அசைந்து வாழும் பயிரினஞ் சார்ந்த ஒரு தாவரம். மருத நிலத்தில உள்ள பழனங்களை அண்மி, நீரோடும் வாய்க் கால்களிலும், வரம்பின் அருகிலும், வயலுள் நெற்பயிருடனும் கலந்த களையாகவும், வயலருகில் உள்ள பற்றைக் காட்டிடையும் செழித்து வளரும். அத்தகைய தாவரங்கள் இரண்டு உள்ளன. இவை இரண்டும் யானையின் பெயர் பெறுவன. அதுவும் அவை காரணப் பெயர்களாக அமைந்துள்ளன. அவற்றில் ஒன்று யானை வணங்கி எனுஞ் செடி. சாம்பல் படர்ந்த பசும் இலை கொண்ட இது மூன்றடி உயரம் மட்டும் வளரும். இதன் நீடு நுனி வளைந்த பூத்தண்டில் வெண்ணிறச் சிறு பூக்கள் மலரும். நாளடைவில் இவை கடுகளவு காயாகிப் பழுத்துக் காய்ந்து மேலும் வளைந்து சுருண்டு தொங்கும். பூத்த நிலையிலும், காய்த்துப் பழுத்துக் கருகிய நிலையிலும், அதன் பூத்தண்டு யானையின் துதிக்கைபோலத் தோன்றுவதால் இதனை யானை வணங்கி என்பர். இதன் மூலங்கள் வைத்திய மூலிகையாகக் கொள்ளப்படுகிறது.

அடுத்த தாபரமும் யானையின் பெயரால் அழைக்கப் படுகிறது. இதுவும் சாம்பல் படர்ந்த பசிய அகன்ற இலைகளை உடைய தாவரம். நான்கடி உயரத்துக்குச் இடத்திற்குத் தக செடிபோலவும் கொடி போலவும் செழித்து வளரும். இலை வட்டுக்களிடை எள்ளின் பூப்போன்ற மெல்லிய ஊதா நிறப் பூக்களைப் பூக்கும். நாளடைவில் மலர்கள் கொத்தாகச் சிறு வடு மாங்காய் போல ஒரு அங்குல நீளமுள்ள காய்களாக காய்க்கும். நாளடைவில் அவை பழுத்து மேற்தோல் கழன்று விழ, உள்விதைகள் கங்காள வடிவில் கறுப்பு நிறங்கொண்டு தொங்கும். இவை சமையலிற் புளிப்புச் சுவை ஊட்டப் பாவிக்குங் கொறுக்காய் போன்றிருப்பதால் கொறுக்கச்சி என்பர்

தளதளபபான வளர்ச்சியும் அதன் காயும், பருப்பும் வளைந்த நுனி கொண்டு யானையின் முகமுந் துதிக் கையும் போன்றிருப்பதால், இதனை யானைக்குரிய வேழம் எனும் பெயரால் அழைப்பர். இந்த வேழத்தைக் கருவாகக் கொண்டதே இந்த வேழப் பத்தாகும். இத்தாவரதத்தை பரத்தமையிற் சேறிய தன் கணவனுடன் பிணங்கி ஊடல் கொண்ட பெண்ணின் அக உணர்வுகளை வெளிப்படுத்து வதற்காக ஒரம்போகியார் எனும் புலவர் எடுத்தாண் டுள்ளார். இனி அதுபற்றிய மேலதிக விபரங்களை இந்த நாடகத்தில் இடம் பெறுவோர் வழியாகக் கேட்டறிவோம்.

(பரத்தையின் இல்லத்திற் தங்கிக் காலத்தைக்
கடத்திய தலைவன், ஆங்கு காதற் கிழத்திக்கும்
காமக் கிழத்திக்கும் இடையில் உள்ள
அன்பையும் போலி அன்பையும் உணர்ந்தான்.
இதனால் இத்தகைய தவறை மேற்கொள்ளா
வாழ்க்கையைத் தொடரும் உறுதியுடன்
தன் மனைக்குத் திரும்புகின்றான். வாசலில்
அவனைக் கண்டதுங் கண்டும் காணாதவள்போல
இல்லக் கிழத்தி தன் வீட்டுப் பணிகளில்
ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாள்
தலைவன் செருமித் தன் வரவை உணர்த்துகிறான்.
அதையுங் கவனத்திற் கொள்ளாத அவள்
அப்பாற் செல்கிறாள். தன்னிலையை உணர்ந்த
தலைவன் தன் பாணனைக் கொண்டே அவள் மனதைக்
கவரலாம் என்ற நம்பிக்கையுடன் அவனை
அழைத்து வருகிறான். பாணன் தலைவியின்பாற் சென்று;)

பாணன்;

தலைவியே! நடந்தவற்றையெல்லாம் அறிவேன். எந்த மனிதன்தான் வாழ்க்கையில் தவறிழையாது இருக் கின்றான். அதற்கு உன் தலைவன் விதிவிலக்கல்லன். ஆனால், தவறிழைத்த ஒருவன் தன் தவறை உணர்ந்து, இனிமேல் அந்தத் தவறைச் செய்ய மாட்டேன் என உறுதி கொண்டால் அவனே மனிதனுள் மாணிக்கம். அத்தகைய நல்ல மனிதனே உன் கணவன். அவனை மன்னித்து ஏற்றுக் கொள்வாயாக. இன்றேல் உங்க ளிடையே உள்ள தகராறை அறிந்து ஊரே தூற்றும். அதற்கு நீயே உடந்தை யென உலகந் தூற்றும்;

தலைவி;

நல்லலை இயம்பினை நாவல்ல பாண. அதோ பார்;

மனைநடு வயலை வேழஞ் சுற்றும்
துறைகே ழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே .....ஆனால்;
அல்ல னென்றுமென் தடமென் றேளே 11

பாண! அங்கே பார்; இல்லத்தில் அழகு சேர்க்கப் படரும் வயலைக் கொடியைப் பக்கத்திலே வளர்ந்துள்ள வேழம் தாவிப் படர்கிறது. இத்தகைய நிலைதான் என் தலைவனினுக்கும் ஏற்பட்டுள்ளது. அதனால்; என்னில் இயல்பாகவே ஏற்பட்டுள்ள என் தோளின் தளர்வை என்னால் மறைக்க முடியவில்லையே. அப்படி இருக்க என் தவறென ஊரவர் எவ்வண் உரைப்பர்

கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்
துறைகே ழூரன் கொடுமை நன்று
மாற்றுக தில்லை நாமே
தோற்ற தில்லைவென் றடமென் றேளே 12

வேழம்போன்ற பரத்தையர் இனிய காலைகளைக் கவர்ந் திழுக்கத் தாமே அவர்மேல் தாவி வீழ்ந்து தழுவுவார். இந்த நிலைக்குட்பட்ட என் கணவரின் கூடா வொழுக் கத்தை என்னால் மறைக்கலாம். ஆனால அவர் பிரிவால் துவழ்ந்து மெலிந்த எனது தோள்கள் வெளிப்படுத்து கிறதே! இதை நீ அறியாதென்ன பாண.

(இந்த விளைவிற்குத் தக்க விடை பகர முடியாத வாயிலோன் வருகிறென் என்றுகூடச் சொல்லாது வழுவி விடுகிறன். இதையறிந்த தலைவன் தன் பாங்கன் மூலம் வாயில் வேண்டி; அவனுடன் தன் மனைவியிடம் வருகிறன். அவர்களின் வருகையைக் கண்டதும் தலைவி அவர்களைக் காணாள்போலத், தனக்குள்;

பரியிடை நன்மான் பொங்கிள யன்ன
வடைகரை வேழம் வெண்பூப் பூக்குந்
தண்டுறை யூரன் பெண்டிர்
துஞ்சூர் யாமத்துந் துயின்றி யலரே 13

தலைவன்;

பாங்கனே, நம்மைக் கண்டும் காணுதாள்போலப் பாடும் பா வரிகளைச் செவி மடுத்தனையா? அதிலே, அவள்

இரவில் அனுபவிக்கும் தனிமைத் துயரைத்தான் கூறுகிறாள். அதிலிருந்து அவள் இரங்கித் தன் நிலையில் இருந்து இறங்கி வருகிறாள்போல இருக்கிறது. பாங்கா அவளிடம் உன் வாயில் எடுபடும் என நம்புகின்றேன். முயன்று பார்.

தலைவி;

கொடிப்பூ வேழந் தண்டி யயல
வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கும்
மணித் துறை யூரன் மார்பே
பனித்துயில் செய்யு மின்சா யற்றே 14

பாங்கன்;

நண்பனே! எனக்கு அத்தகைய சமிக்கைகள் எதுவும் அந்தப் பாவரிகளிற் தோன்றவில்லை. அதிலே தம் இல்லக் கிழத்தியரைப் பிரிந்து பரத்தையர் மனதில் கிடக்குந் தரங் கெட்டவர்களைத் தாழ்த்தி வசைபாடுவதாகவே தென் படுகிறது. அதற்கு அவள் மருத நிலத்தின் வளமான நீரையும், பசளையையும் உண்டு வளர்ந்து எதற்கும் பயனற்ற வேழத்தின் மலர்களை நிகர்க்கும் கலிமாவின் வெண் பிடரி மயிரென ஏமாறும் பெண் மோகங் கொண்ட ஏமாளிகளை எள்ளி நகைப்பதாகவே தென்படுகிறது. என்றுலும்; என்னுலியன்றவை இயம்பிப் பார்க்கிறேன்.

தலைவியே! நடந்தது ஒரு விபத்து. தற்செயலாக உன் கணவன் மனதிற் ஏற்பட்ட சபலத்தின் விளைவால் அவன் பரத்தையர் வயப்பட்டது உண்மைதான். அதன் பயன் நன்றல்ல தென்பதை உணர்ந்த அவர், திரும்பி உன்பால் வந்துள்ளார். நடந்ததை மறந்து, ஏற்று உன் இல்லற மேன்மை வளம்பெற ஏற்ற வழிவகைகளை செய்வது ஒரு இல்லத்தரசியின் கடமையல்லவா?

(பாணனினதும் பாங்கனதும் வாயில்கள்
பயனற்றுப் போனதைக் கணட தலைவன் தலைவியின்
உள்ளத்தை குழந்தைக் காலமிருந்தே நன்கு புரிந்து
கொண்டவள் பாங்கி ஒருத்தியே. அவளாற்தான் தன்
தவறினுல் இழந்த பழைய வாழ்க்கையைப் பெற முடியுமென
எண்ணி அவள்பாற் சென்று)

பாங்கியே! என்னையுந் தலைவியையும் ஊழ்விதி கூட்டி வைத்தாலும், அது உன் உதவியினுற்தான் முடிவதொன்

ருயிற்று. ஆனல், தற்செயலாக நடந்த ஒரு சிறு சம்பவத்தால் பாழ்பட்டுப் போவதை உன்னுல் சகிக்க முடியாதென்பதை நான் உணர்வேன். ஆதலால்; நீ கட்டி வைத்த இந்தக் குடும்பக் கூடு உடைந்து சிதறிப் போகாது கார்க்க உன்னுலேயே முடியும். எனவே உன் வாயில் மூலம் இந்த அனலைத் தணித்து வைப்பாயாக.

தலைவனே! இத்தகைய தவறுகளால் பெறும் இன்பத்திலும் பார்க்க, அடையுந் துன்பம் அளவு கடந்தது. எனினும், அவளின் துயரத்தை நான் நேரிற் கண்டு அனுபவித்தறிந்தவள். அப்படி இருந்தும் குடும்பம் எனும் கூடு உடையாதிருக்க வேண்டுமென்ற விழைவுடன் இயலும் வரை முயன்று பார்க்கிறேன்.

(தலைவனுடன் தலைவியிடஞ் செல்கிறுள். அவர்களைக் கண்ட தலைவி;)

வா தோழி வா. எங்கே நீ வராது போய் விடுவாயோ என்றிருந்தேன். நீயும வந்து விட்டனை. நீ என்ன சொல்லப் போகின்றுய் என்பதை நான் நன்கு அறிவேன். எனவே அவற்றை நீ சொல்லி விட்டதாக நினைத்து உனக்கு என் உள்ளக் கிடக்கையைச் சொல்கிறேன் கேட்பாயாக; வாழும் இடத்திற்கும் செய்யுந் தொழி லுக்கும் ஏற்ப ஒருவரின் மன வளம் அமையுமென்று சொல்வார்களே! அதற்குத் தகைய;

மணலாடு மலிர்நிறை விரும்பிய வொண்டழைப்
புனலாடு மகளிர்க்குப் புணர்துணை யுதவும்
வேழ மூது ரூரனூர னுயினு மூரனல் லன்னே 15

மேலுஞ் சொல்கிறேன் கேட்பாயாக;

ஓங்கிபூ வேழத்துத் தூம்புடைத் திரள்காற்
சிறுதொழு மகளி ரஞ்சனம் பெய்யும்
பூக்கரு லூரனை யுள்ளிப்
பூப்போ லுண்கண் பொன்போர்த் தனவே 16
இன்னுஞ் சொல்கிறேன் செவி கொடு தோழி;

புதன்மிசை அடங்கும் வேழ வெண்பூ
விசும்பாடு குருகிற் றேன்று மூரன்
புதுவோர் மேவல னுகலின்
வறிதா கின்றென் மடக்கெழு நெஞ்சே 17

இருஞ்சா யன்ன செருந்தியொடு வேழங்
கரும்பி னலமருங் கழனி யூரன்
பொருந்துமல ரன்னவென் கண்ணழப்
பிரிந்தன னல்லனே பிரியலெ னென்றே 18

அதுபோல; உணவு தந்து உலகின் உயிர் காக்க, நெற் பயிர் விளைப்பதுதான் நம் மருத நிலப் பண்பு. ஆனலும். ஆங்காங்கே நெல்லுடன் நெருங்கி வளரும் வேழமெனுங் கரையால் விளைவு குறையும் இடங்களும் உள்ளன. அத்தகைய இடங்களில் வாழ்வதால் அத் தரைக் கேற்ற குணத்தைப் பெற்றவரால், எவ்வண் நல்நெறியில் இன்பங் காண முடியுந் தோழி? பரத்தையர் பின்னுல் புனலாடச் சென்றுல் ஒரி புறத்தே ஒதுங்கி மற்றவர் களின் கண்களுக்கு மறைந்தே நீர் குடைவர். காரணம் தம்முடன் நீராட வந்துள்ள காமக் கிழவர்கள் பிறர் கண்களிற் பட்டால், என்னைப் போன்றவர்கள் எதிர்ப்பர் என்று எண்ணுவதே ஏதாகும். அப்படியானவர்களுக்குத் தக்க மறைவிடத்தை வழங்குவது இந்த வேழப் புதர்கள்தாம்.

அப்படி இருந்தும் அதன் மலர்த் துகழ்கள் விண்ணிலே வாழுந் தகைத்தான வெண் கொக்கின் சிறகுகளிற் படிந்து இழிவு செய்வது உண்டே. கருந் தண்டான் கோரை எனுங் கரையுடன் இணைந்து, இந்த வேழம் கரும்பைச் சுற்றி வளரும் நாடு நம் தலைவனுடையது. அவர் எப்போதும் பிரியேன் என ஒருபோது சொன்னதை மறந்து இன்று இவ்வண் எனைப் பிரிந்துறைவதும் அந்த ஊரின் இடஞ்சார் பண்பாற்தான் என என் நெஞ்சம் நினைக்கிறது.

தோழி! இன்னுமொரு நிகழ்வு உனக்கு நினைவில் நிலைத் துள்ளதா? விளையாட்டுப் பருவத்தில் இந்த வேழம் நமக்குப் பல வழிகளில் விளையாட்டுப் பொருட்களை நல்கி உள்ளது. இதன் மொட்டுகளைப் பறித்து நெற்றியில் அழுத்தி வெடிக்க வைத்து அதன் சத்தத்தில் மகிழ்ந்தோம். சிறு வடுமாங்காய் போன்ற பசிய காய்களைப் பறித்து கழங்காய் விளையாடினோம். பழுத்து வெளியே தெரிந்த கரிய பருப்புகளை எடுத்து காதிற் கொழுவி குண்டலமிட்டு

அழகு பார்த்தோம். ஏன் அவற்றைத் திரட்டிச் சிறு அங்காடி வைத்து விளையாடிய போது அவறறைக் கொறுக் காய்ச் சரக்காக உபயோகித்தோம். பக்கத்திலே செல்லும் கால் நடைகளின் உடலிற் கொழுவி வேடிக்கை பார்த்தோம். அவ்வாறு அன்று விரும்பிய வேழம் இன்று வெறுப்பையே தருகிறது. அதற்கான காரணம் ;

எக்கர் மா அத்துப் புதுப்பூம் பெருஞ்சினை
புணர்ந்தோர் மெய்மணங் கமழுந் தண்பொழில்
வேழ வெண்பூ வெள்ளுகிர் சீக்கு
மூர னுகலிற் கலங்கி
மாரி மலரிற் கண்பனி யுகுமே 19

உண்மைதான்! ஆற்றங் கரைக் கண்ணுள்ள மணற் திடர் மாமரம் பூத்த பூமணம் பரம்பு முன், அதன் அரும்புகளை வேழத்தின் வெண்ணிற மலர்த் துகழ் மறைத்து விடும். அத்தகைய துறையை ஊராகக் கொண்ட தலைவனை நினைக்கும்போது, என் கண்ணீர், மழை காலத்தில் மலரும் மலர்களில் தேங்கிய நீராகச் சிந்துகின்றன.

அறுகில் கால வஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூஞ்சினை சீக்கும்
காம்புகண் டன்ன தூம்புடை வேழத்துத்
துறைநணி யூரனை யுள்ளியென்
னிறையே செல்வனை நெகிழ்போ டும்மே 20

ஆறு கால்களையும், அழகிய சிறகுகளையுங் கொண்ட தும்பி தாமரை மலரில் இட்ட முட்டைகளை வேழத்தின் மலர்கள் அழிக்கும் ஊரனின் பிரிவால் என் வளைகள நெகிழ்வதை அறிந்திலையோ? தோழி! நான் கோபங் கொண்டிலன். என்னையொத்த மாதர் ஏன் இவ்வாறு தவறு செய்கின் றனர். அவர்களும் நல் மணம் புரிந்திருப்பின் தங் கண வருடன் இல்லற இன்பம் நுகர்வரே. இப்படியான பரத்தமைத் தொழிலில் ஈடுபட்டிருப்பரா? பெண்களுடன் இன்பத்தை விலை கொடுத்து வாங்கி மகிழும் என் தலைவன் போன்றவர்கள் ஏன் இத்தகைய பெண்களுக்கு இல்லறத்தை நிலைப் படுத்த முன் வருவதில்லை என ஏங்கு கிறேன். அத்தகைய நல்ல மனம் படைத்த காளையர் உருவாகி கன்னியர் கற்புக்குக் காவலராகும் வரை நான் என்னை ஒறுக்கவே உறுதி பூண்டுவிட்டேன். இன்னும்

என் மனதில் பொங்கும் சிந்தனைகளைச் சிந்திப் புண்படுத்தி விடுவேன். எனக்கு ஆறுதலைத் தா உபத்திரவத்தைத் தராதே தோழி.

தோழி;

தலைவா. இங்கு என் தலைவி பகர்ந்தவற்றை இரு செவி குளிரக் கேட்டீர்களா? அவள் இப்போது ஒரி தவநிலையில் இருக்கிறாள். அதற்கான வரத்தைப் பெறுமட்டும் உன்னை நாடாள். செல்! பரத்தையரைப் பத்தினிகளாக்கித் திரும்பி வா. அப்போது; அவள் உன்னைப் பாசத்தோடு வந்தி பாய்ந்து தழுவுவாள்

முன்னெழினி அரங்கை மூடுகிறது.

மூன்றுவது காட்சி முழுமையுறுகிறது.

காட்சி; *4.*

காலம்: அந்தி நேரம்

களம்: மருத நிலக் கழனியில் உள்ள ஒரு மருத மரத்தடி

பாத்திரர்கள்; சூத்திரதாரன், கிண்டலார். தலைவி, பாங்கி.

நிகழ்ச்சி;

தன் தலைவன், பரத்தையர்பால் நாட்டங்கொண்டு இருப்பதை ஊரலர் வழியாக அறிந்த தலைவி, கவல்கிறாள். அங்கே, ஒரு வீட்டுக்குள் புகுந்தும் வெளி வந்தும் திரியும் நண்டொன்றின் நடத்தையுடன் தனது கணவனின் கள்ள ஒழுக்கத்தை இணைத்துப் பார்த்துக் கொள்ளுந் துயரத்தை அவ்வழி வந்த பாங்கி அவதானித்துத் தேற்றுகிறாள்.

(முன்னெழினி விலக பின்னால் மருதவள எழினியும்
பசுமை போர்த்த அரங்குந் தென்படுகிறது.
சூத்திரதாரன் கிண்டலாருடன் தோன்றுகிறான்.)

சூத்திரதாரன்:

சபையோரே வணக்கம். இன்று, ஐங்குறுநூறு மருதத் திணையின் மூன்றாவது பத்தை நாடகமாக நடிக்கப் போகின்றோம். அதன் முன்பு, இரண்டே இரு விடயங்களை உங்களுக்குச் சொல்லி வைப்பின் இந்த நாடகத்தை நுகர்வது இலகுவாக இருக்கும் என்று எண்ணுகிறேன். மருத நிலஞ்சார்ந்த அகப் பொருட் சேதிகளுட் தலையாக நிற்பது பரத்தமையே! அவ்வண் ஏன் அதற்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வருடமெல்லாம் மக்கள், அங்கு இங்கு என்று அலையாமல், விதைத்தல், விளைந்ததை வெட்டல் என்ற சுற்றுக்குள்ளே, தங்கள் ஊர்களிலும் மனைக ளிலும் உழைத்து, உறைந்து, உண்டு, உறங்கி, உறவாடி இல்லற இன்பத் துய்க்கும் இடம் மருத நிலமே. அதற்கான மன வளமும், நில வளமும், வாழ்க்கை வளமுங் கொண்ட அத்தரையில் வாழ்வோர், இருத்தல் எனும் பண்பிற்கு உரியராவர். அப்படி இரவும் பகலும் இணைந்து வாழும் வாழ்க்கையில்; ஊடலும், கூடலும் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒரு நெறியாகும். பொதுவாகக் கணவன் மனைவியரிடத்துப் பிணக்கம் ஏற்படுவதற்குப் பல

சிறப்பாக அவர்களிடையே வேறு ஒருத்தி புகுவாள் என்ற ஐயப்பாடே அதற்கு முக்கிய காரணமாகிறது. இத்தகைய சாதாரண பிணக்குகள் பெரும் பிழவாவதுமுண்டு. அதை அகற்றிச் சந்து செய்ய வாயில்கள் வேண்டப்படும்.

கிண்டலார்:

ருஅய்யா, சூத்திரதாரரே! வாயில் என்ருல் என்ன? வாயா அல்லது வாசலா முற்றமா வழியா?

சூத்திரதாரன்:

வாயில் என் பது அகப்பொருள் சார்ந்த ஒரு கலேச் சொல் என்பதே பொருத்தம். பிணக்குற்ற கணவன் மனேவியை நன்கு அறிந்தவர்கள், அன்பிற்கு உரியவர்கள் யாரேனுஞ் சினங்கொண்டவர்பாற் சென்று சினமாற்றி மனந்தேற்றி அமைதி செய்து பிணக்ககற்றி வைப்பதையே வாயில் செய்தல் அல்லது வாயில் வேண்டல் என்பர். அப்படிச் செல்பவர்களே வாயிலார் என்பர்;

கிண்டலார்;

ஓகோ! தூது செல்வதுதான் வாயில் வேண்டலா?

சூத்திரதாரன்:

அப்படிச் சொல்ல, அத்தகைய பரிமாணங் கொண்டதல்ல. இருவர் மனங்களிலும் எழுந்துள்ள ஐயங்களே நீக்கி வைக்கும் நோக்குடன் சமாதானப் படுத்தும் ஒரு அன்பிற்குரிய செயல்;

(கழனியை ஊடறுத்துச் செல்லும் வாய்க்கால் வரம்பில் நிற்கும் மருத மரத்தடியில் கவலேயுடன் தலேவி உட்கார்ந்து கொண்டு, அங்கு வருந் தோழியைப் பார்த்து;)

முள்ளி நீடிய முதுநீ ரடைகரைப்
புள்ளிக் கள்ள ரும்ப லறுக்குந்
தண்டுறை யூரன் றெளிப்பவு
முண்கண் பசப்ப தெவன்கொ லன்னுய் 21

தலேவி;

தோழி. என்னே உன் தாயாக நினேக்கிருயே! அதுவே எனக்குப் பேரானந்தமாக இருகிறது. உன்னுடைய பிரிவு நோயால் உள்ளத்திலும் உடலிலுந் தோன்றும் மாற்றங்கள் வரவர வெளிப்படையாகத் தோன்றத் தொடங்கி உள்ளன. அதனுற்தான் உன் மை திட்டிய கண்கள் பசந்து விட்டன.

அள்ள லாடிய புள்ளிக் கள்ளன்
முள்ளி வேரகீழ்ச் செல்லு மூர
னல்ல சொல்லி மணந்தினி
நீயே னென்ற தெவன்கொ லன்னுய் 22

தலைவி;

தோழியே! முன்பெல்லாம் நாம இந்த வாய்க்காலில் நீராட வருவொம் அல்லவா? அது உன் நினைவில் உள்ளதா? அப்போது, நண்டுகள் ஊர்ந்து வரும் காட்சியைக் கண்டு; எட்டுக் கால் ஊன்றி இரு கால்கள் படமெடுத்து வட்டக் குடை பிடித்து வாருராம் என்று பாடிக் கேலி செய்வோமே

தோழி;

ஆமாமாம். நம்மைக் கண்டதும் ஓடி ஒழித்து, வரம்பிலோ அல்லது வயலின் களித் தரையிலோ உள்ள வளைக்குள் புகுந்து ஒழித்துக் கொள்ளுமே....

தலைவி;

ஆமாமாம், அதனுற்தானே, இந்த நண்டை கள்வன் என்று அழைப்போம். அந்தக் களள்வனைப் போல...

முள்ளி வேரகீழ்க் கள்வ னுட்டிப்
பூக்குற் றெய்திய புனலணி யூரன்
றேற்றஞ் செய்துநப் புணர்ந்தினித்
தாக்கணங் காவ தெவன்கொ லன்னுய் 23

தோழி;

தலைவியே! கேட்பாயாக. உன் வார்த்தைகளில் உன் உள்ளத்து உணர்வுகள் வெளி வருகின்றன. கள்வன் எனப் பெயர்கொண்ட இதே நண்டு, வெள்ள மணல் கொண்ட கடற்கரையிலும் மண்ணில் வள தோண்டி வாழ்கின்றன. அவை கடல் அல பாயும் இடத்தில் வாழ்வதால்; அதன் நிறம் பொன்னிற மாவதுடன், பெயரும் அலவன் என்றுகிறது. அங்கே வளைகளில் ஓடி ஒழித் தாலும் அதனைக் கள்வன் என்று சொல்ல மாட்டார்கள்? இரண்டும் ஓரின உயிர்கள் ஆயினும் வாழும் இட வேறு பாட்டால் இவவாறு சிறிது வேறுபடுகின்றன. இதுவரை அவன் பிரிவால் கண்கள் பசக்கின்றன , என் மனதில் அன்று, நீதான் என் நெஞ்சில் நிறைந்துள்ளாய். வேறு ஏதுமில்லை என்றவர், இன்று பிரிவுத் துன்பத்தைத் தந்ததென்ன? எனக்கே உரியவனுகி என்னைக் கலந்தவன்

இப்போ பரத்தையுடன் கலந்திருப்ப தென்ன? என்றெலாம் எனைக் கேட்கின்றனை.

தலைவி;

தாய்சாய்ப் பிறக்கும் புள்ளிக் கள்வனெடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூர
ரெய்தின னுகின்று கொல்லோ மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்ப தெவன்கொ லன்னுய் 24

தோழி;

என நீ இப்போது சொன்ன வார்தைகளில் அதற்கான விடை உள்ளதாகவ் வ எனக்குப் புலனுகின்றது. தானின்ற பார்ப்பை உண்ணுகின்ற முதலை வாழும் நாட்டில வாழ்ந்தாலுங் கூடத் தன் குஞ்சுகளின் வாழ்க்கைக்காகத் தன்னையே உணவாக்கி அர்ப்பணிக்கும் நண்டுபோன்ற உன் கணவன் பரத்தையர்பால் வீழ்ந்து விடுவாரோ என்று மேலும் அச்சமுறுகினறனையோ?

தலைவி;

ஆம், பாங்கி! நண்டு பழனத்தில செய்யும் அக்கிரமஞ் சொல்லுந் தரமன்று. அவை ஆம்பற் கொடிகளை அரித்து எறிகின்றது . முள்ளிச் செடிகளின் வேர்களை அழிக்கினறது. இளம் நெற் பயிர்களை இடையால் அறுத்துக் குவிக்கின்றது. தன் பசி ஞீர்கக இப்படி துவம்சம் செய்தால் அதில் ஏதும் பயனுண்டு என எண்ணலாம். ஆனல் இரு கால்களில் வெட்டுந் திறன் உள்ளதென்பதால், இப்படி வீராப்புள்ள வெறுஞ் செயல் புரியலாமா?

தோழி;

தவறுதான்! அதுபோலத்தான் தலைவனின் செயல்களும் இருக்கின்றன என்றி நீ நினைப்பதிற் தவறின்று. ஆனல், பரத்தையர் வலையிற் சிக்கி, அவர்தம் வளையிலே அநேக காலம் அடைந்தி கிடக்க முடியாது. எனவே விரைவிலே வெளியே வந்துவிடிவார். ஆதலால அஞ்சுவ தொழி, ஆறுதலடை.

அயல் புறந்தந்து புனிற்றுவார் பைங்ஙய்
வயலைச் செங்கொடி கள்வ னறுக்குந்
கழனி யூரன் மார்பிபலர்க்
கிழை நெகிழ் செல்ல லாரு மன்னுய் 25

தலைவி;

பாங்கியே பண்பு கெட்ட பரத்தையர் எவ்வாறு இததகைய இழி குணங்களை மேற் கொண்டனர். நல்லொழுக்க முடைய ஆடவர், அவர்தம் காதற் கிழத்தியரைப் பிரிந்து ஏன் பரத்தையர்பால் சென்று கிடக்கின்றனர். அதற்கான காரணம் யாது/

பாங்கி;

தலைவியே! நமது தமிழ் மொழி இயல், இசை, நாடக மெனும் முத்தமிழ் வகுப்புடையது. அவற்றில் , இசை, நாடகத் தமிழ் இரண்டும் இதயத்திற்கு இதமளிப்பன. அது மட்டல்ல, இன்ப உணர்வுகளைத் தூண்டுவன. தமி முணர்வை வளர்ப்பன. இத்தகைய இன்ப உணர்வுகளை மக்களுக்கு அளிக்க வல்லவர்களைப் பாணன், பாணினி, விறலர், விறலியர், மதங்கர், இசைஞர், நடன மாதர் என அழைப்பர். இவர்களுள் இசைவல்ல பெண்களும், நடன மாதர்களும் அக்கலைகளை குரு சிஷ்ட மரபில் இள மையில் இருந்தே பயின்று ஐயந்திரிபறக் கற்றவர்கள். தம்மை அவற்றிற்காக அர்ப்பணித்து வாழ்க்கையைக் கலைத் தாய்க்கே ஒப்புக் கொடுத்து வாழ்பவர்கள். அவர்கள் மணஞ் செய்வதில்லை. மகப்பேறடைவதில்லை. நாட்டிலும் ஆலயங்களிலும் உயர்ந்தோர் கூடும் அவை களிலும் வீடுகளிலும் நடக்கும் நற்றினப்போதில் நடன மாடி, இசை பாடி மகிழ்விப்பார்கள். இவற்றில் நாட்டம் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள்.

தமிழின்பம் நுகர விரும்பிய ஆடவர் இவர்தம் மனைகளுக்குச் சென்று அனுபவிப்பர். இந்தக் கலை இன்பம் நாளடைவில் அத்த கைய கலைஞர்களின் ஊதியத்தை ஒட்டி உறிஞ்சி வாழ்ப வர்களால் வணிகப் பொருளாக மாறிவிடுவதுண்டு. இதுவே பரத்தமையைத் தோற்றுவிக்குங் காரணியாகின் றது. பரத்தையரும் அவர் குலமும் வாழுஞ் சேரியும், வாழ்க்கை நெறியுந் தோற்றுவிக்கப்படுகின்றன. உனது தலைவன் தமிழின்பங் காண் வேட்கையுடையாரன்றித் தையலர் இன்பம் நுகரும் ஈனப் பிறப்பினர் அல்லர். எனவே இத்தகைய மன உறுதியுடன் இருப்பாயாக.

தலைவி;

பாங்கியே!

கரந்தையஞ் செறுவிற் றுணைதுறந்து கள்வன்
வள்ளை மென்கா லறுக்கு மூர
னெம்மும் பிறரு மறியா
னின்ன ளவை தெவன்கொ லன்னாய் 26

செந்நெலஞ் செறிவிற் கதிர்கொண்டு களவன்
றண்ணக மண்ணளைக் செல்லு மூரற்
செல்வனை நெகிழச் சாஅ
யல்ல லுழப்ப தெவன்கொ லன்னாய் 27

பாங்கி;

தலைவியே! உன்னையும் மற்றவர்களையும் தன் தகா ஒழுக்கத்தால் வருத்துகின்ற உன் தலைவனையிட்டுக் கவல்வதைப் பகர்ந்தனை. தான் தனது கத்திரி போன்ற கொடுக்குக் கால்களால் அறுத்து நாசஞ் செய்தவற்றைத் தன் வளையிடத்தே கொண்டு சேர்த்து வாழ்கின்ற கள்வனைப்போல, உன் கைவளை கலுழ வைத்திருப்பதையுங் கூறினை. தலைவியே! இளமையில் நாங்கள் இந்த ஓடையில் நீராட வருவதுண்டல்லவா? அப்போது வளைக்குள் ஓடிப் புகுந்து ஒளித்திருக்கும் இந்தக் கள்வனை வெளியே கொண்டு வர ஒரு தடியை உள்ளே நுழைப்போமல்லவா? கள்வனும் அதைப் பற்றிப்பிடித்து, தடியை வெளியே எடுக்கும்போது வெளியே வருமே!. அது போலப் பரத்தையர் வளைக்குட் புகுந்துள்ள உன் தலைவனும். உனதனதும் மைந்தரதும் பாசப் பற்றினால் விரைவில் வெளியே வந்து விடுவார். காலங் கனியும். அதுவரை காத்திரு அன்னாய்!

உண்டுறை யணங்கிவ ளுறைநோ யாயிற்
றண்செறு கள்வன் வரிக்கு மூரற்
கொண்டொடி நெகிழச் சாஅய்
மென்றோள் பசப்ப தெவன்கொ லன்னாய் 28

மாரி கடிகொளக் காவலர் கடுக
வித்திய வெண்முளை களவ னறுக்குங்
கழனி யூரன் மார்புற மரீஇத்
திதலை யல்கு னின்மகள்
பசலை கொள்வ தெவன்கொ லன்னாய் 29

வேப்புநனை யன்ன நெடுங்கட் கள்வன்
றண்ணக மண்ணனை நிறைய நெலலி
னிரும்பூ வுறைக்கு மூரற்கிவள்
பெருங்கவி னிழப்ப தெவன்கொ லன்னாய், 30

தலைவி;

தனகொரு தாய் கிடைத்தால், அவள் மடியிற் தலை சாய்த்துத் தன் துயரத்தைப் பகிர்ந்து பெறும் ஆறுதலையே தாய்மை அடைந்த எந்தவொரு தாயும் விரும்புவாள். அதுபோலத்தான் பாங்கி, உன்னை என் அன்னையாக எண்ணி எந்தன் துயரங்களைப் பகிர்ந்து கொள்ள அணைத்துக் கொள்கின்றனை, நீயும் என்னை உந்தன் அன்னையாகக் கொண்டு அணைக்கிறாய். ஆதரிகின்றனை. அதுவே எனக்கு ஆண்டவன் அளித்த அருங் கொடை. வேப்பம் அரும்பொத்த கண்களை மேலே உயர்த்திச் சுழற்றித் தன்னைச் சூழ்ந்து எண் திசைகளிலிலும் என்ன நடக்கின்றதென்பதைக் நண்டு களவாகக் கவனிக்கும். இதுபோலத்தான் கள்வன்மேல் உலகுயிர்க்கு உணவீயும் நெற் பூக்கள் உதிர்வதுபோல, உன் துயவு தலைவனுக்கு என்றும் உள்ளதால் அவனுக்கு கேடெதும் நடப்பதில்லை. ஆனால், என் அழகும் நலனும் இழப்பதாகச் சொல்லிய வாய்மை ஒரு தாய்க்கே உரிய தண்ணளி! இதனை என் வாழ்வில் எஞ்ஞான்றும் மறவேன்.

பாங்கி;

தலைவியே! இத்தகைத் துயரங்கள் தற்காலிகமானதே, உன் கணவன் இசையிலும், நடனத்திலும் இன்பங் காணும் விழைவுடைய நல்லொழுக்க முடையவனையிற், பரத்தையர் தம் இடையிலும் நளினத்திலும் மயங்கு பவனுக இருக்க மாட்டான். ஆதலால் அவர் விரைவில் வந்துன்னைச் சேர்வார்.

முன்னெழினி மூடுகிறது.

நாலாவது காட்சி நிறைவுறுகிறது.

காட்சி; *5*

களம்; இல்லத்து முற்றம்.

காலம்; உச்சிப்போதின் முன் வேளை

பாத்திரர்; சூத்திரதாரர், தலைவி, மக்கள் இருவர், தோழி

நிகழ்ச்சி;

பரத்தமைப் பொருட்டு தன்னை விட்டுப் பிரிந்த தலைவனையிட்ட தன் துயரத்தைப் பாங்கியுடன் பகிர்ந்து கொள்ளல்.

(தலைவி இல்ல முற்றத்தில், கவலையுடன்
வழிமேல் விழி வைத்து எதையோ எதிர்பார்த்திருக்கிறாள்.
குழந்தைகள் அருகிற் தம் பாட்டில்
விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.
தோழி கூடையில் ஏதோ எடித்தேந்தி வருகிறாள்.
அவள் அருகில் வந்ததைக்கூடக் கவனியாது
தன் கவனத்தை எங்கோ செலுத்திக் கொண்டு
இருப்பதைப் பார்த்து)

தோழி; தலைவியே!

(திடுக்குற்று எழ முயன்ற தலைவியின்
தோளைப் பிடித்து இருத்தி)

உனக்கு என்ன நடந்து விட்டது. பேயடித்தவள் போல இருக்கிறாயே! சமையல் செய்யும் நேரமாயிற்று. வெறிதே எதையோ பார்த்திருக்கிறாயே! நம்மூர் புது வாய்க்காலில் புதுப் புனல் ஓடுகிறது. என் தம்பி அங்கிருந்து அயிரை மீன் கொண்டு வந்தான். உன் கணவருக்குப் பிடித்த மீனையிற்றே என்று சில கொண்டு வந்தேன். அத்துடன் பிஞ்சு வழுதுணங் காயும் தும்பங் காயும் உள்ளன. எழுந்திரு. மதிய உணவிற்கு நேர மாகிறது. நானும் கூட ஒத்தாசை செய்கிறேன். சமையலைத் தொடங்கி.

(கண்களில் கண்ணீர் பொல பொலவெனக் கதிக்க)

தலைவி:

பாங்கி! இவை அவருக்குப் பிடித்தமான உணவுதான். ஆதலால். எனக்கும் மிகமிகப் பிடிக்கும். ஆனால்,

பிள்ளைகள் விரும்பமாட்டார்கள். அவர்களுக்கு என்று சில உணவுகளைத் தயாரித்து விட்டுத்தான் இங்கே வந்து இருக்கிறேன். நம் கவலை நம்மோடு. பிள்ளை களின் வயிறு அதை அறியுமா?

(தோழி கொண்டு வந்த பொரிடகளை உள்ளே எடுத்துச் செல்கிறாள். சென்றவள் திரும்பி வந்து)

தோழி;

இதென்ன புதுமை! தலைவியே . உள்ளே மரக்கறிகள் யாவும் சமைபடாது பழுத்தும், பழுதுற்றும், பதனழிந்துங் கிடக்கின்றன. ஏன்? நேற்று, முந்தை நாள் ஏதும் சமைக்க வில்லையா?

தலைவி; இல்லை.

தோழி; ஏன்.

தலைவி;

யாருக்காகச் சமைக்க வேண்டும். சமைப்பதை உண்ண யாருளர்? நானும் பிள்ளைகளுந்தானே!

தோழி; என்ன சொல்கினறனை. உன் தலைவன் எங்கே?

(தலைவி விம்மி அழுகிறாள். தோழி அருகில் வந்து, அணைத்து)

என்னதான் நடந்து விட்டது? வாய் மூடி விம்மினால் வார்த்தைகள் வெளி வராது. வாயைத் திறந்து சொல்.

தலைவி;

அம்ம வாழி தோழி மகிழ்நன்
கடனன் றென்னுங் கொல்லோ நம்மூர்
முடமுதிர் மருதத்துப் பெருந்துறை
யுடன் டாயமோ டுற்ற சூளே 31

அம்ம வாழி தோழி மகிழ்ந
ரொருநா ணம்மில் வந்ததற் கெழுநா
ளழுப வென்பவவன் பெண்டிர்
தியுறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே 32

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கைப் பூத்த பிழைக்கா லாம்பற்
முதேர் வண்ணங் கொண்டன
வேதிலா ளற்குப் பசந்தவென் கண்ணே 33

அன்றொரு நாள் புனலாடும்போது, உன்னை என்றும் பிரியேன் என்று சூள் உரைத்த தலைவன் இப்போது பரத்தையைப் பிரிந்து என்பால் வந்தால் அவள் ஏழு நாட்கள் அழுவாள் என்கிறார். அதுவே அவரை வருத்தும் ஆதலால் அவளைப் பிரிந்து வாராதிருப்பதே மேலென்பேன். இதுமட்டுமா அவர் பரத்தையருடன் புனலாடத் துறை புக்கால், அவரது மார்பைப் புல்லப் பலர் போட்டியிடுவார்களாம். இவற்றையெலாம கேட்கும் போது என் கண்ணில் ஆனந்தச் சிரிப்பின் மாரியையா எதிர் பார்க்கின்றனை.

தோழி;

தலைவியே, இவ்வாறு நீ கலங்குவதற்குக் காரணம் என்ன?. இத்தொடர்பு எவ்வாறு எங்கே நடந்தது சொல்வாயாக.

தலைவி;

தோழி! சென்ற வசந்தப் புதுப் புனலாட்டிற்கு அவரும் நானும் உயர்மருதத் துறைக்குச் சென்று. நீராடி, உண்டு உளம் மகிழ்ந்திருந்தோம். அவ்வேளை என் இளைய மகவு அழுதது. அதை அடக்க முடியாமற் திணறினேன். அத்தருணம் ஆங்கொருபால் நின்றிருந்த ஒரு ஆரணங்கு, பதுமையென நடந்து வந்து என் மகவைத் எடுத்துத் தன் மடிமீது வைத்துத் தாலாட்டுப் பாடி உறங்க வைத்தாள். அதன் பினனர் எனது முத்த மகளுடன் சேர்ந்து விளையாடினாள். அவளின் அங்க அசைவுகள் தேர்ந்த நடமாதின் நடன அசைவிலும் மிக்கதாகக் காணப்பட்டன. இலலத்திற்குத் திரும்பி வந்த அவர், அவள் பாடிய தாலாட்டில் இழையோடிய நீலாம்பரி இராகத்தையும் விளையாடிய போது வெளிக்காட்டிய நடன நளினங்களையும் புகழ்ந்து தள்ளினார். அதன் பின்னர் அவர் இரவில் நேரங்கழித்தே இல்லந் திரும்பும் பழக்கத்தைக் கைக்கொண்டார். அவர் ஒரு வேளை வயற் களத்துப் பணிகளில் ஈடுபட்டாரோ என நம்பினேன். ஆனால் வயற்களப் பணியர் அவரை இங்கே தேடி வந்த போதுதான் எனக்குச் சந்தேகந் தோன்றத் தொடங் கிற்று. அதன் பின்னர்தான் அவர் அந்த ஆற்றங்கரையில சந்தித்த ஆரணங்கில் வீட்டிற் தங்குகிறார்

என்ற உண்மையை உணர்ந்தேன். இப்போது;

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கைப பூத்த புழைக்க லாம்பற்
முதேர் வண்ணங் கொண்டன
வேதிலா ளற்குப் பசந்தவென் கண்ணே 34

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கை யாம்ப னுருரி மென்கா
னிறத்தினு நிழற்றுதன் மன்னே
யினிப்பசத் தன்றென் மாமைக கவினே 35

அம்ம வாழி தோழி யூர
னம்மறந் தமைகுவ னுயி னுமறந்
துள்ளா தமைதலு மமைகுவ மன்னே
கயலெனக் கருதிய வுண்கண்
பசலைக் கொல்கா வாகுதல் பெறினே 36

ஆம்பல்போல என் கண்கள் பசந்தன, மேனி வனப் பிழந்தது, கயற் கண் என்று பலரும் பாராட்டிய என் விழிகள் பசந்து தளர்ந்தன. இந்நிலை யென்று மாறுமோ தோழி. இதனை மாற்ற வழி என்ன தோழி. அவையே உன் மறுமொழியாக இருப்பின் நான் மகிழ்வேன்!

பாங்கி;

தலைவியே கவலற்க. மருத நிலமெங்கும் வானத்தை மறைத்து நிற்பது தெங்கு. அது உரிய பருவம் எய்தியதும் பாளை ஈனும. ஆம்! தோழி, அது பாளை பூப்பதில்லை, உயிரினங் கன்று ஈனுவதுபோல பாளைதான் ஈனும். குட்டி போடுவது போல பாளைதான் போடும். இது மரபு, அதை மேலே பாளை எனும் கடின உறை மூடிக் காக்கும். பாளை வெடித்து, அதனுள் அடங்கி இருக்கும் பூ நெட்டியின் மகரந்தத்தால் குரும்பட்டிகள் சூலுற்றுக் குரும்பை, இளநீர், கலட்டிக் காய், தேங்காய், முற்றிய நெற்று என்ற முதிர்நிலை அடைந்ததும், நெட்டியை விட்டு வீழும். அதுவரை, பாளை அதன் உள்ளே இருந்த பூ நெட்டி யையும், தேங்காய்க் குலையையுங் காத்து மேலே குடை விரித்தபோலக் காக்கும். அதன் பின்னும் அது தென்னை வட்டை விட்டுப் பிரிந்தாலும், பூக்க நெட்டியுடன்தான் ஒட்டிக் கொண்டிருக்கும் இயல்புடையது. அதுபோலத் தான், கணவன் எனும் பாளையும் மனைவி எனும் பூநெட்

டியும் குடும்பம் எனுந் தேங்காய்க் குலையைக் காத்துப் பேணும். அதுபோல உன் கணவனுக்கும் உனக்குமுள்ள அடியுறவுப் பந்தம் என்றும் மாறுதது. ஆகவே கவலே வேண்டாம். விரைவில் உன் கணவர் உன்னிடம் வந்து சேர்வார் என நம்புக..

தலைவி;

என்ருலுந் தோழி; இசையிலிம் நடனத்திலும் ஈடுபாடுள்ள என் தலைவன் அத்திடன் நிற்பாரா அல்லது....

அம்ம வாழி தோழி மகிழ்ந
னயந்தோ ருண்கண் பசந்துபனி மல்க
வல்லன் வல்லன் பொய்த்த
றேற்ற னுற்ற சூழ்வாய்த் தல்லே 37

அம்ம வாழி தோழி மகிழ்நன்
றன்சொல் லுணர்ந்தோ ரறியல னென்றுந்
தண்டளிர் வெளவு மேனி
யொன்டொடி முன்கை யாமழப் பிரிந்தே 38

அம்ம வாழி தோழி யூரன்
வெம்முலே யடைய முயங்கி நம்வயிற்
றிருந்திழைப் பகணத்தோண் ஞெகிழப்
பிரிந்தன னுயினும் பிரியலன் மன்னே 40

அம்ம வாழி தோழி மகிழ்ந
ஞெண்டொடி முன்கை யாமழப் பிரிந்துநன்
பெண்டி ரூரிறை கொண்டன னென்பர்
கெண்டை பாய்தர வவிழ்ந்த
வண்டிபிணி யாம்ப னுடுகிழ வோனே 40

இவ்வாறு நான் கவல்வதையும் கண்ணீர் சொரிவதையும் அவர் அறிந்தால், அந்தப் பரத்தையை விட்டு இங்கு வரா திருப்பாரோ? பாங்கி! அவர் எங்குளார், என்ன செய்கிறர், எப்படி இருக்கிறர் என்பதை அறிந்து, அவர் தன் நடத் தையில் உள்ள தவறுகளே உணர்த்தி என் குடும்பப் பந்தத்தில் இசையும் நடனமும் எழுச்சியுறக் காப்பாற்ற மாட்டாயா?

சூத்திரதாரன் முன்னுல் வந்து;

மருதத் திணை பாடிய ஒரம்போகியார் தான் பாடிய பத்துகள் எல்லாவற்றிலும் பரத்தமையைக் கருப் பொருளாகக் கொண்டே பாடி உள்ளார். ஆயினும் இந்தப்

பரத்தமையின் பண்புகளையும் அவற்றின் வேறுபட்ட பல நிலைகளையும், ஒவ்வொன்றிலும் வேறுபடுத்திக் காட்டி உள்ளார். இதுவரை நாம் பார்த்த நான்கு பத்துகளில், முதலாவது பத்தில் ஒரு பெண் தன் தலைவனின் தவறை மன்னிக்க மனதற்றவளாக அதே நேரம் குடும்பஞ் சிதை யாது இருக்கத் தக்கதாகத் தூரத்தின் பின் தாயாகின்றாள். இரண்டாவது பத்தில் பரத்தமை வேழச் செடி போன்றதாக இல்லற வாழ்க்கையை மூடி மறைக்கப் பார்க்கிறது. இந்தப் பரத்தமை சமூகத்திற் எவ்வாறு தோன்றுகிறது என எண்ணுந் தலைவி, அதற்குக் காரணம் ஆடவரே என எண்ணிப் பரத்தமைபாற் சென்ற தன் தலைவனுக்கு இந்தப் பரத்தையரைக் குடும்பத் தலைவிகளாக்குந் தொண்டைச் செய்து வந்த பினனரே தான் ஏற்றுக் கொள்வதாகத் திடங் கொள்கிறாள். மூன்றுவதி பத்தில் வருந் தலைவி தன் கணவன் இசையையும் நடனத்தையும் நுகர்வதற்காகவே பரதத்தையர் இல்லஞ் சென்றிருந்தால், மன்னித்து ஏற்கும் கலையைப் போற்றும் நிலையில் உள்ளாள். நாலாவது பத்தில் பர்ததமை உடலொடு சம்பந்தப்பட்டதே அன்றி உள்ளத்தோடு இணைப்புள்ள தல்ல என்ற முடிவில அவனை ஏற்றுக் கொள்ள இசைகிறாள். மற்றப் பத்துக்களில் மாதர்தும் மன நிலையும் சமூக நிலையும் எவ்வாறு அமைந்துள்ளன எனப பார்ப்போம். இந்தப் பத்தில் ஆம்பல் மருதம் ஓரம்போகியார் எடுத்தாண்டு உள்ளதால் இதனை ஆம்பற் பத்து எனது விடுத்துள்ளமைக்குக் காரணம் புரியவில்லை. வணக்கம்.

முன்னெழினி அரங்கை மூடுகிறது
ஐந்தாவது காட்சி முழுமையுறுகிறது.

காட்சி; 6

களம்; தலைவியின் இல்லம், பரத்தையின் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்;

சூத்திரதாரன், கிண்டலார், தலைவன், தலைவி, பாங்கி, பாணன், பரத்தை, அவளின் தோழி

நிகழ்ச்சி;

தலைவியும் தன் தலைவன்பால் புலவி கொள்கிறாள். அதுபோலப பரத்தையும் அவன்பால் புலவி கொள்கிறாள். இதற் கிடையில தலைவன் அகப்பட்டு உழல்கின்றான். தலைவி, அவன் ஒழுக்கத்தின் பொருட்டு அவனைக் காண விரும்பாத நிலை உணர்த்தப்படுகிறது.

சூத்திரதாரர்;

வணக்கம். பரத்தமைக்குக் காரணம்; இசையிலும் நடனத்திலும் ஒரு ஆடவன் கொள்ளும் ஈடினையற்ற நாட்டமே காரணம் என்பர்.

கிண்டலார்;

ஆம் அய்யா. இதைக் கருவாகக் கொண்டதுதானே, சிலப்பதிகாரத்தை இளங்கோ அடிகள் இயற்றினார், மணிமேகலையை சீத்தலைச் சாத்தனார் பாடினார். பெருங் கதையைத் திருத்தக்க தேவரும் சீவகசிந்தாமணியை கொங்கு வேளிரும் பாடினார்கள். இவற்றின் கதா நாயகர்களின் வீழ்ச்சிக்கு இசையும் நடனமுங் காரணமாயின என்பதைச் சுட்டிக் காட்டி சிற்றின்ப உணர்வை மக்களிடம் இருந்து அகற்ற முயன்ற பௌத்தர்கள், சைனர் இவற்றைப் பாடினர் என்பதால் அறியக் கிடக்கின்றது. ஆனால்; சிலம்பின் பயன் என்ன வாயிற்று? கண்ணகி என்பாளின், தாரணி ஆள் வோரை இருந்தாலும் தவறு செய்தால் தட்டிக் கேட்டுத் தண்டிக்கும் தமிழ்க் குலப் பெண்ணின் மனத் திட்பத்தை உணர்த்தும் தமிழ்க் காவியமாயிற்று...

சூத்திரதாரர்;

கிண்டலாரே! போதும். பொதும் உம் போதனை! ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோற்றவிழ் பதமென்பதை அறியாயா? ஏனையவற்றின் போக்கினைப் புரிந்து கொளாத்

தமிழருந் தமிழரா. அப்படி இருந்தால் ஏன் மன்னர்களின் தயவில் வளர்ந்த சைனமும் பௌத்தமும் அழிந்தன. முப்பொருள் துய்த்த பின்னரே நாலாவது பொருள் முத்திக்கும் என்ற தத்துவத் தமிழ் மறையும் நெறியும் ஓங்கி வளர்ந்திருக்குமா? ஆதலால் அதை விடுத்து, நாம் எடுத்துக் கொண்ட பரத்தமைபற்றியே பேசுவோமே அன்பர்களே! இந்தப் பத்திலும் மருதத்தின் பரத்தமையும், அதனுலாம் புலத்தலும் கூறப்படுகின்றனவே தவிர திணைக்குரிய கருப் பொருள்கள்பற்றி பா வரிகள் செப்பினும் அவற்றின் பெயரால் பெயரிடப்படவில்லே. இது ஒரு ஆய்வுக் குரிய பொருள். பாக்களைத் திரட்டித் தொகுத்தவர்கள் ஏன் இவ்வாறு செய்தனர் என்று புரியவில்லே. தமக்கொவ்வாத நிகழ்வுகளைத் தாங்க முடியாத தருணத்திற்தான் பிணக்குகள் உண்டாகும். அந்தப் பிணக்கே ஊடலாகும். ஊடலின் வெறுப்பு நிலேப்பாடே புலத்தல். அந்த நிலே இங்கு வாழ்க்கை உரித்துடையவளிடமுந் தோன்றும். இடையிற் புகுந்த இல்லாளில்லாத இல்லாளிடமுந் தோன்றும். ஆயினும், இவற்றிற்கிடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன அவை எவையெனக் காட்சிப் படுத்தும் நாடகப் பகுதியே இதுவாகும்.

(சூத்திரதாரனும் கிண்டலாரும் மறைய,
இல்லத்தின் தூணில சாய்ந்து, கவலேயுடன் இருக்கும்
தலேவியிடம் வந்த தோழி:

தலேவியே! ஏன் கவலேப் படுகின்றனே. இவ்வாறு இருப்பின், உன் கவினழியும். அதுவே உன் தலேவனே ஆட்கொண்டு ஆட்டிப் படைக்கும் பரத்தைக்குச் சாதகமாகிப் போகாதா/

தலேவி;

தன்பார்ப்புத் தின்னுமன்பின் முதலேயொடு
வெண்பூம் பொய்கைத் தவனூரென்ப வதனுல்
தன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்பொற் செய்யு மூர்கிழ வோனே 41

பாணனே, ஒருத்திக்குரிய ஒருவனேப் பறித்தெடுத்த பரத்தையே, அவன் வேறு பரத்தையர்பாற் செல்கின்றுன்

எனப் புலக்கின்றுளாமே! அதனல் இப்போது என்னில் லத்தை நாடி வந்துளன் என்று அறிகிறேன். பாணனே, தனக்கே உருத்தில்லாத ஒரு பொருளைத் தனதென்று உரிமை கொண்டாடுபவளுக்கே அந்தப் பொருள் மீது வேறொருவர் உரிமை பாராட்டுங்கால் இவ்வண் ஆத்திரம் வருமானல், எனக்கே உரியதை இழந்து நிற்கும் எந்நிலை எத்தகைத்து என எடுத்துச் சொல்வது உனக்கு நியாயமாகப் படவில்லையா?

அம்பணத் தன்ன யாமை யேறிச்
செம்பி னன்ன பார்ப்புப்பல துஞ்சும்
யாண ரூர நின்னிலும்
பாணன் பொய்யான் பலசூ ளினனே 43

அது மட்டல்ல பாண! தானியம் அளக்கும் மரக்கால் வடிவான ஆமையும் தன் பார்ப்பை உண்ணும் முதலை வாழ் தடாகத்திற்தான வாழ்கின்றது. அதன் குஞ்சுகளைப் பார்த்தாயா? தாயினது முதுகில் சிறிய செம்புகளைக் கவிழ்த்தாற்போல ஏறித் துயில்கின்றன. என் நம்பிக் கையில் நீ என் தலைவனிலும்ம் பார்க்கப் பொய்யுரைக்க மாட்டாய் என்று நம்புகிறேன். எனெனில் எனது தலைவனே தருணத்திற்கேற்பப் பல சூழ்களை உரைப்பதிற் கைதேர்ந்தவன்.

(இத்தருணத்தில் தலைவன் வருவதைப் பார்த்த தோழி அவனிடம்)

திம்பெரும் பொய்கை யாமை யிளம்பார்ப்புத்
தாய்முக நோக்கி வளர்ந்திசி னுஅங்
கதுவே யையநின் மார்பே
யறிந்தனை யொழுகுமதி யறனுமா ரதுவே 44

தலைவனே! உனது ஊர்த் தடாகத்தின் ஆமையின் பார்ப்புகள் அவற்றின் தாயின் முகத்தைப் பார்த்தே வளர்வதுபோல நின் மைந்தர்களுமா வளர வேண்டும். இதுதான் உனது அறநெறியா தலைவனே!

கூதி ராயிற் றண்கலிழ் தந்து
வேனி லாயின் மணிநிறங் கொள்ளும்
யாறணிந் தன்றுநின் னூரே
பசப்பணிந் தனவான் மகிழ்நவென் கண்ணே 45

தலைவனே! கூதிர் காலத்தில் கலங்கி, வேனிற் காலத்திற் தெளியும் ஆறு உந்தன் ஊரிற்தானே பாய்கிறது. எனது கண்கள் என்றுமே பசப்படைவன வல்ல. அனால் உன் தலைவியின் கண்களோ....

நினக்கே யன்ற.: தெமக்குமா ரினிதே
நின்மார்பு நயந்த நன்னுத லரிவை
வேண்டிய குறிப்பினே யாகி
யீண்டுநீ யருளா தாண்டுறை தல்லே 46

பாங்கி;

மேலும் ஒரு வார்த்தை தலைவா! உந்தனைக் கவர்ந்த அழகிய நுதலையுடைய பெண்ணின் குறிப்பறிந்தே உன் தலைவியிடம் வந்துள்ளனை . அததகை அருளுடையாய், உன் தலைவியின் குறிப்பறிந்து ஏன் உந்தனால் பரத்தைபால் போகாதிருக்க இயலாது போனது? இது ஓரவஞ்ச நியாயந்தானே! சரியான முடிவை எடுக்க வேண்டியது உங்களுக்கு மாத்திரமல்ல எங்களுக்கும் இனியதே!

(பாணன் தலைவி நிற்கும் இடத்திற்குச் சென்று)

பாணன்;

தலைவியே! நடந்தது நடத்து விட்டது. அதற்கு என்ன செய்யலாம். ஒன்றுமே செயய முடியாது. ஆனால், நடந்ததை ஓர் கெட்ட கனவாக நினைத்து தலைவனை மன்னித்து ஏற்றருள்க.

தலைவி; பாண!

முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த
வகன்பெரு வட்டி நிறைய மனையோ
ளரிகாற் பெரும்பயறு நிறைக்கு மூர
மாணிழை யாய மறியுநின்
பாணன் போலப் பலபொய்த் தல்லே 47

வலிவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுண் மனையோள்
யாண்டுகழி வெண்ணெ னிறைக்கு மூர
வேண்டெம் பெரிமநின் பரத்தை
யாண்டுசெய் குறியோ டீண்டுநீ வரலே 48

அஞ்சி லோதி யசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்

யாண ரூரநின் பாண்மகன்
யார்நலஞ் சிதையப் பொய்க்குமோ வினியே 49

பாங்கி:

தலைவியே நன்று மொழிந்தனை. பாணனே, தலைவி சொன்னதின் உட்பொருளை உணர்ந்திலையோ? நெய்தல் நிலத்தில் வாழும் கூரிய பற்களையுடைய உன் மனைவியின் கூடை நிறைந்த கெழிற்று மீன்களுக்கு விளைந்த பயிறையும், வரால் மீன்களுக்கு வெண் நெலலையும், சிறுமீன்களுக்கு பன்னெல்லையும் பண்டமாற்றுச் செய்யும் என் தலைவியைப் போன்ற குலமாதர் வாழும் ஊரின் நின் ஆயத்தாரும் நீயும் பலகால் பொய்த்தவர்களாவீர். அதுபோல உங்களுடன் இணைந்துள்ள உன் தலைவன் கூற்றும் அத்தகைத்தே என்கிருள். அதைக் கேட்ட பின்னரும் ஏன் இங்கே நிற்கிறீர்கள்.

(தலைவனைப் பார்த்து)

துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்
வஞ்சி யோங்கிய யாண ரூர
தஞ்ச மருளாய் நீயேநின்
னெஞ்சம் பெற்ற விவளுமா ரழுமே 50.

பாணன்;

தலைவா. தலைவி கூறியதையும், அதைத் தொடர்ந்து பாங்கி இறுதி உரையாகக் கூறியதையும் கேட்டனை. அதிலி ருந்து இன்னும் பரத்தையை உந்தன் மனதில் தனக்குச் சமதையாக எண்ணுகின்றனை என்பதை உணர்த்தி விட்டாள், உன்னுல் தலைவி அழுவாள், பரத்தையும் அழுவாள் அதனுல் உனக்கி மன ஆறுதலே கிடையாது. என்ன செய்ய வேண்டுமென்பதை நீயே முடிவு செய்க

பாங்கி;

ஆம், முடிவு எத்தகையதாக இருந்தால் உனக்கு எஞ் ஞான்றும் நலன் தரும் என்பதற்குத் தலைவி சொன்ன எடுத்துக் காட்டுகளே வழி காட்ட வல்லன. கெழிறைக் கொடுத்துப் பயறும், வராலைக் கொடுத்தி வெண்ணெலும், சிறு மீன் கொடுத்துப் பன்னெல்லும் பெறுகின்ற பண்ட மாற்றுடன் பரத்தமை வாழ்வையும் நினைவிற் கொள்க.

முன் எழினி அரங்கை மூட
ஆறுவது காட்சி நிறைவுறுகிறது.

காட்சி; *7*

காலம் ; மாலை

களம்; இல்ல முற்றம்

பாத்திரர்கள்; தலைமகன், தலைமகள், பாங்கி. சூத்திரதாரன்,

நிகழ்ச்சி;

பரத்தைபாற் சில காலம் தங்கிய தலைவன் இல்லந் திரும்புகிறான். அவனைக் கண்ட தலைவி தன் பாங்கியிடம் திருப்பி அனுப்பி விடுமாறு கேட்கிறாள். பாங்கி அவன் தவறை எடுத்துச் சொல்கிறாள். தலைவன் பாங்கியிடம் வாயில் வேண்டுகிறான். தலைவி மறுத்துரைக்கிறாள்.

சூத்திரதாரன்;

வணக்கம் அவையோரே. சங்க கால நூல்களுள் எட்டுத் தொகையில் மூன்றுவதான ஐங்குறு நூற்றுப் பாடல்களை, நாடக வடிவில் ஆய்வுப் பார்வை பார்க்கும் நிகழ்வில் மருதத்தில் தோழி கூற்று எனும் ஆறுவது பத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். ஐங்குறு நூற்றுப் பாடல்கள் இலகு தமிழால் ஆன இனியவை. இடைக் கிடை அளபெடை ஓசையால் இசை மலியச் செய்வது. பொதுவாக, மருதத் திணைக் கருப் பொருட்களை எடு கோளாகக் கொண்டு இயல்வன. தலைவனின் குண நலன்களை அவனது ஊரின் கருப் பொருட்களைக் கொண்டே விளக்குவன. ஒவ்வொன்றுந் தனிப்பாடல் அமைப்புள்ளன. நாடக ஆக்கத்திற்காக குளகப் பாடல்களாக இணைத்து நிகழ்வை முன்னெடுத்துச் செல்கின்றோம். இத்தகைய பொது விதிகளை மனதிற் கொண்டு இவ்வரங்கிற் காட்சிப்படுத்தப்படும் நாடகங்களைக் கண்டு களிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொண்டு நாடகத்தை ஆரம்பித்து வைக்கிறேன்.

(தலைமகள் தன் குழந்தைகளுடன் வாசலில்
நின்று கொண்டிருக்கிறாள், பரத்தை வீட்டிற்
தங்கி இருந்த தலைமகன் திரும்பி வருகிறான்.
அவனைக் கண்டதும் தலைவி பாங்கியை அழைத்து)

தோழி. யாரோ ஒருவர் என் தலைவரைத் தேடி வீட்டிற்கு வருகிறார். என்ன காரியமோ தெரியாது. தெரிய வேண்டிய அவசியமும் நமக்கில்லை. அவர் இங்கில்லை. எங்கோ தூர

தேச யாத்திரை போய் விட்டார். அதைவிட வேறு எந்த விபரமுந் தெரியாது என்று சொல்லி அனுப்பி விடு.

இதைக் கேட்ட தலைவன் வெட்கித் தலை குனிந்து நிற்கிறான்.
அவள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு
இல்லத்துள் புகுந்து கொள்கிறாள்.
பாங்கி தலைவியின் மன நிலையைப் புரிந்து கொண்டவளாக,
அவனண்டை சென்று;

நீரிறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅ மூர
புளிங்காய் வேட்கைத் தன்றுநின்
மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே 51

வயலைச் செங்கொடிப் பிணைய றைஇச்
செவ்விரல் சிவந்த சேயரி மழைககட்
செவ்வாய்க் குறுமக ளினைய
வெவ்வாய் முன்னின்று மகிழ்நநின் றேரே 52

துறையெவ னணங்கும் யாமுற்ற நோயே
சிறையழி புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும்
பழன வூர நீயுற்ற சூளே 53

தலைவனே, உந்தன் ஊர்த் தடாகத்தில் வாழும் நீர்க் கோழிப் பேடை கூட தன் கர்ப்ப காலத்தில் சேவலை நினைத்துத் தன் வயா நோயை அகற்றும் என்பர். ஆனால் எங்கள் தலைவியோ புளியங்காயை உண்டு வயா வகற்றிக்கொள்ளும் அளவுக்கு நீ நடந்துகொள்கின்றனை. தன் பசலை நோயால் சிவப்பேறிய விரல்கள், கண்கள், வாய் கொண்ட தலைவியின் முற்றத்தில் உங்களின் தேர் ஏன் நினறதோ? அணை கடந்த ஆற்றுநீர் பரந்துபரப்பதால நெல் விளையும் வயல் நிலத்திலுந் தாமரை மலர்கின்ற நாடனே! நீங்கள் பரத்தையுடன் புனலாடிய செய்தி தலைவியை வருத்தவில்லை. அன்றொரு நாள் பிறரோடாடேன் என உரைத்த சூழ் பொய்த்ததுதான் மிகமிக அவளை வருத்துகிறது.

தலைவன்;

தோழி! பாடிக் காட்டியும அதற்குப் பயனுரைப்பதிலுமே அதிக நாட்டங் கொண்டுள்ள உனக்கு இந்த இல்லத்திற் சொந்தக்காரன் வாசலில் அந்நியன்போல நிற்பதை உணரக் கூட முடியவில்லையா?

(மனைக்குள்ளிருந்து தோழிக்குச் சொல்வதுபோல)

தலைவி;

தோழி! நமது இல்லத்தின் வடமேற்கு மூலையில் நமது என்று ஒரு பனையுந் தெங்கும் வளர்த்தோமே, அதில் அந்தத் தெங்கு முடங்கி அயல் நிலத்திற் சரிந்து தனது அடியை எம் நிலத்திலும் பரந்த வட்டைப் பிறர் நிலத் திலும் பரப்பித் தன் பயன் யாவற்றையும் பிறர்க்குத் தருகி றதே. அதிலே தாவிச் செல்லும் மந்தி நம் குழந்தைகளுக்கு அச்சம் ஊட்டுகின்றன. அதை துரத்த விட ஆவன செய்.

பாங்கி;

தலைவனே! என் தலைவி உன்பாற் கொண்டிருந்த பற்றெலாம் துறந்தாள்போலும். ஆகவேதான் அவளின் மனம் இவ்வாறான வார்த்தைகளை வாய்வழியாக ஊதித் தள்ளுகிறது;

திண்டேர் தென்னவ னன்னாட் டுள்ளதை
வேனிலாயினுந் தண்புன லொழுகும்
தேனூ ரன்னவிவ டெரிவளை நெகிழ
வூரி னூரனை நீதர வந்த
பஞ்சாய்க் கோரை மகளிர்க்
கஞ்சுவ லம்ம வம்முறை வரினே 54

கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிற்றுந்
தேர்வண் கோமான் றேனூ ரன்னவிவ
ணல்லணி நயந்துநீ துறத்தலிற்
பல்லோ ரறியப் பசந்தன்று நுதலே 55

பகல்கொள் விளக்கோ டிராநா ளறிய
வெல்போர்ச் சோழ னுறை ரன்னவிவ
ணலம்பெற சுடர்நுத றேம்ப
வெவன்பயஞ் செய்யுநீ தேற்றிய மொழியே 56

பகலிற் றேன்றும் பல்கதிர்த் ஞாயி
னும்பலஞ் செறுவிற் றேனூரன்ன
விவணலம் புலம்பப் பிரிய
வகனநல முடையளோ மகிழநநின் பெண்டே 57

நான் இதுவரை செப்பியவை நின் செவி கொண்ட னையோ தலைவா; கொண்டிருந்தாலும் அவற்றில் உனக்கு என் தலைவியின் சார்பிற் சிலவற்றை மீண்டுஞ் சொல்கின்றேன். அவற்றை நின் மதிக்கு உணவாகக்

அது

கொளாவிடினும் செவிக் குணவாகவாவதுகொள்க. நீர் வேண்டி நிற்கும் வாயிலே ஏற்க, என்னுல் முடியாதுளது. காரணம்;

உங்கள் நாட்டிற் கடும் வேனிற் காலமாக இருந்தாலும் குளிர்ந்த புனல்கள் பாய்ந்து வெப்பத்தைத் தணிக்கு மாமே! அப்படி இருந்தும், என் தலைவியின் பருவத் திற்கும், வளர்ச்சிக்குந் தக்கதாகத் தெரிந்து வாங்கி அணிந்த வளைகள் நெகிழ்கின்றதே . அதற்குரிய காரணத்தை அறியும்வரை நீங்கள் அவளுக்குப் பரிசாகக் கொண்டு வந்த தண்டான் கோரைத் தொடையலே எப்படி ஏற்பேன். ஏற்பின் அவள் சினப்பாளே. உன் நாட்டில் உள்ள கரும்பாலைகளின் இயந்திர இரைச்சல் யானை களின் பிளிறலிலும் பார்க்க அதிகரித்த வளமிருந்தும், உன் தலைவி பசந்த காரணத்தைச் சொல்வாயா? ஒரு போதும் மெலிவடையாத தலைவியின் நெற்றி வாடிய காரணத்தையுஞ் சொல்க. பகல்போல இரவில் ஒளிரும் யாக எரியும் ஆம்பல் மலர்களும் போல விளங்கிம் உந் தலைவி வாடுதற்குக் காரணம் உமது பிரிவே. அத்தகைப் பிரிவுக்குக் காரணமான பரத்தை அவ்வளவு அழகு வாய்ந்தவளோ? தலைவா இவற்றிற்குப் பதில் என்ன என்பதைச் சொல்வாயா?

தலைவன்;

பாங்கி! சுற்றியுஞ் சுழன்றும் ஒரே இடத்திற்குத்தானே உன்னுல் வர முடிகிறது. நடந்த காரியத்தை எதற்காக மேலும் மேலுங் கிண்டிக் கிழற வேண்டும். நான்தான் அவற்றையெலாந் தூரத் தூக்கி வீசிவிட்டு வந்து விட்டேனே! நானே வந்த பிறகு எதற்கு இந்த விசாரணைகள்?

(தலைவியின் குரல்)

பாங்கி, பகலவன் வந்தபோதும் இந்த மனை இருட்டாகவே இருக்கிறதே! அதற்குரிய காரணத்தை அறிந்து ஒளியேற்றும் மார்க்கம் வேறேதும் உளதோ?

(பாங்கி தலைவனைப் பார்த்து)

தலைவா, எங்கள் தலைவி பகலில் இருட்டென்கிருள். ஆதவன் வந்தும், அந்தகாரம் என்கிருள். நான் போக

வேண்டும். அதற்கு முதல் மேலும் சில வார்த்தைகள் செப்புவேன் செவி மடுப்பீர்களா?

விண்டு வன்ன வெண்ணெற் போர்விற்
கைவண் விராஅ னிருப்பை யன்ன
விவளணங் குற்றனை போறி
பிறர்க்கு மனையையால் வாழி நீயே 58

கேட்டிசின் வாழியோ மகிழ்ந வாற்றுற
மைய னெஞ்சிற் கெவ்வந் ஞீர
நினக்குமருந் தாகிய யானினி
யிவட்கு மரிநதன்மை நோமென் நெஞ்சே 59

பழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவும்
கழனி யூரநின் மொழிவ லென்றும்
துஞ்சிமனை நெடுநகர் வருதி
யஞ்சா யோவிவ டந்தகை வேலே 60

தலைவனே! களவியல் காத்த காலத்தில், நான் உங்களுக்கு உரைத்த ஒரு சேதியை இப்போது நினைவிற்குக் கொண்டு வருகிறேன். வயலில் வாழும் சம்பங் கோழி தன் பெடையை ஓர்வித ஒலி எழுப்பி அழைக்கும் ஊரவன் நீ. அப்படி இருந்தும் யாவரும் உறங்கும் வேளை பார்த்து, இவளைக் காண வருகிறாயே. இவளுடைய தந்தையின் கை வேல் அச்சத்தை ஊட்டவில்லையா என்றேன்.

இன்றோ; அவளுடன் முன்னொருகால் பிணங்கியபோது உம் வருத்தத்தைப் போக்கும் மருந்தாக இருந்த நான் நீ இவளுக்கு ஏற்படுத்திய பிரிவுப் பிணியை அகற்றித் தேற்ற முடியாமல் வாடுகின்றேன்; வெண்ணெற் போர்கள் நிறைந்த ஊருடைய விரான் என்பவனைப்பற்றிக் கேள்விப் பட்டுள்ளாயா. அத்தகைய நலமிக்காள் எங்கள் தலைவி. அவளைத் துயரமடையச் செய்வது போலத்தான் பிறரிடனும் நடந்து கொள்கின்றனையா? அவ்வாருனல், வாழ்க என்பதைத்தான் என்னற் சொல்லமுடியுமே தவிர வாயில் தரும்படி தலைவியை எவ்வண் கேட்பேன்!

தலைவன்;

அவ்வாருயின் நான் திரும்பிச் செல்ல வேண்டியதுதானு? இதுவா உங்கள் இருவரதும் முடிவு? .

பாங்கி;

தலைவனே! இது என் முடிவல்ல. தலைவி நீ இங்கு வருவதைக் கண்டும் காணாதிருக்கிறாள், அவள் உன்னை ஏற்றுக் கொள்ளத் தக்க முறையில் வருவாயின் என்னிடம் வாயில் வேண்டிய தேவையே இராதே

(என்று சொல்லி மகளுட் புக தலைவன் வந்த வழியே திரும்பிச் செல்கிறான்)

முன்னெழினி மறைக்கிறது.
ஏழாவது காட்சி முற்றும்

காட்சி; 8.

களம்; ஒரு இல்லத்தின் வாசற் பக்கம்

காலம்; காலை

பாத்திரர்கள்;

சூத்திரதாரன், கிண்டலார், தலைவன், தலைவி, தோழி, பாங்கன், வயற்களப் பணி செய்யும் மூதாட்டி.

நிகழ்ச்சி;

பரத்தையர் பால் செல்லுந் தலைவனைப்பற்றிய அலரும் அவதூறும் அதிகரிக்கின்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் வயற் களத்தில் பணி செய்யும் மூதாட்டி தானறிந்தவற்றைத் தலைவியிடம் கூறுகிறாள். அதைக் கேட்டு மனம் வெதும்புந் தலைவியின் இல்லத்திற்குத் தலைவன் தன் பாங்கனுடன் வருகிறான். தலைவி பிணங்கி அவனுடன் பிணக்குறுகிறாள், ஊடல் கூடலில் முடிவது இயல்பு. இங்கே அது வேறு ஒரு நிலை கொள்கிறது.

அரங்கில் சூத்திரதாரன் தோன்றுகிறான். அப்போது அங்கே வந்த கிண்டலார்:

அய்யா வணக்கம்.

சூத்திரதாரன்;

எங்கே ஆளையே காணோம் என்று இருந்தேன். நேற்று எங்கே போயிருந்தீர்?

கிண்டலார்; எங்கும் போகவில்லை. இங்கேதான் இருந்தேன்.

சூத்திரதாரன்; என்ன சொல்கின்றீர். இங்கே இருந்தீரோ.

கிண்டலார்;

ஆமாம் அய்யா. அரங்கின் பின்னால் அமர்ந்து நாடகத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டுதான் இருந்தேன். அய்யா! ஒரு ஐயம்.

சூத்திரதாரன்; புதிதாக என்ன ஐயம் ஏற்பட்டதோ . புகல்க,

கிண்டலார்;

புகல்கின்றேன் அய்யா. புலவர் ஓரம்போகியார் மருதத்திணை பாட வந்ததும் வந்தார். ஓரே போடாப்

போடுகிருரே. பரத்தமை பற்றியே கடந்த ஆறு பத்துக்களிலுஞ் சொல்லி விட்டார். இந்த ஏழாவது பத்திலும் அந்த ஏழரைச் சனியன்தான் இடம் பெறுமோ?

சூத்திரதாரன்;

ஆமாமாம். கடந்த பத்து தோழி கூற்றுப் பத்து. இது கிழத்தி கூற்றுப் பத்து. கிழத்தி என்ருல் தலைவி என்பது பொருள், இல்லக் கிழத்தி என்பதுபோல.....

கிண்டலார்;

மருதத் திணை எனின் ஒரே பயமாக இருக்கிறது. இங்கே ஒருவனுக்கு ஒருத்தி என்ற வள்ளுவம் வழுக்குகிறதே. ஏன் அய்யா! உண்டி கொடுத்து உயிர் காக்கும் உழவர் ஏன் இந்தப் பெண்டிர் சமாச்சாரத்துள் வீழ்ந்து விடுகிறர்கள்! இதற்குக் காரணம் என்ன? அதுதான் எனது ஐயப்பாடு.

சூத்திரதாரன்;

அப்படி வருக வழிக்கு. கிண்டலாரே, ஐந்து திணைகள் உள்ளன, அவற்றில் உள்ள மக்கள் தமது வாழ்க்கையை அந்த அந்தத் திணை நிலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ற வளத்தையும், வாய்ப்பையுங் கொண்டே வாழ்கிறர்கள், இதுதானே புவியியல் இயல்பு. நெய்தல் நில மக்கள் கடலே நம்பி வாழ்கிறன். அவனது வாழ்க்கை கடலிலேதான் நடக்கிறது. அதுபோலக குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை குன்றும் மலையும் உள்ள இடங்களின் பூமுக இயல்புக்கேற்ற நடக்கின்றது. இவ்வாறே முல்லை, பாலை நில வாழ்க்கையும் வேறு வேறு விதமான வாழ்க்கை முறையைக் கொண்டது. இவற்றுள் மருதம் தவிர்ந்த எனைய நில மக்களின் வாழ்க்கை நிலை மிகவுஞ் சிரமமானதொன்று. ஏறக்குறைய அலைந்து திரியும் பாடுடையது. ஆனல் ஆற்று ஓரத்தின் படுக்கையில் உள்ள சமவெளியில் அமைந்த மருத நிலத்து மக்கள் அங்குள்ள நீர் வளம், நில வளங்கொண்டு உணவுப் பயிர் செய்பவர்களாக விளங்குகின்றனர். உலகின் நாகரீக வளர்ச்சி ஆற்றுப் படுக்கைகளிலேதானே ஆரம்பமானதென்பதை நீ அறியவில்லையா. இந்து, கங்கை, நைல், யூப்பிரட்டிஸ், தைகிரீஸ், கொயாங்கோ, யாங்திசியாங் நதிகளே ஒட்டித்தானே நாகரீகம் வளர்ந்தது

கிண்டலார்; அப்படியானால், அமெரிக்க அமோசன், ஆபிரிக்க கொங்கோ.....

சூத்திரதாரன்;

அவைகள் அதி வெப்ப வலயத்தில் உள்ளவை. அங்கு மழை வீழ்ச்சி அதிகம். ஆதலால் அவ்விடங்களில் மக்கள் வாழ முடியாத நிலை. இவை புறநடை. ஆனால் பொதுவாய் ஆற்றை அண்டிய பகுதிகளிற்தான் மருத நிலம் அமையும்..

கிண்டலார்;

ஓகோ! எனக்கு இப்போ விசயம் புரிகிறது. மருத நில மக்கள் அலைந்து திரியும் வாழ்க்கை உடையவர்கள் அல்லர். ஒரே இடத்தில் வருட ம் முழுவதும் நிலைத்து இருப்பவர்கள், அதுமட்டுமல்ல வயல் விளைவிக்கும் உழவுத் தொழில் சில மாதங்களே நடை பெறும். எனைய காலத்தில் அவர்களுக்கு நல்ல ஓய்வு கிடைக்கும். விளைந்ததை வெட்டி வைத்து, உண்டு , உறங்கி, உற்சாகமாக வாழ்ந்து.....

சூத்திரதாரன்;

ஆமாம். அத்துடன் உழவர்கள் உயிர் காப்பவர்கள், இந்த வாழ்க்கை நெறி காரணமாக சமூக மக்களிடையே கலந்து சமரசமாக வாழ்பவர்கள். இத்தகைய வாழ்ககை நெறியால் மனித மனத்தின் மந்திப் பாய்ச்சல்.....

கிண்டலார்;

ஓகோ. அப்பம் என்றால் பிட்டுக் காட்ட வேண்டியதில்லைத் தான். வாழ்க்கை சில வேளை வள்ளுவம் வழுக்கி, ஓய்வு நேர உபயோகமாகியும் விடுகிறது என்றுதானே சொல்லப் போகிறீர்கள். இது ஏழாவது பத்து. இன்னும் மூன்று பத்துக்கள் உள்ளன. அந்தக் கண்ணராவி யையும் பார்த்துத்தானே ஆக வேண்டும்...

சூத்திரதாரன்;

கிண்டலாரே, பரத்தமை பற்றிய பல பரிணமங்கள் உள்ளன. இதுவரை ஆறு பரிணமங்களை ஓரம்போகியார் சித்தரித்துக் காட்டினர். கடந்த பத்தில் தோழி தலைவனிடம் முறையோடு வருக. அப்படி வரின் உம்மைத் தலைவி ஏற்றுக் கொள்வாள் என்று மொழிந்தாளே. இதுவும் ஒரு பரிமாணம். மற்றறவற்றைப் பொறுத்திருந்து பார்.

(இடையில், அவை அமைதியைக் கலைத்து; அதிகப் பிரசங்கம் போதும். நாடகக் காட்சியை உடனே ஆரம்பியுங்கள் என்று பார்வையாளர் ஆரவாரஞ் செய்கிறார்கள். அதைத் தொடர்ந்து காட்சி ஆரம்பமாகிறது. தலைவி தன் மக்களுடன் வாசலில் உட்கார்ந்திருக்கிறாள். அத்தருணம் வயற் களத்திற் பணி புரியும் மூதாட்டி அங்கே வருகிறாள்)

தலைவி;

வா.. வா... பாட்டி. எப்படி? நலமாக இருக்கிறாயா. நீண்ட நாட்களாக இந்தப் பக்கமே தலையைக் காட்டவில்லை. இப்போ இங்கு வரக் காரணம் என்னவோ பாட்டி.

பாட்டி;

மகளே ! வேறு ஒன்றுமில்லை. உன் தலைவனைக் கண்டு வயல் சம்பந்தமாகச் சில காரியங்களைப் பேசலாமென்று வந்தேன். எங்கே அவர்?

(தலைவி பேசாது அமைதியாக இருக்கிறாள்)

பாட்டி;

ஓகோ... இன்னும் வரவில்லையா. பரத்தையிடம் போனால் குடும்பச் சிரத்தை எப்படி இருக்கும். எத்தனை நாட்களாக வரவில்லை....

தலைவி; என்ன பாட்டி சொல்கிறாய்...

பாட்டி;

மகளே, என்ன ஒன்றுந் தெரியாதவள் போலப் பேசுகிறாய். அவர் பரத்தையர் சேரியில் பல நாடகளாகப் பழி கிடப்பதாகப் பலரும் பேசிக் கொள்கிறார்கள். நானும் சிலபோது அவர் அப்பக்கம் போய் வருவதைப் பார்த்தேன். இதனை நான் என் புத்தியிற் சொல்லவில்லை. ஊரறிந்த விசயம். சரி நான் வரட்டுமா?

(சற்று நேரஞ் சிந்தனையில் ஆழ்ந்திருந்த தலைவி ஆள் நடமாட்டம் கேட்கப் பார்க்கிறாள். தலைவனும் பாங்கனும் வருகிறார்கள். தந்தையைக் கண்ட புதல்வர் அவனிடஞ் செல்ல முடியாது தாய் பிடித்து அடக்கித் தன் பக்கலில் அமர்த்திக் கொள்கிறாள். வந்த தலைவன் வாசலில் ஒரு பக்கம் உடகார்கிறான்)

பாங்கன்: தங்கையே, எப்படி அம்மா சுகமாக இரிக்கிறாயா?

தலைவி; பாங்கனே இபபடித்தான உங்கள் தலைவனுடைய புதுப் பெண்டிர் விட்டிற்குப் போம்போதும் அவர்களிடம் கேட்பதுண்டா?

பாங்கன்:

என்ன சொல்கின்றனை எனக்கு ஒன்றுமேபுரியவில்லை.

தலைவி;

ஒன்றுமே புரியா விட்டாலும், எல்லாமே தெரியும் அல்லவா? உங்கள் உடன் பிறந்த தங்கைக்கு இப்படி ஒருவர் துரோகஞ் செய்தால், இப்படித்தான் அதற்கு ஒத்தாசை புரிவீர்களா?

தலைவன்;

இதோ, பார் தலைவி! அவரிடம் ஏன் முறைக்கின்றாய். என்னோடு சம்பந்தப் பட்டவற்றை என்னோடு பேசுவதுதானே!

தலைவி; பேசத்தான் போகிறேன். கேட்கத்தான்போகிறீர்கள்.

உறுவடி மாஅத்து விளைந்துகு திம்பழ
நெடுநீர்ப் பொய்கைத துடுமென வீழுஉம்
கைவண் மத்தி கழாஅ ரன்ன
நல்லோர் நல்லோர நாடி
வதுவை யயர் விரும்புதி நீயே 61

இந்திர விழவிற் பூவி னன்ன
புன்றலைப் பேடை வரிநிழ லதவு
மிவ்வூர் மங்கைர்த் தொகுத்தினி
யெவ்வூர் நின்றன்று மகிழ்ந நின்றேரே 62

பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூர
வெந்நலந் தொலைவ தாயினுந்
துன்னலம் பெரும்பிறர்த் தோய்ந்த மார்பே 63

அலமர லாயமோ டமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புன லாடக் கண்டோ
ரொருவரு மிரிவரு மல்லர்
பலரே தெய்வவெம் மறையா திமே 64

(இதைக் கேட்டவாறு ஆங்கு வந்து கொண்டிருந்த தோழி ;)

வணக்கந் தலைவா, பனம்பழம் வீழக் காகம் வந்துட்கார்ந்ததுபோல என்பார்களே! அதுபோலத் தக்க தருணத்தில் இப்போது வந்ததே பெரிய காரியம். இன்றேல் தங்களது தவிப்பாற் தலைவி என்னுவாளோ என அறிகிலோம். தலைவி உங்கள் மீதுள்ள ஆத்திரத்திற்

அழகாக உங்களின் ஊர்ப் பெருமையை நல்ல உவமான உவமேயத்துடன் பொருத்திச் சொன்னாள். சிறிய பிஞ்சுகளைப் பயந்த மாமரத்தில் அவை முதிர்ந்து வளைந்த மாங்கனிகள் அங்குள்ள தடாகத்திற் திடும் என வீழும் கழாரென்ற ஊர்க்கண் வாழும் நீவிர் நல்லவன். ஆகவே நல்லநல்ல பெண்களையே தேடி வதுவை செய்கின்றனை. அந்தப் பாக்கியந்தான் என் தலைவிக்கு இல்லாது போய் விட்டதே. இந்திர விழாக் காலத்தில் புள்ளித் தலைப் பறவை மாமரத்தில் இருந்து சேவலை அழைக்கும் ஒலி மிகுவது உன் ஊர். அங்கே பல மாதர்களைக் கலந்த உன் தேர் எப்படித்தான் இங்கே தரித்ததோ எனத் தலைவி கேட்கின்றாளே! புலால் மணம் கொண்ட நீர் நாய் வாளை மீனைத் தினந்தினம் தவறாது உண்கின்ற ஊரின் தலை வனே! பரத்தையர் மார்பைப் புல்லிய உன் மார்பை எந்தவொரு குல மகளிரும் விரும்ப மாட்டாளாம். இவைகள் எந்த நோக்கில் அவள் கூறினாள் என்றறியோம். ஆனால் நீரி அறிவீர்!

தலைவி;

பொறு, பொறு தோழி. மேலுஞ் சில சொல்ல வேண்டி உள்ளது. புகைகிறது. ஆனால் அங்கே நெருப்பில்லை என்று சொல்லும் மன நிலையில் நானில்லை.

அலமர லாயமோ டமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புன லாடக் கண்டோ
ரொருவரு மிருவரு மல்லர்
பலரே தெய்வவெம் மறையா திமே 64

கரும்பு நடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவென் மேனி
முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே 65

உடலினே னல்லென் பொய்யா துரைமோ
யாரவண் மகிழ்ந தானே தேரொடு
தளர்நடைப் புதல்வனை யுள்ளிநின்
வளமனை வருதலும் வெளவி யோளே 66

மடவ ளம்மநீ யினிக்கொண் டொளே
தன்னெடு நிகரா வென்னெடு நிகரிப்
பெருநலந் தருக்கு மென்ப வீரிமலர்த்

தாதுண் வண்டினும் பலரே
யோதி யொண்ணுதல் பரப்பித் தோரே 67

தலைவனே! உனது அழகிய பரத்தையும் அவளின் கூட்டத்தாரும், உன்னுடன்ற் புதுப்புனல் குடைந்தாடி யதைக் கண்டவர்கள் ஒருவர் இருவரல்லர். பலர் கண்டுள்ளனர். கணடதை என்னிடம் விண்டுள்ளனர். அதை உம்மால் மறைக்கவே முடியாது. கரும்புப் பாத்தியில் வளரும் ஆம்பலின் தேனை வண்டுகள் மாந்திப் பசியாறும் ஊரனே! மகப்பேற்றுல் வனப்பிழந்த என்னை உமக்குப் பிடிக்காது என்பதை நானறிவேன். இங்கு நடை பயிலத் தேர் ஊர்ந்து திரியும் மகனைக் காணும் விழைவால் உமது தேர் இந்த வாசலில நிற்பதைக் கண்டு மிகமிக அஞ்சுகிறேன். உம் உதவி இல்லாமலே எனக்குரிமை யான உம்மை அந்தப் பரத்தை என்னிடம் இருந்து பிரித்து விட்டாள். அத்தகைய தந்திரக்காரி உம் உதவி யுடன் என் மகனையும் பறித்து விடுவாளோ என்று அஞ்சுகிறேன். ஆதலாற்தான் அவன் உன்பால் வரு வதைத் தடுத்தேன். அதுமட்டுமா எங்கோ இன்பம் விற்றுண்ணும் ஈனப் பரத்தை இன்று எனக்கு நிகராகி உந்தன் மார்பைப் புல்கிருள், மேலும், அவள் என்னை உம் பரத்தையாகக் கொள்வாளென்பதில் என்ன தடை உண்டு. மலரில் ஒரு வண்டல்ல பல வண்டுகள் தேன் நுகரும் . அதுபோன்ற பரத்தைக்கு நிகராக என்னைச் சமனுக்கி வைத்த என் தலைவன் தந்த துயரமே எனக்குப் போதுமானதென்பதை அறிகுக.

கன்னி விடியற் கணைக்கா லாம்ப
ருமரை போல மலரு மூர
பேணு ளோநின் பெண்டே
யாந்தன் னடங்கவுந் தானடங் கலளே 68

கண்டனெ மல்லமோ மகிழ்நநின் பெண்டு
பலராடு பெருந்துறை மலரொடு வந்த
தண்புனல் வணட லுய்த்தென
வுண்கண் சிவப்ப வழுதுநின் றேளே 69

பழனப் பன்மீ னருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கு
மரநீர்ப் பொய்கை யாண ரூர

தூயர் நறியர்நின் பெண்டிர்
பேஎ யகீனயமியாம் சேய்பயந் தனமே 70

தலைவனே! என் இறுதியான முடிவு இதுதான். எனவே நம் பழைய உறவு இவ்வளவே ஆகும் என்பதை உணர்க. இதுவரை நான் சொன்னவறறை;;;

பாங்கன்:

தங்காய் நீ சொல்ல வேண்டாம். அவற்றை நன்கு செவி மடுத்த நான் அதன் பொருளை மட்டன்றி உள்ளார்ந்த உனது எண்ணத்தையும் புரிந்து கொண்டேன். அதி காலையிலே தாமரைபொல ஆம்பல மலரும் ஊரவனுகிய உன் தலைவனுடன் பரத்தையர்பால் உடன் செல்லும் இழிந்த குணம் பொருந்தியவன்ல்லன் நான். நீ தாழ்ந்து போயினும் தான் அடங்காக் குணம் படைத்த பரத்தை யினுல் ஏற்பட்ட பிணக்கை அகற்றும் நோக்குடன் தான் இவருடன் கூடி இங்கு வந்தேன். இப்போது உன் மனநிலையை மட்டுமல்ல இவரால் நீ எதிர் கொள்ளும் வாழ்வின் தாழ்ச்சியையும் புரிந்து கொண்டேன். பலரொடு நீராடும்போது துறையில் அவள் கட்டிய மண் வீட்டை புனல் அறுத்து வநத வணடல் அழித்ததென நீலிக் கண்ணீர வடிக்கும் அந்தப் பரத்தை உன் மக்களை தன்பால் கவர்ந்து விடுவாளோ என அஞ்சுகின்றனை. அதனிலும் மேலாக உனது கணவனைத் தன்னிடத்தே அபகரித்துக் கொண்ட பரத்தை உன்னைப் பரத்தை நிலைக்குத் தள்ளி விடுவாளோ எனவும் அஞ்சுகின்றனை. மருத மரத்தில் அமர்ந்தவாறு உறு மீன் வரும்வரை காத்திருக்கிம் நாரை வாழ் நாட்டுத் தலைவனின் அடக்க முடியாத ஆசையின் போக்கை நான் நன்கு புரிந்து கொண்டேன். இனி நான் இந்த நிலை மேற்கொண்டு தலையெடுக்காத வழி வகைகளை கவனத்திற் கொள்வேன். கவலற்க (தலைவன்பாற் திரும்பி) தலைவா! இதோ நீர் வந்த தேர் பயணத்திற்கு ஆயத்தமாகவே நிற்கிறது. அதைத் தசை திருப்பிப் பரத்தையர் பாற் செல்லலாம. அல்லது உன் மனதைத் திருப்பி இங்கே நிறுத்தி உன் இல்லக் கிழத்தியுடன் வாழலாம். நான் வருகிறேன்.

முன்னெழினி அரங்கை மூடுகிறது.
எட்டாவது காட்சி முடிவை எட்டுகிறது.

காட்சி; 9.

களம்; மருத நில வயலருகில் உள்ள புனலாடு துறை.

காலம்; அந்திப் பொழுது

பாத்திரர்கள்; தலைவன், தலைவி, தோழி, பரத்தை

நிகழ்ச்சி;

புனலாடி துறையில் வெவ்வேறு மூன்று காலங்களில் நடைபெற்ற புனலாட்டுப் பற்றிய நினைவுக் காட்சிகள் அதே புனலாடி துறையில் மூன்று விதமாகக் காட்சிப் படுத்தப்படிகிறது..

சூத்திரதாரன் கிண்டலாருடன் அரங்கிற் தோன்றி;

கிண்டலாரே! இன்றைய நாடகம் சற்று வித்தியாசமாக அமையப் போகிறது. பரத்தமையின் காரத்தை ஓரம் போகியார் எட்டாவது புனலாட்டுப் பத்தென்னும் இந்தப் பகுதியில சற்றுக் குறைந்துத் திசைமாற்றித் தந்துள்ளார்.

கிண்டலார்;

எப்படியாயினும் மருதத் திணையின் அகத்துறைப் பொருள் பரத்தையின் பங்களிப்பு இல்லாது சுவை கூட்டாதே! இது பரத்தையில்லாமல் இயலும் ஒரு மருதத்திணை சார்ந்த பத்தாக இருக்க வேண்டுமென்று விழைகிறேன்.

சூத்திரதாரன்;

அதுதான் இல்லே! இதிலே பரத்தையும் வருகிருள். அவளால் ஏற்படும் பிணக்கும் ஊடலும் கூட இடம் பெறுகிறது. ஆனல் தொடர்ச்சியாக அல்ல விட்டு விட்டுக் கலந்து வருகின்றன. முதலில்; தலைவி தன் தலைவ னிடம் பரத்தையரோடு அவன் புனலாடி உள்ளானே வென்ற ஐயத்தைக் கேட்கிருள் அதை மறைக்கத் தலைவன் முன்னர் தலைவியுடன் நடந்த ஒரு புனலாட்டை நினைவு படுத்துகிருன்.

காட்சி ஆரம்பமாகிறது தோழி தலைவியிடஞ் சென்று;

தலைவியே, புனலாட வந்த நீ, ஏன் இவ்வாறு இறுகிய முகத்துடன் ஒரு புறமாக ஒதுங்கி இருக்கின்றனை. உனது உள்ளம் இந்தப் புனல் பொங்கிப் பெரிகுவதுபோல ஏதோ கவலையால் பொருமிகிறதென நான் எண்ணலாமா?

தலைவி;

அவ்வாறு ஏதும் இல்லை. சிலர் நம்மாடவர்கள் பரத்தையரோடு இங்கு வந்து புனலாடுவதாகக் கேள்விப் பட்டேன். அவ்வாருயின்; நமது தலைவனும் அத்தகைய தவறுகளைச் செய்வானே என எண்ணினேன். அவ்வளவுதான்.

தோழி;

தலைவியே, புனலாடு துறை பொதுவானது. இங்கு எவரும் வரலாம், எங்கும் புனலாடலாம். அதற்கு ஒரு கட்டுப்பாடு கிடையாது. எனவே புனலாடும் ஆடவர் பரத்தையருடன் வந்து புனலாடுகின்றனர் என்பதை நாம் எப்படி நம்ப முடியும்.

தலைவி; அதைத்தான் நான் என் தலைவனிடம்;

சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
யாடினை யென்ப புனலே யலரே
மறைத்த லொல்லுமோ மகிழ்ந
புதைத்த லொல்லுமோ ஞாயிற்ற தொளியே 71

எனக் கேட்டேன். சூரியனின் ஒளியை மறைக்க முடியுமா, அதுபோலத் தலைவனே நீர் பரத்தையருடன் புனலாடி இருப்பின் அதை எப்படி உம்மால் மறைக்க முடியும் என்பதை எனக்குக் கூறுக என்றேன்

தலைவன்; தோழி! தலைவி உன்னுடன் உரையாடியவற்றை உற்றுக் கேட்டேன்.

வயன்மல ராம்பற் கயிலமை அடங்குதழைத்
திதலை யல்குற் றுயல்வருங் கூந்தற்
குவளை யுண்க ணேளர் மெல்லியன்
மலரார் மலிர்நிறை வந்தெனப்
புனலாடு புணர்துணை யாயின ளெமக்கே 72

இவளுடன் களவியற் காலத்தில் நான் பயின்றபோது இதே புனலில் நீராடிய நினைவுகளை என் நெஞ்சம் மறக்கவில்லை. அன்று அலர்ந்த ஆம்பற் பூப்போன்ற அபரணத்தையும் தழையையும் அணிந்து, அல்கில் அசைய இவள் வந்தாள், அப்போது இவளின் அழகான

கூந்தல் அசைந்தது. மை ஈட்டிய குவளைக் கண்கள் நாணத்தால் மூடித் திறந்தன. அத்தகைய அழகுடன் பெருகி வந்த புனலில் ஆடியது இன்றும் என் நெஞ்சில் மறையாத நனவாக இருக்கிறது. ஒருகால் இவள்;

வண்ண வொண்டழை நுடங்க வாலிழை
யொண்ணுத லரிவை பண்ணை பாய்ந்தெனக்
கண்ணுறுங் குவளை நாறித்
தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே 73

ஆமாந் தோழி, விளையாட்டாக இவள் நீரிற் பாயப் புனல் நீரோ குவளை மலர்த் தேனைக் குளிர்ந்தது.

விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே
பசும்பொ னவிரிழை பைய நிழற்றக்
கரைசேர் மருத மேறிப்
பண்ணை பாய்வோ டண்ணறுங் கதுப்பே 74

தோழி! நீ எப்போதாவது மயிலொன்று, தன் தோகையை விரித்தவாறு வானில் தவழும் மேகத்திலிருந்து தரையிற் குதித்ததைப பார்த்துள்ளாயா/

தோழி;

தலைவா, மேகத்தைக் கண்டுதானே மயில் தோகை விரித் தாடும். அவ்வாறு தன் ஒயிலான ஆட்டத்தால் மேகத்தின் அண்டையில் போய் அணைய வேண்டுமென்றுதானே அகவும் ஆடும். ஆனால், அப்படி ஆகாயத்தின் மேகத் திலிருந்து புவிக்கு மயில் தாவியது என்பது புதுமையாக அல்லவோ இருக்கிறது. ஒன்றுமே புரியவில்லையே!

தலைவன்;

தோழி. அந்த மயிலுடைய மனதைக் கவர்ந்த வேறு ஒரு பொருளின் ஈர்ப்புச் சக்திதானே அதனைப் புவிக்கு இழுத்திருக்க வேண்டும். அதுதான் உண்மை. அதோ அந்த மருதங் கிளையில் உட்கார்ந்திருந்த உன் தலைவியான பெண் மயில், அன்று புனலாட வந்தபோது, புனலிற் பாய்ந்தாள். அப்போது அவளின் விரித்த குழல் காற்றிற் பறந்து, தொப்பென்று நீரில் குதித்த அவள் விண்ணிரிந்து மண்ணிற்குத் தாவிய மயிலாக அவள் என் கண்களைக் கவர்ந்தாள்.

தோழி;

ஓகோ பழைய நினைவு நெஞ்சத் திரையிற் படம் விரிக்கிறதோ!

தலைவன்;

சரியாகச சொல்லினே. எனக்கு ஆனந்தம் பொங்குகிறது.

தோழி; ஓகோ பழைய நினைவு நெஞ்சுத் திரையிற் படம் விரிக்கிறதோ!

தலைவன்; சரியாகச சொல்லினே. ஆனந்தம் பொங்குகிறது.

(தலைவி குழந்தைகளுடன் அப்பாற் செல்ல
தலைவனிடந் தோழி சென்று;)

தலைவனே வயிற்றுக் குழந்தையும் வாந்தியும் தக்க தருணம் காலம் வந்ததும் வெளியே வந்து விடும். வல்லமை உள்ளவை. அதுபோல மறைத்து நீவிர் ஆடி வரும் நாடகத்தை என்றுமே மறைக்க முடியாது என்பதை மறக்க வேண்டாம்.

பலரிவ ணெவ்வாய் மகிழ்ந வதனு
லலர்தொடங் கின்று லூரே மலர
தொன்னிலை மருதத்துப் பெருதுறை
நின்னே டாடின டண்புன லதுவே 75

பைஞ்சாய்க் கூந்தற் பசுமலர்ச் சுணங்கிற்
தண்புன லாடித்தன் னலமேம் பட்ன
ளொண்டொடி மடவர னின்னே
டந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே 76

எவ்வாறே நானறிந்த இந்த அலர் ஊரவர்க்குந் தெரிந்து விட்டது என்றே எண்ணுவோமாக. ஒரு வேளை தலைவியின் காதிற்கும் அது எட்டி இருக்கலாமோ எனத் தவிக்கின்றேன். தலைவியின் காற்றிற் பறக்கும் அழகிழந்த அழக பாரமும் உடலிற் பரந்து வரும் சுணங்கும் நின்னுடன் புனலாடினால் நீங்கும் என்ற நினைப்புடன் தான் அவள் இங்கே வந்தாள். அவ்வாறு ஆடின், அவள் அமர உலகின் அணங்காக அழகுறுவாள் என்பது திண்ணம். ஆனால் அவள் தன் மக்களையும் அழைத்துக் கொண்டு அப்பாலே அகல்வதைப் பார்ப்பின் அவள் மனதில் ஏதோ ஒரு ஐயம் உண்டாகி விட்டது என்றே எனக்குத் தொன்றுகிறது, மேற்கொண்டு என்னால் ஏதும் செய முடியாதென்றே நம்புகிறேன்.

(காட்சி மாறுகிறது . தலைவியுந் தோழியும்
அங்கிருந்து அகன்று போகத் தலைவன்
தனித்து உட்கார்ந்து இருக்கிறான். அப்போது அங்கே
பரத்தை மகள் வருகிறாள். அவனைக் கண்ட அவள்
அவனருகில் வந்து நிற்பதைக் கண்ட தலைவன்;)

ஆகா நினைத்தேன் வந்தாய் உனக்கு ஆயுள் ஆயிரம் வருடம்.
(என்று கூறி அவள் கரங்களைப் பற்றுகிறான்)

தனியாகவா வந்திர்கள். தனியே புனலாட வேண்டி நேர்ந்து விட்டதா. ஏன் உங்கள் இல்லக் கிழத்தி வரவில் லையா? அல்லது வர விரும்பவில்லையா? தலைவா, ஓடு வதோ புதுப் புனல், நேரமோ அந்திப் போது, நீர் இப்போ துதான் ஆதவனின் அனல் வெளியே விடும் வேளை. வெது வெதுப்பான வெள்ளத்தில் நீராடுவதே சுகம். காலையிலே தானே உங்கள் இல்லத்திற்குச் சென்றீர்கள். மிகச் சீக்கிரமாகவே திரும்பி விட்டீர்களோ. உங்கள் ஆசை மனையாளைக் காணப் போக வில்லையா?

(தலைவன் அமைதியாக இருப்பதைக் கண்டு)

ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். திருப்பி அடித்த பந்தாகி வீட்டீர்களா. ஆனாலும் இந்தத் தருணத்தில் உதவுவது தான் உன்மையான அன்பிற்கு அடையாளம் அலவா?

அம்ம வாழியோ மகிழ்நநின் மொழிவல்
பேரூ ரலரெழ நீரல கலங்கி
நின்னெடு தண்புன லாடுது
மெம்மொடு சென்மோ செல்லநின் மனையே 77

கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையிற் கதழ்புநெறி வந்த
சிறையழி புதுபுன லாடுக
*மெம்மொடு கொண்மோவெந் தோள்புரை புணையே*78

தலைவனே, உங்களுடன் புனலாடுவது என்பது நான் செய்ய வேண்டிய கடமை. என்னுடன் புனலாட இசையின் வருக ஆடலாம். இன்றேல் உங்கள் இலலம் செல்லலாம். பிறர் தத்தம் இணைகளுடன் நீராடுவதைப் பார்த்து மனம் பொரும வேண்டாம். அதோ பாருங்கள்; பகைவனின் காவலும் உறுதியும் மிக்க மதிலை உடைத்து

கடுமான் கிள்ளியின் யானையைப் போலப் பெருகி வரும் புனலில் நீராடலாம். எனது கரங்களைப் பற்றிக் கொள்ளுங்கள், நான் உங்களுக்குத் தெப்பமாக இருந்து புனலாடுவேன்.

(இருவரும் புனலில் இறங்கிப் புனலாடி கரையேறுகினறனர். அப்போது, தலைவனை அண்மிய பரத்தையின் பாங்கி)

புதுப்புன லாடி யமர்ந்த கண்ணள்
யார்மக ளிவளென்னப் பற்றிய மகிழ்ந
யார்மக ளாயினு மறியாய்
நீயார் மகனையெம் பற்றியோயே 79

தலைவனே! இப்போது . நீர் புனலாடிய மங்கையின் கரங்களைப் பிடித்து, யார் மகள் என்று என்னிடம் கேட்டனையல்லவா? அவள் யார் மகள் என்று சொன்னால், நீ அறிந்து தேர மாட்டாய். ஆனால் நீயார் மகன் என்று சொல்லுக. அவள் என்னிடங் கேட்டால் நான் சொல்ல வேண்டுமே!

தலைவன்;

அவளின் தாயுந் தந்தையும் யார் யாரோ! அவ்வாறே, நானும் யாரோ! ஆயினும் புதுப் புனலாடுகையில், இருவர் மனங்களும் ஒன்றின என்பதே உண்மை.

(அவர்கள் பிரிகின்றனர். தலைவன் தன் இல்லத்திற்கு எதுவும் நடவாததுபோல வருகிறன். அவனில் கமழும் புனலாட்டு மணத்தை நுகர்ந்த)

தலைவி;

புலக்குல மல்லேம் பொய்யா றுரைமோ
நலத்தகு மகளிர்க்குத் தோட்டுணை யாகித்
தலைப்பெயற் செம்புன லாடித்
தவநனி சிவந்தன மகிழ்நநின் கண்ணே 80

தலைவா. நான் உங்களுடன் புலக்கவில்லை. ஆனால் புனலாடியதை உங்களின் சிவந்த கண்கள் எடுத்துக் காட்டுகின்றன. உண்மையை ஒழிக்காமற் சொல்லுங்கள்,,

(அவன் மௌனமாக நிற்க தலைவி செல்கிறள்)

முன்னெழினி மூடுகிறது.
ஒன்பதாவது காட்சி முடிகிறது.

காட்சி; *10*

காலம்; மாலைப் பொழுது

களம்; *1.* தலைவியின் இல்லம், *2.* தலைவியின் இல்ல வாசல் முற்றம், *3.* பரத்தையின் வீடு

பாத்திரர்கள்; தலைவன், தலைவி, தோழி, பாங்கன், பாணன், பரத்தை, பரதத்தையின் தோழி

நிகழ்ச்சி;

பரத்தையுடன் தன் தலைவன் புனலாடியதை அறிந்த தலைவி தலைவனுடன் புலக்கின்றாள். வாயில் நாடி வந்தவர்களி டமும் தலைவனது தவறான வழக்கத்தைக் கூறி மறுக் கிறாள். அதனால், அங்கிருந்து திரும்பிச் செல்லும் வழியில் தலைமகன் தோழியிடம் வாயில் இரக்க அவளும் வாயில் மறுக்கிறாள். எனினும் அவன் மீண்டும் தலைவியிடம் வர அவள் புலந்து பேசுகிறாள். எதுவுஞ் செய்ய முடியாத தலைவன் பரத்தையின் வீட்டிற்கு வருகிறான்! அங்கு தலை மகன் செவியிற் படத்தக்கதாய்ப் பரத்தை பாங்காயி னர்க்குக் கூறுகிறாள், தலைவன் என்ன செய்வதென்ற தடுமாற்றத்தில் தவிக்கின்றான்.

சூத்திரதாரன்;

வணக்கம் சபையோரே!. மருதத்திணை பற்றிய ஒன்பதாவது பத்தைப் புலவி விராய பத்து எனக் கூடலார் தொகுத்துள்ளார். இதில் தலைவனின் தலைவி மட்டுமல்ல தலைவியின் புலத்தலுக்கே காரணமாகிய பரத்தையும் தலைவனுடன் புலக்கின்ற செய்தி சொல்லப்படுகிறது. பரத்தை பணத்திற்கு இன்பம் விற்பவள். குல மகளிரின் கணவர்களைத் தம் வயப்படுத்திக் குடும்ப உறவைக் கெடுப்பவள் என்ற ஒரு எண்ணம் பரவலாக உணரப் படுகிறது. இத்தகைப் பரத்தையருள் காமப் பரத்தையரே பணத்தின்பால் விலைப்படுபவர். இவர்களை விட, இசையும் நாட்டியமும் இரு கண்களெனக் கொண்டு முத்தமிழ் வளர்க்கும் பரத்தையர் என்னும் மாதர்களும் உளர். இவர்களின் கலையை நுகர்வதற்காக வரும் ஆடவர்களிற் சிலரின் வேட்கையால், அவர்களின் காதல் வாய்ப்பட்டு

இவனதான் எனது ஒருவன். அவனுக்கு நானும் ஒருத்தி என்ற நெறியில் வாழ்பவர்களும் உள்ளனர். இவர்களைக் காதற் கிழத்தி என்பர். இவர்களுடைய வாழ்வுப் பாங்கும், மனப் பக்குவமும் பெண்மை கொண்டவை. இவர்கள் கலையைப் பேணி வளர்க்குஞ் சீரிய நோக்கத்தால் தம்மை அதற்கே அர்ப்பணித்துக் குடும்ப வாழ்கையைத் தியாகஞ் செய்தவர்கள், இதனால் மகப்பேற்றைத் தவிர்ப்பவர். ஆயினும் குழந்தைச் செல்வத்தை நேசிக்குந் தாய்மை உணர்வு உடையவர்கள். இத்தகைய காதற் பரத்தையரின் பரத்தமைபற்றிய செய்தியை இந்தப் பத்திற் காணலாம்.

(எங்கிருந்தோ கிண்டலார் ஓடி வந்து அரங்கில் நுழைந்து) ;

என்ன அய்யா! பாம்பே கொடியது. அப்படி இருந்தும் அதை நல்ல பாம்பு என்கிறீர்களே! அதுபோல பரத்தமை சமுகத்திற்குக் கேடு என்று சொல்பவர்களே பரத்த மையில் காதற் பரத்தையர் உள்ளனர் என்று கதை அளக்கிறீர்களே! அதை எப்படி அய்யா மெயயென்றி நம்புவது.

சூத்திரதாரன்;

கிண்டலாரே! நீ சொல்வதிலும் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால்; பெண் என்பவள் இரண்டு பரிமாணங் களைக் கொண்டவள். ஒன்று நான்கு குணங்கள் உள்ள பெண்மை, அடுத்தது தாய்மை. இவைகள் ஒரு பெண் கருவில் உருவாகிய ஞான்றே உருவானவை. இவை சந்தர்ப்பம் சூழலால் கேடுறினும் பூமியின் உள்ளே கனன்று கொண்டிருக்கும் எரிமலை போன்று அடங்கிக் கிடப்பது. ஆதலால் தக்க தருணம் நேரிடும்போது வெளிப்படுவன. இவற்றை மறுக்க அல்லது மறைக்க முடியாத உண்மை. அந்த நிலைப்பாட்டை இந்தப் பத்தில் காட்சிப் படுத்தப் போகிறோம். தம்பி! நன்றுகப் பார்த்து சுவைத்து, பின்னர் உன் முடிவைச் சொல். இப்போ நாடகத்தைத் தொடங்காமல் பேசிக் கொண்டிருந்தால்; அவையோரே எரி மலையாகி நம்மை உருக்கி ஓடவிட்டு விடுவார்கள்.

(காட்சி ஆரம்பமாகிறது. தலைவன் பரத்தையர் இல்லத்தில்
சில நாட்கள் தங்கி இருந்து தன் இல்லத்திற்கு
வாயில் வேண்டி திரும்பி வருகிறான்.
பாணன், பாங்கி, பாங்கன் ஆகியவர்கள் இருக்கின்றனர்,
அங்கு வந்த தோழி தலைவனைப் பார்த்து.)

தோழி;

செவியிற் கேட்பினுஞ் சொல்லிறந்து வெகுள்வோள்
கண்ணிற் காணி னென்னு குவளகொ
னறுவீ யைம்பான் மகளி ராடுந்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந் துண்ணுநின் பரத்தை மார்பே 84

தலைவனே! உன் இல்லக் கிழத்தி பரத்தை வாழ்வைப்பற்றி யாருஞ் சொல்வது செவியிற் பட்டாலே முறுகக் கொதித்த எண்ணெயில் வீழ்ந்த கடுகாக வெடிப்பாள். நீரோ, தைப் புனித நீராடுங் குளிர்ந்த தடாகமொத்த பரந்த மார்புடன் வந்துள்ளனை. இதே மார்பு ஐந்து விதமாகத் தம் தலைக் கேசத்தை அழகுபடுத்தும் பரத்தையர்கள் புல்லியது என அறிந்தால் என்ன செய்வாளோ அறியேன். ஆதலால் நீர் இங்கிருந்து நீங்குதலே நலம் என்பது என் எண்ணம் என்பதை அறிகுக.

தலைவி;

கரம் பிடித்த காதலிக்கு கபட நாடகம் ஆடும் உங்கள் தலைவனுடன் துணிந்து வாயில் வேண்டி வந்துள்ள உங்களைப் பார்க்குத் தோறும் என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை. ஆயினும் ஒன்று சொல்வேன் கேட்குதி. பரத்தையர் புல்லிய இவரின் பரந்த மார்பு போரில் ஈட்டிபட்டுத் தழும்பேறிய வீரனின் மார்பின் பெருமை கொண்டதல்ல. அத்தகையவர் அணிந்த மாலை மலர்களில் தாதுண்ட வண்டுகள் கூட அவர் தலைவியின் கூந்தலிற் தங்குவதை அவள் விரும்பாது சினக்குந் தனமையுடையாள் என அவரிடம் கூறி அழைத்துச் செல்லுவீர்களாக.

வெகுண்டன னென்ப பாணநின் தலைமகன்
மகிழ்நன் மார்பி னவிழிணர் நறுந்தார்
தாதுண் பறவை வந்தெம்
போதார் கூந்த லிரிந்தன வென்னே 82

மணந்தனை யருளா யாயினும் பைபயத்
தணந்தனை யாகி யுய்ம்மோ நும்மூ
ரொண்டொடி முன்கை யாயமுந்
தண்டுறை யூரன் பெண்டெனப படற்கே 83

வதுவை செய்தும் எனக்கு வாழ்க்கையைத் தராது பையப் பைய எனை விட்டு விலகிச் சென்றார். அதனால் எனக்கு எது நடந்தது என்பதை நான் எண்ணிப் பார்ப்பதே இல்லை. ஆனால் அவர் பரத்தையரைப் பிரிந்து இங்கே வந்து விட்டால் அவர்கள் அவரின் பெண்டீரெனச் சொல்லிப் பெருமைப்படுந் தகுதியை இழந்து விடுவரே என்றுதான் கவல்கிறேன். ஆதலால் விரைந்து அவர்பாற் செல்லட்டும். மேலும், அவரோ வெண் நெற்றியையுடைய சம்பங்கோழி தன் இனிய குரலால் பேடையை அழைத்து மகிழும் வயல் ஊரன். அததகைய கோமான் இவ்வாறு சிறு குழந்தைகள் புரியுந் தவறன்ன பெருந் தவற்றைச் செய்கிறாரே எனக் கண்டவர்கள் சிரிப் பார்கள். இவையெல்லாம் அவர்க்கு வேண்டாதன. எனவே அவர்க்கு வேண்டிய பரத்தையர்பால் மீழுவதே சிறந்ததெனச் செப்புவீராக.

வெண்ணுதற் கம்பு வரிக்குரற் பேடை
தண்ணறும் பழனத்துக் கிளையோ டாலு
மறுவில் யாணர் மலிகே ழுச்சி
சிறுவரி னிணைய செய்தி
நகரரோ பெருமநிற் கண்டிசி னோரே 85

பாணன்;

தலைவனே, தலைவி கூறியவற்றினைக் கேட்டீர்கள்தானே. அவள் சொன்னவற்றில் ஏதுத் தவறு இருப்பதாக எமக்குத் தென்படவில்லை. ஆதலால் இவ்விடம் விட்டு அவமானம் தலை நீட்டுமுன் நீங்குவதே ஏற்புடைத்து.

(என எழுந்து செல்கிறான். அவனைத் தொடர்ந்து அவன் சார்பில் வாயில் வேண்டி வந்தவர்களுஞ் செல்கின்றனர். அடுத்த காட்சியாக புலவி விராய பத்தின் பரத்தை இல்லத்தே மேலும் ஒரு புலத்தல் விராவுவதைக் காண்போம். தன் இல்லின் கண் தலைவன் தன் வாயிலார்களுடன் வந்து இருப்பதைக் கண்ட பரத்தை அவர்கள் முன்னால் வந்து;)

கொக்கு ஆமையின் வெண்மையான அடிப்பாகத்தை அகழ்ந்து உள்ளே இருந்த ஊனை உண்டபின் விட்டுச் செல்லும் அதன் ஓட்டினை தோல் கொண்டு மூடி பறையாக ஒலிப்போர் அதன் இறைச்சியையும் உண்பர். அத்தகைய தடாகம் நிறைத்த ஊரவனுகிய இவர் என்னிடம் வந்து இன்பம் நுகர்கின்றார் எனக் கேள்விப் பட்டாலே இவர்பால உரிமை பூண்டுள்ள இல்லத் தலைவி வருந்துவாள்.

குருகுடைத் துண்ட வெளளகட் டியாமை
யரிப்பறை வினஞ ரல்குமிசைக் கூட்டு
மலரணி வாயிற் பொய்கை யூரநீ
ரென்னை நயந்தென னென்றிநின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே 81

வெண்டகைக் குருகின் மென்பறை விளிக்குர
னீள்வய னண்ணி யிமிழு மூர
வெம்மிவ ணல்குத லரிது
நும்மனை மடந்தையொடு தணைப்பெய் நீமே 86

மேலும், அவர் இங்கு தாமதிப்பது நல்லதல்ல. ஆகவே அவர் தன் இல்லம் ஏகித் தலைவியுடன் வாழ்வதையே நான் பெரிதாகக் கொள்கிறேன். மஞ்சளும் கடுஞ் சிவப்பு வரிகளுங் கலந்த மலர்களையும் கலகலக்கும் காய்ந்த பழக் கொத்துகளையுங் உடைய கிலுகிலுப்பை மாலை கட்டிய ஆநிரை காக்கும் மருத நில மள்ளர்கள் கரும்பை முறித்து எறிந்து மாம்பழங்களை விழுத்தும் ஊரவர். அத்தகையவருடைய மனைவி எவர்களையும் நினைத்துப் புலக்க மாட்டாள், ஆனால்; நிட்சயமாய் அந்தப் புலத்தலுக்கு நானே காரணமாக அமைவேன். ஆதலால், அவரை இவ்விடம் விட்டு நீங்கும்படி சொல்லுங்கள்.

பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்
யாண ரூரநின் மனையோள்
யாரையும் புலக்கி லெம்மைமற் றெவனை 87

தலைவன் இவ்வாறு தன்மனை விட்டு என் மனை நயப்பதற்கு நானே காரணம் என்பர். இத்தகைய இழி சொல் எழாதிருப்பதையே விரும்புகின்றேன். ஆதலால் அவர் மேலும் இங்கு வராதிருக்கும்படி வேண்டுக.

வண்டுறை நயவரும் வளமலர்ப் பொய்கைத்
தண்டுறை யூரனை யெவ்வை யெம்வயின்
வருதல் வேண்டுது மென்ப
தொல்லேம் போல்யா மதுவேண் டுதுமே 88

அவள் என் தங்கைக்கு நிகராவாள். அவள் இவ்வாறு தலைவனைப் பிரிந்து தவிப்பதற்குக் காரணம் அவள் தவறல்ல. அதற்குக் காரணம் நானே என நம்புகிறேன் என அவர்க்கு உரையுங்கள்.

அம்ம வாழி பாண வெவ்வைச்
கெவன்பெரி தளிக்கு மென்ப பழனத்து
வண்டுதா தூது மூரன்
பெண்டென விரும்பின் றவடன் பண்பே 89

பாணனே! நீ வாழ்வாயாக. தலைவனின் குணத்தை வண்டு பெற்றதா அல்லது வண்டின் தன்மையைத் தலைவன் பெற்றானு என அறியாது தடுமாறுகிறேன். இதையறியாத இவருடைய புதல்வனைப் பெறும் பேற்றைக் கொண்ட அத்தலைவி என்னை வெறுக்கிறாள். அதை என்னால் எவ்வண் பொறுக்க முடியும். புதல்வனைப் பிரிந்து வாழுந் தந்தை, தலைவனைப் பிரிந்து வாழுந் தலைவி இவ்வாறு ஒரு குடும்பந் தளர்விற்கு நான் காரணமாக இருப்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. ஆதலால் அவர் இங்கு வருவதை நான் விரும்பவில்லை என அவருக்கு ஓதி அவரது மனைக்கு வழிகாட்டி அனுப்புங்கள்

மகிழநன் மாண்குணம் வண்டுகொண் டன்கொல்
வண்டின் மாண்குண மகிழநன் கொண்டான்
லன்ன தாகலு மறியா
வெம்மொடு புலக்குமவன் புதல்வன் றாயே 90

(பரத்தை மனைக்குள் செல்கின்றாள், தலைவனும் வாயில் வந்தவர்களும் வந்த வழியே திரும்புகின்றனர்)

முன்னெழினி மூடுகிறது
பத்தாவது காட்சி மறைகிறது.

காட்சி; *11*

காலம்: பல தரப்பட்ட வேளைகள்

களம்; பகற்குறி இடம், தலைவியின் இல்லம், தலைவன் ஊர்.

பாத்திரர்; சூத்திரதாரன், கிண்டலார், தலைவன், தலைவி,

பாங்கன், பாங்கி

நிகழ்ச்சி:

1. தலைவனின் பரத்தையர் நட்பு நாட்டமறிந்த தலைவி புலத்தல், 2. வாயில் வந்தோர் முயற்சியால் தலைவி தலைவனைக் கூடல். 3. வரைவிடைப் பிரிந்த தலைமகன் திரும்பி வந்து தலைவியைத் தேற்றல். அவள் திறன் மெச்சுதல்.

(நாடக அரங்கை நோக்கி வரும் கிண்டலாரின் கண்களில், பத்தாவது பத்து எருமை என்ற வாசகம் கண்களிற் படுகிறது. அதையே உற்று அண்ணாந்து பார்க்கும் கிண்டலாரின் பிற் பக்கமாக வந்த சூத்திரதாரர் அவனது தோழிற் தட்ட அவன் துடித்துப் பதைத்து;)

அய்யய்யோ....யய்யோ, எரிமை எறுமை என்னை முட்டுகிறதே .....

(என அலறுகிறன். சூத்திரதாரன் அவன் முன்னால் வந்து)

பயப்பட வேண்டாம் கிண்டலாரே. இங்கே எரிமையோ அரிமையோ வரவில்லை. நான்தான் வந்து; ஆவென்று வாயைப் பிழந்து கொண்டிருக்கும் உன்னைத் தோழிற் தட்டினேன். ஏன் அப்படி நின்றனை?.

கிண்டலார்;

அதுவா? எருமை என்று அரங்கின் முன்னால் எழுதி இருக்கிறதே, இங்கே எருமைகள் இன்று நாடகம் நடத்தப் போகிறதோ என எண்ணினேன்,

சூத்திரதாரர்;

அப்படியா. ஓரம் போகியார் மருதத்திணை பற்றிப் பத்துப் பத்துகளைப் பாடினர் அல்லவா. அவற்றில் மருதக் கருப்பொருள் எது அதிகமாக ஒவ்வொரு பத்திலும் பரவி வருகிறதோ அதே பொருளின் பெயரால் அந்தப் பத்தை அழைப்பது வழக்கம். அதன்படி இந்தப் பத்தில் மருத

நில மள்ளருக்கு உழ, உரமிட, விதைக்க , அறுத்த வினைவை போரடிக்க, வினைவை இல்லத்திற் கொண்டு சேர்க்க, பால், தயிராதிய உணவு தரவாதிய ஏராளமான பயன்பாட்டிற்கு உதவும் எருமையின் பெருமைச் சேதிகள் விரவி வருதலால், இதனை எருமைப் பத்து என அழைப்பர். அதில் உள்ள சில அகப் பொருட் துறைகளை இன்று காட்சிப் படுத்தப் போவதால் இப்படி எழுதினேன்

கிண்டலார்;

அப்பாடா/ மிகமிக, மிகவுங் கலங்கிப் போனேன். காராளர் கலப்பைகளை இழுத்துச் சென்று மேதினி காக்கும் அந்த மேதிகளைத்தானே எருமை என்பார்கள் .

சூத்திரதாரர்;

ஒன்று சொல்லினை அதுவும் நன்று சொல்லினை. எருமைக் கடா இயமனின் வாகனம் என்றுதான் புலவர்கள் புகழ்வார்கள். ஆனால், நீயோ அதை மேதினி காக்கும் மேதி என்கிறாய். நீ ஒரு நல்ல தமிழறிஞன் அப்பா.

கிண்டலார்; அது சரி, இந்தப் பத்திலும் புலவி வருமா/

சூத்திரதாரர்;

கிண்டலாரே, தமிழ் மறையாந் திருக்குறளிற் கூடப் புலத்தல், புலவி, ஊடல், கூடல் என்பனபற்றிப் பலப்பல சேதிகள் பல குறள்களிற் சொல்லப்படுகின்றன. அக வாழ்க்கையில் இவை சகசம். இன்பமுந் துன்பமுஞ் சேர்ந்ததே வாழ்க்கை. ஆகையால் அகப் பொருள்பற்றிய சேதிகளில் இத்தகைய மனப் பிணக்குகள் ஏற்படல் தவிர்க்க முடியாததாகி விடுவதுண்டு.. பிணக்கம், இணக்கமாகக் கணக்கைச் சமன் செய்து நடத்திவதே குடும்ப வாழ்க்கை. எனவே கனவில்லாத நித்திரை இல்லை என்பதுபோலப் புலத்தல் இல்லாத மனை வாழ்க்கை கிடையாது. எனவே இந்த எருமைப் பத்திலும் பரத்தை, புலத்தல், ஊடல் , வாயில்கள் பற்றிய சேதிகள் நிறைய இல்லா விட்டாலும் ஓரோ இடங்களில் அதன் வாசனையைப் பரப்பவே செய்கிறது.

கிண்டலார்;

சூத்திரதாரரே, கதவுகளுக்குப் பின்னல் இடம் பெறும் இத்தகைய அசிங்கங்களுக்குச் சங்க நூல்கள் இவ்வளவு

முக்கிய இடங் கொடுத்து வெளிச்சமிட்டுக் காட்டுவது தப்பில்லையா?

சூத்திரதாரர்;

கிண்டலாரே. அபாயகரமான இடங்களில் இங்கே வராதே, ஆபத்து என எச்சரிக்கை எழுத்து இருக்கும் அல்லவா. அதெல்லாம் எதற்கு? மற்றவர்கள் ஆபத்தான இட மென்று அறிந்து, அகல விலகிப் போகத்தானே! அதுபோல, வாழ்க்கைக்கு வழி காட்டும் இலக்கியங்கள், வழுக்கும் இடம்! கவனம்!! வழுக்கி வீழ்ந்து வீணுக வருத்தத்தை வாங்கிக் கட்டிக் கொள்ளாதே!!! என்பதை வழிப் படுத்துவதே அவற்றின் நோக்கம். நாம் இப்படியே பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. நாடகத்தைத் தொடங்குவோம்.

(முன்னெழினி அகலப் பின்னல் அரங்கு தோன்றுகிறது. தலைமகன், தலைமகளைச் சந்திக்கும் விழைவுடன் பகற்குறியிடை காத்திருக்கிறான். தோழி தனியாக வருகிறாள்)

தலைவன்:

ஏன் தோழி! தலைவி வந்திலளோ. அப்படியாயின் அதற் கான காரணம் யாதோ. அவள் வெகுண்டனளே!

தோழி;

தலைவனே! நீ அவ்வாறு அவளைக் குறைத்து மதிப்பிடுதல் நல்லதல்ல. காரணம்,

நெறிமருப் பெருமை நீல விரும்போத்து
வெறிமலர்ப் பொய்கை யாம்பன் மயக்கும்
கழனி யூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே 91

இவளின் தந்தையின் ஊரின் பழனத்தில் ஆம்பல் மலர்களிடையே நெய்தல் மலர் நிறமொத்த எருமைக் கன்றுகள் சேறி உழக்கிக் கெடுக்கினறன. இதனால் விரிந்தலர்ந்த ஆம்பல்கள் தஞ் சோபையை இழக்கின்றன. எனினும் இவள் தந்தையோ அவற்றை அழித்தொழிக்கும் மனமுடையவரல்லர். அதுபோல நீ வரைவு வேண்டி வரின் ஒதுக்க மாட்டார். இவள், அத்தகைய பரந்த மனநெறி கொண்ட தந்தையின் மகளென்பதை அறியாயோ?

(அங்கே மறைந்திருக்கும் தலைவியைக் கண்டு
மனம் பூரித்துத் தலைவன்;)

ஒளிருந் தொடி அணிந்த மங்கையே கரிய, வளைந்த கொம்புடைய எருமை கன்றுக்கு முலை நிறைந்த பாலூட்டும் உந்தையின் ஊருக்கு வரைவு வேண்டி விரைவில் வருவேன். உன்னை என் இல்லக் கிழத்தியாகப் பெறுவேன். அஞ்சற்க!

கருங்கோட் பெருமைச் செங்கட் புனிற்றுக்
காதற் கிழவிக் கூறுமுலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருது
மொண்டொடி மடந்தை நின்னையாய் பெறினே 92

(காட்சி கரைகிறது. நெடுநாட் பின்னர் தலைமகன் தோழியைக் கண்டு; தலைவி தன்பால் புலந்தனள். அந்தப் புலவியை நீக்கும்படி வேண்டுகிறான்; அப்போது அங்கே செவிலியுடன் வந்த தோழி அவளுக்குச் சொல்வதுபோலத தலைவன் கேட்கத் தக்கதாக;)

தோழி;

எருமை நல்லேற்றின் மேய லருந்தெனப்
பசுமோ ரோடமோ டாம்ப லொல்லா
செய்த வினைய மன்ற பல்பொழிற்
முதுண வெறுக்கைய லாகியிவள்
போதவிழ் முச்சி யூதும் வண்டே 93

அன்னாய்! வண்டுகள், இங்குள்ள, ஆம்பல் மலர்கள் எருமைக்கு உணவாகின்றன என்பதால் அவற்றில் உள்ள தேன் நுகர்தலைத் தவிர்க்கும். அதுமட்டல தங்கள் பசி அகற்றப் பல சோலைகளில பலவித மலர்களில் உள்ள தேனை உண்ணவும் விரும்புவதில்லை. ஆயினும் அத்தகைய வண்டுகள் நின் மகளின் தலையிற் சூடிய மொட்டுகள் மலர்ந்து தேன் சொரிய ரீங்கார மிட்டு ஒலிக்கும்.

செவிலி;

கேட்க இனிதாக உளது. இத்தகையாட்கு பிறர் மனை நயவாப் பெருந்தகையாளனே கணவனாக அமைய வேண்டுமென்பதே என் வேட்கை.

தலைவன்; (தனக்குள்).

தோழி நான் செய்யத் தாமதிக்குங் காரியத்தை நயம்பட எடுத்து உரைத்தாள். தலைவியுடனான என் வதுவை

விரைவில் நடக்கட்டும் என்பதை வேறு எவ்வாறுதான் தெளிவு படுத்த முடியும்.

(காட்சி மீண்டும் கரைகிறதுகடி மணம் நடந்து பல வருடங்கள் சென்றகாலை பரத்தை பால் தலைமகன் நாட்டங் கொண்டானென அறிந்த தலைவி அவனுடன் புலக்கின்றுள்,
அதற்கு வாயில் நேரத் தலைமகன், பாணன் பாங்கன் ஆதிய வாயில்களாருடன் வருகின்றுன்)

பாணன்;

தங்காய்! இதோ, உன்னை விட்டுப் பிரிந்து போனதாக எண்ணி வருந்தும் உன் தலைவன் உன்னிடமே வந்து விட்டார். அவர்மேல் நீ கொண்டுள்ள வெறுப்பை வேட்கையாக மாற்றி ஏற்றுக் கொள்க.

தலைவி;

கருங்கோட் டெருமை கயிறுபரிந் தசைஇ
நெடுங்கதிர் நெல்லி ணுண்மேய லாரும்
புனன்முற் றூரன் பகலும்
படர்மலி யருநோய் செய்தன னெமக்கே 95

பாணனே! நீர் நினைப்பதுபோல அவ்வளவு விரைவில் மறந்து விடக் கூடிய காரியத்தையா, உந்தன் தலைவன் எனக்குச் செய்துள்ளான். உடனிருந்தே கொல்லும் வியாதியாக அல்லவோ அவர் என்னை வருத்தி உள்ளார். எனது தலைவன் சாதாரணப் பட்டவரல்லர், தன்னைப் பிணித்த கயிற்றை அறுத்துக் கொண்டு போய் நெற்போரை உண்ணும் கரிய கொம்புள்ள எருமை வாழும் ஊரன். இரவும் பகலும் என்னை வருத்துகின்ற நோயைத் தந்தவர். அத்தகைய ஒருவருடன் நான் எப்படி புலத்தலைத் தவிர்ப்பேன். அது முடியுமான தொன்றெனிற் புகல்க.

பாணன்;

நங்காய்! நீ. சொல்வது எல்லாந் தவறலாதனவே . ஆயினும் இதை உனது எதிர்காலக் குடும்ப நலன், மகவுகளின் மகிழ்ச்சி கருதி ஆய்ந்து பாரம்மா.....

தலைவி.

என் மனம் படும்பாடு எதுவென நீவிர் அறியீர். ஆகவே இதையிட்டு வாயில் தேடி வந்த நீங்களும் ஒரு தடவை ஆய்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

(தலைவன் உட்பட யாவரும் எழுந்து வெளியேறுகின்றனர். வழியில் தோழியைக் கண்டு தலைவன் தன் தலைவியின் கொடு மனம்பற்றிக் கூறுகிறான்)

தலைவனே! தலைவி தனது உள்ளத்தைக் கடினமாக்கிக் கொண்டாள், அதனால் உம்மைக் கொடுமைப் படுத்துகிறாள். உன வாயிலை வெறுத்துத் தள்ளுகிறாள் என்றெல்லாஞ் சொல்கின்றனை. இதைக் கேட்பதற்கு எனக்கு வியப்பாகவே உள்ளது. நீயோ;

தண்புன லாடுந் தடங்கோட் டெருமை
திண்பிணி யம்பியிற் றேன்று மூர
வொண்டொடி மடமக ளிவளினு
நுந்தையும் யாயும் கடியரோ நின்னே 98

கவிழ்ந்த ஓடம் நீரில் மிதப்பதுபோல எருமை கிடக்கும் தடாகங்கள் மிகுந்த உரவன் நீ.. தலைவி உம்மிற் கண்ட தவறுகளைச் சுட்டிக் காட்டுவதில் என்ன தவறுளது? ஏன், உந்தையுந் தாயும் உம்மிற் பிழை காணில் கண்டியாது விடுவது உண்டோ, அல்லது கடினமாகக் கண்டிப்பார்களோ கூறுக . அவளது அன்பைப் பெற வேண்டில் அவளது நம்பிக்கைக்குப் பாத்திரனவதே மேலான காரியம். ஆதலால் பரத்தையர் பால் செல்வதை விடுத்து அவளிடம் போய் ஊடலை நீயே அகற்றுவாயாக.

(தோழியின் அறிவுரை கேட்ட தலைமகன் தலைவியிடஞ் சென்று; தன் தவறை உணர்ந்ததாகவும் இனிமேல் இத்தகைய தவறுகள் நடவாது எனவும் பொருந்தி அவளின் புலவியை நீக்கிக் கூடுகிறான். அதைக்கண்ட)

பாணன்;

அணிநடை யெருமை யாடிய வள்ளன்
மணிநிற நெய்த லாம்பலொடு கலிக்குங்
கழனி யூரன் மகளிவள்
பழன வூரன் பாயலின் றுணையே 96

ஆகா, இவளன்றே பெண், தன் கணவனை மன்னித்துத் தன் மனையிற் சேர்த்துக் கொண்டாள். திணை மரபு கடந்து மருதத்தில் ஆம்பலுடன் சேர்ந்து நெய்தல் மலருந் தடாகத்தை உழக்குகின்ற எருமைகள் நிறைந்த பழன ஊரன்மேற் கொண்ட ஊடலை விலக்கி அவனுடன் கூடிய

இவள் மஞ்சத்தை நிறைக்குந் தக்க துணையாவாள். இதற்கு நம் தலைவன் கொடுத்து வைத்தவனே!

தோழி;

புனலாடு மகளி ரிட்ட வொள்ளிழை
மணலாடு சிமயத் தெருமை கிளைக்கும்
யாண ரூரன் மகளிவள்
பாணர் நரம்பினு மின்கிள வியனே 100

தலைவி, இயற்பட மொழிந்தனள் என்பதைக் கேட்க என மனம் துள்ளிக் குதிக்கிறது. புனலாட வந்த பெண்கள் தமது ஆபரணங்களை மறைவாக ஒரு திட்டில் வைத்திருப்பார்கள். அதைப் புல் மேயும் எருமைகள் தமது கொம்புகளால் கிழிக்க, அவை ஒளிரும். இத்தகைய ஊரன்பால் தயவு கொண்ட தலைவி பாணர்தம் கைகளில் உள்ள யாழ் நரம்புகள் எழுப்பும் இசையிலும் பார்க்க இனிமையான சொற்களைப் பயப்பவளே!

தலைவன்;

எங்கே சென்றாலும் அது இருக்கும் இடத்தைக் காட்டத் தக்கதாக கிலுகிலுப்பை கனிக் கொத்துகளாலான மாலையை மள்ளர் எருமைகளிற் சூட்டும் ஊரனின் மகளான இவள், தடாகத்தில் மலரும் நீர்ப் பூக்களிலுங் குளிர்ந்த தகையளே!

பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தா ளெருமை நன்று வெரூஉம்
பொய்கை யூரன் மகளிவள்
பொய்கைப் பூவினு நறுந்தண் ணியளே 97

அற்ப சுகத்திற்காக, அலைந்து உலைந்த என்னைத் தன்னுடன் இணைத்துக் கொண்ட என் இல்லக் கிழத்தி; வயல் நிலத்தில் வளரும் பாகற் செடியை அதன் கண் கூடு கட்டியுள்ள முயுறுகளுடனும் நெற்கதிரொடும் கெடுக்கும் எருமைகள் மிக்க ஊரன் பயந்த இவள் எனது பிணியை அகற்றும் மருந்தானாள்.

பழனப் பாகன் முயிறுமூசு குடம்பை
கழனி யெருமை கதிரொடு மயக்கும்
பூக்கஞ லூரன் மகளிவ
ணோய்க்குமருந் தாகிய பணைத்தோ ளோளே 99

மள்ள ரன்ன தடங்கோட் டெருமை
மகளி ரன்ன திணையொடு வதிபு
நிழன்முதி ரிலஞ்சிப் பழனத் ததுவே
கழனித் தாமரை மலரும்
கவின்பெறு சுடர்நுத றந்தை யூரே 94

(அப்பக்கம் வந்த தோழியை அழைத்து)

என் மீழ்கையைத் தோழியுடன் கூறி மகிழ்வதே அவளுக்குச் செய்யும் நன்றிக் கடனுகும் பாங்கியே கேட்குக. உழவர்களின் உரமான ஏர்க் கொழுக்களைப் போல வளைந்த கொம்புகளை உடைய எருமைகள் தமது நாகுகளுடன் இணைந்து வாழும் வயற் தடாகங்களிலே தாமரை மலரும் அழகிய ஊரவனின் மகள் உனது தலைவி என்பதை உறுதிப் படுத்திய பெருமைக்குரியள் . அதை அவளது அழகான சுடரும் நுதலே சான்று கூறும்.

பாங்கி:

தலைவனே! நீவாழ்க. என் தலைவி வாழ்க! நான், அன்றும் இன்றும் என்றும் வேண்டுவது இந்த இன்பமே! அதையே நீவிரும் உமது வாழ் நாளிற் கொள்க.

ஐங்குறு நூற்றின் மருதத் திணை 100 பாடல்களின்
பதினேராவது அரங்கக் காட்சி நிறைவுற
முன்னெழினி அரங்கை மூடுகிறது

மூன்றுவது பகுதி

ஐங்குறு நூற்றுச் செய்யுள்களின்
நாடக வடிவிலான
நலனுய்வுக் காட்சிகள்

இரண்டாவது நெய்தல் எழினி அரங்கம்

அம் மூவனாரின்
நெய்தற் திணை சார்ந்த
100 பாடல்களின் காட்சிப் படுத்தல்கள்

11. தாய்க்குரைத்த பத்து
12. தோழிக்குரைத்த பத்து
13. கிழவற்குரைத்த பத்து
14. பாணற்குரைத்த பத்து
15. ஞாழற் பத்து
16. வெள்ளாங் குருகுப் பத்து
17. சிறுவெண் காக்கைப் பத்து
18. தொண்டிப் பத்து
19. நெய்தற் பத்து
20. வளைப் பத்து

2. நெய்தற் திணை எழினி

ஐங்குறு நூறில் இரண்டாவது நூறு பாடல்களை அம்மூவனுர் எனும் கடைச் சங்கக் காலத்துப் புலவர் பாடினுர். மூவன் என்பது இவரின் இயற் பெயர். இவரது பாடல்களில் சேர நாட்டு மாநதை, தொண்டி ஆதியவாம் ஊர்கள் கூறப்பட்டுள்ளன. இவரது வதிவிடம் சேர நாட்டின் மேலைக் கடற்கரையை அடுத்தாக இருந்திருக்க வேண்டும். இவரது பாடல்களில் சோழ நாட்டுக் கோயில் வெண்ணியும் பாண்டி நாட்டுக் கொற்கை, நடுக் காட்டிடை அமைந்த திருக்கோவலூர், பெண்ணை யாறு என்பனவும் கூறப்பட்டுள்ளன. இதை விட நற்றிணையில் பத்துப் பாடல்களும் குறுந் தொகையில பதினேர் பாடல்களும் அக நானூற்றில் ஆறும், ஐங்குறு நூறில் 100 மாக 127 பாடல்கள் பாடியுள்ளார். இவற்றுள் 120 பாடல்கள நெய்தற் திணை சார்ந்தவை.

இவரது ஐங்குறு நூற்றுப் பாடல்களில் தாய்க்கு ரைத்த பத்து முதலாக வளைப்பத்து வரையும் இடம் பெறும் பாடல்களின் இலக்கிய நயங்களை உணர்த்தும் முகமாக நாடகத் தமிழ் நடையில் ஒரு ஆய்வு செய்யப்படுகிறது.

தொடர்ந்து காட்சிபடுத்தப்படும் நாடகங்கள் இடம்பெறும் களத்தின் பின் புலத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ளத் தக்கதாக அவற்றை வரைந்த திரைச் சீலை அரங்கின் பின்னல் தொங்க விடப் பட்டுள்ளது. அதில் பின்வரும் காட்சிகள் உள்ளதையும் அவற்றில் நீல நிறம் அளவுக்கு மிகையாகக் கலந்துள்ளதையுங் அவதானிக்கலாம்;

மக்கள் வாழிடத்தைப் பூமுக இயல்பு கருதி ஐந்து நிலமாக வகுப்பர், அதில் கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். நீல வானத்தை நீலக் கடலுட் சொருகி வைத்தது போன்று அவை ஒன்று சேரும் அடிவானத் தோற்றத்துடன் பரந்த வெளியாக இலங்கும் நெய்தல் நிலத்தில் அதிகமாக நீல வர்ணமே மிஞ்சி நிற்கும்.

கடலிற் பரந்து மிதக்கும் படகுகள், அலையால் அசைவாடும். அவற்றில் கட்டப்பட்டுள்ள பாய்கள் அவற்றைக் கடலில் நகருந் தேராகக் காட்டும். அங்கு மலரும் நெய்தற் பூ, அடம்பன் பூ என்பனவுங்கூட நீல வர்ணமாகவே இருக்கும். எனவே, இந் நிலத்தின் காட்சிகளில் உள்ள வர்ணங்களில அதிகமாக உயர்ந்து விளங்குவது நீலமே!

கடற்கரையை ஒட்டி அமைந்த நிலத்தில், தாழை மடல் விரிக்கும், புன்னை கிளை பரப்பும். நீர் நிறைந்த சதுப்பு நிலத்திற் கண்டல் விழுது விட்டு விரிந்து படரும், தில்லை நீண்டுயர்ந்து அடர்த்தியாய் வளரும். செருந்தியும் ஞாழலும் செழித்து வளர்ந்திருக்கும். அவற்றின் மலர்கள் ஆங்காங்கு மலர்ந்து அழகு செய்யும். நிலத்தை அடம்பன் கொடி வளர்ந்து பரந்து மறைக்கும்.

நாரையும் கடற் காகமும் கடற் உயினங்களாக நிலத்திலும் நீரிலும் வாழும், சுறவும் மீனினங்களும் கடலில் வாழும். கரைகளில் பரதவரின் படகுகளும் சிறு குடிகல்களும் அமைந்த பாக்கங்கள் பரந்து கிடக்கும். மீன் பிடிக்கும் வலைகளை ஆங்காங்கு காய விட்டிருப்பார்கள், கடல் படு பொருட்களான மீன், நண்டு, இறல், சங்காதியனவற்றை விற்கும் இடங்கள் படகுகளின் ஓரத்தில் நடை பெறும், ஒருபால் மீன்களை வெயிலில் உணர்த்திக் காய விடுபவர்கள் அவற்றை இரஞ்ச வரும் பறவைகளைத் துரத்துவர். பரவையிற் பாயும் புரவிகள் எனும் நாவாய்கள் பல திசை சென்று திரட்டிய வணிகப் பொருட்களைச் சந்தைப் படுத்த அவை ஓரிடத்தில் ஒருங்கு சேர்ந்து துறைமுகமாக்கும். அங்கே கொள்வாரும் விற்பாருங் கூடுவதால் பட்டினத் தோற்றத்தை உருவாக்கும்.

ஆங்காங்கு கடல் நீரைத் தேக்கிக் கதிரோன் வெயிலாற் சுவற வைத்து விளைவிக்கும் உப்பு வெள்ளியாக விளங்கும். அதை விளைவித்து விளைவறுக்கும் அளவரும் அளத்தியரும் ஆங்காங்கு திரிவர். பரதவரும் பரத்தியரும், நுழையரும் நுழைச்சியரும் மீன் பிடித்தல் உணர்த்தல், விற்றலாதிய வினைகளில் ஈடுபடுவர். அவர்களின் தலைவர்களான துறைவன், சேர்ப்பன், கொண்கன், புலம்பன் என்பாரும் அவர்களது துணைவிகளான பரத்தி, நுளைச்சி ஆதியோர் நெய்தல் நில மக்களின் நலன் பேணுவர். கடலாடி மகிழ்வோரின் காதில் விளரி யாழின் இசையும் செவ்வழிப் பண்ணின் கானமும், மீன்கோட் பறை, நாவாய்ப் பறையின் தாளமும் கேட்கும். ஆங்காங்கு வருணனை வணங்கும் வழிபாட்டொலி ஒலிக்கிம். மீன் மீன உணர்த்திய கருவாட்டு உப்பு மணங்கள எப்பகமும் உலாவும்

காட்சி: ஒன்று

களம்; தலைவியின் தாயில்லம்;

காலம்; மாலை

பாத்திரர்கள்; நாடகாசிரியன், தலைவி, செவிலி, பாங்கி, தலைவன்.

நிகழ்ச்சி;

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் திரும்பி வந்ததைத் தோழி செவிலிக்கு உரைப்பது.

நாடகாசிரியர்;

வணக்கம். அவையோரே! ஐங்குறு நூற்றின் இரண்டாவது பகுதியை நாடகமாகப் படைத்து உங்கள் முன் நடாத்தும் பொறுப்பு என்மேற் சுமத்தப்பட்டுள்ளது. நெய்தற் திணைக்குரிய அகப் பொருள் சார்ந்த 100 பாடல்களை உங்களுக்கு நாடகமாக்கித் தர முயன்று கொண்டிருக்கிறேன். அதனிலும் இந்த நாடகங்களின் மூலம் இவற்றை மக்கள் ஆய்ந்து தெளியும் உள்ளான நோக்கமும் உள்ளதாக இருக்க வேண்டுமென்பது அரங்கத்தாரின் ஆணை. பொதுவாக அகப் பொருட் துறைகளை அறியாதவர்களுக்கு அகத் திணைப் பாடல்கள் சிதம்பர சக்கரமாகவே இருக்கும் என்பர். எனவே இடைக் கிடை ஒவ்வொரு நாடகத்திலும் எடுத்தாளப்படும் ஐங்குறு நூற்றுப் பாடல்களின் அகப்பொருள் சார்ந்த கருத்துகளை எடுத்து நான் உங்களுக்கு நாடக ஆரம்பத்தில் விளக்க இருக்கிறேன்.

முதலாவது காட்சியில் வரும் அகப்பொருட் கிளவிகளுள் முதலில் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல் என்பதை நாடக வடிவில் விளக்குகிறேன்.

(விரைவில் பொருள் தேடற்காக வேறிடம் பிரிந்து செல்ல இருக்குந் தலைமகனைத் தோழி சந்திக்கிறாள்)

தோழி;

தலைவனே, நம் தலைவி மிகவும் அஞ்சுகிறாள். வரைவுபற்றி அவளைப் பயந்தார் சம்மதித்தாலும் அதற்கான பொருள் தேட நீர் செல்ல வேண்டுமென்று சொல்கின்றனை. இது நியாயமா?

தலைவன்;

பாங்கியே! அவளின் தமர் என்னை உயர்வாகக் கருத வேண்டில் என்னிடம் பொருள் இருக்க வேண்டு மென்பதை நீ அறியாயா? அல்லது தலைவிதான் உணராளா? . எதற்கும் அஞ்சேல், எனக்கு அடுத்த நாட்டிற்குத் தூது செல்லும் பணியை, இந்நாட்டரசன் ஈந்துள்ளான். அதனை முடித்து வந்தால் எனக்குப் போதிய பொருள் கிட்டும். ஆதலால், நான் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிகிறேன். விரைவிற் திரும்பி வந்து தலைவி விரும்பியபடியே வதுவை செய்வேன் என்ற உறுதி உரையைப் பகர்வாயாக.

(காட்சி கரைகிறது)

நாடகாசிரியர்;

அடுத்ததோர் சொற்றொடர் அறத்தொடு நிற்றல் என்பதாகும். அதை விளக்கும் சிறு நாடகத் துணிக் கையை இப்போது காண்க.

(காட்சியில் தலைவி அதியற்றவளாக அமர்ந்திருக்கப் பாங்கி அவளருகில் நிற்கின்றாள்);

தலைவி;

பாங்கி கேட்குதி, எமது களவியல் வாழ்வு மற்றவர் களுக்குச் சிறிது சிறிதாக தெரிகின்றதுபோல உள்ளது. இது பெருத்து ஊரலராகில் எனைப் பயந்தார்க்குந் தமருக்கும் நான் எப்படி முகங் கொடுப்பேன். இதை அவர்களுக்கு எவ்வாறு உணர்த்தலாம் என்பதை எண்ணும்போது வானமே தலையில் இடிந்து வீழ்வது போன்ற உணர்வே உண்டாகிறது..

தோழி;

தலைவியே! களவுடைய காதல் நமக்குப் புதியதாக இருப்பினும் உன்னைப் பயந்தவர்களுக்குப் பழகிப்போன பழைய சேதியே. அதுமட்டல்ல இது உலகியற்கையுங் கூட. ஆதலால், நான் இதைச் செவிலியிடஞ் சொல்வேன். அவள் உன் பெற்றாரிடம் உரைப்பாள், இவ்வாறுக நாம் அறத்தொடு நின்று, இதுகாலும் மறைத்தவற்றை வெளிப்படுத்தலாம். அப்போது, அதற் கானவற்றை அவர்கள் மெற்கொண்டு செய்வர். எனவே அஞ்சாதே. நீ உன் காதலை எனக்கு உணர்த்திடுய. நான்

உன் தலைவனுக்கு உணர்த்தினேன். இனி செவிலிக்கு உணர்த்துவேன். அவள் உன் தாய்க்கு உரைப்பாள், தாயோ தந்தைக்கு உணர்த்துவாள் அதன் பின் .....

நாடகாசிரியர்;

மேலும், நுதல் பசத்தல், மாமையுறல எனும் இரு சொற்கள், தலைவியின் மனநிலை காரணமாக உடலில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பன. நெற்றி சிவத்தலால் அல்லது வெளிறுதல் உடலில் பசலை படர்தல் என்பதையே இச்சொற்கள் குறிக்கும். இனி தாய்க்குரைத்த பத்து எனும் நாடகப் பகுதியைப் பார்ப்போம்

(மனை முற்றத்தில் அமர்ந்திருக்கிம் செவிலியண்டை வெளியே சென்றிருந்த தோழி ஓடி வந்து;)

தாயே ! நீ நெடுங் காலம் வாழ்வாயாக. நான் சொல்லும் வேண்டுதலை நின் செவியில் வேண்டிக் கொள்க.

செவிலி;

ஏன்! இப்படி அறக்கப் பறக்க ஓடி வருகின்றனை. ஓடி வந்ததால் இரைக்கும் மூச்சே என்னை வாழ்த்துகிறேதே, என்னிடம் எதனை வேண்டுகிருய், எதை நான் செவி கொள வேண்டும்/

தோழி;

அன்னை வாழிவேண் டன்னை யுதுக்கா
ணேர்கொடிப் பாசடும்பு பரியவூர் பிழிபு
நெய்தன் மயக்கி வந்தன்று நின்மகள்
பூப்போ லுண்கண் மரீஇய
நோய்க்குமருந் தாகிய கொண்கண் றேரே 101

அன்னை வாழிவேண் டன்னை நம்மூர்
நீனிறப் பெருங்கடற் புள்ளி னுதது
துன்புறு துயர நீங்க
வின்புற இசைக்குமவர் தேர்மணிக் குரலே 102

வந்து விட்டது தாயே! வந்து விட்டது!!. முன்பொருபோது நின்னிடம் நான் அறத்தோடு நின்றகாலை, நம் தலைவி ஒருவன்பால் தனது மனதைக் கொடுத்துவிட்டாள். அதனால், ஊரலர் உண்டாயது. அவளது கண்கள் பசலை பூத்தன. இன்று நமது கடற்கரையில் வாழும் பறவை களின் துயரத்திலும் பார்க்க நாம் அடைந்த துன்பமுங்

கவலையுந் தொலைய, வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த நமது நெய்தல் நிலத் தலைவனின் தேர் வினை முற்றி ஊர் திரும்பி விட்டதம்மா மேலும்;

அன்னை வாழிவேண் டன்னை புன்னையொடு
ஞாழல் பூக்குந தண்ணந் துறைவ
னிவட்கமைந் தனனுற் றனனே
தனக்கமைந் தன்றிவண் மாமைக் கவினே 103

செவிலி;

நல்லது, தேர் வந்துவிட்டதைத் தானே கண்டனை. தலைவனைக் கண்டனையா/. அவரேதும் சொன்னதுண்டோ. நல்லதொரு உவமையையுஞ் சொல்லினை. நெய்தல் நிலத் திற்கே உரிய புன்னை மலரும் புலிநகக் கொன்றை, மயிர்க் கொன்றை எனும் ஞாழல் மலரும் நிறைந்த துறைவன் என்றனை. அதில் என் மகனை ஞாழல் எனும் அழகிய செம்மஞ்சள் கலந்த பொன்னுவார மலரையொத்த பலினியை ஒப்பிட்டுச் சொன்னது மனதிற்கு மிகமிக மகிழ்ச்சியாக இருக்கிறது. அவை வேறு வேறு இனத் தாவரமாக இருந்தாலும் அவை நெய்தற் திணைக்கே உரித்தென நீ சொன்னதின் கருத்தையும் நான் புரிந்து கொண்டேன்.

தோழி; மேலும்;

அன்னை வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பலர்மடி பொழுதி னலமிகச் சாஅய்
நள்ளென வந்த வியறேர்ச்
செல்வக் கொண்கன் செல்வன.: தூரே 104

அன்னை வாழிவேண் டன்னை முழங்குகடற்
றிரைதரு முத்தம் வெண்மண லிமைக்குந்
தண்ணந் துறைவன் வந்தெனப்
பொன்னினுஞ் சிறந்தன்று கண்டிசி நுதலே 105

அன்னை வாழிவேண் டன்னை யவர்நாட்டுத்
துதிக்கா லன்னந் துணைசெத்து மிதிக்குந்
தண்கடல் வளாயினு மிலங்குமிவ
ளங்கலி ழாகங் கண்டிசி னினைந்தே 106

இவள் விரும்பும் சேர்ப்பனின் தேர் வந்ததென அறிந்த அவளில் ஏற்பட்டுள்ள உடல் மாற்றங்களைக் கவனித்துப்

பாருங்கள், அதோ! தெரிகிறதே, அந்த ஊர்தான் கொண்க னுடைய ஊர். அங்கே மணலிடை கிடக்கும் முத்து நகைக்கும் நெய்தல் வளமிடையது. அதுபோலத் தேரொலி கேட்ட நம் தலைவியின் நுதலும் சிவந்து பொலிவதைக் கண்டீர்களா? சங்கைத் தனது பேடை யென மயங்கிக் கூடும் அன்னங்கள் அழகு செய்யும் இவ ளது தேகம் மாமை அகன்று பொலிவுற்று இருப்பதையும் கண்டீர்களா?

அன்னை வாழிவேண் டன்னையென் றேழி
சுடர்நுதல் பசப்பச் சாஅய்ப் படர்மெலிந்து
தண்கடற் படுதிரை கேட்டொறுந்
துஞ்சா ளாகுதல நேகோ யானே 107

அன்னை வாழிவேண் டன்னை சுழிய
முண்டக மலரும் தண்கடற் சேர்ப்ப
னெந்தோ டிறந்தன ளெனி
னெவன்கொன் மற்றவ னயர்ந்த தோளே 108

கடலின் இரைச்சல் கேட்டு அஞ்சுகிறாள். இரவு முழுதும் துயில் மறந்து முள்ளிச் செடிகள் மலரும் நெய்தல் சேர்ப்பன் என்னை விட வேறு எந்த பெண்ணின் தோளை அணைந்து விட்டானோ என இரங்குகிறாள் தாயே!

அன்னை வாழிவேண் டன்னை நெய்த
னீர்ப்படர் தூம்பின் பூக்கெழு துறைவ
னெந்தோ டிறந்த காமம் யெவன்கொல்
பன்னாள் வருமவ ளளித்த பொழுதே 109

அன்னை வாழிவேண் டன்னை புன்னை
பொன்னிறம் விரியிம் பூக்கெழு துறைவனை
யென்னை யென்றும் யாமே யிவ்வூர்
பிறிதொன் றுகக் கூறு
மாங்கு மாக்குமோ வாழிய பாலே 110

செவிலி;

தோழி! நீ சொல்வதன் பொருளும் அதன் உள்ளே பொதிந்த உட் பொருளும் எனக்கு நன்கு புலனுவதுமட்டுமல்ல, இனிமேல்; நான் செய்ய வேண்டியவற்றையுஞ் சுட்டிக் காட்டுகின்றன. மதகிடை நெய்தல் படர்கின்றதென்பதால் அவள் கவலையால் கவல்வதையும் புன்னை மலர் விரியும் துறைவனை வேறு எவரும் வதுவை செய்வரோ எனவும்

அவள் துயரப்படுவதையும் எனக்கு உணர்த்தினை. அவ்விதம் ஏதும் நடக்காதிருக்க நான் உடனடியாக ஆவன செய்வேன் என அவளிடஞ் சொல்க.

தோழி;

அம்மா அதுவே நான் வேண்டுவது, உடனடியாக விரைந்து சென்று அவளிடம் இந்தச் செய்தியை உரைப்பேனுக.

செவிலி;

தோழி, நீ போய்ச் சொல்ல முன்னரே இந்த இனிய செய்தி அவள் செவியினை நிறைத்திருக்கும் அதலால் ஆறுதலாகச் செல்க.

தோழி;

என்னம்மா சொல்கிறீர்கள். அவளுக்கு இதை நான் போய்ச் சொல்லாமல்..

செவிலி;

அதோ பார், அங்கே அவள் மறைந்து நின்று நாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதை நான் ஆரம்பத்திலேயே கவனித்து விட்டேன்!

(தலைவியைப் பாங்கி துரத்தி ஓட
அவள் அன்னை வாழி வேண்டன்னை எனப் பாடிக் கொண்டே
மறைந்து கொள்கிறாள்.)

(காட்சி கரைகிறது)

முன் எழினி அரங்கை மறைக்க
முதலாவது காட்சி முழுமை உறுகிறது.

காட்சி; இரண்டு

களம்; சிறைப் புறம்

காலம்: மாலை

பாத்திரர்கள்; நாடக ஆசிரியர், தலைவன், தலைமகள், தோழி

நிகழ்ச்சிகள்;

தங்கள் களவியல் வாழ்க்கையை அறிந்த தாய் தந்தையர் தலைவியை இற்செறிக்கிறார்கள், இதனால் வழக்கம்போல் சிறைப்புறத்தே சென்று தலைவனைக் காண முடியாத தனது நிலையைத் தலைவனிடம் எடுத்துச் சொல்வதுடன் வரைவுத் திறத்தையுந் தான் வேண்டி நிற்பதாக அவனிடம் உணர்த்தும்படி தலைவி தன் தோழியிடஞ் சொல்கிறாள்

நாடகாசிரியன்;

தோழிக்குரைத்த பத்து என்ற பகுதியைக் காட்சிப் படுத்தும் இப் பகுதி நெய்தல் நில அகப்பொருட் துறை சார்ந்தது. இந்தப் பத்தில் பயிலப்படுஞ் சிறைப்புறம், வரைவுத்திறம், இற்செறிப்பு, என்ற மூன்று சொற்களின விளக்கங்கள் நாடக பாத்திரர்களின் உரையாடல் மூலந் தெளியக் கூடியதாக உரையாடல் அமைந்துள்ளது. இனி நாடகத்துள் நுழைவோம்.

(தலைவியின் களவியல் தாய் தந்தைக்குத் தெரிந்ததும்,
அவளை வெளியே செல்ல விடாது வீட்டிலே
தங்க வைத்து விடுவார்கள். அதனால் தலைவனைச்
சந்திக்கும் சிறைப்புறத்தே வந்து தன்னைக்
காத்து நிற்பவனிடம் நிலைமையை உணர்த்துமாறு
தோழியிடஞ் சொல்கிறாள்,)

தலைவி;

அம்ம வாழி தோழி பாணன்
சூழ்கழி மருங்கி னுணிரை கொளீஇர்
சினைக்கயன் மாய்க்கும் துறைவன் கேண்மை
பிரிந்தும் வாழ்துமோ நாமே
யருந்தவ முயற லாற்ற தேரே 111

அம்ம வாழி தோழி பாசிலைச்
செருந்தி தாய விருங்கழிச் சேர்ப்பன்
முன்வரக் காண்குவ நாமே
மறந்தேர மன்ற நாணுடை நெஞ்சே 112

தோழி;

நமது தலைவன் ஊர் எவ்வளவு அழகானது என்பதை நீ சொல்லும்போது அந்த இடத்திலேயே நான் இருப்பதாக உணர்கிறேன். புதிய இரைகளை தூண்டிலிற் கொழுவி கயல் மீன் பிடிக்கும் ஊர், வாட்டிக் கோரை எனும் செரிந்தி நிறைந்த கழிகளை உடைய ஊர் என்றெலலாஞ் சொல் கின்றனை. இவ்வாறு உன் காதல் தகாததாக இருந்து விடக் கூடாதென்று உன் உள் மனம் எண்ணுவது உண்மை யாகி விடக் கூடாதென்பதே என் விழைவு.

தலைவி;

ஆம் தோழி! அப்படி நடந்தால்..... அய்யய்யோ.... நினைக்கவே அச்சமாக இருக்கிறது!

அம்ம வாழி தோழி நென்ன
லோங்குதிரை வெண்மண லுடைக்குந் துறைவற்
கூரார் பெண்டென மொழிய வென்னை
யதுகேட் டன்னை யென்றன ளன்னை
பைபய வெம்மை யென்றனென் யானே 113

தலைவனின் ஊரில் அலைகள் வந்து வந்து, வெண்மண லான அலைவாய்க் கரையைச் சிதைக்கும். கடலின் மீன்களை உண்ட நாரைகள் பசியாறிய மகிழ்வுடன் பனை மடல்களிற் தங்கி இளைப்பாறும். அவன் உரைத்த சூழ் நிரைப்படி இங்கு வரத் தாமதித்தாலும், வரையுந் திறனற்றவனையலும் நாம் அவனுடைய இடத்திற்குப் போகலாம் என எண்ணுகிறேன். இதனல் என் தாய் என்னைச் சினந்தாலும் .....

அம்ம வாழி தோழி கொண்க
னேரே மாயினுஞ் செல்குவங் கொல்லோ
கடலி னரை யிரற்று
மடலம் பெண்ணை யவனுடை நாட்டே 114

அம்ம வாழி தோழி பன்மா
ணுண்மண லடைகரை நம்மோ டாடிய
தண்ணந் துறைவன் மறைஇ
யன்னை யருங்கடி வந்துநின் றேனே 115

(இத் தருணத்தில் தலைவன் அப்பக்கம் வருவதைக் கண்ட தலைவி அவனுக்குக் கேட்கத் தக்கதாக;)

சில நாட்களின் முன்னர் நடந்த ஒரு சம்பவம் என் மனதில் இப்போது நடப்பதாகத் தென்படுகிறது. அப்போது கடலாடிய நாம் பெற்ற இன்பமும், உன்னை என்றும் பிரியேன் என்ற சூழுரையும் மீண்டும் மீண்டும் எழுங் கடற் திரைபோல் அசை போடுகிறது.

அம்ம வாழி தோழி நாமழ
நீல விருங்கழி நீலங் கூம்பு
மாலைவந் தன்று மன்ற
காலை யன்ன காலைமுந் துறுத்தே 116

தோழி;

நன்று சொல்லினை! உனது துயரத்தைக் காணச் சகிக்காத நீலோற்பல மலர்கள் மாலை வந்ததும் கண்ணை மூடு கின்றதென்றனை. தலைவியே அஞ்சற்க. நீ உரைத்ததுபோல விரைவில் நீ விழையு ம் வதுவைச் செய்தி காலைபோல வரும். உன் கண்மலர் மலரும் என்ற உன் நம்பிக்கையில் உறுதியாக இருக்குக.

அம்ம வாழி தோழி நலனே
மின்ன தாகுதல் கொடிதே புன்னை
யணிமலர் துறைதொறும் வரிக்கு
மணிநீர்ச் சேர்ப்பனை மறவா ஞீமே 117

நீரில் புன்னை அரும்புகள் மிதந்து, அழகு செய்யும் ஊரன், தான் அன்று உரைத்த சூழுரை மறந்தமையாற்தானோ வராதுள்ளான். அவன் பரத்தையாற் சென்றனனோ என எண்ணிய நான் அவனிடஞ் சென்று என் ஆத்திரத்தையுந் தாபத்தையுங் கொட்ட நினைத்தேன். ஆனால் அவன முன்னர் என்னுடன் நடந்து கொண்ட அன்புடைச் செயல்களை நினைந்து வாழாது விட்டேன்.

அம்ம வாழி தோழி யானின்
றறனி லாளற் கண்ட பொழுதிற்
சினவுவென் றகைக்குவென் சென்னென்
பின்னினைந் திரங்கிப் பெயர்தந் தேனே 118

அம்ம வாழி தோழி நன்று
மெய்யா மையி னேதில பற்றி
யன்பிலன் மன்ற பெரிதே
மென்புலக் கொண்கன் வாரா தேனே 119

அம்ம வாழி தோழி நலமிக
நல்ல வாயின வளிய மென் றேளே
மல்ல விருங்கழி நீரறல் விரியு
மெல்லம் புலம்பன் வந்த மாறே 120

தோழி! இப்போது கடலலைகள் வந்து தாவிக் கரிய மணற் கரையை விரித்து மலர்த்திவது போல அவனுடைய வரவு அமைந்ததால் என் மென்தோழ் இன்புற்று அழகடைந் ததைக் கண்டிலையோ

(அத்தருணம் அங்கு வந்த தலைவன் தோழியிடம்)

தலைவன்;

வரச் சற்றுத் தாமதித்தால் தன்னை முற்றும் நான் மறந்ததாக நினைக்கும் இவள் இதை என்பாற் கொண்ட அன்பால் செய்கிறாளா அல்லது நம்பிக்கை இன்மையாற் செய்கின்றனளா

(அதற்கிடையில் தோழி அங்கிருந்து அகன்று விட்டதைக் கண்டு ஏமாந்த தலைவன் தலைவியை நோக்கிப் புன்னகைக்கின்றான். அவள் நாணித் தலை குனிகிறாள்)

(காட்சி கரைகிறது)

முன் எழினி அரங்கை மறைக்க
இரண்டாவது காட்சி முழுமை உறுகிறது.

காட்சி; மூன்று

களம்; பரத்தையின் இல்லம். தலைவியின் மனை, சிறைப்புறம்

காலம்; மாலை, காலை

பாத்திரர்; தலைவன், தலைவி, பாங்கி, பாணன், பரத்தை

நிகழ்ச்சி;

தலைவன் வயதிலும் வாழ்க்கை அனுபவத்திலும் முதிராத தலைவியின் மடமை காரணமாகப் பெதும்பைப் பருவத்துப் பரத்தையால் மதிமயங்கிய பிரிவினால் ஏற்பட்ட இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என்ற பின் புலத்தில் ஏற்படும் நிகழ்வுகள், அவை 1, தலைவியைப் பரத்தை பழித்தல், 2, தலைவியை இட்டு தலைவனிடம் அவள் இளமை நலம் பாராட்டுதல். 3. பாணனிடம் தலைவி வேண்டல் 4, தலைவி தன்னைத் தேற்றல் எனும் நிகழ்வுகள் கலந்த கதம்பமாய்த் தோன்றுகின்றன

(முன்னெழினி அகல அரங்கு தோன்றுகிறது. அங்கே நாடகாசிரியன் தோன்றுகின்றான்;)

வணக்கம் சபையோரே! இன்று அம் மூவனார் படைத்த நெய்தற் திணை சார்ந்த நூறு பாடல்களின் மூன்றுவது பத்தான கிழவற் குரைத்த பத்து எனும் பகுதியைக் காட்சிப் படுத்தப் போகின்றோம். இததகைய 500 பாடல்களின் தொகுப்பை ஐங்குறுநூறு என்ற பெயரில் கூடலூர்க் கிழார் தொகுத்துச் சங்கத் தமிழ் இலக்கிய நூல்களின் எட்டுத் தொகையில் மூன்றுவதாக இடம் பெறச் செய்தார். இதற்கு எழுதப்பட்ட உரை பற்றி இந்த நூலிற்கு திருத்திய உரை ஒன்றுடன் 1943ம் ஆண்டில் யாழ்ப்பாண ஆரிய திராவிடப் பாஷாபிவிருத்திச் சங்கம் ஒரு பதிப்பை வெளியிட்டது. அதில்;

இந்நூலுக்குப் பழையவுரை யொன்று உண்டு. அது மிகச் சுருக்கமானது. கருத்துரை இலக்கணக் குறிப்பு, சொல் முடிபு, பொருள் முடிபுகளையும், உள்ளுறை யுவம், இறைச்சிப் பொருள் என்பவற்றையும் அங்கங்கே எடுத்துக் காட்டிச் செல்வது. அநேக பாடல்களுக்கு உரை காணப்படவில்லை. எனினும் உளள வரையில் செய்யுட் களின் பொருளை அறிதற்கு இவ்வுரை பெரிதும்

உபகாரமானது. இந்நூலைப் பழைய உரையுடன் மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் மிக்க பிரயாசத்தின் பயனாக 1903ல் அச்சிட்டு வெளிப்படுத் தினார்கள், அந்நாள் முதல் தமிழுலகம் இவ்வரிய நூலைப் படித்தின்புறுவதாயிற்று. தற்போது பழைய உரையின் விளக்கமாக யாழ்ப்பாணம் கரவெட்டி மேற்கு மெதடிஷ்த மிசன் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஆ.தா. சுப்பிர மணியம் அவர்கள் தந்த ஒரு உரைப் பிரதி உதவுகிறது என்று கூறியுள்ளார்.

எப்படி இருப்பினும் இவ்வுரைகளால் பாடல்களின் பொருள் ஆங்காங்கு செய்யுள் நடையிலும் பார்க்கக் கடினமாகச் செல்வதாலும், உரைப் பொருளிலும் பார்க்க உரைக்கப்படும் பொருளின் இலக்கிய இலக்கண விளக்கம், எடுத்துக் காட்டுகள் அதிகமாத் தொனிப்பதாலும் இந்தப் பாடல்களை உணர்ந்து நயக்க முடியாதுளது. பல இடங்களில் முடிபுகள் மயக்கும் வகையில் மாய்கின்றன எனவே பாடல்களை இலகுவில் உணரத் தக்கதாக நாடக வடிவிற் தருகின்றோம்.

இந்தப் பத்தின் பாடல்களின் போக்கினைப் பார்க்கும்போது ஆங்காங்கு அதை மொழிபவர், கேட்போர், மொழிந்த நோக்கம், அதன் பயன் என்பன இடைக்கிடை வேறுபட்டுச் செல்வதைக் காணலாம். எனவே இதனை நாடக வடிவாக்கும் போது அவற்றின் நடைகளைச் சற்று மாற்ற வேண்டியிருந்ததால் அது இப் பத்தில் நடை போடுகிறது. இனி நாடகத்தைத் தொடங்குவோம். இங்கே கிழவன் என்பதன் அகப் பொருள் சார்ந்த கருத்தைத் தெளிவது நலம். அகத்திணையின் தலைவனைக் கிழவன் என்றும் தலைவியைக் கிழத்தி என்றும் அழைப்பது மரபு. இல்லக் கிழத்தி என்னும்போது அதிற் தொனிக்கும் பொருள் இதற்கு உதாரணம் எனக் கொள்ளலாம். இந்தப் பத்தினை கிழவற்குரைத்த பத்தென்பர். இவ்வாறு கிழவர்க்கு யார் உரைத்தார்கள் என்பதனைப் பாடலைத் தொகுத்தவர்கள் உரைக்கவில்லை. எனினும் பா நயம் விழைய வேண்டி அவற்றைக் கூறியவர் பலரெனக் கொள்வாம்.

(பரத்தையின் இல்லத்திற்குத் தலைவன் வருகிறான். அவனை உபசரித்துவிட்டுப் பரத்தை அவனைப் பார்த்து;)

கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே
முண்டகக் கோதை நனையத்
தெண்டிரைப் பௌவம் பாய்ந்து நின்றேளே 121

கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
யொள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே 22

கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
யொண்ணித லாய மார்ப்பத்
தண்ணென் பெருங்கடற் றிரைப்பாய் வோளே 123

தலைவனே! உனது இல்லக் கிழத்தியை யாம் இன்று கண்டோம். அவளின் வயதும், வாழ்க்கை அனுபவமும் முதிர்வின்றியே காணப்பட்டன . சிறு குழந்தையைப் போல அவள் நின்ற தோற்றத்தைக் கண்ட நாம் அவள் மேல் அனுதாபமுற்றோம். அது மட்டுமல்ல இத்தகைய இளைய வயதுடையாளுடன் எத்தகைய இல்லற இன்பத்தை நீ அடைகிறாயோ எனவும் எண்ணி உன்பாலும் அனுதாபப்பட்டோம்.

தலைவன்: அவ்வாறு அவள்தான் செய்து என்னை.

பரத்தை;

சொல்கிறேன் கேட்குதி. நாங்கள் அவளைக் கண்டோ மல்லவா, அப்போது அவள் முள்ளியின் நீல மலர்களைச் சூடிய கூந்தல் நனையும்படி நீரலையிற் பாய்ந்து நீராடினாள். ஒருகால் தனது ஆபரணமொன்று மண்ணில் வீழ்ந்ததை அறியாமல் அங்கே காணப்பட்ட வெள்ளாங் குருகை விழித்து தேடித் தரும்படி சொல்லினள். அத்தகைய சிறுபிள்ளைத் தனமுடைய அவள் தனது நுதல் ஒளிரத் தன் தோழியருடன் ஆர்ப்பரித்து அலைகளிற் புகுந்து நீராடினாள். இத்தகையவளோடு எவ்வாறுதான் இன்பம் நுகர்கின்றாயோ. அதைப் பார்த்ததும் பாவம் ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பறித்துவிட்டோமோ என்று எண்ணியது தவறு என உணர்ந்தேன்.

(இந்த உரை அவனுக்கு அவள் நினைத்ததுபோல
இதமூட்டவில்லை, பதிலுக்கு இரக்கத்தையே ஊட்டிற்று.
இத்தகைய இளமிதயத்தை உடையாளுக்குத்
தான் இழைப்பதெலாந் தவறு என்று
அவன் இதயத்தை இரங்க செய்தது)

(பரத்தையர் தன தலைவியைப் பழிப்பதால் மனங் கவன்ற
தலைவன் தனது தவறுன ஒழுக்கத்தால் தன்
இல்லக் கிழத்தியை ஏளனஞ் செய்கிறர்களே
என எண்ணி வருந்தும்போது அங்கே பாங்கி வருகிறள்)

தோழி;

தலைவனே! நீர் இங்கேயா இருக்கின்றனே. உம்மைத் தேடி எங்கெல்லாமோ அலைந்தேன். பாருள்ளார் பழிக்கும் பரத்தையர் நம் தலைவியைக் கண்டு , ஏதோ ஒன்றும் அறியாத குழந்தை என்றெல்லாம் எள்ளி நகையாடினர்களாம். அவர்கள் சொல்வது போல அவள் இன்னும் இளையோள்தான். பலருடன் உறவாடிப் பணத்திற்காக இன்பம் விற்றுண்ணும் பண்புடையவள் அல்லள். அவளின் ஒவ்வொரு நடபடிக்கையிலும் கள்ளமில்லா உள்ளம் பளிச்சிடுகிறது. அதற்கிடையே உன்மேற் கொண்டுள்ள அளவு கடந்த அன்பும் உன் மீது கொண்டுள்ள அளவற்ற நம்பிக்கையும் தன் வாழ்க்கையிற் கரிசனையற்றவளாக்கிவிட்டது. இப்போது கூட;

கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே
வண்டற் பாவை வெளவலி
னுண்பொடி யகனிலக் கடறூர்ப் போலே 124

கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே
தெண்டிரை பாவை வெளவ
வுண்கண் சிவப்ப வழுதுநின் றேளே 125

கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே
யுண்கண் வண்டின மொய்ப்பத்
தெண்கடற் பெருந்திரை மூழ்கு வோளே 126

மேலுங் கேட்குதி. தான் வைத்து விளையாடிக் கொண்டிருந்த வண்டற் பாவையைக் கடலலை வந்து அடித்துக் கொண்டு போகக் கைகளில் மண்ணை வாரிக் கடலைத் தூற்றினாள். கண் சிவக்க அழுது நின்றாள். தன்னண்டை வந்த வண்டிற்கு அஞ்சி ஓடிச் சென்று கடல் நீரில் மூழ்கினாள்

கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே
தும்பை மாலி யிளமுலை
நுண்பூ ணகம் விலங்கு வோளே 127

கண்டிரு மல்லமோ கொண்கநின் கேளே
யுருஅ வறுமுலை மடாஅ
வுண்ணுப் பாவையை யூட்டு வோளே 128

அதுமட்டுமா/ தும்பை மலர் மாலையுடன் கழுத்திலணிந்த ஆபரணங்களால் தன மார்புக் கச்சை விலகுவதைக்கூடக் கவனியாத குழந்தைப் பருவத்தவளாகவே காணப் படுகிருள். மரப் பாவையை எடுத்து இன்னும் பருவ மெய்தாத அவளின் மார்பிற் பொருத்திப் பால் ஊட்டு கிருள். இத்தகைய குழந்தை உளள முடையாளை இவ்வண் பிரிந்து தவிக்க விடுவது ஒரு நெய்தல் நிலக் கொண்கனுக்கு அழகாகுமா/

இவற்றைக் கேட்ட தலைவன் தன் தலைவியின் களளமில்லா உள்ளதத்தை நினைந்து இரங்கினான். தன் தவறுக்காகத் தளர்ந்தான். உடனே தன் மனதில் எழுந்த ஆவலை அடக்க முடியாததால் பாங்கியிடம் தான் கண்டு மெய் மறந்த தலைவியின் பெண்மையை வியந்து பாராட்டினான்

நாடக ஆசிரியன்;

இதுவரை வெளிவந்த பிரதிகளில் இதன் தொடர்ச் சியான 129. 130 ம் பாடல்கள் கிடைததற் கரியவாயின. எனினும் இப்பாடல்கள் எததகையனவாக இருந்திருக் கலாம் என்பதை ஊகித்து அறிந்து நிறைவு செய்ய வேண்டியது நம் கடனுகும். அவ்வாருனல்; அந்த இரண்டு பாக்களிலுந் தலைவன் தலைவியை இட்டு நலம் பாராட்டிய சேதிதான் இருந்திருக்க வேண்டும். அவை;

பாங்கியே கேட்குதி. அவள் எவ்வாறுதான் விளையாட்டுக் குணமுடையவளாக இருந்தாலும் எனமீது கொண்டி ருக்கும் அன்பு இந்த நெய்தற் கடலிலும் மாணப் பெரிது. எனக்கு ஏதும் இன்னல் வருமாயின் கடலுடன் இணைந்த வானத்தின் கண் எழும் மின்னலிலும் கொடிதாகச் சீறி எழுவாள் என்று சொல்வது மிகையாகுமா?

கண்டிரு மல்லமே பாங்கிநம் கேளை
தெண்திரைக் கடலிலும் மாணப் பெரிதே
அன்னவள் கொண்ட அன்பது வெனுமே
கண்டிரு மல்லமே பாங்கிநம் கேளை /0/

தெண்டிரை கவ்வும் வான்மின் னென்ன
கொண்டெமும் என்கே டறிந்திடு போதே /00/

எனப் புதுப்பாடல் பாடி நிறைவு செய்வோமா.....

இவை, சங்க நூற் பாடலாக இருந்தாலும், இவற்றில் பயின்று வருஞ் சொற்கள், யாவர்க்கும் புரியும் பொளுடைய, தெரியும் எழிய சொற்கள் என்பதை நாம் நமது சிந்தையிற் செறித்தாற்தான் இந்த அமிர்தமன்ன பாடல்களின் சுவையை மாந்த முடியும். ஆயினும் இவற்றிற்கு உரை கண்டவர்கள், பாட்டின் பொருள் நயத்தை எடுத்துரைப்பதற்குப் பதிலாகப் பாடல்களின் இலக்கண இலக்கிய அமைதிகளை விளக்குவதற்காக எடுத்தாண்ட எடுகோள்களே உரையிலும் பார்க்க உயர்ந்து நிற்கின்றன. சில இடங்களில் உள்ள உரை விளக்கங்களைப் பார்க்கும்போது, அகத்திணை சார்ந்த செயல்கள் தொல்காப்பியத்தின் அல்லது மற்ற அகப் பொருள் இலக்கணங்களின அடிப்படை யிலேதான் நடைபெற்றதோ அல்லது நடைபெற வெண்டிய நியதி இருந்ததோ என்ற ஐயப்பாடு எழவே செய்கிறது. வாழ்க்கை நடப் புகளே இலக்கியமாயின. அந்த இலக்கியங்களுக்கு இட்ட வரம்பு களே அகப் பொருள், புறப் பொருள் இலக்கணமாயின.

ஆயினும் அகப்பொருள் வாழ்க்கை மனித உயிர்ப்புடன் கூட உருவானது. உடல் வளர வளரத் தோன்றும் பருவ உணர்வுகள் ஊக்கங்களின் உந்துதலால் உண்டாவது. அதற்குப் பல வரம்பு களையும் புறநடைகளையும் கூறினாலும், அவற்றுள் அவை அடங்கு வதில்லை. உயிர்களிற்கு உருத்தான இயல்பான இனப் பெருக்கம், பாலியல் ஈர்ப்பு, உடல் உள உறுத்தற் தேவையின் நிறைவுகளே முதன்மையுற்று பண்டு தொட்டு நடைபெறும் பரம்பரை மரபுகளைக் கொண்டதாக அமைகிறது, இதனற்தான் சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை என்பர். இந்தக் கருத்துகளை மனதிற் கொண்டு அகப் பொருட் பாடல்களை அணுகுவோமாயின் பாடல்களின் பொருள் விளங்கும் அவற்றின் இலக்கிய நயம் துலங்கும். அவற்றால் ஏற்படும் இலக்கிய உணர்வு வாழ்விற்கு வழி காட்டும். அதுவே வாழ்வின் தூய்ப்பாகும். வணக்கம்.

காட்சி கரைகிறது

முன்னெழினி மூடுகிறது
மூன்றுவது கட்சி முடிவுறுகிறது

காட்சி; நான்கு

களம்; தலைவி இல்லம்,

காலம்; அந்திப் போது

பாத்திரர்கள்; தலைவன், தலைவி, பாணன், தோழி

நிகழ்ச்சி;

பரத்தமை காரணமாகத் தலைவனுடன் பிணங்கிய தலைமகளின் புலவி அகற்ற முயலும் பாணனின் வாயிலை மறுத்தல்.

(முன் எழினி அகல அரங்கில் நாடகாசிரியன் தோன்றுகிறான்)

நாடகாசிரியன்;

பெண் இருந்தால் அங்கே பெண்மையும் இருக்கும். பெண்மை இருக்கும் இடத்தில் அதற்குரிய தண்மையுந் தழலும் இருக்கும். இத்தகைய தழலாற்தான் மதுரை எரிந்தது. பாண்டியனும் கோப்பெருந் தேவியும் மாண்டனர். சிலம்பு ஒலித்தது. ஆண்கள் கை நழுவ விடும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வள்ளுவத்தை அவர்கள் தமது இறக்குந் தறுவாயிலும் இறுகப் பற்றிக் கொள்வார்கள். தம்மை ஒருபொழுதும் மற்றவர் உண்ட எச்சிலையாக்கிக் கொள்ள விரும்ப மாட்டார்கள், எச்சிலைகளில் உண்ணவும் மாட்டார்கள், இது அவர்களின் பெருமைக்கு உரிய கற்பெனுந் திண்மைக்கு அடித்தளம். இந்த வகையில் தாம் எதை விட்டுக் கொடுத்தாலும் உலகில் தன் கொழுநனை ஒரு கணமாயினும் பிறருக்கு விட்டுக் கொடுக்க இசையார்கள். இவ்வாறு தமிழ்க் கடல் திரு.வி.க சொல்லி உள்ளதை முத்தாப்பாக்கி ஐங்குறு நூற்றின் நெய்தற் திணையின் நாலாவது பாணர்க்கு ரைத்த பத்து எனும் இந்த நாடகத்தைத் துவக்கி வைக்கிறேன். அதுமட்டன்று இருத்தலும் இருத்தல் நிமித் தமுங் காரணமாக உண்டாகும் பரத்தமையும் அதன் விளைவான ஊடலும் கூடலும் பெண்கள் இடம் பெறும் எல்லாத் திணைகளிலும் உண்டாவது இயல்பெனக் கொள்ள வேண்டும். அவ்வகையில் பரத்தமைபற்றிய செய்தி இரங்கலும் இரங்கல் நிமித்தமுந் தலையாய நெய்தல் நிலத்திலும் இடம்பெறுகிறது.

சேர்ப்பனின் பரத்தமைப் பிரிவால் ஊடிய நுழைச்சியின் மனதை மாற்ற ஆங்கு பாணனும் பாங்கனும் வரும் நிகழ்வுடன் நாடகம் ஆரம்பமாகிறது)

பாணன்;

தங்காய்! அன்று, உன்னுடன் உடன்போய் வதுவை செய்யுமளவு உள்ள உறுதி படைத்த நின் தலைவன் இன்று நின்னைப் பிரிந்து செல்லவான் என்று எண்ணுவது தப்பல்லவா? கலை இன்ப நுகர்ச்சி காரணமாக அதை வழங்கும் பரத்தையர்பால் ஒரு நாட்டங் கொண்டு சில நாட்கள் பிரிந்திருப்பது ஒரு பாரிய குறையாகக் கொள்ளலாமா? அத்தகைய ஒரு தரக்கேடான குற்றத்தை இழைத்திருந்தால், இன்று அவர் உன்பால் வந்திருப்பாரா! சற்று உய்த்து உணர்ந்து பார்க்க மாட்டாயா?

தலைவி; பாணனே கேட்குதி!

நன்றே பாண கொண்கனது நட்பே
தில்லை வேலி யிவ்வூர்க்
கல்லென் கௌவை யெழாஅக் காலே 131

அம்ம வாழி பாண புன்னை
யரும்புமலி கான லிவ்வூ
ரலரா கின்றவ ரருளு மாறே 132

எங்கள் பாக்கத்திற்குத் தில்லைப் புதர்களே வேலியாக வரம்பிட்டு தானே வளர்ந்துள்ளன. இலையொன்றைப் பறித்தாலோ, அதன் கிளையொன்றை ஒடித்தாலோ அதிலுள்ள பால் பட்ட இடத்தே உடனே பாரிய கொப்புளங்கள் தோன்றும். ஆதலால் அம்மரத்தை எந்தவொரு விலங்கும் உண்ணுது. மாந்தர்களும் அப்பக்கஞ் செல்லார்கள். அத்தகைய காப்பைத்தான் நாங்கள கொண்டிள்ளொம். பரத்தையர் இத்தகைத் தில்லை மரம் போன்றவரகள். அவரகள்பாற் சென்று சேறுபவர்களை புன்னை மலர் சொரிகின்ற இன்பத்தை நுகரும் எங்களுக்கு அலராகி உள்ளத அறியாயா?

யானெவன் செய்கோ பாண வானது
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
புல்லென் றனவென் புரிவளைத் தோளே 133

காண்மதி பாண விருங்கழிப் பாய்பரி
நெடுந்தேர்க் கொண்க னேடு
தான்வந் தன்றென் மாமைக் கவினே 134

பைதல மல்லேம் பாண பகீணத்தோ
கீதமைந் தகன்ற வல்கு
னெய்தலங் கண்ணியை நேர்தனும் பெறினே 135

பாணன்;

தலைவியே! இப்போது கூறியவற்றை அறிந்தபொழுது நான் மிகவும் மனங் கவன்றேன், உன் புலம்பன் பிரிந்த ஞான்றே வகீயணிந்த நினது தோழ் பொலிவிழந் ததையும், அவனது நெடுந்தேர் இன்று உன்னைத் தேடி வந்தபோது நீ அடைந்த பசலை நீங்கியதென்பதையும், பெருத்த தோழும் அகன்ற அல்குலும் நெய்தற் பூப்போலப் பொலிந்தன என்பதையுங் கேட்ட போது; நான் இங்கு வந்த நோக்கம் நிறைவுறும் என்றே நம்புகிறேன். இதைச் சற்றுத் தூரத்தில் நிற்குந் தலைவனிடஞ் சென்று உரைப் பேனுயின் அவன் மிக மகிழ்வான்..

தலைவி;

பொறு, பொறு, பாண! நான் சொல்ல வேண்டிய இன்னும் உள்ளது. அதையுங் கேட்ட பின்னர், நான் என் மனதில் என்ன நினைக்கிறேன் என்பது உனக்குத் தெளிவாகும்.

நாணிகை மன்ற பாண நீயே
கோணை ரிலங்குவகீ நெகிழ்ந்த
கானலந் துறைவற்குச் சொல்லுகுப் போலே 136

நின்னென்று வினவுவல் பாண நும்மூர்த்
திண்டேர்க் கொண்கனை நயந்தோர்
பண்டைத் தந்நலம் பெறுபவோ மற்றே 137

பண்பிகை மன்ற பாண விவ்வூ
ரன்பில கடிய கழறி
மென்புலக் கொண்கனைத் தாரா தோயே 138

அம்ம வாழி கொண்க வெம்வயின்
மாணல மருட்டு நின்னிலும்
பாண னல்லோர் நலஞ்சிதைக் கும்மே 139

உனக்கு வெட்கம நாணமில்லையா பாண! சமன் செய்ய, சமாதானம் பணண வந்த நீயேன் உனது தலைவன் பக்கத்தில் உள்ள நியாயத்தையே சொல்லுகின்றனை. சென்று, அவனிடம் என் கைவகீயல்கள் கழன்று வீழும்

நிலையில் உள்ளதைச் சொல்க. உங்கள் ஊர்க் கொண்கனே இழந்தவர்கள் இவ்வாறு நலன் இழப்பதும், அதைப் பெருது தியரப்படுவதும் வழக்கமோ? இங்குள்ள என் நிலையைத் தலைவனிடம் சொல்லி கடிந்து திருத்தித் திருப்பித் தர முயலாது எம்மை மருட்டும் நீ அவனிலுங் கொடியன் என்றே சொல்வேன்!

தோழி;

பாணனே! எந்தலைவி சொன்னவற்றைக் கேட்டனை அல்லவா/ இப்போது நானும் ஒன்று சொல்கிறேன். அதைக் கேட்க வேண்டாம் ஆனால் தலைவியை உன் கண்களாற் பார்த்து, பார்த்தவற்றை உன் தலைவனிடஞ் சென்று உரைப்பாயாக, .

காண்மதி பாணநீ யுரைத்தற் குரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தென
விறைகே ழெல்வகீர நீங்கிய நிலையே 140

(இதனைக் கேட்ட பாணன் தலை கவிழ்ந்து தலைவனிடஞ் செல்கிறன். ஆனால்; இந்த உரையாடலைக் கேட்டுத் தலைவன் தன் தவறை உணர்ந்தவனாக தன் வாயில்கள் பயன் பெறத் தவறி விடடதாக எண்ணி ஏற்கனவே அங்கிருந்து அகன்றுவிட்டதைக் காண்கின்றன்).

காட்சி கரைகிறது

முன்னெழினி மூடுகிறதி
நான்காவது காட்சி முடிவுறுகிறது

காட்சி; ஐந்து

களம்; தலைவியின் இல்லம். பகற்குறி இடம்

காலம்; மாலை

பாத்திரர்கள்; தலைவி. தலைவன், தோழி,

நிகழ்ச்சி;

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் வரைவைத் தள்ளி வைப்பதால், மனங்கவன்ற தலைவி, அதுபற்றித் தோழியிடங் குறைபட்டுக் கொள்வதுடன் வதுவையை உடனடியாகச் செய்யும்படி வற்புறுத்தும் படியுங் கேட்டல். வரைவின் மீது கவனமெடுக்காமற் தலைவியைக் காண்பதிலேயே நாட்டங் கொண்ட தலைமகனுக்குத் தோழி இரவுக் குறி மறுத்தல்.

நாடகாசிரியன்;

அவையோரே! வணக்கங்கள் பல. அம்மூவனரின் நெய்தற் திணைபற்றிய 100 பாடல்களுள் முதல் ஐந்து பத்துகளும் மூன்றடிகளால் ஆனவை. ஏனைய ஐந்தும் நான்கு ஐந்து அடிகளாற் பரவி வருவன. இப்போது ஐந்தாவது பத்தாக இடம் பெறும் ஞாழற் பத்தை நாடக வடிவிற் தருகிறேன். ஞாழல் என்பது கடற்கரை மணற் திடரில் வளர்வது . இந்த மணற்றிடரை எக்கர் என்பர். சமமற்ற தரை, காய் கனிகளை எக்கல் என்பதி மரபு. கடற்கரையிற் சில இடங்களில் அங்கு வீசும் காற்றின் மணலொதுக்கத்தால் தரை உயர்ந்தும் குழிந்துந் தோன்றும் . இதுவே எக்கராகும். இத்தகைய இடங்களில் ஆறு அல்லது ஏழு அடி உயர்ந்து வளரும் மரச் செடியே ஞாழல் . இதனைப் பலினி, புலிநகக் கொன்றை, மயிர்க் கொன்றை என்பதும் உண்டு. ஆவாரம் அல்லது பொன்னவரைச் செடியொத்த இதன் இனத்தவையே ஞாழல் என்பர் தாவரவியல் அறிஞர். இதன் பூக்கள் கடுஞ் சிவப்பு வரிகொண்ட மஞ்சள் நிறமானவை, உள்ளிருந்து வெளியே நீண்ட தோன்றும் மலரும்புகள் மயிலின் கொண்டையை ஒத்து இருப்பதாலும், மயிர்போல இருபபதாலும் மயிற்றேகை மயிர்த் தோகை என்பதும் நெய்தல் நிலத்திற்கே உரிய இதன் இலைகள் புளியமிலைபோன்று நடு நரம்பின் இரு பக்கங்களும் சிறிய இலைகளைக் கொண்டவை , காய்கள்

அவரைக் காய்களை ஒத்தவை , மலர்கள் கொத்தாகப் பூக்கும் என்பதும் இதன் இயல்புகளாகும்.

(தலைவியின் இல்லத்திற்குத் தோழி வருகிறாள். அவளைக் கண்ட தலைவி, எதிர் கொண்டழைத்து வருகிறாள். அவளிடம்)

தலைவி;

பொருள்வயிற் பிரிந்து சென்ற நம் தலைவன் வந்து விட்டதாக அறிந்தேன். அவரை நீ கண்டனையோ, அவர் உன்னிடம் வரைவுபற்றி ஏதுஞ் சொல்லியதுண்டா?

(பாங்கி அமைதியாக நிற்க)

என்ன பாங்கி நான் கேட்கிறேன். நீ சிலையாகி விட்டாய்.

தோழி;

அம்மா. வந்துவிட்டார். நானும் அவரைக் கண்டேன். உன் நலம் உசாவினார். நின்னைக் காண இரவுக் குறியும் வேண்டினார்.

தலைவி;

ஓகோ, என்னைச் சந்திப்பதிலே கவனங் கொண்டுள் ளாரா! என்னைப் பந்திப்பதையிட்டுக் கவலையில்லை போலும், அதற்கு நீ என்ன சொல்லினை.

தோழி;

இப்போதுள்ள நிலையில் இரவுக் குறி சாத்தியமில்லை என்றுவிட்டேன். வரைவு ஒன்றே உனைச் சந்திக்க உள்ள ஒரே வழி என்று உறுத்தியுங் கூறிவிட்டேன்.

தலைவி; பாங்கி நல்லதே செய்தனை.

எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண்டுளி வீசிப்
பசலை செய்தன பனிப்படு துறையே 141

அவரின் செயலை நினைக்கும்போது, இங்குள்ள எக்கரில் பூத்திச சொரியும் புலிநகக் கொன்றையின் நறிய மணம் ஆங்கு கழி சார்ந்து நிற்குந் தட்டைக் கோரை எனுஞ் செருந்தி (சாப்பை) மலருடன் கலந்து வீசும் கடற் காற்றின் நினைவுதான் வருகிறது. அதனால் என் மேனியிற் பசலை படர்ந்ததை அவர் அறியாரா/

எக்கர் ஞாழ லிறங்கிணர்ப் படுசினை
புள்ளிறை கூருந் துறைவனை
யுள்ளேன் றேழி படீஇயரென் கண்ணே 142

ஞாழற் புதர்களில் அவற்றின் மலர்க்கொத்துகள் நசிந்து வருந்தும்படி புட்கள் வந்து உறங்குகின்றன. இதுபோன்ற என் துயரத்தைப் பகுத்தறியாமற் தன் எண்ணத்தையே செயற்படுத்துகிருரே என எண்ணும்போதி என் கண்கள் எபபடி உறங்கும்.

தோழி;

தலைவியே கேட்குதி. களவியற் காலத்தில் ஞாழற் பூக்களிடை புள்ளினம் ஒலித்தது உள்ளத்திற்கு உகந் ததாக இருந்ததே. ஆனல் கற்பியல் வேண்டுங் காலத்தில் அது வெறுப்பை உண்டாக்குகிறதே!

எக்கர் ஞாழற் புள்ளிமி ழகன்றுறை
யினிய செய்த நின்றுபின்
முனிவு செய்தவிவ டடமென் றேளே 143

தலைவி;

அது காலத்தைப் பொறுத்தது, ஆனல் இப்போது, ஞாழல் புதர்களிடையே கொக்குகள் பேடுகளின்றி தனித்து உறங்குந் என் துறைவனின் நாட்டு இயல்புதான் என் எண்ணத்திற்கு வருகிறது. அதனல் எனக்கு ஏற்பட் டுள்ள பசலை உன் கண்ணிற்குமா படவில்லை!

எக்கர் ஞாழ லிணர்படு பொதும்பர்த்
தனிக்குரு குறங்குந் துறைவற்
கினிப்பசந் தன்றென் மாமைக் கவினே 144

தோழி;

அஞ்சற்க. சிறு இலைகளைக் கொண்ட ஞாழலின் கிளை களை அலைகள் வளைக்கின்ற ஊரவன் உன் துறைவன். ஆதலால் அவன் விரைவில் வருவான். வரைவான் எனத் தேறி இரு,

எக்கர் ஞாழற் சிறியிலைப் பெருஞ்சினை
யோதம் வாங்குந் துறைவன்
மாயோள் பசலை நீங்கின னினியே 145

தலைவி;

எனது உடலிற் பசலை படர்வதைக் கண்டு ரசிப்பதுதான் இனியதோ?

எக்கர் ஞாழ லரும்புமுதி ரவிழினர்
நறிய கமழுந் துறைவற்
கினிய மன்றவென் மாமைக் கவினே 146

தோழி;

எக்கர் ஞாழல் மலரின் மகளி
ரொண்டழை யயருந் துறைவன்
றண்டழை விலையென நல்கின னுடே 147

நான் சொல்வதைச் செவி மடுப்பாயாக. சூடுவதற்கு ஞாழல் மலர்கள் கிடையாத காரணத்தால் பல பெண்டிர் அதன் தலைமைகளைப் பறித்துத் தம் கூந்தலிற் சூடும் ஊரவன் உன் தலைவன். அவனே உனக்கு ஏற்கனவே தழை தந்தான் என்பதை மறந்து விட்டனையா?

(காட்சி மாறுகிறது. சில காலஞ் சென்றபின் வதுவை நடக்கின்றது. பள்ளியிடத்து அழைத்துச் செல்லுந் தோழி)

தலைவியே! மணங் கமழும் ஞாழல் மலரை அணிந்த தலைவன் இனி உனதாகினன். அவனுடன் முயங்கி இன்பம் பெறுக. அதனால் உனது இளமுலையிற் படர்ந்த பசலையும் அகன்றுவிடும். நீ மகிழ்ந்திருப்பாயாக

எக்கர் ஞாழ லிகந்துபடு பெருஞ்சினை
வீயினிது கமழுந் துறைவனை
நீயினிது முயங்குமதி காத லோயே 148

எக்கர் ஞாழற் பூவி னன்ன
சுணங்குவள ரிளமுலை மடந்தைக்
கணங்குவளர்த் தகறல் வல்லா தியோ 149

தலைவி;

எக்கர் ஞாழ னறுமலர்ப் பெருஞ்சினை
புணரி தழைக்குந் துறைவன்
புணர்வி னின்னு னரும்புணர் வினனே 150

தனக்குள்;

ஞாழல் மலர்களிடை வாழ்ந்து அதன் இன்பம் நுகரும் என் தலைவன். புணர்தற்கு இனியவனுக மட்டுமல்ல நட்பிற்கும் பெரியனுக இருப்பது நான் பெற்ற வரமே.

காட்சி கரைகிறது
முன்னெழினி மூடுகிறது
ஐந்தாவது காட்சி முடிவுறுகிறது

காட்சி; ஆறு

களம்; தலைமகள் இல்லம், பரத்தை இல்லம், சிறைப்புறம்

காலம்; மாலை

பாத்திரர்கள்; தலைவன், தலைவி , தோழி, பாங்கன்

நிகழ்ச்சி;

தலைவன் பரத்தமை கொண்டானென அறிந்த தலைமகள் புலந்தாள், அதனை அகற்றிக் கூடத் தலைவன் வாயில் நேர்ந்தான். தோழி, பாங்கன் ஆதியவரை வாயில் விடுத்தான். தலைவி ஒருப்பட்டாளில்லை தோழி அவனை எள்ளிப் பழி சொல்லித் திருப்பி அனுப்பினாள்.

(முன்னெழினி அகல, அரங்கில் நாடகாசிரியன் நிற்பது காட்சியாக விரிகிறது)

நாடகாசிரியன்;

வணக்கம். மருதத்திற்தான் பரத்தமைபற்றிய சேதிகள் சொல்லப்பட்டனவென எண்ணிய நமக்கு நெய்தற் திணையிலும் அது தொடர்வது திகட்டு நிலையையே உண்டாக்கும் என்பதில் ஐயமின்று. நெய்தல் நிலத்தின் இரங்கல் அதன் நிமித்தம் எனும்போது அந்த நிலை பரத்தமையால் மட்டுந் தோன்றுவதில்லை. கடலிடைச் சென்று மீன்பிடி தொழில் செய்யுங் காரணத்தாலும் தினந்தினம் பிரிவு நிகழும் . கடும் இருளில் கொடுங் குளிர் காற்றுக்கும் கடலலைக்கும் சுரு முதலிய கடல் விலங்குகளுக்கு மத்தியில் பயந்துகொண்டே இரவைக் கழிக்கும் தங்கள் கொண்கரைப் பிரிந்து அவர்கள் தரைக்கு வரும் வரையும் கடலையே தாயாகக் கொண்டு வணங்கிக் கண் துஞ்சாது கலங்கிம் பரதவப் பெண்களின் இரக்கமே பெரிது. இத்தகைய நிலையில் ஏனைய திணை மக்கள் இன்னலுறுவதில்லை. அவ்வாறு ஏற்படினும் அது நீரிலல்ல நிலத்திலே கால் பதிக்குமளவிற்கு நடைபெறும். இந்த நிலையில் ஆங்கு பரத்தமை ஒரு சிறு இடத்தையே வகிக்கும். ஆயினும் கடற் தொழில் பிரிவு காரணமான இரங்குதலை நெய்தற் திணை பாடுவோர் பொருட்டாகக் கொள்வதில்லை. காரணம் அந்தப் பிரிவினால் இரக்கமே தலையெடுக்கும், தரைக்கு நுழையன் வந்ததும் அது

ஆனந்தமாகப் பெருக்கெடுக்கும். ஆனல் பரத்தமைப் பிரிவே ஊடலையும் கூடலையும் ஆக்குவன. அன்பை ஆட்டங் காணச் செய்வது. அகப்பொருளின் அன்புடைக் காமத்திற்கு அவலத்தை ஆக்குவது. நிரந்தர இரங்கலிற்கு அடித்தளம் இடுவது. பல்வேறு அகப்பொருட் துறை களையும் நாம் நுகர்வதற்கு இத்தகைய பகுதிகளின் தோற்றமும் வேண்டற்படுவதொன்றே. இனி நாட கத்தைத் தொடங்குவோம்.

(பரத்தமையிற் சிறிது காலம் பிரிந்து திரும்பிய தலைவன், தன்னைத் தலைமகள் புறந் தள்ளினளாகக் கவன்று தலைவியின் தோழியை வாயில் வேண்டுகிறான். அதை மனதிற் கொண்ட அவள் தனது மகனுடன் அமர்ந்திருக்குந் தலைவியிடஞ் சென்று)

தோழி;

தலைவியே உமது தலைவன் திரும்பி வந்துள்ளார். அவரை அழைத்து உபசரிப்பது அன்புளங்கொண்ட நின் கடமையல்லவா? அதை விடுத்து வாழாவிருக்கின்றனையே!

தலைவி;

தோழியே, நமது நெய்தல் நிலத்தின்கண்ணுள்ள வாய்க்கால்களில் உறுமீன் வரையும் காத்திருந்து இரை கொள்ளுங் கொக்கினங்களைக் கண்டுள்ளாய் அல்லவா. அவற்றில் நாரை பெரியது. உயர்ந்தது. அதை அடுத்துக் கொக்குகளும் உள்ளன. இவைகளிலும் பார்க்க வேறு ஒரு இனமுமுண்டு. அதைப் பரட்டைக் கொக்கு என்பார்கள். மார்பில் உள்ள வெண்மை அதற்கு கவர்ச் சியைக் கொடுக்கும். ஆதலால் அதனை வெள்ளாங் குருகு என்பர். எனினும் அது நாரை இனத்துள் மிகத் தாழ்ந்த இனம். ஆயினும் அதன் குஞ்சு செத்ததைக் கேள்வியுற்ற நாரைக்கு நெஞ்சு பதைத்தது. வெள்ளாங் குருகின்பால் உள்ள நாட்டத்தால் மரணச் செய்தி விசாரித்து ஆறுதல் சொல்ல, நாரை அழகாக நடந்து சென்றது. அதன் மனதில் வெள்ளாங் குருகிலேயே பதிந்திருந்தபடியால் சென்ற வழியில் மலர்ந்திருந்த நெய்தல் மலர்களைக் கவனியாது அவற்றை மிதித்தே சென்றது. மிதிபட்ட மலர்கள் தேன் சிந்தி மணங்கமழ்ந்தது. அத்தகைய இடத்தின் தலைவனை துறைவனே நெஞ்சில் ஏற்றுக்

கொள்ள முடியுமா? அதுமட்டுமல்ல அந்தப் பரத்தையை இற் பரத்தையாக வரையவும் எண்ணங் கொண்டுள் ளாராம். அதனை நீ அறிந்திலையோ. எனவே இதை விடுத்து வேறேதும் உரை.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப தக்க கண்போ னெய்தல்
கட்கமழ்ந் தானைத் துறைவற்கு
நெக்க நெஞ்ச நேர்கல் லேனே 151

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கையறு பிரற்று கானலம் புலம்பந்
துறைவன் வரையு மென்ப
வறவன் பொலு மருளுமா ரதிவே 152

தோழி.

பனைமரத்தின் அடியில் நின்றதால் கள்ளுண்டார் எனல் பொருந்தாக் கூற்று. அங்கே கள் இருந்ததா. அருந்தப் பிழா இருநததா. அதை உண்டாரா என நேரிற் கண்டார் சொன்னல் மட்டுமே நாமதை நெஞ்சிற் கொள்ளலாம். பரத்தைச் சேரிக்குப் போனதால் மட்டும் அவனை மணஞ் செய்வாரென்பதை நம்புவதா. சற்றுச் சிந்தித்துப் பார்.

தலைவி;

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானற் சேக்குந் துறைவனை
டியானெவன் செய்கோ பொய்க்கு மிவ்வூரே 154

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்பத் ததைந்த நெய்தல் கழிய
வோதமொடு பெயரும் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை யின்றென் யானே 155

நீ சொல்வது ஒரு சில நாழிக்குள்ளாக இருந்தால் நம்புதற் குரித்தாம். அந்தப் பிரிவு நாழிகள் அல்ல நாட்களாகப் போனது எதனால்?. ஆதலால் தோழி அவர்பால் சரிந்து பகராதே, ஊரறறிந்த உண்மைக்கிப் பின் நான் அவரைச் சேர்த்துக் கொண்டால் என்னை யார் நம்புவர். என்

திண்மை பொய்த்து விடுமே! ஆதலால் உனது எண்ணத்தை மாற்றிக் கொள் அதுவும் பரட்டைக் கொக்கெனிற் பதைத்து நெய்தற் பூக்களை அழித்துத் திரையுடன் செல்லுந் துறைவனுக்கு நான் பஞ்சாய்க் கோரையாற் செய்த பாவையை அல்லவோ மகவாகப் பெற்றுக் கொடுத்துள்ளேன்!

(எனச் செல்லி அருகில் அமர்ந்திருந்த மகளை அணைத்துக் கொள்கிறுள். தோழி செல்கிறுள் - இந்தக் காட்சியின் முதலாவது பகுதி கரைகிறது)

(தோழி தலைவனிடஞ் செல்ல)

தலைவன்;

தோழி, அவளிடம் என்ன சொல்லினை? அதற்கவள் என்ன சொன்னுள்? என்னை ஏற்றுக் கொள்வாவாளா?.

தோழி;

தலைவனே! உன்னிடம் ஒன்று இரந்து கேட்கின்றேன், அதைத் தருவாயா?

தலைவன்;

தோழி, எனது தலைவியின் பொருட்டு எதைக் கேட்டாலுந் தருவேன். என் உயிரைக்கூடத் தருவேன்..

தோழி;

தலைவனே, . உன் உயிர் வேண்டாம். உனது தவருன ஒழுக்கததால் என் தலைவி எல்லா நலன்களையும் இழந்துவிடடாள். அதைத் திருப்பித் தந்தால் அதுவே போதுமானது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பசிதின வல்கும் பனிநீர்ச் சேர்ப்ப
நின்னெனை றிரக்குவெ னல்லேன்
தந்தனை சென்மோ கொண்டவிவ ணலனே 159

(தலைவி செல்கிறுள், தலைவன் முகம் நாணி நிற்கிறுன். இல்ல முன்றிலில் நிற்கும் பாணனிடம் தோழி;)

பாணனே! தலைவி தன் நிலையில் நின்று அணுவளவேனும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. அவள் சொல்லுங் காரணங்கள் நாம் எடுத்துச் சொல்லும் சமாதான

வார்த்தைகளைக் கடற்கரையில் பதித்த அடிச் சுவட்டை அலைகள் அழித்துச் செல்வதுபோல அழித்து விடுகின்றன. வெள்ளாங் குருகுக்கு ஆறுதல் சொல்லப் போகும் அவசரத்திலும் வேகத்திலும் உதிர்த்த இறகுகள் மணலிற் பரவிக் கிடக்குந் துறைவன் சொல்கின்ற காரணங்கள் நமக்குப் பொருந்துவனவாக இருந்தாலும் அவள் மனதிற்கு ஒவ்வாததாகின்றது. எனவே நீங்கள் நாடி வந்த வாயில் பிழைத்தது எனத் தலைவனிடம் கூறுங்கள்

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப வொழிந்த செம்மறுத் தூவி
தெண்கழிப் பரக்குந் துறைவ
னெனக்கோ காதல னனைக்கோ வேறே 156

(அப்போது தலைவி அவர்களைப் பார்த்து)

தோழி சொன்ன பிறகு, மேலும் நான் என்ன சொல்வ தற்கு உளவோ!

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
நொந்ததன் றலையு நோய்மிகுந் துறைவ
பண்டையின் மிகப்பெரி தினைதி
மியங்குமதி பெரும மயங்கினன் பெரிதே 160

என்பதிலே, நாரை வெள்ளாங்குருகு என்றவைகள் தலைவன், பரத்தை என்ற உள்ளுறை உவமையாகி உயிர்கொண்டு உலாவுவதையுமா உங்களால் உணர முடியாதுள்ளது. அன்று நான் அவர்பால் மிகமிக மயங்கினேன். ஆனால் இன்றே மிகமிக மிகவும் மதி தெளிந்தேன். காலத்தை வீணடிக்காமல் இங்கிருந்து செல்.....லுங்கள். தலைவி வாயில் மறுத்தாளெனச் சொல்லுங்கள்

(அப்போது விளையாடச் சென்ற மகன் விளையாட்டயர்ந்து வருகிறான்)

தலைவி;

மகனே! உந்தையொடு சென்றனையோ என அஞ்சி இருந்தேன். அவ்வாறில்லை நீ விளையாட்டயர்ந்து வந்துள்ளாய் ஆதலால், நீ என் அன்பிற்குரியனென,

வெள்ளாங் குருகின் பிள்ளோ செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
காலை யிருந்து மாலைச் சேக்குந்
தெண்கடற் சேர்ப்பனெடு வாரான்
முன்வந் தனனெங் காத லோனே 157

(காட்சி மாறுகிறது. தலைவியால் ஏற்றுக்
கொள்ளப்படாத தலைவன் பரத்தையர்பாற் செல்ல
அவனைக் கண்ட பரதத்தையின் தோழி)

அய்யய்யோ! உங்களது நட்பை நீண்ட கூந்தலுடைய எங்கள் தலைவி ஏற்றுக் கொள்ளவா போகின்றாள்! மேலும், உனது நேரத்திற்கு நேரம் மாறுபட்ட நடத்தையால் எங்கள் தலைவி பலரை அடைந்து வருந்துகிறாள், அதை மேலும் மேலும் அவள் அடைய விரும்பவில்லை. எனவே அவளிடம் உனது வரவை நாங்கள் எப்படிச் சென்று உரைப்போம்.

வெள்ளாங் குருகின் பிள்ளோ செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
யுளர வொழிந்த தூவி குலவுமணற்
போர்விற் பெறூஉந் துறைவன் கேண்மை
நன்னெடுங் கூந்த னெடுமோ மற்றே 153

வெள்ளாங் குருகின் பிள்ளோ செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானலம் பெருந்துறைத் துணையொடு கொட்குந்
தண்ணந் துறைவன் கண்டிகு
மம்மர் மேனியெந் தோழியது துயரே 158

(தலைவன் தலை குனிந்து வந்த வழியே ஏதோ ஒரு மனத்
திடத்துடன் செல்கின்றான்....)

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்க
ஆறுவது காட்சி நிறைவுறுகிறது

காட்சி; ஏழாவது

களம்; தலைவியின் இல்லம், சிறைப்புறம்,

காலம்; காலை, மாலை.

பாத்திரர்கள்; தலைவன், தலைவி, பாங்கி, பாணன், செவிலி

நிகழ்ச்சி;

தலைவியின் வாட்டங் கண்ட செவிலி தோழியிடம் காரணம் வினுதல், தலைவன் வரைவிற்காவன செய்யாது வாழாதிருப்பதைக் கண்ட தலைவி தோழி மூலமாகத் தலைவனிடம் கூறுவித்தல், தலைமகனின் புறத்தொழுக்கம் அறிந்து புலந்த தலைவியிடம் வாயில் நேர்தல். தலைவி அதனைப் புறக்கணித்தல்.

(முன்னெழினி அகல அரங்கும் அரங்கத்தில் நிற்கும் நாடகாசிரியனுந் தோன்றுதல்;)

நாடகாசிரியன்:

இன்று ஐங்குறு நூறின் நெய்தற் திணையின் ஏழாவது பத்தை நடித்துக் காட்டப் போகிறோம். இதிலே நெய்தற் திணைக்குரிய அகப்பொருள் வாழ்க்கையின் சில கூறுகளின் சிறப்புகள் உணர்த்தப்படும். வழக்கம்போல தலையாய திணைக்குரிய கருப் பொருளைக் கொண்டு இவைகள் சிறப்பிப்பது முறையாதலால் இந்தப் பத்தைச் சிறுவெண் காக்கையைக் கொண்டு சிறுவெண் காக்கைப் பத்தெனப் பெயரிட்டுள்ளனர்.

நெய்தல் நிலத்தின் அருகிலுள்ள சோலையிலும் பனை களிலும் வாழும் காக்கை இனத்தைச் சார்ந்ததே சிறு வெண் காக்கை. இது அதிகமாக நீர்க்கழிகளில் நீந்தி அங்கே உள்ள அயிரை, கெழிறு முதலிய மீன்களைப் பிடித் துண்டு உயிர் வாழும். சாதாரண காகத்தின் தோற்ற மாக இருந்தாலும் கழுத்து சிறிது நீளமானதால் நீருள் ஆழ்ந்து மூழ்கி நீந்திச் செல்லத்தக்க அமைப்புடையது. கழுத்திற்கு அடியில் வெள்ளை நிறமுடையதால் வெண் காக்கை எனப் பெயர் பெற்றது. இந்த ஏழாவது காட்சி நான்கு உட்பிரிவுகளைக் கொண்ட ஒரு கதம்பமாகக் காட்சிப்படுத்தப்படுகிறது.

இப்பத்தில் அதிகமான பாடல்கள் தலைவியின் கூற்றாக இருந்தாலும் நாடகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு பாங்கிக்கு தரப்படுகிறது. எனவே கதாநாயகியாகுந் தகுதி தோழிக்கே வழங்கப்படுவது ஒரு புதிய நாடக உத்தியாகும். இந்தப் பத்தில் தோழி இயற்பழித்தல் எனும் ஒரு அகப் பொருட் துறைச் சேதியை உபயோகிப்பதாக வருகின்றது. இதுபற்றித் தண்டியலங்காரத்தில் தலைவன் எத்தகை யவனாக இருக்க வேண்டும் என்ற சூத்திரம் ஒன்றுளது, அதற்கமையவே அகப் பொருளில் வருந் தலைவனுக்கும் பல சான்றாண்மைகள் இருக்க வேண்டுமென்பது மரபு. அவற்றுள் ஒன்று; சொன்ன வாக்கை மீறாதிருத்தல், அடுத் தது; கொடுத்த உறுதியிலிருந்து தளராதிருத்தல் என்ப னவும் இடம் பெறும். இவை ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள். இவைகளில் எதாவது ஒன்றை அவன் இழந்தால் இயல்பழிதல் என்ற குறை கொண்ட வனாவான். இங்கே தலைவியை விரைவில் வந்து வரை வேனென அளித்த உறுதி மொழியை அவன் நிறை வேற்றத் தவறியதால் அவனை இயல்பழிந்தவனாக தோழி உன்னி இயற்பழிக்கிறாள்.

காட்சி; பகுதி 1.

(இல்ல முன்றலில் , செவிலி தோழியை அழைத்து);

பாங்கியே கேட்குதி. கடந்த சில தினங்களாக நான் எம் தலைவியைக் கவனித்து வருகிறேன். உண்ணுவது மில்லை. உறக்கமுந் தவிர்த்தாள், தன் அருமைக் கிளி யுடனும் மானுடனும் பயில்வதுமில்லை. ஏதோ எண்ணு கிறாள் என்பது மட்டும் ..... அவள் எந்த வேளையும் விண்ணை வெறிச்சிட்டுப் பார்த்துப் .....

தோழி;

ஆமாம்... அன்னாய். நானுங்கூட அவதானித்தேன். ஆற்ற முயன்றேன், உடலின் நோயென்றால் உடன் வைத்தியஞ் செய்யலாம், இது உள்ளத்தைப் பொறுத்ததாயிற்றே...

செவிலி;

என்ன சொல்லினை அவளுக்கு என்ன நடந்து விட்டது. வேலனை அழைத்து வெறியாடலை நிகழ்த்த வேண்டி யதுதான்.. அத்தனை உள்ளத்து உழைச்சலா? அதற்கான காரணம் என்ன என்பதை உய்த்தறிந்தாயா..

தோழி;

ஆம்... அன்னுய். மிகவுஞ் சிரமத்துடன் முயன்றேன். முடிவில்;

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
துறைபடி யம்பி யகமகிண யீனுந்
தண்ணந் துறைவ னல்கி
ஞெண்ணுத லரிவை பாலா ரும்மே 168

சிறுவெண் காக்கை படகைத் தன் மனையாகக் கொண்டு, தன் முட்டைகளை இட்டு அடைகாக்கும் நெய்தற் துறைவன், அவளுக்குப் பால் ஊட்டிஞற்தான் உவந்தேற்று அருந்துவாள். ஆனல்.... அவளை வரைதல் வேட்காது தாமதிக்கின்றுன்

செவிலி;

அப்படியா/ அவளும் நீயுந்தானே ....இத்தகைய நடபடிக்கைகளில் ஈடுபட்டீர்கள்! அப்போது எங்களது உதவி தேவைப்படவில்லை. ஆனல் இப்போது....

(தோழி அமைதியாக ஆனல் ஆத்திரமாகச் செல்கிறுள்)

காட்சி பகுதி. 2.

(தலைவி தனித்து இருக்கிறுள். அங்கே தோழி வருகிறுள்.)

தலைவி; பாங்கி இங்கே வா. நான் படுந் துயரத்தைப் பார்;

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
கருங்கோட்டுப் புன்னைத் தங்குந் துறைவற்குப்
பயந்துறுத லழியச் சாஅய்
நயந்த நெஞ்ச நோய்ப்பா ல.:தே 161

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீந்துநீ ரிருங்கழி யிரைதேர்ந் துண்டு
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்குந்
துறைவன் சொல்லோ பிறவா யினவே 162

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
யிருங்கழித் துவலை யொலியிற் றுஞ்சுந்
துறைவன் துறந்தெனத் துறந்தே
னிறைசேர் முன்கை நீங்கிய வகளே 163

புன்னைக் கிளையிற் தங்கும் சிறுவெண் காக்கை வாழ்கின்ற துறைவன் எனக்குப் பரிசாகத் தந்த பசலையையும் நெஞ்சின் வேதனையையும் பார். கழிகளில் மீன் பிடித்து

கழிகளில் மீன் பிடித்து உண்டு, மலர் மணங் கமழ்த்தும் சோலையில் தங்கும் சிறுவெண் காக்கைத் துறைவன் முன்னர் விரைவில் வருவேன், வேட்டுக் கரம் பற்றுவேன் என்று உரைத்த சூழ் பொய்த்ததே. கழிகளிற் பாயும் நீரின் சுவறலிற் சுகமாக உறங்குஞ் சிறுவெண் காக்கை வாழ் கின்ற துறைவன் வாராதிருப்பதால் மம்மர் நோய் கொண்ட எனது முன் கைகளைப் பார். அதன் வளையல்கள் எவ்வண் நெகிழ்ந்துள்ளன. இவற்றை எல்லாங் கண்டும் உன் கண்கள் என்பாற் கருணை கொள்ளவில்லையா? அந்தக் கல்நெஞ்சக் காரனிடஞ் சென்று என் துயர் கழற உன் கால்கள் நகரவில்லையா? எனது வாட்டத்தை எடுத்து அந்த வாக்குறுதி இழந்தவரிடம் உரைக்க உன் வாய் திறக்கவில்லையா?

தோழி;

தலைவியே! நீ சொல்வதை எல்லாம் எண்ணுமல் இருக்க முடியவில்லை. உன் தாயும் இதனையே என்னிடங் கேட்டனள். அஞ்சற்க; இதோ நான் தலைவனிடம் நேரே செல்கிறேன். உன் நேர்த்தியை அந்தத் துறைவனை இறைவனுக மதித்து அவனிடம் விண்ணப்பிக்கின்றேன். சற்றுப் பொறுத்திரு. தக்க விடையுடன் வருகிறேன்,

காட்சி பகுதி. 2.

(அங்கிருந்து சென்ற தலைவி தலைவனிடம் வருகிறாள். அவளைக் கண்ட தலைவன்;)

தலைவன்;

சிறைப்புறத்தே பல வேளை காத்திருந்தேன், உங்களைக் காணுமற் சிந்தை கலங்கினேன். ஈற்றில் இப்போதாவது இங்கே வந்திர்களே! எங்கே என் மனதைக் கவர்ந்த மலர்..

தோழி;

இப்படிக் கேட்கும் உங்களைப் பார்த்து என்ன சொல்வ தென்றே தெரியவில்லை. உணர்வு கெட்ட சடங்கூட இத்தகைய உலுத்தத் தனமான உரையைப் பகராது.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
வரிவெண் டாலி வகிசெத்து வெரூஉ
மெல்லம் புலம்பற் றேறி
நல்ல வாயின நல்லோள் கண்ணே 166

இதோ இந்தக் கடற்கரைத் திரையால் கரையிற் கொண்டு சேர்க்கப்பட்ட மீன்கள் நீர் வடிந்ததும் கிடந்து துடிக்கும் . அவற்றை உண்ண வரும் சிறிவெண் காக்கைகள் அவைகள் நிலத்திலல்ல வலையிற் சிக்குண்டு கிடக்கின்ற என அஞ்சி விலகிச் செல்லுந் துறைவனே! உந்தன் வார்த்தை பொய்த்ததை எண்ணி எண்ணி அவளின் கண்கள் அழுது அழுது பசலை பூத்தன.

தலைவன்;

பாங்கி.... நீயுமா இவ்வண் எண்ணுகின்றனை. என் தலைவி உன்னிடம் என்ன சொன்னாள். அதைக் கூறுவாயாக;

தோழி;

அவள் என்ன சொன்னாள் என்பதை அவள் சொல்லிய வண்ணமே சொல்கின்றேன். கேட்குதி.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
யிருங்கழி மருங்கி னயிரை யாருந்
தண்ணந் துறைவன் றகுதி
நம்மோ டமையா தலர்பயந் தன்றே 164

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
யறுகழிச் சிறுமீ ரை மாந்துந்
துறைவன் சொல்லிய சொல்லே
னிறையே ரெல்வளை கொண்டுநின் றதுவே 165

இவற்றைத்தான் இயம்பினாள். கழியிடை நீந்தி அயிரை முதலான மீன்களை உண்ணும் சிறுவெண் காக்கைகள் வாழுந் துறைவனின் சூழுரை பொய்த்தலால், ஊரில் அலர் பலர் கூறலாயினர். அதுமட்டுமல்ல. என் கை வளையல் கழுழுமளவிற்கு என் உடல் நலத்தையுங் கெடுத்தது என்றாள். வேறு என்னதான் அவள் சொல்ல வேண்டுமென்று எதிர் பார்க்கின்றனை!

தலைவன்;

பாங்கியே! உடனே விரைந்து செல். சொல்லாலே என்னைக் கொல்லாதே. செல், அவளிடம் வரைதற்கு வேண்டிய ஏற்பாடுகளுடன் நான் அங்கு வருவேன் எனச் சொல் . என் தாமதத்திற்காக என்னை மன்னியா விட்டாலும் முனியாதிருக்கும்படி வேண்டிக்கொள்.

(காட்சி கரைகிறது காலச் சக்கரம் சுழல்கிறது)

காட்சி பகுதி. 4.

(வரைவு நடந்து வாழ்க்கை ஓடம் நகர்ந்து
வாழ்ந்த காலத்தை வருமெனும் அலைகள் தடவின.
குடும்பம் மக்கட் செல்வம் பெற்று குதுகலித்தது.
அப்போது தலைவன் புறந்த்தொழுக்கத்தைக்
கைக்கொண்டான்.இதன் காரணமாகத்
தலைவி அவனுடன் புலந்தாள்.
தலைவி கவலையுடன் இருக்கப் பாங்கி வருகிறுள்.)

பாங்கி:

என்ன? ஓடம் கவிழ்ந்ததுபோல உடகார்ந்து இருக்கின்றனை. எவ்வண் வாழ்க்கை ஓடம் ஓடுகிறது. நெய்தலாக மலர்ந்து தாழை மடலாக மணந்து, உப்பிட்ட உணவுபோல உருசியாக இருக்கின்றதா/

தலைமகள்;

தோழியே அந்தத் துக்கத்தை ஏன் கேட்கின்றுய். சில நாட்களின் முன்னர் ஊரவர் தங்களுக்குள் இரகசிய மாகப் பேசிக்கொண்ட விசயம் இப்போது பலரும் அறிந்த அலராகி விட்டது. அதுகூட உன் செவிக்கு எட்டவில்லையா; அல்லது கேட்டும் கேளாதவள்போல வாழாதிருந்தனையோ?

தோழி;

தலைவியே! நானேதும் அறியேன். அறிந்திருப்பின் உடன டியாக வந்து ஆறுதல் சொல்லும் முதலாவது ஆள்ாக நான் இருப்பேன் என்பதை அறிகிலையோ? என்ன நடந்தது எனச் சொல்லுதி....

தலைவி;

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
மிருங்கழி மினக்கெடி முருந் துறைவ
னல்குவன் போலக் கூறி
நல்கா ணையினுந் தொல்கெ ளன்னே 167

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
பென்னினர் ஞாழன் முகையிற் பொதியவிழ்
னெஞ்சத் துண்கை யறிந்து
மென்செயப் பசக்குந் தோழியென் கண்ணே 169

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
யிருங்கழி நெய்தல் சிதைக்குந் துறைவ

புன்னெயம் பூஞ்சினைச் சேக்குந் துறைவ
னல்ல னென்றி யாயிற்
பல்லித ழுண்கண் பசந்தன்மற் றென்னே 170

என் மேனியைப் பார், கண்களை நுதலைப் பார். கழி யோரங்களில் வளரும் சிறு கிண்ணைப் புதர்களின் இலை களின் அடிப்பாகத்தில் உப்புக் காற்றுப்பட்டு, உலர்ந்து உப்புப் பொரிந்திருப்பதால் அதை உப்புக் கிண்ணை என்பார்களே. அதுபோல என் உடலிற் பசலை படர்ந்திருப் பதைப் பார். காரணம்; அவர் சேரிப் பரத்தையைபாற் செல்வதும், அங்கே சேறிக் கிடப்பதும் வழக்கமாகி, வரவர அது அதிகரித்து விட்டது. இத்தகை அழுக்கான வாழ்க்கை எனக்கு இன்னும் வேண்டுமா?.

தோழி;

அப்படியா? உங்களைச் சேர்த்து வைக்கக் காரணமாக இருந்த நான் இவ்வண் பிரிந்து வாழ்வதை எவ்வண் சகிப்பேன். அதைச் சகித்தால் நானெவ்வண் சகி யாவேன். இதற்கான என் தலையீடு என்ன என்பதை இப்போது கூறேன். ஆனால் அதை உடனடியாகத் தொடர்வேன்.

(தோழி ஒரு திடமான முடிவை நோக்கி
விரைவுடன் அகல்கின்றாள்)

முன்னெழினி மறைக்கிறது
எட்டாவது காட்சி நிறைவுறுகிறது

காட்சி; எட்டு

களம்; மலர்ச் சோலை. சிறைப் புறம், தலைவியின் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்; தலைவன், தலைவி, பாங்கன், தோழி

நிகழ்ச்சி;

நெய்தல் நிலத் தலைவன் ஆங்கு வாழுந் தலைவியை முதன் முதலாகக் காண்கிறான். தனது மனதிற்குகுந்தவளாக அவனைக் கவர்ந்த அந்தக் கன்னி எங்குள்ளாள் யாரவள் என்பவற்றை அறிந்து வரும்படி தன் பாங்கனிடம் வேண்டுகிறான். அவளைத் தான் கண்ட இடத்தைக் கண்டு பிடிப்பதற்கான குறிவழியையுஞ் சொல்கிறான். இதன்படி அகப்பொருளில் காட்சியில் ஆரம்பமாகும் அகப்பொருட் கிழவிகள் திருமணம் வரை வரையும் நீடிக் கிறது. இந்த அகப்பொருள் வாழ்க்கையை அத்திவார மாகக் கொண்டு எட்டாவது நாடகம் காட்சிப்படுத்தப் படுகிறது.

(மலர்ச் சோலையில் தலைவன் தனித்தோர் தனி இடத்தில் நிற்கிறான். அவ்வழி தலைவி தனது ஆயத்தாரோடு செல்கின்றாள். அவளைக் கண்ட தலைவன்;)

தலைவன்:

திரையிமி ழின்னிசை யகளி யயலது
முழவிமி ழின்னிசை மறுகுதொ றிசைக்குந்
தொண்டி யன்ன பணைத்தோ
ளொண்டொடி யிரிவையென் னெஞ்சுகொண்டோளே171

அலையோசையைக் கடல் மீட்டுகிறது. நெய்தற் நிலத்திற்கு உரிய நாவாய்கள் கரைக்கு வரும்போதும் புறப்படும் போதும் முழங்கும் நாவாய்ப் பறையும், வலை வீசி மீன் பிடிக்கும் போது கொட்டும் மீன்கோட் பறையும் இன்னெலி பரப்புகின்றன. அத்தகைய துறை முகம் தொண்டி. அங்கு அழகிய தோழுடையாள் ஒருத்தி செல்வதை என் கண்கள் நுகர்ந்தன. அவன் வெறுமனே செல்லவில்லை என் மனதையுங் கவர்ந்து சென்றாள். அதன் பின்னர் என் மன நிலை தடுமாறுகிறது. இந்தத் தடுமாற்றத்தை அகற்ற, அவள் யாரோ! எவர் பெற்ற

மகளோ!! எங்கே உறைகிருளோ என்பதைத் தெளிந்து தேர வேண்டும். இதை சரிவர அறிந்து சொல்ல வல்லவன் என் உயிருக்கு உயிரான பாங்கனே.

(அப்போது அப்பக்கம் வந்த பாங்கனை அழைத்து;)

ஒண்டொடி யரிவை கொண்டன னெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத் தொண்டி யாங்க
ணுரவிக் கடலொலித் திரையென
விரவி னனுந் துயிலறி யேனே 172

பாங்கனே! நான் என் நனவில் ஒரு பாவையைக் கண்டேன். அவளோ கணத்துள் அப்பாற் சென்று விட்டாள். ஆனலும் அவளது நினைவுகள் என் நெஞ்சிற் படிந்து விட்டன. இப்போது நனவில் மட்டுமல்ல கனவிலுந் தோன்றுகிருள். என்னைக் கலங்கச் செய்கிருள். தொண்டிக் கடலின் அலைகள் ஓய்வில்லாதன போல என் நெஞ்சும் என்னைத் துயிலாது செய்கின்றது. அவள் யார்? எங்குளாள் என அறிந்து சொல்லவல்லை நீயே! அதைச் செய்வாயா?

பாங்கன்:

எங்கே கண்டீர்கள் எனச் சொல்லுங்கள். நான் விரைவிற் கண்டு சொல்கிறேன். அதுவரை கவலற்க. இது என் கடன்.

(தலைமகளைக் கண்ட இடம் முதலான விபரங்களைத் தலைவன் சொல்லக் கேட்ட பாங்கன் அவ்விடத்தை அண்முகிறன். அங்கே ஆயத்தாரோடு அந்த அழகிய வல்லி கழங்காடிக் கொண்டிருப்பதை ஒரு புதர் மறைவில நின்று பார்த்த பாங்கன் தன்னுள்)

இரவி னனு மின்னுயி லறியா
தரவுறு துயர மெய்துப தொண்டித்
தன்னறு நெய்த னறும்
பின்னிரிங் கூந்த லணங்குற் றேரே 173

என் தலைவன் தக்கதோர் தகையணங்கையே கண்டுள்ளான். நெய்தல் மலரைச் சூடியதால் நறுமணங் கொண்ட கூந்தலுக்குரிய இந்த அணங்கு காண்பவர் கண்களைக் கொள்ளை கொள்ளவல்லவளே. ஆனல், அது என் தலைவனின் நெஞ்சத்தையே கொள்ளை கொண்டமை அவனது பாக்கியமே. இதை நான் உடனே சென்று அவனுக்குரைப்பேன்.

(அரங்கு வெறியதாக, இருள் சூழ்ந்த நிலையில் மீண்டும்
ஒளி சிறிது சிறிதாகப் பரவுகிறது.
அந்த ஒளியிடையே நாடாசிரியன் தோன்றி;)

அவையோரே. என்ன இடையிற் கரடி புகுந்ததுபோல வருகிறனே, இதுவரை எங்கே போயிருந்தானே என்று எண்ண வேண்டாம். நான் வருமுன்பே நாடகத்தைத் தொடங்கி வீட்டீர்கள். அது என் தவறில்லை. ஆனல்; அதற்கு முதல் இந்த நெய்தல் நில மக்களைப்பற்றி ஏதோ ஒன்றைச் சொல்லாமல் விட்டது போன்ற ஒரு உள்ளுணர்வு! அதனல், சற்று இலக்கியங்களொடும், அகராதிகள், நிகண்டிகளுடனும் கலந்துரையாடினேன். அதனல், நான் பெற்ற புதிய தகவல்களையுஞ் சிந்தனைகளையும் உங்கள் முன் கொண்டுவருவதிற் தாமதமாகி விட்டது . இனி விசயத்தினுள் வருவோம்.

பரதவர் நுழையரோடு ப.ஃறியர் திமிலர் சாலர்
கருதிய கடலர் கோலக் கழியரே நெய்தல் மாக்கள்
விரவிய பரத்தி மேவு நுழைச்சியே யளத்தி நீண்டு
பெருகிய கடற்பிணவே நெய்தலிற் பெண்ணினுமம்

கொண்கன் துறைவ னைடு குறித்த மெலலம் புலம்பன்
தண்கடற் சேர்ப்ப னெயதற் தலைவனைச் சாற்று நாமம
பண்படு மளவர் தாமே பகர்ந்தி டுமந் நிலத்தில்
உண்படு முப்பமைப் பொருமண ரும்விதித் தபேரே

என்று மணடல புருடரின் சூளாமணி நிகண்டின் பெயர்ப் பிரிவின் 71ம் 72ஞ் செய்யுட்கள் உரைக்கின்றன.

இந்நில மக்களை துறைவன், சேர்ப்பன், கொண்கன், புலம்பன், நுழையர் பரவன் பரதவன் ப.ஃறியர், மீகாமன், திமிலர், சாலர், கடலர், கழியர், அழவர் உமணர் கரையார் என அழைப்பர். பெண்பால் மக்களைப் பரத்தியர் , நிழைச்சி அழத்தி , கடற்பிணை, பரதவப் பெண் எனவும் அழைப்பர். இவையெலாம் ஒரு பொருள் தரும் பலபெயர் என்ற எண்ணமே இதுவரை என் மனதிற் தோன்றியதுண்டு. ஆனல் அத்தகைய சொற்திரட்சி தமிழில் வெறுமனே தோற்றமடையவில்லை. ஒவ்வொரு சொற்களும் சிறபபான காரணங் கருதியே உண்டானவை. இதை தேவ

நேயப்பாவாணர் தனது சொல்லாராய்ச்சிக் கட்டுரை எனும் நூலிற் சொல்லி உள்ளார். எனவே நெய்தல் நில மக்களைக் குறிக்கும் மேற் சொன்ன பெயர்களின் காரணங்களை எடுத்துக் கூறலாம் என எண்ணுகிறேன்.

(காட்சி தொடர்கிறது- தலைமகளைப்பற்றிய தவல்களைத் தலைவனிடம் பாங்கன் வந்துரைத்தல்)

பாங்கன்;

தலைவனே! உன் கண்ணிற் பட்டவள் பெண்ணல்ல, உன் வாழ்க்கையின் எதிர் காலத்தை உனக்கு ஒளியிட்டுக் காட்டப் போகும் கண். அவள் இப்புலத்தின் புலம்பனின் ஒரே புத்திரி. தினமும் அருகில் அமைந்துள்ள சோலையில் விளையாடத் தோழியருடன் வருவது அவளது வழக்கம். வேறேதும்....

தலைமகன்;

வேண்டாம், வேண்டாம், நான் மீதியைப் பார்த்துக் கொள்கிறேன். ஒருத்தனுக்கு ஒருத்தி; இவனுக்கு இவள்தான் அவ்வொருத்தி என்ற இறை நியமம் இருப்பின் அவ்வழியே எனை அவள்பாற் சேர்க்கும். ஏதேனும் உதவி தேவையெனில் தருணத்தே வந்து உதவுக!

(பாங்கன் அகல தான் முன்னர் அவளைக் கண்ட இடத்திற்குச் செல்கிறான். அங்கே அவள் நிற்பதைக கண்ட அவன் தன்னுள்:)

அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கின ணுணங்கிழைப்
பொங்கரி பரந்த வுண்க
ணங்கலிழ் மேனி யசைஇய வெமக்கே 174

குளிர்ந்த தொண்டி துறைமுகத்தை அண்மிய இந்த நறுமணங் கமழும் பொழிற்கண் படரரி சிவந்த, கண்டாரை தன்பால் உள்வாங்கும் இவள கண்கள் மீண்டும் என் கண்பட்டன. எனவே இவள் எனக்கே உரியவளாவள்.

(என எண்ணியவாறு அவள் நின்ற பக்கம் எதேச்சையாகச் செல்வதுபோல அவளை அண்மத், திடீரெனத் தன் எதிரே பிற ஆடவன் ஒருத்தன் வருவதைக் கண்ட தலைவி தடுமாறித் திரும்பிச் செல்ல எத்தனிக்கிறாள். அதனால் ஏற்பட்ட

தடுமாற்றம் அவளைப் பின்றுற் சரிய வைக்கிறது. இதை அவதானித்த அவன் தாவி அவள் விழுந்து விடாது தடுத்து நிறுத்துகிறன். அவள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டி அவனை வெறுப்போடு நோக்குகிறள். அவனே;)

நான் அங்கே உள்ள அந்த இடத்திற்குப் போக வந்தேன். ஆனல் இப்படியாகி விட்டது. மன்னித்துக் கொள்ளவும்.

(எனச் சொல்லிப் போகிறன். அடுத்த தினத்தும் வருகிறன். அவளைக காண்கின்றன். அவள்பாற் சென்று;)

எமக்குநயந் தருளினை யாயிற் பிணைத்தோ
ணன்னுத லரிவையொடு மென்மெல வியலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே 175

நீ யாரன அறியேன். ஆனல் இந்த அழகிய தொண்டியைப் போல உன்னிடம் பல பண்பு நலன்கள் உளவென உணர்ந்தேன். என்மீது உனது அருளைப் பொழிவது உன் உள்ளக் கிடைக்கையாயின், மேற்கொண்டு உன் பாங்கி யொடு இவ்வண் வரின் நான் மிக மகிழ்வேன்.

(தலைவி எதையும் பொருட் படுத்தாத வெகுளித் தனத்தோடு அங்கிருந்து அச்சத்துடன் அகக்கிறள் அப்போது அங்கு வருந் தோழியிடம்)

தலைமகன்: தோழியே சற்றுஉங்கள் செவியைசாய்ப்பீர்களா

தோழி;

இதுவரை நாம் ஒருவரை அறியோம். அப்படி இருக்க, என்ன அவசரமான சேதிகள் சொல்வதற்கு உண்டோ?

தலைவன்;

உண்டு. ஆதலாற்தானே தங்களிடம் கேட்டேன். இங்கு நின்று செல்லும் உங்கள் தலைவி பெயரளவிற் சென்றுளே தவிர உண்மையில் அவள் இங்கேதான் நிற்கின்றுள்.

தோழி;

இது என்ன பித்தலாட்டம். அதோ அவள் போவதை நீர் கண்டிலையோ.

தலைவன்;

இருக்கலாம்! ஆனல், அவள் என் நெஞ்சில் நிலைத்து விட்டாளே . நான் இங்கே இருக்க அவள் எவ்வண் அங்கு செல்ல வல்லாள்.

பண்பும் பாயலுங் கொண்டன டொண்டித்
தண்கமழ் புதுமலர் நாறு மொண்டொடி
யைதமைந் தகன்ற வல்குற்
கொய்தளிர் மேனி கூறுமதி தவறே 176

பண்புடன் துலங்கும் தொண்டியினைப்போலக் குளிர்ந்த நெய்தல் மலர்கள் கமழும், ஒளிமிகு இடையாபரணங்களை அணிந்த உடன்பறித்த தளிரொத்த மேனியளை நான் விரும்புதலும் விழைதலுந் தவறுடைத்தோ!

தோழி;

துறைவனே, நீர் இவ்வண் எண்ணுதல் தவறில்லைதான். ஒன்று உமக்குத் தெரியுமா? இவள் நெய்தல் நிலத்தில் மண மலர்களைச் சொரியும் முள்ளிச் செடி போன்றவள். இதனாற்தானே தொண்டி சிறந்தது என உலகோர் பேசுவர், அத்தகைய நெய்தல் மகளாகிய இவளின் தோழை இணைய விரும்ப எவரும் அஞ்சாதிருப்பதை அறிகிலையோ?

தவறில ராயினும் பனிப்ப மன்ற
விவறுதிரை திகிரக்கு மிடுமண னெடுங்கோட்
முண்டக நறுமலர் கமழும்
தொண்டி யன்னை டோளுற் றேரே 177

தலைமகன்;

தோளுங் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் றெண்டி யன்ன
வேற்கண்டு நயந்துநீ நல்காக் காலே 178

பாங்கியே, நீ அவளது உயிர்போன்றவள் . அவளது வளமும் வாழ்வும் உன் கையிற்தான் தங்கி உள்ளது. எனவே அவளை மனதால் சுமக்கிம் எனக்கு உனது தயவு வேண்டியுள்ளது . செங்கோற் குட்டிவனின் வீரத்தை உணர்த்தும் தொண்டி நகரத்தைப் போன்ற நலன்மிகும் அவளின் நட்பை நீ பெற்றுத் தாராதொழியின் நான் எவ்வண் வாழ்வேன்!

(தோழியின் துணையிடன் அவர்கள் ஒன்று இணைகின்றனர்.
பகற் குறி , இரவுக் குறியென பலவிடங்களிற் சந்திக்கின்றனர்.
இந்தக் களவியல் வாழ்க்கை ஊரலராகிறது.
இது தலைவியின் தாய் தமருக்குத் தெரிய வரத், தோழி
அறத்துடன் நின்று உண்மையை உணர்த்துகின்றாள்.

இறுதியிற் தலைவன் தலைவியைச சந்திக்கும் குறிகள் யாவும் மறுக்கப்படுகின்றன. அத்துடன் அவள இற்செறிக்கப்படுகிறுள். தோழி இதற்கொரு முற்றுப் புள்ளி வைப்பதற்காகத் தலைவனைச் சந்தித்து வரைவு கடாவுகின்றுள்.)

நல்குமதி வாழியோ நளிநீர்ச் சேர்ப்ப
வலவன் றுக்கத் திறையிறுப் பிறழு
மின்னெலித் தொண்டி யற்றே
நின்னல தில்லா விவள்சிறு நுதலே 179

சிறுநணி வரைந்தனை கொண்மோ பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப
பறைதபு முதுகுரு கிருக்கும்
துறைகெழு தொண்டி யன்னவிவ ணலனே 180

தலைவனே! காரியம் கட்டுக்கு அடங்காததாயிற்று. நண்டுகள் தமது கொடுக்குகளால் தாக்க இருல் துள்ளித் துடிப்பதுபோல களவியல் வாழ்க்கையால் தலைவி துன்புறுகிருள். நீ வராத காரணத்தால் உடலிற் பசலை படர்ந்து அவளின் களவை ஊரவர்க்கு எடுத்துப் பறை சாற்றுகிறது. இப்போது இவளுக்குத் தேவை கற்பியல் வாழ்வே! ஆகவே உடன் வந்து வரையாவிட்டால் என்ன பாடுறுமோ நானறியேன். பரதவர் பிடித்த மீன்களை உண்டு முது நாரைகள் வாழுந் தொண்டிபோல இவளது நலனுங் கெடும். ஆதலால் ஆவனவற்றை உடனே ஆற்றுக.

தலைவன்;

பாங்கி உன் உதவி பன்மடங்கு பெரிது. சொல்லிற் கடங்காதது. எனவே உன் சொல் செவிகளால் மட்டும் மடுத்திலேன். எனது அகத்ததுளும் மடுத்தேன். நான் இப்போதே சென்று வரைவிற்கான என் பங்கைத் தகையியுறச் செய்வேன். அவளைத் தளராதிருக்கும்படி பார்த்துக் கொள்வது நின் கடன்...

காட்சி கரைகிறது

முன்னெழினி மறைக்கிறது
எட்டாவது காட்சி நிறைவுறுகிறது

காட்சி; ஒன்பது

களம்; சிறைப்புறம். தலைவியின் இல்லம்,

காலம்; அந்திமாலை. இரவு, மாலை

பாத்திரர்;

தலைவன், தலைவி, செவிலி, தாய், பாங்கி, வெறியாட்டு வேலன்

நிகழ்ச்சி;

தலைமகன் வரைந்து கொள்ளப் பொருந்தியதைக் கேட்டுத் தலைவி மகிழ்வது. தலைவன் வரத் தாமதித்ததைக் கண்டு மாலையில் மனங் கவல்வது. தோழி அறத்துடன் நின்றது. தாய் தலைவியை இற் செறிப்பது. வேலன் வெறியாட் டயர்தலைத் தோழி தவிர்த்தல். இததகைய பல அகப்பொருள் கிழவி பலவற்றைத் திரட்டிச் சொல்லும் பகுதி;

முன்னெழினி அகல அரங்கில் நாடாசிரியன் தோன்றி;

வணக்கம்! இன்று ஐங்குறு நூறின் ஒன்பதாவது பத்தினை நடித்துக் காட்டப்போகின்றோம். இந்தப் பத்து நெய்தல் நிலத்திற்கே காரணமான நெய்தல் மலர்க் கருப் பொருளைக் கொண்டது. நீல வண்ணமும் மங்கையர் கண்போன்றது மான அழகிய மலர்களைப் பூக்கும் இந்த நெய்தல் மலர் இலக்கியத்திற் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இப் பத்துப் பாடல்களும் நெய்தல் மலரைக் கொண்ட ஒற்றுமையை உடைத்தாக உள்ளதே தவிர அதன் நிகழ் வுகள், நெய்தல் நிலத்திற்கு அப்பாலும் பரந்து செல்கிறது.

காரணம் வெறியாட்டயர்த்தல் முதலிய பல அகப்பொருள் நிகழ்வுகள் நெய்தல் நிலத்திற்கே உரியதன்று. அது குறிஞ்சி நிலத்திற்குரிய நிகழ்ச்சி. எனினும் களவியலில் ஆரம்பமாகும் வாழ்க்கை ஒரு திணைக்குரியதன்று. மக்கள் எங்கெங்கே வாழ்கின்றனரோ, அங்கெல்லாம் இந்த ஆரம்பம் இடம்பெறும். இதன் வளர்ச்சி கற்பியலிற் முடியும் வரையும் பல கட்டங்களில் பலவித சமுதாயக் கட்டுப்பாட்டிற்குள் நிகழ்வதுதான் இயல்பு. எனவே ஒரு திணைக்கு பொதுவான அகப்பொருட் கிழவி வேறு திணைகளில் ஏரோ வழி சிறப்பாகத் தோன்றுவதுண்டு.

அதுபோலத்தான் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் சிறப்பு டைய நெய்தல் நிலத்தில் குறிஞ்சித் திணைக்குரிய வேலன் ஆட்டம் இடம்பெறுவதாக அம்மூவனார் இந்த நெய்தற்

ஐங்குறு நூற்றில் இடம்பெறும் ஐம்பது பத்துகளில், எந்தவொரு பத்தும் அதுசார்ந்த திணைக்குரிய ஒரு அகப்பொருள் நிகழ்வைக் குறித்தாக ஆக்கப்படவில்லை என்பதைச் சுவைஞர்கள் கவனித்திருப்பீர்கள், பாடல்கள் அத்தகைய ஒழுங்கு கொண்டுந் தொகுக்கப்படவில்லை. எனவே, அவறறை நாடக வடிவிற் காட்சிப் படுத்தும் போது எவரை நாடகத்தை நடத்திச் செல்லுங் கதா நாயகத தானத்தில் வைத்து நாடகம் எழுதுவது என்பதிற் பல சிரமங்களை முகங்கொடுக்க வேண்டியுள் ளது. எனவே, குறிக்கப்பட்ட பத்தில் அதிகமான இடங் களிற் தோற்றுபவர், அல்லது கூற்றுப் பகர்பவராகச் செய்யுள் அமைக்கப்பட்டுள்ளதோ அதைக் கொண்டே நாடகத்தின் பிரதான பாத்திரத்தை அத்தகைய ஒருவருக்கு அளிப்பது நலமெனத் துணிகிறேன். அந்த வகையில் இந்த நாடகத்தின் பிரதான பாத்திரத்தைத் தோழிக்கு கொடுத்து அவளின் தோற்றத்தோடு நாடகத்தை ஆரம்பிப்போம்.

தலைவியின் வீடு. .அங்கே வருந் தோழியைச் செவிலி அழைத்து)

பாங்கியே! உன் தலைவி, உண்ணாது, உறங்காது உயிரையே வெறுத்தாள்போலத் தன் எண்ணங்களை எங்கோ விட்டுத் தனக்குட் தானே பேசுகிறாள், ஏதோ தாங்க முடியாத வேதனை உற்றாள் போலத் தவிக்கின்றாள். என்ன காரணம்? நீ இவ்வாறு ஏன் நடந்துகொள் கின்றனை என்று எனக்குச் சொல்லெனக் கேட்டால் ஏதுஞ் சொல்கிறாளில்லை. அவளை ஏதும் அணங்குகள் பிடித்துக் கொண்டதோ? இதற்கு வேறு வழியின்று. வேலனை அழைத்து வெறியாட்டயர்வதே மேலென எனக்குத் தோன்றுகிறது. நீதானே நாள் முழுதும் அவள் பக்கத்தில் இருப்பவளாதலால் உனக்கு ஏதுந் தெரியுமா. தெரிந்தால் சொற்றுக.

(தோழி அமைதியாக இருக்க)

செவிலி;

ஏன், அமைதியாய், ஐந்தடக்கிய ஆமைபோல உள்ளனை. ஏதுந் தெரிந்தால் உன் தலையை வெளியே நீட்டு, அல்லது வெறியாட்டயர வேலனை விரைந்து அழைத்து வருக.

தோழி;

நெய்த னறுமலர் செரிந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழு மார்ப
னருந்திறற் கடவு ளல்லன்
பெருந்துறைக் கண்டிவ ளணங்கி யோளே 182

அன்னுய். அறிவில்லாதவள் நான். ஆனல் தலேவிமேல் அளவற்ற பாசங் கொண்டவள். ஆதலாற் தலேவியைப் பற்றிய ஒரு செய்தியைத் தங்களிடங் கூருது மறைத்து விட்டேன்

செவிலி;

நீ என்னடி சொல்கிருய். நீ சொல்வதன் உட்பொருள்தான் என்ன?

தோழி;

அன்னுய், நெய்தல் மலருந் தடடைக் கோரை மலரும் கலந்து தொடுத்த மாலே சூடிய நமது துறைவனே அவள் வணங்குந் திறத்தாளாயினள். அவன் வணங்கற்குரிய கடவுளல்லன். பெண்கள் தமது கணவனேயே கடவுளாக நினேத்து வணங்கும் பெற்றியால் அன்னவனேத் தன் கடவுளாகக் கொண்டு விட்டாள். ஆதலால் மனதில் ஒரு தெய்வங் கொண்டார்க்கு மறு தெய்வம் எதற்கு ...

செவிலி;

ஓகோ, அப்படியா செய்தி! ஆனலும் நற்ருய் விடுவாளோ. இவளுக்கு ஏதோ தெய்வக் குற்றமென வேலனின் உதவியை நாடுவளே! இதற்கு நான் என் செய்வேன். எப்படி அவளுக்கு உரைப்பேன்.

தோழி;

அன்னுய், கலங்க வேண்டாம். இதனே அவளிடத்தும் அறத்தொடு நிற்போம். எவ்வண்ணமாயினும் வெறியாட்டைத் தவிர்ப்போம்...

(எனச் சொல்லி அபபாற் செல்கிருள் செல்லும் வழியில் வெறியாட்டயரும் வேலன் வீட்டிற்குச் செல்கிருள். அவள் வருவதைக் கண்ட வேலன் தலேவியின் வீட்டில் என்ன நடந்ததோவெனப் பதறி முன்னல் வந்து)

என்னம்மா! என்ன நடந்து விட்டது. நம் செல்வத் தலே வியை ஏதும் கெட்ட ஆவிகள் பிடித்து வருத்துகின்ற னவா. அதை அடித்துத் துரத்த என்னே அழைத்து வரச்

சொல்லினரா? கவலைப்பட வேண்டாம்! ஒரே ஒரு ஆட்டம். பிடித்துள்ள எந்த ஆவியானாலும் ஒரே ஓட்டம். (வீட்டிற்குள் பார்த்து) பிள்ளாய், ஆடடத்துக்குரிய உடுக்கு, சிலம்பு, உடை, வேல், தண்டம் , வெள்ளிக கண்டம் எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்து;

தோழி;

வேலனே, நான் சொல்ல வந்ததைக் சொல்ல முதலே இங்கேயே ஆட்டத்தைத் தொடங்கிவிட்டனை. நான் சொல்வதைக் கேள். நம் தலைவிக்கு அப்படி எந்தவொரு கெட்டதும் பிடிக்கவில்லை. நல்லதொன்றே பிடித்துள்ளது. நம் துறைவனை அவள் விரும்புகிறாள் . அதுதான் காரணம். வேலனே ஒரு தமிழ் நெறி உனக்குத் தெரியுமா. பெண்ணொருத்திக்குத் தன் கணவனே கண்கண்ட தெய்வம் அல்லவா? ஏற்கனவே அவள் மனதில் அவன் தெய்வம் ஆகிவிட்டான். இனி அவர்களைச் சேர்த்து வைப்பதுதான் நம் யாவரதும் கடன். இடையில் நீ புகுந்து கழியைக் கலக்காதே. அதுவே போதும். உனக்கு வர வேண்டிய வருமானம் கெட்டு விட்டதே என அஞ்சாதே, காரியம் நலமாக நடந்தால், அதனிலும் பல மடக்கு வருமானம் உனக்குக் கிட்டும். அதுவரை அந்தப் பக்கமே வாராதொழிக

(வேலன் அயர்ந்து நிற்கிறான். தோழி, ஓடும் வாய்க்காலில் அயிரையாய் விரைந்து அகன்று தலைவியிடம் வருகிறாள்)

தலைமகள் தனக்குள்ளே:

கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
குறும்பொறை நாட னல்வய லூரன்
தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
கடும்பகல் வருதி கையறு மாலை
கொடுங்கழி நெய்தலுங் கூம்பக்
காலை வரினுங் களைஞரோ விலரே 183

இது என் விதியா? அல்லது நான் நம்பிய அவர் செய்த சதியா? சொன்ன வாக்கை மறந்தாரா, அல்லது அவர் சொல்லிய வேளையில் உலகையே மறந்த நிலையிற் சொற்றினரா, பல அருவிகள் ஒன்றிப் பாயுங் கழிகளை உடைய நெய்தல் நிலத் துறைவன், என்னளவில்,

மாலையில் வருத்தும் குறிஞ்சி நாடனுகவும், பசலையை அள்ளி வாரி வழங்கும் மருதத் திணை ஊரவனுமாகவும் மாறி விட்டாரா. பிரிந்துழிக் கலங்கும் என்னையிட்டுக் கவன்றிலரா. இதோ! துன்பந் தரும் மாலை வந்திறுத்தது. நெய்தல் மலரும் கூம்பி விட்டது . அது காலை வந்ததும் மீண்டும் மலரும். என் மனதோ என்று மலருமோ.

(அத்தருணம் அங்கு வருந் தோழியைக் கண்டதும்)

பாங்கி இப்போதாவது இப்பக்கம் வந்தனையே! இதோ என் நிலையைப் பார்;

அலங்கிதழ் நெய்தற் கொற்கை முன்றுறை
யிலங்குறுந் துறைக்கு மெயிறுகெழு துவர்வா
யாம்போ ழவ்வளைக் குறுமக
ணரம்பார்த் தன்ன திங்கிள வியளே 185

முன்பொருகால் நாம் ஆயத்தாருடன் நின்றபோது; அப்பக்கம் நமது தலைவன் வந்தானல்லவா. அத்தருணம் நம்முள் யார் அழகியவள் என்று ஒரு வினு எழுந்ததே அப்போது நீ ; மலர்ந்த இதழ் அசைந்து அழகூட்டும் நெய்தல மிகுந்த கொற்கைத் துறை முத்தை யொத்த பற்களும், செவ்வதரமும் வெண்சங்கு வளையணிந்த கையுமுடையை. வீணையின் நரம்புகளை இசைப்ப தாலாம் இனிய இசையொத்த சொற்களை விளம்புபவள். இவளே என்று புகழ்ந்தாய் அல்லவா? இப்போது என் நிலை என்னயது பார். அதுமட்டுமா வரைவினை உறுத்த வேண்டி அவரைச் சந்திப்பதைத் தவிர்த்து வரும் நான் அவருடன் வேறு ஏதோ காரணங்களுக்காகப் புலந்தேன் என எண்ணி என்னிடம் பல வாயிலார் வந்தனர். அவர்களுக்கு;

நெய்த லிருங்கழி நெய்த னீக்கி
மீனுண் குருகினங் கான லல்குங்
கடலணிந தன்றவ ரூரே
கடலினும் பெரிதெமக் கவருடை நட்பே 184

என் தலைவன், கழியில் ஒற்றைக் காலில் நின்று மீனுண்ணும் கொக்குகள் நிறைந்த பாக்கத்தவர்தான். எனினும் அவர்மேற் கொண்டுள்ள என் நட்பு இந்தக் கடலிலும் பெரிதெனக் கூறிவிட்டேன். அவர் விரைவில்

வந்தி என்னை வரைந்திடச் சொல் என்பதே உன்னிடம் நானிரக்கும் பொருள்!

தோழி;

தலைவியே! இதையொரு பொருட்டாகக் கொள்ளற்றக. நான் அவரைக் கண்டு நாம் தமருக்கு மட்டல்ல ஊரலருக்கும் அஞ்சி வருந்துகிறேரும். இதெல்லாம் அவரின் நட்பின் விளைவு. அந்த நட்புக்குக் காரணமாக இருந்த அவரே, அவரால் விளைந்த துன்பத்தை அகற்றவல்லார். அதை உடனடியாகச் செய்யும்படி சொல்லி வருவேன்,

(எனச் சொல்லிச் சென்ற தோழி தலைவனிடம் வரிகிறுள்)

தலைவன்;

பாங்கி வந்தனையா, என் தலைவி எங்கே, அவளுக்காக நான் கொண்டு வந்த கையுறையைக் கொடுக்க வேண்டும். அதை அவள் எவ்வண் ஏற்று மகிழ்கின்றுள் என்பதை நான் கண்டு களிக்க வேண்டும். எங்கே மறைந்துள்ளாள்? அவளை முன்னிலைப் படுத்த மாட்டாயா/

தோழி;

நொதும லாளர் கொள்ளா ரிவையே
யெம்மொடு வந்து கடலாடு மகளிரு
நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையா
ருடலகங் கொள்வோ ரின்மையிற்
றெடலைக் குற்ற சிலபூ வினரே 187

தலைவா! கையுறையாக நீவிர் கொண்டு வந்துள்ள இந்த மலர்களை உம்மைவிட வேறெவர் பறிப்பார்? எங்களுடன் கடலாடுவோர் கூட இதைக் கொண்டிடு பாவை புனையார். மாலை கட்டவும் இவை தக்கதன்று. ஆதலால், இதை அவள் விரும்பாள்.

தலைவன்;

தோழி என்ன கூறுகின்றுய்? அவ்வளவு என் கை உறையை வெறுத்துத் தள்ளுமளவிற்கு நான் என்ன தவறிழைத்து விட்டேன்!

தோழி

நாரை நல்லினங் கடுப்ப மகளிர்
நீர்வார் கூந்த லுளருந் துறைவ

பொங்குகழி நெய்த னுறைப்ப வித்துறைப்
பல்கால் வரூஉந் தேரெனச்
செல்லா ஞீமோ வென்றனள் யாயே 186

தலைவனே, நாரைகள் தமது இறகைத் பிழந்த பனங் கிழங்கின தஞ் சொண்டினுல் கோதுவதுபோல நீராடிய மாதர்கள் தமது கூந்தலை நீவும் கொற்கைத் துறையின் துறைவனுக விளங்கும் உமது தேர் இப்பக்கம் அடிக்கடி வருவதைக் கவனித்த எங்கள் தாய், தலைவியை இற் செறித்து விட்டாள். ஆதலால் அவளைக் காணவோ அல்லது கையுறை அளிக்கவோ உள்ள ஒரே ஒரு வழி, அவளை வரைவதுதான். எனவே அதை விரைவிற் செய்வாயாக

தலைமகன்;

இருங்கழிச் சேயிறு வினப்புள் ளாருங்
கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை
வைகறை மலரு நெய்தல் போலக்
தகைபெரு துடைய காதலி கண்ணே 188

பாங்கியே, கேட்பாயாக. ஆம், என் தலைவியின் தாய் அவளின் கடமையைச் செய்கிருள், ஊரலர்க்கு அஞ்சுவது என் தலைவியின் தலையாய கடனே, அதை எனக்கு எடுத்துரைத்த நீயும் உன் பங்கினைச் சரிவரச் செய்தனை. ஆனல், நான்தான் எனது கடமையை மறந்து விட்டேன். என் தலைவி சேரனது கொற்கைத் துறைக் கழிகளில் கடற் பறைவைகள் இரல்களை இரைஞ்சி உண்ணும். அங்கே மலர்ந்த நெய்தல போன்றவள் என்பதை நான் எவ்வண் மறப்பேன். அவளை விரைவில் மணப்பது எனது கடன் என்று அவளிடஞ் சொல். அவ்வாறு நிகழும் அத்தருணமே ஊரவர் வாய்கள் சிப்பிகள்போல இறுக மூடி விடும் என்றுஞ் சொல்க

(அதைக் கேட்ட தோழி களிமிக்கு தலைவியின்கண் வந்து);

தோழி:

தலைவியே, ஒரு நற்சேதி கேட்குதி. நம் தலைவன் வரை வதற்குப் பொருந்திவிட்டான். உன்னை வருந்தேல் என்று கேட்டுக கொண்டான். விரைவில் வந்து கரம் பற்றுவேன்

எனச் சொல்லி அதற்கான காரியங்களைச் செய்யச் சென்று விட்டான். விரைவில் வரைவிற்காக அவனது நெடுந் தேர் இங்கு வரும் என்பதை எண்ணும் உனது தோழியாகிய எனது கண்கள் ஆனந்த வாரி சொரிகின்றன.

புன்னை நுண்டா துறைத்தரு நெய்தல்
பொன்படு மணியிற் பொற்பத் தோன்றி
மெல்லம் புலம்பன் வந்தென
நல்லவாயின தோழியென் கண்ணே 189

தலைவி;

நெய்த லுண்க ணேரிறைப் பணைத்தோட்
பொய்த லாடிய பொய்யா மகளிர்
குப்பை வெண்மணற் குரவை நிறூஉந்
துறைகெழு கொணக னல்கி
னுறைவினி நம்மவிவ் வழுங்க லூரே 181

தோழியே நன்றே கூறினை. கூற்றுவன் கொண்டு செல்வானே என்றிருந்த என் உயிர் மீண்டும் என் வய மானது. இந்தத் துறை எவ்வளவு இன்பம் பயப்ப தெனபதை நீ அறிவாய். பொய்த்தல் எனும் விளை யாட்டைப் பொய்யா மகளிர் இந்த மணற் திட்டுகளிலே ஆடிக் குரைவை இடுவார். அத்தகைய இந்த நெய்தலில் எனது தலைவரில்லாமல் நானெவ்வண் வாழ்வேன் என எண்ணி; ஒருவேளை இங்கில்லாமல் மறைந்து விடு வேனே என எண்ணிய எண்ணம் நீ சொன்ன இந்த வார்த்தைகளால் அகன்றது.

தோழி;

தலைவியே நம் செவிலி இதைக் கேட்டால் மகிழ்வாள், வேலனின் வெறியாட்டையும் தவிர்ப்பாள் ஆதலால் நான் உடனே சென்று அவளிடம் வரைவு பற்றிய செய்தியைக் கூறுவேனுக.

(செவிலியிடஞ் சென்று)

அன்னாய்! ஒரு நல்ல சேதியை உங்களுக்குத் தர வந்துளேன். நெய்தல் மொட்டுகள் மலர்ந்து நட்சேத் திரங்கள் போற் பொலிகின்ற இத்துறையின் கண் முறுக்குடை வெண் சங்குகளை வளைகளாக அரிவர். அத்த கைய பெருமைகொள் துறையிடை புலம்பன், நம்

தலைவியை வரைந்துகொள்ள வருகிறான். எனவே வேலனும் அவனின் ஆட்டமும் வேண்டதனவாயின. அவளால விளைந்த ஊரலரும் பொய்க்கப் போகின்றது!.

தண்ணறு நெய்தற் றகீஇயவிழ் வான்பூ
வெண்ணெ லரிநர் மாற்றின ரறுக்கு
மெல்லம் புலம்பன் மன்றலெம்
பல்லித ழுண்கண் பனிசெய் தோனே 190

செவிலி;

நல்ல சேதியேதான். அவ்வண்ணமே நடக்க வேண்டும். அதுவே நலதாம். அதற்கானவற்றை நாமும் செய்ய வேண்டுவது நமது பொறுப்பல்லவா? இதனை நற்றாயுடன் உரைப்போம் வருக.

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்க

ஒன்பதாவது காட்சி முடிவுறுகிறது

காட்சி; பத்து

களம்; சிறைப்புறம், தலைவியின் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்; தலைமகன். தலைமகள், பாங்கன், பாங்கி,

நிகழ்ச்சி;

வரைவு தாமதிப்பதால் தலைவி தலைவனைச் சந்திப்பதுந் தடைப்படுகிறது. இதனால் அவன் தன் பாங்கனின் உதவியை நாடுகிறான். அதுவும் பயன்தராக் காலை தோழியின் உதவியை நாடுகிறான். தோழி அவனை இகழ்ந்திரைத்து வரவி கடாவுகிறாள். தலைவன் மீண்டுந் தோழியிடம் இரந்து பின்னிற்கிறான். தோழி அதைப் பொருட்படுத்தாது வரைவை உறுத்தி வேண்டிக் கொள்ளத் தலைவன் உடன் பட்டதைத் துயருறுந் தலைவியிடம் வரைவிற்கு உணர்த்தித் துயிலச் செய்கிறாள்

நாடகாசிரியன்:

வணக்கம் அவையினரே! அம்மூவனார் யாத்த நெய்தற் திணை சார்ந்த பத்துப் பத்துகளின் இறுதிப் பத்தான வளைப் பத்திற்கு வந்துள்ளோம். இதைக் காட்சிப் படுத்து வதொடு எனக்களிக்கப்பட்ட பங்களிப்பு நிறைவுறும். இதுவரை எனது நாடகங்களைப் பார்த்துக் களித்த உங்களிடம் நான் விடை பெற முதல்; நீங்கள் இதைப் பார்த்துக் களித்துள்ளீர்களா, அல்லது தக்கதல்லவென எள்ளி நகையாடிக் கழித்து விட்டீர்களா என்று எனக்குத் தெரியாது. ஆனாலும், கற்றார்க்கு மட்டுமே புரிகின்ற பாக்கள் என்ற நிலையை இவ்வித நாடகங்களைப் பார்ப்போர் புறந் தள்ளி தங்களுக்கும் இதைப் புரிந்துகொள்ளும் தமிழ் மனம் உண்டென்று தலை நிமிர்ந்தெழுந்தால் அதுவே போதும். அப்படியே யாகுக.

வளைப்பத்து நாடகத்தில் அதிகமாகத் தோன்றும் வாய்ப்பினைத் தலைமகன் கொண்டுள்ளான், எனவே அவனை வைத்துக் கொண்டே நாடகத்தை நகர்த்தலாம் என எண்ணுகிறேன். இந்த நாடகத்தில் இடந் தலைப் பாடு, இரந்துபின் நிற்றல் என்ற இரு அகப்பொரிள் சார்ந்த சேதிகள் சொல்லப்படுகின்றன. அவற்றின் பொருளையும் நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அப்போ

துதான் இந்த நாடகத்தில் இடம்பெறப் போவன புலனுகும்.

(தலைமகள் வாசல் பக்கம் நின்றிருக்க, அப்பக்கம் தோழி வருகிறுள்)

தலைவி;

தோழி! இதோ என் முன் கைகளைப பார், சற்று அவைகளை நான் தரையை நோக்கி நீட்டினுலே அதன் வளைகள் தானுகக் கழன்று வீழ்ந்து விடும். அத்தனை துயரத்தைத் தந்தவர் யாரென்பதை நீ அறிகுவை. சங்குகள் கரையில் நடமாட, கடலலை முழங்க, இன்னிசை ஒலிக்க மரக் கலங்கள் வந்து குவியும் துறையின் நாயகன் என்னைப் பிரிந்ததே காரணம் என்பதையும் அறிகுவாய். அவைகள் அவர் என்னுடன் ஒன்றியிருந்த காலத்தில் கைகளில் இறுகிக் கிடந்தன. இன்றே..... ஈதெல்லாம் என் விதியே.....

கோடுபுலங் கொட்பக் கடலெழுந்து முழங்கப்
பாடிமிழ் பனித்துறை யோடுகல முகைக்குந்
துறைவன் பிரிந்தென நெகிழ்ந்தன
வீங்கின மாதோ தோழியென் வளையே 192

தோழி;

தலைவியே உப்புக் கடலில் தன் வாழ்கலையை வாழ்ந் தாலும் அந்த மீனை உண்பார் உப்புச் சுவை கூட்டியே சமைத்துண்பார். அதுபோல நமது தலைவன் எங்கிருந் தாலும், அந்த இடத்தின் சூழலால் மாசுபடார். அது மட்டுமல்ல, உன் அன்பில்லாமல் அவரால் வாழவும் முடியாது. எனவே அவர் இங்கு வந்து உன் பிரிவுத் துன்பத்தை அகற்றுவார். அதற்கு நான் ஒரு கருவியாக இருப்பேன். போதுமா?....

(அவள் அங்கிருந்து போகின்றுள். இதற்கிடையில் இற்செறிக்கப்பட்ட தலைவியை குறியிடங்களிற் சந்திக்க முடியாத தலைவன் வருந்தி பாங்கனிடம்;)

துதான் இந்த நாடகத்தில் இடம்பெறப் போவன புலனுகும்.**தலைமகன்:**

கடற்கோடு செறிந்து வளைவார் முன்கைக்
கழிப்பூத் தொடர்ந்த விரும்பல் கூந்தற்
கானன் ஞாழற் கவின்பெறு தழையள்
வரையர மகளிரி னரியளென்
னிறையரு நெஞ்சங் கொண்டொளிந் தோளே 191

நண்பனே! என் நெஞ்சத்தில் உறைந்தவள் இப்போது என் கணகளிற் படாதொழித்தாள். சங்கு வளையணிந்த கையள். மலர்களைச் சுமந்த கூந்தற் குமரி. மயிர்க் கொன்றை மலர் தழைகளால அலங்காரஞ் செய்த அழகி, வரையர மகளிரிலும் அரிய பெரிய நலன்களை உடையவள், அவளை நான் காணுதுறும் துயரமோ அளவிறந்தது. அவளைக் காண எனக்கு உதவமாட்டாயா?

பாங்கன்:

தலைவா, உன் துயரத்தை நானறிவேன். அதனால், அவளை அல்லது அவளின் தோழியைக் கண்டுகொள்ள முயன்றேன். என் முயற்சி யாவும் பயனற்றதாயின. அதோ, தோழி எங்கோ செல்கிறாள். அவளை நீங்களே சந்தித்துப் பேசுவதே பயன்தரும்

தலைவன்;

நல்லது பாங்கனே உன் சொற்படி, அவளிடம் சென்று நானே நயம்படப் பேசுவேன்;

(அண்மையிற் சென்று)

பாங்கியே!

வளைபடு முத்தம் பரதவர் பகரும்
கடல்கெழு கொண்கன் காதன் மடமகள்
கெடலருந் துயர நல்கிப்
படலின் பாயல் வவ்வியோளே 195

சங்குகள் ஈனும் வெண் முத்துக்களைப் பரதவர் விற்கும் கடல் சூழ்ந்த நெய்தற் தலைவன் ஈன்றாள் ஒரு மடமகளை. அவள் என்பால் வந்தாள், என் மனதைக் கவர்ந்தாள். அதுமட்டுமா, பின்னர் என் கண்களிற் படாதொழிந்தாள். அதனால் என்னைத் துயரப்படுத்துகிறாள், நித்திரையற்ற படுக்கைக்கும் ஆளாக்கினாள். இதுதான் உனது தலைவி அவளை நேசிக்கும் எனக்கு தந்த அன்பின் கொடையா?

தோழி;

கடற்கோ டறுத்த வரம்போ ழுவ்வளை
யொண்டொடி மடவாற் கண்டிருங் கொண்க
நன்னுத லின்றுமால் செய்தெனக்
கொன்னென்று கடுத்தன ளன்னையது நிலையே 194

தலைவனே! இதைத்தான் நானும் உன்னிடம் கேட்கின்றேன், நமது கழிகளிடைத் துள்ளித் திரியும்

இருல்கள், தமது தலையிற் வயிற்றில் இருத்த வேண்டிய தகாததை அடக்கிக் கொண்டு, காண்பவற்றைத் தகாதன என்று துள்ளிப் பாயுமாம். அதே போல் உன் தவறைச் சுமந்து கொண்டு அதை மறைக்க தலைவிமேல் பழி சுமத்தும் பரிசையா அவள் உன்னிடம் பரிந்து நிற்கிருள். அவள் அழகை எடுத்துக்காட்ட அணிந்த கடற் சங்கு வளைகளைப் பார். உனது பிரிவால் அவை நெகிழ்ந்து அவளின் அவலத்தை எடுத்துக் காட்டுகிறதே, அது மட்டுமல்ல தன் மகள் தக்க வழியிற் செல்லவில்லை என்று உன்னைப் பார்க்க விட விரும்பாது இற்செறித்தாள். நற்றாய். இத்தகைய உனது இயலாமை நீ இழைக்கும் இழி செயல் என்று எண்ணிலையோ?

தலைவன்:

பாங்கியே நீ சொல்வதிலும் பார்க்க, நாங்கள் இயற் கையாகவே ஒன்று சேர்ந்தோம். அளவளாவினேம். ஆனந்தமுற்றேம். அதற்கிடையில் நாங்கள் ஒருவருக் கொருவர் ஏதுந் தவறிழைத்திலோம். இந்த நம்பிக்கையால் அவள் மீண்டும் வருவாள். என்னைச் சந்திப்பாள் என்ற இடந்தலைப்பாட்டைக் கொண்டுள்ளேன். அழகிய சங்கு வளைகள் ஒலிக்க நண்டுகளைத் துரத்தி விளையாடி வரும் போது என்னைக் கண்டு வெட்கத்தால் கன்னங்களிற் கைகளை வைப்பவள் இந்த மாலைப் பொழுது மறைவதற்கு முன் வருவாள். நலந் தருவாள்.

இலங்குவளை தெளிர்ப்ப வலவ னுட்டி
முகம்புதை கதுப்பின ளிறைஞ்சிநின் றேளே
புலம்பு கொண் மாலை மறைய
நலங்கே ழாக நல்குவ ளெனக்கே 197

தோழி:

தலைவனே! நீ அவ்வாறு எண்ணுவது தவறு. ஆண்கள் சுதந்தரமானவர்கள். அவர்களால் செய்யப்படும் காரியங் களைச் சமுதாயம் ஏனைதானை என்று பாரா முகமாக இருக்கும். ஆனால் ஒரு பெண் விடுஞ் சிறிய தவறு பெரிய மலையாகச் சமூகத்தின் பார்வைக்குப் படும். எனவே இதிலிருந்து விடுபட தலைவி எத்தனிப்பதில் என்ன தவறு?

வலம்புரி யுழுத வார்மண லடைகரை
யிலங்குகதிர் முத்த மிருள்கெட விமைக்குந்

துறைகெழு கொண்கநீ தந்த
வறைபுனல் வால்வளை நல்லவோ தாமே 193

தலைவனே! வலம்புரிச் சங்குகள் ஊர்வதால் நமது நெய்தல் நிலம், ஏரும் எருதுங் கொண்டு உழுத வயலாகத் தோன்றி னாலும் இது மருதமல்ல. நெய்தற் கரையில் புதைந்து ஒளிரும் முத்துகள் மாலை வந்தாலும் அவ்விருளைப் போக்க வல்லன, ஆனால் நீ கையுறையாகத் தந்த வளைகள் நழுவ தலைவிக்குத் தந்த துயரால் அவள் எங்கும் வாராள்.

தலைவன்;

அப்படியானால்; நான் என் தலைவியைக் காண்பதரி தாகுமா? அதற்கு உன் தயவு துணை செய்யதா?

தோழி;

தலைவனே! அது என் கையில் இல்லை. உன் துயரால் அவள் உடலிற் பசலை படர்ந்தது. கடற் கரையிற் அடர்ந்து படர்ந்து பொன் மண் தரையை மறைக்கும் அடம்பன் கொடி போலப் பசலையும் அவள் பைந்தளிர் மேனி எங்கும் படருமோ என அஞ்சுந் தலைவியை அதிலிருந்து மீளவும், எந்த நேரமும் உன்னருகே அவள் இருந்து நலந் தரவும் ஒரே ஒரு வழிதான் உள்ளது. அதுதான், அவளுக்கு நீர் உரைத்த சூழின்படி வரைந்து கொள்வதாகும்.

கோடு ரெல்வளைக கொழும்பல் கூந்த
லாய்தொடி மடவரல் வேண்டுதி யாயிற்
றெண்கழிச் சேயிறப் படுஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ 196

பாங்கியே, உண்மையை எடுத்து உறுதியாய் உரைத்தனை. என் தலைவி நான் என்ற எங்கள் இருவரிக்கிடையில் சமுதாய நெறி என ஒன்று இருப்பதை உணராதிருந்தேன். இத் தவறு இனித் தொடராது, நான் விரைவில் வருவேன். உலகறிய வரைவேன். அவள் எனக்காகப் படைக்கப்பட்டவள் என்பதை நிலை நிறுத்துவேன், என் தலைவியிடம் இதை உணர்த்துக, இனி இந்தத் தேர் வரைதற் பொருட்டே ஈங்கு வரும்...

(தலைவன் செல்லத் தோழி மிக்க களிப்புடன் தலைவியிடம் வருகிறாள்)

தோழி;

தலைவியே; நான் சென்று நம் தலைவனைக் கண்டேன். அவனிடம் நம் துயர் விண்டேன். அவன் வரைய வருகிறான்

வளையணி முன்கை வாலெயிற் றமர்நகை
யிளைய ராடுந் தளையவிழ் கானற்
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தோ ளண்ணற் கண்டிகும் யாமே 198

இப்போது என்னுடன் எழுந்து வா. அதோ அலைகள் உயர்ந்து அடிப்பதால் விண்ணைட்ட விரிந்துயர்ந்த அந்த மணற்குன்றிலேறி, நம் தலைவன் தன் கடன் உணர்ந்தான் மேற்கொண்டு உன் கை வளை நெகிழச் செய்யான் எனக் கூவி பன்முறை ஒலிப்போம்

கானலம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வானுயர் நெடுமண லேறி யானது
காண்நம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோ னெறிகட லுடே 199

விரைவில் வந்து உன்னை வரைவான். அதனால், மேலும் பசலை கண்டு துயருறேல். பதிலுக்கு அதைக் கண்டு எள்ளுக. இனி ஆறுதலாகப் பாயல் கொள்,

இலங்குவீங் கெல்வளை யாய்நுதல் கவினப்
பொலந்தேர்க் கொண்கன் வந்தன னினியே
விலங்கரி நெடுங்கண் ணெகிழ்மதி
நலங்கவர் பசலையை நகுக நாமே 200

(இருவரும் கட்டித் தழுவிக் களி கொள்கின்றனர். காட்சியும் கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்க

பத்தாவது காட்சி நிறைவுறுகிறது

நெய்தற் பத்து முடிவுறுகிறது

நான்காவது பகுதி

ஐங்குறு நூற்றுச் செய்யுள்களின்
நாடக வடிவிலான
நலனுய்வுக் காட்சிகள்

மூன்றுவது குறிஞ்சி எழினி அரங்கம்

கபிலரின்
குறிஞ்சித் திணை சார்ந்த
100 பாடல்களின் காட்சிப் படுத்தல்கள்

21. அன்னுய் வாழிப் பத்து
22. அன்னுய்ப் பத்து
23. அம்ம வாழிப் பத்து
24. தெய்யோப் பத்து
25. வெறிப் பத்து
26. குன்றக் குறவன் பத்து
27. கேழற் பத்து
28. குரக்குப் பத்து
29. கிள்ளைப் பத்து
30. மஞ்ஞைப் பத்து

2. குறிஞ்சித் திணை எழினி

கபிலர்; பாண்டி நாடு, மதுரைய அடுத்த திருவாத வூரிற் பிறந்தவர், அந்தணர் குலம். கடைச் சங்கப் புலவர். இவர் காலத்தில் வாழ்ந்த பரணர் இடைக்காடர், ஔவையார் ஆதியவர்களுடன் நட்புடையார்.

பறம்பு மலைச் சிற்றரசன் வேள் பாரியின் உயிர்த் தோழர். அவன் பால் அழுக்காறுற்ற மூவேந்தரும் இவனை எதிர்த்துப் படை எடுத்து வந்தபோது அவர்களை இகழ்ந்தார், பாரியைப் புகழ்ந்தார். அவனின் மறைவிற்குப் பின்னர் அனுதைகளான அவனின் மகளிர்க்கு மணஞ் செய்து வைக்கப் பல சிற்ற ரசர்களை நாடியும் பயனிலாத நிலையில் செல்வக் கடுங்கோ வாழியாதனிடஞ் சென்று பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தைப் பாடிப் பெற்ற பரிசைக் கொண்டு திருமணஞ் செய்வித்த பின்னர், தன் நண்பன் பாரியின் பிரிவைத் தாங்காதவராக வடக்கிருந்து உயிர் துறந்தார்.

குறிஞ்சித் திணை பாடுவதில் வல்ல இவர்; வாய் மொழிக் கபிலன், நல்லிசைக் கபிலன், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன், புலனழுக்கற்ற அந்தணளாளன், பொய்யா நாவிற் கபிலன் எனப் புலவரால் போற்றப் பட்டவர்.

ஓரி, நள்ளி, காரி, பாரி, பேகன், சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன், சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறை, இருங்கோவேள், விச்சிக்கோன் ஆதிய அரசர் களையிட்டுப் பாடிய 235 பாடல்கள் உள்ளன; அவற்றின் விபரம்;

பத்துப் பாட்டில	குறிஞ்சி	1
கலித்தொகை	குறிஞ்சிக கலி	26
ஐங்குறு நூறு	குறிஞ்சி	100
பதிற்றுப் பத்து	எழாம் பத்து	10
நற்றிணை	பாக்கள்	20
குறுந் தொகை	பாகங்கள்	26
அக நானூறு	பாக்கள்	16
புறநானூறு	பாக்கள்	30

இவரது ஐங்குறு நூற்றுப் பாடல்களில் அன்னுய் வாழிப் பத்திலிருந்து மஞ்ஞைப் பத்து வரையும் இடம்பெறும் பாடலகளின் இலக்கிய நயங்களை உணர்த்தும் முகமாக நாடகத் தமிழ் நடையில் ஒரு ஆய்வு செய்யப்படுகிறது ;

மண்மகளின் தனபாரம் போன்ற உயர்ந்தெழுந்த மலைகளையும், அவை சார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்பார்கள.
அதுவே ஐந்திணைகளில் ஒன்றுய குறிஞ்சித் திணையுமாகிறது.

அந் நிலத்தில் நடைபெறும் மக்களின் அக வாழ்க்கையை கபிலர் அழகுற 100 பாடல்களில் சித்தரித்துள்ளார்.
அவற்றை இங்கு முத்தமிழில ஒன்றுன நாடகத் தமிழில் பத்து அங்கங்களாகக் காட்சிப்படுத்த இருக்கிறேம்.

இந்த நாடகத்தைத் தயாரித்துக் காட்சிப் படுத்தும் பொறுப்பை ஒரு தமிழ்ப் பண்டிதரிடமும் அவருக்கு உதவியாக ஒரு படிப்பறிவில்லாத பாமரனிடமுங் கொடுத்துள்ளோம்.

இந்தப் பத்து நாடகக் காட்சிகள் எங்கே நடைபெறுகின்றன.
அந்த இடம் எவ்வாறு இருக்கும் என்பதை எழுதிய எழினி அரங்கின் பின்னுல் தொங்க விடப்பட்டுள்ளது.
அதைப்பற்றிச் சில வார்த்தைகள்;

மலையும் மல சார்ந்த நிலமும், நெய்தல்போல நீலமாகவோ, மருதம்போலப் பசுமையோ கொண்டதல்ல.
அது கரு நீலங் கலந்த சிவப்பு ஊதா நிறமாகத் தோற்றும்.
எனவே இவ்வெழினியில் அதையே அதிகமாகக் காண்பீர்கள்.

மண்மகளின் விண் முட்டும் மலைகளின் உயர்ந்த சிகரங்களுக் கிடையில் முந்தனைகளாகப் படரும் கருக்கொண்ட நீல மேகங்கள் குளிர்ந்து வானமுதத் துளிகளாக உதிரும்.
அவை மலையை நனைத்துச் சறுக்கி அருவியாகத் துள்ளிப் பாய்ந்து சிற்றுறுகளாக ஊற்றெடுத்துப் பெருகி வரும்.

அவற்றில் சூரிய ஒளி பட்டு வெள்ளிப் பாளமாக விளங்கும்.
அந்த ஆறுகளின் இரு கரைகளிலும் வளர்ந்துள்ள பசிய புதர்களும் காடுகளும்,
அவற்றிடையே நிற்கும், சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் ஆதிய தருக்களும்,
ஆங்கோர் வரி வேங்கை படுத்திருப்பதுபோலத் தோன்றும் வேங்கை மலர்களும்,
கன்னியின் கை விரல்களை மாணும் செங்காந்தள் மலர்களும்,
மலைச் சரிவுகளில நீலப் போர்வை போர்த்ததுபோன்று பன்னி ரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மலரும் குறிஞ்சிப் பூவும்,

காலையில் மலர்ந்து மாலையில் அலரும் வரை நேரத்திற்கு
நேரம் பல பல நிறங்களைக் காட்டும் அசோக மலரும்,
அடியிலிருந்தே மரத்திலும் கொப்புகளிலும் மலரும்
அரவின் படமொத்த நாக மலர்கள் அழகு செய்யும்.

அவற்றிடையே கிளியும் மயிலும் உலவும்.
காடுகளிலும் மலைக் குகைகளிலும் புலி, கரடி, சிங்கம், யானை,
குரங்கு ஆதிய வாழும்

சாரலில் சிறு குடில்கள் அமைத்து மலை மக்கள் வாழ்வர்.
அருவி நீரும் சுனை நீரும்
அவர்களின் நீர்த் தேவையை நிறைவு செய்யும்.

அங்கு உறைபவர்களை அவர்கள் வாழிடமான மலையைக்
குறிக்கும் வேறு பல பெயர்களால்;
குன்றவர், பொருப்பன், மலையன், சிலம்பன், வெற்பன் என
அழைப்பர். மேலும்,
குறவர், கானவர், மள்ளர், இறவுளர், புனவர், கானக நாடன்
என்றும் பெண்களை குறத்தி, கொடிச்சி என்றும் அழைப்பர்.
மலையன், சிலம்பன், கானக நாடன் என்போர் உயரிய அந்தஸ்து
மிக்காராகக் கருதப்படுவர்,

மலைநெல், தினை, மூங்கிலசி விளைத்தலும்.
தேனழித்தல், கிழங்கு கிண்டுதல், தினைப் புனங் காத்தல்,
மலைபடு திரவியங்களைச் சேகரித்தல் ஆதியன இவர்களது
அன்றட வாழ்க்கைக்கான செய் தொழில்களாகும்.
வேவலன் வெறியாடல் இத் திணைக்குரிய சிறப்பு .

அருவியிலும் சுனைகளிலும் நீராடி மகிழ்வது
இவர்களது பொழுது போக்கு.

இத்திணைக்குரிய தெய்வம் அழகின் சின்னம் முருகன்.
தொண்டகப் பறையை முழக்கி , குறிஞ்சி யாழினை இசைத்துக்
குறிஞ்சிப் பண் பாடுதல் இத்திணையின் இசை மரபாகும்.

காட்சி; ஒன்று

காலம்: மாலை, மதியம்

களம்; மலர் வனம், தலைவியின் இல்லம்

பாத்திரர்கள்;

பண்டிதர் பரமநாதன், பாமரன் பாலன், தலைவி, செவிலி, தோழி

நிகழ்ச்சிகள்;

தலைவியின் நடத்தைகளில் பல தடுமாற்றங்களை கண்ணுற்ற செவிலி அதற்கான காரணத்தைத் தலைவியிடம் இருந்து அறிய முயன்று முடியாத இடத்து, செய்வத றியாது திகைக்கிறாள். இதனால் தலைவி தன் தோழியிடம் அறத்தொடு நிற்கிறாள்,
அதைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கிறாள். தலைவனது வரைவின் இணக்கத்தைத் தோழி தலைவிக்குச் சொல்லத் தலைவி மனங் களிக்கிறாள். அவ்வழியே செவி லிக்கும் அந்த நற்செய்தி உணர்த்தப்படுகிறது. இவ்வண் குறிஞ்சி நிலத்திற்கு உரிய காட்சியும் அதன் நிமித்தமும் இந்த அன்னை வாழிப் பத்து காட்சியில் காட்சிப் படுத்தப்படுகிறது.

(முன்னெழினி விலக ஆங்கே பண்டிதர் பரமநாதன் தோன்றி அறிமுக உரையை ஆற்றுகிறார்.)

பண்டிதர்;

நாடகம் பார்த்து நயக்க வந்துள்ள நற்தமிழ் நணபர்களே! கூடலூர்க் கிழார் தொகுத்து நமக்களித்துப் போன ஐங்குறு நூறு என்னும் சங்க கால இலக்கிய நூலிற் கபிலர் எனும் புலவர் பெருமான் யாத்த குறிஞ்சிப் பத்தை நாடகமாக்கிக் காட்சிப் படுத்துமாறு எனக்கு எழினி அரங்கினர் என்னைப் பணித்துள்ளனர். அத்துடன், பாலன் எனும் பாமரனையும் இப்பணிக்குத் துணையாள ராகத் தந்துள்ளனர்.

(அத்தருணம் பாலன் ஓடோடி வந்து அரங்கிலேறி பண்டிதரிடம்)

வணக்கம் பண்டிதர்ய்யா! வரச் சற்றுச் சுணக்கம். வேண்டிலே பிணக்கு. அதற்காகத் தருக மன்னிப்பு

பண்டிதர்;

சரி...சரி வந்துதான் வந்துவிட்டீனியே. அப்பால் நின்று கொள். அவசியம் நேர்கையில் அழைக்கிறேன். குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்ற சிலம்பர் குல மக்களாகிய தலைவி, செவிலித்தாய், தோழி எனும் மூவர்களுக்கிடையே நடை பெறும் உரையாடல்களைச் செய்யுள் வடிவாகக் கபிலர் பாடிய பத்துப் பாடல்களைத் தந்து ஒரு அகப்பொருள் நாடகத்தைப் படையென்று சொல்லி உள்ளனர். இது மிகவுஞ் சிரமமான காரியமே. எனினும் முயன்று பார்ப்போம் என்ற முயற்சியாக இந்த நாடகம் உங்கள் முன் நடைபெறுகிறது. குறிஞ்சி பாடுவதிற் பாண்டித்தியம் படைத்த கபிலர் தனது ஆக்கங்களில், குறிஞ்சி நிலத் தையும் அங்கே வாழும் மக்கள் வாழ்க்கையையும் சித்தரிப்பதில் வல்லவர், இந்த 100 பாடல்களிலிம் அந்தத் திறன் பளிச்சிடுவதைக் காணலாம். அகத்திணைப் பாடல்களில் இறைச்சிப் பொருள்.....

(பாமரன் குறுக்கிட்டு)

அய்யய்யோ இறைச்சியா. அது எனக்கு மிகவும் பிடித்தமானதாயிற்றே. அதுவும் மான் ஊனென்றுல் மனதிற்கு மகிழ்ச்சி. சொன்னாலே நாவில் நதி ஓடுகிறதே! ஊனுண்டு உடல் வளர் என்று உவ்வையார் சொல்லி உள்ளதை கடைப்பிடித்து வாழ்பவன் நானுக்கும்.

பண்டிதர்;

இதோ பார் பாலன். இது நீ நினைக்கின்ற இறைச்சி இல்லை. மீதியைக் கேட்டபின் உன் மூடத்தைக் காட்டு. உள்ளுறை உவமம் எனும் படிப்போர் உய்த்து உணரத்தக்க புதையல்களைப் பொதித்திருப்பார்கள். கபிலரோ இவற்றுடன் ஒவ்வொரு பாக்களிலும் பல சொற்களை வெளியே விடாமல், உள்ளேயே விழுங்கி வைத்திருப்பார். அதாவது பல உள்வாங்கல்களையும் வைத்திருப்பார். அதை நாமே தெளிந்து அறிந்து பொருண் முடிபு காண வேண்டும். அது மட்டுமல்ல அக்காலத்திற் பயின்ற அழகு தமிழின் அழகையும் அவரது செய்யுள்களிற் காணலாம். இனி நாடகத்தைத் தொடங்குவோம். இக்கிடை நாடகக் கருத்துகளின் முட்டறுக்கும் நோக்குடன் ஈங்கு நாமிரு வரும் வருவோம்

(கண்மணியைப்போலப் போற்றி வளர்த்த தன் மகள்
வழமைக்கு மாறுக தன் நடத்தைகளைப்
பிரிதிபலிப்பதால் ஐயமுற்ற செவிலித் தாய்
அதுபற்றிக் கவலைப்படுகிறுள். அதற்கான காரணம் யாதாக
இருக்கலாம் என அறியத் தலைவியிடம்)

மகளே, இத்தனை வாட்டமாக என்றும் உன் வாழ்க்கையில் நீ இருந்ததில்லை. ஆனால் சில நாட்களாக உன் நாளாந்த நடத்தைகளில் அச்சம், வெறுப்பு, பதட்டம், ஏமாற்றம் மேனியில் சுணங்கு ஆதிய காணப்படுவதைக் கணடு நான் கலங்குகிறேன். இதன் காரணம் என்ன? இந்த மலைகளில் வாழும் வயைர மகளிர்களின் தாக்குதலோ நோக்குதலோ என அஞ்சுகிறேன். அப்படியானால் வேலனை அழைத்து வெறியாட்டயர்வதை விட வேறு வழியில்லை. அதற்கான காரணத்தை நீயே அறிவாயின் அதெல்லாம் வேண்டி வராது. எனவே உனக்கு உற்றதை உரை மகளே!.

தலைவி:

வாழி அன்னை. நான் சொல்வதை நம்புக, தாயே!. அத்தகைய கேடேதும் எனக்கு நேர்ந்ததில்லை. ஒரு வேளை இது என் பருவ வளர்ச்சியின் தாக்கமோ அறியேன்

(எனக் கூறியவாறு போகும்போது தனக்குள்)

செவிலி என் களவியல் வாழ்க்கையை அறிந்து கொண்டாள். இதுவரை என் உயிர்ப் பாங்கிக்குக் கூட என் உளளத்தில உறைந்தவனைப்பற்றி உரைத்திலேன். இவ்வாறு செய்தால் நான் எதுவுமே செய்ய முடியாது வருந்த வேண்டி வரும், ஆதலால் அவளிடம் இப்போ வாவது அறத்தொடு நிற்பதே தக்க செயல்

(தோழியை நோக்கிச் சென்று காண்கிறுள்)

தலைவி;

தாயினும் நன்றுய தோழியே! நான் சொல்வதைக் கேட்பாயாக. அதோ மலைச்சாரலின் கண் ஒரு தரு நிற்கின்றதல்லவா? அந்த மரத்தடியிற்தான் என்னைத் தலைவன் கண்டான். எனக்கு அதன் மலர்களையும் அரும்புகளையுங் கொண்டு முடைந்த தளையுங் கிடைத்தது. அத்தகைய மரம் என்ன மரமென்று அறிவாயா?

அன்னுய் வாழிவெண் டன்னே யென்னை
தானு மகிழ்ந்தா னெமக்குந் தழையாயின்
பொன்றி மணியரும் பின்னே
யென்ன மரங்கொ லவர்சார லவ்வே 201

தோழி;

அப்படியா! இதை நான் அறிந்திருக்கவில்லை என்று சொன்னுல், நான் எனது கடமையிற் தவறியவ ளாவேன். ஏனெனில உன்னைப் பின்தொடர்ந்து கண்ணின் இமைபோலக் கண்காணிப்பதே என் கடமை. ஆயினும் அதை என்னிடம் நீயே தானுக உரைக்கும்வரை காத்திருந்தேன். இனி நாம் வாளா விருத்தல் தகாது; இதைச் செவிலியிடம் அறத்தோடு நிற்பதே தக்கது, மேலுங் கேள்; அன்னை வடிவில் எனை அரவணைக்குந் தலைவியே! உவ்விடத்திற் கண்நோக்கு வாயாக, அங்கே, மழைக் காலத்தில் நனைந்த ஒளிய வானையும், பசுமை கொண்ட கழலையும் மார்புக் கேடயத்தையும் அணிந்து மலைச் சாரலைக் காவல் செய்யும் வீரனை யொத்து நம் தலைமகன் நிற்பதைக் காணபாய்,

அன்னுய் வாழிவேண் டன்னை யுவக்காண்
மாரிக் குன்றத்துக் காப்பா ளன்னற்
றூவலி னணைந்த தொடலை யொள்வாட்
பாசி சூழ்ந்த பசுங்கழற்
றண்பனி வைகிய வரிக்கச் சினரே 206

தலைவி;

தோழியே! நீ எனக்கு அன்னைக்கு நிகராவாய்! நமது தோட்டதிலுள்ள தேன் கலந்த பாலிலும் எனது தலைவனது நாட்டில், மான்கள் உண்டு எஞ்சிய கூவல் நீர்ச் சுவை மிக்கதாய்த் துலங்கியது...

அன்னுய் வாழிவேண் டன்னை படப்பை
தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட்
டுவலைக் கூவற் ஷீழ
மானுண் டெஞ்சிய கலிழி நீரே 203

தோழி;

தாயின் தகைகொண்ட தலைவியே; நானின்று தலைவனைக் கண்டேன். அவன் இவர்ந்து வந்த தேரின் பரிகளின் பிடர் மயிர், நமது ஊர்க்கண் நடமாடும் பார்ப்பனச் சிறுவர்களின் குடுமியை ஒத்தாகத் தோன்றிற்று.

அன்னுய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமுங்
குடுமித் தலைய மன்ற
நெடுமலி நாட னூர்ந்த மாவே 202

தலைமகள்;

தோழியே, இதைக் கேட்டதும் எனது செவியிற் தேன் வார்த்ததுபொல இருக்கிறது. . என் தலைவன் இப்பக்கம் நடமாடுகிறார் என்று எண்ணும்போது நம்பிக்கை தளிர்க்கினறது. மேலுங் கேட்குதி. இந்தச் சாரலிலே, மலை மங்கையர் கூட்டம் கூட்டமாக செல்லும்போது, அவர்களைப் பார்த்தவர்கள் அழகு மிக்கவர்கள், அருமை யானவர்கள் என்கிறார்களே! அவ்வளவுக்கு நான் எனது தலைவர்க்கு கொடியவளாகி விட்டேனு .

அன்னுய் வாழிவேண் டன்னை ய.:தெவன்கொல்
வரையர மகளிரி னிரையுடன் குழீஇப்
பெயர்வுழிப் பெயர்வுழித் தவிராது நோக்கி
நல்ல னல்ல லென்ப
தியேன் றில்ல மலைகிழ வோர்க்கே 204

தோழி ;

அன்னையே! நமது தலைவி மிக நாணம் மிக்கவள். அது போல எதற்கும் பயப்படும் குணமுடையவள் ஆதலால் எதையோ மறைக்க எதையுஞ் சொல்லப் பயப்பட்டாள் போலும். அவள் ஒலியுடன் பாயும் அருவிகள் செறியும் மலைநாடனின் பரந்த மார்பிற் துயில்கொள்ள விரும்பு கிறுள், இதனுற்தான் நான் இக்கட்டான நிலையில் தவிக்கிறேன், அதற்காக என்னை மன்னித்துக்கொள்க.

அன்னுய் வாழிவேண் டன்னையென் றேழி
நனிநா ணுடைய னின்னு மஞ்சு
மொலிவெள் ளருவி யோங்கு மலைநாடன்
மலர்ந்த மார்பிற் பாயற்
றுஞ்சிய வெய்ய ணேகோ யானே 205

தோழி;

தாயொத்த தலைவியே! உன்னைப் பிரார்த்திக்கின்றேன், . நான் சொல்வதைக் கேட்பாயாக, மழையில்லாததாற் தினை விளையாது. அதனுற் தினைப் புனக் காவல் தடையுறும். தலைவனைச் சந்திக்குந் தருணங்களும் இல்லா தொழியும் என்று கவலைப் படாதே. அதோ வானத்தைப் பார்! அங்கே

நமது தலைவனின் நாட்டு உயர்ந்த மலைகள் தென்படு வதையும் அவற்றின் மேல் கொழுப்புப் படர்ந்த நிணத் தைப்போலக் கரிய மேகங்கள் சூழ்வதையும் பார்ப்பின் அவை மழையாகி உன் கவலையைப் போக்கும் அறிகுறி யாகவே தோன்றுகிறது.

அன்னாய் வாழிவேண் டன்னை நன்று
முணங்கல கொல்லோநின் றினையெ யுவக்கா
ணினம்பொதி வழுக்கிற் றேன்று
மழைதனை வைத்தவர் மணிநெடுங் குன்றே 207

அன்னாய் வாழிவேண் டன்னை கானவர்
கிழங்ககழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன்மலி புதுவீத் தாஅ மலர்நாட்டு
மணிநிற மால்வரை மறைதொறிவ
ளறைமலர் நெடுங்க ணுரிந்தன பனியே 208

தாயே! நீள்நாள் வாழ்க! என்சொல் செவி மடுப்பாயாக; வேடர்கள் வள்ளிக் கிழங்கை தோண்டி யெடுத்த நீண்ட குழிகளில வேங்கை மலர்கள் நிரம்பும் மலை நாடனின் நீண்டுயர்ந்த நீல மலைகள் மறையத் தக்கதாக நந் தலை வியின் கண்களில் ஆனந்த வாரிதி நிறைகிறது, என்னரு மைத தாயன்பு பூண்ட தலைவியே! நமது தலைவனை மறந்து விட உன்னினுல்; அது கூடாத காரியம். எனெனில் உனக்கவர் தந்த கையுறைபோல, அந்த நீல நிற மலைகள் அவரை மலர்போன்ற சிகரங்களை உடையனவாதலால் அவரை உனக்கு நினைவூட்டும்.

அன்னாய் வாழிவேண் டன்னை நீமற்
றியானவர் மறுத்தல் வேண்டுது யாயிற்
கொண்ட லவரைப் பூவி னன்ன
வெண்டலை மாமறை சூடித்
தோன்றலா னுதவர் மணிநெடுங் குன்றே 209

(செவிலியிடம் அறத்தொடு நிற்பதற்காகத் தோழி அங்கிருந்து அகன்று செவிலியிடம் வந்து)

தோழி:

அன்னாய் வாழிவேண் டன்னை படைப்பைப்
புலவச்சேர் துறுக லேறி யவர்நாட்டுப்
பூக்கெழு குன்ற நோக்கி நின்று
மணிபுரை வயங்கிழை நிலைபெறத்
தணித்தற்கு முரித்தவ ளுற்ற நோயே 210

அன்னையே! உன்னை வாழ்த்தி வணங்கின்றேன். என் வேண்டுதலை ஏற்றுக் கொள்க. நமது கொல்லைப் புறத்திலே கிடக்கும் புலால் மணக்கும் கல்லில் ஏறி நின்று உன் மகள் மலர் பரந்துள்ள அந்த மலையை நொக்கிய வாறு நிற்கிருள், அந்த மலை நம் தலைவியின் விருப்பத் திற்குரிய நாட்டில் அமைந்தது ஆதலால் விரைவில் அவளுக்குற்ற துன்பம் அகன்று விடும்

செவிலி ;

அப்படியா? இதுவா சங்கதி. இதுவாகத்தான் இருக்கும் என ஏற்கனவே எண்ணினேன். சரி அவள் எங்கே?

(மறைந்து கவனித்துக் கொண்டிருக்குந் தலைவியைப் பார்த்து)

ஏன் மகளே, எல்லாவற்றையும் நான் உனக்குச் சொல்லித் தந்துதான் வளர்த்தேன். ஆனால், நான் சொல்லவில்லையே. எப்படியம்மா இந்த விசயத்தில் இவ்வளவு தேர்ந்தாய். கவலைப்படாதே, உன் கனவுகள் நிறைவுறும். சற்றுக் காலம் காத்திரு.....

காட்சி மறைகிறது

முன்னெழினி அரங்கை மூடுகிறது

முதலாவது காட்சி முழுமையுறுகிறது.

காட்சி; இரண்டு

களம்; சிறைப்புறம், தலைவியின் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்கள்;

பண்டிதர், பாமரன், செவிலி, தலைவன், தலைமகள், தோழி

நிகழ்ச்சி;

வரைந்து கொள்வதாகத் தலைவியிடம் கூறியபடி வாரா உரிய காலத்துள் வராததால் இற்றை வரை தன் பாங்கிக்குக் கூடப் பகராத தன் காதலைச் செவிலி, அறிந்தாள் எனச் சிந்தைகொண்ட தலைவி கவல்கின்றாள். ஈற்றில பாங்கிக்கு அறத்தொடு நிற்க, அவள் செவிலிக்கு அறத்தொடு நிற்கிறாள், இதை அறிந்த செவிலி தலை வியை இற்செறித்து, தலைவனிடம் வரைவு கடாவத் தோழியை வேண்டுகிறாள், அதற் கிடையில் தலைவியைக் காணத் தலைவன் சிறப்புறத்தே கையுறையுடன் வந்து காத்து நிற்கிறான். தோழி அவனைக் கண்டு தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள் எனக் கூறி உடனே அவனை வரைக என்று கூறத் தன் தவறுணர்ந்த தலைவன் வரை விற்கான உறுதியைக் கூறிச் செல்கிறான். இந்தச் செய்தியைக் கேட்ட தலைவியும் செவிலியும் மனம் மகிழ்கிறார்கள்

பண்டிதர்;

வணக்கம் சபையோரே. நேற்று நீங்கள் பார்த்த நாடகம் எப்படியிருந்தது, அதற்கு என்ன தலைப்புக் கொடுக்கலாம் என்று அறிய விரும்புகிறேன்; உங்களுடைய பதிலுக்காகக் காத்திருக்கிறேன்.

(பாமரன் முன்னால் வந்து)

நான் உள்ளேன் ஐயா. இப்போது நான் உங்களிடத்தில் அறத்தொடு நிற்க முன் வந்து நிற்கிறேன். என்னையா எதோ ஒரு விதமாகப் பார்க்கிறீர்கள். தலைவி தன் களவை முதலில் தோழிக்கு மறைத்தாள். இறுதியில் அவ்வாறு செய்வது பலன் தராதென்று கண்டு தன் கள்ளத்தை தோழியிடஞ் சொல்லி அறத்தொடு நின்றாள், தானறிந் தவற்றை செவிலியிடம் மறைந்த தோழி இறுதியில் தன்

உள்ளத்தில் உள்ளதை அவளிடம் அறத்தொடு நின்றாள். அப்போதே இந்த நாடகத்திற்கு அறத்தொடு நிற்றல் என்று பெயரிடலாம் என எண்ணினேன். எனினும் அது சரி வருமோ என எண்ணி மறைத்தேன் . இப்போது தங்களிடம் அதை அறத்தொடு நிற்கிறேன்.

பண்டிதர்;

நன்று சொல்லினை. தகுந்த தலைப்பேதான். நேற்றைய நாடகத்தில் உனக்கு வேறு ஏதும் சந்தேகம் தோன்றியது உண்டோ சாற்றும்.

பாமரன்;

ஆமய்யா. உண்டு. உண்டு, நேற்றுப் பாடிய பாடல்களில் உவக்காண் என்ற சொற்றொடர் ஒன்று வந்ததே அதன் பொருள் யாதோ,

பண்டிதர்;

அதுவா, அஇஉ தனிவரிற் சுட்டே.....

(உடனே பாமரன் அஇஉ என்று கூறிக் கூறித் தலையிற குட்டி வணங்கிகிறான்)

பாலா, பாலா, நீ என்ன செய்கின்றனை.

பாமரன்;

ஏனெய்யா, நீங்கள்தானே சொன்னீர்கள், அஇஉ சொல்லிக் குட்டு என்று . இதுவும் ஒரு வகைத் தோத்திரம் என்று அஇஉ சொல்லித் தலையிற் குட்டினேன்..

பண்டிதர்;

அப்படி நான் சொல்லவில்லை. அ இ உ என்னும் மூன்றெழுத்தும் எவற்றையுஞ் சுட்டிக் காட்டும் எழுத் துக்கள். ஆகவே அவை சுட்டெழுத்துக்கள். அங்கே காண், இங்கே காண் உங்கே காண் எனச் சுட்டிக் காட்டுவதை அறிந்துள்ளாய் அல்லவா? அந்த வகையில் உங்கே பாரென்பது உவக்காண என இங்கே சொல்லப் பட்டுள்ளது. இப்போது நாடகத்தைத் தொடங்குவோம்.

(தலைவன் பிரிவாற் கலங்கிய நிலையில் தலையி அங்கு வரும் தோழியிடம்;

தாய்போல என்னைப் பேணும் பாங்கியே ! வடுப் பருவக் காய்களைக் குலை குலையாகக் காய்க்கும் மா மரங்கள் பிஞ்சிப் பருவத்திலேயே அவற்றிற் சில மூக்குப் பழுது படுவதால் பனிக்கட்டியாம் ஆலம் பழம்போல உதிர்க்கும்.

அவற்றைக கானவர் பொறுக்கிச் சேர்ப்பர். அத்தகைய நாடன் எனை வந்து பார்த்தாலேதான் நான் உயிர் வாழ்வேன்.

உறுவடி மாஅத்து மூக்கிறு புதிர்ந்த
வீர்ந்தண் பெருவடுப் பாலியிற் குறவ
குறைவீ ழாலியிற் றெருக்குக்குஞ் சாரன்
மீமிசை நன்னுட் டவர்வரின்
யானுயிர் வாழ்தல் கூடு மன்னுய் 213

தோழி

பெரு வரை வேங்கைப் பொன்மரு ணறுவீ
மானினப் பெருங்கிளை மேயலாரும்
கானக நாடன் வரவுமிவண்
மேனி பசப்ப தெவன்கொ லன்னுய் 217

அன்னை போன்ற தலைவியே. அங்கே சாரலில் உள்ள வேங்கை மரம் உதிர்த்த மலர்களை மானினம் வந்து உண்ணும் நாடன் உனை வரைதற்கு வரப்போகின்றதை அறிந்திருந்தும் உனது மேனியில் பசலை பூப்பது தகுமோ.

கருங்கால் வேங்கை மாத்தகட் டொள்வீ
யிருங்கல் வியலறை வரிப் பத்தாஅ
நன்மனை நாடன் பிரிந்தென
வொண்ணுதல் பசப்ப தெவன்கொ லன்னுய் 219

தாயொத்த தலைவியே! அகன்று பரந்த அடியையுடைய வேங்கை மர மலர்கள் உதிர்ந்து பக்கத்தில் உள்ள பாறைகளை அழகு செய்யும் நாட்டுச் சிலம்பனின் பிரிவால் உன் நுதல் பசப்பதென்ன?

தலைவி;

நீ என் தோழியல்லள் என்தாயாவாய். என் மனதில் உள்ள எண்ணம் உனக்கு என்னவென்பது தெளிவாகும். ஆனால் தலைவன் வரைவதற்குத் தாமதிப்பதைப் பார்த்தால் அது உன்னாலோ என்னாலோ இயல்வதொன்று என எனக்குத் தோன்றவில்லை. ஒரு வேளை இது நெடுங் காலம் எடுக்குமோ அறியேன். அதற்கிடையில் இதை எப்படி அறத்தொடு நிற்கலாம் என்பதே எனக்குப் புதிதாகத் தோன்றியுள்ள கவலை!

தோழி;

இதே கவலைதான் என் மனதிலும் படர்கின்றது. எதற்கும் நான் இப்போதே செவிலியிடஞ் சென்று இதை

உரைப்பேன். இதை இதுவரை மறைத்த தவறுக்கு நானே காரணம் என்று உன்னைக் காப்பாற்றுவேன்.

(அவ்விடம் இருந்து அகன்ற தோழி செவிலியிடம் வந்து குழைந்து கொண்டே)

அனனுய், தாயுள்ளம் பிள்ளையின் தவறுகளை மன்னிக்கும் என்ற துணிவிற்தான் வந்துள்ளேன்.

சாந்த மரத்த பூழி லெழுபுகை
கூட்டுவிரை கமழு நாட
னறவற் கெவனே நாமகல் வன்னுய் 212

அன்னையே! என்னை மன்னித்தருள்க. அன்புடைய உனது உள்ளத்தைத் துன்புறுத்தும் ஒரு காரியத்தை மறைத்து விட்டேன். நமது தலைவியை சந்தன மரங்களை எரிப்பதால் எழும் அகிற் புகை மணம் வீசும் நாடன் தன்பால் ஈர்ந்தான். ஆனல் அவனுடைய தமர் வரைவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

செவிலி;

இதையேன் என்னிடத்தில் முன்னரே உரைகக்வில்லை.

தோழி;

அன்னுய். அவனிடம் நாங்கள் உங்களுடன் கலந்து பேசும்படி சொன்னேம். ஆனல் அவர் அதைச் செய்வதாகச் சொல்லியபோதும் இதுவரை சொன்னதைச் செய்யவில்லை. நாங்களும் அவர் கண்களிற் படுவதைத் தவிர்த்துக் கொண்டோம்.

செவிலி;

அதுவே நல்லது. சரி அவரை உனக்கித தெரியிமா. தெரிந்தால் அவரிடைய இறிதி முடிவைக் கேட்டி வா. அதிவரை தலைவியை இல்லிற்கி அபபால் என்லை அறியாமல அழைழத்திச செல்லாதே.

அங்கிருந்து அவள் தலைவனிடம் வருகிறுள். அவன் சிறைப்புறத்தே தழையுடன் தலைவியைக் காணக் காத்தி நிற்கிறுன். தோழியைக் கண்டதும்;.

தலைவன்:

கட்கா யன்ன மணிநிறத் தும்பி
யிட்டிய ருயின்ற திறைவயிற் செலிஇயர்
தட்டைத் தண்ணுமைப் பின்ன ரியவர்

ஞீங்குழ லாம்பலி னினிய வியிரும்
புதன்மலர் மாலையும் பிரிவோ
ரதனினுங் கொடிய செய்குவ ரன்னுய் 215

தோழியே கேட்குதி. பொன்னுரைத்துப் பார்க்குங் கட்டனைக் கல்போன்ற வண்ணம் பொருந்திய தும்பி பறந்து சென்று தண்ணுமைப் பறையின் வார்களை நிரவ எழும் குழலிசையிடை மலர்கள மலரும் மாலைக் காலத்தில் பிரிநதாலும் நான் கொடிய செயல்களைச் செய்வனே. எங்கே என் தலைவி? வந்திலளோ. இந்தத் தழையை வந்து பெற்றுக் கொள்ள மாட்டாளா?

தோழி.

தலைவா. உங்கள் களவியலைச் செவிலி அறிந்து விட்டாள். ஆதலால் அவளை இற் செறித்து விட்டாள். இதை நான் எவ்வாறு பெற்றுக் கொடுப்பேன். ஆயினும் முயன்று பார்ப்பேன். இதற்கெல்லாம் ஒரே விடை. அவளை விரைவில் வந்து வரைந்து கொள்வதுதான். அவளிடஞ் சென்று இதுபற்றி உரைப்பேன். அவள் இசைந்தால் அவளுடன் வருவேன் இன்றேல் நீ அவளை வரைந்து கொள்ள விரைவில் வருவதே தக்கதாம்

(அங்கிருந்து தலைவியிடம் வந்து:)

தோழி;

அன்னை போன்றவளே! உழுந்து மாவை நெய்யோடு கலந்து பிசைந்து விழுது விட்டாற்போல வாலைக் கொடிகள் தொங்கும் அந்த மலையில் நெருங்கி வளர்ந்த அசோகின் தழைகளை நின் தலைவன் உனக்குத் தரச் சிறைப்புறத்தே காத்து நிற்கிறன். அத் தளிர்களை வாட விட்டு விடாதே.

நெய்யொடு மயக்கிய வுழுந்துநூற் றன்ன
வயலையஞ் சிலம்பின் றலையது
செயலையம் பகைத்ததழை வாடு மன்னுய் 211

கொல்வதற்கு வலிமைதரும் குறுகிய முன்னங் கால்களை உடைய புலி, ஆங்கு பிறந்து எழுந்து நடக்கவே நடுங்கும் யானைக் குட்டியைப் பிடிப்பதற்காகப் புதரிடை பதுங்கிக் கிடக்கிறது. அங்கே பலா மரங்களிற் கொழுவியது போன்ற பலாக் கனிகளை உடைய தலைவன் தங்களுக்கு அளிப்ப

தற்காகக் கொண்டு வந்த தழை வாடுதல் ஏற்புடைத்தோ....

குறுங்கை யிரும்புலிக் கோளவ லெற்றை
நெடிம்புதற் கானகத்து மடப்பிடி யீன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழ லொலிக்கும் நாடர்க்குச்
கொய்திடி தளிரின் வாடிநின்
மெய்பிறி தாத லெவன்சொ லன்னாய் 216

சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழ
மிருங்கல் விடரகஞ் வீழ்ந்தென வெற்பிற்
பெருந்தே னிறுஅல் ஷீறு நாடன்
பேரமர் மழைக்கண் கலிழ்த்தன்
சூருடை நன்னுட்டுச் செல்லு மன்னாய் 214

தலைவியே! சாரல் பலாக்களிற் கொத்தாகப் பழுத்துக் கனிந்த கனிகள் முதிர்ந்து கற்பாறை இடுக்குகளில் வீழ்ந்து, அங்குள்ள தேனிருல்களைக் கிழிக்கும் நாடன் உன் கண்ணீர் துடைத்தே தனது நாட்டிற்குச் செல்வான் என்பதில் பற்றுடையாளாக இரு. நான் தலைவனைக் கண்டு ஆமா இலலையா என்ற முடிவைக் கேட்டு விரைவில் வருவேன்,

(சிறைப்புறத்தே நிற்கும் தலைவனிடம் வந்து தலைவி வரவிரும்பிலள் என்பதைச் சொல்ல அவன் விரைவில் வந்து மணப்பதாகத் தன் முடிவைச் சொல்ல அதைத் தலைவியிடம் வந்து சொல்கிறாள்)

அண்ணேர் புருவத்த கண்ணு மாடு
மயிர்வார் முன்கை வளையுஞ் செறுஉங்
களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தெழுபுலி
யெழுதரு மழையிற் குழுமும்
பெருங்க ணுடன் வருங்கொ லன்னாய் 218

அன்னாய். பசலை பூத்த உன் கண்கள் மிளிரும். மெலிந்த உன் கைகளின் வளையல்கள் இறுகும். தன் பிடியிற் சிக்கிய யானையைத் தவறவிட்ட கோபத்தால் உறுமும் புலிபோல முழங்கும் கருக்கொண்ட மழை மேகம் சூழும் மலை நாடன் வருவதாக உறுதி உரைத்துள்ளான் கலங்காதே. அதுமட்டிமல்ல இநத மகிழ்ச்சியான சேதியை ஓடோடிச சென்று செவிலியிடம் உரைப்பேன்;

(செல்கிருள்)

அலங்குமழை பொழிந்த வகன்றக ணருவி
யாடுகழை யடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழித்த நாளிவண்
மயங்கிதழ் மழைக்கண் கலிழு மன்னுய்220

அன்னையே! தலைவன் வரைவிற்கு இசைந்து விட்டான். அசைந்து ஆகாயத்திற் பரவும் மேகங்கள் பொழியும் மழை அருவியாகப் பாயும். அதனல் மூங்கிற் புதர்கள அசையும். அத்தகைய மலையொத்த அகன்ற சிலம்பனின் மார்பைத் துய்க்காத துன்பத்தால் அழுவது தக்கதல்ல. என்று தலைவியிடஞ் சொல்லுக தாயே!

(செவிலி மன நிறைவுடன் புன்னகைக்கிருள்)

காட்சி கரைகின்றது

முன்னெழுனி அரங்கை மறைக்க
இரண்டாவது காட்சி நிறைவுறுகிறது.

காட்சி ; மூன்று

களம்; சிறைப் புறம், தலைவியின் இல்லம்,

பாத்திரர்; பண்டிதர். பாமரன், செவிலி, தலைவன், தலைவி, தோழி, பாங்கன்.

நிகழ்ச்சி;

ஊரலரை நீக்குவதற்காக தலைவன் சில காலம் தலைவியைக் காண்பதைத த தவிர்க்க தணத்தல் ஏற்படுகிறது. அவன் பொருள் தேடி மணஞ் செய்ய மீள்வதால தலைவியின் துயரம் அகல்கிறது.

(முன்னெழினி அகல அரங்கும் பண்டிதரும், பாமரனும் நிற்பதும் தோன்றுகிறது;)

பண்டிதர்,

வணக்கம். பாலா நேற்று நடைபெற்ற நாடகத்தினையிட்டு நீ என்ன உன் மனதில் உள்ளுகின்றனை.

பாமரன்:

அருமையான நாடகம். இதுவும், அறத்தொடு நிற்கின்ற காரியங்களையே சொல்லிச் சென்றுலும், ஈற்றில் அவற்றுல் தலைவியின்மேல் தாய் தமர் கொண்ட அச்சம், தலைவனின் வரைவுபற்றிய இணக்கச் செய்தியால் நீக்கப்பட்டு கற்பியல் நிலையில் நிலை நிறுத்தப்படுகிறது. எனவே இதனை அறத் தொடு நிறுத்தல் என்ற தலையங்கம் இடலாம் என்பது இந்தப் பாமரனின் பணிவான முடிவு.

பண்டிதர்;

நான், உன்னைப் படிப்பறிவில்லாத பாமரன் என்றுதான் எண்ணி இருந்தேன். ஆனல், அறத்தொடு நிறுத்தல் என்ற புதியதொரு அகப்பொருட் துறையையே படைத்து விட்டாய். எஞ்சிய நாடகங்களைப் படைக்கும்போது உன் உதவிக் கரம் வேண்டும், பாலா! ஆமாம்... இத்தகைய தெளிவு உனக்கு எப்படிப் பாலா ஏற்பட்டது,

பாமரன்;

அது வேறென்றுமில்லை. எல்லாரும், அகப் பொருள் படித்தா காதலிக்கிறார்கள்? மணஞ் செய்கிறார்கள்? வாழ்கிறார்கள்? இது உலகில் இயல்பான மரபு. வாழ்க்கைதானே இலக்கியம் என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள். அந்த அனுபவ ஞானந்தான்!

பண்டிதர்; உனக்கு வேறேதும் ஐயப்பாடுகள் உளவோ?

பாமரன்;

ஆமய்யா, இந்தத் தெய்வப் புணர்ச்சி, இயற்கைப் புணர்ச்சி, ஒருவழித் தணத்தல் என்றுல் என்னய்யா. சுருக்கமாய்ச் சொன்னுற்தான், இந்த மூனை சுப்பென்று பிடித்துக் கொள்ளும்;

பண்டிதர்;

நான் சொலலப் போனுல், அது பெரிய விவகாரமாகும். எனவே, இந்த நாடகத்திலே இவை சம்பந்தமான கருத் துகனைத் துலக்குவேன். போதுமா/ இனி நாடகத்தைத் துவக்குவோமா?

(ஊரலர் பரவியதாலும், வரைதற்கான பொருள் தேடித்,
தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிய
நினைத்த தலைவன் சற்று நாள் தலைவியைச்
சந்திக்க வராது ஒரு வழித் தணத்தல் நெறியில் நிற்கத்
துணிந்ததை அறிந்த தலைவி தன் இல்லத்தில்
கவலையுடன் இருக்க அங்கே தோழி வந்து)

தோழி;

அம்ம வாழி. என்ன வானத்தையே பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். மழையில்லையே, அவ்வாறு நேரின் நம் கானவர் வானை நோக்கி ஆரவாரிப்பது பண்டு தொட்டு வரும் பழக்கம். அப்படி நீங்களும் ஆரவாரிக்கப் போகிறீர்களோ?

தலைவி;

வாழி! அன்னைபோல் அரவனைத்து என் வாழ்வோடு கலந்த உயிர்ப் பாங்கியே! கொல்லிப் பாவையை ஒத்தவள் என்று என்னைப் பலரும் பாராட்டுவார்கள். அத்தகைய எனது அழகு கெடவும், மேனியெங்கும் பசலை படரவுங் காரணமாக, அவர் ஊர் வாயை அடக்கச் சில நாள் இங்கே வருவதைத் தவிர்க்க எண்ணியுள்ளார் என்பதை எண்ணும்போது வானத்தைப் பாராமல் பூமியையா பார்க்கத் தோன்றும்.

அம்ம வாழி தோழி காதலர்
பாவை யன்னவென் னுய்கவின் நெகிய
நன்மா மேனி பசப்பச்
செல்வ லென்பதம் மகிலெழு நாடே 221

தோழி;

வாழி அம்மையே! நாள்தொறும் உனது நுதல் பசப்புறவும் தோள்கள் நெகிழவுங் காரணமாக அமைவதை

நான் கண்டு ஆற்றேன் என முன்னர் சூழுரைத்த உன் தலைவனை இந்த ஒரு வழித் தணத்தல் கால நீடிப்பால் மறைந்து விட்டனையோ? இம்மலைச் சாரலில் மதம்பிடித்த யானை குண்டுக் கல்லைப் பிடியெனத் தடுமாகின்றதைப் போன்றவன் உனது தலைவன் என எண்ணுவது தகாது.

அம்ம வாழி தோழி நாளும்
நன்னுதல் பசப்பவும் நறுந்தோண் ஞெகிழவு
மாற்றலம் யாமென மதிப்பக் கூறி
நப்பிரிந் துறைந்தோர் மன்றநீ
விட்டனை யோவவ ருற்ற சூளே 227

(தலைவன் சிறைப்புறத்தே தலைவியையோ அல்லது நீண்ட காலமாகத் தன்னைச் சந்திக்க வராது இருக்கும் தலைவிக்கு என்ன நடந்ததோ என அறிந்து வரும்படி ஏவிய பாங்கனையோ எதிர் பார்த்தவாறு கவலையுடன் இருக்கிறான். அப்போது பாங்கன் அங்கு வாடிய முகத்துடன் வருகிறான். அவனைக் கண்ட தலைவன் ஆவலுடன்:)

பாங்கனே! அவளைக் கண்டாயா. அல்லது இங்கு வெகு நாட்களாக வந்து காத்திருக்கும் என் துயரைச் சொல்லினையோ?

பாங்கன்;

தலைவனே! உங்களது களவியல் வாழ்க்கை, நீர் அடிக்கடி இங்கு வந்து நடமாடுவதால் ஊரரறிந்த அலராகி விட்டது. அதனை அறிந்த அவளது தமர் அவளை இற்செறித்து விட்டனர். ஆதலால் அவள் இனித் துணையின்றி விரும்பியவாறு வெளியே வாராள். ஆதலால் நீர் செய்யக் கூடிய இரண்டே காரியங்கள் உள்ளன. ஒன்று சற்றுக் காலம் இப்பக்கம் வருவதைத் தவிர்த்தல். இரண்டாவது அவளை உரிய முறைப்படி மணந்து கொள்வது.

தலைவன்;

பாங்கனே! அப்படியா, நான் வரைந்து கொள்வதானால்; பொருள், தொழில், வாழ்க்கைக்கான வசதிகளில் தக்க நிறைவு பெற வேண்டும், இன்றேல் அவளின் தமர் வரைவு மறுத்து விடுவார்கள். ஆதலால் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் சிறிது காலம் பிரிந்து ஒரு வழித் தணப்பேன். இந்தச் செய்தியை அவளுக்கு அறியச் செய்க.

(பாங்கன் இச்செய்தியைத் தோழியிடம் கூற. அதனைத் தலைவியிடஞ் சென்று சொல்ல வந்த தோழியிடம்)

தலைமகள்;

வாழி தோழி. இப்போது எனக்குக் காவல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு எக் காப்பிலும் பார்க்க அவர்கள் தங்களுக்குள்ளே நியமிக்கும் நிறை காக்கும் காப்பே பெரிதென வாழும் எனக்கு இற்செறிப்பு என் செய்யும். அவரைக் காண்பதற்குச் சாதாரணமாக இடையூறு செய்யும் தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகல், நிலா வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரல் காட்டல் என்பனவே இடையூறு விளைவிப்பன. இப்போது இவைதாம் இல்லாவிடடாலும் நான் இல்லத்தில் முடங்கிக் கிடக்கின்றேன். இப்போதுதான் நான் நமது நீல நிறங்கொண்ட நமது மலையில் இருந்து இழிந்து வரும் தலைவருடன் அருவியில் நீராடிய பழைய நினைவுகள் நெஞ்சத்தைக் குடைகின்றன. தோழியே அத்தகைய இனிய தருணங்கள் நமக்கு மீண்டும் வருமா என மயங்குகிறேன்.

அம்ம வாழி தோழி நம்மலை
மணிநிறங் கொண்ட மாமலை வெற்பிற்
றுணிநீ ரருவி நம்மோ டாட
லெளிய மன்ற லவர்க்கினி
யரிய வாகுதன் மருண்டனென் யானே 224

தோழி;

என் தலைவியும் தாயுமாக எனது மனதில் நிலைத்துள்ளவளே! மற்ற நிலத்தவர்க்கு அகில் கிடைத்தற்கரிய நறுமணப் பொருளாகும். ஆனால் நாமோ அவற்றை விறகுகளாகப் பாவிக்கின்றோம். நறுமணம் நுகர விரும்புவோர்க்கு அகில்போல, நின் தலைவன் உனக்கு ஈந்த ஒருவழித் தணத்தலின் நீட்டிப்பால் தலைவனின் அருமையை உணர்கின்றனை. சுனையிடத்தே, பனித் துளி படர்ந்த குவளை மலர் மணம் கமழும் கூந்தலுடைய உனது நுதலின் பசத்தலுக்குக் காரணம் எதுவென அறியாதிருப்பாரோ...

அம்ம வாழி தோழி பைஞ்சுனைப்
பாசடை நிவந்த பனிமலர்க் குவளை

யுள்ளகங் கமழுங் கூந்தன் மெல்லிய
லேர்திக ழொண்ணுதல் பசத்த
லோரார் கொன்னங் காதலோரே 225

தலைவி;

தோழியே, நீ என்றுந் தாயன்புடன் வாழ்க! என்னைக் காண வரும் தண்ணிய மார்பன் இனி வாரார் போலும்/ . அதனால் அழகாகப் படிந்த கூந்தலுடைய என் நுதலும் பசலை பூத்தது. எப்படித்தான் ஒரு வழித் தணக்கப் போகின்றேனை என அறியேன்.

அம்ம வாழி தோழி நம்மூர்
ளிந்துவந் துறையு நறுந்தண் மார்வ
னின்னினி வாரா மாறுகொல்
சின்னிரை யோதியென் நுதல்பசப் பதுவே 222

தோழி;

அம்மையே! நீ வாழ்க. நிரையாகப் பாயும் அருவிகள் நிறைந்த நமது மலைத் தலைவன் நம்மூரிடத்தே வந்து வரைவு வேண்டும்போது தமர் அதை மறுக்குமிடத்துத் வெறுத்த மனத்தனுய்த் திரும்ப நேரிடின் என்ன ஆகுமோ? நம் உயிர்தான் தரிக்குமோ என அஞ்சுகிறேன். ஆதலால் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரியத் துணிந்து சென்றுள்ளளார். ஆதலால் ஒரு குறிப்பிட்ட காலம்வரை அவர் இங்கு வாரார். அதுவரை ஒரு வழித் தணத்தல் உனது பொறுப்பு

அம்ம வாழி தோழி நம்மூர்
நிரந்திலங் கருவிய நெடுமலை நாட
னிரந்துகுறை யுறுஅன் பெயரி
னென்னு வதுகொனம் மின்னுயிர் நிலையே 228

(வரைவிடை வைத்துப் பொருள் தேடற்குச் சென்ற தலைவன், இந்தப் பிரிவின் காரணமாக ஏற்பட்ட ஒருவழித் தணத்தலின்போது, தன் காதலி எத்துயர் படுமோ என வருந்தி நாடு திரும்புகிறான். இச் சேதியை அறிந்த தோழி தலைவியிடம் வந்து)

தோழி;

தாயே வாழ்க. பிரிந்த காதலர்கள் செய்வதறியாது கலங்க வருத்தும் வாடைக் காற்று வீசும் முன் பனிக் காலம் வருமல்லவா. அப்போது இந்த மலையின் எல்லை குறுகும்

சாரல்களில் காந்தள் மலரும். அவ்வாறு வருத்தும் கூதிர் காலம் வர முதலே பொருள்வயிற் பிரிந்த உன் தலைவன் திரும்பி வந்துளார். அறிகுக.

அம்மவாழி தோழி நமமலை
வரையா மிழியக கோட னீடக்
காதலர்ப் பிரிந்தோர் கையற கலியுந்
தணபனி வடந்தை யச்சிர
முந்துவந் தனர்நங் காத லோரே 223

தலைவி;

தோழி, நீ வாழி. திரும்பித்தானே வந்துள்ளார். அவர் திரு மணஞ் செய்ய வந்துள்ளாரா? அது பற்றிய ஐயம் என் மனதில் அச்சத்தையே ஏற்படுத்துகிறதே.

தோழி;

வாழி தலைவி. வாழி எனது அம்மையே! அஞ்சவோ ஐயப் படவோ வேண்டாம் .நமது மலைச் சிலம்பன் கொத்தாகப் பூக்கும் காந்தட் தேனை உண்டு அகலும் வண்டடென்ன நீ நினைத்திருந்தாய். அவனது நீடிய பிரிவுக்கும் அதுவே காரணமெனவும் ஐயமுமுற்றனை. ஆனல் தெய்வ நியமத்தின் வழி முன் பின் ஒருவரை ஒருவர் அறியாத ஆணும் பெண்ணும எதிர்பாராத விதமாக இயற்கை யாகவே கூடும் அன்புடமையாலாகும் தெய்வப் புணர்ச்சி அல்லது இயற்கைப் புணர்ச்சி என்றுமே பொய்ப்பதில்லை ஆதலால் அவர் இப்போது வந்து விட்டார். விரைவில் வரையவே வந்து விடுவார். இதனை உறுதியாக நம்புக

அம்ம வாழி தோழி நம்மலை
நறுந்தண் சிலம்பி றைகுலைக் காந்தட்
கொங்குண் வண்டிற் பெயர்ந்துபுற மாறிநின்
அன்டை விறற்கவின் கொண்ட
வன்பி லாளன் வந்தன னினியே 226

தலைவி;

அவர் வந்து கரம் பற்றும் வரையும எனது நெஞ்சம் கலங்குகிறதே! அன்னை! . அவர் வந்து வரைவு வேடடால் நமது தமர் அதை விரும்பா விடின்.. என்னுகுமோவென அஞ்சுகிறேன். அப்படி ஏதும் நடநந்தால்.....அய்யய்யோ அதை நினைக்கவே மனம் பதைக்கிறதே.

தோழி;

தலைவியே. வாழி. அப்படி எல்லாம் நினையாதே. ஒருகால் நமது தினைப் புனக் காவற்காரனாகப் பணிசெய்த தலைவன் உனது நுதல் பசக்கவுந் தோழ்கள் மெலியவுந் தக்க கொடுமைகளைப் புரிந்தான். ஆனாலும் அவனுக்கே மணஞ் செய்து தருவார்கள். இன்றேல் உன்னை அவன் தனது நாட்டிற்கு அழைத்துச் செல்வான். அத்தகைய உறுதி உள்ளவன் உன் தலைவன்.

அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல னாகிப் பெரிதுநின்
மென்றோண் ஞெகிழவுந் திருநுதல் பசப்பவும்
பொன்போல் விறற்கவின் றொலைத்த
குன்ற நாடற் கயவர்நன் மணனே 230

(இந்த நற் செய்தியைச் செவிலியிடம் கூற வந்த தோழி அவள் செவியிற் படத்தக்கதாக தலையிடம்)

வாழி தலைவியே! நாம் பிரிவுத் துன்பத்தால் நெடுநாள் அழவைத்த தலைவன் திரும்பி வந்து விட்டான் என அறிந்த உடனே உனது நுதல் இரவின் இருட்டில் மின்னும் பசும் பொன்னாக ஒளிர்கின்றதைப் பார்க்கும்போது பெருமித முறுகின்றேன்.

அம்ம வாழி தோழி நாமழப்
பன்னாள் பிரிந்த வறறி லாளன்
வந்தன னோமற் றிரவிற்
*பொன்போல் விறறகவின் கொள்ளுநின் நுதலே*229

(இந்தச் செய்தியைச் செவிமடுத்த செவிலியின் முகம் தன் மகளிக்கு நலம் வந்துவிட்டதென மலர்கிறது. ஊரலர அகன்றிவிடும் எனத் தலைவியின் கண்கள் ஆனந்த மழை சொரிகிறது. அச்சமயம் தலைவனின தேர் வருஞ் சத்தமும் கேட்கிறது)

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்க

மூன்றாவது காட்சி முழுமையுறுகிறது

காட்சி; நான்கு

களம்; சிறைப்புறம், தாய் மனை.

காலம்; மாலை

பாத்திரர்; தலைமகன், தலைமகள், தோழி, செவிலி, நற்றாய். பாங்கன்

நிகழ்ச்சி;

ஊரலர் காரணமாகக் காதலர் களவு தமருக்குத் தெரிய வருகிறது. அதனற் தலைவி இற்செறிக்கப்படுகிறாள். ஊரலரைத் தணிக்கவும் வரைவிற்கான பொருள் தேடவும் நாட்டங்கொண்ட தலைவன் சிறிது காலம் பிரிகிறான். பொருள் சேர்த்த தலைவன் தலைவியைக் காணத் திரும்பி வந்த போது, தலைவியைச் சந்திக்க வழி வரைதலே எனத் தோழி கூற வரைவு அல்லது உடன் போக்கு என்ற முடி வுடன் தலைவன் திரும்புகிறான். அதே வேளை தலைவியும் அதே உறுதியை தன் மனதில் நிலைப்படுத்திக் கொள்கிறாள்.

பண்டிதர்;

பாலா! இதன் முன்னர், இந்த மேடையில் நடைபெற்ற நாடகத்தைப்பற்றி உன் எண்ணங்கள் எவை யெனச் சொல்லுக.

பாமரன்;

ஐயனே வழக்கமாக நாடகத்தைப் பார்த்த பின்பே, அதற்கு ஒரு பெயரிடச் சொல்லும் உங்களின் பண்டிதப் பண்பு மேலானது. என் எறும்பளவு அறிவிற்கு எட்டிய வண்ணம் தனி வழித் தணதலை நீங்கிய வரைவு என்பது பொருந்துமோ என .....

பண்டிதர்;

அருமையான தலைப்பு.. நல்லது வேறு கேட்க உள்ளதோ/

பாமரன்:

ஆமாம் அய்யனே! குறிஞ்சித் திணையில் முதல் மூன்று பத்தும், முறையே அன்னைப் வாழிப் பத்து, அன்னைப் பத்து, அம்ம வாழிப் பத்து எனப் பேசப்படுகிறதே. அவற்றுள் தலைவியைப் பார்த்து தோழி, தோழியைப் பார்த்து தலைவி, தலைவன் என்பவர்கள் அன்னைப், அம்மா என்று அழைப்பதேன்? அதையிட்டுச் சிறிது சொல்ல முடியுமானால், அளவற்ற அறிவுத் திருப்தி கொள்வேன்.

பண்டிதர்;

இருபத்தோராவது பத்தின் ஆரம்பமே, அன்னுய் வாழி வேண்டன்னே எனத் தொடங்குகிறது. அதன் பொருள், தாயே, தாய் போன்றவளே, தாய்மனம் படைத்தவளே, நீ வாழ்க. நான் சொல்வதைக் கேட்டிரங்குக என்றவாறு அமைகிறது, இருபத்திரண்டாவது பத்துச் செய்யுட்கள்; அன்னுய் என்று முடிகின்றன. இங்கேயுந் தாயே, தாயுள்ளம் படைத்தவரே, தாயினும் இனியவரே; இது நான் உங்களுக்கு உரைக்க வந்த செய்தி, என முடி கிறது. இருபத்தி மூன்றுவது பத்தின் செய்யுள்கள் அமம வாழி எனத் தொடங்குகின்றன. இதன் கருத்துகள் முன் சொன்னவாறே நடப்பினும், பல இடங்களில் இரக்கமிக்க விழிப்பாகவும் இயல்கிறது. குறிஞ்சி நிலத்தில், உயர்வு இரக்கம் கருதி அம்மே, அன்னுய், தாயே என அதிகமாகப் பயிலப்படுவதைக் குறவஞ்சி நூல்களிற் காணலாம். இதைவிட, இதை முன்னிலைப்படுத்தும் அசையென்றும் கொள்வர். சரி காட்சிகளே காட்சிப்படுத்தலாமே!

(ஊரலர் பரவியதால் நற்றுய் பாங்கியை அழைத்து)

பாங்கி! உன் பாதுகாவலில் என் மகள் ஏதுந் தவறி ழைக்கமாட்டாள் என்று நம்பினேன். ஆனல் இப்போது ஊரவர் மறைமுகமாக அவளின் நடத்தையைப்பற்றிக் கூறிய கட்டுக்கடங்காது வளர்ந்து, பெயர் சுட்டியே அலர் தூற்றுகின்றனர். இனிமேல் அவள் எங்கும் தனித்தோ, அன்றி உன்னிடமே வாராள். என்னுடன் அல்லது செவி லியுடன் தான் வெளியே செல்வாள். அந்த மலை நாடன் இங்கு வரின், இதையிட்டுச் செப்புக. அவனே முறைப்படி வரையுந் தகை இருந்தால் முறைப்படி வந்து காணச் சொல். மலைநாட்டு வரன்முறை என ஒன்று உள்ளது; அதன்படி மாப்பிள்ளை பெண்ணிக்கு பொன்னணி அணிதல், வதுவைக் காலத்தில் கொன்றை மாலை அணிவித்தல் போன்ற பல நெறிகள் உள்ளன என்பதை நீயறியாயோ. இவற்றை தலைவனிடம் உறைப்பாக உரை.

பாங்கி; அப்படியே அன்னுய்.

(என்று செல்கிறுள். தலைவன் இரவுக் குறியிடத்தே தலைவியைக் காண வருகிறுன். இற் செறிக்கப்பட்டதையும் அதற்கான காரணத்தையும் அவனுக்கு உரைக்கிறுள்.)

தலைவன்;

பாங்கியே, நான் என்ன கொடுமை செய்தேன். ஏன் தலைவி எனைக் காண வந்திலள்?

பாங்கி;

அன்னையு மறிந்தன ளலரு மாயின்று
நன்மனை நெடுநகர் புலம்புகொள வுறுதரு
மின்னு வாடையு மலையு
நும்மூர்ச் செல்க மெழுகமோ தெய்யோ 236

தலைவனே! உங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள தெய்வப் புணர்ச்சியால் நிகழுங் களவினைச் செவிலி அறிந்தாள். அவள் வழி நற்றாயுந் தெரிந்து கொண்டாள். அதற்குக் காரணம், நீ இங்கு அடிக்கடி இப்பக்கம் வந்து போவதை அறிந்த ஊரார் அலரேயாகும். இப்போது இற் செறிக்கப் பட்ட தலைவியை வருத்தும் வாடைக் காலமும் வந்தி றுத்தது. என்ன செய்ய விழைகின்றனை; அவனை வரையப் போகின்றனையோ அல்லது உடன்போக்கிற்கு உடன் படுத்தி உனதூருக்கு அழைத்திச் செல்லப் போகின் றனையோ கூறுக

தலைவன்;

பாங்கி நீ சொல்வது சரியே. சில வேளைகளில், நானிங்கு வரும்போது, பலர் குத்தலாகப் பேசுவதையும், எள்ளி நகையாடுவதையும் அவதானித்துள்ளேன். ஆனால், அவை தலைவியைப் புண்படுத்தும் என்று நான் எண்ணிலேன். ஆதலால் நானொரு காரியத்தைச் செய்யப் போகின்றேன். ஊர் வாய் மூடும் வரை இங்கு வருவதைத் தவிர்க்கலாம் என்பதே அந்த முடிவு.

தோழி;

நல்லது சொல்லினை. இதனால் சிக்கல் முடிந்து விடும் என்று நினைத்தால் அது தவறு. அதற்குப் பதில் பெருங்கேட்டையே விளைக்கும், உயர்ந்தோங்கிய கற்பாறை அடுக்குள்ள மலை வெற்பனே! நீ இப்போது முன்னெடுத்துள்ள செயல் தக்கதா என எண்ணிப்பார். இதன் காரணமாக நீ பிரிந்தால் வாரிய கூந்தல், ஒழுங்குற அணிந்த ஆபரணம் ஆதிய அழகுசெயும் உன் தலைவி, பசலை, மாமை பூத்து நலன் கெடுவாள். அதை உன்னால் எவ்வாறு தாங்க முடியுமோ?

யாங்குவல் லுகையோ லோங்கல் வெற்ப
விரும்பல் கூந்தற் றிருந்திழை யரிவை

திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ 231

தலைவனே! இனித் தலைவியைக் காண வராதிருப்தாகச் சாற்றினை. மலைச்சாரலில் கிடக்கும் அருமையான மணி களை வாரிக்கொண்டு ஒலலென்ற ஒலியுடன் பாய்கின்ற குனறங்கள் மிக்க மலை நாடனே! உன் நாட்டிற்குச் செல்கின்றதால் ஏதுறுமென்று எண்ணிப் பார். வருவதோ பிரிந்தவர் தவிக்கும் வாடைக் காலம் என்பதை மறந்து விடாதே!

வருவை யல்லை வாடைநனி கொடிதே
யருவரை மருங்கின் ஞெய்மணி வரன்றி
யொல்லென விழிதரு மருவிநின்
கல்லுடை நாட்டுச் செல்ல றெய்யோ 233

(ஊரலரை நீக்கவும், தலைவியை தக்க முறையில் வரைவு செய்யப் பொரிள்வயிற் பிரியவும் எண்ணி
ஒரு வழித் தணத்த தலைவன், சில காலத்தின் பின்னர், அவளைக் காண வந்த தலைவன் தோழியிடம்;)

பாங்கியே! என் தலைவி எவ்வாறுள்ளாள். நான் பிரிந் திருந்த காலத்தில் அதை எவ்வாறு தணித்துள்ளாள் என்பதைக் கேட்டறிய விரும்புகிறேன். அப்போதுதான் கலங்கித் தவிக்கும் என் நெஞ்சம் அமைதியுறும்.

தோழி;

போதார் கூந்த லியலணி யழுங்க
வேதி லாட்டியை நீபிரிந் ததற்கே
யழலவிர் மணிப்பூ ணனையப்
பெயலா ஞவென் கண்ணை தெய்யோ 232

தலைவனே, நீ பிரிந்திருந்த காலத்திற் தலைவி என்ன செய்தாள் எப்பாடுற்றாள் என வினவுகின்றனை. இதற்குப் பதில் நான் சொல்வதிலும் பார்க்க நீங்களாகவே உய்த்துணர வேண்டியதொன்று. ஏனெனில அவள் உன்மேற் கொண்டுள்ள அன்பு எத்துணைத்து என்பதை உன்னல் மட்டுமே உணரமுடியும். ஆயினும் என் கண்ணிற் பட்டவாறு கூறுவதானல்; சீவி முடிந்த கூந்தல் சிக்குற்றன. நெருப்பெனச் சுடர்விடும் கைவளையின் மணிகளும் கண்ணீரால் நனைந்தன.

மின்னவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்
நன்னுதல் பசத்தலாவது துன்னிக்

கனவிற் காணு மிவளே
விற் காணினின் மார்பே தெய்யோ 234

சிலம்பனே! கனவில் நீ வருவாய். உன் ஒளிரும் ஆபர ணங்கள் நெகிழ்ந்த காரணம் என்ன என்று கேட்பாய் எனத் துயிலும் இவள் கண் விழித்தகாலே உன் மார்பைக் காணுததாலால் உண்மையிலே அவள் நுதல் பசந்தது, கை வளை கழன்றது என்பதை அறியாயோ.... தலைவனே! தலைவியைத் தணக்கச் செய்து நெடுநாட் பிரிந்திருந்து இப்போது வந்துள்ளாய். இது நல்ல செய்தியாக அமைகுக. ஆசை மிக அதனால் உள்ளம் வருந்த நீ வந்துளாய் எனின், அது பருவக் கோளாறே என எண்ண வேண்டியுள்ளது. அதோ உயர்ந்து தோன்றும் அந்த நெடுமலை நாட்டில் உமது உறைவிடம் எதுவென நாம் அறியலாமோ!

காமங் கடவ வுள்ள மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவ மாறி
னேங்கித் தோன்று முயர் வரைக்
கியாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ 237

தலைவன்;

அப்படியா? கேட்கவே நெஞ்சந் துடிக்கிறது. நான் அவளைக் கண்டு ஆறுதல் கூறி அரவணைக்க வேண்டும்... எனது ஊரெது என வினவினை. என் தலைவி இருக்கும் இடமே எனதூரும் ஆகும். அவ்வாறு அமையாவிடில் எனது ஊரே அவளது ஊராகி விடும்..

தோழி;

கேட்பதற்கு களிப்பாக இருக்கிறது. எனினும் அவளைக் காண்பதென்பது இப்போது முடியாத செயலாக உள்ளது. அதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது.

வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும்
குருமயிர்ப் புருவை யாசையி னல்கு
மாஅலருவித் தண்பெருஞ் சிலம்ப
நீயிவண் வருஉங் காலை
மேவரு மாதோ விவணலனே தெய்யோ 238

தலைவனே! பெரிய அருவி வீழும் சாரல் நாடனே! ஆங்கு பெரிய கொம்புடைய கடா குறித்த காலத்தில் வரப் பிந்தினால் நிறத்தால் அழகுறும் பிடரி மயிர் கொண்ட அதன்

ஆட்டுமறி எவ்வாறே வந்து இணையுமென எதிர்ப்பார்க்கும். அத்தகைய வளநாட நீ இவ்வண் வருவதை அறியின் தலைவி தானிழந்த நலமெலாம் மீளப் பெறுவாள்.

அறியே மல்லெ மறிந்தன மாதோ
பொறிவரிச் சிறைய வண்டின மொய்ப்பச்
சாந்த நாறு நறியோன்
கூந்த லுறுநின் மார்பே தெய்யோ 240

தலைவனே! எங்களுக்குத் தெரியாது, ஆனால், புள்ளிகள் பொருந்திய பல நிறச் சிறகுடை வண்டுகள் மொய்க்கும் வண்ணம் சந்தன மணம் வீசும் கூந்தலார் வாசனை உனது மார்பிற் கமழ்வதிலிருந்து அறிந்து கொண்டோம் என்பதை அறிகுக.

தலைவன்;

இவ்வாறு என்மேல் ஐயுறுவதற்குக் காரணம் என் பிரிவென உணர்கிறேன். ஆனல் அந்தப் பிரிவின் காரணம் வரைவினை விரைவுபடுத்துவதே என்பதை ஏன் நீங்கள் உணரத் தவறினீர்கள். இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்பதை எவரும் உணர்த்த வேண்டாம். நானே அதற்கான முடிவை எடுத்து விட்டேன். இன்னுஞ் சில தினங்களுள் உரிய முறையில், தக்க வழியில் என் தமருடன் வரைவிற்கான எல்லாக் காரியங்களுடன் வருவேன். இதையாவது உங்கள் தலைவியின் செவியிற் செறித்துவிடுக.

தோழி;

தலைவனே! வண்டுகள் வந்து உண்ணும் மதநீர் பாயுங் களிறு தானிழந்த பிடியென மயங்கிக் குன்றுக் கல்லே மருவும் நாடனே! நீ அவளைப் பிரிந்து உனதூரிற்குச் சென்ற பின்னர் தலைவி மெலிவாள். திரும்பி வராதிருப்பின் அவள் மட்டல்ல நானும் உயிர் வாழேன்.

சுரும்புணக் களித்த புகர்முக வேழ
மிரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழுஉநின்
குன்றுகெழு நன்னாட்டுச் சென்ற பின்றை
நேரிறைப் பணைத்தோண் ஞெகிழ
வாரா யாயின் வாழேந் தெய்யோ 239

(தலைவன் செல்கிறன். பாங்கி தலைவியிடம் வருகிறள்.)

தோழி;

தலைவியே! வானங் கறுத்து கனிந்து மழை பெய்கின்ற மாரிக் காலத்தே நடு யாமத்தின்போது நம்மை ஒருவழித் தணக்கச் செய்த தலைவன் வந்துள்ளான். அவன் வந்த காரணம் உனைத் தழுவிச் செல்லவோ அல்லது உடன் அழைத்துச் செல்லும் உடன் போக்கிற்கோ அறியேன்.

கையுற வீழ்ந்த மையில் வானமொ
டரிது காதலர்ப் பொழுதே யதனுற்
றெரியிழை தெளிர்ப்ப முயங்கிப்
பிரியல மென்கமோ வெழுகமோ தெய்யோ 235

தலைவி;

அகம் மகிழ்கிறேன் பாங்கி. எங்கள் கூடல் தெய்வத் தாலாயது. என் தமர் வரைவுக்கு மறுப்பின் அவருடன் உடன் போக்கிற்கு ஒருப்படுவேன். எப்படியோ எங்கேயோ அவரது அருகில் இருந்தாலே எனது உள்ளம் நிறையும்.

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூடுகிறது
நான்காவது காட்சி முடிகிறது.

காட்சி; ஐந்து

களம்; தலைவியின் இல்லம், சிறைப்புறம்.

காலம்; காலை, மாலை.

பாத்திரர்கள் ; நற்றாய். செவிலி, தலைவன். பாங்கன், தோழி, தமர், வேலன்.

நிகழ்ச்சி;

மகளின் மன நிலை உடல் நிலைத் தளர்வு கண்ட, செவி லித்தாய் அதற்கான காரணத்தை அறிய முயன்றுங் கை கூடாத நிலையில், வேலனின் வெறியாடலால் அறிய முற்ப டுதல். தலைவி ஏற்கனவே ஒருவனைக் கணவனாகக் கொண்டிருப்பதால், இவ்வாறான வேறு வணக்கம் பண்பிற் கொவ்வாததெனக் கண்ட தோழி வெறியாட்டை விலக்கல். இதனால் தலைவிக்கும் தலைவனுக்கும் பல தடைகள் தளர் வுகள் ஏற்படுதல், தலைவன் வரைவிற்குச் சம்மதிப்பதால் இவைகள அகலல்.

பண்டிதர்: அனைவருக்கும் வணக்கம்.

(பாமரன் குறுக்கிட்டு)

அய்யா முன்தினம் நடந்த நாடகத்தின் தலைப்புப் பெயரைக் கூறட்டுமா/

பண்டிதர்:

ஏன் அத்தனை அவசரம். இங்கு வந்திருப்பவர்கள் பலர் பல தலைப்புகளை ஏற்கனவே எனக்கு அனுப்பி இருந்தார்கள்,

பாமரன்;

என்னய்யா முன்னால் வந்த செவியைப் பின்னால் வந்த கொம்பு மறைக்கலாமா. அதற்கு நான் இடந் தர முடியாது.

பண்டிதர்:

அப்படியா! முதலில் உன் தலைப்புப் பெயரைச் சொல். அதை சபையோர் எப்படி ஏற்றுக்கொள்கிறார்கள என்பதைப் பார்ப்போம் . பின்னர் குடிசார் முடிவாக ஒப்புக் கொள்வோம்

பாமரன்; உடன் வரைவு இன்றேல் உடன்போக்கு

(சபையோர் கரந் தட்டி தங்கள் ஒப்புதலைத் தருகின்றனர்)

மகிழ்ச்சி! மகிழ்ச்சி! பாருங்கள். பாலன் சொன்னால் பலரும் ஏற்பார்கள். .... அது சரி அய்யா நேற்றைப் பாடல்கள்

யாவும் தெய்யோ..... தெய்யோ.... என முடிந்ததே. அப்படி யானால் அதுவும் முன்னிலை அசைதானே?

பண்டிதர்:

நீ சொல்வது சரியே. இனி இந்த ஐந்தாவது பத்தான வெறிப் பத்தை காட்சிப்படுத்துவோமா/

பாமரன்;

அய்யா, என்ன சொல்லினீர்கள். வெறிப் பதத்தா. மது சுகத்துக்குக் கேடு என்பார்களே. சங்க காலத்திலும் மதுவின் கொடுமைபற்றிக் கூறியுள்ளார்களா? அதுவும் எட்டுத் தொகையில் மூன்றுவதான ஐங்குறுநூற்றின் இருபத் தைந்தாவது பத்தில் அதை வெறிப் பத்து என்று சொல்லி யுள்ளார்களா?

பண்டிதர்;

நீ நினைப்பதுபோல, அது மது சம்பந்தமானதோ அதை அருந்தி விட்டு வெறிகொள்வதைப்பற்றியோ சொல்வ தல்ல. குறிஞ்சித் திணைக்கே உரிய மரபுவழிப் பழக்கமான ஒரு தெய்வஞ் சார்ந்த வழிபாட்டு முறை. மலைவாழ் மக்கள் நம் நாட்டில் வந்து; நமது எதிர் காலத்தைப்பற்றிக் குறி சொல்வதுபோன்ற ஒரு உளவியல் சார்ந்த தொழில் நெறி. காற்றுக் கறுப்புப் பார்வை, தாக்கணங்கு, நோக்க ணங்கு ஆதியவற்றினதும், நீரமகளிர் வரையரமகளிர் வானரமகளிர் சூரரமகளிர் ஆதியவர்களின் ஆட்சியால் பாதிக்கப்பட்டவர்களை மீட்சிப்படுத்த அதற்கான கார ணங்களைக் கண்டறிய ஆவேசமுற்றுக் கட்டுரைத்தல், கழங்கெண்ணிக் குறியுரைத்தல் என்பவற்றைச் செய்வர். இவர்களைக் குறியுரைக்கும் குறத்தி.....;

பாமரன்;

பச்சை மலை பவளமலை குறத்தியர்கள் அம்மே
பார்த்தவுடன் குறியுரைக்கும் பாவையர்கள் அம்மே.....

பண்டிதர்;

இப்படிப்பட்டவர்களை வேலன், கட்டுவிச்சி, குறத்தியர் என்பர், அவற்றுள், மதுவுண்டு நிலையில் செய்வ ஆவேசமுற்று, ஆடி, துயரத்தின் காரணத்தையும் அதைப் போக்கும் வழி வகையையும் சொல்பவன் வேலன். அவனின் ஆடலைத்தான் அக்காலத்தில் வெறியாட்டு என்றனர். அதைப்பற்றி சொலவதுதான் வெறிப்பத்து

பண்டிதர்:

நீ சொல்வது சரியே. தலைவியின் களவியல் தாய்க்குந் தமருக்கும் ஐயத்தை ஏற்படுத்தவே அதற்கான காரணத்தைக் கண்டறிந்து குறையகற்ற வேலனின் கட்டுவாக்கைப் பெற எத்தனிக்கின்றர். அதைத் தவிர்க்க உண்மையைக் கூறுவதே உகந்தது எனத் தோழி முன் வருகின்றாள். மறைத்த ஒரு உண்மையை உரியவர்க்கு வெளிப்படுத்துவதை அறத்தோடு நிற்றல் என்பர். அது; ஏழு வகைப்படும் என்பர் அவற்றில் ஒன்றுகத் தோழி காரணஞ் சொல்தை நாம் அறிதல் நலம். அது பின்வருமாறு அமையும். அன்னுய் கேட்குதி எம்மைக் கூழைக் கற்றைக் குழவிப் பராயத்து, மாழை கலந்த வேழை நீர்மையாரொடு நாட்கோலஞ் செய்து வினையாடி வருமினென்று போக்கினுய். யாம்போய் ஒரு வெண்மண லடர்ந்த நண்மலர்ப் பொழியிடை வினையாடா நின்றேமாக. அந்நேரத்தில் ஒரு தோன்றல் ஒரு கணைக் குவளைப் பூக்கொண்டு அவ்வழியே போந்தான். நின் மகள் அதனை நோக்கிப் பூவை என் பாவைக்கு அணியத் தம்மின் என்றாள். அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது கொடுத்து நீங்கினன். இது அறியாக் காலத்து நிகழ்ந்தது. அறிவது அறியாக் காலத்தில் நிகழ்ந்ததனை அறிவறிந்து கொண்டாற்குரியர் கொடுத்தார் எனவும் உற்றார்க் குரியர் பொற்றொடி மகளிர் எனவும் நினைந்து அவனை வழிபடாது, பிறிதொன்றுவதாயின் இக்குலத்துக்கு வடிவாங் கொல்லோ எனக் கருதியமையால் நின் மகள் வேறுபட்டாள் என அறத்தொடு நிற்பாள். அதை ஏற்றுத் தாயுந் தமரும தலைவியின் செயலைத் தெய்வப் புணர்ச்சி எனக்கோர் அறத்தொடு ஏற்பார். இனி இந்த ஐந்தாவது பத்தான வெறிப் பத்தை காட்சிப்படுத்துவோமா/

(தலைவியின் இல்லத்தில் உள்ளே தலைவி இருக்கிறாள். வெளி முற்றத்தில் செவிலி இருக்கிறாள். அப்போது அங்கே வந்த)

தோழி;

தலைவியே. கேட்குதி. ஊர்வாயை மூட உலை மூடி உளதா? அதற்கிணைய நாம் இதுவரை மறைத்து வைத்த பல காரியங்கள் மெள்ளமெள்ள வெளிவரத் தொடங்கிற்று. அதனல் நமது செவிலி வேலனை அழைத்து நமக்குற்ற

துன்பத்தின் காரணத்தைக் கேட்டால் அவன் என்ன சொல் வானே? அவனுக்கு நம் சிலம்பனின் சிநேகத்தைப்பற்றித் தெரியுமோ என்றுதான் மனம் கலங்குகிறது. (செவிலியின் செவியிற் படத்தக்கதாக) முத்துப் பல்வரிசைத் தாயே. அறிகுக

நம்முறு துயர நோக்கி யன்னை
வேலற் றந்தா ளாயினவ் வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
யறியுமோ தில்ல செறியெயிற் றேயே 241

அன்னாய், உங்கள் காதல்தான் உன் வாட்டத்திற்கு உண்மைக் காரணம் என்று செவிலித் தாய்க்குத் தெரியாது. உன்மேல் தேவதைகளின் துர்நோக்கினால் ஏற்பட்ட தாக்கமே இது என எண்ணுகிறாள். மேலுந் தாமதியாது, நிரைத்த இதழ் மலரொத்த உன் கண்கள் பசப்பதற்குத் தூரத்தே உள்ள மலைநாடன் தான் காரணம் என்று செவி லிக்கு அறத்தொடு நிற்பதே தக்கதாம்.

அறியாமையின் வெறியென மயங்கி
யன்னையி மருந்திய ருளந்தன ளதனை
லெய்யாது விடுதலோ கொடிதே நிரையித
ழாய்மல ருண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே 242

தலைவி;

இந்த இக்கட்டான நிலை நான் என் தலைவன்மேற் கொண்ட ஈடற்ற நம்பிக்கைதான். அவன் சூழுரைத்தபடி விரைவில் வதுவை செய்வான் என எதிர் பார்த்தேன். ஆனால், இன்று அவன் ஏனைதானை என்று வாழாதிருக்கும் நிலையில் நான் களவியல் மட்டும் நிற்கவில்லை. பொய் பேசுவதிலும் உயர்ந்த நிலையில் நிற்கின்றேன் என அல்லாடுகிறேன். இந்த இடர் நிலையில் நான் என்ன செய்வேன், தோழியே நீ தான் துணை.

தோழி;

நீயோ இரவின் இருட்டில் நிற்கின்றாய். நானை பகலின் இருளில நிற்கிறேன். ஆதலால் ஒன்றுமே தோன்றுவதாக இல்லை. எனினுந் தலைவனிடத்திற் போய் அதற்கான வெளிச் சத்தைத் தேடுவோம்..

(அங்கிருந்து அகன்ற தோழி சிறைப் புறத்தே தலைவியை எதிர் பார்த்து நிற்குந் தலைமகனிடம் வந்து)

தோழி:

பொய்யா மரபி னூர்முது வேலன்
கழங்குமெய்ப் படுத்துக் கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயிற்
கெழுதகை கொல்லிவ ளணங்கி யோற்கே 245

தலைமகனே! இவன் சொல்வது பொய்யல்ல என்று நம்மூர் மக்கள் நம்பும் வயோதிபனை வேலன் வெறியாடலுக்குரிய கழங்காதியனவற்றை அணிந்து மருந்துப் பையை எடுத்துக் கொண்டு வெறியாட வருவான். பின் அவன் இவள்மேல் முருகணங்குப் பார்வை உண்டெனக் கட்டுரைப்பான். அப்போது தலைவியை வருத்துவது நீ தான் என்ற உரிமை உனக்கு இல்லாது போமே. அதி உனக்குச் சம்மதமா?

தலைமகன்;

பாங்கியே, மிகமிக அவசரப்படுகிறீர்கள், வதுவை என்பது நினைத்த உடனே ஆகுமோர் காரியமன்று . அதற்குச் சில வரன்முறைகள உள்ளன. அவற்றை நான் நிறைவு செய்ய வேண்டாமா?

தோழி;

தலைவனே கேட்குதி! அய்யர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா? உமக்கு நேரம் வரும்வரை ஊரார் வாய் சும்மா இருக்குமா? அல்லது உன் தலைவியின் உற்றார்தான் பொறுப்பார்களா? ஒரு குகை. அதன் உள்ளும் புறமும் மிளகுக் கொடியின் அடர்ச்சி. யாரோ கழற்காயைக் கண்ணுக்கி செய்து வைத்த ஒரு பெண்புலியின் பொய் உருவம். அங்குளது. அதை வேட்கை நோயால் வெதும்பிய ஆண்புலி காம மயக்கால் மெய்ப் புலி என எண்ணிப் புணர் கிறது. அத்தகைய படப்பை செறிந்த குன்றத் தலைவனே! நீயே தலைவியின் துயரத்திற்குக் காரணமாக இருக்க, அவளின் தாய் அழைத்த வேலன் வந்து வெறியாடப் போகிறன். அப்போது உனக்குரிய பெருமை என்னுகும். அகவே உடனடியாக வரைவு வேட்டு இந்த ஊருக்குத் திரும்புக. அதை விடுத்து நீ வரவிரிந்தால் அதி உன் தலைவியின் ..... இதைவிட எனக்கு என்ன சொல்வதென்றே தெரிகிலது.

வெறிசெறித் தனனே வேலன் கறிய
கன்முகை வயப்புலி கழங்குமெய்ப் படுஉ

மன்றிற் பையு டீருங்
குன்ற நாட னுறீஇய நோயே 246

(தலைவன் பதில் சொல்ல முதலே தோழி அவ்விடமிருந்து அகன்று தலைமகளிடம் வருகிறாள். செவிலியும் சற்றுத் தூரத்தில் அமர்ந்திருக்கிறாள். அவளிடஞ் சென்ற)

தோழி:

அன்னாய்! தலைவியின் நோயறிந்து அதை நீக்குதற்கு வேலனை அழைக்கப் போவதாக அறிந்தேன். எப்படியாவது தலைவி பழையபடி தளிராகத் தழைக்க வேண்டும். ஆனால்; நட்புடைய அன்னையே. வெறியாட்டயர வரும் வேலன் பலவிதமான மலர்களைப் பூத்து நறுமணங்கமழச் செய்யுஞ் சோலையையுடைய குன்றத்து நெடுந் தகையாளனை யிட்டு அவன் கட்டுரைக்காவிட்டால் அதனால் என்ன பயன் உண்டாகும்?

அம்ம வாழி தோழி பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நறுந்தகை
குன்றம் பாடா னாயி
னென்பயஞ் செய்யுமோ வேலற்கவ் வெறியே 244

பெய்மணல் வரைப்பிற் கழங்குபடுத் தன்னைக்கு
முருகென மொழியும் வேலன் மற்றவன்
வாலிய விலங்கு மருவிச்
சூர்மலை நாடனை யறியா தோனே 249

தாயன்பு கொண்ட தலைவியே, கட்டுரைப்பதற்காக அழைக்கப்பட்ட முதிர்ந்த அனுபவங் கொண்ட வேலன் மணல் பரப்பிய முற்றத்தில் அவன் வழக்கமாகச் செய்யும் நியமங்களுடன், கழங்குகளை எண்ணிப் பிரித்து நம் தலைவிக்கு முருகணங்கின் குற்றம் உண்டெனக் கட்டுச் சொல்வான். எனெனில் அவனுக்கு, அவளின் நோய்க்குக் காரணமான எங்கும் பாய்கின்ற பல அருவிகளால் வளஞ் செறி மலைநாடனைப் பற்றி அறியான் போலும்.தாயே! வேலன் உங்களின் அழைப்பை ஏற்று வரப்போகிறான். மணல் பரப்பிய முற்றத்தில் அதற்கான பொருட்களை வைத்து ஆடுவான். அப்போது ஆவேசங் கொண்ட அவன் கழங்குகளைப் பிரித்து என்ன நடந்ததெனச் சொல்வான். அது தக்கதாமெனில் இவளுக்கு உற்றதின் உண்மையை எவ்வண் அறியலாமோ

பெய்மணன் முற்றங் கவின்பெற வியற்றி
மகிலவான் கொண்ட சிகினிய வேலன்
கழங்கினு னறிகுவ தென்று
னன்று லம்ம நின்றவிவ ணலனே 248

செவிலி;

பாங்கி, நீ என்ன சொல்கின்றனை. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. வேலன் சொல்ல வேண்டிய வேறு ஒரு அணங்கு உண்டென்பதுபோல, ஏதோ சுற்றி வளைக்கின் றனை. அதன் வெளிப் பொருள்தான் எதுவோ?

தோழி:

வேலன் கொண்டு வைத்துக் குறி கணிக்கும் கழங்குகளே! உங்களால் உண்மையை கண்டறியவே முடியாது. பெண்மையின் அழகு பூக்கின்றதெனப் பூரிக்கும் பொன் பூண் அணிந்த இளம் முலைப் பருவத்தாளைப் பீடித்துள்ள அணங்கு மயில்களாடி வண்ணஞ் சேர்க்கும் மலைநாட்டுத் தலைவன்தான் என்பதை அறியீரோ.

பொய்படு பறியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி மடமயி லாலுநம்
மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோ
னுண்டகை விறல்வே ளல்லனிவள்
பூண்டாங் கிளமுலை யணங்கி யோனே 250

செவிலி;

பாங்கியே. நான் ஒன்று கேட்டால்; நீ ஒன்று சொல்கின்றனை. உன்னிடம் காரணங் கேட்டால் கழங்குடன் காரணங் கேட்கின்றனை. உன் கருத்துத்தான் எதுவோ?

தோழி:

அன்னை தந்த தாகுவ தறிவன்
பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயி
னருவரை நாடன் பெயர்கொலோ வதுவே 247

அன்புசால் தலைவியே, உனக்கு உற்ற ஊறு ஏதெனக் கலங்கும் தாய் உண்மையைக் கண்டறியத் துணிந்து விட்டாள். அதன் முதற்படியாகக் கழங்குப் பாவையை எடுத்துக் கொண்டு கட்டுச் சொல்லும் வேலனை அழைத்துள்ளாள் என்பதை நான் அறிவேன். அவன் என்ன சொல்வான்! வழக்கம்போல முருகன்

அணங்கின் பெயரைச் சொல்லி அதனுல் விளைந்த குறையென்றே சொல்வான். அப்படிச் சொல்வானுயின் அதுதான் உன் காதலன் உயர் மலை நாட்டின் சிலம்பனின் பெயராகுமோ?

தமர்:

அப்பம் என்றுல் அதைப் பிட்டுக் காட்ட வேண்டுமா/ அல்லது உண்டுதான் காட்ட வேண்டுமா? செவிலியே! பாங்கி பக்கு வத்தோடு சொல்வதை இன்னுமே உன்னுற் பகுத்தறிய முடியவில்லையா? அவளைப் பீடித்துள்ள அணங்கு அணங்கல்ல. மலைநாட்டு வளவன் . இப்போதாவது புரிந் ததா? உன் மகள் மணத்தை நாடுகிருள்...

செவிலி;

நல்லது சொற்றினீர்கள். உண்மைக் காரணந் தெரிந்தபின் உறுமியாடும் வேலன் எதற்கு? வெறியாட்டெதற்கு? கட்டுரை எதற்கு.....

(தோழி தலைவியிடம் வந்து வெறி விலக்கிய களிப்பில்)

தோழி:

கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
யறியா வேலன் வெறியெனக் கூறு
மதுமனங் கொள்கிவை யனையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே 243

அப்பாடா/ செவிலியிடம் அறத்தொடு நின்று வெறி விலக்கியதற்குப் பட்ட பாடு இருக்கிறதே..... அன்புடைத் தாயே! மிளகுக் கொடி அடர்ந்து வளரும் வரையில், கடவுளின் அருளை அறியா வெறியாட்டு வேலன் கூறுவதைக் கேட்க விழையும் நீங்கள், நம் தலைவியின மலர்க்கண் பசந்த காரணத்தைக் கேட்டறியாது இருப்பதேன்? இவ்வண் இன்னும் இன்னும் சொல்ல வேண்டுமோ.....

(தலைவி பாய்ந்து தோழியைக் கட்டித் தழுவிக் கொள்கிறுள். காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூடுகிறது
25வது காட்சி முடிகிறது

காட்சி; ஆறு

களம்; சிறைப்புறம், சோலை. தலைவியின் இல்லம்

காலம்; மாலை.

பாத்திரர்;

தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி, பண்டிதர், பாமரன்

நிகழ்ச்சி;

தலைவன் தனது மனதைக் கவர்ந்தவளையிட்டுப் பாங்கனிடஞ் சொல்கிறான். அவளைக் காணத் தோழியின் உதவியை வேண்டுகிறான். தினைப் புனக் காவலுக்கு வரும் அவர் களிடை அன்பு வளர்கிறது. தினை வெட்டு முடிவதாற் சந்திக்கும் வாய்ப்புக் குறையத் தோழி வரைவு வேண்டுகிறாள். வரைதற்குப் பொருள் தேடித் தலைவன் பிரிகிறான். அதனால், தலைவி வருந்துகிறாள். தலைவன் சூழுரைத்த காலத்தின் முன்னர், வருகிறான். வரைவு உறுதிப்பட்டதால் யாவரும் மனங் களிக்கிறார்கள்.

(முன்னெழினி விலக அரங்கில்)

பண்டிதர்;

வணக்கங்கள், இதுவரை 500 பாடல்கள் கொண்ட ஐங்குறு நூற்றின் 250 பாடல்களை 25 நாடகங்களாக்கி, இந்த அரங்கத்தில் காட்சிப்படித்தி உள்ளார்கள். இன்று, இருபத்தாறுவது காட்சி இடம் பெறுகிறது. காட்சியைத் தொடங்கு முன்னர், இதற்கு முன்னால் நடைபெற்ற நாடகத்திற்கு....

(பாமரன் குறுக்கிட்டு)

என்ன பெயர் என்றுதானே யோசிக்கிறீர்கள்? என் எண்ணப்படி.... வெறியாட்டு விலக்கிய விறல்.. .எப்படி எனது....

பண்டிதர்;

அருமை! அருமை! அதில் வரும் தோழி எவ்வளவு சிரமப்பட்டு வேலனின் வெறியாட்டைத் தவிர்க்கின்றாள். நடந்த காரியத்தை உரியவர்களிடம் எப்படிச் சாதுரியமாகக் கூறினாள் என்பதைப் பார்க்கும்போது அது ஒரு விறலான செயலேதான்..

பாமரன்;

அய்யா. எனக்கொரு ஐயம். அதாவது வேலன் வருவான். வெறியில் ஆடுவான். வாய்க்கு வந்ததை உரைப்பான், அப்படி கட்டுரைப்பதெல்லாம் பொய்தானே, அதனால் காதலர்க்கு என்ன கேடுறும்? அப்படியே தாயுந் தமரும் விரும்பியபடியே வேலனே வினையாட விடுவதுதானே. அதற்கேன் இத்தனை தடைகள் தாண்டல்கள்!

பண்டிதர்;

அதற்கு ஒரு வலுவான காரணம் உண்டு. அதுதான் தெய்வந் தொழாள் கணவற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை என்ற வள்ளுவர் வார்த்தை. மேலும் கணவனே கண்கண்ட தெய்வம் என்பதையும் அறியாயோ. தமிழ் மாதர்க்குக் கணவனே தெய்வம். அதை விட வேறு வணக்கங்களை அவர்கள் செய்யார். எனவே தலைவியும் வேலன் வெறியாட்டின்போது, அதில் பங்குபற்றி வணங்கள், எனவேதான் தலைவி அதிற் பங்குபெறுவதைத் தவிர்ப்பது அவசியமாயிற்று.

பாமரன்;

எனனய்யா சொல்கிறீர்கள். தலைவிதான் மணம் முடியாதவளாயிற்றே! காதலர் என்ற நிலையிலேதானே இந்நிகழ்ச்சி நடக்கின்றது. அப்படி இருக்க அவளுக்கு எப்படி கணவனே கண் கண்ட தெய்வம் என்ற நிலை தகும்.

பண்டிதர்;

அப்படியும் ஒரு ஐயமும் உண்டோ! இந்த நிலையில் வெளி உலகத்தவர்க்கு அவர்கள் கணவன் மனைவியாகத் தென்படாவிடினும் மனதால் அவர்கள் இருவரும் அந்த நிலைக்கு உரியவர்களாகவே மதிக்கப்படுவர். கற்பெனப் படுவது சொற்திறம்பாமை என்பதே இதற்கு ஆதாரம்.

பாமரன்;

அப்படி என்றால்; என்று ஒரு பெண் ஒருவனைத் தனது மனதில் என்று நினைத்து விட்டாளோ அன்றிலிருந்து அவளின் கணவன் என்றாகிறது..

பண்டிதர்;

நினைப்பதி மட்டுமல்ல, இவனே என் கணவன், இந்த இணைப்பு இறைவன் கொடை, இறக்கும் வரையுந்தொடரும் பந்தமென உறுதியுடன் மனதில் வரிந்தால்; அந்த நிலைக்கு உரியவர்களாவார்கள். இனி காட்சியைத் தொடங்குவோமா?

(வட கடல் இட்ட நுகந் தென் கடல் இட்ட கயிறுடன்
இணவதொத்த தொந்தமே உ கணவன் மனவி பந்தம்
என்பதும் அதுவே தெய்வப் புணர்ச்சி என்பதும் அகப்பொருட்
சித்தாந்தம். அவ்வழியில் தலைவியை கண்ட தலைவன்
அவளைப்பற்றிய சிந்தனையிற் தவிக்கின்றான்.
அதைக கண்ட பாங்கன்)

தலைவனே, நாம் அடுத்த மலைக்குச் சென்று வந்த நாட் தொட்டு உங்களின் நடபடிக்கைகளில் பல மாறுதல்களை அவதானிக்கக் கூடியதாகத் தோன்றுகிறது. எப்போதும் எதையோ நினைத்து அழுங்குவதிபோலவுந் தோன்றுகிறது. அதற்கான காரணத்தை அறியின் என் உயிருக்கு உயிரான உந்தனுக்கு என் உயிரைக் கொடுத்தாவது.....

தலைவன்;

உதவுவேன் என்றுதானே சொல்லப் போகின்றனை. அதைத்தான் உன்னிடம் நான் வேண்டுகிறேன். என் அறிவு தெளிந்த காலத்தில் தெளியாத ஒரு உணர்வு ஏற்பட்டு ..... அதாவது என் உள்ளத்தில் இனந் தெரியாத வேறெரு உள்ளம் வந்து ஒட்டிக கொண்டது போன்றதே அந்த உணர்வு. நாளடைவில் அந்த உள்ளத்தின் உருவ மொன்று என்மனதில் உரும்பெறத் தொடங்கியது. ஆனல், அந்த உருவத்தின் முகம் மட்டுந் தெளிவற்றதாக மங்கலாக அடிக்கடி காட்சி தந்தது. அடுத்த மலைக்கு நாம் செய்த பயணத்தின்போது நான் தேடித் தேடிக் கண்டடையாத அந்த முகத்தின் உண்மையான உருவத்தைக் கண்டேன். பாங்கனே! என் நெஞ்சில் உறைந்த அவள் யாரென வினவினை. அவள் இந்த மலைநாட்டுத் தலைவனின் ஆசை மகள், வரையர மகளிரைப் பொன்ற சாயல் உடையவள். அரும்பி வருகின்ற இளைய முலைகளையும் உடையவள். தேமல் படர்ந்த மார்பினள். .....

குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர்ப் புரையுஞ் சாயல
ளைய ளரும்பிய முலையள்
செய்ய வாயினண் மார்பினள் சுணங்கே 255

இப்போது அவளைக் கண்டு,நீண்ட நாட்களாக இனம்புரி யாத இன்ப வேதனையில் ஆழ்த்திய அந்த அழகிய வதனத் தைப் பார்த்துக் கொண்டே இருக்க . அதற்கு.....

(என்னலான முயற்சி எடுப்பேன் என்று தலைவியின்
இடத்திற்கு வருகிறான். அது கை கூடாத விடத்துத்
தலைவியின் பாங்கியுடன் நடந்த நிகழ்வைக் கூறி அவளைத்
தலைவனைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறான்.
அப்போது தலைவன் தோழியிடம்)

தலைமகன் :

குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் தண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ளெயிற்ற
ளைய ளாயினு மாரணங் கினளே 256

பாங்கியே, என்னைக் கவர்ந்த உங்கள் தலைவி நீண்ட நாட்களாக என் உள்ளத்தில் ஒழிந்திருந்து அண்மை யிற்தான் வெளியே வந்தாள். ஆனல் அவள் மீண்டும் மறைந்து விட்டாள் அவள் அணிந்துள்ள நறுமலர்களில் என்றும் அளிகள் மொய்க்கும். நறுந்தழை அணிந்த கொடிச்சி. வளையணிந்த கையள் . விதைகள் முளைவிட்டது போன்ற பல்வரிசையள். ஆனலும் என்னை வருத்துந் தன்மை மிக்கவள்.

(இதே நிலையில் தலைக்குந் தலைவியின் தவிப்பை அகற்றும்
எண்ணங்கொண்ட தோழியின் உதவியுடன்
காதலர் இருவரும் பகற் குறி, இரவுக் குறி எனச்
சந்தித்துத தங்கள் அன்புடைக் காதலை வளர்த்து
வரும்போது, அதற்கு ஒரு தடை ஏற்படுகிறது.
அதைத் தவிர்க்க முடியாத தலைவனிடத்தில்)

தோழி:

தலைவனே! தினை முதிர்ந்து அறுவடையாகப் போகிறது. அதன் பின்னர் நாங்கள் இங்கே கிளி கடிய வாரோம். மென்தோட் கொடிச்சியையுங் காண்பதரிதாகும். மேற் கொண்டு அவளை அச்சமின்றிக் காணும் வழி உம்மிடத் தேதான் உள்ளது.

குன்றக் குறவன் காதன் மடமகள்
மென்றேட் கொடிச்சியைப் பெறற்கரிது தில்ல
பைம்புறப் படுகிளி யோப்பலர்
புன்புல மயக்கத்து விளைந்தன தினையே 260

தலைவன்;

இதை நானும் அறிவேன். இநத இக்கட்டான நேரத்தில் எனக்கு வேண்டிய ஆலோசனையையும் ஆதரவையுந் தரவல்ல உன்னை விட வேறு யாருளர்.

தோழி:

தலைவனே பல காரியங்கள் பிறர் முயற்சியுடன் முடியுந் தன்மை கொண்டவை. மேலும் பல காரியங்கள் பிறர் முயற்சியால் முடியாதன. பல தனது அயரா முயற்சியால் முடிவன நீர் என்னிடம் வேட்பதோ பிறர் முயற்சியால் முடிவதொன்றன்று. ஆயினும் இது உனது முயற்சியால் இலகுவாக முடிவதொன்று. உனது பார்வையே அது என்ன என என்னைக் கேட்கிறது. தினை முதிர்ந்தால் அதை அறுத்துச் சேமித்தால்தான் அதன் பயன் சரிவர அமையும். அதுபோல, நீங்கள் விதைத்த வினையும் முதிர்ந்து விட்டது, அதை இனி அறுத்துத் திருமணக் களஞ்சியத்திற் சேர்க்க வேண்டும். நான் சொல்வது...

தலைவன்;

பாங்கியே. நன்கு புரிகிறது. நான் அவளை வரைய வேண்டும். அதுதானே!. எனக்கோ அதில் எந்த எண்ண வேறு பாடுமின்று, ஆயினும் அதற்கான பொருள் வேண்டுமே. பாங்கியே இப்போது நான் துணிந்து விட்டேன், விரைவில் வரைவதற்கு வேண்டிய பொருள் தேடச் சில காலம் பிரிந்து செல்ல எண்ணியுள்ளேன். அதுவரை அவளை ஆற்றி இருக்கும் பொறுப்பைத் தயவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

தோழி:

தலைமகனே! எங்கள் மலைநாட்டுத் தலைவன் தன் குல தெய்வத்தை வேண்டிப் பெற்ற அவனது குலக்கொடிதான் எங்கள் தலைவி. நீர் இப்போது சற்றுக் காலம் பிரிந்திருக்கப் போகின்றனை என்பதை அவள் அறியின் வளையணிந்த அவளின் செவ்வரி படர்ந்த கண்கள் கலங்குமென்பதை அறிவாயாக

குன்றக் குறவன் கடவுட் பேணி
யிரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமக
ளாயரி நெடுங்கண் கலிழச்
சேயதாற் றெய்யரி பிரியு நாடே 157

தோழி:

தலைவனே! தினை விதைத்த கானவர் மழை பொய்க்குபோது, கூடி நின்று ஆரவாரிப்பார்கள். அப்போது அவர்களுக்கு இரங்குவ போலக் கருக்கொண்ட மேகங்கள் சிறு துளியாகப் பல துளி பெய்யும். அவ்வாறு வரையில் திரண்ட நீர் அருவியாகப் பெருகி ஓடும். அதைக் கண்டாலும் அது உனது நாட்டு மலைகளிலிருந்து வருகின்ற காரணத்தால் உன் நினைவில் அவனை வருத்த அழுவாள். ஆதலால் பிரிந்து செல்வதைத் தவிர்ப்பாயாக.

குன்றக் குறவ னுர்ப்பி னெழிலி
நுண்ப லழிதுளி பொழியு நாட
நெடுவரைப் படப்பை நும்மூர்க்
கடுவர லருவி காணினு மழுமே 251

(பாங்கி சென்றதுந் தலைவன் தனித்திருந்து தன்னுள்)

குன்றக் குறவன் காதன் மடமகண்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த வீர்நறுங் கையண்
மலர்ந்த காந்த ணுறிக்
கலிழ்ந்த கண்ணளெம் மணங்கி யோளே 259

இவளோ இந்த நாட்டுத் தலைவனின் அன்புக்கு உரிய மகள். அழகிய மயிலின் சாயலள். மலைக்குரிய குல தெய்வத்தை வேங்கை மலர் கொண்டு வணங்குங் காந்தள் மலரொத்த கைகளை உடையவள். என்னை வருத்துந் தன்மை மிக்கவள். இவளை நான் பிரிந்தால் இவளும் வருந்துவாள்.

தோழி;

தலைவனே! எங்கள் தலைவி இந்த மலை நாட்டுத் தலைவனின் ஆசை மகள். மயிலின் சாயலொத்த கொடிச்சி. அவனை பெரும்மலைகள் செறிந்த நாடனுகிய நீ வரைந்தால் நாங்கள் கொடுத்து வைத்தவர்களாவோம். இன்றேல் என்னுவோம் என்று நாமே அறிகிலோம்.

குன்றக் குறவன் காதன் மடமக
ளணிமயி லன்ன வரைநடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையு மாயிற்
கொடுத்தனெ மாயினே நன்றே
யின்னு மானது நன்னுத றுயரே 258

தோழி;

தலைவியே, நான் இப்போது சொல்லப்போகும் சேதி உன்னை வருத்தலாம். ஆயினும் அதனாலாம் பின்விளைவு உனக்கு நலனையே தரவல்லது. உந்தன் வதுவை செய்ய உன து தலைவன் முனைந்து விட்டான். அதற்காக வேண்டிய பொருள்தேடச் சற்றுக் காலம் பிரிந்து செல்லவும் முற்பட்டுள்ளான். இதைச் சொன்னபோது, நான் எவ்வளவோ சொல்லித் தடுத்தேன். அவனை உன்னை வரைவதற்கு வேண்டிய பொருளின் அவசியத்தை உணர்த்தி அதுவரை ஆறியிருக்கும்படி கேட்டுக் கொண்டான். மலையிடுக்குகளில் உள்ள தேனிறால்களைப் பிழிந்தாற்தானே மலைத்தேன் கிடைக்கும். அதுபோல உந்தன் எதிர்காலத்திற்காக இந்தச் சிறிய பிரிவைத் தாங்கிக் கொள்க . வேண்டிய பொருள் கிடைக்காவிடில்;

குன்றக் குறவ னுர மறுத்தென
நறும்புகை சூழ்ந்த காநத னுறும்
வண்டிமிர் சுடர்நுதற் குறுமகள்
கொண்டனர் செல்வர்தங் குன்றுகெழு நாட்டே 254

மலை நாட்டுக் கானவர் சந்தன மரங்களை வெட்டி எரிப்பதால் நறு மணம் வீசும். அத்துடன் காந்தட் பூக்கள் மலர்ந்து அந்த நறுமணத்தை அதிகரிக்கச் செய்யும் மலைநாட்டுச் சிலம்பன் ஒளிரும் நுதலியுடைய உன்னைத் தனது நாட்டிற்கு உடன்போக்கில் செலுத்தும் என்பதை அறிவாயாக.

சில காலத்திற்குப் பின்னர் தலைவன் திரும்பி வந்ததையிட்டும் விரைவில் வரைவு வேட்டு வருவதாக அவன் கூறியதை தோழி தலைவியிட்ம் வந்து)

குன்றக் குறவன் கடவுட் பேணி
யிரந்தனன் பெற்ற வெல்வளைக் குறமகள்
புரையோன் வாழி தோழி வரைபெய
லரும்பனி யகலிய கூதிர்ப்
பெருந்தன வாடையின் முந்துவந் தனளே 252

தலைவியே! ஒரு நல்ல சேதி சொல்வேன் கேட்பாயாக. புல்லால் வேய்ந்த சிறு குடில்கள் பல நிறைந்த நாடன் உன் தலைவன். வெளியில் பல பயன்களை

கூடாதென்றுதானே கூரையிடுகிறார்கள். எது எதுவாக இருந்தால் நமக்கென்ன? இப்போது முக்கிய சேதி; அரிய பனிக்காலம் ஆரம்பிக்க முன்னதாகவே பொருள்வயிற் பிரிந்த உனதி தலைவன் திரும்பி வந்தி விடடார் என்பதுத

தலைமகள்:

தாயன்பு மிக்க என் பாங்கியே! கானவர்கள் புதியதாகத் தினைப் புனங்களை அமைக்கும் பொருட்டுச் சந்தனக் காடுகளை வெட்டி எரியூட்டுவர், அந்த மணத்துடன் மலைத்தேன் மணமுங் கலந்து நறுமணங் கமழும் நாடன் என்னை வரை வதற்காக வந்துள்ளார் என்பதைக் கேட்கும்போது என் களிப்பையும் என்னுலே கட்டுப்படுத்த இயவில்லை. இதைத் தாய் கேட்பின் அவள் பேருவகை அல்லவோ கொள்வாள்.

குன்றக் குறவன் சாந்த நறும்புகை
தேங்கமழ் சிலம்பின் வரையகங் கமழுங்
கானக நாடன் வரையின்
மன்றலு முடையன்கொ றேழி யாயே 253

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்கிறது
26 வது காட்சி முடிகிறது

காட்சி; இருபத்தேழு

காலம்; காலை. மாலை

களம்; சிறைப்புறம், தலைவியின் இல்லம்

பாத்திரர்; தலைவன், தலைவி, தோழி, பண்டிதர், பாமரன்

நிகழ்ச்சி;

தலைமகன் பிரிந்திருக்குந் தலைவனிடந் தோழி சென்று தலைவியின் தவிப்பைச் சொல்லிச் சேர்த்து வைத்தல், வரைவிற்குச் சம்மதிக்கச் செய்தல்.

பண்டிதர்;

பாலா! முந்தைய நாடகத்திற்குப் பெயர் சூட்டும் வைபவத்திற்கு முன்னுல், இவ்வைங்குறு நூறில் இடம்பெறும் பாலை, முல்லைப் பத்துக்கள் தவிர்ந்த ஏனைய மூன்று பத்துக்களிலும் அத் திணை நிலங்களில் வாழும் விலங்கினங்களின் பெயர் கொண்ட பத்துப் பத்துப் பாக்கள் பாடப்பட்டுள்ளன. அவ்வாறு மருதத்தில் கள்வன் (நண்டு) எருமை என்னும் இரண்டு உயிரினங்கள் பாடல் பெறுந் தகைத்தனவாகின்றன. நெய்தலில் வெள்ளாங் குருகு, சிறுவெண் காக்கை, வளை (சங்கு) என மூன்றுயிரினமுங் குறிஞ்சிப் பத்தில்; கேழல் (பன்றி), குரங்கு, கிள்ளை, மஞ்சை (மயில்) என்னும் நான்கு விலங்கினங்களும் கூறப்படுகின்றன. குறிஞ்சித் திணையிற்தான் நான்கு உயிரினங்கள் சிறப்புப் பெறுகின்றன, ஏன் அப்படி என்று கேட்பாய்போல இருக்கிறது அல்லவா? இவ்வாறு திணைச் சிறப்புகளைப் பாடும்போது, பாடப்படுந் திணைக்குரிய, உரி, கருப் பொருள்களை எடுத்தாண்டு அழகு படுத்துவது புலவர்தம் மரபு. இத்தகைய திணைக்கே உரித்தானவற்றின் செயல்களைப் பாக்களிற் பதிக்கும்போதுதான் திணை வளம் சிறப்புறும். ஏனெனில் இத் திணைகளை வேறுபடுத்திக் காட்டுவது அவ்வவற்றிற்கு உரிய இவ்விரு வகைப் பொருட்களுமேதான். சரி! பாலா. இப்போ பெயர் சூட்டும் வைபவத்தை ஆரம்பிப்போமா.

பாமரன்;

அதற்கென்ன, நாடகத்தைப் பார்த்த பிறகு, துயிலப் போனேன். ஆனல் நித்திரை வரவில்லை. காரணம்; தக்க

பெயர் ஒன்றுமே தலைக்குத் தட்டுப்படாததுதான். யோசித்து யோசித்த களைப்பில் அப்படியே தூங்கிப்போனேன். தூக்கத்தில் ஒரு கனவு கண்டேன், அதில், தாரமுங் குருவுந் தலைவிதிப்படி எனது தலைவிதிப்படி இந்த மனிதனைக் கட்டிக்கொண்டு அழ வேண்டி இருக்கிறது என என் மனைவி வசை பாடிக் கொண்டிருந்தாள். பெரிய பெரிய மனிதர்களின் சிக்கல்களுக்குக் கனவில் விடை கிடைத்து விடும் என்பார்களே. அவ்வழியில் என் பெயர் தேடும் இடரும் நீங்கி விட்டது. அதற்குப் பிறகுதான் தெய்வப் புணர்ச்சி பற்றிச் சிந்தனை எழுந்தது. ஆகவே அதற்குத் தெய்வப் புணர்ச்சி என்று சொல்லலாமே என்று.....

பண்டிதர்;

பொருத்தமாகத்தான் உள்ளது. சபையோர்க்கு ஆட்சேபனை இல்லாவிடில் அதையே வைத்து விடலாமே!

(சபையார் கைதட்டி ஆரவாரிக்கின்றனர்)

பாலா, நான் உன்னைப் பாமரன் என்று நினைத்தேன். ஆனால் அரங்கில் உன் ஆற்றலைக் கண்டு அவையோரே ஆரவாரிக்கின்றனரே. சரி காட்சியை ஆரம்பிக்க . நாம் அரங்கிலிருந்து அகல்வோம்.

(தலைவி வெகு நாட்களாகத் தன்னைக் காண
வாராதிருக்குந் தலைவனைப்பற்றிச் சிந்தித்துக்
கொண்டிருக்கும் வேளை பாங்கி வருகிறாள்)

தோழி;

தலைவியே, ஏனிந்த வாட்டம். உனக்கென்ன உற்றது/ அதைச் சொல்.

தலைவி;

பாங்கியே, சில காலமாகத் தலைவன் இங்கு வாரா தொழிந்தனன். என்ன உற்றதோ? காரணமறியேன். அதனற்றான்...

தோழி;

அப்படியா/ தலைவியே, உனது தந்தை இந்த மலைநாட்டிலே உயர்ந்த இடத்தை வகுப்பவன். பகைவர் அஞ்சும் பலசாலி. அதலால் அவருக்கு அஞ்சித்தானே அவர் இங்கு வாராதிருக்கிறாரோ

தலைவி;

சிறுதினை மேய்ந்த தறுகட் பன்றி
துறுக லடுக்கத்துத் துணையொடு வதியு

மிலங்கு மலைநாடன் வரூஉ
மருந்து மறியுங்கொ றேழியவன் விரிப்பே 262

அல்ல தோழி, குடலை பருவத் தினைகளை மேய்ந்த சுகத்தில் தனது குடும்பத்துடன் பாதுகாப்பான மலையடுக்கத்துத் துயிலும் வள நாட்டின் சிலம்பன், என்னை விட்டுப் பிரியான். ஆதலால், எவ்விதத் தடைகளையுந் தாண்டி என்னைக் காணும் வழி வகைகளை அறிகுவன். அதுவே அவனது விருப்பமுமாகும் என்பதை அறிகுக.

தோழி;

தலைவியே, இத்தனை அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்தி ரமான தலைவன்மேல் , ஏன் ஐயமுறுகின்றனை? அவன் இங்கு வருவதைத் தவிர்த்தான் என்ற பிரிவுத் துன்பம் எதற்காக ஏற்பட வேண்டும் என்றுதான் எண்ண வேண்டியுள்ளது. அதற்கான காரணம் என்னவென்பதை எனக்குச் சொல்ல முடியுமா?

தலைவி;

தோழியே! எங்களுக்கிடையில் உள்ள இணைப்பு எந்தமருக்கு இன்னும் தெரிய வந்தில என்பதை நான் நன்கு அறிவேன். ஆதலால் அவர் இங்கு வருவதற்கான தடை; எனது தந்தைக்கு அஞ்சியதாகக் கொள்ள முடியாது. அதற்கும் மேலாக வேறு ஏதோ காரணம் ஒன்றிருக்க வேண்டும். அது என்னவென்பதை அறிந்து சொல்லும் திறமை உனக்கே உண்டு. ஆதலால் அவரைச் சந்தித்து அந்தக் காரணத்தை அறிந்து சொல்லடி.

தோழி;

அப்படியும் சொல்கின்றனை. இப்படியும் ஐயப்படுகின்றனை. எப்படியோ அதை அவரிடமே கேட்டு அறிந்து வருவேன். அதுவரை ஆறி இரு.

(அங்கிருந்து தலைவனைச் சிறைப்புறத்தில் சந்தித்து)

தோழி :

தலைவனே! இங்கே நீ ஆறுதலாக மலைக் காற்றைச் சுவாசித்து ஆறுதலாக இருக்கின்றனை. ஆனால் அங்கே உனை நினைத்து உள்ளந் துடிக்கும் ஒருத்தி ஊண் உறக்கமின்றி உறழ்கிறுள் என்பதை மறந்துவிட்டாயோ! இளம் தினைப் பயிர்களை வயிறுர உண்ட பன்றி எவராலும் எட்டற்கரிய பாறை இடுக்கத்தே துயில் கொள்கின்ற மலை

நாடனே! எங்கள் தலைவியின் தந்தைக்கு அஞ்சியோ வரைவு வேட்காது வாராதிருக்கின்றனை.

மென்றினை மேய்ந்த தறுகட் பன்றி
வன்க லடுக்கத்துத் துஞ்சு நாட
னெந்தை யறித லஞ்சிக்கொ
லதுவே மன்ற வாராமையே 261

தலைமகன்;

என்ன சொல்கின்றனை? . நான் ஏன் அவளின் தந்தைக்கு அஞ்ச வேண்டும். அவர்தம் புதல்வியை ஏமாற்றினுல் அல்லவோ அவர் என்மேற் பகை கொள்வார். நான் ஏற்கனவே அவளை வரைந்து கொள்ள உறுதி கொண்டு விட்டேனே! . காரணம் அதுவெனக் கருதுவதும் என்னை ஒரு கோழை எனக் கொள்வதுஞ் சமனனனதே. பாங்கியே! தலைவியின் ஊருக்கு நான் அடிக்கடி வருவதால், ஊரில் அலர் எழுந்துள்ளது. அதனல் அவள் பாதிக்கப்படுவாள் எனவே தான் எனது சந்திப்பிற்கு அஞ்சுகிறேன்.

தோழி;

அப்படியானல் எத்தனை காலந்தான் இவ்வாறு இருக்கப் போகின்றனை. இளம்பிறையொத்த கொம்புகளையுடைய ஆண் பன்றி, கழங்காயை நிகர்க்கும் பெண பன்றியைப் புணரும் மலைச்சாரற் சிலம்பனே! உனை உயிரிக்குயிராய் நேசித்தவளின் தோழ்கள் நெகிழ்ந்தன. கண்கள் பசலை பூத்தன. இவ்வாறு அவள் நலமிழந்ததைக் கண்டிலையோ. ஆதலால் அவளை நீ வரைந்துகொள். இயலாவிடத்து உனது இடத்திற்கு அழைத்துச் செல். இந்தத் துயரத்தை மேலும் தாங்கக் கூடியவள அல்ல. அவள் ஒரு மெல்லிய உள்ளம் கொண்ட கொடிச்சி!

இளம்பிறை யன்ன கோட்ட கேழல்
களங்கனி யன்ன பெண்பாற் புணரு
மயங்கிகழ் சிலம்ப கண்டிரும்
பயந்தன மாதோநீ நயந்தோள் கண்ணே 264

தலைவன்;

பாங்கியே! ஐயமேதும் வேண்டாம். மெய்யான காதலிது! அதை எந்தவொரு மனித சக்தியாலும் பிரிக்க முடியாது. இந்த அத்திவாரத்திற்தான் அவளை என் நெஞ்சில் நிலை

நிறுத்தி உள்ளேன். இதனை அவளிடத்திற் சொல்லுக. அதுமட்டல்ல, வரைதற்கான ஏற்பாடுகளுடனேதான் நான் அவளைச் சந்திப்பேன் எனும் உறுதியுரையையும் உரைப்பாயாக.

(இந்தச் சேதியை வந்து தலைவியிடம் தோழி கூறக் கேட்ட)

தலைவி; தோழி. முற்றிய தினைக் கதிர்கள் பொன்னைப்போல மிளிரும். அதைக் கட்டளைக் கல்போன்ற பன்றிகள் உண்ணும். அத்தகையது நமது தலைவனின் மலை. பிரிந்திருந்த அவர் வந்துவிட்டார், அவர் வராது இருந்த போது தொலைந்த எனது நலன்களுந் திரும்பி வந்தெய்தின.

நன்பொ னன்ன புளிறுஞீ ரேனல்
கட்டளை யன்ன கேழன் மாந்துங்
குன்றுகெழு நாடன் முனும்
வந்தனன் வந்தன்று தோழியென் னலனே 263

(காலங்கள் கடக்கின்றன. மனையறம் சிறக்கின்றது. மக்கட் பூக்கள் மலர்ந்து நல்லறத்திற்கு நயந் தருகின்றன. ஆனால் எவளோ ஒரு கொடிச்சி தலைவிக்குக் கொடியவளானாள். அதன் காரணமாகத் தலைவனுங் கொடியவனையினன். இலலத்திற்கு வராமல் அந்தக கொடியவள மடியில்.. இதை அறிந்த தலைமகள் தலைமகன்மேல் வெறுப்புற்றாள். இந்த இடைவெளியைப் போக்க தோழி தலைவனிடம் வந்து)

தோழி;

சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தலொடு
குறுங்கை யிரும்புலி பொருஉ நாட
நனிநா ணுடைமைய மன்ற
பனிப்பயந் தனநீ நயந்தோள் கண்ணே 266

தலைவனே! உனது நாட்டின் சின்னக் கண்களையுடைய முரட்டுப் பன்றி கோபங் கொண்டு சிறிய வலிய முன்னங் கால்களைக் கொண்ட புலியுடன் பொருதும் பொருப்பனே! அன்று அழகிய கண்ணெனப் புகழ்ந்த உன் தலைவியின் கண்கள் இன்று நீர் வடிப்பதை அறியாதிருப்பதென்ன? தலைவனே! சிறிய கண்களையுடைய பன்றிஎருத்தல் கற்குன்றுகளிடையே வில்லும் அம்புமேந்திக் காவல் நிற்கும் கானவர்களை ஏமாற்றி மலை நெல்லைக் கவர்ந்து

உண்ணும் மலை நாடனே! வண்டுகள் மொய்க்கும் மலர்க் கூந்தல் அழகு செய்யுந் தலைவிக்குப் பல பொய்களை நீ பகர்ந்தாலும், உன்மேல் உள்ள அளவற்ற நம்பிக் கையால் அவள் உண்மையெனக் கொள்வாள்.

சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்த
றுறுக லடுக்கத்து வில்லோர் மாற்றி
யைவனங் கவருங் குன்ற நாடன்
வண்டுபடு கூந்தலிப் பேணிப்
பண்பில சொல்லிந் தேறுதல் செத்தே 267

தாஅ யிழந்த தழுவரிக் குருளையொடு
வளமலைச் சிறுதினை யுணீஇக் கானவர்
வரையோங் குயர்சிமைக் கேழ லுறங்கு
நன்மலை நாடன் பிரித
லென்பயக் கும்மோ நம்விட்டுத் 268

தாயை இழந்த குட்டிகளைக் கூட்டிக் கொண்டு, காவல் காக்கும் கானவர்களின் கண்களுக்குத் தப்பி அலைந்து தினைக் கதிர்களை உண்பித்து உயர்ந்த மலைகளில் துயிலும் ஆண் பன்றிகள் வாழும் நல்ல மலை நாடனே! தலைவியைப் பிரிந்து நீ வாழ்வதால் என்ன பயன் பெறுவாயோ?

தலைவன்;

பாங்கியே என்னை அவள் மன்னிப்பாளா என்ற ஐயத்தால் இவ்வண் இவ்வாறு இருக்கின்றேனே தவிர, குடும்பத் தின்மேலோ அவளபாலொ எனக்கு எந்தவொரு வெறுப்பு மின்று. ஆகவே நான் என் பாணனை அனுப்பி அவளிடம் வாயில் வேண்டுவேன்.

கேழ லுழுதெனக் கிளர்ந்த வெருமை
வீனந்த செறுவிற் றேன்று நாடன்
வாரா தவணுறை நீடி னோர்வின்
யிணையி ரோதி நீயழத்
துணைநனி யிழக்குவென் மடமை யானே 269

பன்றிகள் உழுத நிலத்தில் பயிராகி வளர்ந்த கொறுக்கைக் களை, மலைநெல்லென மயங்கும் மலை நாடன் வாராது நீடிப் பானையாலை, இணையற்ற நீண்ட தோகையுடைய, பகுத்தறி திறனற்ற தலைவி அழுமெல் வாழ்கைத் துணையையே இழக்க நேரிடும். விரைவில் அவளில்லம் வந்து பிணக்ககற்றி இணைங்கி வாழ்க.

(இதைக் கேட்ட தலைமகன் தலைவியிடம் தனது பாணனை அனுப்பி வாயில் வேண்டுகிறான். தலைவியிடம் பாணன் வந்து)

பாணன்;

செல்வியே! தவறுவது மனித குலத்திற்கான பொதுப் பண்பு. அதே மனித குலத்திற்கு ஒரு சிறப்பான பண்பு முண்டு . அந்த மனிதப் பண்பே மனித குலத்தை மற்ற உயிர்களிடம் இருந்து பிரிக்கிறதம்மா! அதுதான்; தவறை மன்னிக்குந் தன்மை. ஆகவே உந்தன் தலைவனை மன்னித்து ஏற்றுக்கொள். இன்னுமொன்றைச் சொல்கிறேன் கேட்குதி. மன்னிக்க வேண்டுமென்ற மனப் பாங்கு வந்து விட்டால், மன்னிக்கப்படுபவரின் தவ றையோ அதற்கான காரண காரியங்களையோ பொருட்டாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அத்தகைய அருங் குணம் உன்னிடம் உளது. மேலும் தாயன்புங் கொண்டவள்..

தலைமகள்;

தலைவனுக்காக வாயில் வந்தவர்களே ! போதும் போதும் புத்தி புகலல். புலியாற் கொல்லப்பட்ட தாய்ப்ப் பன்றி இறந் தாலும், அதன் குட்டிகளை வெண் கொம்புடைய ஆண் பன்றி பேணிக் காக்கும் பெருமை கொண்ட மலைநாட்டுச் சிலம்பன் என்னை மட்டுமல்ல நாங்கள் பொன்போற் காக்கும் புதல்வனையும் அல்லவோ மறந்தனன். இதையுங் கூடப் பொறுக்க வேண்டுமா,,,,,,,,,,,,,

புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பிற் கேழல் புரக்கும்
குன்றுகெழு நாடன் மறந்தனன்
பொன்போற் புதல்வனெனென் னீத்தோனே 265

(நாளடைவிற் தலைவன் மனம் வருந்தியும் திரிருதியும் தலைவியுடன் வந்து சேர்வதற்கான அறிகுறிகள் தோன்ற மனம் மகிழ்ந்த தோழி தலைமகளிடம்)

கிழங்ககழ் கேழ லுழுத சிலம்பிற்
றலைவரை கானவர் கொய்தனர் பெயரும்
புல்லென் குன்றத்துப் புலம்புகொ ணெடுவரை
காணினுங் கலிழுநோய் செத்துத்
தாம்வந் தனர்நங் காத லோயே 270

தலைவியே . கேட்குக, ஒரு சேதி! கிழங்குகளை அகழ்ந்து உண்ணுவதற்காகப் பன்றிகள் உழுத நிலத்தில் தானுகவே விளைந்த மலை நெற்களை அரிந்து செல்லுங் கானவர் வாழ் மலைநாட்டின் சிலம்பன் உன்னை வருத்தும் பிரிவுத் துன்பத்தைப் போக்குதற்காக வந்துள்ளான்.

(இதைக் கேட்ட தலைவி தனது மகனை வாரி அணைத்து முத்தமிடக்

காட்சி கரைகிறது

முன்னெழினி மூடுகிறது
27 வது காட்சி முடிகிறது

காட்சி; இருபத்தெட்டு

களம்; தலைவியின் இல்லம். தினைப்புனம். சிறைப்புறம்

காலம்; மாலை

பாத்திரர்; தோழி, செவிலி, தலைமகன், தலைமகள் பண்டிதர்,

நிகழ்ச்சி;

குறியிடை வராததால் தாங்கள் ஏமாந்த தலைவி தலைவனுக்கு அல்லகுறிபற்றி உணர்த்தல். அது தனது தவறில்லை என்று அவன் கூறல், பாங்கி வரைவு வேட்டல். வரைதற் பொருட்டு பொருள் தேடித் தலைவன் பிரிதல். அதனற் தலைவி துயறுறல். திரும்பி வந்த அவன் தமர் வரைவுக்கு இணங்காது விட்டால் என அஞ்சுதல். தோழி செவிலியிடம் உண்மை உரைத்து வதுவைக்கு ஆவன செய்தல்.

பண்டிதர்;

வணக்கம் அவையோரே. இன்று குறிஞ்சிப் பத்தின் எட்டாவது பத்தாகிய குரக்குப் பத்தில் உள்ள பத்துப் பாடல்களைக் கொண்டு புனையப்பட்ட ஒரு அகப்பொருட் காட்சியை இங்கு அளிக்க இருக்கிறோம். வலிமுகம், கடுவன், வானரம், அரி, மந்தி, பிலவங்கம், கோகிலம், கோடரம், யூகம், மார்க்கடம், நாகம், கவி, காருகம் முசு என்பன குரங்கின் மறு பெயர்களாகும் . போலியாகக் குரக்கு எனவும் வழங்குவர். இந்தக் குரங்கு எனும் விலங்கினத்தில் நிமிர்ந்து நடக்க முடியாத சிறு இனத்தில் 125 வகையான குரங்குகள் இருப்பதாகவும், அதைவிடச் சிம்பன்சி, கொரில்லா, என 19 வகையான நிமிர்நடைக் குரங்குகள் இருப்பதாகவும் உயிரியலாளர் உரைப்பர். மலை நாடுகளில் அதிகமாகக் காணப்படும் குரங்குகள் முல்லையிலும் மருதத்திலும் இடைக்கிடை காணப்படும். இதன் இயல்புகளை அடியொற்றி இந்தப் பத்தில் கபிலர் தன் கவி வளத்தைப் புகுத்தியுள்ளார். கவி பற்றிய கவி என்று கூட இபபத்தைச் சொல்லலாம் போலவுந் தோன்றுகிறது.

பாமரன்;

ஆமாம் அய்யா. குரங்குப் பிடி, குரங்கு மனம், மழைக்கால இருட்டிலும் கொப்பிழக்கப் பாயத குரங்கு குரங்குச் சேட்டை என்பதெல்லாம் குரங்கைப்பற்றி மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைளை எடுத்துக் காட்டுகின்றன. ஆனல் முன்

பத்திற் சொல்லப்பட்ட சேதிதான் எனது மூளையைக் குழப்புகின்றது. அந்த நாடகத்தைப் பார்த்த பொழுது இதன் உட் பொருள் என்ன என்பது ஒரே மங்க லாகத்தான் தோன்றுகிறது. பன்றி உழுத நிலம்போல ஆங்கொரு சால் ஈங்கொரு சாலாகவல்லவோ நிகழ்ச்சி கலைந்து காட்சி அளிக்கின்றது . அதனல் என்ன பெயர் சூட்டுவதென்று மனம் குரங்குபோலப் பாய்கிறது. அதே வேளை இதற்கொரு தலைப்பைத் தேட வேண்டுமே என்று மனம் குரங்குப் பிடி பிடிக்கிறது. கொப்பிழக்கப் பாயாமல இதற்கொரு தலைப்புத் தேட வேண்டுமென்று மனம் குறியோடு நிற்கிறதால என் செயல் குரங்குச் சேட்டை யாய்த் தோன்றுகிறது.

பண்டிதர்;

அப்படியானல் இன்றையத் தலைப்பைத் தெரியும் பொறுப்பைச் சபையாரிடமே விட்டு விடலாமா?

பாமரன்;

என்னய்யா.... இடையிலே காலை வாரி விடுகிறீர்களே! பாமரன் என்ற நினைப்போ! ங்...ங்....ங்.... தளர்ந்த தலைமகன் கிழர்ந்து நின்ருன். இது எப்படி அய்யா/

பண்டிதர்;

என்ன இதன் பொருள்? ஓகோ... முதலில் மனைவி மக்களைத் தவிக்க விட்டவன் பின்பு.....

பாமரன்: அதுவேதான்... எப்படி என் பெயர் சூட்டல்?

(சபையோர் கரந் தட்டி, பாமரன் வாழ்க என ஒலிக்கின்றனர்.
திரைஅகலக் காட்சி தோன்றுகிறது
தலைவன் தலைவியைக் காண்பதற்காகச்
சிறப்புறத்தே நிற்கிருன். அங்கே பாங்கியுடன் வருந் தலைவி
அவனைக் காணுதவள் போல அவளிடம்)

தலைமகள்;

கருவிரன் மந்திக கல்லா வன்பற
ழுருவரைத் ரீந்தே னெடுப்பி யயல
துருகெழு நெடிஞ்சினைப் பாயுநாட
னிரவின் வருத லறியான்
வரும்வரு மென்ப டோழி யாயே 272

பாங்கியே கேட்குக! உறுதியான விரல்களால் குரங்குக் குட்டி மலைக் கற்பாறையிடுக்கில் உள்ள தேன் இருல்களை

எடுக்கத் தேனீக்கள் கலைந்து துன்புறுத்தும். அதைத்த தாங்கொணாது உயர்ந்த மரக் கிளைகளிற் தாவும் மலை நாடன், உரிய இடத்திற்கு வாராது நிற்ப, நாம் அல்ல குறிப்பட்டு அகலச் செய்ததை அறியாயோ?

(தலைவன் பாங்கியிடஞ் சொல்வதுபோலத் தலைவிக்குக் கேட்கத் தக்கதாக)

பாங்கியே நானிங்கு வந்துளேன் என்பதைத் தெரிவிக்கச் சில அடையாளங்களை செய்வேன் என்றதும் அவை நீராலொலிப்பெழுப்பல், புள்ளெழுப்பல் என்பன தற்செயலாகத் தாமாகவே நடந்தால் அதைக் குறித்து நீங்கள் வந்து ஏமாறுவது என் குற்றமன்று என்பதை உணராது என் மீது கோபங் கொள்வது தக்கதோ!

தோழி;

இத்தகைய துயரந் தரும் இக்கட்டான நிலை மேலுந் தொடர்வது உகந்ததல்ல. மலைப் பாறைகளில் வளர்ந்துள்ள இத்தி மரங்களைத் தழுவி ஏறி அவற்றின் மேற் படர்ந்த மலை மல்லிகையின் இளந் தளிர்களை உண்ணும் மந்தி தன் கடுவனோடு துள்ளிப் பாய்ந்து விளையாடும் வனப்புமிக்க நாடனே! நீ மேற்கொண்டு இவ்விடம் வராது வருவாயேல், எங்கள் ஊரில் மட்டுமல்ல அதன் சுற்றுப் புறங்களிலும் அலராகி விடும் என்பதை அறிவாயாக. ஆதலால் மேலும் காலந் தாமதிக்காமல் வரைதற்கான ஒழுங்குகளைச் செய்வதே நன்மை தரும்

கல்லிவ ரிற்றி புல்லுவன வேறிக்
குளவி மேய்ந்த மந்தி துணையொடு
வரைமிசை யுகளு நாட நீவரிற்
கல்லகத் ததுவெம் மூரே
யம்பற் சேரி யலராங் கட்டே 279

தலைமகன்;

பாங்கியே! நீ சொலவது சாலவும் ஏற்புடைத்ததே. ஆயினும் அதற்குரிய பொருண்மைப் பலமின்றி இருக்கிறேன். அதைத் தேடிவதற்காக சற்றிக் காலம் பிரிந்திருத்தலே தக்கதாம். ஆகவே முதலில் பொருள் தேடும் வழி சென்று விரைவில் மீண்டு வந்து வரைவேன்.

தோழி; தலைவனே! அசோகின் செம்பவளத் தளிரை சிறு தலை மந்தி பறித்துண்ணும் மலை நாடனே! பிரிந்து செல்லப் போகிறேன்

என்ற உனது சேதியைக் கேட்டால் தலைவி அழும் என்பதை உணர்க

அந்தச் செயலைத் துப்புற வொண்டளிர்
புன்றலை மந்தி வன்பற ழாரு
நன்மலை நாட நீசெலி
னின்னயந் துறைவி யென்னினுங் கலிழ்மே 273

(காட்சி கரைகிறது வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் வராமை கண்ட தலைவி)

தலைமகள்:

மந்திக் கணவன் கல்லாக் கடுவ
னெண்கேழ் வயப்புலி குழுமலின் விரைந்து
குன்றுய ரடுக்கங் கொள்ளு நாடன்
சென்றனன் வாழி தோழியென்
மென்றோட் கவினும் பாயலுங் கொண்டே 274

பாங்கியே பிரிந்து சென்ற தலைவனை நினைத்து இரங்கி அழுங்கும் எனக்கு ஆறுதல் சொல்கின்றனை. தான் ஒரு குரங்குக்குக் கணவன் என்பதைவிட வேறு எதனையும் படித்து அறியாத கடுவன் விரிந்த நெற்றியுடைய புலி அப்பக்கம் வரின் தன் பெண் துணையுடன் பாய்ந்து உயர மரங்களிற் தாவுகின்ற மலைநாடன் இவ்வண் பிரிந்து சென்றதால் என் நலன் கெட்டது. தோளும் மெலிந்தது. அத்துடன் எனது உறக்கத்தையும் உடன் கொண்டு சென்றதை நீ அறிகிலையோ/

தலைமகள்;

சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குறங்கின் வன்பறழ் பாய்ந்தென விலஞ்சி
மீனெறி தூண்டிலி னிவக்கு நாட
னுற்றோர் மறவா நோய்தந்து
கண்டோர் தண்டா நலங்கொண் டனளே 278

பாங்கியே! மலைச் சாரலில் கணுக்களை விட்டு வளரிம் மூங்கில்களில் குரங்குக் குட்டி தாவிப் பாயும்போது, அது மீன் பிடித்தற்கு எறியுந் தூண்டிற் கலைபோலத் தோன்றும் வரைநாடன் எனக்குப் பசலை படரும் நோயைத் தந்து விட்டு அவன்மட்டும் காண்போரால் கவரப்படத்தக்க நலம் எய்தியுள்ளானே அது எவ்வண்?

(தலைவன் ஊர் திரும்பியதை அறிந்த தோழி தலைவியின் துயரத்தை எடுத்துக்கூறி வதுவை செய்ய வலியுறுத்தப் போவவதாகத் தலைவியிடஞ் சூளுரைத்துத் தலைவனிடம் வருகிறாள்)

தோழி;

குறவரது முற்றங்களில் மிருகங்கள் தமது உடலின் சொறியுந் தினவுகளை அகற்றுவதற்காக நடப்பட்ட உறுகல்லை விட வேறெதனையுந் தழுவி அறியாத மந்தி தனது கடுவனோடு துள்ளி மகிழும் மலைநாடனே! நான் சொல்வதைக் கேட்குதி! நீரோடையில் வளர்ந்த குவளை மலரன்ன இவளது கண்கள் கலங்குவதற்கும் பசலை பூப்பதற்குங் காரணமாக உனது பிரிவு அமையும் என்பதை மனதில் உள்ளுவாயாக.

குறவர் முன்றின் மாதண்டு துறுகற்
கல்லா மந்தி கடுவனோ டுகளுங்
குன்ற நாடநின் மொழிவ லென்றும்
பயப்ப நீத்த லென்னிவள்
கயத்துவளர் குவளையி னமர்ந்த கண்ணே 277

தலைவனே! குரங்குக் கூட்டத்தின் தலைவனுக விளங்கும் மென்மையான பிடரி மயிரழகுக் கடுவன் பிரம்பினலைய சிறு கோலைக் கொண்டு பாறையில் பெய்யும் மழைநீர்க் குமிழிகளை உடைக்கும் வரை நாடனே! உனை விரும்பிய தலைவி நீ அவளுக்கு அருளில் தன் நலத்தை இழந்து வாடுவளோ!

குரங்கின் தலைவன் குருமயிர்க் கடுவன்
குரலஞ் சிறுகோல் கொண்டு வியலறை
மாரி மொக்குள் புடைக்கு நாட
யாநின் னயந்தன மெனினுமெம்
மாய்நலம் வாடுமோ வருளுதி யெனினே 275

தலைமகன்:

பாங்கியே, அஞ்சற்க, வரைதற்கான வேண்டிய பொருள் உண்டு, அவளை என் வாழ்க்கைத் துணைவி என்ற இறை நியமத்தின்படி இப்போதே திருமணஞ் செய்ய வேண்டிய நெஞ்சுறுதியும் நிறைய உண்டு. ஆனல் தலைவியின் தமர் என்ன சொல்வரோ வதுவைத் தடுப்பரோ என்ற ஐயமும்

நிறைந்தவனுகவும் உள்ளேன். அவ்வாறு விரும்பத் தகாததெதும் நடந்தால் அவள் எவ்வாறு உயிர் வாழ்வாள். அதை நான் எப்படி முகங்கொள்வேன் என்றுதான் அஞ்சுகிறேன்;

தோழி;

மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
றண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்க ளிமழை புடைக்கு நாட
நயவா யாயினும் வரைந்ததனை சென்மோ
கன்முகை வேங்கை மலரு
நன்மனை நாடன் பெண்டெனப் படுத்தே 276

காதலியுடன் தளிரை உண்ணும் ஆண் குரங்கு மணங் கமழும் கொடியைப் பிய்த்தெடுத்து பெய்யும் மழைத் தாரையை அடுத்து மகிழும் மலை நாடனே! எங்கள் மீது உனக்கு அன்பில்லாதிருப்பினும், தலைவியை வதுவை செய்து செல்க. அப்போதாவது கல்லெனினும், அதில் எழுந்த வேங்கை மரம் பூத்துக் குலுங்கின்ற நாட்டுச் சிலம்பனின் பெண்டு இவள் என்று சொல்லத்தகும் பேறடைவாள். நீ இப்போது எண்ணல்போல தமருன்னை வெறுக்கமாட்டார்கள், அதற்கான விருப்பத்தை அவர் களிடை நான் விதைப்பேன். நல்ல வினாவை அறுப்பேன்

தலைமகன்;

கருவிரன் மந்திக் கல்லா வன்பார்ப்
பிருவெதி ரீர்ங்கழை யேறிச் சிறிகோன்
மதிபுடைப் பதுபோற் றென்று நாட
வரைந்தனை நீயெனக் கேட்டியா
னுரைத்தனெ னல்லெனே வ.:தென் யாய்க்கே 280

பாங்கியே! உலக அனுபவம் அற்ற குரங்குக் குறளை, மூங்கிலில் ஏறி கையில் அகப்பட்ட சிறு கோலால் சந்திரனை உடைக்கத் தனது கரிய விரல்களாற் பற்றி அடிக்கும் குன்றுகளின் சிலம்பனே! உனது தலைவியை முறைப்படி வரிந்துகொண்டனையா என வினவில் அவளின் தமருக்கு அவ்வாறே ஆனதென அறைகுக.

(தலைவனிடமிருந்து நீங்கிய தோழி செவிலியிடம் வந்து அறத்தொடு நிற்கிறாள்)

தோழி;

அன்னுய்! செழித்து வளர்ந்த அவரைச் செடியை மனம் நிறைய அருந்தித் தமது வயிற்றை வணிகர்களின் பைக ளைப்போல உப்ப வைத்துள்ள குரங்குகள் வாழும் மலைநாடன் மனம் வைத்தால், கொண்டான் குணமறிந்து ஒழுகுஞ் சாதுவான வேறு பெண்களைப் பெறும் தகுதி உடையான். அத்தகையவன் வரைவு வேட்டபோது தமரும் நீங்களும் அதை விரும்பாது ஒதுக்கி விட்டீர்கள், ஆனால் இந்தத் தொடர்பு தொன்று தொட்டுத் தொடருந் தொந்த மாதலின் அருள் செய்குக

அவரை யருந்த மந்தி பகர்வர்
பக்கிற் றேன்று நாடன் வேண்டிற்
பசுப்போற் பெண்டிரும் பெறுகுவன்
றெல்கே ளாகலி னல்குமா லிவட்கே 271

செவிலி;

பாங்கியே! நீ இப்போது எனக்கு உரைத்த உண்மையை அறியா விட்டாலும, இந்த உண்மைக்குள் அடங்கும் உட் பொருள் ஒன்று உங்களிடை உலாவியதை நான் ஏற்கனவே ஊகித்தறிந்தேன். என் மகள் ஏற்றதையே செய்வாள். ஏற்றதையே தேர்ந்தெடுப்பாள் என்ற உறுதி என் மனதில் உண்டு. எனவே உங்கள் தலைவனே விரைவில் வரைவு வேண்டி வரும்படி சொல்க.மேலும் தாமதியாதே ....

(தோழி செவிலியைப் பணிகிறுள் காட்சி கரைகிறது

முன்னெழினி மூடுகிறது

28ம் காட்சி நிறைவுறுகிறது

காட்சி; இருபத்தொன்பது.

களம்; சிறைப்புறம், தலைவியின் இல்லம்

.காலம்; மாலை

பாத்திரர்; தோழி, தலைவன், தலைவி, பண்டிதர், பாமரன்

நிகழ்ச்சி;

தலைவன் தினைப் புனத்தில் தலைவியைச் சந்திக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த கிளியை வாழ்த்துதல். பாங்கி ஊர லருக்கு அஞ்சி பகற்குறி மறுத்தல் யானைகளின் நடமாட்டம் உணர்த்தி இரவுக் குறி மறுத்தல். வரைவு வேட்டல்.

பண்டிதர்;

எனது அன்பான வணக்கங்கள், அவையோரே இன்றைய நாடகத்தை துவக்கும் முன்னர் ஒரு சில காரியங்களை உங்களுடன் பகிர்ந்துகொள வேண்டியுள்ளது. ஐயம் பொல்லாத நோய். ஆகவே, நம் மனதில் அவ்வப்போது ஏற்படும் ஐயங்களை அவ்வப்போதே அகற்ரு விடின் அது நமது அகத்தையே அல்லாடச் செய்துவிடும். ஐங்குறு நூற்றுப் பாக்களைக் காட்சிப்படுத்தும்போது, குண்டுச் சட்டிக்குள் குதிரைச் சவாரியை நடத்துவதுபோல எல்லா நாடகங்களிலும் ஏறக் குறைய ஒரே கருத்தும் அதன் பகிர்வான நிகழ்வுகளும் மீண்டும் மீண்டும் தோற்றத் தருகின்றனவே. இதனல் அலுப்புத் தட்டலாம் என்று இந்த அரங்கை நடத்துநர்க்குத் தோன்றவில்லையா? என்பது உங்கள் மனதில் உள்ள ஐயைப்பாட்டின் விளு வடிவம் அல்லவா?.

அதற்கு இப்போது நான் சொல்லப் போகின்ற காரணம், உங்கள் மனதிற்கு ஏற்றதாயின் ஏற்றுக் கொள்ளுங்கள், இன்றேல் மாற்றுக் கருத்தொன்றை உங்களுக்குள்ளே மலர்த்திக் கொள்ளுங்கள். எங்களுக்குத் தெரியத் தாருங்கள் . இது சுவைஞர்களின் சுவைப்புச் சுதந்திரம்.

ஐங்குறு நூறு இலக்கியம், ஐந்திணை நிலங்களைப்பற்றிய ஐந்து நூறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப்பாடல் வடிவம் கொண்டது. அவற்றி டையே உள்ள தொடர்பு திணைசார்ந்த ஒரு பொருளின் கருத்துடைய சொல்லோ சொற்றொடரோதான்! அவ்வாறு

தொடர்ந்து வரும் அகப்பொருள் கொண்டே ஒவ்வொரு பத்துப் பாக்களும் அழைக்கப்படிகின்றன. ஆனல் இவைகள் சுட்டும் அகப் பொருள் நிகழ்வுகள் ஒரு தொடர்ச்சியான இணைப்புள்ளவை அல்ல. ஆனல், பலர் பலரை முன்னிலைப்படுத்திப் பலப்பல தருணங்களில் கூறுந் தோரணையில் அமைந்துள்ளன. ஆதலால் இவற்றைக் கொண்டு நாடகம் புனையும்போது நாடகத்தின் கருப்பொருளாக வரும் அகப்பொருள் சார்ந்த வாழவியல் கூறுகளைக் காட்சிப்படுத்துவதற்கேற்ப இந்தப் பாக்களைப் புகுத்திப் புனைய வேண்டியுள்ளது. அவ்வாறு செயற் படுத்தும்போது பாக்களின் சொல்லும் பொருளும் தவருது அதைப் புகலும் பாத்திரர்களை உருவாக்க வேண்டி அதற்காக அற்பமான நெகிழ்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததே.

அடுத்தது; ஒவ்வொரு பாடல்களிலும் முறையே திணைக் குரிய நில வளம், மக்களின் அகப்பொருள் வாழ்க்கை நிலை, இரண்டும் இடம் பெறுகின்றன. அதிலும் பார்க்க அகப்பொருள் கரித்தைச் சிறப்பிக்கும் நிலையில் திணை வளம் பொருந்தச் சொல்லப்பட்டுள்ளது. இங்கேதான், கவிவளம் மிஞ்சி நிற்கிறது. அவற்றின் மூலம் குறிப்பால் உணர்த்தப்படும் இறைச்சிப் பொருள் உள்ளுறை உவமம், மறைத்திடச் சொல்லும் சிலேடை வழக்கு என்பன சொல்ல எடுத்துக்கொண்ட கருத்தைச் சுவைபடச் சொல்ல முடிந்துளது. அதை உய்த்துணர்வதே இலக்கிய உணர்வின் உன்னத உள நிலையாக்கம் எனலாம். எனவே அன்பர்களே ஒவ்வோர் பாடலையும் தனிப் பாடலெனக் கொண்டு சுவையுங்கள். அதுபோலவே ஒவ்வொரு காட்சியையுந் தனிப்பட்ட காட்சிகள் என நுகருங்கள், இந்த நிலையில் இவை சொன்னதைச் சொல்லுங் குற்ற மாகாதென்பது எனது எண்ணம். பாலா இது உனக்குரிய தருணம் பெயர் சூட்டல் வைபவத்தைத் தொடங்குக.

பாமரன்;

வணக்கம் அய்யா ; வணக்கம் அவையோரே. அதாவது நேற்றை நாடகத்தைப் பார்த்தபோது, அதில் எங்குமே குரங்குகளின் சேட்டைகள்தான் தென்பட்டன. ஆதலால் அதைக் குரங்குச் சேட்டை என்று சொல்லவே மாட்டேன்.

அதனிலும் பார்க்கத் தலைவன் தந்த தயை என உரைத்தால் கை தட்டல் கேட்குமா? அல்லது இஞ்சி கடித்த குரங்குபொல .....

(அவையில் கரந்தட்டி ஆரவாரிக்கும் ஒலி மிஞ்சுகிறது, முன்னெழினி அகல முதலாவது காட்சி ஆரம்பமாகிறது தினைப் புனத்திற் அருகில் தலைவியைக் காண வந்த தலைவன் ஒரு அசோக மரத்தின் அடியில் நின்று வானத்தே பறக்குங் கிளிக் கூட்டதை நோக்கி;)

தலைமகன்:

மனமே! அழகும் மென்மையும் உடைய கொடிச்சியைக் காணுந் தருணங்களுக்குக் காரணமாக இருந்தது கிளி கள்தாம். அவற்றைக் கடியததானே அவள இங்கே வர லாயினள். இத்தனை நன்மை செய்த கிளிக்கு என்ன கைமாறு செய்வோம்.

நன்றே செய்தவுதவி நன்றுதெரிந்
தியாமெவன் செய்குவ நெஞ்சே காமர்
மெல்லியற் கொடிச்சி காப்பக்
பல்குர லேனற் பாத்தருங் கிளியே 288

கரிய கூந்தலுடன் அழகிய எனது உள்ளங் கவர்நதவளைக் காண்பதற்கு வசதியாக தினைப் புனக் காவற் காலம் மீண்டும் ஆரம்பமாகி விட்டது. அதற்குக் காரணம் தினைக் கதிருண்ணும் கிளிகளே. அவையில்லாவிடில் அவற்றைக் கடியிம் தினைப் புனக் காவல் எதற்கு?. ஆகவே எண்ணுத் தொகையிற் பெருந் தொகை இலக்கங்களைக் கொண்ட வெள்ளம் எனும் பெரெண் அளவிற்கும் மெலான ஊழி காலம் அந்தக் கிளி வாழ்க என வாழ்த்தா நிற்பேன்.

வெள்ள வரம்பி னூழி பொதியுங்
கிள்கா வாழிய பலவே யொள்ளிழை
யிரும்பல் கூந்தற் கொடிச்சி
பெருந்தோட் காவல் காட்டி யவ்வே 281

(தலைவியை எதிர் பார்த்துக் காத்து நிற்கும் தலைவன் அவளில்லாமற் பாங்கி தனித்து அங்கு வருவதைக் கண்டு)

என்ன ஒரு புது மாற்றமாக இருக்கிறதே! வழக்கமாக இருவரும் வந்து பாங்கி ஒதிங்கி நிற்கத் தலைவிதானே முன்னுல் வருவாள். இன்றோ அதற்கு மாறுக...

தோழி;

சினந் தோன்றும் கண்களை உடைய கானவன், உழுது விதைத்த தினைக் கதிருண்ண வரும் கிளிகளை கனிவுமிக்க சொற்களைப் பேசும் மடந்தைப் பருவ மகள் ஆயலோட்டும் சாரல் நாடனே! என்ன ஆச்சரியமாக பார்க்கிறீர்கள்! என்ன வழக்கத்துக்கு மாறுகத் தலைவியைக் காணும் என்று பார்கிறீர்களா. அவள் இன்று வரவில்லை. இனி வரவும் மாட்டாள். தலைவனைப்பற்றித் தலைவியின் தமர் பல குறைகளைக் கூறி வெறுப்பை ஏற்படுத்தினும், அவள் அவற்றைப் புறந் தள்ளி, தலைவன் என்ன பொய் சொல்லினும் நம்புவாள். அத்தகைய பெண்கள் பலருள்ளனர் . அவளில் நம் தலைவியும் ஒருத்தி. அவள் நீ விரைவில் வந்து மணஞ் செய்வாய் என நம்பி நம்பி ஏமாந்தததின பலன் இதுதான். மேலிம் இப்போது நிலைமை கட்டிகடங்காததாக விட்டது

வன்கட் கானவன் மென்சொன் மடமகள்
புன்புல மயக்கத் துழுதவேனற்
பைம்புறச் சிறுகிளி கடியு நாட
பெரிய கூறி நீப்பினும்
பொய்வலப் படூஉம் பெண்டுதவப் பலவே 283

தலைவன்;

பாங்கியே! ஒப்புக்கொண்ட ஒரு செயலைச் செய்யத் தாமதித்தால் அது ஒரு பொய்யாகுமா? தலைவிக்கு நான் கொடுத்த வாக்குறுதி என்ன தெரியுமா? அவளைத் தாய் தமர் இத்தொடர்புக் காரணமாக வெறுத்து ஒறுக்கக் கூடாது, ஊரவர்கள் வேண்டாதனவெல்லாம் உழறி அவள் மனதைப் புண் படுத்தக் கூடாது. இதற்கெல்லாம் நான் காரணமாக இருப்பதை விரும்பிலேன். இந்த இரு காரியங்களையும் நிறைவேற்றுவதே நான் இப்போது செய்யுந் தவமாகும். இதனால் நான் பொய்த்து விட்டேன் என்பது பொருத்தமானதா?

தோழி;

தலைவனே! உண்மையிலே அடிக்கடி உனது நடமாட்டங் கண்டி பலரும் பல விதமாகப் பெசத் தொடங்கி விட்டனர். அதனால் தலைவி மிக அஞ்சுகிறாள். அதே நேரம் உன்னைக் காணாது இருக்கவும் முடியாமற் தவிக்கின்றாள். அவளின்

பாடு புலியின் வாலைப் பிடித்த கதையாகிவிட்டது. ஆதலால் இனிமேற் பகற் குறி வேண்டாம். இனிமேற் பகற் குறியிற் காண மாட்டாள். ஆதலால் இரவுக்குறியில் அவளைச் சந்திக்க வருதலே நன்று.

தலைவன்;

பாங்கியே! நீ உன் தலைவியை மட்டல்ல என்னையும் நன்கு புரிந்து வைத்துள்ளாய். அதற்கும் மேலாக எங்களை இணைத்து வைப்பதிலும் பெரிய நாட்டங் கொண்டுள்ளனை நீ நீடு வாழ்க.

(காதலர் சந்திப்பு இரவில் நடைபெறுகிறது.)

தோழி;

சாரற் புறத்த பெருங்குரற் சிறுதினைப்
பேரமர் மழைக்கட் கொடிச்சி கடியவுஞ்
சேரலைச் சிறுகிளி யுன்னு நாட
வாரிருள் பெருகின வாரல்
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே 282

மலைச் சாரலில் உள்ள தினையின் பெருங் குலைகளை உண்ண வரும் சோலைக் கிளிகளைக் கரு நிறத்தாலும் கருணையாலும் மாரியை ஒத்த கூந்தற் கொடிச்சி ஏலோலம் பாடிக் கடிந்தாலும் அவை தினைக் கதிர்களை உண்ணும் நாடனே! இரவில் நடமாடும் யானைகள் அதிகமாதலால் இரவுக் குறியைத் தவிர்ப்பாயாக.

தலைவன்;

பாங்கி, உச்சந் தலையில் பாருங் கல்லைத் தூக்கிப் போட்ட துபோல இவ்வாறு இரண்டு குறிகளையும் மறுத்து விட்டனையே. இதை எவ்வாறு தாங்கிக் கொள்வேன்

தோழி:

கொடிச்சி யின்குரல் கிளிசெத் தடுக்கத்துப்
பைங்குர லேனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கேண்மோ 289

தலைவனே, அப்படி என்ன அடாததது செய்ததுபோலப் படாத பாடு படுகின்றனை? இன்றில்லா விடினும் என்றோ ஒரு நாள் கணவன் மனைவியாகப் போகும் நீங்கள் ஏன் தவிக்க வேண்டும். விரைவில் வரிந்துகொண்டால் அவள்

நீயாகி விடுவாய். அதன் பின் எவர் எதைப் பேசுவார்? தம்மைக் கடிய ஆயலோட்டுந் தலைவியின் இனிய குரலேத தமதினத்தின் குரலென நினைத்து கிளிகள் தினைப் புனத்தில் அச்சமிலாது படர்தலைக் கண்டு அவளது காவலை விலக்குவர். அத்தகைய வளமிகு மலை நாடனே அவளை மணஞ் செய்வதை ஏன் தாமதிக்கின்றனையோ!

தலைவன்;

பாங்கியே! மேலும் மேலும் எனக்குள்ள இக்கட்டான நிலையை உணராமல் நீங்கள் இருப்பதாகவே தென் படுகிறது. காதலிப்பதற்கு இரண்டு மனங்கள் போதும். அவையிரண்டும் ஒன்றுபட்டால் அதுவே தெய்வப் புணர்ச்சி யாகிவிடும். அத்துடன் அன்புடை வாழ்க்கை முடிந்து விடுவதில்லை. தலைவியின் தமரும் எனது தமரும் மனம் ஒன்றிச் செய்து வைக்கும் மணிதப் புணர்ச்சி யாகவும் வேண்டுமல்லவா?

தோழி;

நெடுவரை மிசையது குறுங்கால் வருட
தினைபாய் கிள்ளை வெரூஉ நாட
வல்லை மன்ற பொய்த்தல்
வல்லாய் மன்றநீ யல்லது செயலே 287

நெடிய தினைப் புனத்தில் மான்களைக் கண்டதும், தினை அருந்த வந்த கிளிகள் அஞ்சுகின்ற நாடனே! நீயோ பொய் புகல்வதிற் திறனுளன். ஆனால் பொய்யாத தன்மையில் அவ்வளவு சிறத்தவன் அல்லன். தெய்வப் புணர்ச்சிதான் உங்களை இணைத்தது என்று கூறிவிட்டு, அடுத்த கணமே மணிதர் தாம் இணைக்க வேண்டுமென்று கூறுவது பொய்யாத தன்மை என்பதில் என்ன தவறுளது?

பின்னிருங் கூந்த னன்னுதற் குறமகண்
மென்றினை நுவணை யுண்டு தட்டையி
னைவனச் சிறுகிளி கடியு நாட
வீங்குவனை நெகிழப் பிரிதல்
யாங்குவல் லுகையோ வீங்கிவட் டுறந்தே 285

பின்னிய கரிய கூந்தலும், ஒள்ளிய நுதலுங் கொண்ட கொடிச்சி தேன் கலந்த தினை மாவை உண்டு, ஒலி யெழுப்புந் தட்டையைத் தட்டி கிளிகளை ஓட்டுகின்ற மலை நாடனே! உன் தலைவியின் கை வளையல் நெகிழுமள விற்கு அவளை விட்டுப் பிரிந்தது எவ்வண் ஒக்கும்.!

தலைவன்;

வாழ்ககை இனிதாக அமைய இன சனமென்ற சொந்த பந்தங்களின் இணைப்புந் தேவை என்று கருதுவது தவருனற் தற்துணிவின்படி அவளை உடன்போக்கிற்கு உட்படுத்தவே எண்ணுகிறேன். அதற்கு விரும்புவளோ.

தோழி;

கொடிச்சி யின்குரல் கிளிசெத் தடுக்கத்துப்
பைங்குர லேனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கேண்மோ 289

தம்மைக் கடிய ஆயலோட்டுந் தலைவியின் இனிய குரலைத தமதினத்தின் குரலென நினைத்து கிளிகள் தினைப் புனத்தில் அச்சமிலாது படர்தலைக் கண்டு அவளது காவலை விலக்குவர். அத்தகைய வளமிகு மலை நாடனே அவளை மணஞ் செய்வதை ஏன் தாமதிக்கின்றனையோ! தினைக் கதிருண்ண வந்த பவளச் சொண்டும் மரகத நிறமுங் கொண்ட கிளிகள், கானவர் முற்றிய கதிர்களை அரிந்த பின்னும் அவை தினைப் புனத்தில்மேற் கொண்ட அளவற்ற அன்பால் அங்கே வரும். அவள் உன்மேற் கொண்ட அன்பின் காரணமாக உன்னுடன் எங்கும் வரும். எனவே நீங்கள் எடுக்க வேண்டிய கடைசி நடபடிக்கையிற் துணிந்து இறங்கி மேற் கொண்டு அவளை வரிக்கும்போதே காண வருக.

அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கா
லிருவி நீள்புனங் கண்டும்
பிரித றேற்றுப் பேரன் பினவே 284

மன்னுயிரைத் தன்னுயிராக மதித்து அறவழியில் அரசோம்பிடும் மன்னனிலும் பார்க்க நீ சிறந்தவன். தினைப் புனத்தில் கிளி கடிய வருங் கொடிச்சி நினைக்கவும் படும். துரத்தவும் படும் என்பதையும் மனதிற் கொள்க. இதன் உள்ளர்த்தத்தையிம் மனத்தே உள்ளவும்

அறம்புரி செங்கோன் மன்னனிற் றுனனி
சிறந்தன போலும் கிள்கை பிறங்கிய
பூங்கமழ் கூந்தற் கொடிச்சி
நோக்கவும் படுமவ ளோப்பவும் படுமே 290

(தலைவன் செல்கிறான். தோழி தலைவியிடத்திற்கு வர அவளைக் கண்ட)

தலைமகள்:

பார்த்தனையா பாங்கி. தினை வெட்டு முடிந்ததும் அதன் அடித் தண்டுகளில் படர்ந்த அவரைக் காய்களை உண்ணக் கிளிகள் வரும். அவற்றையுங் கடியக் காவலை ஏற்படுத்தும் சிலம்பன், நம்மை விட்டுப் பிரிய நினைத்ததும் எனது நலன்கள் யாவும் இழக்கலாயின. இப்படி என்னை வருத்த அவர் அவ்வளவு வன்நெஞ்சரா. அல்லது நான் ஏதேனும் செய்யாதன செய்தேனு?

சிறுதினை கொய்த விருவி வெண்காற்
காய்ந்த வவரைப் படுகிளி கடியும்
யாண ராகிய நன்மலை நாடன்
புகரின்று நயந்தனன் போலுங்
கவருந் தோழியென் மாமைக் கவினே 286

தோழி;

தலைவியே! கவலையை விட்டொழி. நான் அவரைக் கண்டேன், உன் துயர் விண்டேன். ஈற்றில் இரு பக்கத் தமரும் இசையாவிடத்து, இங்கு வந்து உன்னைத் தன்னுடன் உடன் அழைத்துச் செல்வதாக உறுதி மொழி அளித்து அகன்றுளார். எனவே உடனடியான வரைவு அல்லது உடன்போக்கு. எதற்குந் தயாராக இரு.

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்கிறது;
29வது காட்சி நிறைவுறுகிறது

காட்சி; முப்பது

களம்; சிறைப்புறம், தலைவியின் இல்லம்

காலம்; காலை. மாலை

பாத்திரர்; பண்டிதர், பாமரன், தலைவன், தலைவி, பாங்கி, பாங்கன்

நிகழ்ச்சி;

தலைவி தலைவனின் கண்பொத்தி விளையாடி மகிழ்தல். அத்துடன் இதே களிப்பும் இணைப்பும் இருப்பும் வாழ்க்கையிற் தொடர வேண்டுதல்.. பாங்கியும் இதனையே வலியுறுத்தல். தலைவன் தன் காதலியை இட்டுத் தன்னெஞ்சொடு கிளர்த்தல். பொருள் தேடச் சென்ற தலைவன் வந்ததும் தலைவியுந் தோழியும் அவனை வரவேற்று வாழ்த்துதல்.

(முன்னெழினி அகல அரங்கில் பண்டிதரும் பாமரனும் தோன்றுகின்றனர்,)

பண்டிதர்.

இங்கு குழுமியுளோர் அனைவருக்கும் எங்கள் இரு வரினதும் இதயங் கலந்த வரவேற்புகள், வாழ்த்துக்கள், வணக்கங்கள் உரித்தாகுக. இன்றைய நிகழ்ச்சியுடன் கபிலர் பாடிய குறிஞ்சிப் பத்தின் நூறு பாடல்களின் நாடக வடிவ அமைப்பின் பத்து காட்சிப்படுத்தல்களும் நிறை வுறுகின்றன. இந்தப் பணி என்மேற் சுமத்தப்பட்ட போது பெருஞ் சுமையாகவே இருந்தது. ஆரம்பத்தில் அரங்கப் பொறுப்பாளர் இதன் நோக்கத்தை எனக்குத் தெளி வித்தார், சங்கப் பாடல்களின் இனிமையை நுகர்வதற்குத் தடையாக அதன் அமைப்பு உள்ளது. ஆதலால் அதை விட்டு அதிகமானோர் விலகித் தூரத்திற்கே போய் விடு கின்றனர். அவை பாடப்பட்ட பல ஆயிரம் வருடங்களுக்கு முன் அநதப் பாடல்கள் மக்களுக்கு இலகுவாகப் புரி யத்தகக்கதாக இருந்தன, இக் கால இடைவெளிக்குள்; மொழியியல்பு, கவி இயல்பு. வாழ்வியல் இயல்பு ஆதியன எவ்வளவோ மாறி விட்டன. இவற்றுல் இப்பாடல்கள் இப்போது புரியாத மொழிப் பாடல் போலத் தோற்றந் தருகின்றன. இவற்றைப் படித்த சிலர் மலையாளப் பாடல்களா எனவும் ஐயப்படுகின்றனர். உண்மையிலே அவ்வாறன்று. சுருக்கமாக தூய தமிழில் அக்கால

வாழ்வியலே இயற்கை நலத்துடன இணைத்திப் பாடப்பட்ட அகத்திணை, புறத்திணை சார்ந்த தனிப் பாடல்களேயாகும்.

இந்த உண்மையைப் புரியவும், அவற்றின் கவி நயங்களையும் இலக்கிய உணர்வுகளையும் நுகரவும் அவற்றை கடுமையான இலக்கணப் பிடியிலிருந்து நகர்த்தி மரபு தவருமல், தற்கால வாழ்வியலுடன் இணைத்து மக்களுக்கு உணர்த்தத் தக்கதான வழிகளில இவற்றை மீண்டும் வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளதெனக் கூறி அவற்றிற் குறிஞ்சிப் பத்தை எனக்கும் பா அமரன் அவர்கட்குந் தந்தனர், நாங்களும் அவ்வாறே பயன் தரத்தக்க பத்து நாடகங்களாகப் படைத்தளித்தோம்.

இரண்டாவது; அவர்கள் எங்களுக்கு இட்ட ஆணை; தூய தமிழ்ச் சொற்களால் நாடகத்தை நடத்திச் செல்ல வேண்டும் என்பதாகும். இதை எங்களாற் பின்பற்ற இய லாததாயிற்று, காரணம்: இன்று நடைமுறையில் உள்ள பேச்சுத் தமிழிலும் இலக்கியத் தமிழிலும் உள்ள வார்த்தைகளில் எது தூய தமிழ், எது கலப்பு மொழித் தமிழ் என்று அறிய முடியாதுளது. காரணம் தமிழர் தமது மொழி வளத்தை இரு வழிகளில் வளர்த்து வருகின்றனர். ஒன்று இயற்கையான ஒலி முறையால் சொற் பெருக் கத்தை உண்டாக்கிக் கொள்வது. இரண்டாவது முறை தன்னிற் கலக்கும் பிற மொழிச் சொற்களை அதன் ஒலி, பொருள், சொல்லமைப்பு, சொற்றொடருக்கு இயலும் தன்மைகளை அடியொற்றித் தன் வயப்படுத்தி வழக்கிற் கொள்வது . இதன்படி உற்றுணரின் தற்போது பாவனையில் உள்ள சொற்கள் தனித் தமிழரின் சொற்கள் அல்லாவிடினும், அவை தமிழரின் தனிச் சொத்துகள் என்பதே எங்கள் எண்ணம். ஆதலால் முக்கால் நூற்றாண்டுகளாக நான் பயின்ற, கற்கவும், படிக்கவும், எழுதவும் கைக்கொண்ட, நயந்த தமிழையே கைக்கொள்வதென்று முடிவுடன் தற்காலத் தமிழ் நடையிலே இதை அமைத்துள்ளோம். எது தமிழ்ச் சொற்களுக்கு உரிய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி , அந்தச் சொற்களின் சம ஒலி சார்ந்த தூய தமிழ் மொழியின் அமைப்புங் கருத்துங் கொண்ட வண்ணம்

என்பன கவனிக்கப்படல் வேண்டும். மேலும் இத்தகைய சொற்கள் சங்கப் பாடல்களில் உளவா என்பதையும் நாம் நிரிணயஞ் செய்து கொள்ள வேண்டும்,

பாலா இப்போது, முந்தைய தின நாடகத்திற்கு மட்டல்ல இன்று நடக்கவிருக்கும் நாடகத்திற்குந் தக்க பெயரிட வேண்டி இருப்பதால், அதை நாடக முடிவில் வைத்துக் கொள்ளலாமே!

பாமரன்;

அய்யா சொன்னல் அதற்கு எதிரேது? அப்படியே செய்தாற் போயிற்று. இனி நாடகத்தைத் தொடருங்கள்.....

(மலைச் சாரலில் உள்ள சோலையில் சந்தன மரத்தடியில் காதலியின் வரவை எதிர்பார்த்து, அமர்ந்திருக்குந் தலைவன் பின்பக்கமாக வந்த தலைவி அவன் கணகளைப் பொத்துகிறாள். கண் பொத்தியது காதலியின் கரமே என உணர்ந்த)

தலைவன்:

மலையின் கண் மலர்ந்து நறுமணம் வீசும் காந்தள் மலர்க கொத்தன்ன கைகளால் என் கண்களைப் பொத்திய பணைத்த தோள்களும் மயிலன்ன சாயலுள்ளாய், நீ என் பாயலிடைத் துணைமட்டுமல்ல என் நெஞ்சத்திலும் நிறைந்துள்ளவள்.

சிலம்புகமழ் காந்த ணறுங்குலை யன்ன
நலம்பெற கையினென் கண்பிதைத தோயே
பாய லின்றுணை யாகிய பணைத்தோட்
டோகை மாட்சி மடந்தை
நீயல துளரோவென் னெஞ்சமர்ந் தோளே 293

தலைவி;

எனது நெஞ்சில் நிலைத்தவரே! தெய்வம் இணைத்த இந்த இணைப்பை மனிதர் பிரிக்க முடியாதளவு நம் நட்பு இறுக்க மாக உள்ளது. அது நமது வாழ்நாட காலந் தொடர வேண்டு மென்பதெ என் விழைவாகும். அப்படியே அது தொடர உங்கள் பங்களிப்பை இயன்ற அளவில் விரைந்து ஆற்ற வேண்டும் என்பதே என் வேண்டிகோள்.

தலைவன்;

தலைவியே இதையே நானும் உணர்கிறேன். கலங்காது செல்க நான் வேண்டிய காரியங்களைச் செய்து விரைவில் வந்துனை வரைவேன்

(தலைவி செல்ல அவனண்டை வந்த)

தோழி;

கொடிச்சி காக்கும் பெருங்குர லேன
லடுக்கன் மஞ்ஞை கவரு நாட
நடுநாட் கங்குலும் வருதி
கடுமா தாக்கி னறியேன் யானே 296

பரணில் நின்று கவணில் கற்களை வைத்து வீசி ஆயலோட்டும், கன்னியரின் இனிமைக் குரலைக் கேட்டு மயில்கள் களிக்கும் மலை நாடனே நடு நாளாகிய இருளிலும் தலைவியைக் காண இரவுக் குறிக்காக வருகின்றனை, இடையில் யானைகளின் நடமாட்டமும் உள்ளதால் என்னுகுமோ அறியேன். இனி மேற்கொண்டிங்கு வருவதைத் தவிர்த்து, வரைதற்கு உரியவற்றை முன்னெடுப்பாயாக. அத்துடன் கானவர் தினை விதைத்தார்கள் அது விளைந்ததுந் தினையையே அறுத்தார்கள், நீங்கள் இருவரும் வினை விதைத்தவர்கள், அதன் விளைவும் வெட்டும் அந்த வினையாகவே இருக்க வேண்டும் என்பதையுங் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தலைவன்;

பாங்கியே! உனதெண்ணத்தை அறிவேன். அதை உடனடியாகச் செயற்படுத்த நான் தலைவியுடன் உறுதி செய்துள்ளேன். அதுவரை அவளை ஆற்றித் தேற்றி வைத்திருத்தல் உனது கடன்.

தோழி;

விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரிற் றேன்று நாட
பிரியினும் பிரிவ தன்றே
நின்னெடு மேய மடந்தை நட்பே 297

விரிந்த வேங்கை மரத்தின் கிளையில் தங்கி இருக்கின்ற மயில், கிளை தாவிப் பூக்கொய்யும் பூவையரை நிகர்க்குஞ் சாரல் நாடனே! உன்னுடன் இணைந்த மங்கையின் நட்பானது நீ அவளைப் பிரிந்து இருந்தாலும் மாறுதது.

பொருள்வயிற் பிரிந்த தலைவனின் வரவு நீடிப்பதால் கவலுந் தலைவி தனித்திருந்து)

தலைமகள்:

வேடர்களின் நெருப்புக் கொள்ளிக்கு அஞ்சும் மயில்கள்

அங்குமிங்கும் ஓடப் பறவைகள் வானெழுந்து தரைக்கு வரும். மீண்டும் மேலே போகும். இது பெண்கள் பந்தாடுவதுபோற் தோன்றும் நாடனுடன் சென்ற எனது மனம் மீண்டுந் திரும்பி என்னிடம் வருமோ, அல்லது அவருடனே தங்கி வாராதிருந்திடுமோ?.

வருவது கொல்லோ தானே வாரா
தவணுறை மேவவி னமைவது கொல்லோ
புனவர் கொள்ளியற் புகல்வரு மஞ்ஞை
யிருவி யிருந்த குருவி வருந்துறப்
பந்தாடு மகளிரிற் படர்தருங்
குன்றுகெழு நாடனெடு சென்றவென் னெஞ்செ295

(அதே தருணம் பல காத தூரத்துக்கு அப்பால் பொருள் தேடச் சென்ற தலைவன் தனக்குள்)

குன்ற நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையு
மஞ்சி லோதி யசைநடைக் கொடிச்சி
கண்போன் மலர்தலு மரிதிவ
டன்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே 299

குன்ற நாடனது மலைச் சாரலின் கண்ணமைந்த பசிய சுனையில் வாய் விரித்தது போல மலர்ந்த குவளை மலர்க்களும் முகிலன்ன கூந்தலும், அசைந்து செலும் நடையுமுடைய தலைவியின் கண்களுக்கு நிகராகாது. அது போலவே மயிலுக்கும் இவள் சாயல் நிகராகாது.. ஆதலாற் இற்றைவரை தேடிய பொன்னே போதும். இனித் தேட வேண்டியதோ அவளின் அன்பே. ஆதலால் மேலும் நீடியாது உடனே திரும்பிச் செல்வது நலம்.

(திரும்பி வந்த தலைமகன் தன் பாங்கனிடம் தன் தலைவியைப் புகழ்ந்து கூறுகிறான்)

பாங்கனே! என் மனதைக் கவர்ந்த மடந்தை நல்லாள் வாழும் பதியெதுவென வினவினை. அதன் சிறப்பைச் சொல்கின்றேன் கேட்குதி. ஆங்கு மயிலாடுங் குன்று பல உள்ளன. அவை அகவி எழுப்புமொலி திசையெட்டும் பரவும். ஆங்கு இளந்தழை மறைக்கும் இடையாளாகிய தலைவி என் பிரிவாற் கலங்குவள். அவளை ஆற்றுவிக்குந் தோழியின் ஆற்றுரை கேட்கும்.

பொருள் வயிற் பிரிந்த நான் மீண்டுள்ளேன் என்பதை அறியின் அவர்கள் எனைக் காண மிகவும் விரும்புவர்கள்.

மயிலக ளாலக் குடிஞை யிரட்டுந்
துறுகல் லடுக்கத ததுவே பகைத்தோள்
ஆய்தழை நுடங்கு மல்குற்
காதலி யுறையு நனிநல் லூரே 291

பாங்கன்;

தலைவனே! நீ நலத்துடனும், பொன்னுடனுந் திருமபி வந்ததைக் கண்டு அவர்கள் மட்டுமா நானுங் கூட மகிழ் கிறேன். உனது வதுவை விரைவில் நடக்க வேண்டும் மணமகனின் பாங்கனுக உனது பக்கத்தில் நிற்க வேண்டும் எனபதே என் நீண்ட நாள் ஆசை. அதை நிறை வேற்றவாவது இப்போதே அங்கு போய் நினது வரவை உரைத்து வருவேன்.

தலைமகன்;

கருவுற்ற மேகத்தைக் கண்டதும் அது மழைக் குறி யென்ற களிப்பிற் தோகை விரித்தாடும் குன்றத்தே இடை அசையும் நடைக் கொடிச்சி எனக்கு அருளாளாயினும் என் நட்பை என்றேனும் மறந்திலேன்,.

மழைவர வறியா மஞ்ஞை யாலு
மடுக்க நல்லூ ரசைநடைக் கொடிச்சி
தானெம் மருளா ளாயினும்
யாந்தன் னுள்ளுபு மறந்தறி யேயே 298

(பாங்கன் தலைவன் திரும்பி வந்தமைபற்றிப் பாங்கன் தோழியிடம் கூறியதும் அவள் தலைவனைக் காண்கிருள்)

தலைவனே. நீ நீடு வாழ்க. சூளுரைத்த காலத்திற்கு முன்பாக வந்ததையிட்டிடுத் தலைவி அறிந்தாள் பெரிதும் மகிழ்வாள், தலைவனே, உனது பிரிவால் அவள் மிகவும் இடருற்றுள். அவ்வண் மேலுந் தொடர விடுதல் தக்க தன்று. எனவே...

தலைவன்; உடன் வரவு அன்றேல் உடன் போக்கு!

தோழி

எரிமருள் வேங்கை யிருந்த தோகை
யிழையணி மடந்தையிற் றேன்று நாட
னினிது செய்தனையா லுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிரிங் கூந்தன் மலரணிந் தோயே 294

தலைவனே! நெருப்பன்ன மலர்களைச் சொரியும் வேங்கை மரத்தடியில் உலவும் மயில்கள் ஆபரணமணிந்த அரிவையர்களை நிகர்க்கும் மலை நாடனே! என் தலைவிக்கு இனிய செய்தனை, ஆதலால் நின் தந்தை நீடுழி வாழ்க. இம்மலையிலே இவள் வதுவை நடக்கவும் இவளது கூந்தலில் மலர் சூடவும் செய்த நீயும் நீடு வாழ்க. இநதச் செய்தியை உடனே தலைவிக்கு அறிவிப்பதே என் தலையாய கடன்;

(தோழி தலைவியிடம் வந்து;)

தலைவியே, நீ, நீடு வாழ்க. தலைவன் திரும்பி வந்து விட்டார். திருமணஞ் செய்ய விரைவில் வரப்போகின்றார், இது நான் நேரடியாகப் பெற்ற செய்தி.

கொடிச்சி கூந்தல் போலத் தோகை
யஞ்சிறைச் விரிக்கும் பெருங்கல் வெற்பன்
வநதன னெதிர்ந்தனர் கொடையே
யந்நீங் கிளவி பொலிகநின் சிறப்பே 300

தலைமகள்;

மயில்க ளாலப் பெருந்தே னிமிரத்
தண்மழை தழீஇய மாமலை நாட
நின்னினுஞ் சிறந்தன ளெமக்கே நீநயந்து
நன்மன யருங்கடி யயர
வெந்நலஞ் சிறப்பயர மினிப்பெற் றேனே 292

பாங்கி அப்படியா? மயில்கள் ஆடவும், பெருந்தேன் இழிந்து ஓடவும் குளிர்ந்த மழை பெய்யும் மலை நாடன் உன்னிலும் பார்க்கச் சிறந்த நிலையில் உயர்ந்து நிற்கும் இந்த மலை நாடானது அதன் தங்கையாகிய எனக்கு உன்னைக் கலியாணஞ் செய்து வைக்க அருள் புரிந்தது. ஆதலால் அம்மலை நீடுழி வாழ வாழ்த்தா நிற்பேன்! அடுத்து என்ன சொல்வதென்றே எனக்கிப் புரியவில்லை!

பாங்கி; புரியும் புரியும்! விரைவிற் புரியும்

(இருவரும் சிரிக்கின்றர். முன்னெழினி அரங்கை மறைத்து, மீண்டும் விலக அங்கே பண்டிதரும் பாமரனும் தோன்றுகின்றனர்)

பண்டிதர்;

பாலா, இப்போது உன் தருணம் வந்து விட்டது. இரண்டு பெயர்கள் சூட்ட வேண்டும். நினைவில் வைத்துக்கொள்..

பாமரன்;

அய்யா, நன்று, நினைவிற் பதித்துளேன். இப்போது அதை நவில்வேன். நேற்று நடைபெற்ற நாடகத்திற்கு; உடன் வரைவு இன்றேல் உடன் போக்கு என்றும் இன்றைய நாடகத்திற்கு புரியும் புரியும் விரைவிற் புரியும் என்றும் பெயர் வைத்து விடலாமா?

பண்டிதர்;

நல்ல தலைப்புகள் தான்! இவற்றினை எப்படிப் பொருத்த மாகத் தெரிவு செய்ய முடிந்ததோ!

பாமரன்;

நானுவது தேர்ந்ததாவது! இவை பாங்கியின் தேர்வு அய்யா. இரண்டு நாடகங்களின் இறுதியிலும் பாங்கி சொன்ன வார்த்தைகள்தாம் இவைகள்!

(சபையில் அமைதி.)

ஓகோ, நான் சொன்னால் கரத்தட்டு, நீங்கள் சொன்னால் வாய்ப் பூட்டா?

பண்டிதர்;

என்ன சொல்கின்றனை நான் அப்படி எங்கே சொன்னேன். குருவை மிஞ்சிய சீடனாகி விடடாய்!

பாமரன்;

அப்படி பாங்கி சொல்வதாக நீங்கள்தானே நாடகத்தைப் படைத்துள்ளீர்கள்! அதுதான் அப்படிச் சொன்னேன். அய்யா நான் பண்டிதரைச் சுற்றிச் சுற்றிப் பைந்தமிழனாகி விட்டேன்.

பண்டிதர்;

நல்லது பைந்தமிழா. நாம் இப்போ இத்துடன் நமக்கு அளிக்கப்பட்டிருந்த பொறுப்பில் இருந்து விடுபடுவோம். வணக்கம்.

காட்சி கரைகிறது

முன்னெழினி மூட
30 வது காட்சி முடியப்
பாலை எழினி தோன்றுகிறது

ஐந்தாவது பகுதி

ஐங்குறு நூற்றுச் செய்யுள்களின்
நாடக வடிவிலான
நலனுய்வுக் காட்சிகள்

நான்காவது பாலை எழினி அரங்கம்

ஓதலாந்தையாரின்
பாலைத் திணை சார்ந்த
100 பாடல்களின் காட்சிப் படுத்தல்கள்

31, செலவழுங்குவித்த பத்து
32. செலவுப் பத்து
33. இடைச் சுரப் பத்து
34. தலைவியிரங்கு பத்து
35. இளவேனிற் பத்து
36. வரைவுரைத்த பத்து
37. முன்னிலைப் பத்து
38. மகட்போக்கிய வழி
தாயிரங்கு பத்து
39. உடன்போக்கின்கண்
இடைச்சுரத்துரைத்த பத்து
40. மறுதரவுப் பத்து

4. பாலைத் திணை எழினி

ஒதலாந்தையார்; ஆதன் தந்தை என்பது ஆந்தையென மருவிய பெயர்கொண்ட இவர் கடைச் சங்க காலப் புலவர். குறுந் தொகையில் பாலைத் திணைபற்றி இரு பாடல்களும் முல்லைத் திணைபற்றி ஒரு பாடலும் ஐங்குறு நூற்றிற் பாலைத் திணைபற்றி 100 பாடல்களுமாக மொத்தம் 103 சங்கப் பாடல்களைப் பாடியுளளார்.

பொதுவாகப் பாலைத் திணை ஐந்திணைகளில் இறுதியாக இடம்பெறுவது மரபு. ஆனால் ஐங்குறுநூறில் நான்காவது இடம் பெறுகிறது. புலமைமுற்றிய கூடலூர்க் கிழார் ஐங்குறு நூற்றைத் தொகுத்தபோது திணைகளை இடம் மாற்றி வைத்துள்ளார். அதற்கான காரணம் ஆய்வுக்குரியதொன்று.

ஆயினும் கலித் தொகையில் பாலை முதலிடத்தில் வைக்கப்பட்டுள்ளது. திணைமொழி ஐம்பதில் இரண்டாவது இடத்திலும், திணைமாலை நூற்றைம்பதிலும் ஐந்திணை எழுப தியும் மூன்றாவது இடத்திலும், ஐந்திணை ஐம்பதில் நான்கா வது இடத்திலும் வைக்கப்பட்டுள்ள என்பதும் கவனத் திற்குரியதே.

பாலைக்கு நிலமில்லை என்பர் பலர். தொல்காப்பியரும் மாயோன் மேய மைவரை உலகென பாலை தவிர்ந்த நான்கு நிலங்களை மட்டுங் கூறினர். நடுவண் ஐந்திணை என்றுளார். சிலப்பதிகாரம் பாலைத் திணைக்கு இலக்கணம் வகுப்பதுபோல ;

முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்; என்று உரைத்துளார்.

பாலை என்பது செழுமையற்ற அதி வெப்பம் அல்லது அதிக குளிர் நிலவும் நாடு என்பதும். இத்தகைய நிலை நீர் நிலையங்கள், மழைப் பொழிவு இன்மையாலும், சூரியச் சூடு, உச்சம் காரணமாகவும், காற்று வீச்சின் காரணமாகவும் தாப ரங்கள் வளர முடியாத தரை, மலை மறைப்பு, ஒதுக்குக் காரண மாகவும் ஏற்படுமென்பதும் புவியியலாளர் கூற்று. இத்தகைய பாலை நிலங்களை வெப்பமான குளிரான பாலை என இரண்டாக வகுப்பர். இவற்றின் புவியியற் காரணமாக மற்ற நான்கு

திணை நிலங்களின் செழிப்பை இழந்த தரையமைப்பு, மக்கள் வாழ்வதற்கு இடர்மிக்க பருவ காலம் நிலவுஞ் சூழல். எப்போதும் வெண்மேகங்களே பரக்கும் வானம். பொதுவாக வெப்பம் நிலத்தில் மட்டுமல்ல, காற்றிலும் பரக்கக் காணலாம். நெடுங் காலம் நீரில்லாமல் வாழும் தாபரங்களே இங்கு வாழும். வெம்மைக்கு உரிய செம்மஞ்சள் கலந்த வண்ணமே எங்குந் தோன்றும். ஆதலால் இந்த எழினியில் அதிகமாக இந்த நிறத்தையே அதிகமாக உபயோகித்து வரைந்துள்ளனர்

இந்த எழினியில் பாலைத் திணைக்குரிய உரி, கருப் பொருள்களை அந்தத் திணை நிலத்தின் வளமும் வாழ்வும்
வண்ணத்தில் வரைந்து இங்கே நடக்கப் போகும் நிகழ்ச்சியின்
பின்னணியாகத் திகழச் செய்துள்ளனர். அதில்;

தெய்வம் உணவே மா மரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப

எனத் தொலகாப்பியர் கூறியபடி
தெய்வமாகிய கன்னி எனுந் துர்க்கையை வழிபடும் பந்தரைச்
சூழ வரப் பாலை நில மக்கள் வாழும் குறும்புகள் உள்ளன.
அங்கே வாழ் கரனை, எயினர், மீளி, மறவர், புள்ளுவர், இறிக்கர்,
காளை, எனும் ஆண்பாலாரும்
விடலை, எயிற்றி, மறத்தியர், வன்கட் பிணை எனும் பெண்பாலாரும்
வெப்பமும் பசியும் வாட்டிய செழிப்பற்ற உடலுடன் அலைந்து திரிவர்.
ஆங்காங்கு புறுக்கள் நடமாடும். வானத்தில் பருந்து, எருவை,
கழுகு என்பன வட்டமிட்டுப் பறக்கும்.
குரா, மரா, உழிஞை, பாலை, ஓமை, இருப்பை, கள்ளி
ஆதிய மரங்கள் பரட்டையாய் வரண்டு வளர்ந்திருக்கும்.
குரா, மரா மலர்கள் நறுமணத்தை வீசும்.
அவற்றிடையே செந்நாய நாவைத் தொங்கவிட்டவாறு
பயங்கரமாகப் பதுங்கித் திரியும்.
நீரருமை உள்ள துரவுகளும் கிணறுகளிலும் இருந்தே தமது நீர்த்
தேவையை மக்கள் குறைந்த அளவு நிறைவு செய்வர்.
மழை காணுத மண்ணில் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளை
வழிபறி செய்தும் பகற் சூறையாடியும் பெற்றுக் கொள்வர்.
ஆண்களிற் சிலபேர் போர் செய்யச் செல்வர்.
துடிப்பறை முழங்க, பாலை யாழ் மீட்டி,
பஞ்சுரப் பண்ணிசைத்து மகிழ்வர்.
இத்தகைய நிலத்தில் நடைபெறும் நிகழ்வுகளை இங்கே
பத்துப் பகுதிகளாக காட்சிப்படுத்தப் போகின்றோம்.
அதற்கான பின் புலங்களை எடுத்துக் காட்டும்
எழினியாக இது விளங்கும்.

காட்சி; ஒன்று

காலம்; அந்தி

களம்: பாலை நிலக் குறும்பின் உள்ள பாலைமர அடி

பாத்திரர்; பாணன், விறலி (தோன்று நிலையில தலைமகன், தோழி)

நிகழ்ச்சி; தலைவன் வரைவிடை வைத்துப் பொருள் தேடப் பிரிந்து போவதைத் தோழிக்குச் சொல்ல, அவள் அந்தப் பிரிவைத் தலைவி ஆற்றுள் எனச் சொல்லிச் செலவைத் தவிர்க்கும்படி வற்புறுத்துவது.

(முன்னெழினி அகல அரங்கில் பாணனும் விறலியுந் தோற்றுகின்றனர்)

பாணன்;

பாணன் பாட விறலி பாடப் பார்ப்போர் மனதிற்கு இதமாக இருக்கும். அவர்கள் களரியிற் தோன்றினால் கண்டு களிப்போர்தும் மானதக் காட்சியில் பல் சுவை நிகழ்வுகள் படரும். இரண்டே இரண்டு பேர் பல பேரின் பாத்திரங்களை ஏற்று, நின்ற இடத்திலே நிகழ்த்தும் நாடகம் எத்தனையோ பெரிய கதை அடங்கிய நாடகங்களையும் ஓரங்க நாடகமாக்கி விடும் என்று பலரும் புகழ்வார்கள், அத்தகைய பாணனும் அவன் மனைவி விறறலியும் உங்கள் முன் வந்துள்ளோம். சொல்ல வேண்டியவற்றை நான் கதைப் பாடலாக இசைப்பேன். இவள் தக்க இடத்திற் பாடலைப் பாடி ஆடுவாள்.

ஊர் ஊராக அலைந்து பாடி ஆடிப் பிழைக்கும் எங்களுக்குப் பத்து நாட்கள் பாலை எழினி அரங்கிற் பாடி ஆடச் சொல்லி இருக்கிறார்கள், ஐங்குறு நூறும். அதில் ஒரு நூறு பாடல்களை நாளொன்றிற்குப் பத்துப் பாடல்களாக நடித்துக் காட்ட வேண்டும் என்பது எங்களுக்கு இட்ட பணிப்பு. கதைப் போக்கிற் தனிப் பாடல்களைத் தொகுத்துக் கதை யாக்கிக் காட்சிப்படுத்துவது மிகவும் சிரமமான செயலே .எனினும் நாங்கள் எங்களால் இயன்ற அளவில் நடாத்திப் போகின்றோம். கண்டு களியுங்கள்

விறலி;

அதற்கு என்ன, அப்படியே செய்வோம். இன்றைக்குச் செவழுங்குவித்தல் பத்தெனும் பகுதியில் உள்ள பத்துப் பாடல்களைப் பாடி ஆடிக் காட்டப் போகின்றோம். செலவு என்றால்; பயணம், அழுங்குவித்தல் என்றாற் தவிர்க்கச் செய்வது.

பாணன்;

இறை நியமத்தால் எதிர்பட்டு மனமொன்றிய தலை வனுந் தலைவியும் சந்திப்பதாற் பிரிக்க முடியாத அன்பாய்க் காதலாய்க் களவாய் மாறி வளர்கிறது. ஆனல் ஊர் வாயை மூட உலை மூடி உண்டா, இல்லையே, ஆனல்; அதற்கு அஞ்சு வது அறிவுடமை எனவே தலைவி வெளியே செல்லாது இல்லத்தே இருத்தப்படுகிருள். தலைவன் தவிக்கின்றன். தோழி அவனை மணஞ் செய்வதே இனிச் சந்திக்கத தக்க ஒரே வழி எனச் சொல்ல அவன் அதற்காகப் பொருள் தேடுவ தற்காகப் பிற புலஞ் செல்வதாகச் சொல்கிறன். சொல்கிறன். அது கேட்ட தோழி பிரிதலை தவிர்க்கும் பொருட்டு அவனிடம்;

மலை நாடனே! பாலைநிலம் அதிக கனல் கொண்டது, அதைக் கடந்து போவோர், அங்கு நிலவும் வெப்பத்தைத் தணிக்க வெள்ளோத்திரத்தின் வெண் மலர்களை அணிந்து செல்வர். அத்தகைய சுரத்தே நீ செல்வதைத் தலைவி அறிந்தால் மிகமிக வருந்துவாள் அல்லவா? விறலி இப்போ இப்பொருள் தரும் பாடலைப் பாடி யாடு.

(விறலி; அப்படியே என்றுரைத்து பாடி ஆடுகிருள்)

மால்வேள் ளோத்திரத்து மையில் வாலின
ரருஞ்சுரஞ் செல்வோர் சென்னிக் கூட்டு
மவ்வரை பிறங்குவை யாயின்
மைவரை நாட வருந்துவள் பெரிதே 301

பாணன்;

அதைக் கேட்ட தலைவன். செல்லும் வழியின் பயங் கரங்களை நான் நன்கு அறிவேன், ஆனல் தலைவியை அடைய வேண்டிய பொருளை ஈட்ட வேறு வழிகளை நானறியேன். அப்படி ஏதும் இருந்தாற் சொலலென்றன்.

அதற்குத் தோழி; புலம்பனே, அரிய பொருளைத் தேடுவது தவறில்லை எனினும் அது தடுக்கக் கூடிய தொன்றே! அதே தருணம் பெருத்த தோள்களையுடைய தலைவியின் இளமையைக் கெடுக்கும் உன் பிரிவால் ஏற்படும் துயருந் தடுக்கக் கூடியதே. ஆதலால் இவளைப் பிரிந்து செல்வதைத் தவிர் என்றுள். விறலி இப்போ இப்பொருள் தரும் பாடலைப் பாடி யாடு.

(விறலி; அப்படியே என்றுரைத்து பாடி ஆடுகிறாள்)

அரும்பொருள் செய்வினை தப்பற்கு முரித்தே
பெருந்தோ ளரிவை தகைத்தற்கு முரியன்
சொல்லா யாயினை நன்றே
மெல்லம் புலம்ப விவழழப் பிரிந்தே 302

இதைச் செவி மடுத்த தலைவன். தோழியே நீ சொல்வ தன்படி நான் என் செலவைத் தவிர்த்தால்; அது அவளுக்கு ஒரு தற்காலிகமான ஆறுதலையே தரும், ஆனால் நான் செய்துள்ள முடிவோ அவளுக்கு எந்நாளும் ஆறுதலைத் தரு மென்பதை அறிகிலையோ என்றான்.

தோழியோ ; விடலையே! குயவன் சூளையிலிருந்து பிரித் தெடுத்த புது மட்பாண்டம் போன்ற செவ்விய பழங்களைச் சொரியும் ஆலமரஞ் சுரத்திடை செல்வோர்க்கு நிழல் தந்து வெப்பத் துயரைத் தடுக்கும். அதுபோல உன் பிரிவைத் தவிர்த்தால், அவள் துயரத்திற்கு நிழலாவாய் என்றாள். மேலும் வயமான் தோன்றலே நான் சொல்வதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள், நீங்கள் செல்லப் போவதோ பாலை வெஞ்சுரம், தாம் செய்யுந் தொழிலன்றி வேறு எத்தொழி லையுஞ் செய்யும் அறிவில்லாத ஆயர்கள் மந்தை காக்குங் கோலினைத் தோண்டிய பூவலிடத்தே உள்ள நீரைத் தாகத்தால் அலையும் யானை உண்ணும் வெஞ்சுரத்தைக் கடந்தே நீ போக வேண்டும். அதையெண்ணித் தலைவி தவித்து அழுவாள். அதனைத் தடுக்க வல்லமை கொண்ட வர் நீங்கள் மட்டுமே தான் என்பதனை மறவாதே! விறலி இப்போ இப்பொருள் தரும் பாடலைப் பாடி யாடு.

(விறலி; அப்படியே என்றுரைத்து பாடி ஆடுகிறாள்)

புதுக்கலத் தன்ன கனிய வாலம்
போகிறகனைத் தடுக்கும் வேனி லருஞ்சுரந்
தண்ணிய வினிய வாக
வெம்மொடும் சென்மோ விடலை நீயே 303

கல்லாக் கோவலர் கோலிற் றேண்டிய
வானீர்ப் பத்தல் யானை வெளவுங்
கல்லதர்க் கவலை செல்லின் மெல்லியற்
புயனெடுங் கூந்தல் புலம்பும்
வயமான் றேன்றல் வல்லா தியே 304

பாணன்;

இவ்வாறு தோழி, தலைவனிடங் கூறியதும் அவன்; பாங்கியே! தான் காதலித்த ஒரு காரிகையை காணப், பேசத் திருமணந்தான் வரம்பென்றுல், அதை மேற்கொள்ள பொருள் தேவை என்றுல். திருமணத்தால் ஊர் அலரை அடைக்க முடியும் என்றுல் அந்தப் பெரிய பாக்கியத்தைத் தேடிப் பிரிந்து போகாமல் இருப்பதை விட வேறு வழி உளதா?. அப்படி இருந்தால் அதை எனக்குத் தெளிவாக்குங்கள் என்றுன்.

அதற்குத் தோழி; விடலையே உனது குன்றத்தில் வாழும் களிறுகள் தாம் புணர்ந்த பிடிகளை விட்டகலாது அவை வாழும் இடத்தே வாழும் அந்த யானைகளைப் பார். அவை ஒழுகும் வழியிலாவது நீ நிற்பில் மின்னல் இடையாளாம் உனது வரைமகள் நின் செயலால் வருந்தா நிற்பள்.

இன்னும் கேட்குதி தலைவா! நீயோ போர்க் களத்திற் புகுந்து வெற்றி ஈட்டும் திறல் மிக்கவன். அத்தகைய நீ பாலைச் சுரத்திற் செறிந்தால், குழலிசையிலும் இனிமை மிக்கதாய்ப் பேசும் அவள் தலைவிரி கோலமாக அழுகுரல் எழுப்பி இரங்கி அழுவாள். என்றுள். விறலி இப்போது இப்பொருள் தரும் பாடலைப் பாடி யாடு.

(விறலி; அப்படியே என்றுரைத்து பாடி ஆடுகிறுள்)

களிறு பிடிதழீஇப் பிறபுலம் படராது
பசிதின வருந்தும் பைதறு குனறத்துச்
சுடர்த்தொடிக் குறுமக ளிகினைய
வெகினப்பயஞ் செய்யுமொ விடலைநின் செலவே 305

வெல்போர்க் குரிசினி வியன்சுர னிறப்பிற்
பல்கா முல்கு லவ்வரி வாடக்
குழலினி மிகினகுவள் பெரிதே
விழவொலி கூந்தன் மாஅ யோளே 306

பாணன்;

தனது நடபடிக்கைகள் தவருனவை என மற்றவர்களால் எள்ளப்படக் கூடாது. தலைவியை இட்டு அவளின் தமரும் ஊராருந் தப்பாகச் சொல்லக் கூடாது, இதற்கு ஒரே ஒரு வழி அவளை முறைப்படி வதுவை செய்தலேயாம். அதற்குப் பொருள் வேண்டுமென்று எண்ணுந் தலைமகன் தோழியிடம்; பாங்கி மேலும் மேலும்

என் செலவையே தவிர்க்கும்படி சொல்கிறீர்களே தவிர அதற்கேதும் மாற்று வழி சொல்வதாகத் தெரிய வில்லையே. பணம் இல்லாதவன் பிணம், ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும், பணந்தான் கடவுள். அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்பதெல்லாம் நீங்கள் அறியாததா. எனவே எனக்குத் தலைவி வேண்டும். அதற்குப் பொருள் வேண்டும். அதை நல்ல வழியிற் தேடச் சுரமல்ல நெருப்புக் கடலையுந் தாண்டுஞ் செலவு வேண்டும் என்றான்.

அதற்குத் தோழி, கொண்கனே! குன்றுகளில் வளர்ந்துள்ள மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று உராய்வதால் எழும் நெருப்பைக் கண்டு உறுமும் புலியும் அஞ்சும் நாடனே, நீ அருஞ் சுரம் தாண்டிப் போவது அரிய காரியமல்ல ஆனால்; அச்செலவைத் தாங்காமல் அல்லற்படுந் தலைவியை நீ தேடி வரப் போகும் பொருளால் ஆற்றமுடியுமா என்றாள்.

கொண்கனே உனது சொற்களை எதிர்த்துரைக்க வழி யறியோம். ஆயினும், வாரி முடிந்த நெழிந்த கூந்தற் தலை வியைப் பிரியாதிருப்பது நன்று. பெரிய மலையின்கண் விரிந்த பூங்கொத்து அணிந்து வீற்றிருக்கும் முருகணங்கு பிரிவ தாகவே உனது செலவு அவளைத் துயருறச் செய்யும் என்பதை அறிவாயாக என்றாள். விறலி இப்போ இப்பொருள் தரும் பாடலைப் பாடி யாடு.

(விறலி; அப்படியே என்றுரைத்து பாடி ஆடுகிறாள்)

ஞெலிகழை முழங்கழல் வயமா வெரூஉங்
குன்றுடை யருஞ்சுரஞ் செலவயர்ந் தனையே
நன்றில் கொண்கநின் பொருளே
பாவை யன்னநின் றுணைப்பிரிந்து வருமே 307

பல்லிருங் கூந்தல் மெல்லியற் லோள்வயிற்
பிரியா யாயினு நன்றே விரியிணர்க்
காலெறு மொள்வீ தாஅய்
முருகமர் மாமலை பிரிந்தெனப் பிரிமே 308

பாணன்;

இதைக் கேட்டதும் தலைவன் ஆழ்ந்த அமைதியில் இருந்தான். அந்த மௌனமே சம்மதத்திற்கு அறிகுறி என எண்ணிய பாங்கி;

வரை நாடனே! காலமோ வேனிற் காலம். அக்காலத்து அனல்மிகு காற்றுக் கூட எரிக்குந் தன்மையுடையது. அத்தகைய காலத்தில் வெஞ்சுரம் கடந்து பொருள் நாடிச் செல்ல உத்தேசித்துள்ளனை. ஒன்று கேட்கிறேன். உன் தலைவி சூலுற வேண்டும், அதன்பேருகப் பிறக்கப்போகும் உனது மகன் உனைப்பார்த்து புன்னகைக்க வேண்டும் அதைக் கண்டு நீ மகிழ வேண்டும் என்ற ஆசை உனக்கு இல்லையா? அதை நினைத்தாவது உன் பயணத்தைத் தவிர்ப்பாயாக.

பொன்னுலான வட்ட வடிக் காசை ஒத்த நிதம் பத்தையும், ஒளிர்விடு வளையல் அணிந்த கரங்களையும், மென்மையான தோள்களையுமுடைய நினது தலைவியை விடவா நீ தேடிப் போம் பொருள் பெரிதென எண்ணு வையாயில் அதனுல் நலன் கெடும் நுதலழகை மீண்டுப் பெறல் அரிதாகும் என்றுள் .

அதற்குத் தலைவன். பாங்கியே! என்ன செய்வது என்று தெரியாத நிலையில் ஏங்கித் தவிக்கும் எனக்குந் தலைவிக்கும் நன்மை செய்ய விரும்புவையாகில், என் செலவைத் தவிர்க்கும்படி வேண்ட வேண்டாம். அதே வேளை நான் வரும் வரையும் ஆற்றுவிப்பாயாக! என்று சொல்லி எழுந்து செல்கிறுன். விறலி இப்போ இப்பொருள் தரும் பாடலைப் பாடி யாடு.

(விறலி; அப்படியே என்றுரைத்து பாடி ஆடுகிறுள்)

வேனிற் றிங்கள் வெஞ்சுர மிறந்து
செலவயர்ந் தனையா னீயே நன்று
நின்னயந் துறைவி கடுஞ்சூற் சிறுவன்
முறுவல் காணடலி னினிதோ
விறுவரை நாடநீ யிறந்துசெய் பொருளே 309

பொலம்பகம பாண்டிற் காசுநிறை யல்கு
லிலங்குவளை மென்றே ளிழைநிலை நெகழப்
பிரிதல் வல்லுவை யாயி
னரிதே விடலையிவ ளாய்நுதற் கவினே 310

காட்சி மாறுகிறது
முதலாவது விறலியாட்டம் முடிய
முன்னெழினி அரங்கை மறைக்கிறது

காட்சி; இரண்டு

களம்; பாலை நிலத்திற் பரந்த வெளி

காலம; அந்தி நேரம்

பாத்திரர்; பாணன், பாணனின் மகள் (தோன்றுப் பாத்திரர்;
நற்றாய், செவிலி, தலைவன், தலைவி, பாங்கி)

நிகழ்ச்சி; *1.* உடன்போக்கிற் சென்ற தலைவியையிட்டு வருந்துஞ் செவிலியைத் தேற்றுதல்.
*2.*பொருள்வயிற் பிரிந்து சுரத்திடை சென்ற தலைவனை நினைத்துத் தலைமகள் வருந்தல்
3. சுரத்திடை சென்று திரும் பியவர்கள் அந்நில வெம்மை கொடுமைபற்றிக் கூறுவது.

முன்னெழினி அகல அரங்கில் பாணனிம
அவனது மகளுந் தோன்றுதல்)

பாணன்;

இன்று ஐங்குறு நூற்றில் நான்காவது பாலைத் திணைபற்றிய பாக்களில் இரண்டாவது செலவுப் பத்து எனும் பகுதியை உங்களுக்கு, எனது மகளுடன் காட்சிப்படுத்தப் போகின்றோம். அனல் மிக்க அந்நிலத்திற் பயணிப்போர் அநேக துயரத்தை அனுபவிப்பர். சில போது அங்கு நிலவும் தாங்கற் கரிய வெப்பம், வழிபறியாளர் தொலை, கொடிய மிருகங்களாற் கூட இறப்புகளும் நிகழலாம். அந்நில இயல்பிற்குப் பழக்க மில்லாதவர்கள் தாம் வாழ்ந்த இடத்திலிருந்து, பொருள்வயிற், கல்விவயிற், போர் வயிற், தூதுவயின், மற்றும் உடன் போக்குக் காரணமாகப் பிற இடத்துக்குச் செல்ல நேர்ந்தால் இந்தப் பாலை நிலங் குறுக்கிடும். அதைத் தாண்டிப் போவோர் மட்டுமல்ல அவரைப் பிரிந்திருப்பவர்களும் கவல்வர். அதையிட்டு ஓதலாந்தையார் தந்துள்ள பாடல்கள் இவை. அவற்றை மூன்று பகுதிகளாகப் பகுத்துக் காட்சிப்படுத்தப் போகின்றோம்

அதற்கு முதல் எங்களைப்பற்றிச் சில தகவல்களை உங்களுக்குத் தெரிவிப்பது நலம் என எண்ணுகிறேன். சங்க காலத்தில் எங்களைப்பற்றி ஆங்காங்கு பல தகவல்கள் உள்ளன. அவற்றில் முத்தமிழ் நாடாக விளங்கிய காலத்தில் ஆளும் மன்னன் எம்மன்னனாக இருப்பினும், அங்கு நாங்கள் சென்று பாடி ஆடிப் பரவசப்படுத்திப் பரிசில் பெறுவோம்.

இவ்வாருன பரிசுகளைப் பெற்று நிறைந்த மனதுடன் திரும்புவோர் தம்முன் எதிர்ப்படும் பாணர்களிடம், தாம் பெற்ற பரிசுகள், அவறறை அளித்த வள்ளலின் பெருமை கூறி நீங்களும் சென்று நான் பெற்ற இன்பம் பெறுக என ஆற்றுப்படுத்துவோம். அத்தகைய இரண்டு ஆற்றுப் படைகள் சங்க இலக்கியத்தில் உள்ளன. ஒன்று சிறு பாணற்றுப் படை அடுத்தது பெரும் பாணற்றுப் படை. எங்களைப்பற்றி இன்னும் பல இலக்கியம், இன வரலாற்றுச் செய்திகள் அநேகம் உள்ளன, அவற்றை அடுத்தடுத்த காட்சிப்படுத்தல்களிற் தருவோம். இப்போது காட்சியைத் தொடங்குவோமாக.

முதலாவது காட்சியின் பின்னணி இதுதான். தலைவியை நற்றாய் பெற்றாள். செவிலி அவளைச் சீராட்டிப் பாராட்டி, உயிருக்கு உயிராய், அன்பு பாராட்டி வளர்த்தாள். அப்படி இருக்கத் தலைவியின மனதில் தளிர்த்த காதலைத் தமர் ஏற்காத காரணத்தால் தலைவன் அவளுக்கு வாழ்வ ளிக்கத் துணிந்து அவளைத் தனது இடத்திற்கு மறைவாக அழைத்து செல்கிறான். இதற்குப் பாங்கி உதவுகிறாள், ஆனால் தானறிந்த உண்மையை பிறருக்கு மறைத்தாள், இல்லத்தில் மகளைக் காணுதவர்கள் பதறி எங்குந் தேடினர், பல பக்கமும் பலர் தேடிச் சென்றனர். பாங்கியும் பதறுவதுபோலத் துடித்தாள். இவற்றுள் செவிலியின் துயரம் பெரிதாகத் தோன்றியது. அவள் செல்லும் பாலைச் சுரத்தை எண்ணிப் பதறினாள். தனித்தாவது மகளைத் தேடிச் செல்ல முயல் கின்றாள். இவ்வாறு குடும்பமும் ஊரும் கலங்கும் நேரத்திற் தேடிச் சென்றவர்கள் அவள் தன் காதலியுடன் பாலைச் சுரத்தைத் தாண்டி காதலனின் இல்லத்தை அடைந்ததாகச் செய்தியின் திரும்புகின்றனர், அதை முதலில் அறிந்த நற்றாய் செவிலியிடம்;

செவிலியே, வருந்தற்க. நமது அன்பிற்குரிய மகளாகிய தலைவி, தனது விருப்பப்படியே உடன் போக்கிற்கு இசைந்து சென்றுள்ளாள். அவள் செல்லும் வழியோ; துயரமும் இடர் களும் உயிர்மீது கொண்ட பயமும் உடைத்தான அருஞ் சுரத் தையிட்டு மனங் கலங்கினேம். ஆனால் அவள் அத்தகைய இடத்தைக் கடந்து சென்றுவிட்டாள். என்கிறாள் . மகளே இதற்கான பாடலைப் பாடி ஆடி அபிநயித்துக் காட்டிடுவாயாக.

(பாணனின் மகள் பாடி ஆடுகிறுள்)

தெறுவ தம்ம நும்மகள் விருப்பே
யுறுதுய ரவலமொ டுயிர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படரடக் கலங்க
நாடிடை விலங்கிய வைப்பிற்
காடிறந் தனணங் காத லோளே 313

பாணன்;

தலைவியைத் திருமணஞ செய்வதற்குத் தமரிடம் இருந்து தடைகள் தோன்றும்போது தமரைத் திருப்திப்படுத் தியோ அல்லது தற்துணிவின்படி, எவருடைய விருப்பு மின்றித் தன் வாழ்க்கைத் துணையாகக் கொள்ள எண்ணும் தலைவன் அதற்காகத் தலைவியைக் காண்பதைச் சற்றுக் காலம் இடைநிறுத்திப் பிரிகிறுன். அப்படிச் செல்வோன் அஞ்சற்குரிய பஞ்சுரத்தைக் கடக்க வேண்டி நேரிடும்போது அவன் அச்சு ரத்திடை சந்திக்கும் இடையூறுகளிலும் பார்க்க அவர்களைச் சார்ந்த அன்புடையார் படும் கவலைகள் அவலங்கள் அள வற்றன. அவ்வகையிற் தலைவனைப் பிரிந்த தலைவியினதும் அவளது தோழியின் உணர்வுகளை இவ்விரண்டாவது பகுதியிற் காணலாம்;

தலைவனைச் செலவு தவிர்க்க இறைஞ்சிய தோழி தலை மகளிடம்; தலைவியே! அமைதியாகக் கவலையற்றுத் துயின்ற கண்கள் பிரிவுத் துன்பத்தால் மலரில் பனித் துளி துலங்கு வது போலக் கண்ணீர் வடிக்க ஏதாக இருந்த பிரிவைத் தவிர்க்கும்படி கேட்டுக்கொண்ட கோரிக்கையைப் பொருட் டாகக் கொளளாமல் மூங்கில்கள் அடர்ந்த சுரத்துடை சென்றுள்ளார். என்றும்

பொற் காசன்ன வட்டமாய்த் தேர்த்தட்டன்ன பரப்பாய்த் தோன்றும் நிதம்பத்தாளை வருந்தச் செய்து பிரிந்தவர் சென்ற வழி ஓமை அடர்ந்த மறைவில புலி பதுங்கிக் கிடக்கும் தன்மைத்தானது. என்றுஞ் சொல்லினள்.மகளே இதற்கான பாடலைப் பாடி ஆடி அபிநயித்துக் காட்டிடுவாயாக.

(பாணனின் மகள் பாடி ஆடுகிறுள்)

பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கட்
பூசல் கேளார் சேய ரென்ப
விழை நெகிழ் செல்ல லுறீஇக்
கழைமுதிர் சோலைக் காடிறந் தோரே 315

பொன்செய் பாண்டிற் பொலங்கல நந்தத்
தேரக லல்கு லவ்வரிவாட
விறந்தோர் மன்ற தாமே பிறங்குமலைப்
புல்லரை யோமை நீடிய
புலிவழங் கதர கானந் தானே 316

பாணன்;

தன்னைத் தனிக்க விட்டுச் சுரத்திடை சென்ற தலைவன் ஆங்கு என்ன பாடுறுமோ எனக் கலங்குந் தலைவி தன் பாங்கியிடம்;

வருக தோழி வருக. ஈரமற வரண்ட பாலை வெப்பக் காட்டிடை சென்றவருடன் இணைந்து சென்ற என் நெஞ்சம் இன்னுந் திரும்பி வரவில்லை. அதற்கான ஏது ஏதென அறிகிலேன்

என்றும் பிரியேன் என்று சூளுரைத்த காதலர் அதை மறந்து பிரிந்து சென்ற சுரம் கொடியது. வெப்பத்தால் வெடித்த மணற்தரை கொண்டது. அதனால் அங்கே நிற்கும் மரங்கள் பட்டு இற்றவையாக இருக்கும். அத்தகைய சுரத்தே அவர் என்ன பாடுறுமே அறிகிலேன்.

முழக்கத்தோடு எரியுங் காட்டு நெருப்பால் உண்டாகும் காற்றால் முள்ளிலவ மலர்கள் எத்துண்டு மேலெழுந்து மின்னற் பொறிகள்போல தரையில வீழும். அத்தகைய வீழுஞ் சுரத்திடை அல்லவோ எனக்குப் பிரிவுத் துன்பம் எனும் பிணியை தந்தவர் சென்றுள்ளார்,

உரிய நலன்கள் பாழுற்றுப் பரந்தன. பசலை படர்ந்தன. மூங்கிலன்ன பெருத்த தோள்கள் வில்போல வளைந்தன. எனது விருப்புகள் வீசப்பட்டன. இத்தகைய துன்பங்களை செய்து சென்றவர் கடக்க வேண்டிய வழியோ வெப்பத்தால் எரிந்த மரங்களும் மலைப்புழைகளும் உயர்ந்த சிகரங்களையுங் கொண்டது.

பாங்கியே! பாலை நிலத்தில வேங்கை மலர் பறிப்போர் பாலைப் பண் பாடினாலும். அச்சுரத்திடைச் செல்வோர் மிகவும் அஞ்சியே செல்வர். அத்தகைய கடும் வழியை என் தலைவர் கடந்தார் என நீ சொன்னதும் அங்கே நீண்ட நாட்கள் தரிப்பாரோ என்று எனது மனம் நிலை தடுமாறுகிறது. என்றாள், மகளை இதற்கான பாடலைப் பாடி ஆடி அபிநயித்துக் காட்டிடுவாயாக.

(பாணனின் மகள் பாடி ஆடுகிறாள்)

சூழ்நம் வம்மோ தோழிபாழ் பட்டுப்
பைதற் வெந்த பாலை வெங்காட்
டருஞ்சுர மிறந்தோர் தேஎத்திச்
சென்ற நெஞ்ச நீடிய பொருளே 317

கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்
மண்புரை பெருகிய மாமுளி கான
மிறந்தன ரோநங் காதலர்
மறந்தன ரோதி மறவா நம்மே 319

முள்ளரை யிலவத் தொள்ளிணர் வான்பூ
முழங்கழ லசைவழி யெடுப்ப வானத்
தருமுப்படு கனலி னிருநிலத் துறைக்கும்
கவலை யருஞ்சுரம் போயினர்
தவலி லருநோய் தலைத்தந் தோரே 320

ஆய்நலம் பரப்ப வரும்படர் நலிய
வேய்மருள் பணைத்தோள் வில்லிழை நெகிழ
நசைநனி கொன்றேர் மன்ற விசைநிமிர்ந்
தோடெரி நடந்த வைப்பிற்
கோடுயர் பிறங்கன் மலையிறந் தோரே 318

வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விழிப்பினு
மாரிடைச் செல்வோர் ஆறுநனி வெரூஉங்
காடிறந் தனரே காதலர்
நீடுற கொல்லென நினையுமென் னெஞ்சே 311

பாணன்;

இறுதியாக பாலைச் சுரத்தைப்பற்றி ஆங்கு சென்றவர்கள் அந்நிலத்துப் பயணத்தை எவ்வண் உணர்ந்தார்கள் அவர்களது அனுபவம் எத்தகையதாக இருந்தது , எதிர்ப்பட்ட தடைகளை எவ்வாறு மேற்கொண்டனர் என்பதைப் பின் வரும் இரு பாடல்களால் அறியலாம். முதலாவது ;

பாங்கியே! நமது பசுமையான தோள்களை மறந்து சென்ற காதலர் திரும்பி வந்தபோது, அவர் சென்ற ஆறு எத்தகையதாக இருந்தது என்று கூறினரென வினவினை அவர் சென்ற பாலைச் சுரத்தில் கரிய சடைகள் சுழலும் பேய்கள் கூடச் செல்ல அஞ்சும், கரிய காக்கை கழுகுகள் கூட நிலத்தில் நடமாட அஞ்சி வானத்திலே வட்டமிடும். சிறிய கண்யானைகள் வழிச் செல்வோரை அடித்துக் கொல்லும். அத்தகைய பயங்கரம் மிக்கது எனக் கூறினர்.

மகளே! இதற்கான பாடலைப் பாடி ஆடி அபிநயித்துக் காட்டிடுவாயாக.

(பாணனின் மகள் பாடி ஆடுகிறாள்)

அவிர்கொடி கொட்பக் கழுதுபுக வயரக்
கருங்கட் காக்கையொடு கழுதுவிசும் பகவச்
சிறிகண் யாகை யாள்வீழ்த்துந் திரிதரு
நீளிடை யருஞ்சுர மென்பசுந்
தோளிடை முனிநர் சென்ற வாறே 314

பாணன்;

உடன்போக்கு என்பது ஒரு துணிகர முயற்சி. தமது தமருக்கு அறியாமல் தனக்கு சில காலமே அறிமுகமும் பரிச்சியமான பிற நாட்டு வாலிபனுடன் அறிமுகமில்லாத இடத்திற்குச் செலவு செல்கையில் பாலை நிலத்தைத் தாண்டிச் செல்லும் நிலை ஏற்படுகிறது. அவ்வண்ண உடன்போக்குச் செய்து திரும்பிய பெண் தான் அடைந்த அனுபவத்தைத் தன் தோழியிடம் பின்வருமாறு சொல்கிறாள்.

தோழியே, உடன்போக்கின்போது எங்களைத் தேடித் தொடர்ந்து வந்த எனது தயைமயன்மாரிடம் எப்படித் தப்பினீர்கள் என வினவுந் தோழியே! புண்ணியம் ஓங்குக, புண்ணியம் நிலைக்குக. புண்ணியத்தைத் தருவதாயினும் அறனற்ற செயல் செய்யற்க. அருவிகள் பாயும் நாட்டுத் தலைவனையும் என்னையும் அவர்களின் பார்வையில் இருந்து காத்தது ஒரு குன்றுதான். அந்தக் குன்று நீடு வாழ்க என்றாள் மகளே இதற்கான பாடலைப் பாடி ஆடி அபிநயித்துக் காட்டிடுவாயாக.

(பாணனின் மகள் பாடி ஆடுகிறாள்)

அறஞ்சா லியரோ அறஞ்சா லியரோ
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற வருவிக்
கோளவ லென்னையை மறைத்த குன்றே 312

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூடுகிறது
முப்பத்திரண்டாவது காட்சி முடிகிறது

காட்சி; மூன்றுவது

களம்; பாலை நிலக் குறும்பு சூழ்ந்த திறந்த வெளி

காலம்; இரவு

பாத்திரர்; பாணன் விறலி, அவர்களின் மகள் (தோன்றுப் பாத்திரங்கள் ; தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி)

நிகழ்ச்சி;

பல்வயிற் பிரிவுகளில், ஒரு வயிற் பிரிந்து நெடுஞ் சுரத்திடை செல்லும் தலைவன் தனது தலைவியை நினைத்து நெஞ்சொடு இரங்கல்.

பாணன்;

பாணர்கள் ஈடுபடுஞ் செயல்களைக் கொண்டு இசைப் பாணர் , வாயிற் பாணர் என இரு வகைப்படுவர். மன்னர்களிடமும் வள்ளல்களிடமுஞ் சென்று அவர்தம் பெருமைகளைப் பாக்களாக்கி யாழ் முதலிய இசைக் கருவிகளை இசைத்துப் பாடிப் பரிசுகளைப் பெறுவோர் இசைப் பாணர், காதலரிடை ஊடலும் பிணக்குகளும் ஏற்படுங்கால் அவர்களிடம் சென்று, நயமாகப் பேசி இணக்கஞ் செய்து வைப்பவர்கள் வாயிற் பாணர். அவர்களுள் நான் இசைப் பாணன். இன்று உங்கள் முன்னிலையில் எனது மனைவி, மகளுடன் இடைச் சுரப் பத்துப்பற்றிய கருத்துகளைக் காட்சிப்படுத்த வந்துளோம். இனி நிகழ்வைத் தொடர்வோம்.

தலைவியைப் பிரிந்து சுரத்திடை செல்லுந் தலைவன், தான் தவிக்க விட்டு வந்த தன் தலைவியை தன் செலவின் போது காணும் நிகழ்வுகளும் தோற்றங்களும் தலைவியை எண்ணி எண்ணி மனங் கவல்கின்றான். அத்தகைய சில எண்ணக் கோவைகளைக் கேட்போம்.

காய்ந்து பிழந்த தரையையுடைய சுரத்தில் பரட்டைத் தலைப் பருந்தின் பிரிவினுல் வாடும் தச்சனின் உளிபோன்ற வாய்ப் பேடை ஆங்குள்ள உச்சிப் பக்கம் வரண்ட ஓமை மரத்தில் ஏறி தன் இணையை அழைக்க எண்திசை பரவக் கூவும். அத்தகைய காடுகளடர்ந்த பல மலைகளைக் கடந்து சென்று விடலாம் ஆனல் மனதிலுள்ள ஒண்டொடியாளின் நினைப்பு என்னை விட்டு அகலாது.

நான் செல்லும் இவ்வெஞ்சுரத்திலே ஞாயிற்றின் ஒளிக் கதிர்கள் அனற் கதிர்களாக வேனிற் காலத்தை நீடிக்கச் செய்கின்றன. அதனல் மூங்கில்கள் உலர்கின்றன. கற்பாறைகள் வெடித்துப் பிழக்கின்றன. இத்தகைய வெம்மையிலும் எனது நெஞ்சில் நிலைத்த தலைவியின் நினைவு குளிர்ச்சியைத் தந்து ஆறுதல் அளிக்கின்றது. இவ்வாறு தனக்குள்ளே எண்ணி வெதும்புகின்றன். விறலியே இதற்கான பாடல்களை பாடி ஆடிடுகவே!

விறலி பாடி ஆடுகிறாள்

உலறுதலைப் பருந்தி னுளிவாய்ப் பேடை
யலறுதலை யோமை யங்கவட் டேறிப்
புலம்புகொள் விளிக்கு நிலங்காய் கானத்து
மொழிபெயர் பன்மலை யிறப்பினு
மொழிதல் செல்லா தொண்டொடி குணனே 321

நெடுங்கழை முளிய வேனி னீடிக
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயின முன்னே யினியே
யொண்ணுத லரிவையை யுள்ளுதொறுந்
தண்ணிய வாயின சுரத்திடை யாறே 322

பாணன்;

உலகத்தில், நீங்கள் எதற்கு அஞ்சுகின்றீர்கள் என ஒரு மகானிடம் அறிஞர் ஒருவர் கேட்டார். அதற்கு அவர், உலகத்தில் உள்ள எவற்றின் பார்வையிலும் இருந்து ஒருவர் தப்பி விடலாம். ஆனல் தத்தமது நெஞ்சின் உணர்விலிருந்து எவராலும் தப்பி ஒழிந்துகொளள முடியாதென்று அவர் பதிலளித்தார். தன்னெஞ்சே தன்னைச் சுடும், கொல்லும் என்பன இதன் சார்பான உறுதியான கருத்தே. அதன்படி தலைவியைப் பிரிந்து வந்த தலைவன் அப்பிரிவிற்குப் பல காரணங்களைக் கற்பித்தாலும் அவன் தனித்திருக்கும்போது, அவன் நெஞ்சமே அவனுடன் பேசும். அதனல் அவன் தன் நெஞ்சுடன் இரங்குவான். இந்தத் தன்னுட் தானே இரங்கும் கருத்தை வாய்விட்டுச் சொல்லும் வலுவற்ற பொருட்களை விழித்துத் தூது விடுவதுபோல தனக்குள்ளே அழுங்குவர். இதுவே தூதுப் பாடல் இலக்கிய வர்ச்சிக்குக் கருவாக அமைகிறது. இவ்வகையில் தலைவன் தனக்குள்ளே:
கூரிய பற்களை உடைய செந்நாய் தனது கருப்ப கால நோயாகிய வயாக் கொண்ட தனது பிணவின் ஆசையைப்

போக்கத் தக்க உணவுகு பன்றியைத் தேடி அலையுளு சுரத் திடை எனக்கேற்பட்ட கவலைகளை நீந்திக் கடக்க முடிந்தாலும், என் நெஞ்சத்தே அகலாது நிலை கொண்டு தண்மை தருவது, நான் பிரிந்து வந்த தலைவியின் தண்ணளி மிக்க பண்புகளேதான்!

காட்டனல் கதித்தெழும் சுரத்திடை மானென்று தன் பிடியுடனும் குட்டியுடனும் தரித்து நிற்பதற்குத் தக்க நிழல் கிடையாமற் தவிக்கும் இந்த வெம் பாலையின் கண்ணே தவிக்கின்ற என் மட நெஞ்சமே! இக்கொடுமையான தருணத்தே தக்க இனிமை தருவது நான் பிரிந்து வந்த என் தலைவியின் தண்ணளி மிக்க தமிழ் அன்பேதான்!

சிறு கண் யானை வெஞ்சுர வெப்பத்திற்கு அஞ்சி தன் சிறு புள்ளிகளும் வரிகளும் செறிந்த தும்பிக்கையைத் தரையிற் படாதபடி உயர்த்திச் செல்லும். அத்தகைய வெங்கானத்தே செல்லும் போது நானடையும் துயரத்தைப் பிரிந்து வந்த தலைவியின் தண்ணளியின் எண்ணமே அகற்றுகிறது. மகளே இக்கருத்து அமைந்த பாடல்களை இசைத்து நடனமாடுகவே!

விறலி பாடி ஆடுகிறாள்

வள்ளெயிற்றுச் செந்நாய் வயவுறு பிணவிற்குக்
கள்ளியங் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ்சுரக் கவலை நீந்தி
வந்த நெஞ்சநீ நயந்தோள் பண்பே 323

அழலவிர் நனந்தலை நிழலிடம் பெறாது
மடமா னம்பிணை மறியொடு திரங்க
நீர்மருங் கறுத்த நிரம்பா வியவி
ளின்னு மன்ற சுரமே
யினிய மன்றயா னெழிந்தோள் பண்பே 326

பொறிவரித் தடக்கை வேத லஞ்சிச்
சிறுகண் யானை நிலந்தொடல் செல்லா
வெயின்முனி சோலைய வேயுயர் சுரனே
யன்ன வாரிடை யானுந்
தண்மை செய்தவித் தகையோள் பண்பே 327

நெஞ்சந் தடுமாறுதல என்னும் மன நிலை மாந்தருக்கு ஏற்படுவதுண்டு. தான் செய்தது தவறு அல்லது சரியா என

ஒரு மனப்போராட்டம் ஏற்படும்போது இரு பக்க வாதம் ஏற்படுவதும், அதை அந்த மனமே மாறி மாறி நடாத்துவதும் இயல்பு. அத்தகைய தருணத்தில் அந்த மனமே உளமார அறிந்த உண்மையை எதிர்த்து மறுக்கவும், அந்த உண்மை தவருனது என்பதை நிலைநிறுத்த ஆதாரங்களைத் தேடுவதும் உண்டு. இந்த நிலையிற் தன்னெஞ்சைத் தானே அறிந்து தன்னெஞ்சொடு புலம்பும். இங்கே அதைப் போன்ற நிலையிற் தலைவன் தவிக்கின்ருன். பிரிந்து வந்த தலைவியை இட்டு இவ்வாறு சிந்திக்கின்ருன்;

மழைத் துளி அருமையாக வீழ்ந்து, வெப்பந் தணிந்து மலர்கள் மலர்கின்றன. இனி நீங்கள் இலகுவாக இச்சுரத்தைக் கடக்கலாம் என்று பாலை நில உழையர்கள் சொல்கின்றனர். அப்போது அவன் தனக்குள்ளே; வெப்ப மாயினுந் தட்பமாயினும் என் தலைவியில்லாமல் நான் இந்த அரிய வழிபொருந்திய முது சோலையிடத்துப் போவது முடியாத காரியமே என இரங்கினேன்.

மனித நடமாட்டமற்ற, பாழ்பட்ட வெப்பந் தகிக்கின்ற சுரத்தைக் கடந்து செல்லும்போதுகூட, அணிந்த ஆப ரணங்கள் நெகிழத், தோள் மெலியத் தவிக்கும் எனது தலைவி உறுதிமிக்க என் நெஞ்சத்தைத் தன்பால இழுத்துக்கொண்டாள்

மனதே, இப்போது வெயிற் சுரத்தாற் பொடிபட்ட காட்டைக் கடந்து வந்துவிட்டோம் என்று களிப்புருதே. இனிமேற் கொண்டு செல்வதைத் தவிர்ப்பேனுக. ஏனெனில் அவளின் துன்பக் கண்ணீர் உகுத்து, அழகு நலன் கெட்டு, நான் செல்லும் வெஞ்சுரத்தின் கனவே எண்ணி வருந்து வளே. அதை நான் எவ்வண் கடப்பேன்‹

நுண்மழை தளித்தென நறுமலர் தாஅய்த்
தண்ணிய வாயினும் வெய்ய மன்ற
மடவர லின்னுணை யொழியக்
கடமுதிர் சொலைய காடிறந தேற்கே 328

ஆள்வழக் கற்ற பாழ்படு நனந்தலை
வெம்முனை யருஞ்சுர நீந்தி நம்மொடு
மறுதரு வதுகொ றனே செறிதொடி
கழிந்துகு நிலைய வாக
வொழிந்தோள் கொண்டவென் னுரங்கெழு நெஞ்சே329

வெந்துக ளாகிய வெயிற்கட நீந்தி
வந்தன மாயினு மொழிகினிச் செலவே
யழுத கண்ண ளாய்நலஞ் சிதையக்
கதிர்தெறு வெஞ்சுர நினைக்கு
மவிர்கோ லாய்தொடி யுள்ளத்துப் படரே 330

வருந்தல் இரு வகைப்படும். ஒன்று உடலின் உள்ளும் புறமும் ஏற்படும் உறுத்தல்களால் நேரிடுவது. அடுத்தது உள்ளத்தே தோன்றும் உணர்வின் உறுத்தல்களால் விளைவது. உள்ளத்து உறுத்தல்கள் உடம்பின் உறுத்தல்களிலும் கொடியது. அத்த கைய உள்ள உறுத்தலால் வேதனைப்பட்டுத் தன்னுட்தானே நொந்து இரங்கிய ஒரு நிகழ்ச்சியைத்தான் இந்தக் காட்சியில் எடுத்துரைத்தோம். இத்தகைய நினைந்திரங்கல் தன்னுள்ளே வெளிப்படும்போதெல்லாம் இதை வேறு ஒருவருடன் பகிர்ந்து கொண்டால், மனம் ஆறுதலடையுமே என்ற எண்ணந் தோன்றும். ஏற்ற வடிகால் கிடைத்ததும், அது காட்டாற்று வெள்ளமாகப் பாய்ந்து வெளியேறும். அத்தகைய நிழ்வினை இப்போது சொல்லப் போகின்றோம்.

தலைவியைப் பிரிந்து வெஞ்சுரத்தைக் கடந்து சென்று, தான் எண்ணிய கருமத்தை இனிதே முடித்துத் திரும்பிய தலைமகனைத் தோழி காண்கிறாள். அவள் முதலில் அவன் கடந்து சென்ற பாலைக் கொடுமைபற்றிக் கேட்கிறாள், அவன் தனது பாடுகளை எடுத்துச் சொல்லும்போது இடைக்கிடை தானடைந்த பிரிவுத் துன்பத்தை வெளிப்படுத்துகிறான். அதை உற்றுக் கவனித்த பாங்கி. இத்தகைய அன்புள்ளங் கொண்ட உன்னால் அவளைப் பிரிய எவ்வாறு மனந் துணிந்தது என வினவ அவன் கூறுகிறான்;

காட்டு எரியையும், அதன் காந்தலையும் உண்டு உள்ளடக்கிய நெடுவழிச் சுரத்திடையே ஏற்பட்ட களைப்பின் காரணமாகச் சற்றுக் கண் மூடித் துயில்வேன். அப்போது கூட மலை செறிந்த நகரிடை வாழும் தேமல் படர் மேனியும், நறுமணங் கமழ் கூந்தலுமுடைய எனது தலைவியையே காண்பேன்.

வெப்பக் காலத்தில் அங்குள்ள மரங்களின் அடிகளிற் கிடக்கும் காய்ந்த சருகுகளின் சலசலப்பொலி கேட்டு அம் மரத்திற் தங்கித் தான் கொண்டு வந்த இரையை உண்ணும்

பறவைகள் அஞ்சி வேறு இடத்திற்குச் செல்லுந் தகைத்தான அந்த வெஞ்சுரத்தை என் காதலியுடன் இணைந்து கடப் பதாயின், அச்சிரமம் எனக்கு ஒரு பொருட்டல்ல என்று ரைத்தான். இந்தப் பொருள் அமைந்த பாடல்களைப் பாடி நடித்து நடனமிடுக மகளே!

(பாணன் மகள் பாடி ஆடுகிறாள்)

எரிகவர்ந் துண்ட வென்றூழ் நீளிடைச்
சிறிதுகண் படுப்பினும் காண்குவென் மன்ற
நள்ளென் கங்கு னளிமகி னெடுநகர்
வேங்கை வென்ற சுணங்கிற்
றேம்பாய் கூந்தன் மாஅ யோளே 324

வேனி லரையத் திகிலியொலி வெரீஇப்
போகில்புகா வுண்ணது பிறிதுபுலம் படரும்
வெம்பகை யருஞ்சுர நலியா
தெம்வெங் காதலி பண்புதுணைப் பெற்றே 325

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்கிறது.

33 வது காட்சி முடிகிறது.

காட்சி; நான்கு

களம்; குறிஞ்சி நிலத்துச் சிறுகுடி ஒன்றிற் தலைவி இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்; பாணன், விறலி. (தோன்றுப் பாத்திரர்; தலைவி,பாங்கி)

நிகழ்ச்சி; தலைவன் பிரிவினுல் வாடுந் தலைவி மாலை வழிச் செல்கையில் அவன் என்ன பாடுறுமோ என்று பரதவித்துத் தன் மன வேதனையைப் பாங்கியுடன் பகர்ந்து பகிர்ந்து பரிதவிப்பது.

பாணன்;

பாணன் என்னும் குடி சார்ந்த எங்களது பண்டை வரலாறுகளை இடைக்கிடை சொல்வதால் சமுதாயத்திலும் இலக்கியத்திலும் இருந்த சிறப்புகளைப்பற்றி அறிந்துகொள்ள முடியும். வைணவ சமயஞ் சார்ந்த திருப்பாணழ்வார், சைவ சமயஞ் சார்ந்த பாண பத்திரர் என்னும் இறையடியார்களின் பெருமை பாணர்களின் மாண்பை எடுத்துரைக்க வல்லன. இசையோடு தொடர்புடைய பாணர்களை இசைப் பாணர் யாழ்ப் பாணர் என இருவகையாகப் பிரிப்பர். குரலிசையால் மகிழ்விப்போர் இசைப் பாணரெனப்படுவர். ஏழு நரம்புகளைக் கொண்ட சிறு யாழ் மீட்டுவோர் சிறு பாணர், இருபத்தொரு நரம்புகளை மீட்டுவோர் பெரும் பாணர். இவர்களின் பெயரா லேதான், சிறு பாணற்றுப் படை, பெரும் பாணற்றுப் படை எனும் நூற்பெயர்கள் தோன்றின என்பாரும், அவை பாட்டு வரி அளவினுல் அப்பெயர் பெற்றன என்பாரும் உளர், இவர் களை விட மண்டைப் பாணரைப்பற்றிய செய்திகளும் உள்ளன. அடுத்த பத்தின்போது மேலும் எங்களைப்பற்றிய தகவல்களை அறியலாகும்.

பாலைச் சுரத்திடை தனது நலனுக்காகச் பிரிந்து சென்ற தலைவனையிட்டுக குறிஞ்சி நிலத்தில் வாழுந் தலைவி என்ன பாடுறுகிறுள். என்ன நினைக்கிறுள், அதைத் தன் பாங்கியோடு எவ்வண் பகிர்ந்து தன்னைத் தேற்றிக் கொள்கிறுள் என்பதையிட்டுப் புகலப்படும் தலைவியிரங்கு பத்துப் பகுதியைக காட்சிப்படுத்துவோம்.

தன் தலைவன் பிரிந்த நாட் தொட்டு, பாலைச் சுரத்திடைச் செலவில், அவர் எவ்வண் வருந்துவரோ எனத் துக்கிக்குந்

தலைவியிடம் வந்து; அவர், கடத்தற்கரிய வழியை கடந்து விட்டாரென்று தோழி சொல்லினள். செவி மடுத்த தலைவி;

எனது அன்னையை நிகர்த்த அன்புடைப் பாங்கியே வாழ்க. நல்லது செப்பினை. பாங்கியே! வைரம் பாய்ந்த அடியைக் கொண்ட கடம்ப மரத்தின் வெண் மலர்கள் வீசும் நறுமணம், அவ்வழிச் செல்வோர் மனதில் தாம் விட்டுப் பிரிந் தோரை நினைவுப்படுத்தும் என்பர். நம் தலைவர் அத்தகைச் சுரத்திடை சென்றபோது, இத்தகைய சிந்தனைகள் தோன்றவில்லையா/

நல்லது கெட்டதைப் பகுத்தறியும் பக்குவமற்ற கொடிய மிருகங்களின் கொடுமையை உணர்ந்த பிறகாவது, அவை, ஐயனே! காதலரைப் பிரிதல் மிகமிகக் கொடியது. ஆதலால் மேற்கொண்டு செல்வதைத் தவிர்தி என்று கூறவில்லையோ.

மற்று, அங்குவாழ் பறவைக் கூட்டங்களாவது; தலைவி யைத் தணக்க விட்டுப் பிரிந்து வருந் தலைவா! இதோ பார் இவ்வெஞ்சுரத்திற் கூட நாங்கள் எந்துணைகளைப் பிரியா துள்ளோம். எங்களைப் பார்த்த பிறகும் எப்படி உனது துணையைப் பிரிந்து செல்ல நினைக்கின்றனை என்று கேட்கவில்லையா?

பாங்கியே நீடுழி வாழ்க!. சிறு இலை நெல்லி நிறைந்த நெடுவழிச் செலலும் என் தலைவனைப் பின் தொடர்ந்து, பல விதழ் செறிந்த மலர்போன்ற கண்கள் கண்ணீர் பொழியும் என் நெஞ்சம் பின் தொடர்ந்ததை அறியாத அளவு அவர் கல் நெஞ்சம் படைத்தவரோ சொல்.

இரத்த வண்ணக் கழுகுகள், புலால் நாற்றத்தை நுகர்ந்து ஆரவாரிக்கும் சிறு குன்றுகள் நிறைந்த வெஞ்சுரம் மிகக் கொடியதென்பர். அத்தகைய நெடு வழியைக் கடந்து என் தலைவன் செல்கின்றார் என எண்ணும்போது; எனது மனம் படும்பாட்டை அறிகிலையே. விறலி, இப்பொருள் தரும் பாடலை நீ பாடு. மகளே! அப்பாடற் கருத்தை உணர்த்தும் வண்ணம் நீ ஆடுகவே.

(விறலி பாட, அவள் மகள் ஆடுகிறாள்)

அம்ம வாழி தோழி யவிழினர்க்

கருங்கண் மராஅத்து வைகுசினை வான்பூ
வருஞ்சுரஞ் செல்லுந ரொழிந்தோ ருள்ள
வினிய கமழும் வெற்பி
னின்ன தென்ப வவர்சென்ற வாறே 331

அம்மவாழி தோழி யென்னதூஉ
மறனில மன்ற தாமே விறன்மிசைக்
குன்றுகெழு கானத்த பண்பின் மாக்கணங்
கொடிதே காதலிப் பிரிதல்
செல்க கோய வென்ன தவ்வே 332

அம்மவாழி தொழி யாவதும்
வலலா கொல்லோ தாமே யவண
கல்லுடை நன்னாட்டுப் புள்ளினப் பெரிந்தோ
டியாஅந் துணைபுணர்ந் துறைதும்
யாங்குப் பிரிந்துறைதி யென்ன தவ்வே 333

அம்ம வாழி தோழி சிறியிலை
நெல்லி நீடிய கல்காய் கடத்திடைப்
பேதை நெஞ்சம் பின்செலச் சென்றோர்
கல்லினும் வலியர் மன்ற
பல்லித ழுண்க ணழப்பிரிந் தோரே 334

அம்ம வாழி தோழி நம்வயி
னெய்த்தோ ரன்ன செவிய வெருவை
கற்புடை மருங்கிற் கடுமுடை யார்க்குங்
காடுநனி கடிய வென்ப
நீடி யிவண்வருநர் சென்ற வாறே 335

இவற்றையெலாம் தலைவி கூறக் கேட்ட தோழி; தலைவியே அவர் பிரிந்து செல்லவுள்ள தகவலை உரைத்தபோதி, தானிட்ட சூளை மீறினர் எனக் கவன்றனை. இப்போதோ அந்தச் சினம், செல்லும் செலவிடை எதிர்படும் பாலைச் சுரம் அவர்க்கென் செய்யுமோ என்றி பரிதவிக்கின்றனையே என்றாள்.

அது உண்மைதான் பாங்கி. முன்பு பிரியேன் பிரியென் என இரைந்தவர் நிலையற்ற பொருள் தேடிப் பிரிந்தமை மனதிற்குத் துன்பத்தையே தருகின்றது. எனினும் அவர் அதற்காகக் கடந்து செல்ல வேண்டிய பாலைச் சுரத்தைப்பற்றி நினைக்கும்போது, தளர்கிறதே!.

ஏன் தோழி? உண்மையாகவே அன்புளதென்று காட்டி இரைந்தவர் துயர் படர்ந்த பெரிய பாலையைக் கடந்து

செல்வதற்குக் காரணம் என்னிலும் பார்க்க அவர் தேடச் சென்ற பொருள் மிகப் பெரியதோ!

சாரலில் வளர்ந்த இலையில்லாத இலவ மரங்களில் மலர்ந்த செம்பூக்கள் அவை நிற்கும் குன்றுகள் பற்றி எரிவதுபோலத் தோன்றுங் கொடிய வழியிடைப் பிரிந்து செல்ல உறுதி கொண்டவரது உள்ளம் மிகமிக வலியதே.

நமது காதலர் சென்ற கடிய வழியிடையே சிறிய இலைகளிடையே மலரிம் குறுவிதழ் மலர்ச் சிறு கினை வேம்பின் பழத்தை உண்ண வெளவால்கள மாலைக் காலத்தில் வருமே. அத்தகைய மாலைக் கால மில்லாத வழியிடையிலோ சென்றுள்ளார்.

மூங்கிலிடை உண்டாகும் எரியைப்போல, எங்களைப் பற்றி ஊரவர் தூற்றும் அலர் எரிகிறது . இந்த நிலையில் என்னைப் பிரிந்து சென்றவர் எனது நிலைபற்றிச் சிந்தியாத காரணம் எதுவோ என வெதும்பினாள்.

இங்கே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பிரிவின் தவிப்பு உணர்வை நாம் உற்று நோக்கலாம். ஆண்கள் அவற்றை தனக்குள்ளே அடக்கி அமுக்கி எரிமலையாக்கி உள்ளத்தே குமுறுவார்கள். பெண்களால் அவ்வாறிருக்க முடியாது. அதைத் தனக்கு நம்பகமானவரிடங் கூறி முறையிட்டாற்றான் மனந் தேறும். அவ்வழியில் தலைவி தனக்குள் நினைந்து இரங்குத் தவிப்பைத் தனது தோழியுடன் பகிர்ந்து ஆறுதல் அடைகிறாள். விறலியே இப்பொருள் அமைந்த பாடல்களைப் பாடுக, மகளே அப்பொருள் விளங்க நடனமாடுக.

அம்ம வாழி தோழி நம்வயிற்
பிரியலர் போலப் புணர்ந்தோர் மன்ற
நின்றதில பொருட்பிணி முற்றிய
வென்றூழ் நீடிய சுரனிறந் தோரே 336

அம்ம வாழி தோழி நம்வயின்
மெய்யுற விரும்பிய கைகவர் முயக்கினு
மினிய மன்ற தாமே
பனியிருங் குன்றஞ் சென்றோர்க்குப் பொருளே 337

அம்ம வாழி தோழி சார
விலையில மலர்ந்த வோங்குநிலை யிலவ

மகிலயுறு தியிற் காமுதற் றேன்றும்
பிரிவருங் காலையும் பிரித
லரிதுவல் லுநர்நங் காத லோரே 338

அம்ம வாழி தோழி சிறியிலைக்
குறுஞ்சினை வேம்பி னறும்பழ முனீஇய
வாவ லுசுக்கு மாலையு
மின்றுகொல் காதலர் சென்ற நாட்டே 339

அம்ம வாழி தோழி காதல
ருள்ளார் கொன்னு மருளுற் றனங்கொல்
விட்டுச் சென்றனர் நம்மே
தட்டைத் தியி னூரல ரெழவே 340

(விறலி பாட, அவள் மகள் ஆடுகிறாள்)

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்கிறது.
34 வது காட்சி முடிகிறது.

காட்சி; ஐந்து

களம்; பாலை நிலத்தில் பாதை ஓரம்;

காலம்; அந்தி நேரம்

பாத்திரர்;

பாணன், பாண்மகள் (தோன்றுப் பாத்திரர். தலைவன், தலைவி, பாங்கி)

நிகழ்ச்சி;

இளவேனிற் காலம் வந்தும் விரைவில் வருவேன் என்று சூளுரைத்துச் சென்ற தலைவன் திரும்பாததைக் கண்ட தலைவி பாலைச் சுரத்தில், அவர் என்ன பாடுறுமோ என்று நெஞ்சில் இரங்கித் தவித்து அதைப் பாங்கியுடன் பகிர்ந்து கொள்வது.

பாணன்;

அவையோரே வணக்கம். இன்று ஐங்குறு நூற்றின் 35 பகுதி யான இளவேனிற் பத்தை உங்கள் முனனர் காட்சிப் படுத்த இருக்கிறேரும். நாம் வாழும் உலகின் பூமத்தியக் கோட்டை அடுத்த வலயத்தில் ஆதவனின் ஒளிக் கதிர் விழும் ஏதினைக் கொண்ட கால வேறுபாடுகளை இரண்டு மாதங்கள் கொண்ட இளவேனில், முதுவேனில், கார் காலம், கூதிர் காலம், முன் பனிக் காலம், பின்பனிக் காலம் எனக் கொள்வர். இவற்றில் இளவேனிற் காலம், சித்திரை மாதம் ஆரம்பித்து வைகா சியுடன் அடங்கும். இக்காலத்திற் பிரிந்திருத்தல் எத்தகைய துன்பத்தைத் தரும் என்பதைத் தலைவியின் கூற்றுக ஓத லாந்தையார் தந்துள்ளார். அதிலே இக்காலம் எத்தகையது என்பதைத் தெளிவாகக் காணலாம்.

இங்கே ஒரு திணை மயக்கு உளது. ஆயினுந் தலைவன் இப்போது பாலைச் சுரத்திடைப் பயணித்துக் கொண்டிருக் கிறான். தலைவி குறிஞ்சி நிலத்தில் அவனைப் பிரிந்து தவிக் கின்றாள். தன் காதலனின் துயரங்கள் அவள் நெஞ்சில அலை பாய்கின்றது. அவளுக்குத் தெரிந்ததெல்லாம் பாலை வெஞ்சுரம் கொடியது என்பதே அன்றி அத்திணைக்குரிய உரி, கருப் பொருள் எத்தகையதென்பதை அறியாள். ஆயினுந் தான் வாழும் குறிஞ்சி நிலத்தை நன்கறிவாள். எனவே, தன் இரங்கலின் போது தான் வாழும் நில அனுபவத்தையே எடுத்துரைப்பது மரபு, எனவே இப்பத்தில் உள்ளவை திணை மயக்கெனல் வழுவுளது எனல் பொருந்தாது.

ஒவ்வொரு காட்சியின் ஆரம்பத்தில் எங்களைப்பற்றிச் சில தகவல்களைச் சொல்லும் ஒழுங்கில்; இன்று பின் வருந் தகவல்களைத் தருகிறோம். தலைவன், தலைவியிடையே பிணக்கு ஏற்படுங் காலத்திற் பாணன் தூது செல்வான். அவர்களிடை வாயிற் பணி மேற்கொண்டு ஊடல் தவிர்த்து வைப்பார்கள். சில வேளைகளில் விறலியருந் தூது செலவர். இதனைச் சுப்பிரதிபக் கவிராயரின் விறலிவிடு தூது உறுதிப்படுத்தும்.

எங்களை வைரியர், சென்னியர், செயிற்றியர், மதங்கர் என்றும், பெண்களை பாடினி, விறலி, பாடடி, மதங்கி, பாண் மகள், பாடல் மகளிர் என்றும் அழைப்பர். இனிக் காட்சியை ஆரம்பிப்போம்;

இளவேனிற் பத்தில் வரும் பத்துப் பாடல்களிலும் வரும் பத்துப் பாடல்களின் முதலடி; அவரோ வாரார் தான்வந் தன்றே எனத் தொடங்கி பொழுதே என முடியும். மூன்றடிச் செய்யுட்களைக் கொண்டவை. நான் விரைவிற் திரும்பி வந்து விடுவேன் என்ற சூள் பொய்க்க, உரைத்த அவர் வாராது விட்டார். ஆனல் இளவேனிற் காலம் வந்து விட்டதே பாங்கி என ஏங்குவதே இதன் பொருள்.

வரையும் வரை சார்ந்த அதன் சாரலும் நிறைந்த நிலத்தே, தலைவி தன் இல்லத்தே அமர்ந்திருக்கிறாள். அங்கே வந்த பாங்கி தலைவியின் வாட்டத்தைப் பார்த்து; ஏன் இத்தனை சோகம்?. எதையோ இழந்தவள்போல் எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டு இருக்கின்றனை. அதன் காரணத்தை நான் அறியலாமா? எனத் தலைவி;

பாங்கியே! அதற்கு நிறைய ஏதுக்கள இருக்கின்றன. தென்றல் காற்று எனக்கு, அவருக்கோ அனற்காற்று! . பார்க்கும் இடமெல்லாம் பசுமை எனக்கு! அவர்க்கோ பட்ட மரங்கள் வாடிக் காய்ந்த பற்றைகள் பேய்போற் தலை விரித்துப பசுமையில் வெண்மை படர நிற்கும் கள்ளி மரங்கள், வெம்மையாற் செம்மை படிந்த மணற் தரை அவருக்கு. வயிறுர உண்ணுமளவு கிடைக்கும் தேனும் தினை மாவும், மூங்கிலரிசிச் சோற்றுடன் இளமான் இறைச்சியும் கொண்ட உணவு எனக்கு!. உண்ணவே உணவில்லாத நிலை அவர்க்கு, எங்கும் கல்லென்று பாயும் அருவிகளின் குளிர் நீர் என் தாகத்தைப் போக்கும். ஆனல்; நா வரள உள்ளங்கை அளவு

நீர்தானும் இல்லாமல் வாடும் நிலை அவர்க்கு! இவற்றை எண்ணும்போது இந்த நிலை எத்தனை நாள், எத்தனை காலம் நீக்குமே என எண்ணிக் கொண்டிருக்கிறேன். என்றாள். அதைக் கேட்ட பாங்கி;

தலைவி! நீ அவர்பாற் கொண்ட மட்டற்ற அன்பால் இவ்வாறெலாம் எண்ணி ஏங்குகின்றனை. அவரும் உன்பாற் கொண்ட மட்டற்ற அன்பால் உள்ளங் கலங்குகின்றார் என்பதே உண்மை. காத்திருப்பவனுக்கு கணப் பொழுது ஒரு யுகம்! அவ்வகையில் உனது காலக் கணிப்புக் கதிக்கின்றது. காத்திருக்கச் செய்பவன் எப்போதும் கணம் கணமாகததான் கழித்துக் காலக் கணிப்பின்படி எள்ளளவும் பிசகாது நேரத்தை உருட்டிக் கொண்டிருக்கிறான் என்பதை அறிகிலையோ/ என்றாள்; தலைவியோ:

சொல்வது எளிது பாங்கி! இதோ பார். குயிற் பெடை கூவ முதல் வருவேன் என்றவர், பின்பனி தந்த பேரளவு நீர் கொண்ட அருவிகளிற் சிறுகச் சிறுக வற்றுங் காலமான இளவேனில் வந்தது. ஆனால் அவரின்னும் வரவில்லையே!

இதோ பெரிய கிளையுடன் நிமிர்ந்து அடர்ந்து நிற்கும் நுணை மரம் மலர்ந்து நறு மணம் வீசுகின்றதைப் பார். அது அவர் திரும்பி வரக் குறித்த கால எல்லையாகிய இளவேனில் வந்தும் அவர் வந்த பாடில்லையே!

அவர் உரைத்த சூள் பொய்த்து விட்டது. அவர் வந்திலர். ஆனால், அவர் குறித்த இளவேனில பொய்க்காமல் வந்ததென்பதை உறுதியாக நிலைத்து வளர்ந்துள்ள கோங்கு மொட்டுகள தன் கட்டவிழ்த்து முகங்காட்டத் தவறவில்லையே!

தோழி! நறுமணம் வீசும் குரவ மரம் கைவினை பெருது, தானே இயற்கையாய் அமைந்த அழகிய பாவை போன்ற மலர்களைச் சொரியத் தொடங்கி இளவேனிற் காலம் வந்திறுத்தது எனத் தெளிக்கின்ற போதிலும் அக்காலத்தின் பேரில் அறுதியிட்டு சென்றவர் வந்திலரே!

மேலும்; இந்தத் தரையைப் பார். இளவேனில் வந்து விட்டது என்று, இங்கு படர்ந்துள்ள மோசி மல்லிகைக் கொடி மலர்ந்து, கருங் கூந்தல்போல் ஆக்கி விட்டதே, ஆனால் அவர் இன்னும் வரவில்லையே என்று இரங்கி இயம்பினாள்.

உஅஉ

பாண்மகளே இப்பொருள் பொதிந்த பாடல்களைப் பாடுக . மகளே! அதற்கு அபிநயம் பிடித்து ஆடுக!
(பாண்மகள் பாட, அவள் மகள் ஆடுகிறாள்.)

அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற் பெடை யின்குர லகவ
வயிர்க்கெழு நுண்ணற னுடங்கும் பொழுதே 341

அவரோ வாரார் தான்வந் தன்றே
சுரும்புகளித் தாலு மிருஞ்சினைக்
கருங்கா னுணவங் கமழும பொழுதே 342

அவரோ வாரார் தான்வந் தன்றே
திணிநிலைக் கோங்கம் பயந்த
வணிமிகு கொழுமுகை யுடையும் பொழுதே 343

அவரோ வாரார் தான்வந் தன்றே
நறும்பூக் குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே 344

அவரோ வாரார் தான்வந் தன்றே
புதுப்பூ வதிர முஅய்க்
கதுப்பற வணியுங் காமர் பொழுதே 345

இவ்வண் தலைவி இரங்கியதைச் செவியுற்ற பாங்கி. அவளருகில் வந்து, அரவணைத்து;
தலைவியே! . அஞ்சற்க. இந்த உலகந் தோன்றி எத்தனை இளவேனிற் காலங்கள் வந்திறுத்தன. இன்னும் எத்தனை கோடி இளவேனிற் காலம் வருமோ அறிகிலோம். இள வேனில் பருவ காலச் சுழற்சியால் நிலையாகத் தொடர்ந்து தோன்றும் மாற்றம். ஆனால் நமது வாழ்க்கை அத்தரத்தது அல்ல. நிகழ வேண்டிய பல காரியங்கள் முன்பின்னுக நடக் கலாம். எனவே அஞ்சற்க. உன்னைப் பிரிந்த காதலர் உன்னி டத்தில் வந்தே சேர்வார். ஆகவே மனதை அலையவிட்டுக் கலங்குதலைத் தவிர்ப்பாயாக.

எப்படி அது முடியும் பாங்கி! இங்கு தோன்றும் இளவேனிற் கால இயற்கை மாற்றங்களே என்மனதில் அந்த உணர்வை ஊட்டுகின்றதே. இதோ அந்த செங்கண் குயில் என்ன சொல்கின்றது? பாதிரி மரம் மலர்ந்தி விட்டது. அது இளவேனில காலம் வந்திறித்ததி என்பதைப்போல் அல்லவா கேட்கிறது. ஆனால்; அவர் இன்னும் வந்திலரே!

மேலும், இந்தப் புன்கை மரத்தைப் பார். அதன் பட்டையில் பரந்துள்ள நெற் பொரி அன்ன புள்ளிகள் பசலை படர்ந்த மேனியை நிகர்க்கின்றது. பூ மொட்டுகள் இளமுலை போன்று திமிர்ந்து நின்று இளவேனில் வந்து விட்டதே, விரைவிற் திரும்புவேன் என்றவர் இன்னும் வரவில்லையே என்று சுட்டிக் காட்டுகிறதே!

வலஞ் சுரித்த மரா எனும் வெண்கடம்பு மரங் கூட மலர்ந்து நமது சாரற்கண் அமைந்துள்ள சோலையை அழகு செய்து இளவேனில் வந்துவிட்டதே, வருவேன் என்று சொல்லிப் பிரிந்தவர் இன்னும் வந்திலரோ எனக் கேட்கின்றதே

பொருக்கு விழுந்ததுபோன்ற அடி கிளைகளையுடைய மாமரம் தன் கொம்பர்களில் எரிதழல் போன்ற செந்து ளிர்களைத் துளிர்த்து இளவேனிற் காலந்தான் வந்து விட்டதே, உன் தலைவர் வந்திலரோ என்பதுபோல என்னைப் பார்த்துக் கேட்கிறது.

வேம்பு மரங் கூடத் தனது நுண்ணிய மலர்களை விரித்துத் தேன் ஒழுகச் செய்து, இள வேனிற் காலம் வந்தது என உணர்த்திக் காட்டி உனது காதலர் திரும்பி வருவேன் என்று உரைத்த இளவேனிற் காலம் வந்துமா வரவில்லை எனக் கேட்கின்றது. இவ்வாறு என்னைப் பார்த்து, இந்தக் குறிஞ்சி நிலத்தின் உரி கருப் பொருட்கள் கேட்கின்றபோது என்னுல் எப்படிக் கலங்காமல் இருக்கமுடியுந் தோழி. என்ருள். அதற்குத் தோழி;

தலைவியே! இளவேனில் வந்துவிட்டதே தவிர அது முடியவில்லையே. இளவேனில் முடிய இன்னுங் காலமுளது. அதற்கிடையில் அவர் வராவிடின் பார்ப்போம். அதுவரை ஆறி இரு. என்ருள். பாண்மகளே இப்பொருள் பொதிந்த பாடல்களைப் பாடுக. மகளே! அதற்கு அபிநயம் பிடித்து ஆடுக!

அவரோ வாரார் தான்வந் தன்றே
யஞ்சிலைப் பாதிரி யலர்ந்தெனச்
செங்க ணிருங்குயி லறையும் பொழுதே 346

அவரோ வாரார் தான்வந் தன்றே
யெழிற்றகை யிளமுலை பொலியப்
பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே 347

அவரோ வாரார் தான்வந் தன்றே
வலஞ்சுரி மராஅம் வேய்ந்துநம்
மணங்கமழ் தண்பொழின்முன் மலரும் பொழுதே 348

அவரோ வாரார் தான்வந் தன்றே
பொரிகான் மாஞ்சினை புதைய
வெரிகா லிளந்தளி ரீனும் பொழுதே 349

அவரோ வாரார் தான்வந் தன்றே
வேம்பி னெண்பூ வுறைப்பத்
தேம்படு கிளவியவர் தெளிக்கும் பொழுதே 350

காட்சி கரைகிறது

முன்னெழினி மூடுகிறது

35 வது காட்சி நிறைவுறுகிறது

காட்சி; ஆறு

களம்; சிறைப் புறம், தலைவியின் இல்லம்.

காலம்; மாலை

பாத்திரர்; பாணன், விறலி. பாணனின் மூன்று புதல்விகள். (தோன்றுப் பாத்திரர்கள்; தலைவன். தலைவி, பாங்கி

நிகழ்ச்சி;

பிரிந்து சென்ற தலைமகன் திரும்பி வந்ததை அறிந்த தோழி, தலைவியிடம் அவன் வரவுரைத்தல். பாலைச் சுரப் பயண அனுபவங்களைத் தலைவன் தோழியிடமும் தலைவியுடனும் பகிர்ந்துகொள்ளல்

பாணன்;

அவையடக்கத்துடன் முப்பத்தாறுவது வரவுரைத்த பத்தென்னும் பகுதியை ஆரம்பிக்கின்றேன். நான் இந்தப் பத்தில் உள்ள பாடல்களின் பொருளை ஒரு நிகழ்வாகத் தொகுத்து உரைப்பேன். என் இல்லத் துணைவி அப்பாடல் களைப் பாடுவாள். என் மூன்று புதல்விகள் அப்பொருளை விளக்கும் அபிநயங் காட்டி ஆடுவார்கள்.

வழக்கம்போல எங்களைப்பற்றிச் சில சொற்களைச் சொற்றிக் காட்சியைத் தொடர்வோம். பாணர் என்பதன் பொருள் பாடுவோர் என்று பொருள்படினும் அவர்களுட் சிலர் இசை நாடகத்தைக் கலைப் பணியாகக் கொண்டாலும் ஏனையோர் வேறு தொழில்களிலும் ஈடுபட்டு வந்துள்ளன ரெனச் சங்கப் பாடல் வழியாக அறிய முடிகிறது. தமிழின் சேய் மொழி பேசும் முத்தமிழ் நாடுகளில் ஒன்றுன சேர (கேரள) நாட்டில், இன்றும் பாணர் என்ற குலத்தவர் வாழ்கின்றனர். இப்போது அங்கே, திருவரங்கப் பாணன், குடை கட்டிப் பாணன், மீன்பிடிக்கும் பாணன், புள்ளுவன் என்று நான்கு குடியினராய்க் கொள்ளப்படுகின்றனர், இவர்கள் பாடல், ஆடல், மத்தளம் செய்தல், என்னுந் தொழில்களைப் புரிகின்றனர் என்றும் இவர்களைத் தொடாதவராக அந்நாடு கருதுகிறது என்றுங் கூறுவர், தமிழ் நாட்டுப் பாணர்கள் அத்தகையரல்லர். மன்னர், வள்ளல்கள், பெருங் குடி மக்கள் ஆதியோரின் சபையேறி சமவாசனம் அமர்ந்து பாடிப் பரிசுகள் வாங்கும் உன்னதக் கலைஞர்களாக மதிக்கப்படும் இடத்தில் இருந்தனர் என அறியக் கிடக்கின் றது. இனிக் காட்சியைத் தொடர்வாம்.

பிரிதல் என்பது மனதிற்கு இதமற்ற ஒரு காரியம். இக்காலத்தில் திரை கடலோடித் திரவியந் தேடுபவர்கள் தமது தாயகத்தை விட்டுப் பல்லாயிரம் மைல்களுக்கு வான் பறந்து வளமான வாழ்க்கை தேடிப் பிற மொழி பேசும். தமது வாழ்வி யலுக்கு முற்றிலும் வேறுபட்ட மாற்றின மக்களிடையே வாழும் நிலை ஏற்பட்டுக் கடல் கடந்து புலம் பெயர்ந்தோர் என்ற ஒரு இனமாக வாழ்கின்றனர், இத்தகைய மக்களின் தொகை காலத்துக்குக் காலம் அதிகரிப்பது மட்டுமன்று, அவர்களிற் பலர் அந்த நாட்டுக் குடியுரிமை பெற்று அந்நாட்டு மக்க ளாகவே வாழ்கின்றனர். இந்த நிலை பண்டைக் காலத்திலும் இருந்தது. இவ்வாறு சென்றவர்களின் உறவினர் பிரிவுத் துன்பத்தால் வாடினர். மனைவி மக்கள் எப்போ வருவாரோ என ஏங்கினர். காதலர் இந்தப் பிரிவைத் தாங்காது அகமும் ஆகமும் நொந்து வருந்தினர். இவற்றுள் காதலி வேறு ஒரு ஐயத்துடன் வாழ வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டனர். சென்ற இடத்தில் வேறொருத்தியின் சிந்தைக்குள் சிறைப்பட் டாரோ என்ற ஐயம் மேலும் துன்பத்தை அளித்தது.

இதே நிலையிற்தான் இந்த இலக்கியத் தலைவியும் உழன்றுள். அவர் செல்லும் சுரம் கொடியது. செலவின் போது வெப்பம் மடடுமல்ல அங்குவாழ் மக்களாலும், மாக்களாலும் ஏதும் துன்பம் நேரிட்டு விடக் கூடாது, பொருள் வளமுள்ள நாட்டிற்குச் செல்லும் அவர் அங்கே போய் விரைவிற் திரும்பிவிட வேண்டும். என்ற மன எண்ணங்களிடையே சிக்கித் தவிக்கும் அவள் மனதிற் பொருள் வளமுள்ள நாட்டில் பல சுக போகங்களுடன் வாழும் புதிய வாய்ப்பும், அங்குள்ள பொற்றொடியார் உறவும் அவரை ஆங்கே தங்கிவிடச் செய்யுமோ என்ற ஐயமும் ஒன்றிச் சேர வருத்தியது. அதனால் தளர்ந்தவள் எதுவாகுமோ என்று கலங்கிய காலத்தில் கோடையில் வாடிய பயிருக்கு வான் மழை பொழிந்ததுபோல அவர் வந்துவிட்டார். இதனை முதலில் அறிந்தவள் தோழி. இற் செறிக்கப்பட்ட தலைவியால் வீட்டுக்கு வெளியே என்ன நடக்கின்றது என அறிய முடியாமற் தவித்தபோது பாங்கிதான் செய்திப் பரிவர்த்தனை செய்பவளாக விளங்கினள். அந்தப் பணியைத் தன் தாய்போன்ற தலைவிக்காக நம்பிக்கை விசுவாசத்துடன் செய்ய அவள் எவ்வளவுக்கு விரைவாகத் திறம்படச் செய்ய முடியுமோ அத்தனை நலம்படச் செய்வதிற்

கண்ணுங் கருத்துடையாளாக விளங்கினள். அவ்வகையிற் தலைவன் திரும்பி வந்ததற்கான அறிகுறிகளை மோப்பமிட்டு அறிந்த அவள் தலைவன் வழக்கமாகத் தலைவியைக் காண வருமிடத்திற் காத்து நின்ற தலைவனிடம் வந்தாள்.

தலைவனே! வந்து விட்டீர்களா. ஊசலாடிய என் தலைவியின் உயிரைக காக்குந் துணையாக வந்து விட்டீர்களா? எப்போது வந்திர்கள், சொல்வதை ரத்தினச் சுருக்கமாகச் சொல்லுங்கள், நான் இந்தச் செய்தியை ஓடோடிப் போய் அவளிடம் சொல்ல வேண்டும் என மூச்சு விடாமற் சொன்னாள்.

தலைவனே! உன பிரிவாற் துடித்த தலைவி உயர்ந்த மலைச சிகரங்களைக் கடந்து சென்ற உமது வரவு தள்ளித் தள்ளிப் போய் விடுமோ என எண்ணி எண்ணி ஏங்கினள். கண்ணீர் விடடனள். அதைத் துடைக்கத் துடைக்கப் பெரு வெள்ளமாகப் பெருக்கெடுத்ததே தவிர நின்றிலது என்று சொன்னாள். பாண் மகளே, இப்பொருள் கொண்ட பாடலைப் பாடுக, என் அருமைப் புதல்விகளே அப்பொருளுக்கியைய நடனமாடுகவே.

(பாண்மகள் பாடப் புதல்வியர் ஆடுகின்றனர்.)

கோடுயர் பன்மலை யிறந்தன ராயினு
நீட விடுமோ மற்றே நீடு நினைந்து
துடைத்தொறும் துடைத்தொறுங் கலங்கி
யுடைத்தெழு வெள்ள மாகிய கண்ணே 358

இவ்வண் பாங்கி பகர்ந்ததைக் கேட்ட தலைவன் கண்ணீர் மல்க, பாங்கியே! என் தலைவி என்ன பாடுறுவளோ என்பதை நீ சொல்லியா நான் தெரிந்து கொளள வேண்டும். அவளும் நானுஞ் சேர்ந்ததே எங்கள் உயிர்த் துடிப்பு. எங்கள் உயிர்த் துடிப்புக்குக காரணமான உயிர் யார்? உடல் யார் என்பதில் எங்களுக்குள் எந்த விவாதமும் இல்லை. நான் உடலாக இருக்கும்போது, அவள் என் உயிராக இருந்தென் உயிரை மீட்டுகிருள். நான் உயிராக இருக்கும் போது அவள் உடலாக அமைந்து இயக்குவிக்கின்றுள். எனவே அவள் எதை உணர்கிறுளோ அதையே நானும் உணர்ந்தேன். ஆகையால் அவள் எத்துயரமுற்றுள் என்பதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். அவளை எப்படி ஆற்றுவிப்பேன் என்பதே

குறிகோளாக இருந்த என்னுல் எவ்வளவு விரைய முடி யுமோ, அவ்வளவு விரைந்து வந்துளேன். பாங்கியே, இச் செய்தியை அவள் கேட்டாற் தளர்ந்த என் தலைவி, பாலையிற கோடையிற் பட்ட மரம், மாரியிற் தளிர்ப்பதுபோல என் தலைவி கிளர்ந்தெழுவாள்.

இதைக் கேட்ட தோழி, தன் தலைவியிடம் ஓடோடி அவர் வந்து விட்டார் என்ற சேதியைக் கூறக் கதிரவன் ஒளி தரையத் தொடுவது போலத் தலைவியின் கரத்தைத் தொட்டாள்.

தலைவியே ஒரு நற் செய்தி! வழிச் செல்வோர், வெயிலின் கடும் வெப்பத்தால் கருகிய பலாக்காயை அருந்தித் தம் தாகத்தைத் தணிப்பர். அத்தகைய வெஞ்சுரத்தைப் பின் தள்ளி உன் காதலர் வந்துவிட்டார். ஆகவே உனது நலமிழந்த நிதம்பத் துன்பம் இனி அகன்று விடும்.

சோதி மல்லிகைக் கொடி சூழ்ந்து படர்ந்த மலை போன்ற அழகிய ஆபரணங்கள் மறைக்கும் அழகிளம் முலையாய், உன் காதலர் சோலை சூழ்ந்த மலையைக் கடந்து உன்னை முயங்குதற்கு வந்து விட்டார்.

அன்புடைய பெண் செந்நாயைப் புணர்ந்த செந்நாய் குட்டியுடன் நின்று மேயும் பெண் மானைக் கொல்லாது தவிர்த்துப் போகும் சுரத்தைக் கடந்து உன் தலைவன் வந்து விட்டார், இனி நீ இழந்த நலன் யாவையும் மீளப் பெறுவாய். என்று கூறி ஆரத் தழுவிக் கொண்டாள். பாண் மகளே இப்பொருள் செறிந்த பாடல்களைப் பாடுக. என்னருமைப் புதல்விகளே அப்பொருளை விளக்க அபிநயித்து நடனமாடுகவே

(பாண்மகள் பாடப் புதல்வியர் ஆடுகின்றனர்)

அத்தப் பலவின் வெயிறின் சிறிகா
யருஞ் சுரஞ் செல்வோர் அருந்தினர் கழியுங்
காடுபின் னெழிய வந்தனர் ஞீர்கினிப்
பல்லித முண்கண் மடந்தைநின்
னல்லெழி லல்கில் வாடிய நிலையே 351

எரிக்கொடிக் சுவையிய செவ்வரை போலச்
சுடர்ப்பூண் விளங்கு மெந்தெழி லகல
நீயினிது முயங்க வந்தனர்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே 353

ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நா யேற்றை
மறியுடை மான்பிணை கொள்ளாது கழியு
மரிய சுரன்வந் தனரே
தெரியிழை யரிவைநின் பண்புதர விரைந்தே 354

பிரிந்தவர் கூடினுற் பேசவும் வேண்டுமோ? தலைவனுந் தலைவியுஞ் சிறைப் புறத்திற் சந்திக்கின்றனர். அவளின் உள்ளப் பூரிப்பு ஊமையாக்கி விடக் கண்களாற் பேசினுள், அவனே அந்த அமைதியை, அவளின் மனக்கொதிப்பு இன்னும் ஆறவில்லை என்று தப்பாகக் கணித்துத் தனது பிரிவிற்கான காரணம், அதற்காக அவன் எதிர் கொண்ட துன்பங்கள், அத்தகைய தருணங்களில் அவளைப்பற்றிய எண்ணங்களே தனக்கு ஆறுதலளித்தமை ஆதியபற்றிக் கூறி அவளை ஆற்றுவிக்க முயல்கின்றன்.

குற்றமற்ற ஆபரணங்களை அணிந்த என் தலைவியே! உனது நலனுக்காகச் செய்தற்கரிய வினையாற்றிப் பெருந் தனத்தைத் தேட உன்னிடஞ் சொல்லாது சென்றேன். அதற்குக் காரணம் நீ அதைத் தவிர்ப்பாய் என்பதே ஆகும். அதற்காக நான் பல புள்ளிகளை உடைய மத்தகமுஞ் சிறிய கண்களையுமுடைய கொடிய யானைகள் அலையுஞ் சுரத்தினை வந்தேன்.

தலைவியே! அரசர் தம் யானையைத் தறி மரங்களிற் பொற் சங்கிலிகளாற் பிணிப்பர். அதுபோன்று அக்கினி எரித்த சுரத்தின்கண் சென்றபோதுதான் உனது தண்குணம் பற்றிய சிந்தனை என் உள்ளத்தை ஆற்றுவித்தது.

தலைவியே! அரிய பொருளைத் தேடுதற்காக உன்னைத் துறந்து பாறைகள் செறிந்த சுரத்திடை சென்ற வழி மிகமிகத் தூரமாகத் தோன்றிற்று. ஆபரணங்களை அணிந்த உன்னைக் காணும் நோக்கொடு திரும்பி வந்தபோது அதே வழி மிக மிகக் கிட்டியதாக தொன்றிற்று,

மான் விழியாய், பிரிந்து சென்ற நான் உன்னைக் கண்டு அளவளாவ விருப்புற்றுத் திரும்பி வரும்போது கடிய சுரத்திடை எனது தேரும் குதிரைகளும் வெப்பத்தினூடாக வந்தாலும் அது ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை என்றன். பாண் மகளே இப்பொரிள் செறிந்த பாடலகளைப் பாடுக. புதல்வியை அப்பொருளை விளக்க அபிநயித்து நடனமாடுகவே

(பாண்மகள் பாடப் புதல்வியர் ஆடுகின்றனர்)

திருந்திழை யரிவை நின்னல முள்ளி
யருஞ்செயற் பொருட்பிணி பெருந்திரு வுறுகெனச்
சொல்லாது பெயத் தெனே பல்பொறிச்
சிறிகண் யாகின திரிதரு
நெறிவிலங் கதர காணத் தானே 355

உள்ளுதற் கினிய மன்ற செல்வர்
யாகின பிணித்த பொன்புகின கயிற்றி
ஞெள்ளெரி மேய்ந்த சுரத்திடை
யுள்ளம் வாங்கத் தந்தநின் குணனே 356

அரும்பொருள் வேட்கைய மாகிநிற் றுறந்து
பெருங்க லதரிடைப் பிரிந்த காகிலத்
தவநனி நெடிய வாயின வினியே
யணியிழை யுள்ளியாம் வருதலி
னணிய வாயின சுரத்திடை யாறே 359

எரிகவர்ந் துண்ட வெண்றூழ் நீளிடை
யரிய வாயினு மெளிய வன்றே
யவ்வுறு நெஞ்சங் கவ்வுநனி விரும்பிக்
கடுமான் றிண்டேர் கடைஇ
நெடுமா லேக்கிநின் றுள்ளியாம் வரவே 370

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்க

37 வது காட்சி நிறைவுறுகிறது.

காட்சி; எட்டு

களம்; பாலை நிலத்தின் மணற் தரை

காலம்; அந்தி நேரம்.

பாத்திரர்; பாணன். விறலியின் ஆடற் குழு. (தோன்றுப் பாத்திரர்; தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி, தேடிச் சென்றோர், தமர்)

நிகழ்ச்சி;

வரைவு வேட்ட தலைவனின் விழைவைத் தலைமகளின் தமர் மறுத்துழி, அவன் அவரெவரும் அறியாமல் உடன்கொண்டு சென்றபின் தலைவியைக் காணுது தவித்தல்.

பாணன்;

வணக்கம்! நாடகத் தமிழின் நயம் நுகர்வோரே! தொடரும் காட்சிப்படுத்தல்களில், சங்க கால இலக்கியத்திற் சொல்ல எடுத்துக் கொண்ட அகப் பொருட் சேதியின் கருத்தை நேரிடையாகக் கூறாது; பாடற் திணைக்குரிய உரி, கரும் பொருளின் இயல்பால் மறைமுகமாக வெளிப்படுத்தல் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதைத் தெளிப்பதாகும். இதற்காகப் புலவர்கள் உவமை எனும் அணி வகையையே பொதுவாகக் கொள்வர். இதுபோல் அது; அதுபோல இது. என்பர் அதற்கான காரணம் அவற்றிற்கு இடயிலான பொதுத் தன்மை என ஒப்பிட்டுக் கூறுவதற்கு உரியதே அன்றி சொல்லும் பொருளின் உட்கிடக்கையை உட்குடைந்து வெளித் தள்ளி உணர்த்தாது. எனவே இத்தகைய நிலைக்கு இரண்டு விதத்தில கவி நயத்தை ஏற்படுத்துவார்கள். அவற்றை இறைச்சிப் பொருள் என்றும் உள்ளுறை உவமம் என்றும் உரைப்பர். அவை எவ்வாறு செய்யுட்களில் இடம் பெறுகின்றன. கவி நயங்களான இலக்கிய உணர்வு, மெய்ப் பாடு. பொருட் பயன் ஆதியவற்றை ஆக்குகின்றன என்பதை இகாட்சிப் படுத்தல்களில் இடம்பெறச் செய்யலாம் என எண்ணுகிறேன்,

அப்படியானால்; இந்த அரங்கத்தில் இதுவரை கண்டு களித்த நாடகங்களில் அத்தகைய அலங்காரம் இல்லையா என நீங்கள் கேட்கலாம். உண்டு. நிறையவே உண்டு. அப்பம் என்றால், அதை உண்டு காட்ட வேண்டியதில்லை. உண்டு பார்த்தாலே, அப்பமென்பதும் அதன் சுவை எத்தகைத்து

என்பதுந்தானே உணரப்படும்! அதுபோல நுகர்ந்தோர் அவ்வப்போது இத்தகைய நயங்கள், அவற்றுள் இறைச்சிப் பொருள், உள்ளுறை உவமம் என்பன அமைந் திருந்ததை தம்மை அறியாமலே அனுபவித்திருப்பார்கள். நாம் எங்கேனும் பயணிக்கும்போது பல இடங்களைக் கடந்து சென்றிருப்போம். அப்போது, அங்குள்ள பல காட்சிகளைப் பார்த்திருப்போம். ஆனால் அங்கங்கே அமைந்த அவைகளின் உள்ளான சிறப்பு களை உணர்ந்திருக்க முடியாது இருந்திருகலாம். எனினும் அவ்விடத்தை நன்கறிந்த வழிகாட்டி மூலம் அறியும்போது அதன் சிறப்பையும் மேம்பாட்டையும் மேலும் நன்கறிந்து துய்ப்போமல்லவா? அதைப்போலவே இதுவரை ஐங்குறு நூற்றின் 370 செய்யுட்களின் நயத்தின் போக்கை ஓரளவு அறிந்திருந்தாலும் பின் வரும் காட்சிகளை மேற்சொன்ன அளவு களாற் கண்ணுற்ற பின்னர் இதுவரை உணர்ந்த உணர்வுகள் மேலோங்கி எழுவதைக் காண்பீர்கள்.

விறலியே கேட்குதி! இன்று காட்சிப்படுத்துவது ஐங்குறு நூற்றின் 38 வது மகட் போக்கிய வழி தாயிரங்கிய பத்து என்னும் பகுதியாகும். இத்தகைய விசயத்தில் நமது இருவருக்கும் நிறைந்த அனுபவம் இரண்டு விதத்தில் உள்ளன. முதலாவது காதலர் என்ற வகையில் உன் தமர் என்னை வெறுத்த காலை ஒருவருக்குந் தெரியாது உன்னை தொலைவில் உள்ள எனதூருக்கு அழைத்துப் போன அனு பவம். இரண்டாவது; அது நடந்து பதினைந்து வருடத்திற்குப் பின்னர் நமது முதன் மகள், அதேபோன்று நாம் அவளின் மணத்திற்குத் தடையாக இருந்ததால் உற்றார் உறவினர் அறியாமல் காதலனுடன் ஓடிப் போனாளே. அவ்விரு தரு ணங்களில் நாம் அனுபவித்த உணர்வுகளை நினைவுபடுத்தி இக் காட்சியை காட்சிப்படுத்துவோமாயின் அது மிகமிகச் சிறப்பாக அமையும். எனக்கு உடந்தையாக உன்னைத் தயார் படுத்திக் கொள்க. இப்போது நாடகத்தை ஆரம்பிப்போம்.

இந்தக் காட்சி முழுவதிலும் இடம் பெறப் போவது, தலைவியை என்ற நற்றாய்தான். அவள் தன் மகள் தலைவ னுடன் உடன்போய தலைவியைப் பிரிந்த துயரத்தில் ஆழ்ந்து தனக்குள் அழுது புலம்புகிறாள். இந்த நிலை முதலாவது காட்சியாக அமையப் போகிறது. இரண்டாவது, அவவாறு துக்கித்துக் கொண்டிருக்கும் தாயிடம் துக்கம் விசாரிக்க வருந்

தமர், மகளைத் தேடிச் சென்றவர்கள், அவள செல்லும் வெஞ் சுரக் கொடுமையை எடுத்து உரைத்துத் தெருட்டுவோர், பிரிவால் வாடுந் தோழி ஆதியவர்களிஞ் சொல்வது

அறியாப் பருவத்திற், தெய்வச் செயலால் தம்மை யார் யாரென அறியாமற் சந்தித்தவர்கள், அறியும் பருவத்தில் ஒருவர்மீது ஒருவர் அன்பாயினர், அன்பு வளர்ந்து காதலா யிற்று. காதல் கலியாணத்தில் முடிந்தாற்தான் அதன் முழுமை நிகழும். ஆனல் அதற்கான பொருள் வளமின் மையாற் தலைவன் பொருள் தேடித் தூர தேசம் சென்றுன். வேண்டிய பொருள் தேடி வந்து வரைவு வேட்டான். தலை வியின் தாய் தமர் விரும்பாத நிலையிற் தலைவியை எவரும் அறியாது தனது ஊருக்கு அழைத்துச் சென்றுன். மகளைக் காணுத தாய் கவன்று தவிக்கின்றுள். அவற்றுள் முதலா வது அவளின் தனிப்பட்ட துயரத்தைக் காட்சிப் படுத்துவாம்.

வீட்டு முற்றத்தில் தன் மகள் திரும்பி வந்து விடுவாள் என்ற நம்பிக்கையில் வைத்த விழி மூடாமல் வழிமேல் விழி வைத்து நிற்கும் அவள் மனதுள் குமுறி;

போர் வீரர்கள் போர் முரசம் அறைவதைக் கேட்டால் மயில் ஆரவாரித்து அகவி, ஆடும் அதைக் கண்டு மேகம் மழை பொழியும். அதனல் களவொழுக்கத்திலும் பார்க்கக் கற்புடன் ஒழுகுவதே மேலேனத் துணிந்த என் மகள் செல்லும் வெஞ்சுரம் தண்நில மாகும்.

சுரத்திடை செல்லும்போது என் மகள் மீளியைக் காப்பதற்காக, வேண்டியபோது முன் சென்று வழி கண்டும் பின்னுற் சென்று அபாயங்கள் நேரிடாது காத்தும் செல்லும் அடர்ந்த கூந்தலுடைய என் மகளை உடன்போக்கிற் கொண்டு சென்றனன். அவர்கள் சென்றதோ குரங்குகள் கூட உள் நுழைந்து கடக்க முடியாத வழியாகுமே. அதைப் பல காலம் நினைத்தாலும் ஒரு தடவையாவது நலதெனலாமா?

வஞ்சினங் கொண்ட காளை இரக்கமிக்க என் மகளை மனமொன்றி ஏற்றுக் கொண்டான். அதனல் அவனுடன் உடன் சென்றுள். செழித்த வளமிக்க மலைகளைக் கடந்து சென்றுலும் அவள் மீது ஊரார் வீணை தூறறுவதை போக்கி விட்டாள். அத்தருணங்களில் என்ன நினைத்து இரங்கினளோ!

வெஞ்சுரத்திலே பதுங்கிப் பாயும் புலியின் பிடியிலிருந்து தப்பிய பிழவுண்ட கொம்புள்ள முதிர்ந்த கலைமான் தான் உயிரோடிருப்பதைத் தனது பிடிக்கு உணர்த்தக் குரலெழுப்பும் சுரத்திடையே, போரிற் புதுமை படைக்கும் வில்லேந்திய விடலையுடன் என்மகள் உடன் சென்றுள். அதனால் நான் அடைகின்ற அளவற்ற துன்பத்தை நான்மட்டல்ல அதற்குக் காரணமான அந்த விடலையின் அன்னையும் அடைவாளாக.

என் தலைவிதியே! ஏனிவ்வாறு என்னை வருத்துகின்றனை. நெடு முடி மாளிகை ஆதிய பல்வளங் கொண்ட நகர மக்கள் களியுடன் கவலையற்று வாழ்கின்றனர். அதே வேளை என் மகளோ கனல் காந்துஞ் சுரத்திடை அவள் வாடுகிறுள். நாள்தோறும் நான் அழுது புலம்ப, பூப்போலும் மைகொண்ட கண்ணுடை என் மகள் இவ்வாறு உடன்போக்கிற்குச் செல்ல இந்த விதி விட்டுவிட்டதே.

நெடு நாளாகத் தான் விரும்பிப் பழகிய தோழியரிலுந், தன்னை உயிரினிலும் மேலாக அன்பு கொண்ட தமரிலும் பார்க்கப் பனி படர்ந்த மலையில் யானைக் கூட்டங்கள் உலவுஞ் சோலையிலூடாக அவளை உடன் போக்கிற் கொண்டு சென்ற வெள்ளி வேல்களை ஏந்தும் வேலன் மேம்பட்டு விட்டானே? என அழுங்கிஞள் விறலியே இந்த நிகழ்வை அபிநயங் காட்டி நடனமாடிக் காட்சிப்படுத்துவாயாக

(விறலி தன் குழுவுடன் பாடி ஆடுகிறுள்)

மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலு
முயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல
வறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே 371

பல்லாழ் நினைப்பினு நல்லென் றூழ
மீளி முன்பிற் காவல் காப்ப
முடியகம் புகாஅக் கூந்தலள்
கடுவனு மறியாக் காடிறந் தோளே 374

என்னு முள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக காவலியொ
டழிங்கன் மூதூ ரலரெழச
செழும்பல குனற மிறந்தவென மகளே 372

நினைத்தொறுங் கலிழு மிடும்பை யெய்துக
புலிக்கோட் பிழைத்தகவைக் கோட்டு முதுகலை
மான்பிணை யகிணதர வாண்குரல் விளிக்கும்
வெஞ்சுர மென்மக ளுய்த்த
வம்பமை வல்வில் விடலை தாயே 373

நாடொறுங் கலிழு மெனினு மிடைநின்று
காடுபடு தியிற் கனலியர் மாதோ
நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்
பூப்புரை யுண்கண் மடவரற்
போக்கிய புணர்த்த வறனில் பாலே 376

தன்னம ராயமொடு நன்மண நுகர்ச்சியி
னினிதாங் கொல்லோ தனக்கே பனிவரை
யினக்களிறு வழங்குஞ் சோலை
வயக்குறு வெள்வே லவற்புணர்ந்து செலவே 379

காலையில் இருந்து நேரங் கடந்து போவதைக் கூட உணர முடியாமல் காணுதொழிந்த மகளையே நினைத்தழுங்கும் நற்றாய் படுந் துயரத்தைக் காணப் பொறுத பாங்கி அவளண்டை வந்து; அன்னாய் எங்களையெல்லாம் ஆறுதற் படுத்த வேண்டிய நீங்களே இவ்வண்ணம் கலங்கினால், எங்களை எவர்தான் தேற்றுவார்? நம் தலைவி உலக வழக்கையோ கற்பு நெறியையோ மீறினள் என்று எவ்வண்ணம் எண்ணலாம்.

அவளோ படரத் துடிக்கும் இளந் தளிர்! பற்றுக் கொம்பாக வந்த காளைதான் அக் குன்ற நாடன். கொடி கொம்பிற்தானே படர்வது உலக இயற்கை. ஆதலால் தலைவி தவறு செய்திலள். தக்கதே செய்துளாள். அவள் விரைவில் மீள்வாள். கவலற்க தாயே! என்றாள். அதற்கு நற்றாய்; தோழி! மாலைக் காலம் வந்து விட்டது என்பதை உயரப் பறந்து போகத் தனது செட்டைகளை விரிக்கின்ற வெளவால் காட்டும். அப்போது, என் மகள் எனைப் பிரிந்து போன நினைவு அதிகரிக்கும். அந்தத் துக்கந் தாளாமல் அழுது புலம்புகிறேன். ஆனால அவளின் தோழி என்ன பாவஞ் செய்தாள். உடன்போய தலைவியை நினைத்து கண்ணீர் உகித்து இவளும் அழுகின்றாள் கொல். என்றாள்.

மாலைக் காலம் வந்து விட்டது என்பதை உயரப் பறந்து போகத் தனது செட்டைகளை விரிக்கின்ற வெளவால் காட்டும்

அப்போது, என் மகள் என்னைப் பிரிந்து போன நினைவு அதிகரிக்கும். அந்தத் துக்கந் தாளாமல் அழுது புலம்புகிறேன். ஆனால் அவளின் தோழி என்ன பாவஞ் செய்தாள். உடன் போய தலைவியை நினைத்து கண்ணீர் உகித்து இவளும் அழுகின்றாள் கொல்.

செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவ லுசுக்கு மாலையாம் புலம்பப்
போகிய வவட்கோ நோவென் னேமொழித்
துணையிலள் கலிழு நெஞ்சி
னிணையயே ருண்க ணிவட்குநோ வதுவே 378

தலைவி உடன்போய் இரு நாட்கள் சென்றிறுத்தன. அவளின் பிரிவை யுணர்ந்த செவிலித் தாய் உடனடியாக அவளைத் தேடிச் சென்றாள். செலும் வழியிற் கண்ணிற் பட்டவர்களிடந் தலைவியின் வடிவு வண்ணணத்தைக் கூறி அத்தகைய இளம் பெண் ஒருத்தி இவ்வழிச் சென்றாளோ என வினவிக் கொண்டே போனாள். அதைக் கேட்ட பலர் கண்டிலோம் என்றனர். சிலர்; கண்டோம். அவள் காளை ஒருத்தனுடன் சென்றதையும், அவள் சென்ற வழியின் கொடுமையும் கூறினர்கள், அத்துடன் இதுவரை அவள் நெடுந் தொலை சென்றிருப்பாள் என்றும் கூறினர். மேற் கொண்டு தொடர்ந்து செல்வதிற் பயனின்று எனத் திரும்பி வந்து;

அன்னையே! முடிவிலாத நீண்ட சுரத்திடை தான் விரும்பிய காதலனுடன் சென்ற முத்துப் பல் ஒளிரப் புன்னகை மிளிரும் என் மகளை நீங்கள் பெற்றீர்கள் நானே அவளை மகளாகப் பெற்றேன். நாம் பெற்றோமல்லாமல் மற்றேதும அறியோம். அவளைப் பெயரிட்டு அழைத்தவர்கள் அவளின் பாங்கியர் கூட்டமே. அத்தகய பெதை சென்ற வழி பெரும்பாடுடைத்தாம் என்று கண்டோர் கூறுகினறனர். அதைக் கேட்ட என் நெஞ்சம் பிழந்து பொனது என்றாள்.

அடுத்த நாள அவளைத் தேடிச் சென்றவர்கள் அவளைக் காணுமற் கலங்கி வந்து நற்றாயிடம் கவன்றனர். அதைக் கேட்ட அவள் மேலும் பதறி; என்மகள் சில காலமே பழகிய காளையுடன் மனமொன்றி உடன்போய் விட்டாள். அவள் போனாலும் அவளின் ஞாபகத்தை நினைவூட்டும் பலவற்றை இங்கே விட்டுச் சென்றாளே!. இங்கே பாருங்கள், இது;

பாவையை நிகர்த்த என் செல்வி விளையாடிய பாவை. அதோ, என் பைங்கிளியாள் நேசித்த கிள்ளை, உதோ எனது இனிய பூவைக் குரலாள் வளர்த்த நாகணவாய், இவற்றையெலாம் அவளிலலாத விடத்து பார்க்குந் தொறும் எவ்வாறு தரிப்பேன், மலரொத்த விழிகொண்ட என் மகள் இவ்வண் எனைப் பழி யெடுக்கவா இவற்றை விட்டுச் சென்றுளோ! இப்படித் தவிக்கின்றேனே! என்றனள

மேலும் ஊரலர்க்கு அஞ்சித் தலைவி உடன்போக்குச் சென்றுள். என அறிந்த இன பந்துக்கள் நற்றாயிடம் வந்து துக்கம் விசாரித்தனர். அவர்களை நோக்கி;

தன் மனதுக்கு இசைந்தவனுடன் உடன்போகிய என மகள் சென்ற வழியோ கொடியது. அவ்வழியில் தாகத்தைத் அகற்றப் புனலிடை நீரருந்தி, நெடுவங்கியம என்னும் இசைக் குழல்போன்ற துதிக் கையில் நீர் மொண்டு பிளிறி விசிறுங் கோரம் நிறைந்தது. இங்கே அவள் விட்டுச் சென்ற வினை யாட்டுப் பொருட்களான கழங்குகையும் பந்தையும் காணுந் தொறுந் துயரம் அதிகரிக்கின்றதே! என்றுள். விறலியே இந்த நிகழ்வை அபிநயங் காட்டி நடனமாடிக் காட்சிப்படுத்துயாக

(விறலி தன் குழுவுடன் பாடி ஆடுகிறுள்)

அத்த நீளிடை யவனெடு போகிய
முத்தேர் வெண்பன் முகிழ்நகை மடவர
றுய ரென்னும் பெயரே வல்லா
நெடுந்தேன் மன்ற யானே
கொடுத்தோர் மன்றவவ ளாயத் தோரே 380

இதுவென் பாவை (க் கினியநன்) பாவை யிதுவென
னலமரு நோக்கி னலம்வரு சுடர்நுதற்
பைங்கிளி யெடுத்த பைங்கிளி யென்றிவை
(யிதுவென் பைங்கிளி யெடுத்த பைங்கிளி)
(யிதுவென் பூவைக் கினிய சொற் பூவையென்)
(னலம்வரி நோக்கி வலம்வரி சுடர்நிதல்)
காண்டொறுங் காணடொறுங் கலங்க (கலங்கி)
நீங்கின ளோவென் பூங்கணேளே 375

நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை
யியம்புணர் தூம்பி னுயிர்க்கு மத்தஞ்
சென்றனண் மன்றவென் மகளே
பந்தும் பாவையுங் கழங்குமெமக் கொழித்தே 377

இந்தக் காட்சியை முடிக்க முதல், அகப்பொருட் செய்யுள்களின் பொருளே படிப்போர் உணரத் தக்கதாக இலக்கியப் படைப்பாளர்கள் கையாளும் உணர்வைக் கிளரும் முறைகள் பல உள்ளன. தாம் ஆக்கும் பாக்களைச் சொல், பொருள் சார்ந்து அலங்காரஞ் செய்வார்கள். அவை பல விதப்படும். இந்த வழிமுறையைத் தமிழ் மொழியின் ஐந்து இலக்கணங்களுள் ஒன்றுன அணி இலக்கணங் கூறும். அத்த கைய அலங்காரங்களுள், உவமித்தல் முக்கியமாகக் கொளப் படுகிறது. ஆதலால் தொல்காபபியர் இப்பகுதியை உமவவியல் என்றார். அதன் விரிவாகவே பிற் காலத்தில தண்டியலங்காரம , மாறனலங்காரம், முத்து வீரியம், வீர சோழியம் தொன்நூல் போன்றவை தோன்றி அணி இலக்கணத்தைக் கூறும்.

அவற்றுள் உள்ளுறை உமம் இறைச்சிப் பொருளென இரண்டு இலக்கிய உணர்வுக்கான சிறப்பு அம்சங்கள் உள்ளன. அவற்றையிட்டு அடுத்து வரும் பத்துக்களில் சொல்வேன் எனக் கூறி இந்தக் காட்சியை நிறைவு செய்கிறேன். வணகக்ம்.

காட்சி கரைகிறது.

முன்னெழினி அரங்கை மூட
38 வது காட்சி முற்றும்.

காட்சி; முப்பத்தொன்பது

களம்; இடைச் சுரத்தில் ஓரிடம்

காலம்; மாலை

பாத்திரர்; பாணன், விறலி (தோன்றுப் பாத்திரர்; நற்றாய், செவிலி, தலைவன், தலைவி, கண்டோர், அத்தணர்)

நிகழ்ச்சி;

முதலாங் காட்சியில் தன மகளைக் காணுதி வருந்தும் நற்றாய்க்கும் உடனடியாகத் தேடப் புறப்பட்டு அவள் செலவைத் தொடரும் செவிலித் தாய்க்கும் தலைவியை வழியிற் கண்டோர், அநதணர் ஆவோர்; — தாம் வழியில் அவளைக் கண்ட சேதியைக் கூறுவது இடம் பெறுகிறது.

தாய் தமர் ஆகியோர், தனது மனதுக்கொத்த துணை வனைக் கரம் பற்றுவதற்குத் தடையாயிருந்ததை உடைத் தெறிந்து, தலைவனுடன் இல் வாழ்க்கையை ஆரம்பிக்கத் துணிந்த தலைவி, எவருமறியாது இரவொடு இரவாக உடன் போகிறாள். அப்படிச் செல்பவள் கடத்தற்கரிய பாலை நிலத் திடை செல்லும் போது, தன் மன வஞ்சத்தை முடிக்கத் தக்கதாகக் காண்போர் வழியாகச் செய்தி சொல்லி அனுப்பு கிறாள். இது இரண்டாங் காட்சியாக அமைகிறது.

(முன்னெழினி அகலப், பின்னுல் பாலை எழினி இலங்க
அரங்கும், பாணன், விறலி, மற்றும்
ஆடிப் பாடும் குழுவுந் தென்றுகின்றனர்)

பாணன்;

இப்போது உடன்போக்கின்கண் இடைச் சுரைத் துரைத்த பத்து என்ற அகப் பொருட் சேதியைக் காட்சி படுத்தப் போகின்றோம். அதன் முன் நேற்யைக் காட்சியின் இறுதியிற் கூறிய கவி நயஞ் செய்யுஞ் சில சுவை யூட்டி களைக் கூறி யிட்டுச் சில வார்த்தைகளைச் சொல்ல விழைகிறேன்.

கவிக்கு அழகூட்டுவது அணிகள் எனத் தமிழ் வாணர் மொழிவர். சொல்லாலாகும் அணிகள், பொருளால் ஆகும் அணிகள் எனப் பல வகை அணிகள் உள்ளன. அவற்றுள் உவமை, தற்குறிப்பேற்றம், உருவகம், சிலேடை என்பன சிறப்

பான இடத்தைப் பெறுகின்றன. இவைகள் எல்லாம் எடுத்துக் கொண்ட பொருளை வண்ணத்தாலும் வடிவாலும் அழகு செய்வனவே தவிர மனதில் உய்த்துணர்த்தும் எண்ணங்களை உண்டாக்குவனவல்ல. இலக்கியங் கற்போர் அதிற் சொல்லப்பட்ட வண்ணம் வடிவை மட்டும் நுகராமல் அது கருதும் வாழ்வியல் உணர்வுகளுக்கும் இட்டுச் செல்லப் படல் வேண்டும். அத்தகைய உணர்வை ஒருவருக்கு நேரடி யாகச் சொல்வது அருவருப்பாக இருக்கலாம், கேட்போரின் மனதிற்கு ஒவ்வாததாகவும் இருக்கலாம். உய்த்துணரத் தக்க தல்லாதவனவாகவும் இருக்கலாம். எனவே சொல்ல வேண்டி யதை மறைபொருளாகச் சொல்லும் முறை என ஒன்று உண்டு. அது நாம் எடுத்தாளுஞ் சொல்லால் முடிவதொன்று, இரு பொருள் தருஞ் சிலேடைச் சொற்கள் இத்தகையன. அதுபோலப் பொருளாலும் உணர்த்தலாம். அந்தப் பொருளை ஏதோ இயற்கை வர்ணனைபோலக் கூறிவிட அதைச் செவி மடுப்போர், அதன் உள்ளான கருத்தை உய்த்துணர்ந்து தன்னை நெறிப்படுத்திக் கொள்வார். அதுமட்டல்ல என் தவறை உணர்த்தவே இத்தகைய பொருளை மையப்படுத்தித் தன் கருத்தை எனது மனதிற் செறித்தார் என்றுந் தெளிவர்.

இவ்வித கவி மூலம் உணர்வாக்கும் நுட்பம் தமிழ்ச் செய்யுட்களை ஆங்காங்கு ஐதாகக் காணலாம். ஆனால் சங்க காலப் பாக்களிற் செறிவாகக் காணலாம். அத்தகை இரு வித உணர்வூட்டக் கவிச் செறிவு முறைகள் உள்ளன. அதில் ஒன்று இறைச்சிப் பொருள். அடுத்தது; உள்ளுறை உவம். இவை இரண்டும் பொதுவாகப் பார்க்கும்பொழுது, நோக்களவில் ஒன்றுபோல இருப்பினும் உற்று ஆய்ந்தால் அவை வேறுபட்டவை என்பது வெளிச்சமாகும். காட்சிப் படுத்தக் கால தாமதமாவதால் பாதியை இப்போ கூறினேன். மீதி அடுத்த காட்சியில்.....

விண்ணொத்த தனமும் காரொத்த கூந்தலும் தாரகையொத்த கண்களும் மதியொத்த வதனமும் பிறை யொத்த நுதலும் கொண்ட விறலியே! இந்தப் பத்தில் வருஞ் சேதி, நமது மகள் தன் காதலனுடன் உடன்போன போது நாம் பெற்ற நேரடி அனுபவத்தைச் சொல்வதாய் அமைந்துள் ளது. ஆகவே நான் அந்த நிகழ்வுகளை நினைவு கூர்ந்து சொல்ல உன் அனுபவத்தைக் கலந்து பாடி ஆடுகவே!

நற்

முதலாவது காட்சிப் படுததற் பொருளாக; பாலை நிலத்தில் பயணிப்போர் பகலிற் வெப்பத்திற்கு அஞ்சி ஒடுங்குவர், இரவிற் கொடிய மிருகங்களுக்குப்ப யந்து அடங்குவர். ஆயினும் பலர் கோர விலங்குகளிலும் பார்க்கக் கொடும் வெயில் ஏற்றதெனப் பகலெனப் பாராது சுரத்திடை பயணிப்பது வழக்கம். அவ்வழியில் உடன்போய தலைவன் வருகிறன். அஞ்சியவளாகத் தலைவி அவன் தோழில் கை வைத்துப் பின்னல் வருகிறுள். அவர்களை வழியிற் கண்டவர்கள் அவர் தம் நடத்தையை அவதானித்து துயரத்தை அகற்றக் கூடிய ஆறுதல் வார்த்தை பகர்கின்றனர். அதைக் கண்ட ஒருவர்; மனமொத்த காதலரே!

பசிய நல்லிக் காயுடன் பலாச் சுளைகளைக் கலந்து வெண் கடம்பு மரத்து நிழலில் அமர்ந்து அருந்துபவர்கள் யார்கொல்? அன்புடையர் தாமே அன்புடையர் மற்று என்பும் உடையர் பிறர்க்கு என்பதுபோல; அன்றிலை ஒத்த இணை பிரியாதவர்களே! ஈருடல் இணைந்த ஒருயிராயினவர்களே! நீவிர் இப்போது இடைச் சுரத்திடை இடருற்றுலும் பின்னர் முத்தமிழின் சுவையொத்த இலலற வாழ்வின் இன்பம் நுகர வல்லார். ஆதலால் அச்சந் தவிர்மின்! செலவைத் தொடர்மின் என்றனன்;

(விறலி பாடித் தன் குழுவினருடன் ஆடுகிறுள்)

பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து
செங்கான் மராஅத்த வரிநிழ லிருந்தோர்
யார்கொ லளியர தாமெ வார்சிறைக்
குறுங்கான் மகன்றி லன்ன
வுடன்புணர் கொள்கைக் காத லோரே 381

இடைச் சுரத்தே வந்துற்ற காதலர்களைக் கண்ட பாலை நிலப் பெண்டிர்: பறவைகள் எழுப்பும ஒலியைக் கேட்டாற் கூட அஞ்சிக் கணைகளை மூடுமியல்பினளாகிய இப்பெண், ஒளிமிளிரும் வேலாயுதத்தையும் வெற்றிக் கழல்களையுந் தரித்த காளையுடன் கடத்தற்கரிய பாலைச் சுரத்தைக் கடக்கும் வழியில் உள்ள நமது ஆரவார மிக்க சிறிய ஊரைப் பகல் வேளையில் வந்து சேர்ந்துள்ளனர். இதைக கண்டு மக்களைப் பெற்ற நமது வயிறு பற்றி எரிகிறது. இதுவே எமக்கு அளவற்ற வருத்தத்தையுந் தருகிறது என்று அங்கலாய்த்தனர்

சுரத்திடை வழி நடந்து களைத்த காதலர் ஓரிடத்திற் தங்குழி; அருகே நின்ற காடடில் உயர்ந்து வளரும் வெண் கடம்பில் அளிகள் மொய்த்துத் தேன் உண்ணும் வலஞ் சுரித்த மலர்களைக் கொய்ய அதன் கிளைகளை தலைவன் வளைத்துக் கொடுத்தான். அவள் மலர் பறித்து மாலைகட்டினள். பின்னர் தண்டான் கோரையால் செய்த பாவைக்குந் தனது காரொத்த கூந்தலுக்கும் அணிந்து அழகு செய்தாள். இவற்றைப் பார்த்த அவ்வூர்ப் பெண்டிர் மகிழ்ந்தனர்.

(விறலி பாடித் தன் குழுவினருடன் ஆடுகிறாள்)

புள்ளொலிக் கமர்த்த கண்ணள் வெள்வேற்
றிருந்து கழற்காளையொ டருஞ்சுரங் கழிவோ
ளெல்லிடை யசைந்த கல்லென் சீறூர்ப்
புனையிழை மகளிர்ப் பயந்த
மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே 382

கோட்சுரும் பரற்று நாட்சுரத் தமன்ற
நெடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி
வலஞ்சுரி வாலினர் கொய்தற்கு நின்ற
மள்ள னுள்ள மகிழ்கூர்ந் தன்றே
பஞ்சாய்ப் பாவைக்குந் தனக்கு
மஞ்சாய் கூந்த லாய்வது கண்டே 383

அடுத்து சுரத்திடை நிகழ்ந்தவை பற்றிய காட்சி தொடர்கிறது. இது காதலர்களைக் கண்ட சுரத்து மக்கள் அவளைத் தேடி வந்த செவிலியிடம் சொன்ன நற் சேதி: அன்னாய் கவலற்க! பத்து மாதம் வயிற்றிலே சுமந்து நீ பெற்ற மகள் தன் காதலனைச் சந்திகக்காதவாறு உன் நெடிய சுவராற் சூழப்பட்ட இற்செறித்தற்னை, அந்தக் காவலில் இருந்து தப்பிச் சிறுகண் யானையும் புலியும் அலைந்து திரியும் கொடிய காடுகளைத் தனது காதலனுடன் கடந்து நலமே சென்றனள்.

தரும நெறி உரைக்கும் வேதங்களை ஓதி உரைக்கும் நாவினர்களை உமை வணங்குகிறோம். நீர் வரும் வழியில் மகளைக் கண்டீரோ என வினவும் மகளைத் தேடி அலமலருச் செவிலியே கேட்குதி! உன் மகள் தன் காதலனுடன் செல்லும் அரிய சுரத்தைக் கடந்து நாங்கள் வருகிறோம். இடைச் சுரத் திலே அவளைக் கண்டோம். மலை நாட்டிலே பிறந்த உன் மகள் தக்க துணை தருங் காதலனுடன், எங்கும் உயர் மலைகள் நிறை குறிஞ்சி நிலத்தைக் கடந்து சென்றதை கண்டோம் எனறனர்

வேறு சிலர்; காதலனுடன் உடன் போகிய மகளைத் தேடித் தேடி அலையும் செவிலியே! பொன்னை நிகர்க்கும் பொலிவுடை மேனிப் பூவையான உன் மகள், வெள்ளிய வேல் தாங்கிய தன் காதலனுடன் நெருப்பைக் கொட்டும் சூரியனது வெப்பத்தைத் தணிப்பதற்காகக் குறுகிய அடி பொருந்திய ஆயிலிய மரத்து நிழலில் ஆறி இருந்து சில நாட்களுக்கு முன்தான் சென்றனர். நீ இவ்வழி விரைந் து செல்லின் அவர்களைக் கண்டு விடலாம் எனறனர்

மகளைக் காணுது மனம் நொந்து தவிக்கிந் தாயே! போரிலே ஆற்ற வேண்டிய பொருதலை இனிதே முடித்ததிற் கடையாளமான வெற்றிக் கழல் அணிந்த உறுதிமிக்க காளை யுடன், பாவையை நிகர்த்த நல்லாபரணங்களை அணிந்த உன் மகள் இவவழிச் சென்றனள். அவள நடந்து சென்றபோது பதிந்த சிலம்பணிந்த அவளின் பாதச் சுவடுகள் இதோ செல்வதைக் காண்பாயாக என்றனர்

அன்னுய். செல்லும் வழியெலாங் காணும் நிலோரைக் கையெடுத்துக் கும்பிட்டுப் பல தடவை தயங்கித் தயங்கி என் மகள் இவ்வழிச் சென்றனறளோ? அவ்வண்ணுயின் அவளைக் கண்டீரோ என வினவும் அன்னையே. தோள் வலி மிக்க ஒரு காளையுடன் அவள் இச்சுரத்தைக் கடந்து செல்வதைக் கண்டோம். ஆதலாற் அஞ்சாதே என்று வேறு சிலர் செப்பினர். இவ்வாறு கண்டோர் சொன்னதால் மன ஆறுதல் பெற்ற அவளுக்கு..

(விறலி பாடித் தன் குழுவினருடன் ஆடுகிறுள்)

புன்கண் யானையொடு புலிவழங் கத்த
நயந்த காதலற் புணர்ந்துசென் றனளே
நெடுஞ்சுவர நல்லின் மருண்ட
விடும்பை யுறுவிநின் கடுஞ்சூன் மகளே 386

அறம்புரி யருமறை நவின்ற நாவிற்
றிறம்புரி கொள்கை யந்தணிர் தொழுவலென்
றெண்டொடி வினவும் பேதையம் பெண்டே
கண்டென மம்ம சுரத்திடை யவளை
யின்றுணை யினிதுபா ராட்டக்
குன்றுயர் பிறங்கன மகிலிறந் தோளே 387

நெருப்பவிர் கனலி யுருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழ லிரீஇச்
சிறுவரை யிறப்பிற் காண்குவை செறிதோர்
பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய சுரனே 388

செய்விணைப் பொலிந்த செறிகழ னேன்றுன்
மையணற் காளையொடு பைய வியலிப்
பாவை யன்னவென் னெய்தொடி மடந்தை
சென்ற னென்றி ரைய
வொன்றின வோவவ ளஞ்சிலம் படியே 389

நல்லோர் ஆங்கட் பரந்துகை தொழுது
பல்லூழ் மறுகி வினவு வோயே
திண்டோள் வல்விற் காளையொடு
கண்டனெ மன்ற சுரத்திடை யாமே 390

இப்போது இரண்டாவது காட்சிப்படுத்தலைக் கவனிப்போம். தன் மகனை இரவோடிரவாகக் காணுமற பதறிய செவிலி பதறியடித்து எங்கே போகிறேன் என எண்ணுது பறையாது எழுந்தடித்து ஓடினுள். செல்லும் வழியிற் கண்டோரிடம் கை கூப்பி, என் செல்வ மகளைக் கண்டீரோ எனக் கேட்டாள். ஆனல் தனது மகளோ இடைச் சுரத் திடைச் செல்லும் வழியில் கண்டவர்கள் ஊடாகக் கூறி அனுப் பிய சில வார்த்தைகளைக் கேட்ட தாயின் உள்ளங் கொதித் தது. அடி பாவி மகளே! உன் எதிர்கால வாழ்க்கை நலமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே நீ விரும்பியவனின் பந்தத்தை ஒழியென இற் செறித்தேன். மனம்போன போக் கெல்லாம் போக வேண்டாம் என்பதை உனக்கு எத்தனை தடவை சொல்லியுள்ளேன். அதனை நீயும் எத்தனை தடவை படித்துணர்ந்துள்ளாய்! அப்படி இருந்தும் எனைவிட்டுப் போம் வழியில் இப்படி ஒரு அபாண்டத்தை என் தலைமீது போட்டு உடைக்கின்றனையே என்று பதறினுள். தவித்து திக்கு முக்கா டினுள். அவ்வாறு அவள் பதற்றமடையக் காரணமாக வழி யிடைக் கண்டோர் வழுத்திய சேதிதான் என்ன?

அந்தணர் சிலர் வரக் கண்ட தலைவி அவர்களிடம்; செல்லக் கருதிய இடத்தை அடைதற்காக அசைந்து செல்லும் அந்தணரே! உங்களிடம் ஒருதவி கேட்பேன், தயை செய்து அதைச் செய்வீர்களா? செல்லும் வழியில் எனது தாயாரைக்

காண்புழி, நீங்கள் வளர்த்தெடுத்த உங்கள் செவ்விதழாள், அழகிடையாள் தானே விரும்பிச் சென்ற செலவில் இடச் சுரத்தைத் தாண்டி விட்டாள் எனச் சொல்வீர்களாக என்று சொற்றினள் என்றனர்.

அதைக் கேட்ட செவிலி எண்சாண் உடம்பும் ஒரு சாணுக்குறுகி அசந்துபோனாள். அன்புக்காகத் தன் மகள் தன்மீது சுமத்திய அவதூரைப் பொறுத்தவளாக; அறியாப் பருவ ஆத்திரத்திற் கூறியிருப்பாள் எனத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அதையடுத்து வந்த சிலரிடம் வினவினள். அதற்கு அவர்கள்;

அன்னாய்! கண்டோம். அவள் எவ்விதக் கலக்கமும் இல்லாமல் காளை ஒருத்தனுடன் களிப்பாய்ச் சென்றாள் எங்களைப் பார்த்து; இவ்வழிச் செல்லும் எமைக் கண்ணுற்ற பெரியீர், நீவிர் நீடு வாழ்க. எனைப் பெற்றெடுத்து வளர்த்த என் தாய் என்மனம் நாடியவனை வரைய விரும்பிலள். அவள் செய்த நல்லதல்லாத செயலால், நான் அவர்களை விட்டு உடன்போகத் துணிந்தேன். அதனால் நான் கெடட்டவ வ வ ளாகினேன். இப்போது பகைவரைச் சினந்து கொல்லும் வீரமிக்க ஒரு காளையுடன் அவனது நெடுமுடித் தேரில் அமர்ந்து, கொன்றான் தின்னும் உழுவைகள் வாழும் மலை களையும் கடத்தற்கரிய வெஞ்சுரத்தையுந் தாண்டிச் சென்று விட்டாள எனக் கூறுவீராக என்றாள் என்றனர்.

அதைச் செவியிற் கொண்ட தாய் எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டாற்போல மனங் குமிறி நீ என் மீது தருணம் பார்த்து வஞ்சம் எடுத்து விட்டாயே எனப் புலம் பினாள். அதைக் கண்டோர்; தாயே இப்போது அவள் உன் மகள் அல்லள், இன்னொருத்தனின் இல்லக் கிழத்தி என்பதை மறந்தனையோ? இதுதான் உலக இயல்பு என ஆறுதல் மொழி உரைத்துச் சென்றனர்.

(பாடற் குழுவினர் பாட விறலி ஆடுகிறாள்).

சேட்புல முன்னிய வசைநடை யந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவ லெம்மூர்
யாயநயந் தெடுத்த வாய்நலங் கவின்
வாரிடை யிறநதன ளென்மி
னேரிறை முன்கையென் ணையத் தோர்க்கே 384

கடுங்கட் காகீயொடு நெடுந்தே ரேறிக்
கோள்வல் வேங்கை மகீபிறந் தொழிய
வேறுபல் லருஞ்சுர மிறந்தன ளவளெனக்
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்க
ணற்றே ணயந்து பாராட்டி
யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே 385

உள்ளுணர்வைத் தூண்டுங் கவிச் சுவையூட்டலில் உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என இரண்டு அலங்காரங்கள் உளதென்று முற் பகுதியில் கூறினேன். ஒரு செய்யுளில் இவை எப்படி உளதென்று காண நீங்கள் பின் வரும் வினுக்களை உங்களுக்குள்ளே கடாவிப் பார்க்க வேண்டும, கவிதையில் இந்த வினுக்களிற்காம் விடைகள் உள்ளடங்கி இருக்குமானுல் அங்கே அதுசார்ந்த சுவையூட்டம் உளதென்று தெளிந்து கொள்ளுங்கள்.

முதலில் உள்ளுறை உவமத்தை கணடறியத் தக்க வினுக்களைக் காண்போம்;

1. செய்யுளின் பொருளில் ஏதாவது உள்ளெண்ணம் உளதா?
2. மறை பொருள் எதுவும் உளதா?
3. அதன் உட் கருத்து எனன?
4. உள்ளத்தே உய்த்துணத் தக்க உள்ளீடு உண்டா?
5. சொல்லப்படுஞ் செய்தி அத்திணை சார்ந்த கருப் பொருட் களான, புள், விலங்கு, மரம் ஆதியவற்றுடன் தொடர்பிருந்தும் அதை வெளிப்படையாகத் தோன்று வண்ணம் உவமிக்கப் பட்டுள்ளதா?
6. புலந் தோன்றுத உவமித்தலாக இருக்கிறதா?

இத்தகைய வினுக்களிக்கு அந்தச் செய்யுளில ஒப்புதல் விடை காண்பீரானுல் அது உள்ளுறை உவமாகும்.

வணக்கம். அடுத்த பத்தில், அடுத்த சுவையூடு பற்றிக் கவனிப்பாம்.

காட்சி கரைகிறது

முன்னெனி அரங்கை மூட
39வது காட்சி நிறைவுறுகிறது.

நூலி

காட்சி; பத்து

களம்; பாலை நிலத்துப் பொட்டல்

காலம்; மாலை முழுமதி நிலவு

பாத்திரர்; பாணன், விறலி. பாடற்குழு (தோன்றுப் பாத்திரர்; தலைவன், தலைவி, செவிலி, நற்றாய், தோழி, தமர்)

நிகழ்ச்சி;

இந்தக் காடசிப் படுத்தலில்; முதலிற் தலைவியின் இல்லத்தில் அவளின் தாய் தன் மகட் பிரிவாற் படுந் துய ரமும், அவள் திரும்பி விட வேண்டுமென்ற விழைவும், அதற் காக, காகத்தை இறைஞ்சுதலும், அவள் திரும்பி வருகிறேன் என்று விடுத்த தூதும் சொலலப்படுகிறது.

இரண்டாவது; அரிய சுரங் கடந்து தமதூர் எல்லைக்கு வந்ததைத் தலைவன் தலைவிக்கு உரைத்து வியப்பூட்டியது.

மூன்றுவது; இல்லந் திரும்பிய தலைவி சுரங் கடந்த அனுபவத்தைத் தாய், தோழியுடன் பகிர்ந்து கொள்வது.

இறுதியாக; தன் மகள் இல் திரும்பிய களியை நற்றாய் தமருடன் பகிர்ந்து கொள்வதுடன், தலைவனின் தாயின் தாராள மனத்தைப் பாராட்டுதல் என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டதாக அமையும்.

பாணன்;

நாடகத் தமிழ் நயப்போரே! நல்லாலைப் போதின் மகிழ்ச்சியான வணக்கங்கள்! பாலைத் திணைக்குரிய அகப் பொருள் பற்றி ஓதலாந்தையார் பாடிய நூறு பாடல்களின் இறுதிப் பத்துப் பாக்கள் தரும் மறுதரவுப் பத்தின் சேதியைச் செப்பும் நிகழ்வை இன்று காட்சிப்படுத்தப் போகின்றோம். இன்றுடன் எங்களுக்கு ஐங்குறு நூற்று எழினி அரங்கினர் எமக்களித்த பொறுப்புகள் முடிவடைகின்றன. காட்சியைத் துவக்கமுன் கவிவளஞ் செய்யும் இறைச்சிப் பொருளபற்றிச் சில சிந்தனைகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

முந்திய காட்சியில் உள்ளுறை உவமத்தை தேர்ந்து தெளிவது எவ்வண் எனப் பார்த்ததுபோல் இன்று, இறைச்சிப் பொருள் எத்தகையதாக இருக்கும் என்பதை உய்த்துணரச் சில குறிப்புகள்; அதில்;

1. புறத்துச் செல்லும் குறிப்புப் பொருள்கள் இருக்கும்
2. கருப் பொருளின் உட்பொருள் உடனிலை உவமையில் உள்ளது போல அமையும்.
3. கருப்பொருளடியாப் பிறக்கும் உள்ளுறை உவமை போல உணர்வைக் கிளர்த்தும்

இத்தகைய தன்மைகள் ஓர் செய்யுளிற் சொல்லப் படும் பொரிளிற் தெளிவுறுமாயின், அதனை இறைச்சிப் பொருட் சுவை நயக் கவிதை எனலாம். இதைக் கேட்ட உங்களுக்கு, எப்படி இதை உய்த்துணர்வது எனும் மயக்கு ஏற்படும். அத்தகைய மயக்கை எப்படி அகற்றலாம் என்பதை பின்னுற் தருவோம்.

இப்போது; பாடற் குழுவினர் இதன முதற பகுதி நிகழ்வைக் கூறும் பாடலகளைப் பாட விறலி ஆடுவாள். அதைத் தொடர்ந்து அவற்றின் பொருட்களை நான் பகர்வேன், இந்தப் படி முறையிற்தான காட்சி தொடரும்.

(பாடற் குழுவினர் பாட விறலி ஆடுகிறுள்).

கவிழ்மயி ரெருத்திற்செந் நாயேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரநனி வாரா நின்றன ளென்பது
முன்னுற விரைந்தநீ ருரைமி
னின்னரை முறுவலென் முயத் தோர்க்கே 397

மறுவி றூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைநிண வல்சி
பொலம்பிளை கலத்திற் றருகுவன் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் ஞீமே 391

மள்ள ரன்ன மரவந் தழீஇ
மகளி ரன்ன வாடுகொடி அடங்கு
மரும்பதங் கொண்ட பெரும்பத வேனிற்
காதல் புணர்ந்தன ளாகி யாய்கழல்
வெஞ்சின விறல்வேற் காளையொ
டின்றுபுக தருமென வந்தன்று தூதே 400

பாணன்;

வெஞ்சுரத்திடை தலைவனுடன் தலைவி தனது இல்லத்திற்கு திரும்பி வரும் வழியிற் தனது வரவை முன் கூட்டித் தனைப்

பிரிந்து துயருறுந் தாய் ஆயம் ஆதியோர்க்குத் தெரியப்படுத்த விழைகிருள் . அப்போது அவ்வழியில் விரைந்து தமைக் கடந்து, தன் இலலத் திசை நோக்கிச் செல்வாரைப் பார்த்து; அன்புடையீர் கவிழ்ந்து தொங்கும் பிடரி மயிர்ச் செந்நாய் குட்டியுடன் நிற்கும் பன்றியை வேட்டையாடாது விலகிச் செல்லுஞ் சுரத்தைக் கடந்து உனது மகள் திரும்பி வரு கிருள் என்பதை விரைந்து சென்று இனிய நகை மிக்க என் தாய்க்கும் ஆயத்தாருக்கும் சொல்வீராக

தன் மகள் எப்போது திரும்பி வருவாள் என வழிமேல் விழி வைத்து காத்துக் காத்து அலுத்த தாய், ஆற்ருளாய் முன்றலிற் கரைந்துந் தத்தியுந் திரியும் காகத்திடம் ஓர் உதவியை வேண்டுகிருள்.

சிறு காக்கையாரே! மறுக்கள் இல்லாத நீலப் பளிங்கின்ன காக்கை வண்ணக் கரு நீல வண்ணமாய் நீ இருந்தாலும் கருமை நிறத்தனேயென அழைக்கப்படும் காகமே! நீ உன்னினத்தில் மிகப் பரிவுடையாய். என வேதான் உற்ருரைக் கரைந்து அழைத்துப் பகிர்ந்துண் பண்புடையாய். புதிய விருந்தினர் வீட்டிற்கு வருவதை முன் கூட்டியே கரைந்துந் தத்தித் தாவியும் அறிவிக்கும் வல்லாய். பொன் கலத்தில் கொழுப்பு நிறைந்த புதிய இறைச்சியைப் படைத்து உனக்கு விருந்து வைப்பேன். அதற்குப் பதிலாக: பகைவரைச் சினந்து வெற்றிகொள்ளும் வேலாயுதத்தைக் கையிலேந்திய காளையொடு தன் கூந்தலே அஞ்சில் வடிவாகப் புணைந்த என் மகள் வரக் கரைவாயாக. என்று இரந்தாள்.

அப்போது ஆங்கு வந்த செவிலி தான் அறிந்து வந்த செய்தியை நற்ருயிடம் ; அன்னுய்! ஒரு நற்சேதி கூறுவேன் கேட்குதி. மறவர்களே நிகர்த்த மராமரத்தைப பற்றிச் சுற்றித் தழுவிப் படர ஆடி அசையுங் கொடியொத்த காதலனுடன் பாதம் பதிக்க அஞ்சும் வெப்பம் மிகுந்த பாலே நிலத்தைக் கடந்து வெற்றிக் கழலணிந்த வெள்வேல் விடலையுடன் என் மகள் இன்று வருவாள் என்ற தூது ஒன்று வந்துளது என்று கூறினுள். தாய்; செவிலியே நீ என்ன சொல்கிருய்? சொல்வது உண்மையா என வியப்புறுற்றுக் கேட்டாள் அடுத்து பாலே வெஞ்சுரப் பாதையில் நடந்தி வந்த தலைமகளிடம் தலை மகன் பின்வரும் நல்ல செய்தியைக் கூறினுன்

பாடற் குழுவினர் பாட விறலி ஆடுகிறுள்).

முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரிச்
சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கு
மின்னு வருஞ்சுரந் ஞீர்ந்தன மென்மேல்
வேகுமதி வாழியோ குறுமகள் போதுகலந்து
கறங்கிசை யருவி வீழும்
பிறகிருஞ் சோகிலநம் மகிலகெழு நாட்டே 395

புலிப்பொறி வேங்கைப் பொன்னினர் கொய்துநின்
கதுப்பய லணியு மளவை பைபயச்
சுரத்திடை யயர்ச்சியை யாறுக மடந்தை
கல்கெழு சிறப்பி னம்மூ
ரெல்விருந் தாகிப் புகுக நாமே 396

தலைவியே நீடுழி வாழ்க. காய்ந்த மூங்கில்களின் உர சலால் எழுந்து, காற்றுடன் பரந்து சுடர் விட்டு எரியும் காட்டக்கினி, வெடித்துப் பிழந்த கற் குகைகளில் புகுந்து முழங்குகின்ற, இடர் மிகு சுரத்தைக் கடந்து விட்டோம். ஆகவே பதருது மெல்ல மெல்ல வருவாயாக! நாமோ இப்போது ஒலித்து வீழ்த்தோடும் அருவிகளுஞ் சோலைகளும் மிக்க தண்ணென்ற நமது மலைச் சாரலிடை வந்து விட்டோம் என்றுன். மேலுந் தொடர்ந்து;

புலியின் புள்ளிகளைப் போன்று தோன்றுவதால், அதன் பெயரால் வேங்கை என்று அழைக்கப்படும் மரத்தின், பொன் போன்ற தளிர்களைக் கொய்து நின் கன்னங்களை அண்மிய கழுத்தில் அணிந்து கொள். அதன் தண்மை கடந்து வந்த சுரத்தால் உண்டான வெப்பத்தைத் தணிக்கும். அதனல் களைப்பாறி எழுந்தால் மலைகள் செறிந்த நமது ஊரை அடைந்து விடுவோம். பாவாய்; அப்போது நாம் அந்த ஊருள் கால் வைத்த விருந்தினராகி விடுவோம்.

(பாடற் குழுவினர் பாட விறலி ஆடுகிறுள்)

துறந்ததற் கொண்டு துயரடச் சாஅ
யறம்புலந்து பழிக்கு மகளை ணுட்டி
யெவ்வ நெஞ்சிற் கேம மாக
வந்தன ளோநின் மகளே
வெந்திறல் வெள்வேல் விடலைமுந் துறவே 393

வேய்வனப் பிழந்த தோளும் வெயிறெற
வாகவின் றெகிலத்த நுதலு நோக்கிப்
பரியல் வாழி தோழி பரியி
னெல்கியி லிடும்பை தரும்
நல்வரை நாடனெடு வந்த மாறே 392

புள்ளு மறியாப் பல்பழம் பழுநி
மடமா னறியாத் தடநீர் நிகுலிச்
சுரநனி யினிய வாகுக வென்று
நினைத் தொறுங் கலிழு மென்னினு
மிகப்பெரிது புலம்பின்றி தோழிநம் மூரே 398

தான் வசிக்குந் தெருவிலிருந்து அடுத்த தெருவிற்குப் போய் வந்தாலே; இடையில் தான் கண்ட எத்தனையோ சேதிகளைச் சொல்லும் இயல்புடைய பெண்ணினத்துத் தலைவி உடன்போக்கிடை சென்று, காதலனுடைய தமரின் ஒப்பு தலுடன் மணஞ் செய்து தன் இல்லத்திற்கு நீண்ட நாட்களின் பின்னர், பாலை வெஞ்சுர மாதிய பல திணைகளின் ஊடாக வந்த காலை தன் தாய்க்குந் தோழிக்கும் கூறியவற்றை இப்போது காட்சிப் படுத்துப் போகின்றோம். முதலில் தன் தாயண்டை வந்து அவளை ஆரத் தழுவி;

அன்னுய்! நான் உன்னைப் பிரிந்து சென்ற நாட் தொடக்கம் துயருற்று சாகாமற் செத்தும், ஊரவரின் பழிக்கு அஞ்சியும் கண்களில் நீர் பெருக அழும் நற்றாயே! நெஞ்சின் துயரத்தை அகற்றுவாயாக! இதோ உன் மகள், கொடிய பகைவர்கள் சூழ்ந்தாலும் தன் வெள் வேலால் வென்று வெற்றிக் கழல் அணிந்த காதலனுடன் நலமாக வந்து நிற்பதைக் காணபாயாக. என்று பெருமிதம் உற்றாள்.

அடுத்து உடன்போக்கிற்கு உடந்தையாக இருந்த தோழியண்டைவந்து;

தோழியே! எனது மூங்கிலொத்த தோழ்கள் தனது அழகை இழந்ததையும், சுரத்து வெயிலாற் பசுமை படர்ந்த என் நுதலையும் பார்த்து இடைச் சுரத்தே இவள் என்ன பாடுற்றாளோ எனப் நினைந்து மனம் வருந்தற்க. அவ்வண் வருந்துவாயானால் நான் நல்ல மலை நாடனுடன் வந்த பெருமைக்கு இழுக்காகும். என்னுள் அதைக் கேட்ட தோழி; தலைவியே! பறவைகள் கூட அறியாமல் எண்ணற்ற பழங்களைப் பழுக்கும் மரமும், மருள்மிகு மான்கள் அறியாத

தணணென்ற சுணைகளுங் கொண்ட வெஞ்சுரம் கடத்தற்கு இனியதாகுக என்றே எப்போதும் எங்கள் நெஞ்சத்தில் நிணைப்போம். அதுபோல உனது பிரிவால் நமது ஊரும் கலங்கி உணை நிணைத்தது.

(பாடற் குழுவினர் பாட விறலி ஆடுகிருள்)

மாண்பில் கொள்கை யொடுமயங்கு துயர்செய்த
வன்பி லறனு மருளிற்று மன்ற
வெஞ்சுர மிறந்த வஞ்சி லோதிப்
பெருமட மான்பிணை யகலந்த
சிறுநுதற் குறுமகட் காட்டிய வம்மே 394

நும்மணைச் சிலம்பு கழீஇ யயரினும்
எம்மணை வதுவை நன்மணங் கழிதெனச்
சொல்லி னெவனே மற்றே வெள்வேள்
மையறவிளங்கிய கழலடிப்
பொய்வல் காணையை மீன்ற தாய்க்கே 399

காணுமற் போன பொருள கண்ணிற்பட்டால் மகிழாதார் உளரோ/ கண்ணிற் கண்ட பொருள் கையிடை வரப் பெற்றுல் ஆனந்த மடையாதவர் யார்? அந்த நிலையில் உடன் போக்கிற் சென்ற தனது மகள், காதலணைக் கணவனுகப் பெற்று தன் முன் வந்ததால் களிப்புற்று தன் மன நிலையை ஆங்கு வந்த தமருடன் பின்வருமாறு பகிர்ந்து கொண்டாள்

வருக வருக! என் இன சன பந்துக்களே! உயர்ந்த வாழ்வியற் குறிகோளும் மதி மயக்கமும் அன்பில்லாத நெறியும் அருளையும் இழந்ததால், தன் மனதுக்குகந்தவனை நாடி எனைப் பிரிந்தகன்ற என் மகள் வெஞ்சுரத்தைக் கடக்கத் துணிந்தாள். அன்ன நடையும் மான் விழிகள் மருட்டுஞ் சிறு நுதலுமுடைய பெருமை மிக்க மடந்தையான அவள் இல்லிற்கு வந்து விட்டாள் . நான் செய்த நல்ல காரியங்களே அவனை நான் மீண்டுங் காண எனக்கு அருளிற்று.

என் உற்ருர் உறவினர்களே! உனது பிறந்த வீட்டாரிட்ட சிலம்பைக் கழித்து, எங்கள் வீட்டில் உனை ஏற்று முறைப்படி வதுவை செய்ய வேண்டும் என்று என் மகளைத் தன் மகளாக மனதார ஏற்றுக் கொண்ட வெற்றிக் கழலணிந்த என மகளின் காதலனின் தாயை நான் எவ்வண் பாராட்டுவேன் என்ருள்.

நக்கநு

இடர்தரு இடைச்சுர வழியைக கடந்து ஈற்றில் எலலாம் இன்பமயமாக முடிந்த பாலைப் பத்தினை முடிக்க முதல்;

இறைச்சிப் பொருள், உள்ளுறை உவவம் எனுங் கவிச் சுவை ஊட்டிகளையிட்டு மேலுஞ் சொல்வதானுல்; முதலில் உவமை நயம்பற்றி அறிய வேண்டும். முல்லைத் திணையில் வாழும் ஒரு குடும்பம் பற்றிய காட்சி ஒன்றை;

மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வ னடுவண ணுக நன்று
இனிது மன்றவவர் கிடக்கை

எனச் சொல்லப் படுகிறது. இதில் முல்லைத் திணைக் கருப் பொருள் இடம் பெற்றுலும் போல எனும் உவம உருபு கண்டவொரு காட்சியையும் அதற்கு நிகரான ஒரு காட்சி யையும் ஒப்பிட்டிரைப்பதால் உவமை அணியாக்கி விடுகிறது. எனவே இறைச்சிப் பொருள், உள்ளுறை உவமப் பாடல்களா எனத் தெளிய முன் அவற்றில் போலப் புரைய மானக் கடுப்ப அன்ன இன்ன போன்ற உவம உருபுகள் தொன்றியோ தொக்கியோ உளவா என அவதானிக்க வேண்டிம். அப்படி ஏதொன்று இருப்பின் அதனை உவமை அணியெனத் துணியலாம். அவ்வண் துணியின் அது இறைச்சிப் பொருளோ உள்ளுறை உவமோ அல்லவெனத் துணியலாம்.

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூடுகிறது
40 வது காட்சி நிறைவுறுகிறது

ஆறுவது பகுதி

ஐங்குறு நூற்றுச் செய்யுள்களின்
நாடக வடிவிலான
நலனுய்வுக் காட்சிகள்

ஐந்தாவது முல்லை எழினி அரங்கம்

பேயனாரின்
முல்லைத் திணை சார்ந்த
100 பாடல்களின் காட்சிப் படுத்தல்கள்

41, செவி கூற்றுப் பத்து
42. கிழவன் பருவம்
பாராட்டுப் பத்து
43. விரவுப் பத்து
44. புறவணிப் பத்து
45.பாசறைப் பத்து
46. பருவங் கண்டு
கிழத்தியுரைத்த பத்து
47.தோழி வற் புறுத்த பத்து
48. பாணன் பத்து
49. தேர்வியங் கொண்ட பத்து
50. வரவுச் சிறப்புரைத்த பத்து

முல்லைத் திணை எழினி

ஐங்குறு நூற்றில் ஐந்தாவதாகத் தொகுக்கப்பட்டுள்ள பகுதி முல்லைத் திணை சார்ந்த பாடல்களாகும். இதனைப் பாடியவர் பேயனார் எனுங் கடைச் சங்க காலத்துப் புலவராவார். பேயார் என்றும் அழைக்கப்படுவார். இவர் காடும் காடு சார்ந்த நிலமான முல்லைத் திணையைப் பாடுதில் வல்லவர். இவர் ஐங்குறு நூற்றில் 100 பாடல்களையும் குறுந் தொகையில் நான்கு பாடலகளையும் ஆக 104 பாடல்களைப் பாடி உள்ளார். இவற்றில் ஒன்று தவிர்ந்த ஏனையவை முல்லைத் திணை சார்ந்தவை.

நமக்கு இன்று கிடைக்கும் பண்டைப் பெருமை மிக்க பாடல்கள் யாவும் கடைச் சங்கம், சங்கம் மருவிய காலப் பாடல்களே. இவைகளே இவ்வளவு இலக்கிய உணர்வைத் தட்டி எழுப்பும் வாழ்வியல் சார்ந்த பாடல்களாக இருக்கிறதே! அதற்கு முந்திய காலத்தில் பாடப்பெற்ற முதற் சங்கம், இடைச் சங்கப் பாடல்கள் இவற்றிலும் எவ்வளவு திறத்தனவாக இருந்திருக்குமோ எனும் வியப்பே விஞ்சுகிறது! கடைச் சங்க காலமே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தென்பர். இப்பாடலகள் மூலம், அக்கால மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள், எவ்வித வாழ்க்கை நெறிகளையும், நோக்கங்களையும், சால்பு - பண்புகளையும் கொண்டிருத்தனர் என அறியும் போது; அதற்கு முற்பட்ட காலப் பாடல்கள் கிடைப்பின் அதற்குப் பல ஆயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த தமிழினம் எவ்வளவு மேம்பட்ட நனி நாகரீகராக வாழ்ந்திருப்பார்கள் என எண்ணவே தோன்றுகிறது. அத்தகைய இனத்தின் வழி வந்தவர்களா, நாம்! என்ற மலைப்பே ஏற்படுகிறது.

மாயோன் மேய காடுறை உலகமும், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச் சொல்லிய முறையான் சொல்லவும் படுமே எனத் தொல்காப்பியர முல்லைத் திணைக்கு முதலிடத்தை வைத்துச் சிறப்பித்தார். அனல் தொகுப்பாசிரியர் இறுதியிலே இடமபெறச் செய்துள்ளார். பச்சிலைகளும் புதரும், செடி, கொடி மரமுங் கொண்ட முல்லை நிலத்திற்கு நீலப் பச்சை எனுஞ் சாமள வண்ணம் உரியதாமெனவே முல்லைத் திணை எழினியில் கரும் பச்சை நிறமே மிஞ்சி நிற்கும்.

பெயர்க் காரணம்: ஆங்கு வள ம் தளவு, மாகதி, மௌவல், யூதிகை என்று அழைக்கப்படிம் முலலைக் கொடியின் பெயரால் இத்திணை நிலம் அழைக்கப்படுகிறது.

இத்திணை கன்னியும் காளையும் ஊழ்வயத்தால்
ஒருவரை ஒருவர் காணல், காதலித்தல் எனக் களவியலில்
ஆரம்பித்து, மணத்தல், பிரிதல், ஆற்றி இருத்தல்
எனும் கற்பியலில் முழுமையுறல் என இருத்தலும்
இருத்தல் நிமித்தமுங் கொண்ட இல் வாழ்க்கையை உடையது.
பிரிந்து சென்ற கிழவன் மீண்டு வந்துழி, கிழத்தி மகிழ்ந்து
கூறும் சேதியாக முல்லைத் திணைப் பாடல்கள் அமையும்.
இதற்கு வாய்ப்பளிப்பது கார்காலம் எனும்
பெரும் பொழுதும் மாலை நேரம் சிறு பொழுதுமாம்.

தெய்வம்; மாயொன் எனுந் திருமால்
முல்லை நில மாக்கள் பெயர்; 1, ஆடவர்; முல்லையர், பொதுவர்,
அண்டர், கோவிந்தர், ஆண்வல்லவர், குடவர், பாலர்,
கோபாலர், கோவலர், அமுதர், இடையர், ஆயர்,
தொதுவர், கணவன் - கிழவன்
மாதர்: தொறுவி, பொதுவி, ஆய்ச்சி, குடத்தி, இடைச்சி -
மனைவி கிழத்தி
தலைவன்; கானநாடன், குறும்பொறை, நாடன்,
அண்ணல், தோன்றல்

பறவை; காட்டுக் கோழி. காஞ்சி கோழி, காடை,மயில், சிவல்(கௌதாரி)
விலங்கு; மான், முயல், ஆடு, மாடு,

பூ; முல்லை, குல்லை, மில்லை தோன்றிப்பூ, பிடவம் பூ
மரம்; கொன்றை, காயா, குருதம், ஓமை

ஊர்; பாடி
நீர்; குறிஞ்சுனை. கான்யாறு
உணவு; வரகு, சாமை, முதிரை
தொழில்; சாமை, வரகு, விதைத்தல், களை கட்டல், அரிதல்,
கடாவிடுதல், கொன்றையங் குழலூதல், மூனம் மெய்த்தல்,
கொல்லேறு தழுவல்,

பறை; எறங்கோட் பறை, யாழ். முல்லை பண்; சாதாரி

திணை மக்களிடை பயிலும் பண்புச் சிறப்புகள். தன் தந்தையின் பெயரை
மகனுக்கு சூட்டுதல், ஐவிதமாகக் கூந்தல் முடிதல்,
குழந்தைகட்கு அரையிற் கிண்கிணி அணிதல்,
குதிரை விரைந்தோடத் தாற்கோல் பாய்ச்சுதல்,

பெரும் பொழுதின் அடையாளம்; கார் காலத்தில்; தேரை தவளை
ஒலித்தல். புற்றில் இருந்து ஈசல் புறப்படுதல்,
முன்பனியில்; கருவிளை பீர்க்குப் பூக்கும்
கூதிரில்; பகன்றை, ஈங்கை மலர்தல்

காட்சி; ஒன்று

களம்; தலைவியின் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்;
மதங்கர் தலைவன். மதங்கியர் இருவர் (தோன்றுப் பாத்திரர் ; தலைவன், தலைவி, செவிலி, நற்றாய், தோழி)

நிகழ்ச்சி;
உடன்போக்கிற்கேகிய மகளை நெடுநாள் காணுமற் தவிக்குந் தாய் செவிலியை அனுப்பி அவளையிட்டு அறிந்து வரச் சொல்லுதல். அவள் சென்று, கண்டு, வந்து தலைவியின் குடும்ப நலங் கூறச் செவியுற்ற தாய உளம் மகிழ்தல்.

மதங்கர் தலைவன்;

என்னுடன் பணிசெய்து களரிகளில பல கூத்துகளை நடத்திப் புகழ் ஈட்டி நிலை நாட்டி வரும் நாடகத தமிழ் பயின்ற மதங்கர்களை. இந்த அரங்கை நடத்தும் முகவர், என்னிடம் இன்று தொடக்கம் பத்து நாடகங்களை நடத்துமாறும், அதற் கான நாடகக் கருப் பொருளாகக் கடைச் சங்கக் காலப் பாடற் தொகுப்பான எட்டுத் தொகையுள் மூன்றுவதான ஐங்குறு நூறு எனும் நூலின் இறுதிப் பகுதியான முல்லைத் திணை சார்ந்த 100 பாக்களை இங்கு நடைபெறும் கொல்லேறு தழுவும் விழாப்போது, இரவு வேளையில் நடித்துக் காட்டும்படி பணித்துள்ளனர். அத்துடன் இரண்டு கோரிக்கைளையும் விடுத்துள்ளார். பொன்னும் பொருளும் நிலைக்கா. புகழே எந்நாளும் நிலைக்கும். நம் குழுவினரே உலகிலே உயர்ந்த மதங் கரெனும் பேர் நிலைக்கவும் , நாடகக் கலையை மேம்படுத்தவும் உங்கள் திறத்தைக் காட்டுக.

முதலாவது; எவ்வளவோ காலத்தின் முன் பாடிய பாடல்கள் எமக்கு எவ்வாறு பொருந்துமெனவுந் காலமும் மாறிக் கோலமும் மாறிப் போன இக்காலத்தில் அப் பாடல் களால் என்ன பயன் என்றும் தற்கால மக்கள்; கேட்கின் றனராம். அத்தகை ஐயப்பாடுகளை அகற்றிச் சங்க காலப் பாடல்கள் எக்காலத்தும் தமிழ்ப் பண்புடையார்க்குப் பொருந் துவதொன்றென உணர்த்த வேண்டுமாம். இரண்டவது; இத்தகைய இலக்கியங்களின் பயன் எததகைத்து என்பதையும் உறுத்தி உரைக்கவும் வேண்டுமாம்.

அவர்களின் உட்கிடக்கைக்கு ஏற்ப முல்லை சார்ந்த 100 பாடல்களை அடியொற்றித் தொடரும் பத்து இரவுகளிற் பத்துக் காட்சிகளாக நடித்துக் காடடப் போகின்றோம். அவற்றுளும் இப்பழைய பாடல்களோ பழையவை. காலமோ மின் வலு ஆளும் தற்காலம். எனவே இந்தப் பாடல்களைக் காட்சிப் படுத்தும் பாத்திரர் பல ஆயிரம் வருடங் கடந்த காலத்தில் வாழ்பவராகக காட்சிப் படுத்த வேண்டும். அதற்கேற்ப நீங்கள் உங்களின் நடிப்புத் திறமையால் பழைய கள்ளைப் புதிய மொந்தையில் ஊற்றிக் காட்ட வேண்டும்.

மதங்கர்:

பழமையைப் புதுமையில் காட்டும் நாடகங்களில பங்கேற்க வேண்டும் என்பது எங்களின் நீண்ட கால விழைவு. அது கைகூடும் காலம் காலடிக்கு வந்தால், நாங்கள் கை நழுவ விடுவோமா. அய்யா.... தலைவரே! அதன் கருத்தையும் பாடலகளையும் விளக்கி விட்டால், நாங்கள் அக்கருத்துகளை மகக்களுக்குத் துலக்கி விடுவோம்.

மதங்கர் தலைவன்;

நல்லது. நன்றிகள். புனையும் வேடம் மாறவும். ஒப்ப னைகள் தற்காலத்திற்கு ஏற்ப அமையவும் வேண்டும், காட்சி கள் இவ்வரங்கில் நடைபெற்றாலும், பாவனைப் பொருட்களும் சூழலும் உடையும் நடையும் பாவனையும் தற்காலத்திற்கேற்பப் புனையப்படல் வேண்டும் . இந்தத் தாள்களில் இன்றைய நாடகக் காட்சியின் பிரதி உளது அதைப் படித்தறிந்து நடித்துக் காட்டி சபையோரின் உள்ளுணர்வுகளை மலர்த்தி விடுங்கள்.

காட்சி ஆரம்பமாகிறது முன்னெழினி அகல அரங்கு தோன்றுகிறது. அங்கே; மதங்கர் தலைவன்;

அவையோரே! வணக்கம். ஐங்குறு நூற்றின் நாற்பத் தோராவது பத்தின் பழைய பாடல்களைத் தற்காலத்திற்கு ஏற்பக் காட்சிப் படுத்தப் போகின்றோம், அதற்கு உங்களின் ஆதரவை அன்புடன் வேண்டுகிறோம்.

சுவைஞர்களே! வாழ்க்கையின் வடிவமே இலக்கிய மாகிறது, அப்படி ஆகுங்கால், நாம் வாழும் வண்ணமும் வளமும், வளர்ச்சியும், வழக்கமும், வாழ்க்கை நெறியின் வரம்பும் அதன் கூறுகளாகி நம் மனித நேயத்தை நெறிப் படுத்தித் தக்க வழியிற் செயற்படுத்தி விடுகிறது.

நாகரு

இவ்வாறு மனிதத் தன்மை மிக்க உணர்வுகளுக்கு வளங் கொடுக்கும் சேதிகளையே இலக்கிய உணர்வென் கிறோம். இலக்கியங்களைப் படிக்கும்போது நம் மனதிற் பயிலும் நல்லுணர்வுகள் மனித மன வளத்தை மேம்படுத்துகிறது. வாழ்க்கை இலக்கியமாவதுபோல மறுமுனைத் தாக்க நிலையில் இலக்கிய உணர்வு வாழ்க்கை நெறியை ஆக்குகின்றது. இத் தத்துவத்தின் அடிப்படையில் முல்லைத் திணைசார்ந்த நாடகங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

ஆயினும்; ஒரே ஒரு விசயம்! நாம் சங்க காலத் தமிழரின் சந்ததியினர்! ஆகவே அவர்களின் வழித் தோன்றலான எங்க ளுக்கும் அவர்கள் பயின்ற பைந்தமிழ் உண்டு. தமிழ்ப் பண்பு நலஞ் சார்ந்த வாழ்வியல் உண்டு. ஒன்றே குலம்; ஒருவனே தேவன். ஒன்றே உலகம் அதன் ஊரெலாம் நம்மூர், அங்கு வாழ் யாவரும் நம் உறவினர் என்னும். உயர்வான இறையியல், உலகியல், சமூகவியற் கோட்பாடுகள் உள்ளன. இத்தகைய உயிர் மரபு உள்ள அவ்வத்திவாரத்தில் தற்கால மனிதர் கோலத்தைச் சற்று ஏற்றி இறக்கி வாழ்ந்தாலும் தமிழர் கொள்கைகள் மாறவே இல்லை. எனும் நம்பிக்கையுடன் உங்கள் நாடகக் கலை நுட்பங்கள் தோன்ற உண்மையான உணர்வை உள்ளத்தே தேக்கி காட்சிப் படுத்துங்கள். அதாவது; ஏற்கும் பாத்திரமாக உங்கள் உடலையும் உள்ளத்தையும் வசப் படுத்திக் கொள்ளுங்கள் பார்ப்போர் மனல நடித்க் காட்டிம நிகழ்வின் காலந் துலங்க வேண்டும். ...

இங்கே, பாருங்கள். மலைச் சாரலில் வாழும் ஓர் மத்திய தரக் குடும்பம். குடும்பத் தலைவன் ஒரு அரச அதிகாரி. மகள் பல்கலைக் கழகத்திற்குப் படிக்கச் சென்றுள். அங்கே பயில வந்த நெய்தற் திணைக் காளையுடன் கல்வி கற்றுள். இருவ ருக்கும் இடையில் ஏற்பட்ட பரிவும் புரிந்துணர்வும் பருவ நாட்டமும் பரமனின் கூட்டுதலும் ஆக்கிய பிணைப்பை பெற்றார் வெறுத்தனர். எனவே அவர்கள் வேறிடஞ் சென்று மணஞ் செய்து நலமே வாழ்கின்றனர். மகளைப் பிரிந்த தாய் மனங் குமுறினுள். மகளைக் காண விழைந்தாள். இரு வருட காலம் கழிந்தது எனக் கால அந்தர் (Calender) காட்டியது. மேலும் ஆற்ற முடியாதவள் தன் மகளைச் சீராட்டி வளர்த்த செவிலியிடம் மகளைப் பார்த்து வரும்படி வேண்டினுள். அதைத் தொடர்ந்த நிகழ்வுகளே இங்கே காட்சியாக விரிகிறது.

செவிலி:

அன்னுய்! நும்மைப் பிரிந்து தன் காதலனுடன் சென்ற தலைவி என்ன ஆனாள் எனப் போய்ப் பார்த்து வரும்படி என்னை அனுப்பி வைத்தனை. நானும் அவளறியாமல் அவளின் மனை யயலில் வாழுஞ் சிலரின் உதவியுடன் அவளின் மனையருகே சென்று கவனித்தேன். அப்போது நான் அங்கே கண்ட காட்சி வியக்க வைத்தது. என் மகளுக்கு இப்படி இல்லத் துணைவன் கிடைக்க நாம் என்ன தவஞ் செய்தோமோ. காதலர் இருவர் கருத்தொருப்பட்டு ஆதரவு பட்டதே இன்பம் என்பார்களே! அத்தகைய வாழ்க்கை நலத்தைத்தான் மகள் மனையறத்தில் பார்த்தேன்.

நற்றாய்; அப்படி என்ன பார்த்தனையோ!

செவிலி:

தாயே! நான் சென்றது மாலை நேரம். மதி உதிக்கும் வேளை, வாசல் முன்றலில் பரப்பிய வெண் மணலில் உன் பேரன் படுத்துக் கிடந்தான்.

நற்றாய்; பேரனு? அது யார்!

செவிலி:

யாராக இருக்கமுடியும். உன் மகளின் மகன்தானே உனக்குப் பேரனுகலாம்! அது வேறு யாரால் முடியும்?

நற்றாய்; அய்யோ என் பேரனு? அவன்....

செவிலி:

அன்னுய்! ஆமாம். அவன் வானத்து மதியைப் பார்த்துக் காலைக் கையை ஆட்டி அதைப் பிடிக்க முயன்று கொண்டிருந்தான். அவனது வலது பக்கம் தகப்பனும் இடது பக்கம் அவனின் தாய், உன்மகளும் படுத்து அதைப் பார்த்து நயந்திருந்தனர். அது எப்படி இருந்தது தெரியுமா? அங்கு நான் செல்லும் வழியில், ஒரு மரா மரத்தடியில் தமது குட்டியை மத்தியில் வைத்துக் கொண்டு அதன் தந்தை தாய் மான்க ளான கலையும் பிடியும் படுத்திருந்ததைக் கண்டேன். அதுபோ லவே உங்கள் பேரனும் மருகனும் மகளும் இருந்தனர். இத்தகைய வாழ்க்கை இன்பம், கேட்டதை உடனடியாக நல்கும் நீல வானத்தே வாழ் உம்பர் உலகத்தவர்க்கும் கிடைத்தற்கரிதே.

மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வ னடுவண னுகை நன்று
இனிது மன்றவவர் கிடக்கை முனிவின்றி
நீனிற வியனுலகங் கவைஇய
வீனு மும்பரும் பெறலருங் குரைத்தே 401

அந்தக் காட்சியை இப்படித்தான் பாடத் தோன்றுகிறது.

புதல்வற் கவைஇய தாய்புற முயங்கி
நசையினன் வதிந்த கிடகைகை பாணர்
நரம்புளர் முரற்கை போல
வினிதா லம்ம பண்புமா ருடைத்தே 402

அங்கே நான் கண்ட இன்னுமொரு காட்சி என் மனதைக் கவர்ந்தது. நம் மகள் உன் பேரனுக்கு அமுதூட்டிக் கொண்டு கிடந்தாள். அவளது பின் பக்கமாகத் தலைவன் படுத்திருந்தான். அதைப் பார்த்தபோது மகர யாழ் ஒன்றை மடியில் ஏந்திய பாணன் அதன் இனிய ஓசைகளை இழைக்கும் நரம்புகளை மீட்டுவதுபோல இருந்த தோற்றம் ஈருடல் ஓருயிர் என்பதைச் சித்தரிப்பதாகவே அக் காட்சி என்னைப் பிரமிக்க வைத்தது.

நற்றாய்;

செவிலியே நீ உன் வாயாற் சொல்லி இன்புறுகிறாய். நானதைச் செவியாற் கேட்டு அந்தரத்தே பறக்கின்றேன். ஆங்கு வேறு என்னதுதான் கண்டனை .....

செவிலி:

சொல்கின்றேன் அன்னாய்! தான் விரும்பித் தேர்ந்து ஒன்று கூடிய காதலியிலும் பார்க்க அவள் ஈன்று ஈந்த புதல்வனுக்குத் தலைவன் தனது தந்தையின பெயரைச் சூட்டி அழைத்து மகிழ்ந்தான். உள்ளக் களிப்பின் உவகை உதட்டிற் புன்னகையாய்ச் சிந்தத் தன் மகனின் பிஞ்சுக் கரங்களைச் சிறு தேரில் வைத்துப் பிடித்து, தளிர்ப் பாதங்கள் தள்ளாட நடத்தி மகிழ்ந்தான். அதைக் கண்டு அவள் தன்னை மறந்திருந்ததையுங் கண்டேன். அப்போது;

புணர்ந்த காதலியிற் புதல்வன் றகூஉ
மமர்ந்த வுள்ளம் பெரிதா கின்றே
யகன்பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்
முறுவலி னின்னகை பயிற்றிச்
சிறிதே ருருட்டுந் தளர்நடை கண்டே 403

என்றெந்தன் இதயம் பாடிற்று.

நற்றாய்;

என்ன சொல்லினை. ஏன் என் பேரனுக்கு வேறு ஒருவரின் பெயர் வைக்க வேண்டும். இது என்ன நியாயம்? அந்த உரிமை என் தந்தைக்கே உரியதாயிருக்க இவ்வாறு எப்படிச் செய்ய முடியும்?

செவிலி:

அன்னுய். நம் மகள், நம் இல்லத்தில் இருந்தால் அந்த உரிமை நம்முடையதாகும். அவளோ இப்போ தன் தலைவன் இல்லத்தே இருக்கின்றாளே! மற்றொரு காட்சியை எனது கண்கள் கண்டு களித்தன. அதையுங் கேட்டுப் பேரனுக்கு யார் பெயர் உரியது என்பதை உற்றுணர்வோம்.

வாணுத லரிவை மகன்முலை யூட்டத்
தானவள் சிறுபுறங் கவையின னன்று
நறும்பூந் தண்புற வணிந்த
குறும்பல் பொறைய நாடுகிழ வோனே 404

ஆமாம் அன்னுய்! நாம் அவளை இற்செறித்த போது, தோழ் மெலிந்து, நுதலில் பசலை படர்ந்து நொந்தனள் அல்லவா. இப்போது அவையெலாம் அகன்று நலம் பெற்றனள் என்பதை அவளது ஒளிமிகும் நெற்றி சொல்லியது. நமக்குக் குழந்தை யாக இருந்தவள், தனக்கொரு குழந்தையைப் பயந்து, தன் மடியில் வைத்துப் பாலூட்டுவதைப் பக்கத்தில் ஒரு காளை பார்த்து மகிழ்ந்திருந்தான். அவன் வேறு யாருமல்ல, மணங் கமழ் மலர் மாலை அணிந்த அவளது காதலன் குறும் பொறை நாடனே . அவர்களிடையே படர்ந்த பரிவுணர்வை எவ்வண் சொல்வேன்? அதைப் பாவடிவிலிந் தர விரும்புகிறேன்.

நற்றுய்;

எனக்குப் பொறுமையாக இருக்கிறது. நானே நேரிற் கண்டு, களிக்க வேண்டியதை நீ சொல்லக் கேட்டு அறிய வேண்டி உள்ளதே! செவிலியே என் கணைகள் பார்வையை இழந்து விட்டதா? அல்லது பறிபோய் விட்டதா?

செவிலி:

இல்லை தாயே. பார்வைக்குக் குறை வில்லை. ஆனுல்; பாசந்தான் மிக மோசமாகக் குறைந்து விட்டது! இன்னுமோர் நிகழ்வைக் கண்டேன். உலகத்திற்கு ஒளியைத் தரும் ஆதவன் போல அந்த மனைக்கு நம் மகள் மனை விளக்காயினள். அந்த மனையில் அத்தகைய குலவிளக்கு வீசும் ஒளியைக் காணும் பாக்கியத்தை நீரோடைகளில் மலரும் மலர் மாலை அணிந்த முல்லை நிலச் சிறப்புமிக்க தலைவனது தாயும் பெற்றனள்.

ஒண்சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல
மனைக்குவிளக் காயினண் மன்ற சுனைப்பெயற்
பூப்பல வணிந்த வைப்பிற்
புறவணி நாடன் புதல்வன் முயே 405

அன்னுய். நமது மலைவாழ் பெண்கள் மாலை விளக்கெரிய மணவாளன் சோறு தின்ன பாலன் விளையாடப் பாக்கியந் தா வேல் முருகா எனப் பாடுவார்கள். ஆனல் நமது மகள் வாழும் இடத்தே; மங்கையரே மயங்கும் கண்ணழகனனுகிய உன் பேரன் விளையாடினுன். அருகே நம் மகள் மகரந்ததைத் தன்னில் அப்பிக் கொண்ட அளிகள் ரீங்கார இசை யெழுப்பும் மலர் மாலை அணிந்த முல்லையில் வாழுந் தலைவனைத் தழுவி மயங்கி இருந்தனள். அத்தகை மனைச் சிறப்பு அங்கே நிலவுகிறது. அங்கேதான் மங்கலமென்பது மனை மாட்சி என்பதன் பொரு ளுணர்ந்தேன்.

மாத ருண்கண் மகன்விளை யாடக்
காதலித் தழீஇ யினிதிருந் தனளே
தாதார் பிரச மூதும்
போதார் புறவி னுடுகிழ வோனே 406

நற்றாய்;

செவிலி! பாரதப் போரில் நடப்பதைப் பார்வை யற்ற திருதராஷ்டிரன் வேறு ஒருவர் சொல்லக் கேட்டு அறிந்தா னென்பர். அந்த நிலையில் நானும், எனது மகள் இல்லத்தில் நடப்பவற்றை....

செவிலி:

அதற்காக வருதற்க, எங்கள் நோக்கெல்லாம் எமது மகளின் நலமே. நாம் துயர் பட்டாலும் அவளுக்கு எத்துயரும் இல்லாத வாழ்க்கை கிட்டி உள்ளதென்பதை மறக்கலாமோ. அங்கே அவள்; பாணர் யாழை அணைத்து, அதன் இசை நரம்பு களைத் தடவி இசை உணர்வை மீட்டுவதுபோல, இரக்கம் மிக்கோர் வாழும் நாட்டுத் தலைவனுடன் இணைந்திருந்தாள்.

நயந்த காதலித் தழீஇப் பாணர்
நயம்படு முரற்கையின் யாத்த பயன்தெரி
தின்புறு புணர்ச்சி நுகரு
மென்புல வைப்பினுடு கிழவோனே 407

நம் மகளின் உளங் கொண்ட தலைவன் நற் குணங்களின் உறை விடம், உயர்ந்த கொள்கையை அணிகலனுக அணிந் தவன். நான் சென்ற மாலைப் பொழுதில் ஆங்கு பாணர்கள் தம் யாழில் முல்லைப் பண்ணை மீட்டு இசை பரப்பினர். நம் மகளோ முல்லை மொட்டுகளை மாலையாக முடைந்து கொண்டி ருந்தாள். உங்கள் பேரன் தன் தந்தையுடன் விளையாடினுன்.

. இதனல் அங்கு யாவரும் மகிழ்ச்சியில் மூழ்கி இருந்ததைக் கண்டேன். அந்த நிகழ்வு கண்கொளாக் காட்சியாக அமைந்தது அன்னுய்!

நற்றுய்;

செவிலி! நமைப் பிரிந்து சென்ற தலைவி தனித்து என்ன துயருறுவாளோ, என்ன பாடுறுவாளோ என்று நான் இங்கே அல்லல் உறுகையில்; நீ சொல்லுஞ் சேதிகள் ஆறு தலைத் தருகின்றன. ஆனல் அதை நேரிற் கண்டு அனுபவிக்க முடியாத பாவியாகினேனே என எண்ணும் போது எனது நெஞ்சம் எரிமலையாய்ச் சீறி வெடிக்கின்றதே....

செவிலி:

ஆனல், அதைக் கண்குளிரக் கண்ட எனது நெஞ்சம் களிப்பில் ஆழ்ந்து இவ்வண் பாடத் தோன்றியது;

பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுத லரிவை முல்லை மலைய
வினிதிருந் தனனே நெடுந்தகை
தினிநீர் கொள்கைத்தன் புதல்வனெடு பொலிந்தே408

நற்றுய்;

செவிலி, நீ அங்கு மேலும் மனதிற்கு இதமூட்டும் பலப் பல நிகழ்வுகளைக் கண்டு வந்திருப்பாய். அவற்றையுங் கூறுவாயாக.

செவிலி:

ஆம், அன்னையே, அந்த ஆனந்தந் தரும் நிகழ்வுகளை சொல்லி முடிப்பதானல் நம் ஆயுளே போதாது. நான் சென்ற மாலை நேரத்தில் உங்களின் பேரனை அவன் தந்தை ஆரத் தழுவிக் கிடந்தான். அவனை ஈன்ற தாயோ அவ்விருவரையும் பற்றிப் படர்ந்தாள், அவ்வாறு அவர்கள மூன்று பேரும் ஒருங்கிணைந்த காட்சி; வான், கடல், புவியெனும் மூன்றும் இணைந்த இந்த உலகப் பரப்புப் போல அமைந்திருந்தது.

மேலும் மாலைக் காலத்தில் சிறுநகை முகத்தாள் இல்லக் கிழத்தியாகத் தனது மார்பில், உன் பேரனைத் தவழ விட்டி ருந்தாள். அவனும் புன்னகை பூத்துத் தாயைப் பற்றிக் கிடந்தான். அதனல் உண்டான இன்பம் பாணர் கையாழ் இசையை மாந்துவதிலும் பார்க்க மாணப் பெரிதாகத் தோன்றியது

புதல்வற் கவைஇ யினன் றந்தை மென்மொழிப்
புதல்வன் முயோ விரிவருங் கவையின
ளினிது மன்றவவர் கிடக்கை
நனியிரும் பரப்பினிவ் வுலகுட னுறுமே 409

மாலை முன்றிற் குறுங்காட் டின்கை
மகனயோ டுகணவி யாகப் புதல்வன்
மார்பி னூரு மகிழ்நகை யின்பப்
பொழுதிற் கொத்தன்று மன்னே
மென்பிணித் தம்ம பாணன தியாழே 410

நற்றாய்;

செவிலி; பகைவர் தங்கள் கூரிய ஆயுதங்களால் கொல்வார்கள், நீயோ உன் இதமான சொற்களாற் கொல்கின்றனை. இவைகளை என்று காண்பேன் என என் நெஞ்சம் ஏங்கித் தவிக்கின்றதே!

செவிலி:

இவ்வாறு தவிக்கிறேன், தவிக்கின்றேன் என்று சொல்லிக் கொண்டிருந்தால் வயதுதான் ஏறும். அன்னாய் இதை உங்கள் கணவரிடஞ் சொல்லி அவர் மனதை ஆற்றி; அங்கே போனால் என்ன? அது அவர் மதிப்பைக் குறைப்பதாய் இருப்பின் வேறு யார் மூலமாவது தூதுவிட்டு அழைத்து வருவிக்கலாமே!

நற்றாய்;

செவிலி. நிறுத்து. நிறுத்து. அவரது குணத்தை அறியாமற் பேசாதே. அப்படிச் சொன்னால் அவர் குமுறி வெடிப்பாரே.

(இந்த உரையாடலை அவர்களுக்குத் தெரியாமற்
செவி சாய்த்த **தந்தை;**

குமிறி வெடித்தாற் பரவாயில்லை. வெடித்துப் பிழந்தே விட்டதே!

நற்றாய்;

அய்யோ நாங்கள் அப்படி ஏதும் தவறுக உரைக்க வில்லையே.

தந்தை;

இவற்றையெலாம் எனக்குத் தெரியாது மறைந்து, என்னை அந்நியப் படுத்தி அவலப் படுத்திக் கொண்டிருப்பது தவறன்றி வேறென்ன?. என்னால் மேலும் பொறுக்க முடியாது. உடனே போய் என் பேரனைப் பார்க்க வேண்டும்.

நற்றாய்;

அள்ளி அணைக்க வேண்டும்

செவிலி:

அத்தகைய பேரனைப் பயந்த என்மகளை ஆரத் ததழுவ வேண்டும்.

தந்தை;

இப்படியே பேசிக் கொண்டிருந்தால் அதெலாம் ஆகுமா/ உடனே புறப்பட வேண்டாமா?

காட்சி கரைகிறது.

முன்னெழினி அகல
41 வது காட்சி முடிகிறது

காட்சி ; இரண்டு

களம்; முல்லை நிலம்

காலம்; அந்தி நேரம்

பாத்திரர்; மதங்கர் தலைவன், தலைவன், தலைவியாக , தோழி யாகப் பாத்திரமேற்கும் மதங்கர்கள்

நிகழ்ச்சி;

தலைவன் பணி காரணமாகத் தன் மனையாளைப் பிரிந்து, தொலை தூரத்தே செல்கின்றான். அண்மையில் வதுவை செய்த அவர்களிடையே பிரிவுத் துன்பம் அவர்களை நிலை குலைக்கிறது, அதனால் தலைவன் பரிதவித்து தன் நெஞ்சொடு துயரத்தைக் கூறி ஆறுகிறான். காலம் நகரப் பணிக்கால விடுப்பின் போது தன் இல்லந் திரும்புகிறான். கார் காலத்தில் முல்லை நிலம் பூண்டிருந்த அழகைப் பயண வழியில் பார்த்து அகமகிழ்கின்றான். இல்லம் அடைந்ததும் கார்காலத்து முல்லையில் தன் தலைவியுடன் களித்திருந்தான்.

பாணன்;

என் உடன் கூத்தர்களே, மதங்கராகிய நாம் பங்கேற்கும் இப் பகுதியைத், தமிழகத்தின் பண்டைப் பெருமை மிக்க கூத்தர்களின் இயல்புகளை வெளிக்கொணரத் தக்க முறையில் நிகழ்த்திக் காட்ட வேண்டும், மதங்கம் என்பது மத்தளம். எங்களின் நிகழ்ச்சிகளில் இசைக்கும் வாத்தியம் தோற் கருவியான மத்தளத்தை இசைத்துப் பாடி ஆடுவதால் நாம் மதங்கர் என அழைக்கப்படுகிறோம். பண்டை, சங்க கால இலக்கியங்களில் எங்களைப்பற்றிப் பல செய்திகள் ஆங்காங்கு வந்துள்ளன. பலர் எம்மைப் பாணர்களில் ஒரு பிரிவினர் எனச் சொல்வர். அவ்விதம் பகர்வது தவறு. பாணர் யாழ் மீட்டிப் பாடி ஆடுவர். மதங்கர்களோ மத்தளம் இசைத்து ஆடிப் பாடுவர், இதனால் மதங்கரைக் கூத்தரென அழைப்பதுண்டு.

கூத்தெனப் படுவது கூறுங்காலை
மத்தளம் சல்லரி மரபிசை எழுப்ப
விதத்க அபிநயம் விளக்கிக் கால்நிலம்
முத்தமிட் டாடிப் பாடு லென்ப எனக் கூத்தர் அகவல் கூறும். எனவே, மதங்கர் பாடலை இசையுடன் பாடி, மத்தள ஒலி எழுப்பி, அபிநயித்து ஆடுபவர்கள் எனல் மரபு..

பாணர்களைப்பற்றிய பெரும் பாணற்றுப் படை, சிறுபாண் ஆற்றுப்படை என்னும் நூல்கள் உள்ளதுபோல மதங்கர்பற்றிய சங்க கால நூல்கள் எதுவும் இல்லாவிடிலும், கிழக்கு ஈழத்தின் முத்தமிழ் முனிவர் விபுலானந்த அடிகளார் மதங்க சூழாமணி எனவொரு கூத்தர் நூலைப் படைத்துள்ளார். இவரே யாழ் நூல் எனும் இசை நூலையுந் தமிழுலகிற்கு அளித்தவர். இதைவிட ஈழத்துப் பூராடனர் நாடக இலக்கணங்களை விளக்கும் கூத்தர் வெண்பா, கூத்தர் விருத்தம், கூத்தர் அகவல், கூத்தர் குறள், கூத்து ஆய்வு எனும் ஐந்து நூல்களைப் படைத்துள்ளார். இவை ஆடிப் பாடும் நாடகவமைதி கொண்ட கூத்துக்கலை (மதங்கர்) இலக்கண நூல்களாகும்.

எனவே, நாங்கள் எடுத்துக் காட்சிப்படுத்தும் பகுதி களில் ஆட்டமும் பாட்டும், பாடும் பாடல்களின் பொருளை விளக்கும் உரை நடையும் இடம் பெறும். இதற்கென அமையும் நாடகத் தமிழ் வழக்கு, சிலபோது தற்கால நாடக வழக்கிற்கு ஒவ்வாதனவாகத் தென்படினும் கூத்துக்குரிய சிறப்புடைத்து எனவே இங்கு அந்நடை தழுவப்படுகிறது.

இந்த நிகழ்வின் களம், முல்லை நிலத்தின் காயான்காடு என்னும் ஒரு கிராமம். அங்கு வாழும் தலைவன் ஒரு தமிழா சிரியன். பணி காரணமாக தூர இடத்திற்குச் சென்று சில காலந் தங்குகிறான். இந்தப் பிரிவு அண்மையிற் கணவன மனை வியான அவர்களுக்கிடையில் பலவிதப் பிரிவுப் பிணிகளையும் பரிந்துணர்வுகளையும் பாலுந்துதலையும் தோற்றுவிக்கின்றது. அதனால் நனவிலும் கனவிலும் நலிகின்றான். அவன் பணிக் கால விடுப்பில் தன் இல்லந் திரும்புகிறான். அப்போது அவன் தனித்திருந்து தனக்குள்ளே தவித்து நெஞ்சொடு கிளர்த்தல், இல்லந் திரும்பும் பயணப்போது சிந்தித்தல, இலலந் திரும்பி யபின் துணைவியிடன் இன்பத்திற் கூறுதல் எனும் மூவித நிலைகளில் அன்புடைக் காதல் படரும்.

அத்தருணங்களில் அங்கெழும் மன உந்தல்களின் வெளிப்பாடே கிழவன் பருவம் பாராட்டுப் பத்து எனும் ஐங்குறு நூறின் 42வது பகுதியாகும். தலைவன் கார் காலம் வந்துற்றதென அதைப் பாராட்டும் நிகழ்வைக் கொண்ட பத்துப் பாடல்கள் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் கடைச் சங்க காலத்திற் பாடப்பட்டவையானாலும் அவை இக்கா லத்திலும் இயன்று வரும் இயல்புடையன. காரணம்,

மனித உணர்வுகள், காதல் ஊக்கம், அன்பின் இணைப்பு என்பன , எக்காலத்திலும் மாறுத பொதுத் தன்மை உள்ளமையாகும். இதை உணர்ந்தால் பண்டைக் காலப் பாடல்களின் பண்பு , பயன் என்பவற்றின் மாண்பை நாம் உணரலாம். இனி நிகழ்வைக் காட்சிப் படுத்துவோம்

(முன்னெழினி அகல மில்லை எழினியும் அரங்கித் தொறறந் தருகிறது , அதில் கிழவன் (தலைவன்) பணி புரியும் ஊரில் தங்கி இருக்கும் இல்லத்தில் அமர்ந்துகொண்டே)

தலைவன்;

நெஞ்சமே கவலாதே! என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற கொள்கை என அறிவாயாக. எனக்கு இயன்ற ஒரு பணியை நாட்டின் நலனுக்காகச் செய்ய நான் கடப்பாடு டையேன். அதன் பொருட்டு மணஞ் செய்து சில நாட்கள் கழிய முன்பே நான் அவளைப் பிரிந்து இங்கு வந்தேன். பணி விடுப்புக் காலம் எப்போ வருமென ஏங்கி இருக்கிறேன் அதனால் தவிக்கும் என் நெஞ்சே!

போதார நறுந்துகள் கவினிப் புறவித்
முதார்ந்து
களிச்சுரும் பரற்றும் காமர் புறவின்
மடப்பிடி தழீஇய மரவே
சுடர்த்தொடி மடவரற் புணர்ந்தனம் யாமே 416

நெஞ்சமே, மேலும் கேட்பாயாக. முல்லை மலர, அதன் மணத்தால் கவரப்பட்டு அதன் மகரந்தத் துகழ் அளைந்து அளியினங்கள் ஊதும் அழகுமிக்க முல்லைக் காட்டிலே; பிடி யானையைத் தழுவும் களிறுபோல, ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்த அரிவையே! என் இதயத்தைக் கவர்ந்தவளை நாம் இணைந்திருப்போம். என ஆறியிருப்பாயாக. மழைக் காலம் கண்ட முல்லை நிலம் தன்னுள் பன்னலத்தைப் பரப்பி அழகு செய்தது. ஆங்குள்ள புனங்களும் அதைப்போல பன்னலங் கொண்டது. அங்கே தேனுண்ணும் அளிகள் மொய்க்கும் மலர் சூடிய கூந்தலுடைய தலைவி கலந்து களி கூர்ந்தாள்.

கார்கலந் தன்றுற் புறவே பலவுட
னேர்பரந் தனவாற் புனமே யேர்கலந்து
தாதார் பிரச மொய்ப்பப்
போதார் கூந்தன் முயங்கின ளெம்மே 417

(பணி விடுப்புக் கிடைத்ததும் அவன தன் மனை நோக்கிப்
பயணித்தான். செல்லும் வழி தூரமாக இருந்ததால்,
பயணிக்கும் சாதனத்தின் வேகங் குறைவாகவே அவனுக்குத்
தென்பட்டது. ஏனெனில அவனது மன வேகம் கட்டுப் பாடற்ற
கதி கதித்ததேயாம். பயணிக்கும் வழியில் தான் சென்றடைய
வேண்டிய இடத்தின் ஆரம்பத்தைக் கண்டதும்
மகிழ்ச்சி மிகவே அந்த நிலத்தைப் பார்த்து ;)

தலைவன்;

என் துணையாள வாழும் குறிஞ்சி நிலமே கேடபாயாக;

பொன்னென மலர்ந்த கொன்றை மணியென
தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு
நன்னல மெய்திணை புறவே நின்னைக்
காணிய வருதும் யாமே
வாணுத லரிவையோ டாய்நலம் படர்ந்தே 420

பொன் மலர்களை கொன்றை சொரிந்தன. நீலமணி போன்ற
தேன் நிறைந்த முகைகளை தனது கிளைகளில் இலை இருக்க
வெண்டிய இணுக்குளில் முடைந்தன. செங்காந்தள் தன்
பவள மொட்டுகளைக் கொண்டன. இவ்வாறு நல்ல
வனப்பைக் கொண்டுள்ள முல்லை நிலமே! சுடர் விடும்
நெற்றியை உடைய எனது அரிவையோடு உனைக் கண்டு
மகிழ வருவேன். அதுவரை எங்களுக்காகக் காத்திருப்பாயாக.

தன் இல்லத்தை அடைந்ததும் தன் மனையாளைக் கண்டான்.
கண்களால் அவளைக் கட்டி அணைத்தான்.
அவளுந் தன் புன்னகையால் அவன் தோழ்களைப் புல்லினாள்.
காணுத இருந்த காலத்தே அடைந்த கவலைகள்
அக்கணமே விட்டுப் பறந்தன. கதை கதையாகப் பேசினார்கள்.
அதுவே அவர்களுக்கு அறுசுவை உணவாகியது ,
அப்போது; தலைவன் தன் உள்ளக் கிடக்கைகளை
மனம் விட்டுச் சொல்லிக் கார்காலத்தாற் குளிர்ந்த முல்லை
நிலத்திடை அழைத்துச் சென்றான். போம் வழியில்
ஒரு நீரோடையைக் கண்டு,)

என அன்புக்கிரியவளே! கேட்பாயாக. ஓவென வீழோசையுடன்
மேகங் கறுத்து துமிதுமியாக மழைத் துளி சிதறி கார் காலம்
ஆரம்பித்து விட்டதென்பதை தெரிவிக்கின்றது . ஆசையைக்
கிளப்பும் வண்ணம் இயற்கை வனப்பு மிக்க முல்லை நிலத்தில்
ஆங்காங்கு பாய்ந்தோடிப் பரந் து வீழ்ந்து செல்லும் புதிய

நீரோடைகளில் முழங்கால் வரை தாழ்ந்து அடர்ந்த கூந்தல் அழகியே நீராடலாம். ஆகவே அந்த இடத்திற்கு விரைவோம் வருக

ஆர்க்குர லெழிலி யழிதுளி சிதறிக்
கார் தொடங் கின்றுற் காமர் புறவே
வீழ்தரு புதுப்புன லாடுகந்
தாழிருங் கூந்தல் வம்பதி விரைந்தே 411

காயா கொன்றை நெய்தன் முல்லை
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றுற் புறவே
பேரமர்க் கண்ணி யாடுகம் விரைந்தே 412

மேலும்; அதோ பார்! சியாமள வண்ணக் காயான் மொட்டுகளும், பொன்னிறக் கொன்றை மலர்த் தூங்கல்களும், நீல நெய்தல் மலர்க் கண்ணிகளும், வெண் முல்லை மலர்க் கொத்தும், இதழ் விரித்து மணம் பரப்பும் பிடவம், தளவம் எனும் மலர்களும் ஒருங்கே நிறைந்து அழகூட்டும் மலரணிந்த மங்கையெனத் தோன்றும் முல்லை நிலச் சோலையிலே பூங்கொய்து ஆடிட விரைந்து வருக. என அழைத்தான்.

(அவன் விரும்பியவையே அளவளது உள்ளத்து ஆசையாக
இருந்ததால் அவன அழைத்த இடங்களுக்கு
ஓடோடி அந்த இன்பங்களைத் துய்த்தாள். பின்பு)

தலைவி;

எத்தனை கோடி இன்பம்! முல்லையில் இல்லாதது எங்குமே இல்லை எனும் அளவுக்கு, பார்க்கும் இடமெல்லாம் பரவசம் பரந்து கிடக்கிறதே. நான் இங்கே எத்தனையோ தடவை தோழியருடன் வந்துளேன். அப்போதெலாம் அடையாத ஆனந்தம் இப்போது....

தலைவன்;

என்னுடன் வந்ததால் அளவற்ற ஆனந்தம் துய்த்த தனையோ. அதையே நானும் சொல்கிறேன். உண்மையான இன்பம் இல்லறத் துணையுடன அனுபவிக்கும்போதுதான், அதன் முழுமை உணரப்படுகிற தென்பதை இன்று உணர்ந்தேன், என் பெருமைகொள் அரிவையே! குளிர்ச்சி யுடைய நறுமணங் கமழும் நெற்றியுடை

வந்தெய்தியது. இக்காலம் நமது மனத்திற்கு மட்டற்ற களிப்பூட்டுங் கால மாகுக.

நின்னுத லுறு நறுந்தண் புறவி
னின்னே போல மஞ்ஞை யாலக்
கார்தொடங் கின்றுற் பொழுதே
பேரிய லரிவை நாநயந் தகமே 413

புள்ளு மாவும் புணர்ந்தினி துகளக்
கோட்டவம் கொடியவும் பூப்பல பழுவி
மெல்லிய லரிவை கண்டிகு
மல்ல லாகிய மணங்கமழ் புறவே 414

இதோ பார்! நாம மகிழ்ந்திருக்க நாடி இருந்த கார் காலம் வந்ததை இந்த மணங் கமழ் முல்லைக் காட்டின் பறவைகளும் விலங்குகளும் இணைந்து கலந்து மகிழ்ந்து தெரியப்படுத்து கின்றன. கொம்புகளில் மலர்ந்துள்ள கோட்டுப் பூக்களும், கொடிகளிலே பூத்துள்ள கொடிப் பூக்களும் எடுத்துக் காட்டு கின்றன. அவற்றைக் கண்டு களிக்க விரைந்து வருக.

தலைவி;

அன்பரே! இயற்கையே மக்களின் இன்பத்திற்கு வழி காட்டுகின்ற இந்த முல்லை நிலத்தே பிறக்கக் கிடைத்த பாக்கி யமே பாக்கியம்

தலைவன்;

அவ்வாருனல் குறிஞ்சியிற பிறந்த நான் பாக்கிய மற்றவனு/

தலைவி;

அய்யோ நான் அப்படிச் சொல்லவில்லை . இந்த முல்லை காட்டும் இன்பத்தை அந்தக் குறிஞ்சிதானே முழுமை செய்கிறது. அதனால் உங்களினதும், உங்கள் தாயகம் குறிஞ்சி யினதும் மாணப் பெரிது.

தலைவன்;

இதமாகப் பேசும் காதலியே! நாம் மனம் மகிழ்ந் திருக்க, எதிர் பார்த்திருந்த கார்காலம் இதுவேதான். ஒன்று சேர்ந்து உவகை கொள்ள நாம் விரும்பியிருந்த முல்லைத் திணையும் இதுதான்! இந்தத் தருணத்தை நாம் இனிதாகக் கலந்து களிப்பின் விரைந்து செலும் நமது இளமைப் பருவம் இனிமை பயக்கும்.

ரூ ரூ ரூ

இதுவே மடந்தைநா மேவிய பொழுதே
யுதுவே மடந்தைநா முள்ளிய புறவே
யினிதுடன் கழிக்கி லிளமை
யினிதா லம்ம யினியவர்ப் புணர்வே 415

வானம் பாடி வறங்கூந் தாஞ
தழிதுளி தலைஇய புறவிற் காண்வர
வானர மகளோ நீயே
மாண்முலை யடைய முயங்கி யோயே 418

வானம்பாடியின வெம்மையைத் தணிக்கத் துமித்துப் பெய்யும் மழைக் காலம் முல்லை நிலத்திலே வந்துற்றது. பெரிய அழகிய தனங்களோடு எனை மருவிய தேவ மகள் போனற என் தலை வியே அக காரகால அழகைக் காண வருக. மடமை பொருந்திய மடந்தையே! கார் காலத்து முல்லை நிலத்தின் கண விலங் கினங்கள், குற்றமற்ற அன்புடன் பிரிவுத் துன்பமற ஈருடல் ஒன்றிய ஒருயிராக இணைந்து மகிழ்வதைப் பார். அவை நம்மைப் போலக் கலப்பதைக் காணபாயாக.

உயிர்கலந் தொன்றிய செயிர்தீர் கேண்மை
பிரிந்துற லறியா விருந்து கவவி
நம்போ னயவரப் புணர்ந்தன
கண்டிரு மடவரல் புறவின் மாவே 419

பிரிவுத் துன்பத்தை அகற்றவல்ல இந்த முல்லை நிலத்தில் ஒரு துணையைத் தேடவும் அவளுடன் இங்கே வாழவும் நான் என்ன தவஞ் செய்தேனே.

காட்சி கரைகிறது
முன்னெழினி மூட

காட்சி; மூன்று

களம்; தலைவி இல்லம் 2. பயணப் பாதை 3. தலைவி இல்லம் 4. பிறர் மனை

காலம்; 1. மாலை 2. நடுப்பகல் 3 . மாலை 4. மாலை

பாத்திரர்: மதங்கர் தலைவன். தலைவன், தலைவி, தோழி, தேர்ப்பாகன், உற்றார் பாத்திரமேற்கும் மதங்கர்கள்

நிகழ்ச்சி;

பணி காரணமாகப் பிரிந்து செல்வதைத் தலைவன் தலைவிக்கு உணர்த்தி கார் வருமுன் நான் வருவேன் எனச் சூளுரைத்துச் செலவை மேற் கொள்கிறான்.

பணி விடுப்பு முடிந்து தலைவன் இல்லந் திரும்புகையிற் தேரை விரைந்து செலுத்தும்படி பாகனை ஏவுகிறான்; பிரிவுத் துயரால் தவிக்கும் தலைவியைத் தோழி தேற்றுகிறாள். இல்லந் திரும்பிய தலைவன் தலைவியை ஆற்றுகிறான்.

தலைவன் பிரிவாற் துயருற்ற தலைவியின் நிலையை உணர்ந்த உறவினர், அவன் வரவால் நலனுற்றதைக் கண்டு. இனிமேல் இத்தகைய பிரிவு இடம்பெறுதென மகிழ்ந்து கூறுகின்றனர்.

(அரங்கின் முன் மதங்கர் தலைவன் தோன்றி)

மதங்கர் தலைவன்;

வணக்கங்கள் கோடி, உங்கள் அனைவரையும் எங்கள் அன்புக்கரம் நீட்டி வரவேற்கிறோம். மனித உணர்வுகள் என்றும் மாறுவதில்லை. அதைப் பிற் காலச் சந்ததியினருக்கு அழியாது தெளிவிக்க ஆவணப்படுத்தும் வடிவங்களுள் அதி முக்கியம் வாய்ந்த இலக்கியங்களும் மாறுவதில்லை. குறைந்தது இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்திய கடைச் சங்கக் காலத்திற் பாடப்பட்ட பாடல்கள் இன்றும் நினைவு கூரப்படுகின்றன. இக்காலத்து வாழ்க்கைக்கு பொருந்துவனவாகின்றன. அவ்வகையில்; சங்க கால இலக்கியத் தொகுப்புகளில் ஒன்றான எட்டுத் தொகையில் இடம் பெறும் ஐங்குறுநூறு பாடல்கள், அவை பாடப்பட்ட காலத்தில் என்ன பயனை அளித்ததோ, பல்லாயிரம் வருடங்கள் கழித்த பின்னரும் அதே பாடல் வரிகள், அவற்றில் பொதிந்த அகப்பொருள் உண்மைகள் இன்றும் அதே பயனையே தருகின்றன. ஆயினும், பின் ஓலை ஏட்டுக் கல்வியின் இடத்தைக் கடதாசிப் புத்தகக் கல்வி எடுத்துக் கொண்டதும், கற்றற் பாடங்களின்

விரிவாக்கமும், தமிழ் இலக்கணம் இலக்கியமாதிய தமிழ் உணர்வூட்டும் அனுபவதத்தை தூர விலக்கி விட்டன. இதன் காரணமாகப் பண்டை இலக்கண இலக்கியங்கள் கிடைத் தற்கும் படித்தற்கும் அரிதாயின. அந்த நிலை தொடர்ந்ததால் இன்று அவை தமிழருக்குப் புரியாத மொழியில் உள்ள நூலக ளாகிவிட்டன. ஏனைய நூல்களைப் போல எடுத்தவுடன், வாசித்து விளங்க முடியாத நிலையையும், கற்றவர் ஒருவர் அதன் கருத்துணர்த்திலுல் மட்டும் விளங்குந் தகைத்த தாயின. இத்தகைய இலக்கியங்களை கற்றுர்க்கு மட்டும் உரிய நூல்களாக முத்திரை பதிக்க வேண்டிய அவல நிலையும் ஆகிவிட்டது.

அதுமட்டுமல்ல, தமிழின உணர்வை, வாழ்க்கை நெறியை, மனித நேயத்தைப் படிப்படியாக அரித்தும்விட்டது. ஆகவேதான் இந்த அரங்க நெறியாளர்கள் இவ்வாறு நாடகத் தமிழில் பழைய பாடல்களின் அருமை பெருமையை இக்கால சாதாரண படிப்பறிவுள்ள மக்களுக்கு எடுத்தோத அரங்கேற்றி வருகின்றனர்.

ஆதி மனிதன் தனது மனக் கருத்தை மற்றவர்க்கு வெளிப்படுத்த ஆரம்பத்தில் மெய்ப்பாடுகளையே உபயோகித்து வந்தான். நாளடைவில் தன் மெய்பபாட்டை உணர்த்த ஒலி யெழுப்பினுன். அவை ஒரொலி அசையாக இருந்தன. அவை வளர்ந்து, ஈரொலி, மூவொலிக் கூட்டங்களாக மாறின. அந்த ஒலிகள், வேறு வேறு உருவாகிச் சொல்லாகின. சங்க காலச் சொற்கள் இக்காலச் சொற்கள்போல பலவொலிக் கூட்டைக் கொண்டவை அல்ல. அதிகமாக நாலொலிச் சொற்களாகவே அமைந்தன. இன்று பல சொற்கள் அதனிலும் அதிகமான ஒலிகளைக் கொண்டதாக உள்ளன. இதனற் பல சங்க காலப் பாடல்களில் உள்ள சொற்கள் நமக்கு அந்நியமாகத் தோன்று கின்றன. இந்த மொழி வரலாற்று இயல்புகளை உணர்ப வர்களுக்குச் சங்க காலப் பாடல்கள் கடினமாக அல்லது பிற மொழிச் சொற்போன்ற மயக்கமாகத் தோன்றுது.

உதாரணத்திற்கு 43. வது விரவுப் பத்து எனும் இன்றைய நாடகத்துக்குரிய பாடல்களில் இருந்து இரண் டாவது பாடலை எடுத்துக் கொண்டு அதிலுள்ள சொற்களைப் பகுத்துப் பார்ப்பின்;

கடும் பரி நெடிம் தேர் கால் வல ரவி
நெடும் கொடி முல்லை உடன் தளவம் மல ருதி
விரை யுபு .....

எனச் சிறு சிறு சொற்களால் இயல்வதைக் காணலாம். இதைக் கவனித்தால் இவையெலாம் நமக்குப் பரிச்சியமான சொற்களே. அப்படி இருக்க, இப் பாடல் விளங்வில்லை என்பது நகைப்புக்குரியதாகப் படவில்லையா? இக் கருத்தை இத்துடன் முடித்துக் கொண்டு காட்சியைத் தொடர்வோமாகுக.

பல ஆயிரம் வருடங்களுக்கு முல்லைத் திணையில் நடந்த ஒரு சம்பவத்தைப்போன்றே; இன்று; காடும் காடு சார்ந்த நிலத்திலே உள்ள முல்லையூர் எனும் இடத்தில் வாழும் குடும்பத்தில் நடைபெறும் நிகழ்வைக் காட்சிப்படுத்தப் போகின்றோம். அவ்வூரின் தலைவன் மகளை, அடுத்த நில மகனொருவன் காதலித்து மணந்தான். அவன் அரச இராணுவ வீரனுகப் பணிசெய்பவன். ஆதலால் அந்தப் பணியை நாட்டு நலன் கருதியும் பொருள் ஈட்டவும் நினைத்து வெளி மாவட்டத்தில் உளள பாசறைக்குச் செல்கிறான். செல்லும் இடமோ தன் இல்லத்திலிருந்து மிகவுந் தொலை தூரம். ஆங்கு போக முதல் மனைவியிடன் தன் செலவைக் கூறியகாலை அவள் விரும்பினளலள். எவ்வாறேு, அவளை ஆற்றி தேற்றிப் பிரிந்து சென்று பணி முடித்து இல்லந் திரும்பினன். பயணத்தைப் தொடர் வண்டியிற் தொடர்ந்தான். தான் விட்டுப் பிரிந்த இல்லக் கிழத்தியை காணும் விழைவு விரைந்து செல வேண்டுமென்ற மன உந்துதலை ஏற்படுத்தியது. அதனல் தான் பயணிக்கும் வண்டியை விரைந்துபோ விரைந்து போ எனத் தனக்குட் தானே ஏவினன். இதே மன நிலையிற் தான் அக்காலத் தலைவனும் இருந்தான். அதனை நாங்கள் இங்கே காட்சிப்படுத்தப் போகின்றோம் கண்டானந்தியுங்கள் முன் னெழினி அகல அரங்கில தலைவன், தலைவி தோன்றுகினறனர்

தலைவி;

அன்பரே! நாம் ஒருவரை ஒருவர் சந்தித்த காலம் தொடக்கம், எந்நாளும் ஒருவரை ஒருவர் பிரிந்திருப்பதென்பது சாதாரண நிகழ்வாகிவிட்டதே, களவியல் காலத்தே ஆரம்பத்தில் நாட் பிரிவாக இருந்து வாரப் பிரிவாக வளர்ந்து, மாதப் பிரிவென நீடித்த அந்தப் பிரிவுத் துன்பம் கற்பியல்

மகிழ்ந்நேன். ஆனால் இப்போது மீண்டும் பிரிவு கால வரை யறையின்றித் தொடர வேண்டுமா எனச் சொல்லுக தலை வரே. இதை எப்படி ஆற்றி இருப்பேன் என்பதை அறியீரா?.

தலைமகன்;

கண்ணே! கவலற்க. களித்திரு. உயர் மலையில் வளர்ந்த பொன்னெத்த மலர்களின் புறவிதழ்களும் குறுகிய அடிமரத்தையும் உடைய கொன்றை மரக காடுகள் வளர்ந்த முல்லை நிலத் தலைவனது மகளே! அழுகையை நிறுத்து வையானால் நான் உனைப் பிரிந்து செல்வதைத் தவிர்ப்பேன் என்பதை அறிவாயாக.

நெடும்பொறை மிசைய குறுங்காற் கொன்றை
யடர்பொன் னென்னச் சுடரிதழ் பகருங்
கான்கெழு நாடன் மகளே
யழுத லான்றிசி னழுங்குவல் செலவே 430

பல்லிருங் கூந்தல் பசப்பு நீவிடிற்
செல்வேந் தில்ல யாமே செற்றார்
வெல்கொடி யாண முருக்கிய
கல்லா யானை வேந்துபகை வெலற்கே 429

ஆயினும் காதலித்திருப்பதே நம் வாழ்க்கையின் கருதுகோள் அல்ல! நாம் இந்த உலகத்திற் பிறந்ததற்கான கடமையை முழுமையாக நிறைவேற்ற முடியா இயலாதெனினும், குறைந்த பட்சம் பிறந்த நாட்டிற்கான கடமையையாவது நிறைவேற்ற வேண்டாமா? தந்தத்தில் பல பற்களைப் பொழிந் தெடுத்த சீப்பினால், தலையை வாரி வகிடு எடுத்த கூந்த லழகியே! பிரிவுத் துன்பத்தால் ஏற்படும் பசலை அடையா திருப்பாயானால், போர் செய்வதை விட வேறு எத்தொழிலையும் கற்றறியாத யானைப் படையை நடத்திச் சென்று பகைவனின் மதிலைத் தகர்த்து பகை வென்று வெற்றிக் கொடியைத் தாங்கி வரும் பெருமைக்கு உரியவனுவேன். அத்தகைய மற வகை உனது கணவன் விளங்க வேண்டுமென்பதை உனது உள்ளம் விரும்ப வில்லையா எனக் கேட்டான்.

இதைக் கேட்ட தலைவி மறக் குலத்திற் பிறந்த
தான் ஒரு வீரத் தமிழ்ப் பெண் எனபதை உணர்ந்தாள்.
செல்க வெல்க வெற்றியுடன் வருக எனத்
திலகமிட்டு போர்ப் பாசறைக்கு அனுப்பி வைத்தாள்.
அப்போது களிப்புங் கலக்கமுங் கலந்த நிலையில்;

அவன் கார் வரமுன் நான் விரைந்து வருவேன் எனச்
சொல்லி விடை பெற்றான். காலங் கடந்தது பணி முடிந்து
இல்லந் மீண்டு வரும் வழியில் செல்லுந் தேர்க் கதியிலும்
பார்க்கத் தன் மன வேகத்தை அதிகமாகச்
செலுத்தியதலால் விரைவாகச் செலும் பரியின்
வேகத்தைக் கூடக் குறைவு பட்டதாகவே எண்ணி;

தலைவன்:

தேர்ப் பாகனே! மெல்லிய தூவி அடர்ந்த பேடு தன் சேவல் இன்புறுமாறு அரசர்களது இசைக் கருவிகள் போல இசை எழுப்பும் இந்த முல்லைக் காட்டினை விரைவிற் கடந்து செல்லச் சாட்டையைச் சொடுக்கித் தேரின் கதியை அதிகப் படுத்துவாயாக. அவ்வண் சென்றுல்தான் எம்மை வாட்டும அரிய பிணியை நீக்குவது எழிதாகும்.

புன்புறப் பேடை சேவ லின்புற
மன்ன ரியவரி னிரங்குங் கானம்
வல்லை நெடுந்தேர் கடவி
னல்ல லருநோ யொழித்தலெமக் கெளிதே 425

கடும்பரி நெடுந்தேர்க் கால்வல் புரவி
நெடுங்கொடி முல்லையொடு தளவமலருதி
விரையுபு கடைஇநாஞ் செல்லி
னிரைவளை முன்கை வருந்தலோ விலளே 422

விரைந்து செலுங் குதிரைகளைப் பூட்டிய உயர் முடிகொண்ட தேரை விரைந்து செலுத்த குதிரைகளைத் தூண்டுவாயாக. அவ்வண் தூண்டினால், வழியில் உள்ள முல்லை தளவம் ஆதிய மலர்கள் அதிர்ந்து உதிரும். அவ்வண் கடுகில் முன் கைகளில் வளையணிந்த தலைவி வருந்தா நிற்பாள்.

என முடுக்கினான். கார் தொடங்கியுந் தலைவன்
வாராதிருப்பதாற் தலைவி கலங்கினாள் அதைப் பார்த்த

தோழி:

தலைவியே! இதோ கார் காலம் வந்தெய்தியது என்று, இடி முழங்கி, பயன்தரு கொடையான மழை பொழிய ஆரம் பிக்கலாயிற்று. ஆனால் கார் முன் வரு முன் தேர் வருமென்று ரைத்த உன் காதலர் இன்னும் வந்திலர். இதற்கெலாம் காரணம், அவர் பிரிந்து செல்ல நீ விடை கொடுத்ததே ஆகும். நாங்கள் மலர்போன்ற உன் கண்களில் நீர் நிறைந்து நிற்கின்ற துயரக் காலத்தே உமை விட்டு அகல மாட்டோம். என்றாலும்;

மாமழை யிடியூஉத் தளிசொரிந் தன்றே
வாணுதல் பரப்பச் செலவயர்ந் தனையே
யாமே நிற்றுறந் தமையல
மாய்மல ருண்கண் நீர்நிறைந் தனளே 423

புறவணி நாடன் காதன் மடமக
ளொண்ணுதல் பசப்ப நீ செலிற் றெண்ணீர்ப்
போதவிழ் தாமரை யன்னநின்
காதலம் புதல்வ னழுமினி முகிலக்கே 424

முல்லை நாடன் பயந்த மடமை மிக்க மகளே! காதலர் பிரிந்ததை எண்ணிக் கலங்கி, அவர் உரிய காலத்தில் வராததால் கண்ட டைய அவரைப் பின்தொடர்ந்து செல்ல எண்ணுவையேல், உனது. தெளிந்த நீரில் மலர்ந்த தாமரை மலரொத்த உன் அன்பின் சின்னமான மகன், தாய்ப் பாலுக்காக அழுது வேதனைப்படுவாள்

(என்றுரைத்துத் தலைவியை ஆற்றிக் கொண்டிருக்கும் போதே
தலைவனின் தேர் இல்லத்தின் வாசலை வந்தடைந்தது.
அதைக் கண்ட தலைவி, நாணத்தாற் சிவந்தாள். கூறிய காலத்தில்
வந்து சேர்ந்த பெருமிதத்தால் அவளைத் தழுவி;)

தலைவன்;

கண்டார் வியந்து, விரும்பும் விழியாளே! எல்லாருங் களித்தின்புறுங் கார் காலம் அண்மியது. ஆகவே இக்காலத்தே பிரிந்து செல்லற்க எனச் சிந்தித்துக் கலங்கும் பெண்ணே! இக்கார் காலத்தே போர் முனைப்புடன் மன்னன் பாசறைக்கு வாரான். எனவே நான் அங்கு செல்ல இருந்த செலவைத் தவிர்த்து விட்டேன்.

பேரமர் மலர்க்கண் மடந்தை நீயே
காரெதிர் பொழுதென விடலொல் லாயே
போருடை வேந்தன் பாசறை
வாரா னவனெனச் செலவழுங் கினளே 427

தலைவியே. போரிடல் வீரனது கடமை. அப்போதுதான் நாம் பிறந்த மண்ணின் பெருமையைக் காக்க முடியும். எனவே நான் அப்பணி ஆற்றி வெற்றி விருதுகள் பெற்றதால் அப்பணியி லிருந்து விடுப்புப் பெற்று வந்தனன். எனவே மேற்கொண்டு போர் முரசு கொட்டி, அரச படைகளுடன் நான் பாலை வழியைக் கடக்குஞ் செலவிற்காக உனைப் பிரிந்து செல்வதை தவிர்த்து விட்டேன் என்பதை அறிவாயாக..

வெள்வேல் வேந்த னருந்தொழி றுறந்தினி
நன்னுதல் யானே செலவொழிந் தனெனே
முரசுபா டதிர வேவி
யரசுபடக் கடக்கு மருஞ்சுரத் தானே 426

தேர்செல வழுங்கத் திருவிற் கோலி
யார்கலி யெழிலி சோர்தொடங் கின்றே
வேந்துவிடு விழுத்தொழி லொழிய
யான்றெடங் கின்னு னிற்புறந் தரவே 428

மேலுஞ் சொல்வதைக் கேட்குதி. வானம் எழுவர்ண வில்லே வனைத்து மழையெனும் அம்புகளை எய்தது. அதுவே கார் காலம் ஆரம்பித்தென்பதற்கு அடையாளமானது. நானே அரசன் ஆணையைத் தலைமேற் கொண்டு போர் செய்து விறல் பல இயற்றியதால் வீரனெனப் படையணியில் இருந்து விடுப்புப் பெற்றேன். ஆதலால் மீண்டும் உனைப் பிரிந்து செல வேண்டியதில்லை. இனிமேல் நானுன்னை இற் செறிக்க வேண்டிய அவசியமின்று, உன் அன்பே என்னை உன்னிற் செறித்துவிடும்

(எனக் கூறிக் களித்திருந்தான். இவற்றை அறிந்த **தமர்**);

மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவி னெடுங்குமுய லிரியும்
புன்புல் நாடன் மடமக
ணலங்கிளர் பணைத்தோள் விளங்கின செலவே 421

மாலைக் காலத்தில் காவல் காப்போர் முயல்களைக் கடிய எறியும் தடிகள் முல்லை நில மரங்களைத் தாக்கி மலர்களை உதிர்க்கும் நாட்டுத் தலைவனின் மடமகளே கேட்பாயாக. மேற்கொண்டு அவன் உனைப் பிரிந்து செல விரும்பான். காரணம்; அவளது பணைத்த தோழ்மேல் அவனுக்குள்ள பற்றேயாம். ஆதலால் எதிர் காலத்தையிட்டுக் கவலற்க.

காட்சி கரைகிறது

முனனெழினி மூட
43 வது காட்சி நிறைவுறும்

காட்சி; நான்கு

களம்; தலைவியின் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்; மதங்கர் தலைவன். தலைவி தோழியாகப் பங்கேற்கும் மதங்கர்.

நிகழ்ச்சி;

தலைவன் பொருள்வயிற் பிரிந்து சென்ற காலை, தலைவி வருந்துதல் , தோழி தேற்றுதல். முல்லையிற் கார் காலம் பூத்ததைக் கண்டு தலைவி தனக்குள் தேறுதல்.

மதங்கர் தலைவன்;

அவையோரே! வணக்கம். இன்று ஐங்குறு நூறு எனும், சங்க கால நூலின், 44 வது புறவணிப் பத்து எனும் பகுதியில் உள்ள பத்துப் பாடல்களை நாடக வடிவிற் காட்சிப் படுத்த உள்ளோம். புறவம் என்பது முல்லை நிலம். அந்த நிலத்தின் அழகைக் கூறுவதே புறவணி எனப்படும். எச்செயலுக்கும் ஒரு காரணம் உண்டு. ஆதலால், அச்செயல் செயற்படும்போது, ஒரு பிரதித் தாக்கத்தை ஏற்படுத்துவதும் இயல்பு. அப்போது அக்காரணம் பல சாதக பாதகங்களான பயன்களை விளைக்கும் என்பது சான்றோர் கண்ட முடிபு. அதுபோல இந்த அரங்கில் இடம்பெறும் நாடகங்களுக்கு ஒரு காரணம் உண்டு,

அரங்கினர் எங்களிடங் காட்சிகளைத் தயா ரித்துக் காட்சிப்படுத்த முன்னர்; பண்டை இலக்கியங்கள் படைத்துப் பல ஆயிரம் வருட காலம் கழித்தாலும், அதிற் பொதிந்துள்ள கருத்துகள் அமரத்துவமானவை. இப்போது அவை மக்களிடை காலத்தால் ஏற்பட்ட கோலத்தால் தளர்ந் தாலும், அவற்றின் உட்கரு கலைவதில்லை என்பதை இக்கால மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்னும் காரணத்தின் அத்திவாரத்தில் ஆக்கப்படல் வேண்டும் எனப் பணித்தனர். அந்த நோக்கத்திற்கிணை இந்நாடகங்கள் படைக்கப்பட் டுள்ளன. இதைப் பார்க்கும்போது சங்க கால வாழ்வியல் இப்போதும் பொருந்தும் என்பதை உணரர்தலை அதன் பய னை இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் போதிய கவன மெடுத்துள்ளோம் என்பதை சொல்லி காட்சியை ஆரம்பிக்கின்றோம்

தலைவன் புறவத்தூர் என்னும் கிராமத்தில் வாழும் வர்த்தகன். அவன் பொருளீட்ட வெகு தொலை தூரத்தில் உள்ள நகருக்குப் போயினன். இதனால் தனிமையில் தலைவி கவன்றாள். தோழி தேறுதல் சொல்லி ஆற்றுவித்தாள். தலைவி கார் காலத்தையும் அதன் விளைவுகளையுங் கண்டு, தன் கணவன் விரைந்து வருவான் எனத் தேறி ஆறியிருந்தாள். இதையே இங்கு இன்று காட்சிப்படுத்தப் போகின்றோம். இதைப் பார்க்கும் அன்பர்களே! இக்காட்சி இக்காலத்தும் அக்காலத்தும் நடந்த ஒரே நிகழ்வென மாறி மாறிச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மதங்கர்களே அந்த நிகழ்ச்சியை உங்கள் கூத்துக் கலைத் திறனால் காட்சிப்படுத்துவீர்களாக.

(முன்னெழினி அகல, அரங்கில் தலைவி துயரத்துடன் அமர்ந்து இருக்கிறாள். அங்கு வந்த :)

தோழி;

தலைவியே! நீ நெடுங் காலம் வாழ்க. வெளியில் மழை பெய்கிறது. இந்திர கோபப் பூச்சிகள் அங்குமிங்கும் ஓடிக் கார் காலத்தை வரவேற்கக் கோலம் போட, மயில்கள் அகவி ஆடுகின்றன. ஆனால் இடி ஓசை கேட்ட துரகங்கள் வீட்டுக் குள்ளே தலையிட்டு, அதனுள் தந்தலையைப் புதைத்து ஒடுங்கிக் கிடக்கின்றது. அதுபோல நீ இங்கே சுருண்டு கிடப்பதற்கான காரணம் என்ன?

தலைவி;

பாங்கியே! நான் ஒதுங்கிக் கிடவாமல் வேறு எப்படி இருப்பேன். அவர் சென்ற நாட்களை எண்ணி வாழ்வதைத் தவிர வேறு என்ன பலனைக கண்டேன். போதாக் குறைக்குக் கார் காலமுந் தனது முகத்தை இந்தப் புறவத்திலே காட்டு கிறது. இந்த நிலையில் என் தவிப்பு எத்தகையதென்பதை அறியாயோ!

தோழி;

தலைவியே, நமது தலைவர் சென்ற வழியோ மிகமிக வளமானது, அந்த உயர மலைகளை அவர் கடந்து வரும்போது, அங்கே நீல மணிகளை நிரைத்தது போன்று தோகைகளை விரித்து மயில்கள் ஆடும் . ஆதலால் கவலற்க.

நன்றே காதலர் சென்ற வாறே
யணிநிற வி ம்பொறை மீமிசை
மணிநிற வு வின தொகையு முடைத்தே 431

மேலுங் கேட்குதி. சுட்ட பொன்போன்ற கொன்றை மலர்களைச் சூடித் திருமணத்திற்குச் செல்வதுபோல ஆங்கு மறவர்கள் வழித் துணையாக உள்ளனர். ஆதலால் அவருக்கெதுவும் நேர்ந்திடாது கவலை யொழிந்து ஆறுதலாக இருப்பாயாக.

நன்றே காதலர் சென்ற வாறே
சுடுபொ னன்ன கொனறை சூடிக்
கடிபுகு வனர்போன் மளளரு முடைத்தே 432

தலைவி;

தோழியே! அவர் சென்ற செலவிடை வெப்பம் மிக்க சுரம் உணடென்பதைப் பிறர் சொல்லக் கேட்டுள்ளேன். ஆனல் இப்போது நீருண்ட மேகங்கள் வானிற் பரந்து கறுத்துக் கதிரவனின் ஒளியைத் தடுப்பதுடன் மழைத் துமியைப் பொழிந்து அனலையுந் தணிக்கும்.

நன்றே காதலர் சென்ற வாறே
நீர்ப்பட வெழிலி வீசுங்
கார்ப்பெயற் கெதிரிய கான முடைத்தே 433

நன்றே காதலர் சென்ற வாறே
மறியுடை மான்பிணை யுகளத்
தண்பெயல் பொழிந்த வின்பமு முடைத்தே 434

இந்ததக் கார் காலத்தில். அவர் வரும் பாதையில் மான் தன் பிணையுடனும் குட்டியுடனும் துள்ளும் அளவிற்கு மழை பொழியும் என்று கேள்விப்பட்டுள்ளேன். ஆதலால் அவர் தண்ணென்ற புறவத்தில் எத்தகைத் துயருமின்றி வருவார் அல்லவா?

தோழி;

அம்மா! நம் தலைவர் சென்ற செலவு நலமாகுக. செல்லும் வழியும் இடரற்றதாகுக. இக்கார் காலத்தில மனதுக்கு இதந் தரும் வண்ணம் நெய்தல கண்ணிகளும் பொன்னிறக் கொன்றைப் பூக் குலைகளும் பிடவ மலர்களும் நிலமெங்கும் பூத்து வனப்பூட்டுகின்றன. இவை கார் கால வரவை உணர்த்துகின்றன. கார் காலத் தண்மை தலைவரின் செலவுக்கு சாதகமாக அமைவதாகுக.

நன்றே காதலர் சென்ற வாறே
நிலனணி நெய்தன் மலரப்
பொலனணி கொன்றையும் பிடவமு முடைத்தே 435

அது மட்டல்ல நம் தலைவர் சென்ற பாதையில் பொன்நிறத்து கொன்றை கொத்தாகப் பூத்துக் குலுங்கியும், குருந்தை மலர்ந்தும் அணி செய்வதால் வழிப் பயணம் வளமாகும். எனவே அவர் தனது செலவின்போது இடருறுவார் என்று கவலைப் படாதே.

நன்றே காதலர் சென்ற வாறே
நன்பொ னன்ன சுடரிணர்க்
கொன்றையொடு மலர்ந்த குருந்துமா ருடைத்தே 436

நன்றே காதலர் சென்ற வாறே
யாலித் தண்மழை தலைஇய
வாலிய மலர்ந்த முல்லையு முடைத்தே 437

மேலும்; கார் காலத்திற் பொழியும் மழையில் வீழ்ந்த ஆலங் கட்டிபோல வெண்ணிற மலர்களை முல்லை மலர்ந்துள்ளன. இதுவும் அவரது செலவிற்கு இதமாக அமையுமல்லவா:

தலைவி;

தோழியே நன்று சொல்லினை. அவ்வாறே ஆகுக. இதோ பார்! பசுந் தளிர் தளைத்த புதர்களில் பல வகைவகையான மலர்கள் நிறைந்து தண்ணெனைற் நிலையை நிலமெல்லாம் நிறைத்துள்ளன.

நன்றே காதலர் சென்ற வாறே
பைம்புதற் பல்பூ மலர
வின்புறத் தரிந பண்புமா ருடைத்தே 438

நன்றே காதலர் சென்ற வாறே
குருந்தங் கண்ணிக் கோவலர்
பெருந்தண் ணிலைய பார்க்கமு முடைத்தே 439

கார் காலம் செலவிற்கு உகந்தது என்பர். அக்காலம் வந்துற்றதென இந்தப் பாக்கத்தில் வாழும் ஆயர்கள் அணிந்துள்ள குருந்தை மலர் மாலைகளே சான்று பகர்கின்றனர், ஆகவே நம் காதலர் வரும் பாதை நலமுடைத்தென்பது தெளிவாகின்றது.

தோழி;

நன்றே காதலர் சென்ற வாறே
தண்பெய லளித்த பொழுதி
ஞெண்சுடர்த் தோன்றியும் தளவமு முடைத்தே 440

ஆமாம் தலைவியே! குளிர்ச்சியை ஆக்கும் மழை பொழிகின்ற மாரிக் காலம் வந்துற்றதை தோன்றி, தளவமாதியன விளக்கு ஏந்துவதுபோல மலர்ந்து அடையாளப்படுத்துகின்றன. குளிர்ச்சியில் அயர்வு எங்ஙனந் தோன்றும், ஆதலால் நன்றே காதலர் சென்ற வாறே.

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூட

44 வது பத்து முழுமையுறும்

காட்சி; ஐந்து

களம்; தலைவியின் இல்லம், பாசறை, பாதை.

காலம்; மாலை நேரம், பகல் வேளை.

பாத்திரர்;

மதங்கர் தலைவன், புலவர் ஒரொலிப் பித்தன். தலைவன். பாங்கன், தூதுவன். தலைவி, பாங்கி, தேர்ப்பாகன் ஆகிய பாத்திரங்களை ஏற்று நடிக்கும் மதங்கர்

நிகழ்ச்சி;

போர்ப் பணி ஏற்றுத் தலைவியைப் பிரிந்து தலைமகன் பாசறை வாழ்க்கை வாழ்கிறான். தனைப் பிரிந்து சென்ற தலைவன் மீள்வதிற் தாமதமேற்பட, அவனுக்குத் தூது விடுக் கிறாள். தூதுவரிடம் தன் துயரைச் சொல்லி விடுக்கிறான். பாசறையில் பிரிவால் பருவலர்கின்றான். போர் முடிந்து விடுப்புக் கிடைத்ததும் தன்னில்லம் நோக்கிப் பயணிக்கும் தேரின் வேகத்தை அதிகரிக்கச் சொல்லிப் பாகனை முடுக்குகின்றான்.

(அரங்கில் மதங்கர் தலைவனும் புலவர் ஒரொலிப்பித்தனும் தோன்றுகின்றனர்.)

மதங்கர் தலைவன்;

வணக்கம்! அவையோரே! இன்று பாசறைப் பத்து எனும் பகுதியைக் காட்சிப்படுத்தப் போகின்றோம். அதனை நன்கு விளங்கிக் கொள்ளத்தக்க தகவல்களைத் தருவதற்காகப் புலவர் ஒரொலிப் பித்தன் அவர்களை அன்புடன் அழைத்துள்ளோம். அவர் தம் கருத்துகளை முதலிற் கூறுவார். அன்புமிகு புலவர் பெருமானே! இதோ உங்களின் சமூகத்தை அரங்கு வரவேற் கிறது . வருக வருகவென வரவேற்கிறோம்.

புலவர்;

மனந் திறந்து வாழ்த்திப் போற்றுகிறேன். மதங்கர் தலைவர இங்கு அழைத்துச் சில சொல் சொல்லென்றார். ஐங்குறு நூற்றுப் பாடல்களை நாடக அமைப்பிற் படைத்துக் காட்சிப்படுத்தும் இம்முயற்சியின் பயன்களை எடுத்து சொற்று வதாக எனது உரை அமைய வேண்டுமென்பது அவரின் விழைவு. எல்லாமறிந்தோர் இவ்வுலகில் எவரும் இல்லை. ஆயினும் முடிந்த வரையில் எதையும் அறிந்துகொள முயலா தாரும் இல்லை. அதை அறிந்த நாம் எம்மால் இயன்றவரை வேண்டிய பொருளை யிட்டு அறிந்து கொளல் நல்ல தல்லவா?

தமிழ் மொழி இயல்பாக ஆனது. அதற்குரிய ஒலி வடிவம் ஓரொலி ஓசையால் இயன்ற இயற்கையான மொழி. அதனற் தான் அதை ஆதி சிவன் பெற்ற மொழி என்பர். அந்த ஓரொலிக் குறிகள் கூட்டுச் சேர்ந்து ஈரசை, மூவசை நான் கசை என வளர்ந்து, பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி எனுந் துணை ஓசைகளை உடைத்தாய் தமிழச் சொல் வளத்தைப் பெருக்கியது. அவ்வாறு வளர்ந்த சொல்லுடன் வேண்டப்படாத துணைச் சொல்லை மேலும் இணைத்து ;;;

வாக ஒவ்வொரு பத்திலும் அதிகமாகக் கையாண்ட சொற்களைக் கொண்டு அப்பத்துகளுக்குப் பெயரிடப்பட்டு ளதென்றும், ஆனால் இதில் நன்றே காதலர் சென்றவாறே எனுஞ் சொற்றொடர் பத்துப் பாக்களின் முதல் வரிகளாக வருவதால், புறவணிப் பத்து என்பதிலிம் பார்க்க காதலர் சென்றவாறுப் பத்து என்றல் மிகையாகுமா என்ற ஐயப் பாட்டை எழுப்பினர். அதற்கு நான்; இது தொகுத்தவர் இட்ட தலைப்பு, எனினும் தொகுப்பு இரண்டு அடிப்படையில் இடம் பெற்றுள்ளது. ஒன்று சொல்லப்படும் பொருளின் ஒற்றுமை, அடுத்தது இடம்பெற்ற சொல். எனவே இந்த ஐயம் ஆய்வுக்குரியதாகுக.

இப்போது காட்சியை தொடங்க முதல் அதன் முத்தாய்ப்பாகச் சில மொழிகுவன். நம் தலைவன் பறவப் பாக்கம் எனும் முல்லை நிலத்தூரில் வாழ்ந்த ஓர் போர் வீரன். பகை நாட்டானின் இன்னலால் மன்னன் அப்பகை வெல்ல படையெடுதான். அப்பணியிற் தன் மனையாள் தடுத்த போதும் நாட்டுப் பணி கருதி இணைந்தான். அதனால் பாசறை வாழ்வையும், காலவரையின்றிய தரித் தலையும் அவன் ஏற்றான். ஆதவனே உலகம் வலம் வரத் தவறினும், பாசறைக் கடமைகள் ஒழுங்குகள் தவறுவதே இல்லை. உண்பதும், உறங்குவதும். உடுப்பதுங் கூட ஒழுங் கான நியமப்படியே நடக்கும். அதனால் போர் நூல் வல்லோர் பாசறை என்பது சுதந்தரமான அடிமைகள் வாழும் சிறைக் கூடம் என்பர். அது நம் தலைவனுக்கும் பொருந்தியது. இதனால் தன் இல்லக் கிழத்தியைக காண விழைந்தும் பணி விடுப்போ, விடுதலையோ இன்றிப் பாசறைக்குள்ளே அடைபட்டு வாழ்ந்தான்,

(தலைவன் வருவான் எனக் காத்திருந்த தலைவி
அவனின் தாமதத்தை ஆற்றாளாகத் தக்கோர் சிலர்
மூலமாகத் தூது விடுத்தாள்.
அவர்கள் பாசறையிற் தலைவனைக் கண்டு;)

மறவனே! உன் நலலெண்ணத்தை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். அதே வேளை உங்கள் மனைவி தனித்து வாடுவதை எங்களால் பொறுக்க முடியவில்லை. அவள் படுந் துயரத்தை ஆற்றுவிக்க வேண்டியது உன் கடன் அல்லவா?

தலைவன்;

என் கடனே என்பதை நான் நன்கு அறிவேன். இது ஒரு தனி மனிதப் பிரச்சினை. அதே நேரம் நாம் பிறந்த மண்ணின் பிரச்சினை என்று ஒன்றும் உண்டே. அதை எவ்வண் புறக்கணிக்கலாம்?.

கார் காலத்தில் இடியேறு இடித்ததுபோல, அவளைத் திடீரெனப் பிரிந்து போர்ப்பணி புரிய நான் வந்தனன். அதனால் பெருத் துன்பங் கொண்டேன். அதனால் இவ்வண் நான் படுந் துயரத்தை அவள் அறியின் நன்றும். ஆதலால் அவள்பாற் சென்றிதைச் சாற்றுமின்.

ஐய வாயின செய்யோள் கிளவி
கார்நா ளுருமொடு கையறப் பிரிந்தென
நோய்நன்கு செய்தன வெமக்கே
யாமுறு துயரமவ ளறியினே நன்றே 441

பகைவர்பால் கடுஞ் சினமுறும் மன்னனின் ஆணையைச் சிரமேற் கொண்டு படையணியில் இணைந்து, விறலுறப் போரிட்டு அரச மதிப்பையும் வீரரைப் பாராட்டும் கௌரவ விருந்திற் கலந்து கொள்வதையும் கிடைததற்கரிய பாக்கியமென்பர். அதே வேளை இருளிலுங் கூட உயர் வானிலே உலகத்திற்கு பிரகாசதததை தரும் தாரகைபோல நெறியுடன் வாழ்க்கை நடத்தும் மனையாளையும் குரும்பட்டிகளை நிகர்க்கும் கிண்கிணிச் சதங்கைகளை அணிந்த புதல்வனையும் பிரிந்திருக்குந் தாங்கொணாத் துயரில் தவிக்கின்றேன் என்றும் அவளிடஞ் சொல்லுங்கள்

பெருஞ்சின வேந்த னருந்தொழி றணியின்
விருந்துநனி பெறுதலு முரியண் மாதோ
விருண்டு தோன்று விசும்பி னுயர்நிலை யுலகத்
தருந்ததி யனைய கற்பிற்
குரும்பை மணிப்பூட் புதல்வன் றுமே 442

(இதனைச் செவி மடுத்த தூதர் இல்லக் கிழத்தியிடம் வந்து)

தாயே. நீ கொடுத்து வைத்தவள்! தன் நலம் பாராது பிறர் நலத்திற்காக தன்னையே மண்ணின் மக்களுக்காக அர்ப்பணிக்கும் மறவனை உன் மணவாளனைப் பெற்றது உன் பாக்கியமே! அவனிடம் நாங்கள் உன் துயரத்தை எடுத்துக் கூறியபோது;

நனிசேய்த் தென்னது நற்றே ரேறிச்சென்
றிலங்கு நிலவி னிளம்பிறை போலச்
காண்குவெந் தில்லவவள் கவின்பெறு சுடர்நுதல்
விண்ணுய ரரண்பல வெளவிய
மண்ணுறு முரசின் வேந்துதொழில் விடினே 443

பெருந்தோண் மடவரற் காண்குவெந் தில்ல
நீண்மதி லரணம் பாய்ந்தெனத் தொடிபிழந்து
வைந்நுதி மழுகிய தடங்கோட் டியானை
வென்வேல் வேந்தன் பகைதணிந்
தின்னுந் தன்னூட்டு முன்னுதல் பெறினே 444

வானத்தை எட்டும் உயர்ந்த பல அரண்களைத் தகர்த்துப் பகை நாட்டைக் கைப்பற்றி வெற்றி முரசறைந்து போரை முடித்த வுடனே விரைந்து செலுந் தேரேறி எட்டாம் நாள் பிறை நிலவை ஒத்த நெற்றி அழகுசெய் மனையாளைக் காண்பேன்.

நீண்டுயர்ந்த பகை நாட்டு மதிலரண்களைப் பாய்ந்து கடந்து தகர்த்த, பூண் புனைந்த கொம்பன் யானைகளையும் வெற்றி ஈட்டும் வேல்களையுங் கொண்ட மன்னன், பகை வென்று தன்னூட்டைச் சேர்ந்த உடனே விரைந்து என்னில்லம் மீண்டு பரந்த தோள் அழகு செய்யும் என்னினிய மடவரலைக் காண்பேன். எனச் சூளுரைத்தான். எனவே இதற்காகவே பெருமைப்படுவாயாக. மேலும், பிறந்தவர் யாவரும் இறப்பது முன் கூட்டியே எழுதி வைத்த விதி. இறப்பவை எல்லாம் பிணி மூப்பு சாக்காடுற்றே மறைகின்றன. ஆனால்; இறப்பிலும் ஒரு அருத்தத்தைப் பதித்துச் செல்லும் துணிவு கொண்ட இவனை உன் கணவனைப் பெற்ற உன்னைப் பாராட்டுகிறேம் என்றனர்

(என்று உரைத்துச் சென்றனர். அத்தருணம் பாசறையில்
தன் இல்லாள் நினைவாகவே இருந்த தலைவனின்
எதிரே அவள் வந்தாள்.
அந்த நினைவு கலைந்து உண்மை நிலைக்கு வந்து
தனக்குள்ளே)

புகழ்சால் சிறப்பிற் காதலி புலம்பத்
துறந்துவந் தனையே யருந்தொழிற் றகட்டூர்
நல்லேறி தழீஇ நாகுபெயர் காலை
வல்லே யெம்மையும் வரவிழைத் தனையே 445

நெஞ்சமே! அன்றொரு விழாவில் கொல்லேறு தழுவி பெண்ணின் பெருமை மிக்கானைக் கரம்பற்றியதை நினைக்குந் தொறும் உருகும் நான், என் காதல் மனையாள் வெந்து அழ அவளைப் பிரிந்து வந்து பாசறையில் கலங்குகிறேன். விரைந்து சென்று அவளைக் காண வேண்டிய அவசியத் தையும் நீ உணர்த்துகின்றனை.;

கட்டுப்பாடே காவல் செய்யும் போர்ப் பாசறை விதிப்படி அனுமதி இன்றி வெளியேற இயலாது நான் கலங்கும்போது என் மனதிற்கினியாள் என முன் தோன்றினாள். அவளது முல்லை மலர் சூடிய கூந்தல் மணங் கமழ்ந்தது. அப்போது அவள், என்னைப் பார்த்து இங்கே இருந்து போர் எனும் அரிய பணியை முடித்த பின்னர் மனதிற் கினிமைதரும் நமது நாட்டிற்குச் செல்வோம் அதுவரை பொறுத்திருப்போம் என்றுரைத்தாள், என் சிந்தனையில் இருந்து விடுபட்ட பொழுது அவள் அங்கில்லாததைக் கண்டு அது வெறுமனை ஒரு உரு வெளித் தோற்றமென்பதை உணர்ந்தேன்.

முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவ மாஅ யோயே
பாசறை யருந்தொழி லுதவிநங்
காதனன் னுட்டுப் போதரும் பொழுதே 446

பிணிவீடு பெறுக மன்னவன் றெழிலே
பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை
யாடு சிறைவண் டவிழ்ப்ப
பாடல் சான்ற காண்கம்வா ணுதலே 447

அரசுடன் செய்து கொண்ட ஒப்புதற்படி மேற்கொண்ட போர்ப்பணி விடுப்பைத் தருவதாக. பனித்துளி தோய்ந்த செவ்விய தளவ மொட்டின்மேல் வண்டுகள் ரீங்காரஞ் செய்து பறக்கா நிற்க; அவை மலர்வதைப் புலவர்கள் பாடுவர். சுடர் விடும் துநலாளே அக்காட்சியை நாம் விரைவிற் காண்போம்.

தளாங்கு தளம் எனக் காலை நேர முரசம் ஒலிக்கின்றது. பகைவர்மேற் பெருஞ்சினங் கொண்ட மன்னனின் போர் வீரர்களுடன படையணி வகுத்துப் போர்க்களஞ் சென்று எதிர்த்தான். ஆங்கு செல்லும் வழியில் முல்லை பூத்து மணம் வீசுகிறது. சுனைகளில் வீசும் காற்று நீர்த் திவலைகளை பரக்கத் தெறிக்கின்றது. இவை யாவும் கார்கால வரவை எடுத்துக்

தழங்குரன் முரசம் காலை யியம்பக்
கடுஞ்சின வேந்தன் றெழிலெதிர்ந் தனனே
மெல்லவன் மருங்கின் முல்லை பூப்பப்
பொங்குபெயற் சுனைதுளி காரெதிர்ந் தன்றே
யஞ்சி லோதியை யுள்ளுதொறுங்
துஞ்சா தலமர ணுமெதிர்ந் தனமே 448

போர்ப் பறை முழங்க மரணமா வாழ்வா என களத்தே நின்று பொருது வேற்று நாட்டரசன்மேல் கொண்ட பகை முடித்துத் நாட்டின் பெருமையைக் காப்பானுக. நான் கொண்ட பிரிவுத் துன்பந் தணிந்து செம்மை நிறைந்த என் காதலியின் மார்ப கங்களில் என் கண்கள் இனிமை துய்ப்பதாகுக!

முரசுமா றிரட்டு மருந்தொழிற் பகைதணிந்து
நாடுமுன் னியரோ பீடுகெழு வேந்தன்
வெய்ய வுயிர்க்கு நோய்தணியச்
செய்யோ ளிளமுலைப் படீஇயரென் கண்ணே 450

இவ்வாறு எண்ணிக் கொண்டு போர்க் களம், பாசறை என வாழ்ந்த தன் பணியை விறலுடன் ஆற்றி வரும்போது தன் நாட்டு மன்னன் பகை முடித்து வீர முரசு கொட்டினான். போர் மறவர்களுக்கு விருதளித்து பணி விடுப்பும் அளித்தான். அப்போது. தலைவன் தன் அன்புக்குரியாளைப் பார்க்க உடனே புறப்பட்டுத் தன் தேர்ப்பாகனை அழைத்து;

பாகனே! அரசன் போர் முடித்துப் பணி விடுப்பு நல்கினன். ஒளிவிடு நுதலாளை நான் காண; பாதையிற் பரந்து செறியும் பரற் கற்கள் உடைந்து சிதறச் சுழலும் சக்கரங்களையும் விரைந்து செல் பரிகளையும் பிணித்துக் கடுகிடும் நமது தேரை செலுத்துவாயாக. என்றான்.

முரம்புகண் ணுடையத் திரியுந் திகிரியொடு
பகனிலை முகனிய வயமாப் புணர்ந்து
திண்ணிதின் மாண்டன்று தேரே
யொண்ணுதற் காண்குவம் வேந்துவினை விடினே 449

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூட

45 வது காட்சி முடிவுறும்

நா நி நா

காட்சி; ஆறு

களம்; *1*, பாசறை, *2*. தலைவியின் இல்லம், *3*. நதிக்கரை

காலம்; *1*. மாலை *2*. மாலை *3*. காலை

பாத்திரர்: தலைவன், பாங்கன், தலைவி, தோழி பாத்திர மேற்கும் மதங்கர்கள், மதங்கர் தலைவன், ஒரொலிப் பித்தன்.

நிகழ்ச்சி;

படையில் இணைந்து பாசறை வாழ்க்கை வாழும் தலைவன், பிரிந்து செலமுன் கார் காலந் தொடங்க முதல் நான் திரும்பி வருவேன் என்றபடி, கார் காலம் வந்தும் வாராத தலைவன் படையெடுப்புக் காரணமாக விடுப்பிலாத சேதியைப் பாங்கன் வந்து தலைவியிடம் கூறுகிறான். அதனால் தவிக்கும் தலைவி ஆற்றுளாக தன்னுள் குமைவதுடன், தோழியிடங் கூற அவள் ஆற்றுகிறாள்.

(முன்னெழினி அகல அரங்கில் மதங்கர் தலைவனும் புலவர் ஒலிப்பித்தனும் தோன்றி)

மதங்கர் தலைவன்;

அவையோரே! உங்களை கரங் கூப்பிச் சிரந் தாழ்த்தி வணங்குகின்றேன். இன்று ஐங்குறு நூற்றுத் தொகையில் 46 வது பருவங் கண்டு கிழத்தியுரைத்த பத்துக் காட்சிப்படுத்தப் போகின்றோம். அதற்கு முன்பாக புலவர் இலக்கிய உணர்வு சார்ந்த சில சேதிகளைக் கூறுவார். அன்பார்ந்த புலவர் பெரு மானே! அவையோர் தங்களது அறிவுரைகளைக் கேட்க ஆவ லாக இருக்கின்றனர். வருக வருக ....

புலவர் ஒலிப் பித்தன்;

நாடகத் தமிழின் நயம் நுகரவந்துள்ள தமிழ் மக்களே உங்கள் சமூகம் நல்வரவாகுக. முந்தைய அரங்கில் மொழிந்த ஒரொலி பற்றிய கருத்தில் உரைக்க வேண்டியது ஒன்று உண்டு. உண்மையிலே தனித்த ஒரொலி யாக உள்ளவை உயிர் எழுத்துப் பனிரெண்டிம் பதினெட்டு மெயெழுத்துகளுமே உயிர் மெய் ஒலிகள் உருவத்தில் ஒலியில் ஒரொலி உள்ளவையாக இருப்பினும் அவை இரண்டு தனி ஒலிகளால் அமைந்த ஈரொலிகளேயாம். க் என்பது கூட க் என்னும் மெய்யொ லியுடன் அகர மெனும் உயிர் இணைந்தே அவவொலி ஒலிக் கின்றது.

மேலும் சங்க காலப் பாடல்களில் உள்ள வார்த்தைகள் குறைந்த ஒலிகளாலானவை. அதை இங்கு சான்று படுத்த விரும்புகிறேன். அதனை விளக்க இந்தப் பத்தின் 458 வது பாடலை எடுத்துக்கொள்வோம்;

துணர்க்காய்க் கொன்றை குழற்பழ மூழ்ந்தன
வதிர்பெயற் கெதிரிய சிதர்கொ டண்மலர்
பாணர் பெருமகன் பிரிந்தென
மானல மிழந்தவென் கண்போன் றனவே 458

இப்போது பாவரிகள் அமைந்துள்ள படியே சொற் களைப் பகுத்துப் பார்ப்போம் . துணர், காய், கொன்றை, குழல், பழம், ஊழ்ந்தன, அதிர், பெயல், எதிரிய, சிதர, கொள், தண், மலர், பாணர், பெருமை, மகன், பிரிந்தது, என, மா, நலம், இழந்த, என், கண், போன்றன ஆதிய சொற்களே தென்படுகின்றன. இவற்றை நன்கு கவனித்துப் பார்த்தால் முதலில் இவை ஒற்றெழுத்துடன் கூடி, எதிரிய, ஊழ்ந்தன, பிரிந்தது, இழந்த போன்றன என்னும் நான்கு சொற்களைத் தவிர ஏனைய 20 சொற்களும் இரண்டு அல்லது மூன்று எழுத்துச் சிறுமை கொண்டனவே. இதிலிருந்து சங்கப் பாடல்கள் சிறு சொற்களாலானவை எனபது தெளிவாகிறது

அடுத்தாக இந்தப் பாடலில் இடம்பெற்ற சொற்களை மேலும், ஒரு தடவை உற்றுப் பாருங்கள். இவற்றில் பொருள் தெரியாத, பொருள் மயக்குள்ள சொற்கள் எவை எனக் கவனி யுங்கள். ஒரு வேளை சில சொற்களின் பொருள் புரியாது இருக்கலாம். அதற்கு ஒரு வழியைக் காண்போம். துணர் - குலை, ஊழ்ந்தன - முதிர்ந்து உதிர்ந்தன, பெயல்- பெய்தல், எதிரிய - எதிர்ப்பட்ட . சிதர - மழைத்துளி என்று தெளிந்த பின் பாட்டை மீண்டும் ஒரு தடவை வாசித்துப் பாருங்கள்.

மேலும், இந்தப் பாடல் யார் கூற்று எனக் கவனி யுங்கள், யாரிடம் கூறியது, ஏன், எதற்குக் கூறியது போன்ற விஞக்களை உங்களுக்குள் கேட்டுப் பாருங்கள். அப்போது, இதில் உள்ள சொற்கள் யாவும் உங்களுக்கு மிகமிகப் பரிச்சிய மானவை என்ற உணர்வு தோன்றும். இவ்வாறுதான் சங்க காலப் பாடல்கள் இலகு தமிழால் ஆனவை என்பதை நாம் கண்டு தெளியலாம். மேலும் இத்தகைய பாடல்களில் ஏற்படும் பயத்தையும் வெறுப்பையும் அகற்றத் தக்கதாய்

இலகு படுத்தி காட்சிப் படுத்தும் இந்த அரங்கில் இன்றைய காட்சிகளை மேலுந் தாமதியாமல் காட்சிப்படுத்துமாறு மதங்கர் தலைவனைக் கேட்டுக் கொள்கிறேன்.

மதங்கர் தலைவன்;

கேட்டீர்களா. சங்க காலப் பாட்டுகள், இக்கால எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்கிறீர்களே! . இச் சிறு சொற்களாலான பாடல்களையா விளங்கிக் கொள்ள முடியவில்லை என்று சொல்கிறீர்கள். சரி.... சரி. இப்போது காட்சியைத் தொடர்வோம். . பறவப் பாடி என்று ஒரு ஊர். அங்கே வாழும் ஒருவன் இராணுவத்தில் இணைந்து தானைத் தலைவனுக்குப் பணி செய்கிறான். உள் நாட்டிலே வாழ் இரு இனங்களுக்கான பகைப் போர் நடக்கிறது. அதன் காரணமாக பணி செய்யச் சென்றவன் பணி விடுப்புக் கிடையாது பாசறையில தங்குகின்றான். மழை காலத்தின் முன்னர் மீள்வேன் எனச் சென்ற அவன்;

(தானைத் தலைவனை தன் காதலனைப் பிரிந்து தவிக்கும்
தலைவி, கார் காலங் கண்டு தன் கணவன் வந்துவிடுவான்
எனக் காத்திருந்த பொழுது பாசறையில்
அவனுக்கு விடுப்புக் கிடைக்காததையும் அதற்கான
காரணத்தையும் அவனது பாங்கன் வந்து
சொன்னதைச் செவிமடுத்த)

தலைவி;

பாசறையில் இருந்து வந்த தலைவனின் பாங்கன் மனதிற்கு ஒவ்வாத செய்தி ஒன்றினைச் செப்பினன். வேந்தன் படையெடுப்பிற்காகக் காத்திருப்பதாகவும அதனைத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லும் பொறுப்பு உன் தலைவர்மேற் சுமத்தப்பட்டிரிப்பதாகவுஞ் சொன்னான். அதைக் கேட்டு நான் அதிர்ந்து போனேன். தனிமையாற் தவிக்கும் என் நெஞ்சமே கேட்பாயாக. தலைவன் தாய் நாட்டைப் பகைவரிடம் இருந்து காக்கும் மறவர் படையில் இணைந்துள்ளான். மன்னுயிரைத் தன்னுயிராக மதித்து நம் நாட்டைக் காவல் செய்யும் மன்னன், பகைவர்தம் சேனையை எதிர் பார்த்து கண்ணுங் கருத்துமாக இருப்பது அவனது கடமை. அதை நிறைவேற் றுதல் படை வீரர்தம் கடன். ஆயினும் கார்காலக் காலை கவினுடன் புலர்ந்தது. இத்தருணத்தை என்னுடன் இருந்து களிக்க வேண்டிய தலைவர் எனைப் பிரிந்து சென்றுள்ளார். ஆனால் கார் கண்டும், எனக்குகந்த விருந்தான தலைவனின்

வரவைத் தாங்கி வரும் தேர் வாராது தவிர்ந்த காரணம் யாதோ அறிகிலேன்

கார்செய் காலியொடு கையறப் பிரிந்தோர்
தேர்தரு விருந்திற் றவிர்குதல் யாவது
மாற்றருந் தானை நோக்கி
யாற்றவு மிருத்தல் வேந்தனது தொழிலே 451

கோடை காரணமாக வரண்ட நிலம் குளிர்ச்சி பெற, முழங்கி மழை பொழியும் கார் காலம் நீர்த் திவலைகளைச் சிதறி வீசின. பகை நாட்டவர்மேற் சினந்து போரிட்டு அடிமைகொண்டு திறை வாங்கி வர முயலும் என் காதலர் பாசறையை விட்டுப் பிரியாது நிலைத்தாலும், என்னிலே நிலைத்திருந்த தோள்களின் மென்மையும் நலனும் பிரிந்தன. பொன்னிறப் பீர்க்க மலர் போலப பசலை என் மேனியிற் படர்ந்து பாசறை கொண்டதே!

வறந்த ஞாலம் தெளிர்ப்ப வீசி
கறங்குர லெழிலி கார்செய் தன்றே
பகைவெங் காதலர் திறைதரு முயற்சி
மென்றே ளாய்கவின் மறையப்
பொன்புனை பீரத் தலர்செய் தன்றே 452

என் மட நெஞ்சமே! பனி பெய்யுங்கால் எழும் குளிரைத் தாங்க முடியாத பறவைகள் நடுங்கித் தவிக்குங் குரலெழுப்பும். இத்தகைய கார் காலத்தில் எனைப் பிரிய விரும்பாத காதலர் இதை மறந்திருக்க மாட்டார். ஆனால் அவர் வந்திலரே.

பெய்பனி நலிய வுய்தல்செல் லாது
குருகின நரலும் பிரிவருங் காலைத்
துறந்தமை கல்லார் காதலர்
மறந்தமை கல்லாதென் மடங்கெழு நெஞ்சே 457

நெஞ்சமே! கொன்றைக் காயகளின் குலைகள் குழல்கள் போன்ற பழங்களை உதிர்த்தன. அதிர்ந்து பெய்யும் மழையை எதிர்த்துச் சிதறி வீழ்ந்து அதன் பொன்னிற மிழந்த மலர்போல இசைநயம் மிக்க என் காதலன் பிரிவால் எனது கண்கள் அதன் தகையிழந்தன.

துணர்க்காய்க் கொன்றை குழற்பழ மூழ்ந்தன
வதிர்பெயற் கெதிரிய சிதர்கொ டண்மலர்
பாணர் பெருமகன் பிரிந்தென
மாணல மிழந்தவென் கண்போன் றனவே 458

அய்யகோ! என்துயரை யாரிடம் அறைகுவேன்! கொடுமையைக் கண்டு சீறும் எங்கள மன்னன் பகை ஒருவி மறவரைப் பாசறைக்கண் படை எடுப்புக்குத் தயார்படுத்துகிறன். அக்காரணத்தால், என் காதலனும் எனக்குப் பிறர்வழித் தூதுரையாது விட்டனன். வாசலில் நிற்கும் குலை வாழையை அசைத்து வாடைக்காற்று வீசிக் கார்காலம் தனது வரவை உணர்த்துகிறது. கார் காலத்திற் தலைவனைப் பிரிந்த என் நிலை என்னுகும், அதை எவ்வண் ஆற்றுவேன்.

பெருஞ்சின வேந்தனும் பாசறை முனியா
னிருங்கலி வெற்பன் றூதுந் தோன்று
தையில வாழை முழுமுத லசைய
வீன்ற வாடையு மசைத்த
மென்ற குவென்கொ லளியென் யானே 460

(இவ்வாறு அலமலருந் தலைவியிடந் தோழி வந்து)

என்னம்மா? அமைதியாக ஆகாயத்தைப் பார்த்து ஏதோ யோசிக்கின்றனையே! என்ன கறபனையா அல்லது ஒற்றைப் பனையா? ஓகோ கார் காலம் அண்மி விட்டது. அவர் தேர் வரும். வந்தவுடனே என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனையா? எப்படி வரவேற்க வேண்டுமென்ற ஆரவாரமா? எப்படி யெப்படியெலாம் உபசரிக்க வேண்டுமென்ற ஆலோசனையா? ஏன் என்னிடம் அதைச் சொல்ல முடியாதா?

தலைவி;

தோழியே! இதோ பள்ளங்களில் வாழும் தேரைகள் கத்துவதையும் மரக் கிளைகளிற் பறவையினம் மென் குரலால் இசைப்பதையும் காண்க. இவையெலாம் கார்காலம வந்து விட்டதென்பதற்கான முன்னறிவிப்பு. அலை என் முல்லை நாடனுகிய என் தலைவரின் தேர் வருவதற்காம் அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை. அதனுல் மேனி பசந்ததைக் காண்க.

அவலுறுந் தேரை தெவிட்ட மிசைதொறும்
வெங்குரற் புள்ளின மொலிப்ப வதுக்காண்
கார்தொடங் கினவா னெடுங் கணவர்
கார்நயந் தெய்து முல்லையவர்
தேர்நயந் துறையுமென் மாமைக் கவினே 453

தோழியே! பசிய தளவங் கொடி நிலவொத்த வெண் அரும்புகளைக கொண்ட முல்லையைத் தழுவி கார்காலத்தின்

வருகையையும் என் காதலரின் வரவையும் வரவேற்கின்றன. ஆனல் கார் வந்துற்றது. என் தலைவனின் தேர் வந்திலது. என் மிக்க அழகு அவரை வரவேற்கத் துடிப்பதையும் பார்!

தளவின் பைங்கொடி தழீஇப் பையென
நிலவி னன்ன நேரம்பு பேணிக்
கார்நயந் தெய்து முல்லியவர்
தேர்நயந் துறையுமென் மாமைக் கவினே 454

தோழியே ! மேலும் என் அவலத்தை அறைகுவன். அரசன் பகைவர்மேல் படைகொண்டு வென்று சினந் தணிந்தான். அதனல் போர் முரச ஒலி அடங்கிற்று. ஆனல் சினந்தணியாது கறுத்த மேகம் முழங்கி மழையைச் சோவெனச் சொரியத் தொடங்கியது. காதலர், கார் கண்டுந் திரும்பாததால் எனது சுடர் மேனியிற் பசலை படர்ந்தது. மின்னலை நிகர்க்கும் ஆபரணங்கள் நெழிந்தன. என் தோள்கள் பழைய நலன்களை இழந்தன. இவைகளையுங் காண்பாயாக.

அரசுபகை தணிய முரசுபடச் சினஇ
யார்குர லெழிலி சோர்தொடங் கின்றே
யளியவோ வளிய தாமே யொளிபசந்து
மின்னிழை நெகிழச் சாஅய்த்
தொன்னல மிழந்தவென் றடமென் றேளே 455

தோழியே! என் காதலர் என்னைத் தன் உள்ளத்திற் கொண்டுள்ளாரோ, அப்படியானுற் பகற் சந்திரனைத்த வெண்ணிதழ் விரித்த பகன்றைக் கொடி ஈங்கைப் புதரிடை மலர ஆரம்பித்தன. பனிக் குளிர்ச்சி மிக்க கார் காலத்தில் இங்கு வாழ்ந்து களிக்க வந்து விடுவேன் என்று சென்றவர் இனும் மீண்டிலர். அதனல் நான் எய்துந் துயர் எத்துனைத்தெனக் காண்பாயாக!

உள்ளார் கொல்லோ தோழி வெள்ளிதழ்ப்
பகன்மதி யுருவிற் பகன்றை மாமலர்
வெண்கொடி யீங்கைப் பைம்புத லணியு
மரும்பனி யகனிய கூதி
ரொருங்கிவ ணுறைத லெளித்தகன் றேரே 456

தலைவி;

இவ்வாறு நான் எதிர்பார்த்துத் தவிப்புடனும் தாபத் துடனுந், தனிமையை அனுபவிப்பதற்கு அவரது வரவே முடிவு

என்று எதிர் பார்த்திருந்த எனக்கு அவரின் பாங்கன் வந்து சொன்ன சேதி ஏமாற்றத்தையே ஈந்தது.

தோழி; அப்படி பாங்கன் சொன்ன சேதிதான் எதுவோ/

தலைவி;

பகை நாட்டில் படை எடுக்க வேண்டியிருப்பதால் பாசறை வீரர்களிக்குப் பணி விடுப்பு வேந்தனால் மறுக்கப்பட்டுள்ள தென்பதும், பகை முடித்த பின்னர்தான் வரமுடியும் என்பதுந்தான் அந்தச் செய்தி. இதைக் கேட்டுத் தாங்குதற்கு என் இதயம் இரும்பினாற் செய்ததா தோழி!

தோழி;

அம்மா! நீ மாதர்களுள் மகா பாக்கியவதி! தாய கத்தைப் பகைவரிடம் இருந்து காக்கும் ஒரு வீரனின் மனைவி மட்டல்ல, ஒரு படையையே வழி நடத்திச் செல்லும் படைத் தலைவனின் தலைவியாகவும் உள்ளாய். இந்தப் பாக்கியம் எத்தனை பேருக்குக் கிடைத்துளது என்று எண்ணிப் பார். இதற்காகச் சில காலம் பொறுத்திருக்க முடியாதா. தலைவியே உனக்காக இல்லா விடினும் நாம் பிறந்த நாட்டிற்காகச் சற்றுக் கா ஆறியிருப்பாயாக

தலைவி;

ஆறுதலா? என்னருமைத் தோழியே! என் மென்மை யான சந்துகளால் அழகுற்ற தோள்களில் படர்ந்த பசலையை அகற்ற ஏற்றது என்ன என நினைத்துக் கலங்காதே. பகை வரின் காவல் மதில்களைக் கடந்து பகை வெல்லச் செல்லும் வேந்தனின் படையில் இணைந்து செல்லும் வயலூரனின் குளிர்ந்த மார்பே அதற்கான ஔடதமாகும்

மெல்லிறைப் பணைத்தோட் பசலை நீரப்
புல்லவு மியைவது கொல்லோ புல்லா
ராரரண்கடந்த சீர்கெழு தானை
வெல்போர் வேந்தனெடு சென்ற
நல்வய லூர னறுந்தண் மார்பே 459

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூட
45 வது காட்சி முடிவுறும்

காட்சி; ஏழு

களம்; தலைவியின் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்;

மதங்கர் தலைவன். புலவர் பெருமான் ஒரொலிப் பித்தன், மற்றுந் தலைவன், தலைவி, பாங்கன், தோழி பாத்திரமேற்கும் மதங்கர்

நிகழ்ச்சி;

கார் வந்துந் தலைவனின் தேர் வாராமை கண்ட தலைவி கலங்குதல், வந்தது கார் அல்ல என்று சொல்லி அவளை ஆற்று வித்தல்.

(முன்னெழினி அகல அரங்கில் மதங்கர் தலைவனும் புலவர் ஒலிப்பித்தனும் தோன்றி)

மதங்கர் தலைவன்;

கோடாத கோடி வணக்கங்கள். இன்று காட்சிப்படுத்தப் போவது 47 வது பத்தான தோழி வற்புறுத்து பத்தெனும் பகுதியாகும். இதில் இடம் பெறும் பத்துப் பாடல்களுந் தலைவியின் மனதில் படிந்துள்ள சில தவறுன எண்ணங்களை நீக்கும் நோக்குடன் வற்புறுத்திக் கூறுந் தோழி கூற்றுகக் கொள்ளப்படினும்; 461, 465, 467 ஆதிய செய்யுள்களில் தோழி, இகுளை என விழித்துச் சேதி சொல்வதால் அவற்றைத் தலைவி கூற்றுகக் கொண்டு நாடகத்தை நகர்த்துகிறோம் என்பதை உங்கள் கவனத்திற்குத் தெரிவித்துக் கொளகிறோம். மேலும் பாலைத் திணையைக் காட்சிப் படுத்தியக்கால் உவமை, உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என்பனபற்றி விளக்க ஆரம்பித்து இடையில் தொடரப்படாததை இப்போது புலவர் பெருமான் தொடர்ந்துரைப்பார்.

புலவர் பெ மான்;

அன்புள்ளங்களே! கவிதைகளுக்குச் சுவை ஊட்டச் சொல்லாலும் பொருளாலும் அழகு செய்வர். அதலால் அவற்றை அணி, அல்லது செய்யுள் அலங்காரம் என்பர். இதன் வடிவம் எத்துனைத்து என்பதைக் கூறப் பல இலக்கண னுவல்கள் தனியாகவும், இலககண நூற்களின் ஒரு பகுதி யாகவும் உள்ளன. தண்டியலங்காரம், மாறனலங்காரம, தொல் காப்பியம், முத்து வீரியம், வீர சோழியம், தொன்னூல்

என்பன அத்தகைய பனுவல்களாகும். இவைகளால் ஊட்டப்பட்ட சுவை நுயங்கள் சாதாரணமாகக் கவியைப் படித்துச் சுவைப்பார்க்கு வெளிப்படையாகத் தென்படும். ஆனல் சில சுவையூட்டல் சிதம்பர இரகசியம் போன்றவை.

நாம், ஒன்றை உணர்ந்தாற்தான் அதன் பயனை நுக ரலாம். அத்தகைய உணர்வுகளை உணர்தல், (கற்றுணர்தல ஆய்ந்து உணர்தலால் எனும் வழிகளால் வரும்) உற்றுணர்தல், உணர வேண்டிவற்றை உணராது உன்மத்தமாக இருந்து, வெளித் தாக்கங்கள் ஏற்படும்போது உளளத்தே நிகழும் பிரதித் தாக்கங்களால் உய்த்துணர்தல் என மூன்று வகையாகக் கொள்ளலாம். முதலாவது வகை ஒன்றை அறியும் போதே எத்தகைய புற அழுத்தங்கள இன்றி உணர்தல். இரண் டாவது; மற்றவர் சொல்லி உணர்தல். மூன்ருவது தானே உணராதும், மற்றவர் சொல்லியும் உணராத உன்மத்த நிலை, இது பிறர் சுட்டிக் காட்டாது சொல்லப்படும் அல்லது காட்டப் படும் நிகழ்வுகளாற் தானெ தன் தவறை உய்த்து உணர்தல்.

இதை விளங்கிக் கொள்ள; சொல்லாமலே செய்வர் பெரியோர், சொல்லிச் செய்வர் சிறியர், சொல்லியுஞ் செய்யார் கயவர்; பலா மா பாதிரியைப் பார் என்று ஒரு பாடல் உணடல் லவா? அந்த நிலையை உணர்தல், உற்றுணர்தல், உய்த்துணர்தல் என்னும் மூன்று நிலையில் நிறுத்திப் பாருங்கள். முதலாவது; நிலை உவமைப் பொருளுக்கு ஏற்புடைத்தாகும். இரண்டாவது நிலை உள்ளுறை உவமத்திற்குப் பொருந்தும். மூன்ருவது நிலை இறைச்சிப் பொருளுக்கு இயலுவதாகும். இவைபற்றி அடுத்த காட்சிப் படுத்தலிற் காணபாம். மதங்கள்களே, உங்கள காட்சிப்படுத்தலை அரம்பிக்கலாமே!

(காட்சி ஆரம்பமாகின்றது. தலைவி வாசலில் நின்று
வெளி உலகைப் பார்க்கின்ருள், நிலத்திலும், நீரிலும்,
நீல வானிலும், காற்றிலுங் கார் காலத்தின் சுவடுகள்
படிவதைக் காண்கிருள். கார் வந்து விட்டதே,
தலைவரின தேர் இன்னும் ஏன் வரவில்லை என்ற எணணம்
உண்டாக மனங்கவல்கின்ருள்)

தலைவி;

என்னருமைத் தோழியே! இப்போது நான் எங்கே இருக்கிறேன் தெரியுமா? அதோ அந்த வானத்திலே அசையாது

நிற்கிறதே கருக்கொண்ட மேகங்களிடை ஒரு வெண் மேகம். அங்கேதான் இருக்கிறேன். அந்த அளவு என மனதில் ஏற்பட்டுள்ள ஆனந்தம் அவ்வளவு தூரத்திற்கு உயர்த்தியுளது.

தோழி;

என்னம்மா சொல்கின்றனை. ஒன்றுமே புரியவில்லையே!

தலைவி;

என்னருமைத் தோழியே! நீ; நீடுழி வாழ்வாயாக. அதோ பார், வானஞ் சிந்துவதால் அருவி பாய்கிறது. பிடவம் முகை அவிழ்வதால் கானகம் அழகைச் சிந்துகிறது. இ:தெல்லாம் கார் காலம் வந்துற்றது என்பதைக் காட்டவில்லையா? விறலே தந் திறலென வீரப்போர் செய்பவன் நம் வேந்தன். அவனது பாசறையில் இருக்கும் நம் காதலர் அங்கு மேலும் நீடித்து நிற்காது அங்கிருந்து அகன்று காருடன் தன் தேரை ஊர்ந்து எம்மூர்க்கு வருகிறார் என்பது புரியவில்லையா?

வான்பிசிர்க் கருவியிற் பிடவுமுகை தகையக்
கான்பிசிர் கற்பக் கார்தொடங் கின்றே
யினியல் வாழி தோழி யென்பதூஉ
நிற்றுறந் தமைகுவ ரல்லர்
வெற்றி வேந்தன் பாசறை யோரே 461

(தலைவி கோடை காலத்தின் இறுதிக் கட்டமான
முதுவேனிற் காலம் முடியுந் தருணத்தில்
நிகழும் கால மாற்றத்தைக் கார் காலம் எனத் தவருக
நினைத்ததைக் கண்ட தோழி; வந்தது காரல்ல
அதற்கு இன்னுங் காலமுள்ளது என உணர்த்த)

தலைவி

பாங்கியே! நீண்ட ஆயுளுடன் வாழ்க. என்ன கூறுகின்றனை, மரந் தெரியாதவனுக்கு இலை பறித்துக் காட்டுவது போல வந்தது பொய்க் கார் என்கிறாயே! நம் நாட்டு மன்னன் பகை நாடனுடன் பொருது விறல் கொண்டான். ஆதலால் பணி முடித்து, விழும் நீர் எவ்வண் நேரிதாக வீழுமோ அதுபோலப் பிடரியைச் சிலிர்க்கத் தலை நிமிர்த்திய குதிரைகள் இவரும் என் காதலன் நெடுமுடித் தேர், கார் காலத்தால் வனப்புற்ற முல்லைக் காட்டைப் பின் தள்ளி வரும். அதனால் ஊராரின் தூற்றல் அகலும். என்னை அள்ளி அணைத்து முயங்கிவார் என அறிகுக.

நீரிரு வன்ன நிமிர்பரி நெடுந்தேர்
கார்செய் கானம் பின்படக கடைஇ
மயங்குமல ரகல (நீ) யினிது முயங்க
வரவர் வாழி தோழி
செருவெங் குருசி றணிந்தனன் பகையே 465

தோழி;

வேந்துவிடு விளுத்தொழி லெய்தி யேந்துகோட்
டண்ணல் யானை யரசுவிடுத் தினிலே
யெண்ணிய நாளகம் வருதல் பெண்ணியற்
காமர் சுடர்நுதல் விளங்கும்
தேமொழி யிரிவை தெளிந்திசின் யானே 466

பெண்மை மிக்காய்! அழகிய ஒளி பொருந்திய நுதலுடையாய், தேன்மொழி பயிலும் அரிவையே! நானறிந்த நற்செய்தி ஒன்றை உங்களுக்குத் தர வந்துள்ளேன். கேட்குதி. அரசன் இட்ட ஆணையைச் சிரமேற் கொண்டு பகை வென்றதால்; தந்தங்களை ஏந்திய யானைப் படை மிக்க நமது மன்னன் நமது தலைவனுக்குப் பணி விடுப்புத் தந்தனன். ஆதலால அவன் பிரிந்து சென்ற காலை நமக்கு உரைத்த சூளின்படி குறித்த தினத்தின் முன்னதாகவே வந்து விடுவார்.

தலைவி;

புதன்மிசை நறுமலர் கவின்பெறத் தொடரி(நின்)
னலமிகு கூந்த றகைகொளப் புனைய
நாடுபடு நன்கலந் தரீஇயர்
நீடினர் தோழிநங் காத லோரே 463

நட்பில் மிக்க நலன்மிகு தோழியே! புதர்கள் எங்கும் மணம் வீசும் மலர்கள் மலரத் தொடங்கி விடடன. எனது வனப்பு வாய்ந்த கூந்தலில் அவற்றைச் சூடி அழகு பார்க்கத் தலைவர் வரவில்லை. ஒரு வேளை அதனிலும் பார்க்கத் தான் படை நடத்திச் சென்ற பகை நாட்டிலே பெற்ற மதிப்பிட முடியாத பரிசைத் தருவதற்காக ஆங்கு நீண்ட காலந் தரித்தனரோ கூறுக

தோழி;

நட்புமிக்க தலைவியே! தவளைகள் கேட்போர் காதுகள் கிழியக் கத்துகின்றன. தேரைகள் ஒலிக்கின்றன. இதெல்லாம் மழைக்கால வருகைக்கான அறிகுறிகளே! இனி; கார் காலத்துக்கு உவப்பான உன் பிணைத்த தோள் விருந்தை மாந்த, மணிகளால் வடிவமைந்த உயர்ந்த தேரைச் செலுத்தி உன் காதலர் இன்று வருவார் என்பதை அறிகுக.

வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்டக்
கார்தொடங் கின்றே காகில யினிநின்
னெரிறைப் பகீணத்தோட் கார்விருந் தாக
வடிமணி நெடுந்தேர் கடைஇ
வருவரின் றுநங் காத லோரே 468

தாமரை விழியாளே! கொய்து உலர வைத்துள்ள பசிய தினைகளைக் கவர்ந்து உண்ண செம்பகப் புட்கள் வனைய வந்து வட்டமிடுங் குறிஞ்சி நிலத் தலைவனே ஈங்கு உன்பால் கொண்டு சேர்க்க வலப் பக்கமாக எழும் மேகங்கள் அகன்ற வானத்தே இடித்து, முழங்கி மழை சொரியும் கார் காலம் அண்மியது. ஆகவே உனைப் பிரிந்த தலைவர் வருவதை நாம் கண்குளிரப் பார்ப்போமென உறுதி கொள்வாயாக.

பைந்தினை யுணங்கல் செம்பூழ் கவரும்
வன்புல நாடற் றரீஇய வலனே
பங்க ணிருவிசும் பதிர வேறெடு
பெயறெடங் கின்றே வானங்
காண்குவம் வம்மோ பூங்க ணேயே 469

என் நட்புக்குகந்த தலைவியே. நீடுழி வாழ்க. பிரிந்த காதலன் தந்த துயரால் அழகுக்காக அணிந்த ஆபரணங்கள் நெகிழ மேனி வாடினை. போர்த் தொழிலுக்காகச் சென்றவர் பாசறையில் நீடித்துத் தரியாது விரைவில் வருவார். இந்த எண்ணம் நம்மிடை இருப்பதைப் பார்க்கிலும் சினத்துடன் பகைவரை எதிர்க்கும் யானைப் படையை பகைவர்மேற் செலுத்தும் நம் மன்னருக்கு உண்டென்பதை அறிகுக. ,

புனைபிழை நெகிழச் சாஅய் நொந்துநொந்
தினையல் வாழியோ விகுகூ வினவயிற்
சென்றேர் நீடினர் பெரிதெனத் தங்காது
நம்மினும் விரையு மென்ப
வெம்முரண் யானை விறற்போர் வேந்தே 467

இருநிலங் குளிர்ப்ப வீசி யல்கலு
மரும்பனி யகீனிய வற்சிரக் காலை
யுள்ளார் காதல ராயி னெள்ளிழை
சிறப்பொடு விளங்கிய காட்சி
மறக்க வீடுமோநின் மாமைக் கவினே 470

பரந்த நிலத்தில் வாடை வீசலால் பனிக் குளிர் படரும கார் காலம வந்ததை நம் காதலர் எண்ணுது இருந்தாலும்; ஒளி

விடும் ஆபரணங்களை அணிந்த உனது பொன் மேனியிற் படர்ந்த பசலைக் காட்சியைக கண்ட எண்ணம் உனை நினையாதி இருக்க விடுமோ. ஆகவே அவர் விரைவில் வருவாரென்ற மன உறுதியுடன் ஆறி இருப்பாயாக.

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூட

47 வது காட்சி முடிவுறும்

காட்சி; எட்டு

களம்: *1. பாதை, 2. தலைவியின் இல்லம் 3. குறிஞ்சி நாட்டில் உள்ள பாசறை*

காலம்: *1. காலை 2. மாலை 3. மாலை*

பாத்திரர்:

மதங்கர் தலைவன், புலவர் ஒரொலிப் பித்தன், தலைவன், தலைவி, பாங்கன் பாங்கி, பாணன் பாத்திரமேற்கும் மதங்கர்கள்

நிகழ்ச்சி;

முதலாவது; பிரிந்து சென்ற தலைவனுற் தனிமைப் படுத்தப்பட்ட தலைவிக்குத் தலைவன் விடுத்த தூதை இயம்ப வந்த பாணனைத் தோழி சினந்து திருப்பி அனுப்புகிருள். அதைக் கண்ட தலைவி அவனை அழைத்துத் தூதைக் கேட்ட றிவதுடன் தலைவனைக் காண அவனின் உதவியை நாடுகிருள். அவன் தலைவனிடம் சென்று அவளுற்ற துயரை உறுத்தி உரைக்க அவன் தனது துயரைக் கூறி விரைவில அவளைக் கண்டு வருத்தந் தணிவிப்பேன் என உறுதி கூறுகிருன்.

(அரங்கின் முன்னுல் மதங்கர் தலைவனும்
புலவர் பெருமான் ஒரொலிப் பித்தனுந் தோன்றுகின்றனர்)

மதங்கர் தலைவன்;

அன்புடைய அன்பர்கள் அனைவர்க்கும் வணக்கம். இன்று புலவர் பெருமான் வரத் தாமதிப்பதால் காட்சிப் படுத் தலைத் தொடங்குவோம். அவர் அவைக்கு வருகை தந்ததும் இடை வேளை விட்டு அவரது உரைகளைக் கேட்போம். அத்தருணத்தில் என் கருத்துகளையுங் கழறுவேன். இப்போது இக்காட்சிகளில் முதலாவது காட்சி தலைவியின் பாடிக்குச் செல்லும் பாதையில் நடக்கிறது. மனைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தன் இல்லக் கிழத்திக்கு விடுத்த தூதை உரைக்கப் பாணன் வருகிருன். அவன் வழி காண முயல்வதைக கண்ட தோழி அவனின் நோக்கத்தை அறிந்து ஏறகனவே தலைவன் மேற் கொண்ட வெறுப்பால்;

தோழி;

பாணனே! முன் கைகளில் அணிந்த ஒளி வீசும் வளையல்கள் நெகிழ்ந்தன. பொன்போற் பொலிந்த மேனி வாடிற்று. பலவிதழ் கொண்ட மரைமலர்போன்ற கண்கள்

நகை

கலங்கி நீர் அலையாகப் பெருகின. இதற்குக் காரணம், நீ இப்போது யாருக்காகத் தூது வந்தனையோ அந்த மறவனின் பிரிவேயாகும். இதனை உணர்ந்த நீ அவரின் தகைமைகளை அறிந்திருந்தும் தூது வந்து கொண்டிருக்கிறுயே. இம்முறை சொல்ல வேறு எதாவது புதிய தகுதி உளவோ கூறுக.

எல்வளை நெகிழ மேனி வாடப்
பல்லித ழுண்கண் பனியலைக் கலங்கத்
துறந்தோன் மன்ற மறங்கெழு குருசி
லதுமற் றுணர்ந்தனை போலா
யின்னும் வருதி யென்னவர் தகவே 471

பாணன்;

அம்மா, கொதிக்கும் எண்ணெயிற் போட்ட கடுகாக வெடிக்கின்றனையே! ஆய்ந்தோர்ந்து பாராது நாவை அசைத்தால் அதனல் பிறர் நலிவார். எனக்குத் தலைவலி என்று ஒருவர் உரைத்தால அதைக் கேட்டவர், எனக்கும் இடுப்பு வலியென்றுரைக்கும் உலகத்தில், ஒவ்வொருக்கும் என்று துயரப் பக்கம் உண்டு, அதைத் தலைவியிடம் உரைப்பதற்கே வந்துள்ளேன் ஆதலால் என்னைச் சில வார்த்தைகள் உரைக்க விடுகின்றனையா?

தோழி;

அப்படியா? உமது நல்ல மனதிற்குத் தலை வணங்குகிறேன். ஆயினும் ஒன்றுரைப்பேன்; சீறியாழ் என்னும் இசைக் கருவியை மீட்டுவதில் வல்ல பாணனே! இன்னும் கேடபாயாக; உம்மை எம்பால் தூது விடுத்த தலைவர் பிரிந்து சென்றபோது; கார் காலந் தொடங்க முன் பணி முடித்து மீள்வேன் என்று சென்றார். அநதக் கார் காலம் இப்போது வந்துவிட்டது. அதை நாங்கள் உணர்வதுபோல அவரால் உணர முடியாவிடினும் தனது வாயாற் பொய் வார்த்தைகளைப் புகல்வதையிட்டு வெட்கப்படுவதிலாவது தன் வாய்மையைக் காட்டவில்லையே என்றுதான் நான் வருந்துகிறேன்.

கைவல் சீறியாழ்ப் பாண நுமரே
செய்த பருவம் வந்துநின் றதுவே
யெம்மி னுணரா ராயினுந் தம்வயிற்
பொய்படு கிளவி நாணலு
மெய்யா ராகுத லெனகோ யாளே 472

(தோழி பாணனுடன் பிணக்குறறதைக் கண்ட தலைவி அவளை அழைத்து அவன் என்ன தூது சொலல வந்துள்ளான் என்பதைக் கவனிப்போம் என்று சொல்ல)

தோழி;

பாலப் பருவத்திலிரிந்து உயிர்க்குயிராய்ப் பழகிய நான் ஏதும் செய்தால் அது உங்கள் நலத்திற்காகவே இருக்குமென் பதை நன்கு அறிந்திருந்தும் , பாணன் வாயை எதிர்பார்ப்பது எனக்கு நல்லதென்று தோணவில்லை. ஆதலால்

தலைமகள்: –

அன்பான பாங்கியே! நானும் உன்போன்ற எண்ணம் கொண்டுளேன். ஆயினும் அவர் எங்கே உள்ளார், என்ன செய்கிறர் என்ற விபரங்களையாவது இவன் மூலந் தெரிந்து கொளலாம் அல்லவா? அதற்காகவே அவனை அழைக்கிறேனே தவிர உன் மீதுள்ள வெறுப்பால் அன்று என்பதை அறிவாயாக.

தோழி;

அதுவும் நல்ல யோசனைதான். உடனே அழைத்து வருகிறேன்

(எனச் சொல்லிப் பாணனை அழைத்து வருகிறள் அப்போது;)

பாணன்;

அம்மா என் அன்பான வணக்கங்கள். பாசறையில் அரச ஆணை மேற்கொண்டு பணியாற்றும் தலைவன், உங்களிடம் உரைக்கும்படி சில வார்த்தைகள் செப்பினன் அவற்றைத் தயை செய்து கேட்டருள்க. அவர் உரிய காலத்திற் திரும்பி வர முடியாது துயருறுகிறர். அலை உங்களைக் காண விழைகிறர். நீங்கள் ஒருப்படின் அவர்பால் அழைத்துச் செல்வதைத் தவிர எனக்கு வேறு வழியேதுந் தெரியவில்லை இதுவே எனது தூதின் நோக்கமாகும்.

தலைமகள்; -

கருவி வானங் கார்சிறந் தார்ப்பப்
பருவஞ் செய்தன பைங்கொடி முல்லை
பல்லான் கோவலர் படலைக் கூட்டு
பின் மாலைபு முடைத்தோ
வன்பில் பாண வவர்சென்ற நாடே 476

பாணனே நீ என்மேற் பரிவுகொண்டவன். ஆகவே உன்னிடம் ஒன்று கேட்பேன் அதற்குத் தக்க விடையை உள்ளபடி உரைக்குக. இதோ கார் காலத்திற்கு ஏதுவாக வான் முகில்கள்

கறுத்து, இடித்து, முழங்கி, மின்னி மழை பொழிய ஆரம்பித்தி விட்டன. பசுமையுறத் தளிர்த்த முல்லைக் கொடிகளும் அலர்ந்து பருவ காலத்தை வெளிக் காட்டின. பல பசுக்களின் உரிமையாளர்களான ஆயர் அவற்றை மந்தையிற் செறித்துப் பட்டிகளின் படலைகளை கட்டிக் காக்கும் மாலைக் காலமுமானது. இத்தகைய கார்காலம் இல்லாத நாட்டிற்கா என் தலைவர் எனைப் பிரிந்து சென்றுளார்

பாணன்:

தலைவியே! இவ்வண் எண்ணுதல் தவறு. அரச பணியும் ஆணையும் எத்தகையது என்பதனை நீங்கள் நன்கு அறிவீர்கள். அப்படி இருக்க அவர்மேல் மட்டல்ல அவரின் நண்பனுகிய என்மேலும் நம்பிக்கை அற்றிருப்பது எவருக்குமே நல்லதல்ல. நம்பிக்கைதான் வாழ்க்கை. ஆகவே, தயை செய்து அவரை நீங்கள் விரைவிற் காண்பீர்கள் என்ற மன உறுதி யுடன் என் வார்த்தையைக் கேளுங்கள்.

தலைமகள்:

மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர்
செய்யரண் சிதைத்த செருமிரு தானையொடு
கதழ்பரி நெடுந்தே ரதர்ப்படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவ லென்னு
நன்று லம்ம பாணன தறிவே 474

பாணனை பகைவர்தம் காவல் அரண்களை தகர்த்து போரிடும் படையுடன், விரைந்து செலும் குதிரைகள் இவர உயர்ந்த தேரிற் சென்ற என் தலைவனை ஈண்டு அழைத்து வருவேன் என்று கூறுகின்றனை. உனது அறிவுடமை மாணப் பெரிதே. இசைத் தொழிலிற் கைதேர்ந்த பாணனே! மீண்டு வரத் தாம திக்கும் தலைவரைக் காண அவரது இடத்திற்குப் போம்படி ஆலோசனை கூறினை. நன்று நன்று, அவரோ பலராலும் ஏற்றிப் புகழப்படும் சிறப்பினர்தான். எனிலும் பெரிய துயரைச் செய்யத் தக்க பொய் பேசுவதில் திறன்மிக்கவர். அவர எம்மை மறநந்ததுபோல நீயும் எங்களை மறந்து விடாதே!

பலர்புகழ் சிறப்பினுங் குருசி லுள்ளிக்
செலவுநீ நயந்தனை யாயின் மன்ற
வின்னு வரும்பட ரெம்வயிற் செய்த
பொய்வ லாளர் போலக்
கைவல் பாணவெம் மறவா திமே 473

மதங்கர் தலைவன்;

சிவ பூசையில் கரடி போலக் காட்சி நயமுறச் சென்று கொண்டிருக்கும் வேளையில், ஒரு சிறு இடைவேளை. புலவர் வரத் தாமதித்ததால் இவ்வண் காட்சி தடை ஏற்பட்டதிற்கு மன்னிப்புக் கோருகின்றேன். இப்போது முதலில் இடம் பெற வேண்டிய நிகழ்வொன்று இடையில் இடம் பெறுகிறது. புலவர் பெருமானே வருக. தாங்கள் சொல்ல வேண்டியதைச் சொற்றிடுக.

புலவர் ஒரொலிப் பித்தன்;

தாமதத்திற்குக் காரணம் கூறப் புகின், நாடகம் மேலுந் தாமதமாகி விடும். அவையோரே! முல்லைப் பத்துக் களில் சிலவற்றின் போக்கைப் பார்க்கும்போது, இடையி டையே புறத்திணைச் சேதிகள் சில சொல்லப்படுகின்றன. ஐங்குறு நூறு அகப்பொருள் இலக்கியமாகக் கொள்ளப் படினும், இத்தகைய புறத்திணைப் பொருட்கள் விரவி வருவதால பொருள் மயக்கம் ஏற்படுவதைக் காணலாம். இங்கே அப்படிப்பட்ட சேதிகள் தலைவனின் பிரிவுக்குக் காரணம் கற்பித்தற்காகவே கையாளப்பட்டுள்ளன. எனவே இதை மயக்கற்றதாகக் கொள்வதே நலம். இத்தகைய மயக் கங்கள் இடம் பெறுவதை; அகஞ்சார்ந்த புறம், புறஞ் சார்ந்த அகம் எனபர். ஆகவே இதில் வரும் அத்தகைய பாடல்களைப் புறஞ் சார்ந்த அகத்திணைப் பாடல்களாகக் கொள்வதில் தவறில.

அடுத்தாக, நான் இங்கே சொல்ல வேண்டிய பொருள் ஒன்று உண்டு. உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என்பவற்றைப்பறிய சிறு விளக்கமே அப்பொருள். இங்கே நாடகம் பார்க்க வந்தோமா இல்லை இலக்கிய இலக்கணம் படிக்க வந்தோமா என்று உங்களில் பலர் குமுறுவதை என் ஏழாவது அறிவு சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய நாடகங்களில் வரும் சங்க காலப் பாடல்களை நன்கு நயக்கவும் அதில் அடங்கியுள்ள வாழ்க்கை நெறிகளை உணரவும் அத்தகைய தரவுகளைத் தெரிந்து வைத்திருப்பது அவசியமே!

சங்க காலப் பாடல்களில உவமவியலில் கூறப்படும் பல அணிகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. அவற்றிலும் மேலாக உள்ளுறை உவமும், இறைச்சிப் பொருளுஞ் செறிந்து நிரம்பி வழியும். இதனுற்தான் சங்கப்பாடல்கள் தூய்ப்பார்க்கு இன்பத்தை மட்டுந் தருவதில்லை, கூடவே வாழ்வின் தத்து

வத்தையும் நெறிப்படுத்துகின்றன. இக்காரணங்களே அவற் றிற்கு ஆயிரக் கணக்கான வருட கால அமரத்துவத்தை ஈட்டிக் கொடுக்கின்றன.

சங்கப் பாடல்களில் இயற்கை வர்ணனை மட்டுமல்ல, உயிரினங்களின் செயல்களால் ஏற்படும் இன்பமும் உள்ளன. அவ்வாறு அவை இடம்பெறும் இடங்களை வெளிப்படையாக நோக்கினால்; சொல்ல எடுத்துக் கொண்ட பொருளுக்கு பின் புலமாகவே அமையும். ஆனால் சற்று உற்று நோக்கினால் உள்ளார்ந்த பொருள் ஒன்று உள்ளே அடங்கி இருப்பதைக் காணலாம். பரத்தையிற் பிரிந்த தலைவன் தன் நடத்தையால் ஒரு குடும்பப் பெண் அல்லற் படுவதை அறியாமலே ஈனச் செயல்களில் ஈடுபடுகிறான். அன்புக்காக காத்துத் தவிக்கும் தாயுஞ் சேயும் இரண்டு உயிர்கள் உள்ளன என்பதை மறந்து தான் பெறும் இன்பம் தனக்கே உரித்தெனத் தன்னயம் மிக்கவனாக பிரிந்து வாழ்கிறான்.

இந்த நிலையைப் பிறர் எடுத்துச் சொல்லியும் உணர்ந்தானில்லை. தானாகவும் உணர்ந்தானில்லை. அதை அவனுக்கு உணர்த்த அவனின் பாங்கன் ஒரு யுக்தியை கையாள்கிறான். தலைவனுடன் செல்லும் வழியில் மான் கூடடம் மேய்தையும் ஆங்குள நீரோடையில் மான் குட்டி நீர் அருந்துவதும் இரு பக்கங்களிலும் கலையும் பிடியும் தலையை உயர்த்தி நாலா பக்கமும் எதையோ கவனித்து நிற்பதும் அவன் கண்களிற் படுகின்றன. இதைப் பயன்படுத்தி தலைவனின் தவறை உணர்த்தலாமென சிந்தனை தோன்றுகிறது, இதை நேரிடையாகச் சொன்னால் குரங்குக்கு புத்தி சொன்ன தூக்கணங் குருவியின் பாடு தனக்குறுமோ எனப் பல தடவை சிந்தித்துப் பார்தத பின் அவ்வண் செய்வது தக்தெனக் காண்கிறான்.

இதை நேரிடையாக எடுத்து இயம்புவதால் அவனது வெறுப்பையே பெற முடியும் என்று நினைத்த அவன் மறைமுக வழியை நாடுகிறான். அதற்கு உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருளெனுங் கவிநயம் ஊட்டும் இரு வழிகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்து எடுத்துக் கொள்கிறான். இவற்றின் இயல்பை தெளிதற்குக் காரணங் கருதிய சொற்றொடர்களின் பொருளை உணர வேண்டும். ஏனெனில் அதற்குள்தான் அவற்றின் வரைவு உள்ளடங்கி உள்ளது.

முதலில்; இறைச்சிப் பொருள் என்பதில் உள்ள இறைச்சி எனுஞ் சொற் பொருள் எதுவெனக் காண்போம். அது, மாமிசம், தசை, கருப்பொருள் எனவாகும். இவ்வடிப் படையில் ஒரு கருத்தை வெளிப்படுத்தும் போது உடனிலை உவமையாகச் சொல்லின், அது இறைச்சிப் பொருளாகும். உவமைப் போலியாகச் சொல்லின் உள்ளுறை உவமமாகும்.

இவைபற்றி ஐந்திலக்கணம் கூறுந் தமிழ் நெறி விளக்கம், இலக்கண விளக்கம் உட்பட முன்னர் மொழிந்த இலக்கண நூல்களில் இவைபற்றி எடுத்தாளப்பட்டதிலும் பார்க்க அணியலங்காரம் கூறுந் தனி நூல்களில் ஒன்றான மாறனலங்காரம், இறைச்சிப் பொருளலங்காரம எனத் தனிய திகாரம வகுத்தும் உதாரணங்களை நல்கியுஞ் சிறப்புச் செய்து அதன் 176ம் சூத்திரத்தில்;

கருப்பொருள் களனுங் கட்டுரை பயின்ற
பொருட்புறத் தனவா மிறைச்சிப் பொருளணி

என வரை விலக்கணம் தந்துள்ளது. மேலும் உள்ளுறையுவம் எனும் அதிகாரம் வகுத்து 143 வது சூத்திரத்தில்

உணர்வதற் கரிதா வுமப்போலி
புணர்திறம் வினையே பொருள்மெய் யுருவென
பிறப்பொடு மைந்தாம் பெற்றிதாகித்
சிறப்புறு திணைகளிற் றெய்வத மொழிந்த
கருப்பொருள் களனைக் கட்டுரை பயின்ற
முவமையோ டெதிருள்ளுறுத் தலுற்றயலா
யுவமச் சொற்றெகலொரு தலையாகியு
மன்பின் தளவா மகத்திணை யிருவயி
ளின்ப துன்பத்திசை திருந்திசையாத்
துணைவன் றுணைவி தோழி செவிலி
யிணையெனும் பாங்கன் பாணனென் றிவராற்
கொள்கையின் வருஉங் குறிப்பிரைத் தாகும்

உள்ளுறையுவம் எத்தகைத்து என்ற வரைவிலக்கணத்தையுந் தந்துள்ளது.

அவையோரே! இவற்றினை உள்வாங்கி, தான் கண்ட காட்சி மூலந் தலைவனின் இதயத்தில் எப்படிப் பகுத்தறிவை ஏற்படுத்தலாம், மனித நேயத்தை உணர்த்தலாம், தவறை மறை பொருளாகச் சுட்டிக் காட்டலாம் என்பதற்கு இவ்விரு வழிகளில் எதைத் தேர்வான் என எண்ணிப் பாருங்கள்.

நன்றி

அப்போது அவற்றின் பொருள் புலனுகும். மதங்கர் தலைவனே, இனிக் காட்சியைத் தொடரத் தடையில்லையே!

மதங்கர் தலைவன்;

நன்றிகள புலவரே! இலுப்பைப் பையோடு திருவாரூர் பார்த்ததுபோல நாடகத்தோடு நற்றமிழ் இலக்கணத்தையும் மக்கள் நயக்க நல்லுரை புகன்றீர்கள், இனிக் காட்சியைத் தொடங்குவோம்.

(பாசறைக்குச் சென்ற பாணனைக் கண்டு
பாய்ந்தோடிச் சென்ற)

தலைமகன் –

முல்லை யாழிசைத்து துயரகற்றும் பாணனே, தன்னை விட்டுப் பிரிந்து சென்ற இடத்தில், நெடுங் காலம் தங்கி விட்டேன் என்று என்னை முனிந்துளாள். ஒருவரின் மனதின் எண்ணங்களைப் பதிவு செய்யும் கண்ணாடியாக ஒவ்வொரு வருக்கும் கண்களின் மேலே கடவுள் வைத்திருப்பது நெற்றி, அதன் விரிவால் வியப்பையும், சுருக்கத்தால் வருத்ததையும் செழுமைப் பரப்பால் மகிழ்வையும், மேலும் பலபல மன நிலைகளை ரேகைகளால் வரைந்து காட்டுந் திரையாக விளங்கும் அந்த நெற்றி சுருங்கி அவள்படுந் துயரத்தைக் காட்டும் வண்ணம் நான் அளித்த பிரிவுத் துன்பத்தால் உன்னிடம் என்ன சொல்லினளோ அறியேன். அவற்றை யெலாம் ஒன்றும் விடாது எனக்கு எடுத்து விளம்புவாயாக.

நீடின மென்று கொடுமை தூற்றி
வாடிய நுநல ளாகிப் பிறிதுநினைந்
தியாம்வெங் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லிய துரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே 478

அறிவு மிக்க பாணனே! சொல்லும் போதுமட்டல நினைக்குந் தொறும் இனிமை தரும் என் இல்லக் கிழத்தியையும் அவள் புலத்தையும் விட்டுப் பிரிந்து வந்த நான், இங்கே வீசும் பனிக்குளிர் மிக்க வாடைக் காற்றுற் றினந்தினம் வாடு கிறேன். அதே கொடுமையைக் கொடுக்கும் ஈவிரக்கமற்ற வாடையாற் தனித்துத் தவிக்கும் அவள் தன் பனிதூங்கும் மலரொத்த விழிகளில் கண்ணீர் மல்க என்ன சொன்னாள் என்பதை என்னிடம் விரிவாகக் கூறுகவே.

சொல்லுமதி பாண சொல்லுதோ றினிய
நாடிடை விலங்கிய வெம்வயி னாடோறு
மரும்பனி கலந்த வருளில் வாடை
தனிமை யெள்ளும் பொழுதிற்
பனிமலர்க் கண்ணீ கூறிய தெமக்கே 479

பாணன்;

தலைமகனே! உன்னுடைய நெஞசத்தைக் கொள்ளை கொண்ட காதலியைப் பிரிந்து வந்ததால் அவள் நொந்து தாமரை இதழ் நிகர்க்கும் இமைகள் இரிய கண்ணீர் விட்டழுத, இடையூறு செறிந்த அழுகையைச் செவிமடுத்து மருட்கை உறாத நீ எங்கள் தலைவனுமல்ல, நாம் உமது பாணனுமல்ல என்பதை உணர்க.

நீயுங் குருசிலை யல்லை மாதோ
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
யிரித ழுண்க ணுகுத்த
பூசல் கேட்டு மருளா தோயே 480

தலைவன்;

பாணனே! பனித் துளிகள் படர்ந்த மலர்போல என் காதலியின் கண்கள் பனித்துப் பசலை கொண்டன. துன்பம் நிறைந்த வருத்தத்துடன் உழல்கின்ற என் தலைவிக்கு நான் உறுதுணையாக இருக்க அவளைக் காண்பேன். இன்னுஞ் சில நாட்கள் இந்தச் சிறிய மலையில் தங்கி இருப்பாயாயின், எனது தேர் அவளது இல்லத்தண்டை நிற்பதைக் காண்பாய்.

பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொ டரும்பட ருழப்போள்
கையறு நெஞ்சிற் குயவுத் துணையாகச்
சிறுவரைத் தங்குவை யாயிற்
காண்குவை மன்னாற் பாணவெந் தேரே 477

காட்சி கரைகிறது

முன்னெழினி அரஙகை மறைக்க

48 வது காட்சி நிறைவேறுகிறது.

நஎரு

காட்சி; ஒன்பது

களம்; நெடும் பாதை

காலம்; காலை

பாத்திரர்;

மதங்கர் தலைவன், புலவர் ஓரொலிப் பித்தன். தலைவன், பாங்கன், பாகமேற்கும் மதங்கர், பின்புலப் பாடகர் குழு

நிகழ்ச்சி;

தலைவன் தன் அரச பணி முடிந்து இல்லந் திரும்பு கிறான். தலைவியைக் காண திரும்பி வரும் வழியில், அவனின் மன வேகத்திற்கு இவர்ந்து வரும் தேரினதும், பரியினதும் அதைச் செலுத்தி வரும் பாகனது கெதியும் குறைவாகத் தோன்றுவதாற் பயண வேகத்தை விரைவுபடுத்தும்படி முடுக்குகிறான்.

(முன்னெழினி விலக, அரங்கில் மதங்கர் தலைவனும் புலவர் பெருமானுந் தோன்றுகின்றனர்)

மதங்கர் தலைவன்;

அவையோரே! இன்று நடக்க இருக்கும் காட்சிப் படுத்தற்கு உங்களின் அன்புப் புன்னகையால் வரவேற்கிறேம். ஐங்குறு நூற்றின் 49 வது தேர் வியங்கொண்ட பத்து என்ற காட்சிப்படுத்தலைச் சற்று வித்தியாசமாக அமைத்துள்ளோம். இதுவரை நடாத்திய நாடக வழக்கில் ஒன்றான கதைப் பாடல் வழியில் இதைக் காட்சிப்படுத்துகிறேம். கண்டு கழிபுங்கள். மேலும் புலவர் பெருமானின் அறிவுரையையும் கேட்டு மகி ழுங்கள். புலவரே உம் வாய் மொழி கேட்க அவாக் கொண்ட மக்களுக்கு உமது உரையை வழங்கும்படி பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்;

புலவர் ஓரொலிப் பித்தன்;

இந்தப் பத்திற்கூட போர் சார்ந்த புறத்திணைச் செய்திகளைத் தந்து திணைமயக்கத்தை ஏற்படுத்தி பேயனும் நம்மைப் பேயர்களாக்கியுள்ளார் என்று பலர் நினைக்கலாம். ஆனால் தமிழினத்திற்கென அவ்வினம் உலகில் உயிர்த்த காலந் தொடக்கம் இற்றைவரை நிலைத்துள்ள ஒரு விழுமி யமாகும். அந்த விழுமியத்தின் கருதுகோள், காதலும் வீரமும் ஒன்றுடன் ஒன்று தழுவிய வாழ்வியல் நெறியாகும். இவை இரண்டும் வேறு வேறுகத் துலங்கும்

இயல்புடையதாயினும், பல வேளைகளில் இணைந்தே செயறபடுகின்றன. வீரத்தாற் காதல் தோன்றும், காதலால் வாழ்வு தோன்றும். வாழ்க்கையால் மனித இனமும், வாழ்க்கை மேம்பாடுகளும் விளையும். இவ்வுலகின் அதன் இறுதிப் பயன்பாடு வீட்டுப் பேறாகும். இதையே வள்ளுவம் தனது முப்பால் வைப்பினால் உறுதி செய்துள்ளார்.

இந்த அடிப்டையில் அகப்பொருள் கருத்துகளை முல்லைத் திணையில் செறிக்க வந்த பேயனார் அக்கருத்துகளுக்கு ஊட்டம் கொடுக்கப் பிற திணை நிலங்களின் வளங்களை ஆங்காங்கே எடுத்துச் சொல்கிறார். தமிழ்ச் சொற்கள் புணர்ந்திசைப் பதைப்பற்றிச் சொல்லப் புகுந்த இலக்கணம், சொற்கள் ஒன்றுடன் ஒன்று இணையுஞ் சொற்களை நிலைச் சொல், வருஞ் சொல்லெனக் கூறுவதுபோல அகப்பொருட் சேதிகளில் தலைவி நிலையாக இருக்கத் தலைவன் எங்கெங்கோ சென்று வருபவனாக இருக்கிறான். அவ்வண் நிகழ்வதால் தலைவியின் நிலைப்பாடே அகப்பொருட் கருவுள்ளதாக அமையும். தலைவன் பிரிவிற்கான பல காரணங்களின் நிமித்தம் பல இடங்கள் பணி களுடன் நெருங்கிப் பயில்வதால் அவனைப் பொறுத்த அளவிற் புறத்திணை சார்ந்த நிலைப்பாடுகள் தோன்றும். இவை நிலைத்த நிலைப்பாடுள்ள தலைவியுடன் ஒன்றுங்கால் அவளின் நிலையை உணர்த்த இவை மேம்பாட்டைத் தருந் தருணங்களிற் திணை மயக்காகக் கொள்வதிற் பொருள் இல்லை என்றே தோன்றுகிறது.

அடுத்தாகப் நிகழ்ந்த நிகழ்வுகளுக்கு உயிர் தந்து பார்ப்போர் மகிழ்ந்துணரப் பாடி, ஆடி, பேசி. அபிநயித்து அந்த நிகழ்வுடன் சம்பந்தப்பட்டவர்களின் நிழல்களாக நடித்துக் காட்டும் தமிழ் சார்ந்த செய்கைகளும் நாடகத் தமிழ் என்ற முத்தமிழ்ப் பகுப்பையே சாரும். . இதைச் சிலப்பதிகார உரை யாசிரியர் அடியார்க்கு நல்லார் விரிவாக எடுத்துரைத்துள்ளார். கதைஞர்களின் கதைப் பாடல் நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு, கரகாட்டம், காவடி ஆட்டம், கும்மி, கோலாட்டம் ஆதியனவும் இந்த நாடகத் தமிழ் அங்கங்களாகக் கொள்ளப்படத் தக்கனவே.. இன்று இங்கு கதைப் பாடல் (காலாட்சேப) வடிவிற் காட்சிப்படுத்தும் மதங்கரின் முயற்சி பாராட்டுக்குரியதே!. அடுத்து அது தொடர்கிறது பார்த்துக் களிப்போம்.

(காட்சிப்படுத்த அவையில், நிகழ்ச்சித் தொகுப்பாளன்,
தலைவன், பாகன் பாத்திரமேற்ற மூன்று
கதைப் பாடற் கலையில் வல்லுநரர்களான மதங்கர்
இணைக் குழுவினருடன் தோன்ற

மதங்கர் தலைவன்;

தமியென்றுற் தனிமை தமிழென்றுல் ழகரம்
தமிழென்றுல் அமிர்தம் தமிழன்றுல் இனிமை
தமிழென்றுல் அழிவற்ற தமிழான தொன்மை
தமிழென்றுல் இயற்கை தமிழான மொழியே
அந்தத் தமிழை நெஞ்சார நினைத்து
இந்தக் காட்சியை இயற்றுதும் வருக

அவையோரே! சங்க காலப் பாடல்கள் மிகச் சிறிய சிறிய எளிதான சொற்களால் ஆனவை. ஆனல் இன்று அப் பாடல்கள் கடினமென உணரப்படுகிறது. இந்த நிலையைத் தவிர்க்கவே இவ்வாறு மக்களுக்குப் புரியத்தக்க வகையில் நாடகத் தமிழிற் தருகிறேரும். இன்றைய நிகழ்வைக் கதைப் பாடல் வடிவிற் காட்சிப்படுத்தப் போகின்றேரும். அதில் நானும் தொகுப்பாளனுகப் பங்கேற்க இருக்கிறேன், இதோ காட்சியைத் தொடங்குகின்றேன்.

காடும் காடு சார்ந்த முல்லை நிலத்திலே ஆவூர்ப் பட்டி என்ற ஒரு பாடி. அங்கே ஆநாயகன் என்ற ஒருவர் பல ஆநிரை காத்துப் பஞ்ச கோப ஈட்டத்தால் வளமாக வாழ்ந்தார். கோதை என்னும் அவரது மகள் குறிஞ்சி நிலக் காளையை மணந்து வாழ்ந்திருந்தாள். அரச ஆணையைச் சிரமேற் கொண்டு பகை நாட்டிற் பொருதுவதற்காக பிரிந்து சென்ற அவன் பகை முடித்து வாகை சூடி திரும்பி வரும் வழியிற் தேரை விரை வாகச் செலுத்தச் சாட்டையைச் சொடுக்கும்படி பாகனை விரைவுபடுத்தத் தன் சொற்களால் சொடுக்குகிறுன்.

தலைமகன்;

பாகனே கேட்பாயாக. நமது ஊரை எப்போ சென்ற டையலாம். எவ்வளவுக்கு எவ்வளவு விரைய முடியுமோ அவ்வ ளவுக்கு விரைவாயாக. உன் பரிகள் பறவைகள்போலப் பறக்க வேண்டும். அதனல் நிலம் நடுங்கத் தேர் நகர்ந்து நாடிக்கு நாடி தூரத்தை விழுங்க வேண்டும். அதற்கான காரணம் எது வெனத் தெரியுமா? வாடிய சந்துகளுந் தோள்களும் அழகிய வரிகொண்ட நிதம்பமுங் சிவந்த இழையணிந்த எந்தன்

ரையும் வருத்துந் தனிமைப் பிணி அகலவேண்டும்/ அறிவுமிக்க பாகனே உனது சாட்டையை எடித்து விளாசு.

சாயிறைப் பகீணத்தோ ளவ்வரி யல்குற்
சேயிழை மாதரை யுள்ளி நோய்விட
முள்ளிட் டீர்மதி வலவநின்
புள்ளியங் கலிமாப் பூண்டதேரே 481

தெரியிழை யரிவைக்குப் பெருவிருந் தாக
வல்விரைந்து கடவுமதி பாக வெள்வேல்
வென்றடு தாகீன வேந்தனெடு
நாளிடைச் செப்பி னூழியி னெடிதே 482

அறிவுமிக்க பாகனே. விரைந்து பரிகளை முடுக்குக. நான் அரசனின் ஆணைக்கு அடங்கி வெற்றி அடையும் வரை பொறுத்திருந்த நாளிலும் பார்க்க, இந்த தருணத்தில் ஒவ்வொரு நாளியும பல யுகங்களாகவே தோன்றுகிறது. அதற்குக் காரணம் என் தலைவி உவக்கும் பெரு விருந்தாக எனது வருகை அவளுக்கு அமையும் என்பதால் எனஅறிகுக

ஒளி சுடரும் என் காதலியின் நுதல் என் பிரிவால் இழந்த நலன்களை மீளப் பெற வேண்டும். அதற்குத் தடையாக இருந்த அரசனும் விடுப்புத் தந்துவிட்டான். நாம் செலும் பாதையின்கண் பல வனப்பும் மிகுந்துள்ளன. நம் தேர்க் குதிரைளும் கடுகித்தான் செல்கினறன. ஆயினும் இந்த வேகம் குறைவாகவே எனக்குப் படுகிறது . ஆகவே மதிமிக்க பாணனே இன்னும் விரைவாகத் தேரைச் செலுத்துக.

ஆறுவனப் பெய்த வலர்தா யினவே
வேந்துவிட் டனனே மாவிரைந் தனவே
முன்னிறக் கடவுமதி பாக
நன்னுத லரிவை தன்னலம் பெறவே 483

பாகன்;

தலைவரே! கடுகிச் செல்லும் குதிரைகள் தமது வேகத்தைத் தாண்டியே செல்கின்றன. அதன் விளைவாக அவற்றின் மூச்சு நுரையாக வருவதைக் காண்க. எனினும் நான் எனது தார்க்கோலால் மென்மேலும் சொடுக்கிக் கொண்டே இருப்பதையும் சக்கரங்களின் உருள்கையால் பூதூளி புகையாக மெலெழுவதையும் பாருங்கள்.

தலைவன்;

வேனி னீங்கக் கார்மழை தலைஇக்
காடுகவின் கொண்டன்று பொழுதுபாடு சிறந்து
கடியக் கடவுமதி பாக
நெடிய நீடின நேரிசை மறந்தே 484

பன்னிறப் பூக்களாலுஞ் சிறப்பித்துக் காட்டுகிறது. எனது இனியாளை நெடுங் காலம் பிரிந்திருந்து விட்டேன். அதலால் அவளை விரைவிற் காண விழையும் என் நெஞ்சத்து நினைப் பிலும் பார்க்க வேகமாகப் பரியைக் கடிக.

அரும்பட ரவல மவளுந் ஞீர
பெருந்தோ ணலம்வர யாமு முயங்க
வேமதி வலவ தேரே
மாமருண் டுகளு மலரணிப் புறவே 485

பரிகளை வழி நடத்துவதிற் திறமை கொண்ட பாகனே! நம் தேர் வரும் ஓசைக்கு அஞ்சி விலங்குகள் மருண்டு அங்கு மிங்கும் ஓட அதனுல் எழும் பூதூளி மலரால் நிறைந்த முல்லை நிலத்தை மறைக்க தேரை விரைவாகச் செலுத்துக. அவ்வாறு விரைநதாற்தான் என் வருகை கண்டு,, என் பிரிவால் படர்ந்த அவளின் பசலை அகலும், பிணைத்த தோள்கள் நலன் பெறும். நானும் அவளைப் புல்லி அணைப்பேன்.

மதங்கர் தலைவன்;

அவையோரே! ஆகக் கூடிய வேகத்திற் பரிகளைச் செலுத்தும் பாகனை இன்னும் வேகமாக விரட்டு என்றால்; பாவம் பாகன் என்ன செய்வான். அவைகள் என்ன பறக்கும் குதிரைகளா. இவரது மன வேகத்தைப் பார்க்கும்போது எனக்கு ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. பொருள்வயிற் பிரிந்து சென்றவர்கள் தமது நோக்கத்தை நிறைவு செய்து திரும்பி வருகிறார்கள். அவர்களுள் ஒருவர் மணஞ் செய்த சில காலத்தின் பின் பிரிந்து சென்றவர். சாதாரணமாக பயணத் தின்போது, உட்கார்ந்து தன் கால்களை முன்னே நீட்டி அசைத்து கொண்டிருப்பதைக் கண்ட உடன்பயணஞ் செய்யுமொருவர்; பாவம்! தம்பி, புதிதாகக் கல்யாணஞ் செய்து கொண்டவரல்லவா. அதனுல் இருக்கும் வண்டியின் வேகம் போதாது என நினைத்து தன் காலால் உதைத்து வேகத்தைக் கூட்டுகிறார் எனக் கிண்டலாகச் சொல்லக் கேட்டவர்கள் நகைத்தனர். இவருடைய செயலும் அத்தகைத்தே....

தலைவன்;

மற்றவர் படுந் துயரை உணர்ந்து தேரைச் செலுத் துவதில் வல்ல வலவனே! மாலை நேரம் காதலர்க்குகந்தது. அப்படி இருந்தும் தலைவி என் பிரிவால் வருந்துகிருள். தழு வியும் ஆற்ற முடியாத அதிக துயரங்கொண்ட அவளைக் காண்பதற்காகப் பறவைகளிலும் பார்க்க விரைவாகக் கனைத்துப் பாயும் குதிரைகளைப் பூட்டிய தேரை விரையச் செலுத்துவாயாக.

பெரும்புன் மாலை யாதது நினைஇ
யரும்பட ருழத்தல் யாவ தென்றும்
புல்லி யாற்றுப் புரையோட் காண
வன்புதெரிந் தூர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே 486

பரிகளின் மன நிலை அறிந்து தேரைச் செலுத்தும் பக்குவத்தில் வல்ல பாகனே! இக் கார்காலம் பிரிந்தவர் கூடிக் களிக்கும் காலம். ஆபரணங்களை அணிந்த என் தலைவியின் மனங் களிக்க நான் விரைவில் அவளைக் காண வேண்டும். அதற்காக என்னுல் மேலுந் தரிக்க முடியாது இன்னும் சற்று விரைக.

இதுமற் பிரிந்தோ ருள்ளும் பொழுதே
செறிதொடி யுள்ள முவப்ப
மதியுடை வலவ வேமதி தேரே 487

கருவி வானம் பெயகிறுடங் கின்றே
பெருவிறற் காதலி கருதும் பொழுதே
விரியுளை நன்மாப் பூட்டிப்
பருவர றீரக் கடவுமதி தேரே 488

மேகங் கருக்கொண்டு வானங் கறுத்து மழை பெயத் தொடங்கி விட்டது. பிரிவுப் பிணியால் வாடுந் தலைவி தன் வருத்தமகன்று களிக்க எதிர்பார்க்கும் கார் காலம் ஆரம்பித்து விட்டது. அவ ளது துன்பம் நீங்க, விரிந்த பிடரி மயிர் கொண்ட நல்லினக் குதிரைகள் பூட்டிய தேரினை விரைந்து செலுத்துக

பாகன்;

ஐயனே! நீங்கள் செல்லும் தேரின் முன்னுல் விரையும் பரிகள்மேல் உங்கள் பார்வையைச் செலுத்துகிறீர்களே தவிர, ஆகாயத்தில் துலங்கும் பரிதியைக் கண்டீர்கள் அல்ல. ஆதவன் இன்னும் உச்சிப் பொழுதைத தாண்டவில்லை. ஆனுல் நாம் முல்லையின எல்லையைத் தாண்டி விட்டோம்.

தலைவன்;

பாகனே! அப்படியா? நுட்பமான புரிகளாற் திரிக்கப்பட்ட சேணத்தை இலாவகமாக இயக்கி, வலிய குதிரைகள் இழுத்துப பாயும் தேரை மேலும் விரைவாகச் செலுத்துக. அப்போதுதான்; அழகிய சிறகுகள் அசைத்து. மாலையில் மலரும் முல்லையில் மொய்க்கும் மாலைப்போதின் முன்னரே செல்லலாம். அவ்வண் சென்றால் பிரிவாற் கனக்கும் என் தலைவியின் நெஞ்சம் களிக்கும்,

அஞ்சிறை வண்டி னரியின மொய்ப்ப
மென்புல முல்லை மலரு மாலை
பையு ணெஞ்சிற் றைய லுவப்ப
நுண்புரி வண்கயி றியக்கிநின்
வண்பரி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே 489

பாகனே! தெரிந்தெடுத்த நல்ல மணிகளால் அணி செய்த தேரை இன்னுஞ் சற்று விரைந்து செலுத்தில் மென்சொல் கிளர்த்தும் என் இல்லாளின் இல்லம் வந்துவிடும்

அந்திங் கிளவி தான்றர வெம்வயின்
வந்தன்று.....
ஆய்மணி நெடுந்தேர் கடவுமதி தேரே 490

மதங்கர் தலைவன்;

இவ்வாறு தலைவன் பாகனே முடுக்க, பாகன் குதிரையைச் சொடுக்க, குதிரை தேரை இழுக்க அடைய வேண்டிய இல்லம் வந்துற்றது.

சங்க காலப் பாடலின் இனிமைபோல்
மங்காத அகன் [illegible]ான்மை வாழ்வுபோல்
பொங்கு தமிழ எழுச்சிப் பூரிப்பில்
நீங்களுந் தமிழாக வளர்க வாழ்கவே

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மூட
49 வது காட்சி முடிவுறும்

நா.அ

காட்சி; பத்து

களம்; தலைவியின் இல்லம்

காலம்; மாலை

பாத்திரர்;

மதங்கர் தலைவன், சேர மன்னன் யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையார். புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார். தலைவன் தலைவி, தோழி பாத்திரமெற்கும் மதங்கர், வில்லுப் பாட்டுக் குழுவினர்

நிகழ்ச்சி;

பொருள் வயிற் பிரிந்த தலைவனும் கார் காலமும் ஒன்று சேர வந்ததைக் கண்ட தோழி தனிமையிற் தவிக்கும் தலைவியிடஞ் சென்று தலைவன் வரவை உரைத்தல். பிரிந்த தலைவனுந் தலைவியுங் கூடுதல், பேசுதல்.

(முன்னெழினி அகல அரங்கில் மதங்கர் தலைவன், சேர மன்னன் யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையார். புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார் தோன்றுகின்றனர்)

மதங்கர் தலைவன்;

இன்றையத் தினம் மறக்க முடியாத ஒரு தினமாய் பூக்கப் போகின்றது. இரு சிறப்பான காரியங்கள் நடைபெறப் போகின்றன. அதில் ஒன்று; இற்றைவரை ஐம்பது தினங் களாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த சங்க கால இலக்கியங் களில் எட்டு தொகையில் மூனருவது ஐங்குறு நூற்றின் 500 பாடல்களின் துணையுடன் தயாரித்த 50 நாடகத் தொகுதியின் இறுதி நாடகம் நிறைவேறப் போகின்றது. அடுத்தது; இதைத் தொகுப்பித்தோர், தொகுத்தவர், கடவுள் வாழ்த்தளித்துச் சிறப் பளித்த பாரதம் பாடிய பெருந் தேவனுர் ஆகிய மூவரும் நம் மனத் திரையிற் தோன்றி இந்நூல்பற்றிய சில ஐயங்கள், சிறப்புகள் பற்றித் தெளிவுபடுத்தப் போகிறார்கள். அத்துடன் ஐங்குறு நூற்றின் இறுதியாக அமையும் 50 வது வரவுச் சிறப்புரைத்த பத்தை நாடகத் தமிழின் ஒரு வடிவமான வில்லிசை மூலம் காட்சிப்படுத்தப் போகின்றோம். முதலிற் பாரதம் பாடிய பெருந் தேனுவர் அவைக்கு வருகிறார் பராக்! பராக்!!

(பாரதம் பாடிய பெருந் தேவனுர் அவையிற் தோன்றி)

கடல்சூழ் உலகைக் கவிந்திடு வான அத்துஉ
கதிரொளி பரப்பிக் காக்குந் திறனுல்
பல்திற வுயிர்கள் பரிக்கும் நலனுல்
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுஉம்

கேண்மின். ஐங்குறு நூற்றைத் தொகுத்த கூடலூர்க் கிழாரும், மன்னன் சேரலிரும்பொறையாரும் கடவுள் வாழ்த்துத் தருக என விழைய இசைந்து;

நீலமேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற்வீழ்
மூவகை யுலகு முகிழ்ந்தன முறையே

என மூன்று பாவரிகளில் பா வழங்கினேன். இதைப் பாடுங் கால் கருதிய பொருள்; நீலத் திருமேனியில் தாய்மையை இடப் பக்கமாகவும் தந்தைமையை வலது பக்கமாகவுங் கொண்ட ஏகனுக விளங்குபவனின் இரண்டு தாள் நிழலிற்தான் மூன்று உலகங்களும் அதன்கண் வாழும் சகல ஆன்மாக்களும் உயிர்த்தன. அத்தகை முழுமுதற் கடவுளை வணங்குகிறேன் என்பதாகவே இருந்தது. இதை பாட முதல்; நூலின் ஐநூறு பாடல்களையும் பாடி நயந்தேன். அவற்றில் அடங்கிய கவிதை நயத்தால இலக்கிய உணர்வுற்றேன். வாழ்க்கை நெறி அறிந்தேன் . பின்னர் அறிந்த அகப் பொருட் தத்துவத்தைத் தனது மெய்யிலே கொண்டிலங்கும் பரம் பொருளை இவ்வாறு துதித்தேன்.

இதைவிட வேறு ஏதாவது என்பாற் தெரிய வேண்டின் எவரும் கடாவுக.

(அப்போது இலக்கிய வரலாற்று ஆய்வாளன்
கால வழுதி எழுந்து;)

ஐயன்மிர்! இன்றுள்ள தமிழ்ப் பாடல்களில் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் கடைச் சங்க காலத்தனவாக விளங்குகின்றன. இவற்றுள் பத்துப் பாட்டில் எதிலும் கடவுள் வாழ்த்தெனும் இணைப்பு புறதகாகச் சேர்க்கப்பட்டில. ஆனல எட்டுத் தொகையுள் ஆறு நூல்களில் கடவுள் வாழ்த்தென ஒவ்வொரு பா இணைந்துள. அவற்றுளும் நறுந்தொகை, அக நானூறு, குறுந்தொகை, ஐங்குறு நூறு ஆதிய நான்கு நூல்க ளுக்கு நீங்கள் கடவுள் வாழ்த்து வழங்கியுள்ளீர்கள், கலித் தொகைக்கும் புற நானூற்றுக்கும் கடவுள் வாழ்த்துள ஆயினும்

பதிற்றுப் பத்தின் ஆரம்பப் பகுதி கிடையாத காரணத்தால் அதற்கு கடவுள் வாழ்த்து வழங்கப்பட்டதா இன்றெனவென அறிகிலோம். எஞ்சிய பரிபாடலின் முதற் பாடலே, திருமாலைப்பற்றி அமைவதால் அதுவே கடவுள் வாழ்த்தாகிறது. இந்நிலையில் ஐயமொன்று எழுகிறது. கடவுள் வாழ்த்தியம்பல் சங்க கால வழக்குடையதா? இன்றேல் எஞ்ஞான்று இவ்வழக்கு ஆரம்பித்தது. இவ்வண் நினைக்கக் காரணம்; இக்கால நூல்கள் விநாயகர் துதி, சிவன் துதி, முருகன் துதி, திருமால் துதி, சரஸ்வதி துதி எனப் பல கடவுளர்களைத் துதித்த பின்னரே படைக்கப்படுகின்றன. நான்கு பக்கம் நூலாக இருக்கும். அதன் இரு மடங்கு கடவுள் வணக்கமாக இடம் பெறும். இவ்வாறு கடவுள் வாழ்த்து மரபு வளர்ச்சி அடைந்துள்ளது. இதுபற்றிய உங்கள் எண்ணம் யாதென அறிய ஆவல் கொண்டுளோம்.

அதற்குப் பாரதம் பாடிய பெருந்தேவனர்; ஆதித் தமிழர் இவ்வுலகின் தோற்றமும் ஒழுங்கான இயக்கமும் ஞாயிறின் சக்தியாலெனும் அறிவியல் அடிப்படையில் அறிந்திருந்தனர். அந்தப் பயன்தரும், நலன் தருஞ் சக்தியை வணங்கிலர், ஆனல் நன்றியுடன் போற்றினர். அறிவியல் வளர்ந்து அதில் வானவியல் நுட்பம் வளர்ந்தபோது; ஞாயிறு தானுகத் தோன்றவில்லை, அதை உண்டாக்கிய வேறு ஒரு மகா சக்தி உண்டென்று உணரப்பட்டது. அறியப்படாத அச் சக்தி, ஐம் புலனுக் கெட்டாத மறை பொருளென்றும், அழியாத, நிலையான. ஒரே பொருட் தன்மையாலான எட்டுக் குணத்தைக் கொண்டது. அதன் பெயர் இறை. அதன் இயல்புகளை உணர்த்துவதி மறையென உணர்ந்தனர். அதன் வடிவமே கடவுட் தத்துவமானது. இச் சக்தி உலகின் முழு முதலான காரணத்தால ஆரம்பத்தில் போற்றப்பட்டது, இந்தப் போற்றுதல் வணக்க நிலை அடைந்து, வழிபாட்டு நிலையாக வளர்ந்துள்ளது. சங்க காலப் பாடல்களில், பத்துப்பாட்டுப் பனுவல்களின் முதற் செய்யுள்களின் சேதியில் போற்றி, நன்றி மொழிதல் மறைமுகமாக இடம்பெறுவதைக காணலாம். எங்கள் காலத்து நூற்களில புறச் செய்யுளாகக் கடவுள் வாழ்த்து இடம் பெற்றன. வள்ளுவர் காலத்தில் நூலுட் பொருளாகி, பகவன் முதற்கே உலகு எனவாயிற்று. ஆகவே தமிழன் என்று பகுத்தறிவுற்றதே அன்றே தன்னை ஆட்

கொளும் அதன் செயலே உணரத் தலைப்பட்டான். அந்தச் சக்தியை பயன்படுத்துவார்க்குப் பக்கத் துணையாக இருக்குமென்ற நம்பிக்கை கொண்டான். அதன் பயன்பாடே கடவுள் வாழ்த்தி என்பது என் சிந்தனை. ஏன் ஆய்வாளரே, தமிழ் இலக்கியங்களில் கடவுள் வாழ்த்து என ஆய்வை நீங்கள் மேற்கொளலாமே. அந்த ஆய்வினுல் தமிழரின் கடவுட் கொள்கையின் பரிமாணங்கள் தெளிவாகுமே எனச் சொல்லி மறைந்தார்;

இந்தக் காட்சியை வில்லிசைப் பாடலாக வழங்கத் தக்க முறையில் நெறிப்படுத்தி உள்ளோம். அதை ஆரம்பிக்கத் தமிழ இன வாழ்த்தைப் பாடுவோமாக.

ஆதி உயிர்கள் அகிலத்தில் உயிர்க்க
அனல்தட்ப நிலைகொள் அட்சக் கோட்டின்
அருகமை தரையில் அவதரித் தெழுந்த
பெருநில லெமூரியாப் பிறழ்வின் முன்வாழ்
இனமதே தமிழின் இயல்புறு குலமாய்
மனதில் உடலில் மற்றவர் வாழ்ககை
நெறியில் தமிழாய் நிலைத்த தமிழ்ப்புலம்
பறித்த கடல்கோள் பலதால் சுருங்கி
குமரிக் கண்டமாய்க் குறுகிய குவலயம்
தமிழகம் இலங்கைத் தகைகொள் மண்ணில்
அமிழ்தெனத் தமிழை அணைதர வாழ்ந்து
ஊழி பலவாய் உலகிற் சிறந்தாய்
வாழி தமிழே வளர்கநின் தமிழினம்
வாழி தமிழ் நெறி வாழ்க வாழ்கவே

பிரிந்து சென்ற தன் தலைவன் செலலின்முன். கார் காலம் வருமுன் நான் செல்லும்பணி முடித்துத் திரும்பி வருவேன் என்பது பொய்யுறக் கார்காலம் தொடங்கிற்று. அதனுல் தலைவி தவித்திருந்தாள், ஆனுல் தலைவன் உரிய காலத்திற் திரும்பினன். அதை அறிந்த தோழி அவளிடம் சென்று அந்த நல்ல சேதியை உரைக்க முதல் எப்படி எடுத்து உரைக் கலாம். எவ்வழி உரைப்பின் அவள் உவப்பாள் என ஆலோ சித்துக் குடுகுடுப்பைக் காரன் நல்ல கால வாக்குச் சொல் வதுபோல அவளே அண்மி;

தலைமகளே! நல்ல காலம் வந்ததே, நல்ல காலம் வந்து விட்டதே. சொல்லடி ஐக்கம்மா நல்ல சேதி சொல்லடி. விலங்குகள் புதர்களுள்ள புகுந்துறங்க, வரகுக் கதிர்கள்

முதிர, பெரிய மலைகள் தனிமையாற் கதற, கார்காலம் வந்து விட்டதே. அதுமட்டுமா அழகிய கண்களை உடைய அம்மா! உங்களுக்கும் நல்ல காலம் வந்ததே! உங்களைப் பிரிந்து வாழ்ந்த உன் கணவர் உன் தோள்களை இணையப் போகிற நல்ல காலம் வந்துவிட்டதே என்றாள்

மரபுதல் சேர வரகினர் சிறப்ப
மாமலை புலம்பக் கார்கலித் தலைப்பப்
பேரமர்க் கண்ணி நிற்பிரிந் துறைநர்
தோடுணை யாக வந்தனர்
போதவிழ் கூந்தலும் பூவிரும் புகவே 496

அதைக் கேட்ட தலைவி இவள் என்ன குடுகுடுப்பைச் குறி கூறுகிறாளே இதன் பொருள் என்ன என வியந்து. பாங்கியே உனக்கென்ன தலையின் இறுக்கம் தளர்ந்து விட்டதா? என்ன சொல்கிறாய் எனக் கேட்க. தோழி தொடர்ந்து;

அம்மா! நல்ல காலம் வந்ததே, நல்ல காலம் வந்து விடடதே! கொன்றை மரங்களில் குறுகிய மாலையாக, அதன மலர்கள தொங்க. உயர்ந்த செம்புற்றுகளில் இருந்து ஈயல்கள் கிழம்பிப் பறக்க. விலங்குகள் உணவருந்தலைத் தவிர்க்கக் கார் காலம் வந்ததே! பேரழகியே நீ தனித்திருக்க விட்டுப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி விட்டாரெனச் சொல்லடி ஐக்கம்மா!

குறும்பல் கோதை கொன்றை மலர
நெடுஞ்செம் புற்ற மீயல் பசர
மாபசி மறுப்பக் கார்தொடங் கின்றே
பேரிய லரிவைநின் றுள்ளிய
போர்வெங் குருசில் சென்ற வாறே 497

ஐக்கம்மா; நல்ல சேதி சொல்லடி நல்ல சேதி அம்மாவுக்குச் சொல்லு. அம்மாவுக்கு நல்ல காலம் பிறக்கிறது. நலல காலம் பிறக்கிறது. அம்மா, மேலுஞ் ஐக்கம்மா சொல்லுது. அது சொன்னுற் பொய்க்காது. ஆகவே அது சொல்வதைக் கேள், நான் சொல்வதெல்லாம் நடக்கப்போகின்ற நல்ல காலம் வந்தே விட்டது.

நலன் இழந்த உன் தோள்கள் வடிவுற்றன. நெகிழ்ந்த ஆபர ணங்கள் இறுகி வளத்தைக் காட்டின. நீண்ட செவ்வரி படர்ந்த கண்கள் வனப்புற்றன. அம்மா! இவைகளை நீ மீளப்பெற உந்தன் தலைவரை கொம்பன் யானைப்படை நடாத்திம் அரசன்

அரசபணியில் இருந்து விடுத்து விட்டடார். அதனல் உயர்ந்த தேரை செலுத்தி குறிஞ்சி நாடன் வந்து விட்டார்.

தோள்கவி னெய்தின தொடிநிலை நின்றன
நீள்வரி நெடுங்கண் வாள்வனப் புற்றன
வேந்துகோட் டியாகின வேந்துதொழில்
விரைசெல னெடுந்தேர் கடைஇ
வரையக நாடன் வந்த மாறே 498

என்ன விளையாடுகின்றனையா. பூனைக்கு வினையாட்டு, எலிக்குத் திண்டாட்டம் என்று அறிகிலையோ. என்னை எள்ளி நகையாடும் இந்த வினையாட்டை உடனே நிறுத்துக என்று தலைவி சினந்தாள். அதைப் பொருட்படுத்தாத தோழியோ தொடர்ந்து;

அம்மா, நல்ல காலம் பிறந்ததே நல்ல காலம் பிறந்ததே, பிடவம் மலர்கின்றதே! செம்முல்லை அரும்புகள அலர்கின்றதே. அவற்றையெலாம் நனைக்க முல்லைக் காட்டில் கார்காலம் வந்துவிட்டதே! பிரிந்து சென்றவர் தன் பிரிவால் வருந்துவாள் எனத் தான் பணி செயச் சென்ற இடத்தே போர்த் தொழிலில் மேலுந் தரிக்காது, இனிய சொல் மொழியும் நீ இழந்த நலன்களை யெல்லாம் உனக்குத தர வருகின்றார். நான் சொல்வது இன்னுஞ் சில நாளிகையில் நிகழப் போகிறதே!

பிடவ மலரத் தளவ நகையக்
கார்கவின் கொண்ட கானங் காணின்
வருந்துவள் பெரிதென வருந்தொழிற் ககலாது
வந்தன ரானங் காதல
ரந்திங் கிளவிநின் னுய்நலங் கொண்டே 499

கொன்றைப் பூவிற் பசந்த வுண்கண்
குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத்
தொல்கவின் பெற்றன விவட்கே வெல்போர்
வியனெடும் பாசறை நீடிய
வயமான் றேன்றனீ வந்த மாறே 500

நல்லவை வந்தன, நல்லவை வந்தன. உன நல்ல மனதிற்கு எல்லா நலன்களும் வந்து கொண்டிருக்கிறது. கைவிட்டுப் போன பொருள் கதவடியில் வந்து காத்து நிற்கிறது. ஐகம்மா சொல்கிறுள் . கொன்றை மலர்போல பசந்த உன் கண்கள் மலைச் சுனையில் மலர்ந்த நெய்தல்போல நலன்பெறப் போகிறது. அதோ அங்கே பார். யார் வந்துளார் என்று கூர்ந்து பார்.

யார் வந்துளார் என்று கூர்ந்து பார்.பாசறையிற் தங்கி பகை வென்று விறல் கொண்டு வெற்றியுடன் திரும்பிய காதலர் இதோ வாசலண்டை வந்து விட்டார் காண்க. ஐக்கம்மா சொன்னது பலித்து, நல்ல காலம் வந்ததென்று கண்களைத் திருப்பிப் பார். எனச் சொல்லத் திருப்பிய முகத்திற் கணவனைக கண்ட கண்கள் ஆச்சரியததால் அகல விரிந்தன. உதடுகள் உள்ளத்து உவகையைப் புன்னகையாக உமிழ்ந்தன. பிரிந்தவர் கூடினர் பேசத் தொடங்கினர்.

அவையோரே ஐங்குறு நூறில் அடங்கிய அகப்பொருள் நயத்தையும், அதைக் கூறும் கவி நடைகளையும், பல்லாயிரம் வருடங்கள கழிந்த பின்னரும் நாம் அறிந்து தெளிந்து, அதன் பொருள் நுகர்ந்து இன்று இன்புறுகிறோம் எனில் அதற்கு இருவரின் பணி, தமிழ் உள்ளவரை நினைக்கப்படும். அவர் களுள் ஒருவர் அதைத் தொகுப்பித்த, முத்தமிழ் நாடுகளில் முதன்மையாக வைக்கப்பட்டுள்ள சேர நாட்டின் மன்னர், அவர் உங்கள் மனத் திரையில் தோன்ற வருகிறார். மன்னுதி மன்னர் சேர மன்னர் பாச றையிற் தங்கி பகை வென்று விறல் கொண்டு வருகிறார் பராக்! . யானைக்கட் சேய் என மன்னர்களால் மதிக்கப்படும் மன்னர் வருகிறார் பராக் பராக்! மாந்தரஞ் சேரல் வருகிறார் பராக்! பராக்! பராக்!, , இரும் பொறை இகம் போற்றும் வேந்தர்க்கு வேந்தன் அவைக்கு வருகிறார் பராக்.

மன்னன் வந்ததும் அவையோர் எழுந்து நிற்க மன்னர் ;

தமிழ் மக்களே, நலமுறுக. தமிழ் இனம் வையகமுள்ளவரை மேலொங்குக. தமிழ் இன்பம் அமிழ்தாகி மேம்படுக. அமருங்கள் .என வாழ்த்தி ஆசனத்தில் அமர்கிறார்.

புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் எங்கள் அவையில் வெறுமனே புலவராக மட்டும் விளங்கவில்லை. என் இனிய நண்பனுகவும் விளங்கினர். என் பிரிவு தாழாமல், வடக்கிருந்து வையக வாழ்வை நீத்து வந்து என்னுடன் இணைந்த நட்பின் சின்னமாகவும் இலங்கினர். இடைக்கிடை அவர் தன் கவிகளால் எங்களுக்குப் பா நயம் ஊட்டுவதிலும் பார்க்கக் கற்றுரைக் கற்றுரே காமுறுவார் என்பதற்கேற்ப தினமும் சங்கப் பாவலர்களின் பாடலகளைச் செப்பிச் செவிக்கு உணவீந்தார். அப்படியாக அக்காலத்திற் திரட்டிய பல பாவரிப்

பாடற் தொகுப்பாளர்கள் கைவிட்ட ஆறடிப் பெருமையும் மூன்றடிச் சிறுமையுங் கொண்ட 500 பாக்களைத் திரட்டி வைத்திருந்தார்.

தெள்ளு தமிழ் மாந்தி, எதிர் காலச் சந்ததியினரும் காலங் காலமாக இந்த இன்பத்தைத் துய்க்கும் வண்ணம் அவற்றைத் தொகுத்துப் பாதுகாக்க வேட்கையுற்றார். அதை நிறைவேற்ற நான் பக்க பலமாக இருந்தேன். அவ்வாறு தொகுத்து மக்களால் நயக்கப்பட்ட பாடல்கள் இற்றையத் தமிழர்க்குக் கடினமாக இருப்பதாகப் பலர் சொல்லக் கேட்ட போது பதைத்தேன். ஆனல் ஐங்குறு நூற்று அரங்கினர், நாடகத் தமிழ் நடையில் அவற்றைக் காட்சிப்படுத்தப் பார்த்தோர் இலகுவான தமிழாக பன்நயம் பயக்கும் பாடல்களாக நுகர்ந்த காட்சியைக் கண்ணுற்று உள்ளம் நெகிழ்ந்தேன். என்னுற் தொகுப்பிக்கப்பட்ட இந்த நற்தமிழ்ப் பாடல்கள் நாளடைவில் மங்கி மறைந்து விடுமோவென நலிந்த என் மனம் இத்தகைய திருப்பத்தைக் கண்ட பின், தமிழ் இனம் தாரணியில் நிலைக்கு மட்டும் சங்கத் தமிழ் என்றும் சரியாது, மேலும் மேலும், பொங்கி மக்கள் மனதிற் பூத்துக் குலுங்கும் என்று பூரிக் கின்றேன். தமிழர் நலம் பெறத், தமிழர் நானிலத்திற் பரந்து தமிழ் செய்யச் செந்தமிழ் ஓசை திக்கெட்டும் பரவ நானிலம் புரக்கும் ஞாயிற்றைப் போற்றுவோம். சபை கலைவதாகுக, என்று வாழ்த்த;

காட்சி கரைகிறது.

தலைவன் தலைவியைக கண்ட போதே அவர்கள் ஒன்று சேர்ந் தனர். அங்கே தலைமகன் தலைமகளின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு;

தலைவியே/ கார் கால வரவால் நீ வருந்தி நொந்து வாடுவாய் என்ற வருந்தும் உள்ளத்துடன், என்னுல் உனக்கு ஏற்பட்ட துன்பங்களை அகற்ற விரைந்து வந்துள்ளேன்.

காரெதிர் காலையா மோவின்று நலிய
நொந்துநொந் துயவு முள்ளமொடு
வந்தென மடந்தைநின் னோர்தர விரைந்தே 491

நின்னே போலு மஞ்ஞை யால
னின்னுத னறு முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க

பின்னருங் கூந்த னன்னலம் புகீனய
நின்னே யுள்ளி வந்தென
னன்னுத லரிவை காரினும் விரைந்தே 492

உன் சாயல் பெற்ற மயில் அகவி ஆட. உன் நெற்றியில் அணிந்த முல்லை மொட்டுகள் மலர்ந்து மணம்வீச, நீ மருள்வது போல விலங்குகள் அச்சமுற கார் காலம் விரைந்து வந்தது. அதனிலும் பார்க்க நான் உனைக் காணக் கடுகினேன்.

தலைவனே! பிரிவில் பெற்ற பெருந் துன்பம் நீங்கள் என் அருகில் வந்ததும் அகன்றது. எனச் சொல்லி அவன் மார்பிற் சாய்ந்து துவழ்ந்து ஆறினாள.

ஏறுமுரண் சிறப்ப வேறெதி ரிரங்க
மாதர் மான்பிணை மறியொடு மறுகக்
கார்தொடங் கின்றே காலை
நேரிறை முன்கை றுள்ளியாம் வரவே 493

களிற்று யானைகள் தமது நீண்ட தந்தங்களால் மண்னை வாரி வீசிப் பிழிற, அதற்கு எதிரிடையாக வானில் இடி முழங்க, கலையும் பிடியும் பிணங்கக் கார்காலம் ஆரம்பித்தது, அழகுறு சந்துகொண்ட உனது முன்கை மெலிந்ததால் நெகிழ்ந்த வளையல்கள் நலத்தை மீளப் பெற நான் விரைந்து வந்தேன்

வண்டுகள் மலரில் பரக்கும் மகரந்தத்தின் வசமாகி ரீங்காரஞ் செய்யத், தேரைகள் ஒலிக்க, குளிர்ச்சியடைந்த முல்லை நிலத்தில் முல்லைக் கொடிகள் மலர்ந்து வனப்பீயக் கார்காலம் இன்பத்தை அளிக்க வந்துளது. என் பிரிவால் நீ படுந் துயரத்தை வெளிப்படுத்துங் குறிப்புகளை உணர்ந்த வந்து விட்டேனே, மேலும் ஏன் வருந்துகின்றனை என அவளின் வதனத்தைத் தாங்கி நோக்கினன்.

வண்டு தாதூதத் தேரை தெவிட்டத்
தண்கமழ் புறவின் முல்லை மலர
வின்புறுத் தன்று பொழுதே
நின்குறி வாய்ந்தனந் திர்கினிப் படரே 494

சென்னில மருங்கிற் பன்மலர தாஅய்ப்
புலம்பு ரீர்ந் தினிய வாயின புறவே
பின்னருங் கூந்த னன்னலம் புகீனய
வுள்ளுதொறுங் கலிழு நெஞ்சமொடு
முள்ளெயிற் றரிவையாம் வந்த மாதே 49

பயணிக்கும் பாதையின் இரு மருங்கும் பலவித நிற மலர்கள் வனப்பை நல்க, கோடை காலம் அளித்த துயரங்கள் எலாம் நீங்க முல்லை நிலம் கவினுற்றது. நினது கவலையாற் கலைந்து பரட்டை கொண்ட பின்னற் கூந்தலை எண்ணும்போது பொங்கும் நெஞ்சுடன் உன் வெண் பலலழகுற உனை நாடி வந்தேன். என ஈருடர் ஓருயிராக ஆரத் தழுவினன்.

மதங்கர் தலைவன்;

இத்துடன் ஐங்குறு நூறின் 500 பாடல்களையும் அவை எடுத்தியம்பிய ஐந்திணை வாழ்க்கை நெறிகளையும் இச்சிறிய அரங்கில் 50 நாடகங்களாகக் காட்சிப்படுத்தினேம். அதைக் கண்டு களித்தீர்கள். இறுதியாக இப்பாடல்களைத் தேடித் திரட்டித் தொகுத்து எட்டுத் தொகையில் மூன்றுவது இடத்தில் வைத்த புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் இந்நிகழ்வில் பங்கேற்று இனிது முடித்து வைப்பார். ஐங்குறு நூறு எனும் அகப்பொருட் தத்துவத்தைப் பலலாயிரம் வருடங்கள் கழிந்த பின்னரும் அகிலத்தார் அறிந்துணரவும் தம் வாழ்க்கையிற் கடைப்பிடித்து வாழவும் வழி வகுத்துத் தந்த அவரின் தமிழ் நெஞ்சத்தினைப் பாரட்டுவோமாக. 50 நாடகங்களையுங் கண்டு களித்தவர்கள் ஒரேயொரு குறை கூறினர்கள், அதை நான் உங்கள் முன்னிலையில் உரைப்பதிற் பெருமைப்படுகிறேன். இப்பாடல்களின சுவை மாந்தியபோது; புலவனுர் மேலும் பல பாடல்களைத் திரட்டி ஆயிரம் குறுநூறு எனத் தொகுத்திருப்பின் எவ்வளவு நன்றாக இருக்குமென்பதே அவர்கள் கூறிய பெருங் குறை... அய்யா! புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழாரே எங்கள் மனக்கண்ணிற் தோன்றி உங்கள் எண்ணங்களை உரை செய்யும்படி கேட்டுக் கொள்வதில் மனநிறைவுறுகிறேன்.

(கூடலூர்க் கிழார் அவையில் வந்து கையை உயர்த்தி)

தமிழ் நெறி உங்களைத் தலைமுறை தலைமுறையாகக் காக்குக. தமிழ் இனிது! தமிழில் இயல்வோர் நனி நாகரீகர். தமிழ முது உண்டவர் தாரணியிற் புகழுடம்புற்று நெடுங் காலம் நிலைப்பர். அப் பேறெலாம் உங்களை அடைவதாகுக.

இத் தொகுப்பில் ஐந்திணைகளை முன்பின் முரணுற வைத்துளேன் எனப் பலர் சொற்றியதை அறிவேன். ஆனால் அவர்கள் காப்பியர் வகுத்த திணை மரபின் படி இவை அமைந்தில என்பர். தொல் ஆசிரியர் நில அமைப்பின் படி வகுத்தார், ஆனால்

இங்கு அகப்பொருள் அடிப்படையில் வாழ்வோரின், வாழ்வியல் நெறி, உணர்வு இடம்பெறும் முறையில் திணை நிரைத்தேன். இறுதியாக முல்லையை வைத்து அதன் கருப்பொருளால் வாழ்க்கை இன்ப உச்ச நிலையைக் காட்டித் தொகுப்பை முழுமை செய்தேன். இதுவொன்றே இதில் திணைகள் இடம்பெற்றுள்ள முறைமை முறையானதென்பதை உணர்த்தும்.

நலம் பெறுக, நலமாற்றி வாழ்க. அதுவே நற்தமிழ்ப பண்பாகுக. என வாழ்த்தி மறைய;

மதங்கர் குழுவினர்

நிறைமொழி வாழ்த்து

கடல்கோள் உண்டுங் கரையாத் தமிழே
களப்பிர ரழித்தும் கவினுறு தமிழே
திடமுள இருதிணைத் தெளிவால் உலகில
உடலுள உறுதி ஊட்டிடு தமிழே
எங்கள் உள்ளத் திடைநீ உறைந்தாய்
எங்கள் வாழ்வில் தமிழ்நெறி ஆனாய்
உன்னில வளர்வோம் உன்னில் வாழ்வோம்

காட்சி கரைகிறது

முன்னெழினி அரங்கை மறைக்க

50 வது காட்சியுடன்
ஐங்குறு நூற்று அரங்கக் காட்சிகள்
நிறைவுற்றன.

======27.7.2008=====

செய்யுள் அகர வரிசை

(இலக்கங்கள் பக்கங்களைக் குறிப்பன.
சில செய்யுள்களன் முதல் வரிகள் ஒரே விதமாக
உள்ளதால் அதன் இரண்டாம் பா வரிவினுல்
அடையாங் காணபதற்காக அதன் முதலெழுத்து
அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது)

அஞ்சி லோதி 77
அஞ்சிறை வண்டி 382
அண்ணேர் புரு 191
அணங்குடை 156
அணிநடை யெரு 110
அத்த நீளிடை 298
அத்துப் பலவின் 289
அந்தச் செயலைத் 234
அந்திங் கிளவி 382
அம்பணத் தன் 76
அம்ம வாழி (கட) 69
அம்ம வாழி (குறு) 279
அமம வாழி (சிறு) 199
அம்ம வாழி (செ) 120
அம்ம வாழி (சூ) 122
அம்ம வாழி (ணு) 123
அம்ம வாழி (நல்) 125
அம்ம வாழி (நறு) 212
அம்ம வாழி (நன்) 195
அம்ம வாழி (நிர) 197
அம்ம வாழி (நீ) 124
அம்ம வாழி (நெ) 277
அம்ம வாழி (ப) 199
அம்ம வாழி பாண 104
அம்ம வாழி (பா) 194
அம்ம வாழி (பி) 278
அம்ம வாழி (பொ) 69
அம்ம வாழி (பொ) 69
அம்ம வாழி (பொ) 71
அம்ம வாழி (ம) 196
அம்ம வாழி (மற) 277
அம்ம வாழி (மா) 134
அம்ம வாழி (மின்) 124
அமம வாழி (மெ) 119
அம்ம வாழி (மெய்) 278
அம்ம வாழி (யரு) 133
அம்ம வாழி (ருள்) 279
அம்ம வாழி (ரொ) 69
அம்ம வாழி (லோ) 121
அம்ம வாழி (ளி) 197
அம்ம வாழி (வ) 198
அம்ம வாழி (வல்) 277
அம்ம வாழி (விலை) 278
அம்ம வாழி (வெ) 72
அம்ம வாழி (றன்) 72
அம்ம வாழி (னம்) 71
அம்ம வாழி (னய) 72
அம்ம வாழி (னெ) 277
அம்ம வாழி (ணே) 123
அம்ம வாழி (ஞெ) 72
அம்ம வாழியோ 97
அயல்புறந் தந்தி 64
அரசுபகை தணிக 359
அரும்படை ரவல 380
அரும்பொருள் 259
அரும்பொருள் வே 291
அலங்கிதழ் நெய் 164
அலங்குமழை 192
அலமர லாய 89
அலமர லாயமோ 90
அலமர லாயமோ 90
அவரை யருந்த 237
அவரோ வாரார் 283
அவரோ வா (கரு) 283
அவரோ வா (தி) 283
அவரோ வா (ந) 283
அவரோ வா (பு) 283
அவரோ வா (பொ) 285
அவரோ வா (ய) 284
அவரோ வா (யெ) 284
அவரோ வா (வ) 285
அவரோ வா (வே) 285
அவிர்கொடி கொ 268
அவலுறுந் தெரை 290
அள்ள லாடிய 63
அளிய தாமே 244
அழலவிர் நனந் 271
அறஞ்சா லியரோ 268
அறம்நனி சிறக்க 49
அறம்புரி செங்கோ 244
அறம்புரி யருமறை 304
அறியாமையின் 210
அறியே மல்லெ 205
அறிவளர் சிலம் 214
அன்னுய் வாழி 182
அன்னுய் வா (கி) 184
அன்னுய் வா (தா) 182
அன்னுய் வா (தே) 182
அன்னுய் வா (ந) 183
அன்னுய வா (நி) 184
அனனுய் வா (பா) 183
அன்னுய் வா (பு) 184
அன்னுய் வா (மா) 182
அன்னுய் வா (மு) 184
அன்னுய் வா (வ) 183
அன்னை தந்த 213
அன்னையு மறிந்த 202
அன்னை வாழி (சு) 120
அன்னை வா (ஞா) 119
அன்னை வா(ணை) 119
அன்னைவாழி (தா) 119
அன்னை வாழி (நீ) 118
அன்னை வாழி(மு) 120
அன்னை வாழி (றி) 119
அன்னை வாழி (னீ) 120
அன்னை வாழி (பொ)120
அறுகில் கால 59
ஆய்நலம் பரப்ப 267

ஆர்க்குர லெழிலி 332
ஆழ்வழக் கற்ற 272
ஆறுவனப் பெய்த 379
இதுமற் பிரிந்தோ 381
இதுவென் பாவை2 98
இதுவே மடநதை 334
இந்திர விழவிற் 62
இரவி ணை 154
இருஞ்சா யன்ன 58
இருநிலங் குளிர்ப் 365
இலங்குவளை தெ 172
இலங்குவீங் கெல் 174
இளம்பிறை யன் 226
ஈர்ம்பிணவு புணர் 290
உடலினே னல் 90
உண்டுறை யண 6
உயிர்கலந் தொன் 334
உலறுதலை பருந் 270
உள்ளார் கொல் 359
உள்ளுதற் கினிய 291
உறுவடி மாஅத் 89
உறுவடி மா (விரி) 188
எக்கர் ஞா (சு) 149
எக்கர் ஞா (தனி) 138
எக்கர் ஞாழ (து) 141
எக்கர் ஞாழ (ந) 138
எக்கர் ஞா (புண) 139
எக்கர ஞா (புள்) 137
எக்கர் ஞா (யினி) 143
எக்கர் ஞா (யோ) 138
எக்கர் ஞா (ரொ) 147
எக்கர் ஞா (வீயி) 148
எக்கர் மாஅத் 59
எமக்குநயந் தரு 157
எரிக்கொடிக சு 289
எரிகவர்ந் துண்ட 274
எரிமருள் வேங் 251
எருமை நல்லோ 108
எல்வளை நெகிழ 368
என்னு முள்ளின 295
ஏறுமுரண் சிறப் 391
ஐய வாயின 350
ஒண்சுடர்ப பாண் 323
ஒண்டொடி யரி 154
ஓங்குபூ வேழத் 57
கட்டளை யன்ன 189
கடல்சூழ் உலகை 364
கடற்கோ டறுத்த 173
கடற்கோடு செறி 170
கடுங்கட் காளை 307
கடும்பரி நெடுந்தே 339
கண்டனெ மலல 91
கண்டிரு ம (தெ) 129
கண்டிரு (தெண்) 130
கண்டிரு மல (மு) 128
கண்டிரு ம (யு) 129
கண்டிரு (யுரு) 130
கண்டிரு மல்(யொ) 128
கண்டிரு (யொண) 128
கண்டிரு (வண்) 129
கண்பொர விளங் 267
கணங்கொ ளரு 163
கதிரில நெடுவே 97
கரந்தையஞ் 66
கருங்கண் மராஅ 277
கருவிரன் மந்திக் 232
கருவிரன் மந் (பி) 236
கருங்கால் வே 188
கருங்கோட் (கா) 108
கருங்கோட் (நெ) 109
கரும்பி னெந்தி 81
கரும்பு நடு 90
கருவி வானங் 369
கருவி வானம் 381
கரைசேர் வேழம் 55
கல்லாக் கோவல 259
கல்லிவ ரிற்றி 233
கவிழ்மணி ரெரு 309
கள்ளி விடியற் 91
களிறு பிடிதழீஇ 260
காண்மதி பாண 133
காண்மதி பாண 135
காண்மதி (துறை) 135
காமங் கடவ 204
காயா கொன்றை 332
கார்செய் காலைப் 357
காரெதிர் கலையா 390
கானலம் பெருந் 174
கிழங்ககழ கேழ 229
குரங்கன தலைவன 235
குறவர் முன்றின் 235
குறுங்கை யிரும் 191
குறும்பல கோதை 387
குன்றக் குறவன் 217
குன்றக் கு (தே) 222
குன்றக் கு (ந) 221
குன்றக் கு (நு) 220
குன்றக் கு (ம) 220
குன்றக் கு (மெ) 218
குன்றக் கு (யி) 219
குன்றக் கு (யி) 221
குன்றக் குற (வ) 218
குன்றக் குற (ள) 220
குன்ற நாடன் 250
கூதி ராயிற் 76
கேட்டிசின் வாழி 83
கேழ லுழுதென 228
கையறு வீழ்ந்த 206
கைவல் சிறியாழ் 368
கொடிச்சி காக்கு 249
கொடிச்சி கூந்த 252
கொடிச்சி யின் 242
கொடிச்சிமி (பை) 244
கொடிப்பூ வேழ 56
கொண்கண் து 155
கொன்றைப் பூவி 388
கோடுரெல் வளை 173
கோடுபுலங் கொ 170
கோடுயர் பன்மலை 288
கோடுயர் பன்(நீ) 288
சாந்த மரத்த 189
சாயிறைப் பணை 379
சாரற் பலவின் 191
சாரற் புறத்த 242
சிரம்பின் வேதி 234
சிலம்புகமழ் கா 248
சிறுதினை மேய்ந் 224
சிறுகட் பன்றி 227
சிறுகட் ப (பெ) 228
சிறுதினை கொய்த 245
சிறுநணி வரை 159
சுரும்புணக் களி 205
சூதார் குறுந் 94
சூழநம் வம்மோ 267

மருநெலஞ் 66
செய்வினைப் பொ 305
செவியிற் கேட் 101
செந்நில மருங்கிற் 391
சேட்புல முன்னிய 306
சொல்லிய முயலி 297
சொல்லுமதி பா 375
ஞெலிகழை முழ 261
தண்புன லாடு 110
தண்ணறு நெய் 168
தவறில ராயினு 158
தளவின் பைங் 359
தழங்குரன் முரச 353
தன்பார்ப்புத 75
தன்னம ராய 296
தாஅ யிழந்த 228
தாய்சாய்ப் பிற 64
திண்டேர் தெ 81
திம்பெரும் பொ 76
திருந்திழை யரி 291
திரையிமி ழின் 153
திங்குழ லாம் 190
துணர்க்காய்க் 355
ணர்காய்க் (வதி) 357
துணையோர் செல் 78
துறந்ததற் கொ 311
துறையென் ன 80
தெரியிழை யரி 379
தெறுவ தம்ம 265
தேர்செல வழுங்க 341
தொழ்கவி னெய் 388
தோழுங் கூந்த 158
நம்முறு துயர 210
நயந்த காதலித் 324
நல்குமதி வாழி 159
நல்லோர் ஆங்க 305
நன்பொ னன்ன 227
நனிசேய்த் தென் 351
நன்று பெரிது 50
நன்றே காதலர் 431
நன்றே காத(குரு) 345
நன்றே கா (சுடு) 344
நன்றே காத (த) 345
நன்றே கா (நன்) 345
நன்றே கா (நில) 344
நன்றே காத (நீர்ப்) 344
நன்றே காத (மறி) 344
நன்றே காத(யா) 345
நன்றே காத (பை) 345
நன்றே பாண 133
நாடொறுங் கலி 296
நாணிலே மன்ற 134
நாரை நல்லிசை 165
நின்னுத னுறு 333
நின்னே போலு 391
நினக்கே யன்ற 77
நினைத்தொறுங் 296
நின்னென்று 134
நீடின மென்று 374
நீயுங் குருசிலே 375
நீர்நசைக் கூக்கி 298
நீரிரு வன்ன நிமி 364
நீரிறை கோழி 80
நுண்மழை தளி 272
நும்மனைச் சிலம்பு 313
நெடுங்கதிர் முளி 270
நெடும்பொறை 338
நெடுவரை மிசை 243
நெய்தலிருங் கழி 164
நெய்த லுண்க 167
நெய்த னறுமலர் 162
நெய்யோடு மய 190
நெருப்பவிர் கன 305
நொதும லாளர் 165
பகல்கொள் வி 81
பகலிற் றேன் 81
பகன்றைக் கண் 103
பகன்றை வான் 111
பகைவர் புல்லார் 43
பசியில் லாகுக 45
பண்பிலே மன்ற 134
பண்பும் பாயலு 158
பரதவர் நுழைய 155
பரியிடை நன் 55
பல்லிருங் கூ (செ) 338
பல்லூழ் நினை 295
பலர்புகழ் சிறப்பி 370
பலரிவ ணெல் 96
பழனக் கம்புள 83
பழனப் பன்மீ 91
பழனப் பாகன் 111
பணிமலர் நெடுங் 375
பாணர் முல்லை 325
பாயல் கொண்ட 265
பால்பல வூறுக 43
பிடவ மலரத் 388
பிணிவீடு பெறுக 352
பின்னிருங் கூந் 243
புகழ்சால் சிறப்பி 351
புணர்ந்த காதலி 322
புதல்வற் கவைஇ 326
புதன்மிசை நறும 364
புதுக் கலத் 57
புதுக்கலத் தன்ன 259
புதுப்புன லாடி 98
புலக்குல மல்லே 98
புலிகொல் பெண் 229
புலிப்பொறி வேங் 311
புள்ளு மாவும் 333
புறவணி நாடன் 340
புன்கண் யானை 304
புன்புறப் பேடை 339
புன்னை நுண்டா 189
புனலாடு மகளி 111
பூம்பிழை நெகிழ 365
பெய்பனி நலிய 357
பெய்மணன் முற் 213
பெருங்கடற் (கரு) 148
பெருங்கடற் (து) 148
பெருங்கடற் (நீ) 148
பெருங்கடற் (பெ) 151
பெருங்கடற் (ய) 150
பெருங்கடற் (யி) 148
பெருங்கடற் (யி) 150
பெருங்கடற் (யி) 151
பெருங்கடற் (யி) 151
பெருங்கடற் (வரி) 149
பெருஞ்சின வேந்த 350
பெருஞ்சினவே(னி) 358
பெருந்தோண் மட 351
பெரும்புன் மாலை 381
பெருவரை வேங் 188
பேரமர் மலர்க்க 340
பைஞ்சாய்க் கூ 96
பைதல மல்லே 134

பைந்தினை யுணங் 365
பொய்கை பள்ளி 89
பொய்படு பறியா 213
பொய்யா மரபி 211
பொலம்பகம் பா 262
பொறிவரித் தடக் 272
பொன்செய் பா 266
பொன்னென மல 331
போதார் கூந்த 203
போதார் நறுந்து 330
மகிழ்நன் மாண் 104
மடவ ளம்ம நீ 90
மணத்தலை யரி 102
மந்திக் கணவன் 234
புள்ளு மறியாப் 312
மந்திக் காதலன் 236
மயிலக ளாலக் 251
மயிலக ளாலப் 252
மரபுதல சேர 387
மழைவர வறியா 251
மள்ளர் கொட்டின் 295
மள்ள ரன்ன 112
மள்ள ரன்ன (ம) 309
மறியிடைப் படு 401
மறுவி றுரவிச் 309
மனைநடு வயலை 55
மாண்பில் கொள் 313
மாத ருண்கண் 324
மாமழை டியூத் 340
மாரிகடிகொள 66
மாரி வாய்க்க 50
மால்வேள் ளோ 258
மாலை முன்றிற் 326
மாலை வெண்காழ் 341
மின்னவிர் வயங் 203
முரசுமா றிரட்டு 353
முரம்புகண் ணுடை 353
முல்லை நாறுங் 352
முள்ளசை யிலவ 267
முள்ளி நீடிய 62
முள்ளி வேரலை 63
முள்ளெயிற்று 77
முளிவயிர்ப் பறி 311
மெல்லிறைப் பணை 360
மென்றினை மே 226
மையுறு சுடர்நுத 370
யாகமுறை செய் 50
யாங்குவல் லுகை 202
யானெவன் செய் 131
வண்டு தாதூர்த் 391
வண்ணவொண் 95
வயலைச் செங் 80
வயன்மல ராம் 94
வரிநுணல் கறங் 365
வருவது கொல் 250
வருவை யல்லை 203
வலம்புரி யுழுத 172
வள்ளெயிற்றுக் 271
வளைபடு முத்தம் 171
வளையணி முன் 174
வறந்த ஞாலம் 357
வன்கட கானவன் 241
வாணுத லரிவை 324
வார்கோட்டு வய 42
வான்பிசிர்க் கரு 363
வானம் பாடி 334
விசும்பிழி தோ 95
விண்டுவன்ன 83
விரிந்த வேங்கை 249
விளைக வயலே 43
வெகுண்டன 101
வெண்ணுதற் 102
வெண்டலைக் கு 103
வெந்துக ளாகிய 273
வெல்போர்க் குரி 260
வெள்ள வரம்பி 240
வெள்ளாங் (காலை) 145
வெள்ளாங் (கான) 142
வெள்ளாங் (கான) 145
வெள்ளாங் (கை) 142
வெள்ளாங் (பசி) 143
வெள்ளாங் (நொந்) 143
வெள்ளாங் (ப) 144
வெள்ளாங் (ப) 142
வெள்ளாங் (மி) 142
வெள்ளாங் யுளர 145
வெறிசெறித் தன 211
வேங்கை கொய் 311
வேந்துபகை 48
வெந்துவிடு விளுத் 364
வேப்புதினை யன் 66
வேய்வனப் பிழந்த 312
வேனி னீங்கக் 380
வேனிற் றிங்கள் 262

கனடா - தொரன்ரோ

சீவன் பதிப்பகத்தின்

2007ம் ஆண்டுப் பருவகாலச் சிறப்பு வெளியீடுகள்

வசந்த கால வெளியீடு

1. கவியோகி சுத்தானந்த பாரதியாரின்
பராத சக்தி மகா காவியத்தின் ஆய்வுக் கண்ணோட்டம்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் தவநெறி, தமிழ் உணர்வு, விடுதலை வேட்கை, இலக்கியப் படைப்புகள், கவிதை யாக்க யாப்பு என்பவற்றில் காலத்துக்கேற்ற புதுமைகளைப் புகுத்தி இறவாப் புகழ் கொண்டவர். தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, பிரஞ்சு ஆதிய பன் மொழிகளில் 264 நூல்களைப்படைத்த பெருமை பூண்டவர். அவரது மகா காவியமான பாரத சக்தி மகா காவியத்தின் நயங்களை உணர்ந்து நுகர்தற்கான ஆய்வுக் கண்ணோட்ட நோக்குடைய ஆய்வு நூல்.

கோடை கால வெளியீடு

2. நைடதம் நமக்குமோர் ஔடதம்.

மன்னர் அதிவீரராம பாண்டியரின் நைடதம் புலவர்க்கோர் ஔடதம் என்ற புகழுரை கொண்டு தமிழ் இலக்கிய உலகில் போற்றப் படுவது. அதற்கான காரணத்தை ஆராய்ந்து கற்போர் யாவருக்கும் ஔடத நூல்.

இலை உதிர் கால வெளியீடு

3. கல்லாடங் கற்று மல்லாடுவோம் சொல்லாடுவோம்

கல்லாடம் கற்றோருடன் சொல்லாடாதே, என்ற என்ற அளவிற்கு கற்பவர்க்கு காலாகாலமாக ஊட்டப்படும் அச்சத்தை நீக்கும் முயற்சியுடன் அதில் உள்ள சொல்லாட்சி, கற்பனை வளம்,, அகத்திணைச் செழிப்பு என்பவற்றில் உள்ள செம்மைகளின் பார்வை நூல்.

2008ம் ஆண்டின் பருவ கால வெளியீடுகள்

வசந்த கால வெளியீடு.

1. சீவகசிந்தாமணி ஆய்வுச் சிந்தனைகள்;

ஐம் பெருங் காப்பியங்களுள் ஒன்றான, சீவக சிந்தாமணியின் இலக்கிய நோக்கையும் போக்கையும் காவியச் சிறப்பையும் ஆய்து உணரும் சிந்தனைக் கட்டுரைகள் கொண்ட இலக்கிய ஆய்வு நூல்

தூகோடை கால வெளியீடு

2. பெருங்கதை ஆய்வுப் பெற்றிகள்.

காப்பியங்களுள் வெகுவாகப் பேசப்படும் கொங்குவேண் மாக்கதை எனும் சங்கம் மருவிய கால இலக்கியத்தின் தமிழ் வளததை ஆய்ந்து அவற்றின் பெற்றிகளைப் பேசும் நூல்

இலை உதிர் கால வெளியீடு

3. ஐங்குறு நூற்றில் ஓர் ஆய்வு அரங்கம்

சங்கப் பாடல்களில் எட்டுத் தொகையுள் மூன்றுவதாக இடம் பெற்றுள்ள ஐங்குறு நூறு எனும் நூலில் பொதிந்துள்ள தமிழர் அக வாழ்க்கைச் சிறப்புகளை ஆராய்ந்து இலக்கிய மேடையில் அரங்கேற்றும் பல கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

குளிர் கால வெளியீடுகள்

4. மறத் தமிழர்ப் போரியல் மரபுகள் - புறப்பொருள் விருத்தம்;

சங்க காலம் இருந்து இற்றை வரை தமிழரின் போர் முறைகள் எவ்வாறு அமைந்திருந்தன. போரின் காரண காரியங்களிலும் அதைப் புரியும் வழிவகைகளிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்களையும் வளர்ச்சியையும் போரியல் நூல்களின் பொருட்களொடு ஆராய்ந்து விருத்தப் பாக்களால் கூறும் போரியல் நூல். புறப் பொருள் வெண்பாவில் புகலப்படாத பல தமிழர் போரியல்பு வழிகளைக் கூறும் புதுப் படைப்பு.

(இவை யாவும் ஈழத்துப் பூராடனர் கலாநிதி
க. தா.செல்வராசகோபால் அவர்களின் படைப்புகள்)

குளிர் கால வெளியீடு

4. ஒன்பதாவது கடற்கோள் ஓவியம்

2004ம ஆண்டில் நடந்த சுனுமி எனும் பேரலை இயற்கைச் சீற்றத்தைத் தமிழகத்தை உண்ட ஒன்பதாவது கடல்கோளாக வரலாற்றுச் சான்றுடன் நிறுவி, அதன் கோரத்தை கவிகளாகப் படைத்துள்ள புயியல், வளியியல் ஆழியியல் சார்ந்த இலக்கிய அறிவியல் நூல்.

(இவைகள் கலாநிதி ஈழத்துப்பூராடனரின் இலக்கிய ஆய்வு நூல்கள், பத்திரிகைகளிலும் தொடர் கட்டுரைகளாக வெளிவந்து வசகர்களிடை அறிமுகமானவை.)

மேற் கூறப்பட்ட ஒவ்வொரு நூல்களும் தனித்தனி 20 கனடிய டாலர்கள் விலை உள்ளவை.
நான்கையும் கொள்வனவு செய்வோர் 60 கனடிய டாலர் விலையிற் பெறலாம். தபாற் செலவு தனி.

விரும்புவோர் முற்கூட்டியே பின் வரும்; முகவரியில்

SEEVAN PUBLISHERS
 # 3 . 1292 Sherwood Mills Blvd
MISSISSAUGA L5V 1S6
Ont Canada

50 வீதப் பணததை செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம்.
(பணஞ் செலுத்த வேண்டிய பெயர்; **JASMINE SELVA**

வட அமரிக்காவில் மின்கணனி அச்சமைப்பைத் தமிழில் முதன் முதல் 1985 இல் அறிமுகப்படுத்தி 200 க்கும் மேற்பட்ட தமிழ் நூல்களையும் 60 தொகுதிகள் கொண்ட தமிழ்த் திரைப் படக் களஞ்சியத்தையும் படைத்துப் பதிப்பித்து வெளியிட்டு வரும் தமிழ் நூற் பதிப்பகம். எங்கள் நூல்கள் உலகின் தமிழ்ப் பல்கலைக் கழகங்களிலும் முக்கிய நூலகங்களிலும் பார்வைக்குக் கிடைக்கும். -
-= பதிப்பகத்தார்.

A Paramount Dedication

To Guru

Late P.D.AINGARAPILLAI

By his humble Student

Dr K. D. Selvarajagopal

This is an extraction from the Index of the book titled INGURU NOORU ARANGAM Play)

தமிழ்ப் பணி செய்து கிடக்க என்னை அரவணைத்துக் காத்த கரங்கள் 3.



1943ம் ஆண்டு வைகாசி மாதம் 12ந் தினத்தன்று என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. அந்தத் திருப்பு முனையின் பேருகத்தான், இன்று உலகளாவிய அளவில் தமிழ்ப் பணியும் இலக்கியப் பணியுமாற்றும் நிலையில் இயங்கிக் கொண்டு இருக்கிறேன். அததகைய திசை மாறறம் என் வாழ்வில் ஏற்படாதிருந்திருப்பின் ஆங்கிலக் கல்வி கற்று ஏதோ ஒரு அரசினர் திணைக் களத் தொழிலில் அமர்ந்து பல்லாயிரக்

கணக்கானவர்கள் உலகத்தில, உண்டு, உறங்கி, உடுப்பதைத் தவிர ஏதும் சிறிய சாதனை கூடச் செய்யாமல், இருந்த இடம் தெரியாமல் வருடந் தோறும் மறைந்து போவதுபோல நானும் மண்ணிற் சங்கமாகுந் தகுதியைப் பெற்றிருக்கலாம்.

அத் திருப்பத்தையிட்டுப் பரந்த அளவில் தெரிந்து கொள்ள வேண்டுமானால் *1930 - 1950* களில் உலகின் தமிழர் வாழ் இடங்களில் நடைமுறையில் இருந்த வாழ்க்கை நெறி முறைபற்றி முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். காரணம் இக்கால கட்டத்திற்தான் கிழக்கத்திய நாடுகளில் மேற்கத்திய வாழ்க்கை முறை ஊடுருவத் தொடங்கி வளரத் தொடங்கிற்று. இப் பின்புலத்திற்தான் நான் இங்கு சொல்லப் போகும் பொருள் வாசகர்களுக்குத் தெளிவாகப் புரியும்.

சுமை தாங்கி எனும் கிறிஸ்தவ சஞ்சிகையில் கிறிஸதவ மிசனரிமாரின் சமுதாயப் பணி என்ற கட்டுரைத் தொடரை வரைவதற்கு வேண்டிய வரலாற்று ஆதாரங்களைத் தேடித் திரட்டும் முயற்சியில் இலங்கையின் கத்தோலிக்க மத பீடங்கள், கத்தோலிக்கரல்லாத மெதடிஸ்த, ஏனைய கிறிஸ்தவ மத பீடங்கள என்பவற்றின் ஆவண காப்பகங்களையும் நூலகங்களையுந் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஆங்கிருந்து கிடைத்த தகவல்களைக் கொண்டே அந்தக் கட்டுரைத் தொடர் கட்டுரைகளைப் படைத்தேன். இக்கட்டுரைகளின் தொகுப்பு கிறிஸ்தவ மிசனரிமாரின் சமுதாயப் பணிகள் என்ற நூலாக *1985* இல் வெளி வந்தது..

மேற் கூறிய தேடற் திரட்டலின்போது,மேற் கூறிய தேடற் திரட்டலின்போது கிழக்கத்திய நாடுகளில் கிறிஸ்தவ மிசனரிமாரின் கல்விச் சேவை, உலக நாடுகளில் கிறிஸ்தவ மிசனரிமாரின் கல்விச் சேவை என்ற தலைப்பில் வெளி வந்திருந்த இரண்டு அறிக்கை நூல்களின் பல தொகுதி களைப் படித்தறிய முடிந்தது. இது இங்கிலாந்திற் தலைமை யகத்தையுடைய கிறிஸ்தவ திருச்சபையின் கல்வி இலக்கியப் பகுதியாரின் வெளியீடுகளாம். அவற்றில்; உலக நாடுகளின் கல்வி நிலை எவ்வாறிருந்தது, கல்வியை மக்கள் யாவரும் பெறத் தக்கதாக திருச் சபை எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டன, அந்த முயற்சிகளின் பயன் எவ்வாறு அமைந்தன என்ற விபரங்கள் புள்ளி விபரத்துடன் தரப்பட்டிருந்தன.

அவற்றின் அடிபடையில் அக்கால உலகின் கல்வி நிலைபற்றிய பின்வருந் தகவல்கள் தெரிய வந்தன. அவற்றில் மிகச் சுருக்கமான குறிப்புகளை அடியிற் காண்க;

1. மக்களின் கல்வியறிவு நூற்று வீதத்திற் சொல்ல முடியாதளவு ஆயிரம் வீதத்திலேதான் சொல்லும் அளவுக்குக் மிகக் குறைந்த கணிப்பிற்தான் இருநதது. ஆபிரிக்க, அமரிக்க, அவுஸ்திரேலிய பூர்வக் குடிகளின் கல்வி அறிவை எந்த வீதத்திற் சொல்வதென்ற ஒரு இடர்ப்பாடும் இருந்தது.

2. இந்தியா, அரேபியா, கிரேக்கம், சீனம் முதலாய நாடுகளில் சிறந்த கல்விக்குரிய மொழி வழக்கு, எழுத்து வழக்கு, இலக்கிய நூல்கள், சமய அறிவு தரும் ஆகமப் பனுல்கள் போதிய அளவில் இருந்தும் அதனைக் கற்போர் தொகையே கற்பிப்பாரின் தொகையாக இருந்தது. மக்களிடம் கற்கும் பழக்கம் இருக்கவில்லை. ஆனால், கல்வி கற்ற வர்களைக் கௌரவிக்கும் வழக்கமும் அவர்தம் பகருரைகளை மதித்துக் கைகொள்ளும் பழக்கமும் போதிய அளவில் நாடளாவ நிலை பெற்று இருந்தது. பல நூல்கள் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டுப் பாது காக்கப்பட்டன. மொழி களுக்கு எழுதப்பட்ட இலக்கண வரம்பாலான மொழி மரபு இருந்தது. சில தொல் மொழிகளில் மொழி மரபு சிதைந்து போகாதவாறு செய்யுள் நடை நூல்களாக்கப்பட்டன.

3. பல பண்டை மொழிகள் பேச்சி வழக்கற்றுப் போயினவாயினும் அவற்றின் இலக்கிய வடிவங்கள் எழுத்து வழக்கில் மக்களிடம் பாவனைக் கிருந்தன.. அரபு, சீனம், கிரேக்கம், லத்தினில் இருந்து உருவான கிளை மொழிகள் போல தமிழ் மொழியும் மூத்த மொழியாகப் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு, இலக்கிய வழக்கில் தனது தொன்மையைப் பிரதிபலித்து வாழும் மொழியாக நிலைத்திருந்தது. எனினும் மக்களிடம் படிப்பறிவு என்ற வகையில் போதிய அளவு சென்று சேருத அளவில் வேறுபட்டு நின்றது.

4. கிறிஸ்தவ மிசனரிமார் கல்விப் பணியை மக்கள் யாவருக்கும் கிட்டும் வகையில் பரப்ப முன்னர் கல்வி குருகுல முறையில் ஞானிகளால் கற்பிக்கப்பட்டன. இத்தகைக் கல்வி



எதிர் காலத்தில் நல்மாணுக்கர்
படையொன்றை உருவாக்கி வழி
நடத்துவேன் நம்பிக்கை மிடுக்குடன்...



இளைப்பாறிய காலத்திலும் இறைப் பணியை
மேற்கொண்ட வாழ்க்கை வாழ்ந்தார்

பயில்வோர் தொகை மொத்த மக்கள் தொகையிலும் மிகச் சிறிய வீதமாகவே இருந்தன. அடுத்து சமய பீடங்களில் சமயக் குருமாரால் கல்வி கற்பிக்கப்பட்டன. வழிபாட்டு இடங்களில் நடைபெறும் வணக்க முறையால் கேள்விப் புலன் வழி பொது மக்கள் கல்வி அறிவை அனுபவித்தனர். ஆனால் கல்விக்குரிய சிறப்பான அம்சமான எழுத்தறிவு இவற்றில் இடம் பெறவில்லை.

இந்திய, அரபி, சீன, கிரேக்க மக்களைப் பொறுத்த அளவில் அவரகளது கல்வி அறிவு சமயம், வைத்தியம், சோதிடஞ் சார்ந்தே வளர்ந்துள்ளது. சமய நிகழ்வுகளின் தொகுப்பான புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள் என்பன இலக்கியங்களாகக் கொள்ளப்பட்டன. தமிழ் மொழி இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகக் கதை சாராத வாழ்க்கை முறைகளைக் கொண்ட சங்க இலக்கியங்களாக இருந்தன. இத்தகைய இலக்கிய மரபை உலகில் வேறு எந்தவொரு பண்டை மொழிகளிலுங் காண்பதரிது. இத்தகைய அமைப்புகளால் பண்டிருந்தே கல்வியறிவு ஓரளவு தமிழ் மக்களிடை பரவலாக இருந்ததென்று கூறமுடியும். சுவீடன் நாட்டில் தனது தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் அனைத்துலக மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனமுந் தனது அறிக்கைகளில் இதனைக் குறிப்பிட்டுளளது..

இவ்வகையில் தமிழர் வாழிடங்களில் பாடசாலைக் கல்வி முறையை உருவாக்குவதிலும், நடைமுறைப்படுத்தப் படுவதிலும் போதிய வரவேற்பு இருந்ததாக அந்த அறிக்கைப் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்பது எவ்வளவு முக்கியமாக இருந்ததோ அதுபோலப் பள்ளிகள் இல்லாத ஊரில் பிள்ளைகள் இருக்க மாட்டார்கள் என்ற அளவு கல்வி அறிவூட்டல் இடம் பெற்றிருந்தது. 1938ம் ஆண்டுக் காலத்தில் தமிழர் வாழ்ந்த தமிழ் நாடு, இலங்கை போன்ற இடங்களில் ஊருக்கொரு பள்ளி அமைக்கப்படலாயிற்று. இவைகள் யாவும் இலங்கையை அரசு செய்த ஐரோப்பிய நாட்டு அரசுகளாலும் கிறிஸ்தவ மிசனரிகளாலும் அமைகக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டன. பாடசாலைக்கென்று ஒரு இடம், வகுப்பறைகள் கொண்ட கட்டிடம், மாணவர் அமர்ந்து படிக்கத்தக்க வெளிச்சமும், ஆசன வசதியும் வாரத்தில் ஐந்து

நாள் பாடசாலை ஒழுங்கு, கல்வி கற்பிக்கப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் என்பன ஐரோப்பிய நாட்டுக் கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டன. சாதிக் கட்டுப்பாடற்ற சமத்துவம் பாடசாலைகளிற் பேணப்பட்டமை, தேர்வின் மூலம் வகுப்பேற்றம், கட்டாயக் கல்வி முறை ஆதியன மக்களிடை கல்வி அறிவைப் பரப்புவதற்கு வழி வகுத்தன.

குட்டன் பேர்க்கின் அச்சு இயந்திரம், எழுதுவதற்குக் கற்பலகை, தாள், மை பென்சில் பேனை என்பனவற்றின் அறிமுகம் மாணவர் இலகுவில் கற்க வழி ஏற்படுத்தின. சிறப்பாகப் பாட நூல்களை ஒவ்வொரு மாணவரும் பெற்றுக் கல்வி கற்கும் வாய்ப்பு கல்வியின் மேலுள்ள நாட்டத்தை மேலோங்கச் செய்தன. எனினும் இது போதுமான கல்விப் பரம்பலாக இருக்கவில்லை. திண்ணைப் பள்ளி, பனை ஓலைச் சுவடியில் எழுதிப் படித்தல் போன்ற சிரமங்களைக் குறைப்பனவாக அமைந்தன. எனினும் இற்றைவரை இலக்கியப் பாடல்களை படித்த மரபிலிருந்து இலக்கியத்திற்கு அப்பாலான புவியியல், சுகவழி, வரலாறு, உலக நடப்பு போன்ற பல அறிவியல்களையும் கற்கும் வாய்ப்பு வசதிகள் மக்களின் இளைய சந்ததியினருக்கு ஊட்டப்பட்டன. இதுவரை இறை வழிபாட்டையே மையக் கருப் பொருளாகக் கொண்டிருந்த கல்வி உலகியல் வாழ்க்கையின் பயனை மையக் கருவாகக் கொண்டு கற்பிக்கப்பட்டன. இவற்றிலும் பார்க்க இடத்துக்கிடம் வேறுபடாத சமாந்தரக் கல்வி கற்றல் முறையையும், நாட்டில் உள்ள பிள்ளைகள் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதுபற்றியுந் திண்ணைப் பள்ளிக் கூட அமைப்பு, அதன் மறைவு பற்றியும் பாடசாலைப் பாட நூல்கள், தேர்வுகள். பாடத் திட்டங்கள் பற்றியும் நான் எனது இலங்கைப் பாடசாலைகளின் பாட நூல் வரலாறு என்ற கல்வி ஆய்வு நூலில் விபரமாகத் தந்துள்ளேன்.

எனது கற்கை வாழ்க்கை 1934ம் ஆண்டிலிருந்து ஆரம்பமாயது. எனவே அக்காலக் கல்வி முறை எத்த கைத்தாக இருந்தது என்பதை ஓரளவு நிதானிக்க முடிகிறது. அதன் அடிப்படையில் என் வாழ்க்கையில் ஏற்பட்ட கல்வி கற்பதில் ஏற்பட்ட மாற்றம் அல்லது திசை திருப்பம் எத்த கையதென அறிவது நலமென நம்புகிறேன்.

நான் கொண்டிருந்த கற்றல், கற்பித்தல், பாடசாலை ஆதியவற்றுடன் உள்ள தொடர்புகள் 1984ம் ஆண்டு வரை நீடித்தது. அக்கால கட்டம் அளவிற் சிறிதாக இருந்தாலும், தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியிற் பெரும் பங்கை வகுத்த அரை நூற்றாண்டடெனல் மிகையன்று. இக்கால குறுகிய எல்லைக்குள் கல்வி வளர்ச்சி 1960 வரையும் கிறிஸ்தவ மிசனரிமார்களின் பணியில் நெடுங் காலந் தங்கி இருந்தது எனல் மிகையின்று. இடையில் 1940 இன் இறுதிக் காலக் கட்டத்தில் இராமக் கிருஷ்ண மிசன் தனது பாடசாலைகள் சிலவற்றைக் கிறிஸ்தவ மிசனரிமார் நடாத்தி வந்த பாடசாலைகள் உள்ள கிராமங்களிலே தாபித்தன. எனினும் இவையாவும் அரசின் உதவி நன்கொடை பெறும் நிலையில் இருந்து அரசின் நேரடிப் பராமரிப்பில் 1960ம் ஆண்டில் அரசினராற் பொறுப்பேற்கப்பட்டு அரச பள்ளிகளாகின. இந்த மதிப்பீடு இலங்கையை மத்தியாகக் கொண்டே எடுக்கப் படுவதால் தமிழ் நாட்டிலும் இத்தகைய கல்வி நிலையே இருந்தது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. காரணம் ஆங்கும் இதே ஆங்கில ஆட்சியும் அதன் நிழலுமே குடி கொண்டிருந்தது. இதற்குச் சார்பான தகவல்களே நான் மின்னர் சொன்ன அறிக்கைகளிலும் இலங்கை கல்வி விசாரணைச் சபைஅறிக்கையிலும் தொனிக்கினறன..

நான், என் பாடசாலைக் கல்வியை மெதடிஸ்த மிசன் எனுங் கிறிஸ்தவ பாடசாலையிற் கற்று முடித்து ஆசிரியப் பணியை அரசினர் பாடசாலைகளில் ஆறு வருட காலம் செய்தேன். அதன் பின்னர் ஐந்து வருட காலம் கிறிஸ்தவ மிசனரிப் பாடசாலையில் கற்பித்து இளைப்பாறும் வரையும் அரசினர் பாடசாலை ஆசிரியராகவே பணி செய்தேன். இக்காலத்துள் முஸ்லீம் பாடசாலை, சிங்களப் பாடசாலை ஆதிவற்றிலும் கற்பிக்க நேர்ந்ததால் அங்குள்ள கல்வி வளர்ச்சியையும் என்னுற் கணிக்கக் கூடியதாக இருந்தது. எனவே இக்கால கட்டத்துள் நடைபெற்ற கல்வி வளர்ச்சி எத்தகையது, அவற்றின் பொதுத் தன்மை என்ன? தனித் தன்மை எவை , இதனல் பெற்றுர் சமுதாயமும் மாணவர் களு ம் பெற்ற கல்வி வளர்ச்சியும் பெறுபேறுகளும் என்ன என்பதை ஓரளவு மட்டிட முடிகிறது. இந்த அனுபவத்தைக் கொண்டுதான் இந்தக் கட்டுரை வரையப்படிகிறது. எழுபதிகளின் நடுப்

பகுதியில் மகா வித்தியாலக் கல்வி நடை முறைக்கு வந்தது. இதன் பின்னர் கிறிஸ்தவ அல்லது இராமக் கிருஷ்ண பௌத்தாகம. சைவபரிபாலன சபைகளாற் செய்ய முடிமாமற் போன பல கல்விக் கூறுகள் நடை முறைப்படுத்தப்பட்டன. எழை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக இரிந்த பல்கலைக் கழகப் பட்டப் படிப்புக் கிட்டக் கூடிய சம கல்வி வாய்ப்புக் கிராம மாணவர்களுக்குக் கிடைத்தது.

கிறிஸ்த மிசனரிமாரின் கல்வி முறையில் காணப்பட்ட குறை அவரகளது பாடசாலைகளிற் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அவர்தம் மத அறிவு புகட்டப்படவில்லை என்பதே ஆகும். இந்தக் குறைபாடு ஆறுமுக நாவலர், தோற்றுவித்த சைவ பரிபாலன சபைப் பாடசாலைகளில் ஓரளவு சைவ சமயம் வளரத் தக்கதாக நிறைவேற்றப்பட்டு இருந்தாலும் சமய சமரசத்தை அடிப்டையாகக் கொண்ட இராமக் கிருஷ்ண மிசன் பாடசாலைகளால் மேற்கொண்டு சைவம் வளர்த்தாகச் சொல்லுந் தரமின்று. ஆனல் இதே சமய சமரசப் பாங்கு சைவ சமயத்தை இந்து சமயமமாக்க ஏற்க உதவியது என்பதில் தவறில்லை என்றே கருதுகின்றேன்.

1950 களில் வேண்டப்பட்ட தமிழ் மக்களின் கல்வித் தேவை உத்தியோக வாய்ப்பு, பல்கலைக் கழக உயர் கல்வி வசதி என்பனவாகவே இருந்தன. இதற்கான பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக எந்தவொரு மிசனும் முயலவில்லை. உதாரணமாகப் பல்லாயிரம் மக்கள் வாழும் பல கிராமங்களிடையே ஆங்கிலக் கல்வி கற்கும் வாய்ப்பு ஐந்தே இடங்களிற்தான் இருந்தன. இவற்றை ஒரு கிராம மாணவன் எட்ட முடியாத இடத்தூரம், அல்லது தங்கிக் கற்க முடியாத பொருண்மிய இடைவெளி 95 வீதமான மாணவர்களின் கனவாகவே இருந்தன. பட்டின வாசஞ் செய்யும் பிள்ளைகளுக்கும், பணம் படைத்த கிராமத்தவர்களின் மக்களுக்கும் மட்டுமே ஆங்கிலக் கல்வி இயல்வதாக இருந்தது. இத்தருணத்தில் சமயக் கல்வி வேண்டுமென்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் சபையார், பல கிராமங்களுக்கு மத்தியில் ஒரு ஆங்கிலப் பாடசாலையைக் கூட நிறுவ முடியவில்லை என்பதும், கிறிஸ்தவ மிசனரிமார் நடாத்திய பாடசாலைகளுக்கு அருகில் தமிழ் மூலம் கற்பிக்கும் பாடசாலைகளையே நிறுவினர் என்பதும் மதக்காழ்ப்பு உணர்வு

சம்பந்தமானதாகவே கொள்ளப்பட்டது அன்றி வேறன்று . இந்தத் தவறு மகா வித்தியாலயங்கள் உருவாகி வருடந்தோறும் பல கிராம மாணவர்களைப் பட்டதாரிகளாக்கிய போது உணரப்பட்டது. ஆரம்பத்திலே ஆங்கில மொழி வழியிற் கற்கும் வசதிகள் கிராம மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பின் இப்போது கிராம மக்கள் அனுபவிக்கும் உயர்கல்வி வசதி அக்காலத்தில் ஓரளவு ஏற்பட்டிருக்குமே என்ற கேள்விக்கு அக்காலக் கல்வி வளர்ச் ,சியில் சிரத்தை கொண்டவர்களால் பதில் இறுக்க முடியாது போயே இருக்கும். இதே நேரம் கிறிஸ்தவ மிசனரிமாரின் கல்விப் பணியை எதிர்த்துக் குரல எழுப்பிய பல மதத் தலைவர்களுந் தமது கல்வியை அத்தகைய பாடசாலைளிலேயே பயின்றவர்கள் எனும் போது மிசனரிமாரின் கல்வியின் மேன்மையைப் புகழ்வதா அல்லது இகழ்வதா என்று புரியவில்லை.

இஸ்லாம் மத மாணவர்கள் தங்கள் மதக் கல்வியை மதராசாக்களில் கற்றனர். பௌத்த மத மாணவர்கள் மதக் கல்வியை பிரிவேனுக்களில் கற்றனர். இவையெலாம் பாடசாலைக் கல்விக்குப் புறம்பானவைகளாகவே இருந்தன. இதனல், அவர்கள் பாடசாலைகளில் கிறிஸ்தவ மிசனரிமாரின் ஆதிக்கம் இருப்பதையிட்டுப் பொருட்படுத்தவில்லை. பாடசாலைக் கல்வி கற்கும் இடமே தவிர சமயங் கற்கும் இடமில்லை என்று நம்பினர். இந்த நிலையற்ற சைவ மதஞ்சார்ந்த மாணவர்களுக்கு ஆலயங்கள் எதுவுந் தஞ்சங் கொடுக்கவில்லை. அவர்கள் சமய அறிவைப் போதனையற்ற சாதனை வழியாகவே இருந்தது. இந்தக் குறையை ஆலயங்கள் புறக்கணித்த போது, பலர் மிசன் பாடசாலைகளிற் புகுத்த முயன்றனர். இதே தருணம் ஆலயங்களில் சமயப் பாடசாலை நடத்தி இருந்தால், பாடசாலைக் கல்வியின் பயனும் நோக்கும் மேலும் விரிவாக்கப்பட்டிருக்கும்.

கிறிஸ்தவ மிசனரிமாரின் மதப் பரப்புதல் பாடசாலைகளால் நடத்தப்பட்டது என்பது ஆதாரமற்ற கூற்று. இன, மத, சாதி பாகுபாடற்ற கல்விதான் அங்கு வழங்கப்பட்டன. பாடசாலை ஆரம்பத்தில் நடக்கும் பிரார்த்தனை மட்டும் கிறிஸ்தவ சமய ஆசிரியர்களால் நடத்தப்பட்டது. இது ஒரி வித காலை வணக்கங் கூறும் நிலையாகவே இருந்ததே

தவிர மாணவனின் சமய நம்பிக்கையைப் பலமிழக்கச் செய்யும் வலுவுடையதாக இருக்கவில்லை. ஓய்வு நாட் பாடசாலைகளிற் கூட பெற்றாரின் சம்மதத்தின் பேரிலே மாணவர்கள் கற்றனர். இதிற் கூட சமயக் கல்வி என்ற நிலையிற் பெற்றாரால் மதிக்கப்படவில்லை. சன்மார்க்க நெறிப் பாடமாகவே மதிக்கப்பட்டது. ஆனால், கிறிஸ்தவ மிசனரிமார் தமது மதஞ் சார்ந்தவர்களுக்கே தமது பாடசாலைகளில் நியமனம் வழங்கினர். இவர்கள் கூட வகுப்புப் பாடங்களைக் கற்பித்தனரே தவிர கிறிஸ்தவ மத பாடங்களைக் கற்பித்திலர். ஆனால் இத்தகைய ஆசிரியர்களின் குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்தினராக வாழ்ந்தனர். இதனால் பாடசாலைக் கல்வி மத மயமாக்கப்படவில்லை. கிராம மக்களோ மாணவர்களோ கிறிஸ்தவர்களாகவும் இல்லை என்பதை இங்கு கூறியாகவே வேண்டியுள்ளது.

1940 களில் தமிழ் மொழிப் பாடசாலைகள் எல்லாக் கிராமங்களிலும் இருந்தன. அதுபோல ஏனைய மொழிப் பாடசாலைகளும் கிராமந்தோறும் நடைபெற்றன. அவைகள் யாவற்றிலும் 98 வீதமானவை ஐந்தாம் வகுப்புடன் கல்வியை முடித்துக் கொள்ளும் ஆரம்பப் பாடசாலைகளாகவே இருந்தன. மக்கள் தொகை கூடிய கிராமங்களில் மட்டும் மேற் கொண்டு படித்துக் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு எனும் பாடசாலைக் கல்வியைக் கற்கும் வசதிகள் இருந்தன. இந்த இரண்டு தேர்வுகளும் அரசினரால் நடத்தப்படும் பொதுப் பரீடசைகள். இவற்றில் தேர்வு பெற்றவர்கள் அரசின் சிற்றூழியர்களாகவும் ஆசிரியர்களாகவும் பணி வாய்ப்புக்கு உரித்தான தகமைகளைப் பெற்றவர்களகக் கருதப்பட்டனர், இத்தகைய வேலை வாய்ப்பும் அரிதாகவே கிடைத்ததால் பாடசாலைப் படிப்பில் அநேகர் நாட்டங் கொள்ளவில்லை. அதேநேரம் இந்தப் பரீட்சசைகளில் ஆங்கில மொழியிற் தேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பும் உயர் கல்வியுங் காத்தி ருந்தன. வேதனமும் பல மடங்கு கூட வழங்கப்பட்டன. இத்தகைய பாடசாலைகளின் தொகை மிக அருகியே காணப்பட்டது. அத்தகைய பாடசாலை ஒன்றிற்தான் நான் கல்வி கற்றேன்.

நான் பாடசாலையிற் சேரும்போது அங்கே எட்டாந் தரம் ஒன்பதாந் தரமென்னும், க பா. த. வ, சி. த. ப. வகுப்புகள் இருந்தன. இந்த நிலை நான் ஆறுவது வகுப்பு படிக்கும் வரையும் தொடர்ந்தது. அக்கால உயர் படிப்பைப்பற்றிச சொல்வதானால், ஒரு வாழைக் குலையின் சீப்புகளை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். அதனடியில் காய்களின் எண்ணிக்கையும் பருமனும அதிகமாக இருப்பதையும் தலைப்பு நோக்கி வர வர அவை குறைந்துஞ் சிறுத்துக் கொண்டு போவதையும் போலக் ஆரம்ப வகுப்புகளில் மாணவர் தொகை கூடியும் பின்னர் வரவர விரல் விட்டெண்ணக் கூடிய அளவு குறைந்து போவதையும் கண்டிருப்பீர்கள். அதுபோல ஏழாந் தரத்தை அடைந்தபோது என்னுடன் தேர்வு பெற்ற ஐந்துபேர் நாளடைவில் பாடசாலையில் இருந்து விலகி விடடனர். அதனால் நான் தனி மாணவனுகக் கல்வியைத் தொடர முடியாத தேக்க நிலை ஏற்பட்டது,

என்னைப்போன்ற வளர்ந்த மாணவன் இருப்பதில் பாடசாலைக்குப் பல நன்மைகள் உண்டு. ஆசிரியர் வாராத வகுப்புகளைக் கண்காணித்தல். வெளியே சென்று வேண்டியவற்றைப் பெற்று வரல், பாடசாலைத் தோட்டத்திற்குக் கிணற்றில் இருந்து நீர் மொண்டு கொடுத்தல் போன்ற வற்றை வளர்ந்த மாணவனாலேயே செய்ய முடியும் என்ற வலையில் நானுஞ் சிக்கிவிட்டேன். இதனால் எழாந் தரத்தில் 15 மாதங்கள் தங்க வேண்டி இருந்தது. மேலதிக ஆசிரியர் வருவார், என் கல்வியைத் தொடரலாம் என்ற எதிர்ப்பார்ப்பை நிர்வாகம் ஊட்டியதால் நானும் பொறுமை கார்த்தேன் அவ்வாறு ஏதும் நடக்கவோ நடக்கும் என்ற அறிகுறியோ இல்லாத நிலையில் கற்றலே நோக்கமாகக் கொண்ட எனது நிலை கவலைக் குரியதாகியது.

நான் வாழ்ந்த இடமோ சிறியதொரு கிராமம். காலமும் உலக மாற்றங்களில் எதையும் அனுபவிக்காத அளவு பிற்பட்டதாக அமைந்தது. பல காரியங்களைக் கேட்டுக் கூட அறியாத மக்கள் வாழ்ந்த காலம் எனலுந் தகும். நாகரீகத்தின் நிழல்கூடத் தொடாத இடமாகவே அது இருந்தது. அத்தகைய கிராமத்தின் ஒளி விளக்காக அல்லது நாகரிகத்தின் சின்னமாக இந்தப் பாடசாலை உயர் வகுப்புகளைக் கொண்ட பாடசாலையாக விளங்கிற்று.

ஏறக்குறைய இருபது கிராமங்களுக்கு மத்தியில் இப் பாட சாலையே சி. பா. த. ப வகுப்பு வரையும் கற்பிக்கும் பாட சாலையாக இருந்தாலும், நாளடைவில் வகுப்புகள் ஆரம்ப பாடசாலைத் தரத்திற்கு இறங்கி வரத் தொடங்கிற்று. அத்தகைய கால கட்டத்தில் நான் இருந்தேன்.

எங்கள் கிராமம் விவசாயக் கிராமம். பெற்றோரின் தொழிலுக்குப் பிள்ளைகள் பேருதவியாக இருப்பார்கள். ஒரு சிற்றூர் வேலை எட்டாள் வேலைக்குச் சமன் என்ற தத்துவம் பெற்றோரிடம் இருந்தபடியால் படிப்பிலும் பார்க்கத் தொழிலில் தமது பிள்ளைகளை ஈடுபடுத்துவதில் அதிக பயன் பெற்றனர். எனவே பாடசாலையிற் கட்டாயக் கல்விக் காலம் முடிந்ததும் பள்ளிப் படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும். அதற்கு முன் பாடசாலைக்கு வராத மாணவர்களின் பெற்றோர் மீது வழக்குத் தொடரப்படும் நிலை இருந்தது. இந்தச் சட்ட ம் மாணவர்களை ஐந்தாந் தரம் வரையும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை அளித்தது. இந்த நிலையில் என்னைப் பொறுத்த அளவில கல்வி கற்கும் தேவை மாறுபட்டு இருந் தது எனலாம். அதற்குக் காரணம் என் தந்தை விவசா யியல்ல. அவர் ஒரு வியாபாரி. எனவே எனது உதவி அவ ருக்குத் தேவையற்றதொன்றுகக் கருதப்பட்டது. இரண் டாவதாக; அந்தக் கிராமத்திலே முதல் ஆசிரியராகப் பயின் றவர் எனது தாயின் சகோதரர். அதுபோலவே என் தந்தையின் தமையனும், அக்காவும் ஆசிரியர்களாக இருந்தார்கள். என் தந்தையும் ஆசிரியப் பயிற்சியை இடை நிறுத்தித் தந்தையாருக்கு உதவி செய்ய வியாபாரத்தில் ஈடுபட்டவர். இத்தகைய குடும்பச் சூழலில் எனது கல்வி கற்றல் அவசியமானதும் முக்கியமானதுமாகக் கருதப்பட்டது.

எனது தந்தையாரின் சொந்த இடம் மட்டக்களப்பு நகரத்தின் தென்புறத்தை ஒட்டி கல்லடிப் பாலத்தின் தென் அந்தத்திலிருந்து ஏறக் குறைய 200 யார் தூரத்தில் இருந்தது. மேலும் அவரது குடும்பம் வசதி படைத்ததாக இருந்ததால் என்னை அங்கே தங்க வைத்து ஆங்கிலக் கல்வி புகட்டவே விரும்பினர். எனினும் அவர் அங்கிருந்து பனிரெண்டு மைல் தொலைவில் என் தாயாரின் கிராமத்தில் வாழ்ந்ததாலும் நான் ஒரே பிள்ளையாக இருந்ததாலும் அவரது எண்ணம் நிறைவேறவில்லை. என்னைப் பிரிந்தோ தன் பிறந்த ஊரை



நல்லறஞ்
செய்து
நலன்
புரியத்
தேர்ந்
தெடுத்த
இலலறத்
துணைவி

செல்வி
லில்லி
தங்க
மலருடன்

விட்டுப் பிரிந்தோ வாழத் தாயார் விரும்பாத நிலையில் என் கல்வி கிராமப் பாடசாலையிலே தொடர்ந்தது. ஆனல் என் கிராமத்தில் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டதும் என் தந்தை தன் நீண்ட நாள் விருப்பத்தை நிறைவேற்றுந் தருணங் கிடைத்தாகவே எண்ணினர். அதன்படி தாயாரின் அரைகுறை விருப்பபத்துடன் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய பாடசாலையிற் கற்க அனுமதி பெற்றுத் தந்தார். அத்துடன் என் பாட்டியின் வீட்டிலிருந்தே பாடசாலைக்குப் போய் வர ஆவனவுஞ் செய்தார். எவ்வாறேு பல தடைகளைத் தாண்டி மட்டக்களப்பில் ஆங்கிலம் படிக்கப் போக வேண்டிய

காரியங்கள நடைபெற்ற பின்னர் சித்திரை விடுமுறை கழித்துப் பாடசாலை ஆரம்பமானதும் போகுங் காலம் நெருங்கி வந்தது. நான் அதுவரை படித்த பாடசாலையில் எதிர் பார்த்திருந்த புதிய ஆசிரியர் வரவே இல்லை. அவ்வாறு யாரேனும் ஆசிரியர் வர நேர்ந்தால் ஊரிலேயே தங்கிப் படிக்கலாம் என்ற பேராசையும் அருகத் தொடங்கியது. அதுவரை வீட்டில் வீணை காலம் கழிக்காது தொடர்ந்து பாடசாலைக்குச் சென்று வந்தேன். இதே தருணம் ஆங்கிலங் கற்கப் பட்டணம் போவதை யிட்டு நண்பர்களிடங் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டேன்.

12. 5. 1943 ந் தினம் வந்தது. அன்று நானே அல்லது பாடசாலை நிர்வாகமோ எதிர் பாரத்திராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பாடசாலை தொடங்க முன்னர் வெள்ளை உடை அணிந்த உயரமான இளம் வாலிபர் ஒருவர் பாடசாலைக்கு வந்து தலைமையாசிரியருடன் உரையாடிய பின்னர் நான் மட்டும் தனித்திருந்த நீண்ட மேசை வாங்கு அருகில் வந்து நின்று என் பெயரைக் கேட்டார். நான் பௌவியமாகப் பதில் சொல்லி அமர்ந்து கொண்டேன் . அவர் எனது குறிப்புக் கொப்பிகளை எடுத்துச் சென்று ஆசிரியர் ஆசனத்தில் அமர்ந்து பார்வையிட்டார். அப்போதுகூட அவரர் யாரென என்னால் அறியக் கூடாதிருந்தது. பாடசாலை முடியுந் தருணம் தலைமையாசிரியர் என்னை அழைத்துப் எதிர் பார்த்த புதிய ஆசிரியர் வந்து விட்டார். இனி உன் படிப்பை இங்கேயே தொடர அவர் உதவி செய்வார். மட்டக்களப்புக்குப் போக வேண்டியதில்லை என்று சொன்ன போது என்னால் நம்பவே முடியவில்லை. மனதுக்குள் ஆனந்தம். அதைவிட என் தாயார் இதைக் கேட்டால் மட்டற்ற மகிழ்ச்சி கொள்வார் என்ற பேரானந்தம். ஆனால் தந்தையார் என்ன சொல்வாரோ என்ற தயக்கம். இறுதியில் நீர் செய்ய வேண்டிய காரியம் நன்கு கவனமாகப் படிக்க வேண்டியதுதான் என்று தலைமை யாசிரியர் சொன்னதிற்குத் தலையை ஆட்டிச் சம்மதித்தேன். அப்போது பல தடவை தலையை ஆட்ட வேண்டும் போலவுந் தோன்றியது. அவ்வளவு மகிழ்ச்சி.

அன்றுதான் என் வாழ்க்கையில் நான் முன்னர் எடுத்துச் சொன்ன திருப்பம் ஆரம்பமானது. அந்த ஆசிரியர்தான் திரு .பி. டி. ஐங்கரப்பிள்ளை ஆவார். அவர் எங்கள்

கிராமத்திற்கு மேற்கே பரந்து கிடந்த மட்டக்களப்பு வாவியின் அக்கரையில் உள்ள படுவான் கரை பழுகாமத்தைச் சேர்ந்தவர் அன்றே எனக்கு வகுப்பு பின்னேரத்தில் அரம்பமானது. அவருடைய கற்பித்தலில் நான் கற்பது எனக்குக் களிப்பை ஊட்டியது. அந்த வருட இறுதியில் நான் கனிஷ்ட தராதரப் பத்திர வகுப்பிற் தனித்தே படிக்கத் தொடங்கினேன். இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாடசாலையை விட்டு விலகியிருந்த நான்கு மாணவர்கள் வந்து சேர்ந்து கொண்டனர். இதுவும் அவருடைய முயற்சியின் பலனுகவே இருந்தது. அடுத்து நடந்த தேர்வில் நான் பங்குபற்றித் திறமைச் சித்தி பெற்றேன். அதைத் தொடர்ந்து அடுத்த வருடமே என்னைச் சி.பா.த.வ தேர்விற்கு ஆயத்தப்படுத்தி விட்டார். இதற்காக அவர் இரவு பகலாக எனக்குக் கற்பித்தார். அதில் நான் முதலாந் தரத்திற் சித்தி பெற்றேன். வீரகேசரிப் பத்திரிகையில் ஒரே ஒரு மாணவனுக்குக் கற்பித்து தேர்வில் முதலாமிடம் பெறச் செய்த பாடசாலையும் அம்முயற்சியில் ஈடுபட்டுழைத்த ஆசிரியர் பற்றியும் ஒரு செய்தி வெளி வந்ததிருந்தது. இது எனக்கு மட்டற்ற மகிழச்சியைக் கொடுத் ததிலும் பார்கக, என் மீது கரிசினை செலுத்தி எனக்குக் கற்பித்த ஆசிரியருக்கும் பாடசாலைக்கும் இறுத்த கடன் என்ற மன நிறைவைக் கொடுத்தது என்றே சொல்வேன்.

அன்று இந்தத் திருப்பம் ஒரு பொருட்டாகப் பட வில்லை. தூர தேசத்திற்குப் போய் பிற மொழி கற்க வேண்டிய நிர்ப்பந்தத்தை நீக்கியதொன்றுகவே எண்ணினேன். ஆனல் அத் திருப்பம் எனக்கு அளப்பெரிய நன்மைகளை அளித் துள்ளது பல நல்ல காரியங்களைச் செய்ய வாய்ப்பளித்துள்ளது என எண்ணும்போது திருவாதவூராரைச் சிவபெருமான் தடுத்தாட் கொண்ட நிகழ்வே நினைவிற்கு வருகிறது. இன்று நான் செய்யும் தமிழ்ப் பணி. தமிழ் இலக்கியப் பணிக்கு அத் திருப்பமே முக்கியமான காரணமாக இருந்தது என்பது தெளிவாகின்றது.

அவர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று வெளியேறி கற்பிக்கத் தொடங்கி இரு வருட காலத்தில் தனி மாணவனைக் கொண்ட வகுப்பை நடாத்தி இரு பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றுவித்துத் திறமைச் சித்தி பெறச் செய்த திறன் இவர்போல எவர்க்கு உண்டு என்று நான்

நல் மாணாக்கர்களை நாட்டிற்கு நல்கி இளைப்பாறிய ஆசிரியர் அதிபர் அமரர். பி. டி. ஐங்கரப்பிள்ளை தம்பதி.



துணைவியாரைப் பிரிந்த காலத்தில் தனது மக்களுடன்



இன்றும் நினைத்துப் பூரிப்பேன். அதுபோலவே அக்காலத்தி லேயே பாடசாலையிலிருந்து விலகிய நான்கு மாணவர்களைச் சேர்த்து அடுத்த அடுத்த ஆண்டுகளில் க.த.ப. வகுப்பு, சி.த. ப. வகுப்புப் பொதுப் பரீட்சைகளில் தோற்றச் செய்து சித்தி பெறச் செயதார், இந்த நால்வரும் ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியர்களாகப், பாடசாலை அதிபர்களாப் பதவி உயர்ந்து இளைப்பாறினர். இதுவும் அவரது மகத்தான சாதனைக்கு ஒரு எடுத்துக் காட்டு. இத்தனைக்கும் அவர் கற்பிக்குந் திறனை எத்தகைய முன் அனுபவமும் இன்றி ஆசிரிய கலாசாலைப் பயிற்சியைக் கொண்டே பெற்றார் எனும்போது அவரது ஆற்றலையும் கற்பித்தற் துறையில் அவர கொண்டிருந்த அளவு கடந்த பற்றுதலையும் வியக்காமல் இருக்க முடியாது.

அவரது உயர்ந்த குண சீலங்கள் என்னை மட்டன்று என்னுடன் படித்த மாணவர்களையும் வெகுவாகக் கவர்ந் திழுத்தது. அவரது சிகை சுருள் சுருளாகப் படிகள்போல நிரைத்த இயல்பான தோற்றமுடையது. நடு உச்சி யெடுத்து வாரிய அழகுடையது. அதுபோல எங்களது சிகையும் இருக்க வேண்டுமென்று எதிர் பார்த்தோம். அதற்கான முயற்சியில் ஈடு பட்டோம் எங்களில் இருவரது கேசம் இயல்பிலே சுருட்டை யானது. அவர் வர முன்பு அவை பரட்டைத் தலை என்று எங்களுக்குள்ளே, ஒரு தாழ்வுச் சிக்கலுடன் கூடிய வெறுப்பு இருந்தது. எனவே அவற்றை நீட்டி நிமிர்த்தி வார வேண்டு மென்று பல தடவைகள் முயன்றோம். ஆனல் அந்த முயற்சி நாய் வாற் கதையானதே மிச்சம். ஆனல் அவர் வந்த பின்னர் அதை எங்கள் பெரும் பாக்கியமாகவே கொண்டு அவர்போல பக்குவப்படுத்திக் கொண்டோம்.

சி.பா. த, ப. வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த நானுட் பட, க. பா. த. ப வகுப்பில் கற்ற நான்கு மாணவர்கள் உட்பட ஐந்து மாணவர்களும் அவர்மேல் அளவு கடந்த பக்தி வைத்திருந்தோம். ஒரு தடவை அவர் பனிரெண்டு மைலுக் கப்பாலுள்ள வைத்தியசாலையில் ஈர்ப்பு எனும் ரெற்னஸ் நோய்க்காகச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அது எங்களுக்குப் பெரிய துயரமாகவே இருந்தது. மேலும், சில வாரங்களிற்கு முன்னர்தான் சுகாதாரப் பாடத்தில் அந்த நோயின் கொடுமைபற்றிப் படிப்பித்திருந்தார். ஆகவே அதனை மனதில் நினைத்தபோது துயரம் மேலும் பல மடங்கு அதிக

ரித்தது. ஒரு நாள் நாங்கள் ஐவரும், காலேயிற் புறப்பட்டுக் கால் நடையாக அவரைப் பார்க்கக் கலமுனை வைத்திய சாலேக்குச் சென்றேம். போம் வழியில் இருந்த சைவக் கோயில்கள், கிறித்தவக் கோயில்கள் யாவற்றிலும் தரிசனஞ் செய்து அவருடைய பிணி விரைவிற் சுகம் பெறப் பிரார்த் தித்துச் சென்றேம். அத்தனை அன்பும் பரிவும் அவர்மேல் எங்களிற்கு இருந்தது. அவர் சுகம் பெற்று வகுப்பிற்கு மீண்டும் வந்ததும் அளவில்லாக களி கொண்டோம்.

அவரைப்போல உயர்ந்த உருவத்திற்கு நீண்டு வளர முடியாவிட்டாலும், அவரது உயர்ந்த குணங்கள், நடை உடை பாவனைகளிற் சிலவற்றை மறைமுகமாகவும், பலவற்றை நேரடியாகவுங் கைக்கொண்டோம். அவரைப் பொல அட்சர சுத்தியாக எழுத. எங்கள் பெயரைக் கையொப்பம் இடப் பயின்றேம். அவரிடம் கல்வி கற்ற காலம் எங்களுக்கு ஒரு பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். அவர் தந்த கல்வி அத்திவாரத்தில் எங்களது எதிர்காலக் கல்வியை மட்டுமல்ல வாழ்க்கை நெறியையுங் கூடக் கட்டி எழுப்பினேம். அந்த அத்திவாரத்தில நிற்கும் நான், உலகளாவிய தமிழ்ப் பணி செய்யவும் 250க்கு மேற்பட்ட தமிழ் நூல்களைப் படைக்கவுந் தக்க திராணி பெற்றேன். இதன் பயனுகவே நான் இன்று கிழக்கிலங்கைப் பல்கலேக் கழகத்தில் இலக்கிய கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளேன் என்பதிற் பெருமைப் படுகிறேன்.

நான் அவரிடம் கற்ற இரண்டரை ஆண்டுக் காலக் கல்வியின்போது நேரடியாகப் பெற்ற அனுபவததிற் கண்டு தெளிந்த சில காரியங்கள் எனக்குப் பிற் காலத்தில் என் கற்பித்தற் பணியிலும், கற்பித்த பாடசாலேகளிலும் என்னிடங் கற்ற மாணவர்களிடங் கொண்ட ஆசிரிய மாணவ உறவிலும் பிரிக்க முடியாத பினேப்பை ஏற்படுத்தின.

பயிற்சிக் கலாசாலேயில் அவர் கல்வி கற்றகாலே அவருடைய கற்கை நெறிக்குக் கலாசாலே நிர்வாகம் நிதி உதவி செய்தது. இது மூன்று வருட காலங்களுக்குத் தொடர்ந்தது. பொதுவாக இவ்வாறு பெறும் நிதி உதவியை, உதவி பெற்றவர்கள் மாதாந்தரக் கட்டணமாகச் செலுத்து வார்கள். அப்படி அத்தொகையைத் திருப்பிச் செலுத்தப் பல வருட காலம் எடுப்பது வழக்கம். கிறிஸ்தவ மிசனரிமாரின் சமுதாயப பணிபற்றிய கட்டுரைத் தொடரை வரைவதற்காகன

தகவல் திரட்டும் பணியின்போது மெதடிஸ்த திருச் சபையின் வரலாற்றை ஆராய்வதற்காக அதன் கடந்த கால சபா சங்க அறிக்கைகளைப் படிக்க நேர்ந்தது. அதில் 45ம் ஆண்டு அறிக் கையில் இவரைப்பற்றி உயர்வான கருத்துச் சொல்லப் பட்டி ருந்தது. தான் பெற்ற நிதி உதவியை இவர் ஒரு வருட காலம் ஊதியம் பெறுமலே ஆசிரியப் பணிசெய்ததன் மூலம் திருப்பிச் செலுத்தி இருந்ததனைச் திருச் சபையின் சபாசங்கம் பாராட்டிக் கௌரவித்திருந்தது.

ஊதியம் பெறுது கற்பித்த அந்த ஒரு வருட காலத் திற்தான் அவர் நான் படிப்பித்த பாடசாலையிற் தனது பணியைத் தொடங்கி இருந்தார். அதை எண்ணிப் பார்த்த போது கடமை தவறுத கனவானின் கடப்பாட்டுக் காலத்தில் அவரிடம் கற்றவன் என்ற பெருமையை நான் உணர்ந்தேன். அவருடைய வாழ்க்கையில், நான் அநேக காலம் அவருடன் பழக முடியவில்லை. ஆனலும், இடைக்கிடை அவரைப் பயணங் களின்போதும் ஆசிரிய ஒன்று கூடல்களிலும, மெதடிஸ்த திருச்சபைக் கூட்டங்களிலிலுஞ் சந்திப்பதுண்டு. அப்போது அவர் என் சேம லாபங்களைக் கேட்டறிவதுடன் பல நல்ல ஆலோசனைகளையும் கூறுவார். அவற்றுள் முக்கியமானது; கற்றுக் கொண்டே கற்றவற்றைச் சேர்த்துக் கற்பி என்பார். அவர் அத்தகைய கற்பித்தலைத் தலைமேற் கொண்டிருந்தார் என்பதைத் தன் பணிக்கு வேண்டிய கல்வித் தகைமையோடு பின் வருங் கல்வித் தகுதிகளையும் மேலதிகமாகப் பெற்றி ருந்தார் என்பது அவரது ஆசிரியப் பணிக் கால அட்டவ ணையில் இருந்து தெரிய வருகிறது. அவைகள் பின் வருவன;

1. 1939. யாழ்ப்பாண ஆரிய திராவிடப் பாஷா விருத்திச் சங்கத்தாரின் பிரவேச பண்டிதர் பரீட்சை
2. 1942. தமிழ் ஆசிரிய சித்திர வரைதற் தராதரப் பத்திரம்
3. 1956. சுயபாஷா ஆசிரியர்களுக்கான விஞ்ஞானப் பாடப் போதனைத் தராதரம்.
4. 1957. ஆங்கில மொழி வழி கல்வி சாதாரணத் தரா தரப் பத்திரம்
5. 1964. ஆலோசக ஆசிரியர் தராதரப் பத்திரம்
6. 1955. உடற் பயிற்சி ஆசிரியர தராதரப பத்திரம்
7. 1940. பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கத் தரதரம்
8. 1958. தூய கணிதத் தராதரப் பத்திரம் ;

இத்தகைய மேலதிகத் தராதரங்களை அவரது மாணவர்களும் காலத்திற்குக் காலம் பெற வேண்டும். பலதைக் கற்றுத் தேர்ந்தே கற்பிக்க வேண்டுமென அவர் தன் மாணவர்களைக் காணுந்தோறும் போதித்தார். நானறிந்த வரையில் என் உடன் மாணவர்கள் இத்தகைய மேலதிகக் கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தனர். நானும் இத்தகைய கல்விப் பத்திரங்களுடன் வணிகத் தராதரப் பத்திரம், வரைதற் தராதரப் பத்திரத்தின், பழைய, புதிய பாடத்திட்டத் தேர்வுகளில், தமிழ், ஆங்கில மொழி வழி ஆசிரிய தராதரப்பத்திரம், சாரண ஆசிரியர் பத்திரம், ஆதியவற்றையும் பெற்றிருந்தேன். இவை யாவும் அவரது வழி காட்டலாலும் உந்துதலாலும் பெற்ற பயன்கள் எனல் மிகையன்று.

கனடாவில் 20 வருட காலம் புலம் பெயர்ந்து வாழ்ந்த பின்னர், 1999ம் ஆண்டு தாயகத்திற்குச் சென்றேன். அப்போது, அவரை ஒரு ஆலயத்திற் சந்திக்க நேர்ந்தது. பல ஆண்டுகளாகக் காண வேண்டுமென்ற வேட்கையுடன் இருந்த நான், அந்தத் தருணம் கிடைத்த களிப்பில் சுற்றுஞ் சூழல். பக்கத்தில் நின்ற மக்கள் கூட்டத்தில் நின்றவர்களைக் கூடக் கவனியாது அவரது காலில் வீழ்ந்து தொட்டு வணங்கினேன். அப்போது எனக்கு வயது எழுபது. அந்த முதுமையிற் கூட என் ஆசிரியரிக்குரிய மதிப்பையும் மரியாதையையும் அவற்றிலும் மேலான என் அன்பையும் செலுத்தக் கிடைத்த தருணத்திற்காக இறைவனைத் தோத்திரஞ் செய்தேன். என்னைத் தன் எண்பத்தோராவது வயதில் சற்றுச் சிரமப்பட்டு இனங்கண்டு கொண்ட அவர், அப்போது என்னை ஆசிர்வதித்துச் சொன்ன வார்த்தைகளுள் செல்வராசா! (அப்படித்தான எனனை அழைப்பது வழககம்) எப்போதும் நீ ஓர் நல்லாசிரியனாக இரு என்பது என் காதில் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அது என்றும் என் காதில் மட்டுமல்ல என் ஆத்மாவிலும் ஒலிக்க வேண்டும் என நான் விழைகிறேன்.

அன்று அவருடன் உரையாடிய போது, கடல் கடந்து 15000 மைல் தூர இடைவெளியில் வாழ்ந்தாலும் என் நடபடிக்கைகளை, தமிழ்ப் பணியை, நூற் படைப்புகளையிட்டு நன்கு அறிந்திருந்தார் என்பதை உணர்ந்தேன். இதுதான் ஆசிரிய மாணவ பந்தம் என்பது எனக்குப் புலனுயிற்று.

நான் ஆங்கில இலக்கியங் கற்ற ஆசிரியர் தனது முன்ன றையில் ஒரு வாசகத்தைச் சட்டமிட்டுக் காட்சிப் படுத்தி இருந்தார். அதில்; கடவுள்; மனித உயிர்களைப் படைக்கின்றார். ஆசிரியன் அந்த உயிர்களை மனிதனுக்குகின்றான். இந்த வார்த்தை எவ்வளவு பொருள் பொதிந்ததென்பது அப்போது துலங்கிற்று. உண்மைதான்! மாதாப் பிதா, குரு நமது வாழ்க்கையில் தெய்வம் என்பதும் இந்தப் பந்தம் நம் மரணம் வரையும் தொடர்கிறது என்பதும், தாய் பின்னர் தாரமா வதுபோலத் தந்தைக்குப் பின் குரு அமைகிறார் என்பதும் புரிந்தது. தன் பிள்ளைமேல் தந்தை எப்படித் தன் ஆயுளின் இறுதி வரை பந்தம் கொண்டிருக்கிறாரோ, அதுபோன்றே ஆசிரியனும் தன் மாணவன்மீது தன் ஆயுட் காலம் முழு வதும் தன் பந்தத்தால் ஆட்சி செலுத்துகிறார். இத்தகைய பந்தம் என்னிடம் உள்ளதா? 35 வருட காலம் ஆசிரியப் பணி செய்தபோது எனது மாணவர்கள் இத்தகைய உணர்வுள் ளவர்களாக இருக்க நான் அவர்களுடன் ஆசிரிய மாணவர் உறவை வளர்த்துக் கொண்டேனா என்று தற்பரிசோதனை செய்து பார்க்கிறேன்.

அவர்மேற் கொண்டிருந்த எனது ஆழ்ந்த குரு பக்தியின் தாக்கம் என் வாழ்க்கையில் எடுத்துக் கொண்ட முயற்சிகள அத்தனைக்கும் முன் மாதிரியாகவும் வழி காட்டா கவும் அமைந்தன. ஆசிரியன் என்பவன் தனது கற்பித்தற் பணியைச் சம்பளத்திற்கு விற்பவன் அல்லன். அவனது கடமை வகுப்பறைப் படிப்பித்தலோடுந் தேர்வுகளில் அவர் களைச் சித்தி பெறச் செய்வதோடு மட்டுமல்ல, அவன் வாழ்க் கையில் ஒரு பண்புள்ள மனிதனாக வாழ வழிகாட்டுவதும் ஆசிரியனின் கடமை என்ற தத்துவம் உடைய அவரை இவ்வாறு நான் இன்று நினைவு கூர்வதில் ஆத்ம திருப்தி அடைகிறேன்.

பாடசாலையிற் கற்பிப்பதற்கு வேதனம் பெற்றுக் கொண்ட பல ஆசிரியர்கள் இன்று தனித்து மாணவருக்குக் கற்பித்து ஊதியம் பெறும் அவலத்தைக் காணும்போது அவர் இரவு பகலாக எங்களுக்குப் பாடம் நடாத்தி குறைந்த காலத்தில் பொதுத் தெர்விக்கான நிறைந்த அறிவு பெறப் பாடுபட்டுழைத்த அவரது வாழ்க்கை இமயமாக உயர்ந்து இறுமாந்து நிற்கிறது. இரண்டரை வருட காலத்துள் அவர்

ஊட்டிய கல்வியின் துணையால் பாடசாலைக் கல்வியை மட்டு மல்ல அடுத்தடுத்த ஒன்றரை வருட காலத்தில்; பிரவேச பண்டிதம், ஆசிரிய தராதரப் பத்திரம், ஆசிரிய கலாசாலைப் பிரவேசம் முதலான தேர்வுகளிலும் சித்தி பெற வழி காட்டி யது என்பது ஒரு குறைவான மதிப்பீடு என்றே நம்புகிறேன். அதன் பின்னரும் எனது கல்வியை வளர்த்துக் கொள்ள அவர் இட்ட பலமான அத்திவாரம் என்பதே பொருத்தமான தெனக் கருதுகிறேன். கருதுவது மட்டுமல்ல நெஞ்சின் கருத் தாகக் கொண்டு எனது முயற்சிகள் ஒவ்வொன்றிலும் அவர் உறைந்து நிறைந்து இருப்பதாகவே நம்புகிறேன். நான் இயல்பிலே நிரம்பக் குழப்படி செய்யும சுபாவம் உள்ளவன். அதிலிருந்து தப்புவதற்கு நிறைய உண்மையை மறைக்க நேரிடும். ஆனால் எந்தப் பெரிய தவறிழைத்த போதும் அவர் முன்னால் எதையும் மறைத்ததில்லை . அவ்வளவு பக்தி அவர் பாற் கொண்டிருந்தேன்.

ஆசிரிய பயிற்சியை முடித்து கற்பிததற் பணியை ஆரம்பித்ததும் என் ஆசிரியரின பணிகளை முன் மாதிரியாகக் கொண்டு இயங்க வேண்டுமென ஆசைப்பட்டேன். அதற் கேற்ப எனக்கு முதல் நியமனம் கிடைத்த பாடசாலையில் ஐந்தாந் தரம்வரை வகுப்புகள் இருந்தன. ஆனால் அதற்குச் சில வருடங்களின் முன்னர் ஆங்கு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு வரை இருந்ததும் , அகாலத்திற் கடமை செய்த தலைமையாசிரியர் ஒருவர் தன் சுய நலத் திற்காக அந்த நிலையை மாற்றி விட்டாரென்றும் அறிந்தேன். அப்போது அங்கே தலைமையாசிரியராக இருந்தவரும் உயர் வகுப்புகளை நடாத்த விரும்பினாலும், தக்க ஆசிரியர் பற்றாக் குறை காரணமாக இயலா நிலையில் இருந்தார். அவருக்கு உதவ நான் ஒப்புக் கொண்டு, பாடசாலையை விட்டு விலகி விறுதாவாக அலைந்து திரிந்த மாணவர்களைச் சேர்த்து மேல் வகுப்புகளை அமைத்தோம். அதற்கு அந்த மாணவர்கள் உரிய தகுதியைப்பெற இரவு பகலாக ஓய்வு ஒழிச்சலின்றி உழைத் தோம். மேலதிக ஆசிரியர்களைப் பெற முயன்றோம். மூன்று வருட காலத்துள் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு வரை பாடசாலையின் தரம் உயர்ந்தது. தேர்விற்கு விட்ட 60 சத வீதமாணவர்கள் சித்தி பெற்றனர். இத்தகைய துணிகர முயற்சியில் ஈடுபட ஆசிரியர் திரு.பி.டி. ஐங்கரப்பிள்ளை ஆசிரியர் ஊட்டிய தைரியமும் வழிகாட்டலுமே காரணம்.

இப்படியான பணியால் நான் மாணவர்களிடம் மட்டல்ல கிராம மக்களிடமும் நல் மதிப்பைப் பெற்றேன். இந்த மதிப்பை அவர்கள் 50 வருடங்களுக்கு மேல் மனதில் நிறைத்திருந்தார்கள் என்பதை, அவர்கள், 2000 ம் ஆண்டில நான் இலங்கைக்குப் போனபோது என்னை அழைத்துப் பாராட்டியதில் இருந்து புரிந்து கொண்டேன். அப்போது என் முன்னாள மாணவர்களின் மகள் ஆசிரியர்களாக அங்கே கற்பித்தனர். அவர்களுடைய பேரர் மாணவர்களாகக் கற்றனர். இந்தப் பாராட்டை ஏற்றபோது நான் என் ஆசிரியரையே நினைத்து மனதார வாழ்த்தினேன்.

மேற்படி பாராட்டு விழாவிற்கு எனது முன்னாள், மாணவர்களில் காலமான ஒரு சிலரைத் தவிர ஏறக்குறையப் பலரும் வந்திருந்தனர். அவர்களில் அநேகர் வெகு தூரத்தில் வந்திருப்பதை அறிந்தபோது அவர்கள் என்பாற் கொண்டிருந்த அன்பைப் பார்த்து வியந்து போனேன். அவர்கள் யாவரும் அறுபது வயதிற்கு மேற்பட்ட முதியவர்களாகவே இருந்தனர். வாழ்க்கையின் பல துறைகளிலும் ஈடுபட்டு இளைப்பாறியவர்களாக இருந்தனர்.

பாராட்டு விழா மண்டபத்திற் குழுமி இருந்த அவர்களைப் பார்த்தபோது நான் 50 வருடங்களுக்கு முன்னர் விட்டுப் பிரிந்த காலை, எந்த உருவத்தில் இருந்தார்களோ அதே உருவங்களைத்தான் என்னாற் பார்க்க முடிந்தது. அப்போதுதான் என் ஆசிரியப் பெருந்தகை எனக்குக் கூறிய ஒரு உண்மை புலனாகிற்று. ஒரு ஆசிரியனுக்கு அவரிடம் கற்ற எவரும் என்றும் மாணாக்கர்தான் என்பதே அந்த மாபெரும் உண்மை.

தாரமுங் குருவுந் தலை விதிப்படி என்பார்கள். இவை இரண்டும் எனக்கு ஆண்டவன் தந்த மகா பாக்கியங்கள் என்பதிற் பெருமைப் படுகிறேன். அவற்றுள்ளும் என் குருவாக அமரர் பி. டி. ஐங்கரப்பிள்ளை அவர்கள் அமைந்தது என் பாக்கியமே. அவர் என்னை ஆட்கொண்டு தடுத்தாளா விட்டிருந்தால் இன்று என் ஆத்ம திருப்தி படுமளவிற்குத் தமிழ் செய்திருப்பேனே என்பது எண்ணிப் பார்க்க முடியாத காரியமே!.

o

அவர் அமரராவதற்குச் சில மாதங்களின் முன்னர் ஒரு மடல் வரைந்திருந்தார். முதுமையிற் தளர்ந்த கரமாயினும் அந்த மடலின் எழுத்துக்கள் மிக உறுதியான எழுத்து வரிவடிவங்களைக் கொண்டிருந்தன. அதுபோலவே அவரது ஆலோசனை அறிவுரைகளும் மிக மிக உறுதியானவையாக இருந்தன. அன்று என்னை அணைத்துக் காத்த கரங்கள் இன்றும் என்னை அணைத்துக் காப்பது போன்ற உணர்வை இந்த மடல் எனக்களித்துக் கொண்டே இருக்கிறது. அக் கடிதத்தில் அவரது ஆசிரிய ஆளுமை எத்தகையது என்பதை தெளிவாக்கி இருந்தார்.

இந்தக் கட்டுரை எனது நன்றி வெளிப்பாட்டிற்காக மட்டுமன்றி ஆசிரியப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இருப்பவர்களுக்கும் வழிகாட்டாக அமையின் நலமென்னும் எண்ணத்துடன் வரைந்த ஒரு சிறிய வேண்டுதலாகும்.

பல வருடங்களாக இந்த நன்றி உணர்வு மீக்க குரு பக்தியை வெளிப்படுத்த வேண்டுமென்ற எனது அளவு கடந்த அவா இன்று, இந்தக் காணிக்கையைச் சமர்ப்பிப்பதால் முழுமையுறுகிறதென்பதை நினைக்குந் தோறும் எனது ஆத்மா ஆறுதலடைகிறது.

ஆசிரியப் பெருந்தகை
அமரர் பி. டி. ஐங்கரப்பிள்ளை அதிபர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

1. பெயர்; டானியல் ஐங்கரப்பிள்ளை
2. தந்தையார் பெயர்; கதிரேசபிள்ளை பொன்னம்பலம்
3. தாயார் பெயர்; கந்தப்பெருமாள் இராசம்மா
4. பிறந்த திகதி; 5.5.1919
5. பிறந்த இடம்: பழுகாமம்
6. வாழ்ந்த இடம்; செங்கலடி. மட்டக்களப்பு
6. உடன் பிறப்புகள்; சந்தனப்பிள்ளை ஆசிரியை,
   தங்கச்சிப்பிள்ளை வேதாகம ஸ்திரி
7. திருமணப் பந்தம்; 20.8.1951
8. இல்லத் துணைவியார்; சின்னத்துரை லில்லி தங்கமலர்
9. திருமணம் நடைபெற்ற ; சாவகச்சேரி சி.எஸ். ஐ ஆலயம்
10. மக்கட் செல்வம்; பெண் மக்கள்; றூத் ஜெயரஞ்சனி.
    எலிசபெத் ஜயந்தினி,
    புதல்வன் ; வைத்திய கலாநிதி; சாமுவேல் தயாளன்.
11. மருமக்கள்; பொன்னு ஜெய சுந்தரம் (மேற்கு ஜெர்மனி) ,
    நல்லதம்பி லோகநாதன் (ஸ்ரீ லங்கா),
    சுமதி (லண்டன்).
12. பேரப் பிள்ளைகள்; ஜோய்ஸ் மீரா, ரூபன், நோயலா
    மிதுலா, எவிலின் மைதிலி, ராச்சற் பிரியா, ரமேஷ்.
13. கல்வித் தகைமைகள்; பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்
    (மட்/ அரசடி மெதடிஸ்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)
14. மேலதிக கல்வித் தகைமைகள் முன்னுற் தரப்பட்டுளளன
15. ஆசிரியப் பணி;
    அ) உதவி நன்கொடை பெறும் பாடசாலையில்; 12.5.43
    ஆ) அரசினர் பாடசாலையில்; 1.1.1963
    இ) அதிபராகப் பதவி; 1.8.1971
16. ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிய தினம்; 5.5.1975
17. இறைவனுக்குள் இளைப்பாறிய தினம்: 04. 06. 2004

கரந் தந்து காத்த ஆசான் என் ஐங்கரன்

ஆசிரியன் அறிவின் தந்தை

எழுத்தை எழுதி எழுதிய வற்றை இனங்கண்டு
வழுத்தும் அறிவென் வரத்தைத் தந்த வாத்திமையைத்
தொழுதுறு விறைமைத் தூயதாம் என்று தொல்லுலகார்
அழுத்தும் கூற்றுல் அவர்தும் பெருமை அறிந்திடுமே 1

பச்சைக் களியால் பாவை செய்து பரண்மேலே
உச்சச் சூட்டால் உலர விட்டு உருவாக்கி
இச்சகந் தன்னில் இயற்றிடும் இயல்பாய் ஆசிரியம்
அச்சங் கொண்ட மாணவர் தம்மை ஆக்கிடுமே 2

கல்வி யென்னும் கனலால் இறுக்கிக் கலேதேர்ந்த
நல்ல மனிதப் பண்பார் பாவை எனவாக்கி
வலலான் என்று மானிலம் போற்ற மாற்றிடுநல்
நல்லான் ஆசிரிய நாயகன் நமக்கொரி நல்லிறையே 3

மாதா பிதாகுரு மாண்புறு மூவரும் மாநிலத்தில்
தோதா யமைந்தால் துயருறு உலகிற் துன்பமில்லே
ஓதா நூலும் உயர்ந்த மதமும் உரைமொழியும்
பேதாய் பாரில் பிறிதும் உளவோ பெரிமையதே 4

என்குரு இறைவன் தநத ஈவு

எந்தன் வாழ்வில் இறைவன் தந்த வரங்களுள்ளே
இந்த மூன்றுடன் இன்னும் ஒன்றுய் இணைதாரப்
பந்தம் கிடைத்த பாக்கியந் தன்னுல் பண்ணியவை
அந்தோ சொல்லற் கரியவை அவையிறை ஆசிர்களே 5

தவறுகள் செய்தாற் தன்பிழை மறுக்கச் செய்தவற்றை
தவறென உணர்ந்துந் தகாத பொய்சொலித் தப்பிடுவார்
உவண மென்ன உள்ளம் அறிந்த உயர்குருவாம்
கவனங் கொண்ட ஐங்கரன் கண்ணிற் தப்புவரோ 6

மெய்யை உரைத்தே தப்பிடுவேன்

பொய்யை உரைத்தே பொல்லாச் செயலேப் போக்கிடாமல்
மெய்யை உரைத்தால் மட்டுமே தவறை மன்னிக்கும்

அய்யன் ஐங்கரன் ஆகவே அவர்முன் நடந்தவற்றை
மெய்யாச் சொல்லி மேவுந் தவறை மிடைத்திடிவேன் 7

ஆசான் தனது அன்புடைச் செயலால் அறிவதனால்
பாசம் பரிவு பார்த்துப் பற்றிடும் முன்மாதிரி
வாசம் மிக்க வாழ்வால் தன்னிடம் கற்பவர்கள்
மோசம் போகா முனிவராய் வாழ வழிகாட்டி 8

ஐங்கரப் பிள்ளை என்றிடும் ஆசான் அன்றளித்த
மங்குரு அறிவால் மாணவர் பலபேர் மானிடத்தின்
தங்கமாய் ஒளிரத் தகவுறு வழியில் வழிநடத்திய
தொங்கலில் மலராய்த் தொங்கிட கிடைத்த பேறுற்றேன் 9

பதினேந் தாவது வயதுப் பள்ளிப் பருவத்தே
பதித்த சங்க காலப் பண்புடைக் கட்டுரையென்
விதித்த பாடநூல் வித்தினுல் விரிந்த நாட்டமதால்
கதித்த உணர்வாற் கற்றவை கலாநிதி யாக்கியதே 10

அவரிட்ட அத்திவாரத்தில் உயர்ந்தேன்

அத்தகைத் தமிழினத் தருமை தொன்மை ஆன்றறியும்
முத்தமிழ்ச் சிறப்பு மொழிந்திடு இலக்கிய இலக்கணத்து
அத்தி வாரமாம் அறிவறி நுட்பமா தியதந்த
சித்தனுர் ஐங்கரன் செறித்தவை என்தமிழ்ப் பணியானதே11

மூன்றே மூன்று வருடம் மொழிந்த அவருரைகள்
சான்றேன் சமயஞ் சரித்திர வல்லுநன் சகலநூல்
ஈன்றுன் எழுத்தை எடுத்தாள் இயலான் இன்கவிசெய்
ஆன்றேன் பகுத்தறி அறிவன் ஆதிய ஆக்குமென்ற 12

அய்ங்கர ஆசான் தொடுத்த மாணவர் மாலையில் நான்

எடுத்துரை மெய்த்த இயல்பும் இவற்றுல் உயர்ந்தவர்தான்
தொடுத்த தொடையில் தூங்கிடும் சிறியதோர் மொட்டாகக்
கொடுத்து வைத்த மாண்பைக் கூறுபோ தென்கண்கள்
மடுக்கும் அன்பின் மனநீர் மழையாய்ப் பெருகிடுதே 13

கற்றுக்கொண்டே கற்பித்த கல்விமான்

கற்றுக் கொண்டே கசடறக் கற்பித் துணர்த்துகின்ற
சொற்றிறன் சுவையுஞ் சோர்விலா முயற்சி முன்னெடுப்பும்
பற்றுள மாணவ பந்தமும் பராபரன் தன்கரத்தில்
உற்றிட ஈந்ததை உன்னத ஞக்கிடு முந்துதலும் 14

ஐந்தாண்டுக் கல்வியில் ஐந்து பொதுத் தேர்வுகளிற் தேர்ச்சி

நோக்காய்க் கொண்ட நுண்மாண் ஆசான் தனதுமுதல்
ஆக்கமாய்க் கிடைத்த அருப்பெரு மைங்கரன் கற்பித்தற்
பாக்கியப் பயனுய் பள்ளிப் படிப்பி முடித்தவுடன்
தேக்கிய மூன்று தேர்விலே தோன்றித் தேர்ந்தனனே 15

அடுத்த விரண்டு ஆண்டுள் ஆசிரிய தராதரத்தை
எடுத்த பத்திரம் இயற்தமிழ்ப் பண்டித மெனுமிமய
கொடுமுடி அடியின் சாரலில் குந்த முயலும் தேர்வாக
தொடுத்த நுழைவுத் தேர்வு தன்னிலுந் தேறினனனே 16

அந்தக் காலக் கட்டுள் கற்பித் தலிற்பயிற்சி
உந்தும் உட்புகு தேர்வை யுமுடன் எழுதியதால்
முந்திடம் பெறவே முடிந்த தப்போ துணையானவை
அந்தமூன் முண்டிலேங் கரனுர் கரங்கள் அருளியதே 17

இதுபோல் அவரின் ஆசிரியப் பணியின் இரண்டாவது
முதிர்ந்த கனியாய் முனைந்தவர் நால்வர் ஆசிரிய
நிதியைத் தேடி நிறைவே பெற்றனர் நிகழ்ந்தவிவை
விதிபட நன்னூல் விதித்தவை கற்பித்த வித்தகமே 18

எந்தன் மனதில் இளமைப் பருவ எண்ணங்களில்
செந்தமிழ் இனிமைச் செம்மை செழுமை சீர்பற்றித்
தந்தவோர் படிப்பின் தகையால் ஐங்கரன் எனையாண்டு
இந்த நிலைக்கு உயர்த்தினன் என்பதன் சாட்சியனே 19

பாராட்டிற் பூரித்தேன்

மட்டக் களப்பு மாநில எழுத்தா ளர்மன்றம்
இட்டவென் எழுத்துநூல் அறிமுக விழாவின் போதுவந்து
பட்ட மளித்த பாங்காய்ப் பகன்ற பாராட்டுரை
எட்ட முடியா இடத்தெனை வைத்ததை எண்ணிடும்பேபா 20

இன்றுமென் தமிழ்ப்பணி இயற்றுதல் இயக்க ஈடுபாட்டில்
ஒன்றி நின்றென் உச்சியில் உள்ளங் கையினுலே
நன்று வாழ்கசெல் வராசா வென்று நவில்வதுபோல்
பொன்றிப் பொலிய உள்ளமே பூரித்துப் பொங்குவனே 21

உனது நூல்களில் ஒருசில படித்தேன் அவற்றுள்ளே
மனதில் நிற்பது மாபரன் இயேசு புராணமதில்

கனமாந் திருமறைக் கருத்தைத் திரட்டிக் கவியாக்கிய
தனத்தை மெச்சினேன் என்ற வாழ்த்தால் நான்பூரித்தேன் 22

அஞ்சுவ பாவத் திற்கே மற்று எதற்குமஞ்சேல்
துஞ்சினும் எதிர்த்துத் துணிந்து நின்று தொடர்ந்துசெய்
விஞ்சையர் ஆர்க்கும் விரிகரப் பாலன் வினைதீர்ப்பான்
பஞ்செனப் பறக்கும் பாடெனத் தேற்றிய ஐங்கரனே 23

உடலுடன் பிறந்தே கொல்லும் நோய்பொல் உள்ளத்தே
மடமறப் புகுந்த மாண்புறு அறிவுந் திரைநரையால்
உடலது தளர்ந்த போதிலும் அகலா ததையீந்த
கடவுளாம் குருவின் கருணைக் கொடையாக் கண்டேனே 24

கல்லில் எழுத்தாய்க் கல்வியைத் தந்த கரங்களினால்
துல்லிய மாக எதனையும் உணரும் ஐம்புலனால்
புல்லிய உந்தன் புத்தியின் கூரிய புகட்டுதலால்
நல்லறி வுற்றவுன் மாணவர் என்றும் நல்லவரே 25

தன்னைப் போற்றுமர் தன்பினர் வாழ்வுறத் தன்னையீந்
துன்னிய பெருமை தனையுன் உறவினர் உரைக்கின்ற
இன்னுரை கேட்டேன் இதயந் துள்ளி என்குருவோர்
பன்னலம் படைத்த பண்பினன் என்று பாடிடுதே 26

செய்யுஞ் செயலில் சிந்தனை தன்னில் செய்தவற்றின்
உய்யும் வெற்றியில் உயர்ச்சி நிலையிலே எவரொருவர்
மெய்யாய் அவைகளை மேவிய காரணன் என்றிடுங்கால்
தெய்வம் அன்ன திறல்மகன் அவனே குருவென்பார் 27

அய்யா அய்ங்கரப் பிள்ளையென் வாழ்வில் ஆழமுற்று
வயயங் காக்கும் வணங்கற் குரிய வாலறிவன்
தொய்யேன் உந்தன் துணையெனக் கிருக்குங் காலம்வரை
மெய்யிது என்று மேன்மை சொல்லிநான் வாழுவனே 28

(இவ்விரங்கற் பாக்கள் திரு, பி.டி.ஐங்கரப்பிள்ளை ஆசிரியர்
இறைபதம் எய்திய செய்தி கேட்டு இரங்கியவை)

The Hands That Shepherded Me on the Path of Service to the Tamil Language – 3

(A glimpse into my past as narrated by
Navetkuda Eliyathamby Thangaraja
(Former Senior Officer Of Centrel Bank of Sri - Lanka)

I started my schooling in the year 1934. I had every opportunity to have joined an English medium school. All along the way however, there was an unseen hand that coerced me to continue my studies in my mother tongue - Tamil. I feel that it was my destiny that guided me along the way. Today as a writer, I am known all over the world. My books are found in the shelves of the libraries in many countries. This article I write today, wherein I am going to discuss today the educational development, from the early period to the present day, is going to be my 254th publication. When I pause for a moment and contemplate on my writing career, I feel immensely proud of myself, for having chosen my studies in the Tamil medium. I thank my own destiny. Many of my friends and colleagues, who chose to join the English medium, became successful government servants and university graduates, but their names disappeared, with their demises or became non-entities. I would have been one among them, had I too went on to study in the English medium. The more I write the younger and wittier if not arrogant, I become. I am old and sick, but that doesn't bother me at all. I sit in front of my computer and pump out hundreds of sheets of paper, containing verses sometimes running into thousands and articles on varied subjects. Thus, writing has become the bone and flesh and the inner core of my being. Even after my demise, I will be living among my books. That will be the epitome of my life.

I now remember my childhood days when, children at my age chased cattle, noosed birds, climbed trees, played marbles or played cashew nuts or swam in the crocodile infested lagoon nearby; or played "kavadi", I found myself learning to read and write on Palmyra palm-leaves, at the feet of my master, in the veranda of his house or committing to memory what my teacher had imposed upon me. That is how my career in writing began. That was the Guru "Sheisha" system that was very common during those days; a system that supplemented the elementary village school teaching, provided by the Christian Missionary System made available to the rural kids, by the Colonial Masters.

o

The educational development in the country, more so in the Batticaloa region in East Lanka, lies entwined with the structure of the political development in this country. For the purpose of this article and to place educational progress in this region, in proper sequence, I would like to divide this country's history into three major periods, namely-

1. The period prior to the 16th century. leading up to the arrival of the Portuguese in 1505.

2. The period commencing with the arrival of the Portuguese in 1505, to the period ending up o 1948, with the departure of the British, after the Declaration of Independence.

3. The Period commencing with the departure of the colonial masters, to the present day.

I would like to mention at the outset the foreigners did not come here to play cricket or sight seeing. They were here mainly and strictly on business. They came here to take back home the riches found in this country. In doing so, they rode on the back of the natives who lived here. While some natives fought tooth and nail, many aided and abetted them.

The period prior to the arrival of the Portuguese, many parts of Sri Lanka (Formally Ceylon) were ruled by Indian Kings, who descended from the Chera, Chola and Pandiya dynasties. Immigrants from Lala of Bengal and Invaders from Kalinga of Orisa. I have mentioned in my book "Mattakkalappu Maanilathin Pandai Varalaatru Adichuwadugal-Part 1 & Part 2", confirms this in unequivocal terms, the last king who ruled the "Batticaloa" region being king Mahon and Kulakkoatan.. These kings, they themselves being well educated set up or organized teaching centers in public places, such as the premises of Hindu temples, and abodes belonging to learned men. Learning was voluntary. In many instances, the students in return reciprocating their services in rendering various help to the master. The subjects taught were few, such as medicine (Treating the sick and injured), Justice (Human rights and human relationships), Religion (Studying the Saiva philosophy and religions Scriptures), Literature (study of

I would like to mention at the outset the foreigners did not come here to play cricket or sight seeing. They were here mainly and strictly on business. They came here to take back home the riches found in this country. In doing so, they rode on the back of the natives who lived here. While some natives fought tooth and nail, many aided and abetted them. At least until recent time, it was this impression that was wildly touted everywhere. But we have in our thirst for political power, knowingly or unknowingly, reversed this situation. The leaders themselves who fought to free their countries from the yoke of foreign rule, today stand disillusioned, seeing the pathos and the chaotic situation surrounding us. Today we live in a dangerous situation where there is no respect for the rule of law. The fence that is built to protect the crops is actually destroying the crops. There is a flagrant violation of human rights everywhere; not only in this country but in all the countries that seceded from foreign rules.

Ethnic cleansing, abductions, rapes, a racial majority imposing its will on a racial minority, home invasions, murder and mayhem have become the order of the day. Roads are blocked and public transport system curtailed to prevent food, medicine and other essential items reaching a group of people, causing economic strangulation. These are all man-made disasters, corresponding to the international convention on genocide. The fragilities and the malaise that were lying submerged had been brought to the surface by the recent natural disasters that struck the Asian countries. The situation is so critical that a man cannot go to his work-place and return home safely or return in one piece. So are the safeties of students going to schools. There is no guarantee for their safe return home. The invaders killing the natives is one thing but the natives bludgeoning their own people in their struggle for power is yet another horrible thing.

These kinds of dastardly acts of human right abuses have become the norms in almost all the countries that fought and seceded from foreign rules, creating an impression that we are not fit enough to rule ourselves. Of course the foreigners ruled us with an iron fist, but however, there were no such gross abuses during their time, making inroads into personal safety. The rule of law was there in place for all. Even a cattle thief was traced and brought to book under the laws of the land. A man was able to walk into a police station, seeking justice without fear or intimidation, expecting a fair and just treatment. That guarantee does not exist now. The question in the lips of everyone foremost is "Are we safe in our own land under our own rule?" The answer is "We are certainly not". The foreign masters of course enriched themselves out of resources found in countries they invaded.

But they reciprocated with equal strides in investments. Examples are their investments in the plantation sector industries, their investment in railways and road transport with bridges spanning the length and breadth of the country, creating millions of jobs for the native people, the benefits of which we enjoy even today. Have we, on the other hand made any qualitative and quantitative enhancement in the pattern of these investments to a visible level? We could have certainly done better? Have we? But our squabbling on politics has made this God given beautiful country like a garland in the hands of a monkey, torn to shreds. There is a saying "Devils dare where angels fear to tread". Under the foreign masters we trod the roads with no fear but we fear to tread them now! Can we call ourselves a civilized nation?

One may wonder how the North and East came to be under the reign of Indian kings; even the last king of Kandy surprisingly was a Tamil. This is easily explained. The first and the foremost thing is the close proximity between the two countries. The second reason was the lucrative trades between both countries, Sri Lanka being a rich source for spices, elephant tusks, hardwood timber, paddy (Rice), precious stones (Gems) and salt. The third factor was the wind pattern that facilitated safe passages for sailing vessels between the two countries. Compared to the severe risks taken by our colonial masters in reaching our country, the journey to the South Indian coast to this country was a free ride. In the book "Mattakkaloppa Maanmium" we find that the child Aadakasavundari who was set a float in the Indian coast was found safe and sound in this Island's coast at Panama, off Thiukovil in the East. This was due to the wind pattern that carried the baby safe, not to mention the arrival of Prince Vijaya and his henchmen to this Island by the same East-West directional wind pattern.

Now let me come to the contributions made towards the educational development by the European invaders namely, the Portuguese, the Dutch and the English respectfully. The invaders needed the support of the native people to continue their occupations here; since bringing men from their own countries was more time consuming and risky. They realized that by teaching the natives to read and write would help them in many ways. They knew for certain that once the local people became educated, they will be happy to receive employment opportunities under them, by which they will in turn not only become faithful to them but also help them to assist them in their administrative machinery. So they

raised the green flag to their own Christian missionaries to build schools in every village and run them. Prior to the arrival of the colonial masters in this country, we never had anything, that we could have called 'a system of mass education'. Only a fortunate few, drawn mostly from the hierarchy of the society had the opportunity to learn.

That too at the feet of a master in his private residence or in the precinct of a temple. There were no schools as such, where a child wanting to learn, could have found a place. The feudalistic and the caste system that prevailed then, denied such opportunities to such enmasse, learning, which contributed to the high rate of illiteracy. A breakthrough came when the missionaries under the invaders' reign, opened up schools in every nook and corner of the country. Thus, the colonial masters under these circumstances, gave the native people their FINEST GIFT of a system of universal education to all and sundry, with no distinction based on caste, creed or affluence, for which the native people should be ever grateful. The missionaries also built churches in every part of the country to propagate their religion. The process of proselytism undertaken by the missionaries was a blessing in disguise. They even went round visiting houses, canvassing and convincing parents about the benefits of pursuing careers out of learning.

The schools they built were well ventilated with benches and desks for children to sit and learn comfortably, where the students also had access to books and other facilities. At a time Malaria being the number one killer disease, the missionaries made great sacrifices, by choosing to live in rural conditions. They also built hospitals to mend the sick, bringing their own medical personnel. As I mentioned elsewhere, when the British parted us in 1948, they handed over on a gold platter, all that they cherished and built up meticulously over a period of several centuries, which included of universal system of education, a Judicial system par excellence, a universal suffrage and higher seats of learning that produced some of the finest academics, medical, legal and civil list professionals, comparable to the ones found in their own countries.

The universal suffrage they left behind, by them has become the power of the despots in today's politic. Thus, what the colonial masters started in small scales, with their own self-interest, of course, got blown up to a level, comparable to the standard of education that prevailed in some advanced countries, by the time we dictated to the British in 1948, that the time had come for them to pack up their bags and leave the country lock-stock and barrel. The big question that pops up in our mind foremost today is whether couldn't have we done better?

I commenced my studies in 1934. By this time the Christian missionaries had put in place a standardized system of basic education, throughout the island, based on their European model. Schools were housed in suitably well lit buildings with seating arrangements for students. The children had access to writing and reading materials. Even the schools ran by the Christian missionaries in India were almost on the identical model. In addition to the usual subjects such as Tamil language, Tamil literature and Arithmetic, the curriculum was later expanded to include subjects such as History, Geography, Hygiene, and Physiology and so on. The Muslim children had their education in elementary Muslims schools called Mathrases while the Buddhists children had their learning in Previnas.

After I became a Tamil Trained teacher, I spent my first six years teaching in government schools. I spent my next five years teaching in schools managed by the Christian missionaries. Thereafter till my retirement from teaching in 1984, I taught in government schools once again. During this period, I had the fortune of teaching in Tamil, Sinhalese and Muslim schools. Using the wealth of experience I gained in my teaching career, together with information I gathered from a set of documents compiled by the Christian Board, I wrote a series of articles in the Christian magazine called "Sumai Thanghi" about the schools and the educational services rendered by the Christian missionaries in this country. This report came in the form of a book in 1985 under the title "Christhava Missionarimarin" School Services meaning the social services rendered by the Christen missionaries. The publication contained statistical data in the area of education undertaken by the Christian Board in Sri Lanka and abroad. Based on the information found in this publication it was found that:

1. The literacy rate was found to be very low and about one in a thousand was able to read and write.

2. In countries such as India, China and Europe there were plenty of books and other reading materials. But however, only a handful of people who had the capacity to make use of them. There was a lack of reading habits among the people. On the contrary, the learned were very well respected and honoured by the society. The reading materials were very carefully preserved and well maintained.

3. Though several ancient languages and dialects went out of popular use their literary works and literary grammatical rules remained well safeguarded and protected. The people remained detached from reading them or deriving any gain out of them.

4. The Christian missionaries saw that education was made available to each and everyone without any distinction based on caste or creed. Before their advent, education remained restricted among a fortunate few who followed it under the Guru-Sheisha system prevailed then. Many enriched their knowledge by listening to discourses, provided at temples, during festival times.

In the early days the literary, religious, medical and other writings of the Indians, the Arabs, the Chinese and the Turks were coloured by astrological thoughts. Contrary to this concept, the Tamil literary works were found in the form of Sangam Literature; a form unique in nature and not comparable in any other languages; a difference noted even by the International Languages Research Center in Sweden.

Around the year 1950, the need for higher level of education that will ensure employment opportunities and entry into higher seat of learning was strongly felt. By 1960, the quality of teaching provided by the missionary schools made a substantial stride in meeting this dire need, supplemented by the schools that were established under the auspices of the Ramakrishna Mission. In 1960, when all the schools were brought under the control of the government administrative machinery – the level of education was standardized island-wide, thus making the pursuit of higher education a personal choice to every student.

I was born in an agricultural rural environment, where the children always helped their parents in their employment activities. This saved them from hiring outside labour. This also gave the young ones the opportunities to understudy their parent's traditional source of income. The elementary rural schools having classes only up to grade five augmented the supply of child labour. Quite contrary to this general pattern prevailing in my area, my ease was a little outside this spectrum, with my father being engaged in business in the Batticaloa town, which is about 12 miles away from my native village.

I was the only child in our family. I being the mother's pet, my father's effort to put me in an English school in the Batticaloa town did not work out. So, I had the opportunity to continue my studies in my village school, which had classes only up to grade 5. After passing my grade 5 level, I was at a crossroad not knowing what to do next. The dilemma did not last long. Continuing my studies beyond grade 5 became a compulsion with my father's sister and brother themselves being trained teachers, living close to the town. Beside, my father himself was an under-trainee teacher who forsook his studies, to join

his father in his business. So, my father had made all arrangements to admit me to the Batticaloa Methodist Central College; an English medium school for my higher studies. I was to stay with my grandparents at Kalladi a village not very far from my town school. But once again the unseen hand intervened, preventing me from going to that English medium school.

One day, I was seated in an empty desk and was just whiling away my time, thinking mostly about my intended admission to my town English school, after the New Year holidays. I saw a very tall person with curly hair, wearing the usual white national costume that teachers normally wear, walking into our school. He went straight to the Headmaster. The Headmaster received this gentleman with a beaming smile, offered him a seat and both of them began chatting. During their conversation, I saw this new person turning around and surveying the whole class. Once or twice I saw the Headmaster pointing his finger toward me and the visitor too turning his head towards me and trying to draw my attention. I was clueless as to what was happening between the Headmaster and the tall and handsome visitor. I felt my heart doing a little overtime, pumping out more blood, caused by my curiosity to learn what was happening and how I came to 'fit' into their animated conversation. Suddenly everything was laid bare when the Headmaster called me by my name and told me over the visitor shoulder that "You need not go to the town school anymore to continue your studies beyond grade 5 and that you can continue your studies here. We are getting a new teacher," he said. I was really overjoyed when I heard him say that. After all I can continue to stay with my mother I thought. This news actually brought more joy to my mother too.

The unseen hand that led me on the path of service to the Tamil language which I referred to earlier was actually refers to the appointment of Mr. P.D. Ayngarapillai, an accomplished full-fledged trained teacher, who hailed from the village of Palugamam a village just across the lagoon on its western shores. Mr. Ayngarapillai after having spoken to the Headmaster, walked up to me and in his customary soft

voice, asked for my name and about my parents. With all respect, I stood up and mentioned my name and other details he asked for. At the end, he placed his hand on my shoulder in a fatherly way and said "Don't worry I will make your dreams come true." With that, began our teacher-student relationship which lasted until his demise on June 4th, 2004.

In those days, schools that had classes beyond grade 5 level, presented students for two public examinations, namely the Junior School Certificate (J.S.C.) examination and the Senior School Certificate (S.S.C.) examination. The grade 6 class took off with me as the only student. The news of the appointment of Mr. Ayngarapillai brought in four more students, who left earlier into the flock. The new teacher spent several extra hours each day, conducting classes for us. I passed the J.S.C. examination with flying colours. I did not let him down either in my S.S.C. examination, which too I did pass very well. The other four students who enjoined me too, did very well in the subsequent years. The news of our successes spread like wildfire, prompting the popular 'Virakesari' newspaper carrying an article congratulating the new teacher's skills, in making the students pass within such a short span of time. The school management as well as the parents appreciated the hard work put by both the students and by Mr. Ayngarapillai, the new teacher.

The gates of the teacher training college were opened to receive us as Teacher-Trainees. Today, the four contemporaries of mine, having served their full lives as teachers and ending up finally as Principals, are living in retirement, just like any other government servants. On the other hand, me with the blessings of my revered teacher, the Late Ayngarapillai, whose appointment helped me to remain in the Tamil medium school, is today still on a long journey with my career as a writer, with this publication being my 254th book, authored by me. Even after my demise, I am sure that I will continue to live among my books.

The Late Ayngarapillai was no mean an ordinary teacher like any other. It is said that good teachers are born but not made. In his case, he was born as one. He loved his students

like his own children. The students in return, reciprocated with due respects by becoming the torchbearers of his selfless service to the students in their own lives. The following example demonstrates in unequivocal terms the sense of pure respect his students had of him. We found that suddenly he stopped coming to school. On inquiries, we came to know that he was admitted to the Batticaloa civil hospital, where he was being treated for 'Tetanus'; a near fatal disease. It was a very strange coincidence that it was a week ago; he conducted classes about the seriousness of this disease. This hospital was about 12 miles from our school. The five of us decided to go on foot to see him. On our way, we stood in front of all the Hindu Temples, all the Churches and the Mosques (In Batticaloa, the Tamils sometime offer prayers at Muslims' mosques and likewise Muslims' offer prayers at Hindu Temples.) praying for his speedy and safe recovery. We were very happy to see him back in school, a few days later; fully recovered.

Mr.Ayngarapillai did not stop with teaching only the texts. In addition, he taught us to be good citizens. He taught us to keep our head high and treat others with respect and compassion. He was a source of high inspiration to all of us. Till today we consider our days under his stewardship, as our 'Golden Days' of our lives. The little seed of guidance he invested in me, bestowed on me the Honorary Degree of "Doctorate in Literature", conferred on me by the Eastern University.

I did not, for a long time, have had the fortune to have associated with him quite often very closely. I had the opportunities of meeting him a few times at church meetings and in buses while travelling. At every such meeting, he treated me, like one of his students of bygone school days. I in turn, paid my respect as my teacher. Having lived in Canada for more than 20 years, I went to my motherland in 1999. During my visit I happened to meet Mr. Ayngarapillai in a church. I was very happy to see him after a sojourn of several years, I was so overwhelmed with emotion, I suddenly fell on his feet and sought his blessings in the holy precinct. I was 70 years then and he was 81. He held me and said "Be a good teacher." I still hear these words ringing in my ears. He reminded me that he was aware of my literary works and that he had occasions reading a good many of them. I remember

my English language teacher who had a quotation painted on the door of his room, which read "God creates people and teachers create men out of them." This saying dictated to me the services rendered by a dedicated teacher like the Late Ayngarapillai. He was really an accomplished teacher, with several other qualifications to his credit besides his main qualification as a trained teacher. He possessed additional qualifications in the following examinations:

1. 1939 – Jaffna Ariya-Dravedia Pasha Viruthi Sanga Pundit Entrance Examination

2. 1940 – British Red Cross Society Certificate Examination

3. 1942 –Tamil Teachers' Drawing Certificate Examination

4. 1955 –Teachers Physical Education Examination Certificate.

5. 1956 –Science Teaching methods for Vernacular Teachers Examination Certificate.

6. 1957 –English Language Certificate Examination (Ordinary Level)

7. 1958 –Pure Mathematics Examination Certificate
8. 1964 –Advisor – Teachers Examination Certificate

The array of his additional qualifications inspired me to follow his example. In like manner, I upgraded myself with passes in all the above examinations. Today, we find many teachers conduct, private classes outside their school hours for the purpose of making more money; sometimes to the extent of neglecting the quality and quantity of their teaching in schools. Compared to this, the sacrifices made by the Late Ayngarapillai by conducting several hours of free extra classes, spending days and nights was really a pontification of his sincerity to his noble profession as a teacher. I found a note in one of the Methodist Mission's Education Report, in which the Methodist Mission authorities' placing on record, their great appreciation of Mr. Ayngarapillai, for not receiving any remuneration during the 1st year of his services to the teaching profession; which the Methodist mission reciprocated in wiping

out the allowances paid to him during Mr. Ayngarapillai's Teacher Training period.

When I joined the teaching profession, I was initially posted to a school which had classes only up to grade 5 level. I had the fiery urge to do something on the line my revered teacher Mr. Ayngarapillai blazed. During the course of my teaching in that school, it came to light that the incumbent teacher purposely for his own selfish convenience discouraged and disbanded classes beyond grade 5 level. I went around shopping for the names of students who were willing to attend higher classes. I received a spontaneous response to my search. Within a comparatively short period of time, our school presented candidates first to the J.S.C. examination, leading up to the S.S.C. level in the following years. When I returned to my motherland once again in the year 2000, my students having learned of my arrival, organized a meeting to felicitate me. A few days prior to his demise, I received a latter from my Guru and mentor. His handwriting was still steady and flawless, despite his old age. I lost comfort and grieved at the news of his passing away. Today I pen this article as a tribute in his memory, his scholarly nature and above all, for shepherding me on the path of service to the Tamil Language.

The Biogrphical skatch of Late P.Ayngarapillai

1. Name; Ponnampalam Daniel Ayngarapillai
2. Name of Father; Kathiresapillai Ponnampalam
3. Name of Mother; Kanthaprtumal Rasammah
4. Date of Birth; May 05. 1919
5. Place of Birth; Palugamam
6. Sisters; i). Mrs. Santhanapillai
   ii). Miss. Thangachipillai Rev Sister
7. Date of Marriage; August 20. 1957
8. Name of Wife; Mrs. Lily Thsngamalar
9. Place of Marriage; I.S.C. Church Chavakacheri
10. Childern ; i) Ruth Jayaranjani ii) Elizabeth Jayanthini
    iii). Dr. Samuel Thayakan
11. Sons - in - Law: ii) Mr Ponnu Rajasundaram - West Germany
    ii) Nallathamby Loganathan - Sri - Lanka
12. Daughter - in - Law ; Ms. Sumathy - london (UK)
13. Grand childern ; i) Joyce Meera ii) Ruban,
    iii) Noyala Miyhula iv) Elvin Mythily
    v).Richard Priya vi) Ramesh
14. Services; i) 12, 05, 1943 to 31. 12. 1962 Assistant Teacher
    ii) 1.1.1963 to 31.07. 1971 Principail
15. Date of retirement: may 05. 1975
16. Made Peace with Maker; June 08. 2004

எனது ஆசிரியர்

அமரர் பி. டி. ஐங்கரப்பிள்ளை

அவருக்கான இந்த அன்புக் காணிக்கையைச்
சமர்ப்பிக்கும்

எழுத்தாக்கத்திற்கான
தகவல்களையும் ஆவணங்களையும் நிழற் படங்களையுஞ்
சேகரித்து வழங்கிய அமரர் பி.டி. ஐங்கரப்பிள்ளை அதிபர்
அவர்களின்
இளைய தங்கை திருமதி நேசம்மா அவர்களுக்கும்
அவரது கணவர் வித்துவான். க. செபரெத்தினம்
அவர்களுக்கும்.

பல நாட்களுக்கு முன்னரே என குருவின் வாழ்க்கை
பற்றிய பல தகவல்களை எனக்கு தெரிவித்த
அவரின் தம்பி அமரர் கந்தையா ஆசிரியர்,
மெதடிஸ்த திருச்சபை ஊழியர் அவர்களுக்கும்
இதனை ஆங்கிலத்திற் படைத்தளித்த
நாவற்குடா திரு. இளையதம்பி தங்கராசா
(இலங்கை மத்திய வங்கி முன்னை நாள் முதுநிலை அதிகாரி)
அவர்களுக்கும் எனது நன்றிக் கடப்பாடு உரியதாகுக

அத்துடன் சம்பந்தப்பட்ட மட்டக்களப்பு குருக்கள்மடம்
மெதடிஸ்த மிசன் பாடசாலை. அங்கு பல வருடங்களாக
இடை நிறுத்தப்பட்ட உயர் வகுப்பு என்னுடன்
தொடங்கியதை அடுத்து இடைநிறுத்திய தம் படிப்பைத் தொட
தொடர்ந்து அங்கு உயர் வகுப்பில இணைந்து அவரது கற்பிக்குந்
திறனின் முதற் கனிகளான திருவாளர்கள் வே. லிங்கநாதன்,
ச, சீனித்தம்பி, பொ. கணபதிப்பிள்ளை .செ மயில்வாகனம்
ஆதியவர்களையும் நான் அன்புடன் நினைவு கூர்கிறேன்

கலாநிதி. ஈழத்துப்பூராடனர்

கனடா தொரன்ரோ

சீவன் பதிப்பகத்தாரின்

தமிழ் இலக்கிய நூல்களின் ஆய்வுகள்.

இலக்கிய ஆய்வு என்றால் ஒரு நூலின் சில பகுதி களின் இலக்கிய நயம், தமிழ் நயம் என்பவற்றையே எடுத்துரைப்பது வழக்கம். அப்படியான நூல்களால் அந்த நூலை முழுமையாகப் நுகர்ந்த இலக்கிய உணர்வும் இன்பமும் ஏற்படுவதில்லை. அத்தகைய குறையை ஈழத்துப்பூராடனரின் இலக்கிய நூல் ஆய்வுகளைப் படிக்குந்தொறும் அகல்கின்றது.

இலக்கிய ஆய்வு மாணவன்

எம். பரமானந்தம் - திருவண்ணாமலை - தமிழ்நாடு

கடந்த வருடம் வெளியான நூல்கள்;

1. பாரத சக்தி மகா காவியம்.
   ஆய்வுக் கண்ணோட்டம்
2. நைடதம் யாவருக்கும் ஒரு ஔடதம் -
   ஆய்வுப் பார்வை
3. கல்லாடம் கற்று சொல்லாடுவோம் -
   ஆய்வுக் கண்ணோக்கு

2008ம் வருடம் வெளி வரவிருக்கும் படைப்புகள்

1. ஐங்குறு நூற்று அரங்கம்
2. சீவக சிந்தாமணி ஆய்வுச் சிந்தனைகள்
3. பெருங்கதை

(இவற்றை விடத் தமிழ்ச் செய்யுள் வடிவிலான காப்பியப் படைப்புகளும் வெளி வருகின்றன)